
THE EPIC ETERNAL

இராமர் கதை

(PART - I)



INSTITUTE OF ASIAN STUDIES

Chemmancherry, Madras-600 119.

THE EPIC ETERNAL

இராமர் கதை

PART - I

General Editors

Dr. SHU HIKOSAKA, Dr. G. JOHN SAMUEL

Editor

Dr. K. JAYA KUMAR

Rendered into English

by

Prof. K.G. SESHADRI

Institute of Asian Studies,

Chemmancherry,

Madras - 600 119, India.

1996

THE EPIC ETERNAL
(PART - I)

Editorial Assistance
V. Ganesan

First Edition - March 1996
Price: Rs. **450** US **$ 65**

Publication No: 40

Copies can be had from

Publications Division,
Institute of Asian Studies,
Chemmancherry,
Madras - 600 119,
India.

Phone	(Office)	4928628, 4928662
	(Residence)	4925085
Fax		91-44-4928959

Printed by PAVAI PRINTERS Pvt. Ltd., 142, J.J.K. Road,
Madras-600 014. Phone : 83 24 41

CONTENTS

A SYSTEM OF TRANSLITERATION OF TAMIL

Vowels

Short			Long		
அ	-	a	ஆ	-	ā
இ	-	i	ஈ	-	ī
உ	-	u	ஊ	-	ū
எ	-	e	ஏ	-	ē
ஒ	-	o	ஓ	-	ō

ஐ	-	ai
ஔ	-	au

CONSONANTS

Hard			Soft			Medial		
க்	-	k	ங்	-	ṅ	ய்	-	y
ச்	-	c	ஞ்	-	ñ	ர்	-	r
ட்	-	ṭ	ண்	-	ṇ	ல்	-	l
த்	-	t	ந்	-	n	வ்	-	v
ப்	-	p	ம்	-	m	ழ்	-	ḻ
ற்	-	ṟ	ன்	-	ṉ	ள்	-	ḷ
ஸ்	-	s	ஷ்	-	ṣ	ஹ்	-	h
			ஜ்	-	j			
			க்ஷ	-	kṣ			

பதிப்புரை

'இராமர் கதை' *என்னும் இக்கதைப்பாடல் கு. ஆறுமுகப்பெருமாள் நாடார் என்பவரால் பிரதிசெய்யப்பட்ட ஒரு சுவடியின் பதிப்பாகும். இச்சுவடி சென்னை, ஆசியவியல் ஆய்வு நிறுவனத்தில் பதிவு எண்.40 -இல் பதிவுச் செய்யப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகிறது. இந்த ஏடு முழுமையான ஏடாகக் காணப்படுகிறது.*

ஏட்டின் காலம்

'1066-இல் சிவனடியார் நாடாரால் எழுதின பிரதியிலிருந்து சரவெழுதினது'- என்ற கொல்லம் ஆண்டில் (கி.பி.1890-இல்) எழுதப்பட்ட ஏட்டை அடிப்படையாகக் கொண்டு கு. ஆறுமுகப்பெருமாள் நாடார் இவ்வேட்டைப் பிரதி செய்தார் என்பதை அறிய முடிகிறது. ஆனால் ஏட்டின் இறுதியில், 'இஃது 1069-ஆம் ஆண்டு ஆனி 27-ஆம் தியதி திங்கட்கிழமை அகஸ்தீசுவரம் நாராயணன் நாடார் நல்லதம்பி நாடார் எழுதின பிரதியின்படி மேற்படி ஊர் குமாரசுவாமி நாடார் குமாரர் ஆறுமுகப்பெருமாள் நாடார் வைத்தியரால் 1138-ஆம் ஆண்டு ஆடி மாதம் 12-ஆம் தியதி ஞாயிற்றுக்கிழமை எழுதி முடிந்தது. வைகுண்டமணி சகாயம்' என்று குறிப்பு தரப்பட்டுள்ளது. ஆகவே, இவ்வேட்டுக் கதைப்பாடலை கு.ஆறுமுகப்பெருமாள் நாடார் கி.பி.1962-ஆம் ஆண்டு பிரதி செய்து முடித்தார் எனலாம்.

இதனால் கு. ஆறுமுகப்பெருமாள் நாடாருக்கு முந்தைய ஏடுகளாகக் கொல்லம் 1069 (கி.பி.1893) மற்றும் கொல்லம் 1066 (கி.பி.1890) ஆகிய இரு ஏடுகள் பிரதி செய்ய அடிப்படையாக இருந்தன என்பது தெரிகிறது.

பிரதி செய்தவரின் கல்வி

இவ்வேட்டைப் பிரதி செய்த கு. ஆறுமுகப் பெருமாள் நாடார் கன்னியாகுமரி மாவட்டத்தில் பிரபலமாய் வழக்கத்திலுள்ள கதைப்பாடல்களை, அவை வழங்கும் இடத்திற்குச் சென்று பெற்றுப் பிரதி செய்வதில் வல்லவராகக் காணப்படுகிறார். இவரைப் பற்றி Stuart Hart. Blackburn *என்பவர்* "Presently his work is the maintenance of the tradition, collecting manuscripts and then preserving them by preparing new copies from old and crumbling ones" - *எனக் குறிப்பிடுகிறார்*[1]. *கி.பி.1672-ஆம் ஆண்டிலிருந்து குமரி மாவட்டத்தில் அகஸ்தீஸ்வரம் என்னும் ஊரில் வந்து குடியேறிய கு. ஆறுமுகப்பெருமாள் நாடாரின் பரம்பரையில் இவர் சிறந்த புலவராகவும் திகழ்கிறார்*[2].

பிரதி செய்தவர் எழுதிய பிற கதைப்பாடல்கள்

இதற்கு ஆதாரமாக இவரால் பிரதி செய்யப்பட்ட பல கதைப்பாடல்கள் ஆசியவியல் ஆய்வு நிறுவனத்திலேயே வைத்து பாதுகாக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கச் செய்தியாகும். இக்கதைப்பாடல் நீங்கலாக இவர்,

1. அயோத்தி கதை
2. அரவமுத்து கதை
3. இமய காலன் தூதன் மூவர் பிறவி
4. கஞ்சன் செயலினை அழித்த கதை
5. சாத்தாவையன் கதை
6. சித்திரபுத்திர நயினார் கதை
7. சின்னணைஞ்சான் கதை
8. செங்கிடாய்க்காரன் கதை

---

1. Performance as Paradigm: The Tamil Bow Song Tradition. P 109
2. Ibid, P, 109

9. நாலு மந்திரி கதை
10. நீலி கதை
11. பார்பதியம்மன் கதை
12. பூலங்கொண்டாள் கதை
13. பொன்னுலகர் கதை
14. மார்க்கண்டன் கதை
15. முத்தாரம்மன் கதை
16. முத்துப்பட்டன் கதை
17. வலை வீசின கதை
18. விக்கிரமபூபன் கதை

ஆகிய கதைப்பாடல்களைச் செப்பமுறப் பிரதி செய்துள்ளார். மேலும், இவர் சில கதைப்பாடல்களைப் பதிப்பித்து வெளியிட்டும் உள்ளார். இவர் பிரதி செய்துள்ள பாடல் வகை வில்லுப்பாட்டின் இசையமைதிக்கேற்ப பாடப்பெறும் தன்மையன என்பதையும் அறிய முடிகிறது.

நூலின் காலம் மற்றும் ஆசிரியர் பெயர் சுட்டல்

'காத்தகொல்லம் தொள்ளாயிரத்துத் தொண்ணூற் றொன்பான்
கார்த்திகைமுன் றாந்தியதி கதிரோன் வாரம்
ஆர்த்தசபைக் கிணங்கவொரு கதையாய் ராமா
யணத்தின் பொருளெடுத்து அறைவார் தொண்டன்
சாற்றினது பண்டாரம் திருவா னந்தம்
தந்துகுக சண்முக தாசன் றானே'

பா.3

என்ற இராமர் கதையின் மூன்றாவது பாடல் மூல ஏட்டின் காலத்தையும் அதை எழுதிய ஆசிரியர் பெயரையும் கூறுகிறது. 'காத்த கொல்லம் தொள்ளாயிரத்துத் தொண்ணூற் றொன்பான்' எனக் கூறியதால் இவ்வேடு கி.பி.1823 இல் எழுதப்பட்டதாகத் தெளிவாகத் தெரிகிறது.

'சாற்றினது பண்டாரம் திருவானந்தம் தந்துகுக சண்முகதாசன்றானே' என்கிற மேற்படி பாடல் வரிகளால் முருகன் மீது மிகுந்த அன்பு கொண்ட, அவருக்கு அடிமை போல தன்னைத் தாழ்த்திக் கொண்ட திருவானந்தம் என்பவர் ஆவார் என்பதை அறிய முடிகிறது. மேலும் இந்நூலாசிரியரான திருவானந்தத்தைக் குறித்து ஏட்டின் இறுதியிலும் குறிப்புகள் தரப்பட்டுள்ளன.

'கற்றவர் கேட்போர் வாழ்க கவிஞர்நீ டூழி வாழ்க
நித்யவேள் திருவா னந்தம் நெஞ்சினில் வாழ்கச் சீரே'

பா.257 வரி.3-4

என்னும் இரு வரிகள் மூலம் இராமர் கதையை எழுதிய திருவானந்தத்தை ஏட்டைப் பிரதி செய்தவர் வாழ்த்துகிறார்.

நூலாசிரியர் சமயம்

நூலாசிரியர் சைவ வைணவத்திற்குப் பாலமாய்த் திகழ்கிறார். இராமர் கதை என்னும் கதைப்பாடலில் தலைவராகிய இராமன் திருமாலின் அவதாரமாகக் காட்டப்படுகிறார். என்றாலும் சைவ - வைணவ சமய வேறுபாடுகளைக் கடந்து சிவன் திருமால் இருவருக்கும் சமநிலை அளித்துள்ளார் இந்நூலாசிரியர். நல்ல காரியங்களைச் செய்ய நினைக்கும் பொழுதும், அக்கிரமச் செயல்களை அழிக்க நினைக்கும் பொழுதும் இந்நூலின் கதைத் தலைவராகிய இராமர் திருமாலின் அவதாரமாய் இருந்த பொழுதும் கூட சிவமந்திரமான

'நமசிவாய' என்னும் பஞ்சாட்சரத்தைக் கூறியே தொடங்குகிறார். மேலும், இராமன் ஒழிந்த பிற கதாபாத்திரங்களும் திருமால் பூசையொடு சிவன், சக்தி பூசைகள் செய்வதாகப் படைக்கப்பெற்றுள்ளன.

'சீர்மேவுதென் சுசிந்தாபுரி சிவதாணுமா லயனார்
தினமேவுமை யபிராமியென் சிவகாமியே சரணம்'

பா.6 வ.1

என்ற பாடலில் ஆசிரியர் சிவனையும் சக்தியையும் வணங்குகிறார்.

'செந்தூருறை கந்தாவள்ளி தெய்வானை மணாளா
தேடுந்திர வியமேதமிழ் பாடும்படி அருள்வாய்'

பா.7 வ.1

என முருகர் வணக்கமும் கூறப்படுகிறது.

மற்றொரு பாடலில்,

'நாடறியும் மச்சவ தாரா கூர்மா ராகவா நரசிங்கா வாமனா ராமா
தேடரிய பலபத்ரா பரசு ராமா ஸ்ரீகிருஷ்ணா கற்கியா செயகோ பாலா
கூடவந்த மோகினிபோற் றூண்ட வேண்டி கொடியரக்கன் முடிசாய்த்த
கோவிந் தாநின்
பாடலிதை யான்றுதிக்கப் பழுதில் லாமல் பக்ஷம்வைத்து எந்தனைநீயே
ரெக்ஷிப் பாயே'

பா 20

-எனத் திருமாலின் அவதார மகிமைகளைக் கூறிப் பலபடப் புகழ்கிறார்.

தசரதற்குக் குழந்தை பாக்கியம் உண்டு என்பதை விஸ்வாமித்திரர் கூறும்பொழுது,

'உண்டாமுனக்கு மைந்தர் உமையொரு பாகமூர்த்தி
தண்டரளத் துளபத் தாமர ருளாலே'

பா.23 வ்ரி 1 - 2

சிவன், திருமால் இருவர் அருளையும் சேர்த்துக் கூறுகிறார். திருமால் பெருமை, வைகுண்டத்தின் பெருமை முதலியவற்றைக் கூறும் ஆசிரியர் அதே போல் சிவன் பெருமை (பாடல்-29 வரி - 12 முதல் 15 வரை), கயிலையின் மகிமை (பாடல் - 31) ஆகியவற்றையும் கூறுகிறார்.

'அல்லும் பகலும் அட்டாக்ஷரம் பஞ்சாக்ஷரமும்
சொல்லித் தியானஞ்செய்தால் சுதர்பாக்கிய மெய்தும்'

பா.23 வரி 19 - 20

-என்னும் வரிகளில் தசரதற்குக் குழந்தைப் பேறு வாய்க்க 'ஓம் நமோ நாராயணாய' என்னும் எட்டெழுத்து மந்திரத்தையும் 'நமசிவாய' என்னும் ஐந்தெழுத்து மந்திரத்தையும் உச்சரித்துத் தியானஞ் சொல்ல விசுவாமித்திரர் கூறுகிறார்.

குமரி மாவட்டத்தில் சைவ - வைணவ இணைப்பு பெருமளவு இருப்பதே இதற்குக் காரணமாகும். இன்றும் இம்மாவட்டத்தில் சிவன் கோயில்களை மையப்படுத்தி ஓடும் சிவாலய ஓட்டத்தின் போது 'கோவிந்தா கோபாலா' என்று திருமாலின் நாமத்தை உச்சரித்தே ஓடுகின்றனர் என்பது இங்கு நோக்கத்தக்கது.

பதிப்பு முறை

சுவடியின் மூலவடிவம் முடிந்தளவு அவ்விதமே பிரதி செய்யப்பட்டுள்ளது. இராமர் கதையை எழுதியவர் எந்த வட்டாரத்தைச் சார்ந்தவர்? அவரின் தனித்த மொழியாளுமைத் திறன் யாது? என்பனவற்றை அறிவதற்கு இம்முறை பின்பற்றப்பட்டுள்ளது. இதனால் இக்கதையின் வட்டார வழக்குச் சொற்கள், ஒலியமைப்பு, சந்தியமைப்பு, தொடரமைப்பு முதலியவற்றை ஆராய்வோர்க்கு இது மிகவும் பயன்படும். என்றாலும் அடிப்படையான பொருள் மாற்றத்தையும் பொருள் மயக்கத்தையும் ஏற்படுத்தும் அமைப்பில் எழுத்துப் பிழைகளோடு அமைக்கப்பட்ட சொற்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. அவை அந்தந்தப் பக்கங்களின் அடியில் தரப்பட்டுள்ளன.

உதாரணமாக,

தற்மங் கொடுப்பா ருண்டு	- 58.5
குயிகள் பாடுமாம்	- 98.27
தீர்ந்தயோநீ அனுமானே	- 137.2
தண்ட **ரழத்தார்**	- 146.24
சனகி லட்சுமி	- 228.16

என்னும் தொடர்களில் எழுத்துப் பிழைகளால் ஏற்பட்ட பொருள் மயக்கம் நீக்கப்பட்டுள்ளன. அதன்படி இச்சொற்கள் தர்மம், குயில்கள், தீர்த்தாயோநீ, ரளத்தார், சானகி என மாற்றம் செய்யப்பட்டு திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. கொச்சை, வழக்கு, பிறமொழிச் சொற்கள் அவ்விதமே கையாளப் படுகின்றன. அவற்றிற்கான பொருள்கள் தரப்படுகின்றன.

பாடல்களைப் பிரித்து அமைத்த முறைகள்

பாடல்கள் அதன் அதன் வேறுபட்ட யாப்புகளுக்கு ஏற்றபடி பிரித்து அமைக்கப்படுகின்றன. சுவடியில் சில இடங்களில் மட்டுமே பாடல்களுக்கு ஏற்றபடி துணைத் தலைப்புகள் தரப்பட்டுள்ளன. அவை சில இடங்களில் பொருந்தாத தன்மையிலும் காணப்படுகின்றன. ஆகவே, ஒரே சீராகக் கதையின் ஓட்டத்தைப் புரிந்து கொள்வதற்கு ஏற்றபடி சிறு சிறு துணைத்தலைப்புகள் தரப்பட்டுள்ளன.

யாப்பு வகை

137 விருத்தங்களோடு மொத்தம் 253 பாடல்கள் பெற்று இந்நூல் முழுமை அடைகிறது. ஏறத்தாழ 10,000 வரிகள் வரை நீளமுடைய இக்கதைப் பாடல் ஆசியவியல் ஆய்வு நிறுவனத்தில் பாதுகாக்கப்பட்டுள்ள கதைப்பாடல்களுள் மிகப் பெரியதாகும். விருத்த யாப்போடு சிந்து, தரு, நடை, தாலாட்டு, கும்மி போன்ற பல யாப்புகளிலும், ஆசிரியர் இந்நூல் பாடல்களை அமைத்துத் தந்துள்ளார். சில யாப்பு வகைக்குப் பெயர் குறிப்பிடாமல் வேறு என்ற சொல்லாட்சியைப் பயன்படுத்தியுள்ளார். கீழ்காணும் பட்டியல் இந்நூலின் யாப்பமைப்பின் எண்ணிக்கையைப் புலப்படுத்தும்.

வரிசை எண்	யாப்பு	மொத்தப் பாடல்கள்
1.	ஆனந்தக் களிப்பு	01
2.	ஏசல்	01
3.	கும்மி	01
4.	சிந்து	28
5.	தரு	05
6.	தாலாட்டு	02
7.	துடுக்கு	07
8.	நடை	41
9.	நொண்டிச் சிந்து	01
10.	பதம்	02
11.	பள்ளு	05
12.	விருத்தம்	137
13.	வேறு	22
	மொத்தம்	253

பதிப்பேட்டின் அமைப்பு

இராமர் கதை என்று தலைப்பிடப்பட்ட இவ்வேடு மொத்தம் 143 இதழ்கள் கொண்டது. இரு பக்கங்களிலும் பக்கத்திற்கு இரு பத்திகள் வீதமும் மூன்று பத்திகள் வீதமும் பாடல் வரிகள் எழுதப்பட்டுள்ளன. 48X3.5 செ.மீ. நீள அகலங்களை முறையே உடைய இவ்வேட்டில் சராசரியாக எட்டு வரிகள் வீதம் எழுதப்பட்டுள்ளன.

வழியேட்டு அமைப்பு

இராமர் கதை என்று தலைப்பிடப்பட்டு மற்றுமொரு ஏடு இந்நிறுவனத்தின் பதிவு எண்.166- இல் பதிவு செய்யப்பட்டுப் பாதுகாக்கப்படுகிறது. இவ்வேடு மொத்தம் 263 இதழ்கள் பெற்றிருப்பினும் 23,28,48,49,202,204,220,250 ஆகிய எண்ணுடையவை விடுபட்டுள்ளன.

இவ்வேடு 48.5 X 2.5செ.மீ. நீள அகலங்களைப் பெற்றுப் பக்கத்திற்கு இரு பத்திகள் வீதம் அமைந்துள்ளன. மேலும், பக்கம் ஒன்றிற்கு ஆறு வரிகள் வீதம் எழுதப்பட்டுள்ளன. இவ்வேடு குமரி மாவட்டம் தோவாளை தாலுகாவைச் சார்ந்த செண்பகராமன்புதூர் என்ற ஊரிலிருந்து பெறப்பட்டது. இது இவ்வூரைச் சார்ந்த நடுத்தெருவில் குடியிருக்கும் த. வீரபாகு பிள்ளை என்பவரிடம் இருந்து பெறப்பட்டது.

வழியேட்டின் காலம்

வழியேட்டின் இறுதியில், '1051-ஆம் ஆண்டு மாசி பவ 32 ஞாயிற்றுக் கிழமை பகல் நாழிகை ஆறு அத்தம் நட்செத்திரம் அமிர்தயோகம் கூடின நட்செத்திரத்தில் யிந்த ஏடு எழுதி முகிந்தது. முற்றும்' என்ற குறிப்பு காணப்படுகிறது. இதன்படி இவ்வேட்டைப் பிரதி செய்தவர் மூல ஏடு அல்லது அண்மைப் பிரதி இவற்றுள் ஒன்றிலிருந்து கொல்லம் 1051 ஆண்டு (கி.பி.1875 ஆம் ஆண்டு) பிரதி செய்தார் எனக் கொள்ளலாம்.


பதிப்பேட்டின் காலம்

பதிப்பேடு வழியேட்டிற்கும் மிகவும் பிற்காலத்திய ஏடாகும். 'இஃது 1069-ஆம் ஆண்டு ஆனி 27-ஆம் தியதி திங்கட்கிழமை அகஸ்தீசுவரம் நாராயணன் நாடார் நல்லதம்பி நாடார் எழுதின பிரதியின்படி மேற்படி ஊர் குமாரசுவாமி நாடார் குமாரர் ஆறுமுகப்பெருமாள் நாடார் வைத்தியரால் 1138-ஆம் ஆண்டு ஆடி மாதம் 12-ஆம் தியதி ஞாயிற்றுக் கிழமை எழுதி முடிந்தது' என்று ஏட்டின் இறுதியில் உள்ள குறிப்பின் படி இரு செய்திகள் பெறப்படுகின்றன.

இதன் மூலம்,

1. நாராயண நாடாரால் இராமர் கதை கொல்லம் 1069-ஆம் ஆண்டு (கி.பி.1893) பிரதி செய்யப்பட்டது.
2. மேற்படி பிரதியை அடிப்படையாகக் கொண்டு கொல்லம் 1138-ஆம் ஆண்டு (கி.பி.1962) கு. ஆறுமுகப் பெருமாள் நாடார் பிரதி எடுத்தார்.

என்பன புலப்படுகின்றன. கிடைத்த ஏடுகளின் கால அடிப்படையில், கீழ்க்காணும் விளக்கப்படம் வழி எது மூலப்படி, எவை அண்மைப்படிகள், எவை கீழ்வழி வந்த ஏடுகள் என்பதைப் பெற முடியும்.



மேற்படி விளக்கப்படத்திலுள்ள அண்மை படியான கொல்லம் 1069 (கி.பி.1893) இல் பிரதி செய்யப்பட்டுள்ள ஏடு கிடைக்கப்பெறவில்லை. இங்கு 'அ' பிரிவிலுள்ள கிடைக்கப் பெற்ற வழி ஏடும் ஒப்பாய்வு செய்யப்பட்டு பாட வேறுபாடுகள் தரப்பட்டுள்ளன.

பிரதி செய்தவர் சுவடியில் செய்த திருத்தங்கள்

இவ்வேட்டைப் பிரதி செய்த கு. ஆறுமுகப் பெருமாள் நாடார் சிறந்த புலமையாளராகத் திகழ்ந்துள்ளார் என்பதற்கு இவரால் பிரதி செய்யப்பட்ட இவ்வேடே ஆதாரமாக அமைகிறது. இவ்வேட்டின் சிலவிடங்களில் தான் பிரதி செய்த சொற்களை, சொற்றொடர்களை நூலின் இடையிடையே கு. ஆறுமுக பெருமாள் நாடார் மாற்றியமைத்துள்ளார். இதற்குக் காரணம் இவரது புலமையும், மொழித் திறமையுமே ஆகும். எடுத்துக் காட்டுகளாக,

சொல்லச் சொல்லிடவே > சொல்லச் சொல்லவே (பா.82 வ.19)
அண்ணன் முன்னும் > கும்பகர்ணன்முன் (பா.182 வ.18)
சம்மதித்து என்னை > சம்மதித்து (பா.216 வ.33)
நாங்களுமுண்டேடி > நாங்களுமுண்டே (பா.82 வரி.21)
- என்பனவற்றைக் கொள்ளலாம்.

இதில் முதல் பகுதியிலுள்ளபடி பிரதி செய்யப்பட்டுள்ளது. இதை ஓசை நயம், செய்யுள் யாப்பு ஒழுங்கு, பொருள் அமைதிக்கு ஏற்றவாறு மேற்படி சில இடங்களில் சொற்கள், சொற்றொடர்களை அடித்துவிட்டு அதற்கு மேல் சரியாக இருக்கும் என நினைத்த பகுதியை எழுதி கு. ஆறுமுகப் பெருமாள் நாடார் அமைத்துள்ளார்.

நிறுவனச் சுவடிப்பதிப்பு வெளியீடுகள்

அழிந்து கொண்டிருக்கும் சுவடிகளைப் பாதுகாப்பதோடு கால தாமதமின்றி அவைகளைப் பதிப்பித்து வெளியிடுவதிலும் ஆசியவியல் ஆய்வு நிறுவனம் நிறைவான பணியினைச் செய்து கொண்டிருக்கிறது. ஆசியவியல் ஆய்வு நிறுவனச் சுவடிகள், பிற நிறுவனச் சுவடிகள் வாய்மொழிக் கதைகள் ஆகியவற்றை இந்நிறுவனம் திறம்பட பதிப்பித்து வெளியிட்டுள்ளது. அவ்வகையில் கதையமைப்பு சார்புடைய நிலையில்,

1. அண்ணன்மார் கதை
2. உச்சினிமாகாளி கதை
3. குறுக்குளாஞ்சி கதை
4. சந்தனத்தேவன் கதை
5. சாகுந்தலை நாடகம்
6. சின்னத்தம்பி கதை
7. நீலி யட்சகானம்
8. பலவேசஞ் சேர்வைக்காரன் கதை
9. பூலித்தேவன் சிந்து
10. பெண்ணரசியர் கதை
11. பெருமாள்சுவாமி கதை
12. வெங்கலராஜன் கதை
13. சாரங்கதரன் யட்சகானம்

எனப் பதின்மூன்று கதைப்பாடல்களை வெளியிட்டுள்ள இந்நிறுவனம் அடுத்ததாக 'இராமர் கதை' என்ற இக்கதைப் பாடலையும் வெளியிடுகிறது.

டாக்டர் கி.ஜெயகுமார்

நன்றியுரை

ஆசியவியல் ஆய்வு நிறுவனத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்ற 'இராமர் கதை' என்னும் பெயருடைய இச்சுவடியைப் பதிப்பிக்கும்படி என்னைப் பணித்த நிறுவன இயக்குநர்கள் **டாக்டர் ஜி.ஜான் சாமுவேல், டாக்டர் ஷு ஹிகோசகா** ஆகியோருக்கு என்றும் நன்றியுடையவனாவேன்.

சுவடித்துறையில் தமக்குள்ள அனுபவங்களை எல்லாம் இளையவர்கள் பெற வேண்டும் என்ற நோக்கில் ஆர்வம் கொண்டு இந்நூலின் பதிப்புப் பணியில் பேருதவிகள் செய்தவர் நிறுவனச் சுவடியியல் தலைவர் டாக்டர் பூ.சுப்பிரமணியம் ஆவார். இந்நூல் பல நிலைகளிலும் செப்பமுற அமையப் பேருதவிகள் புரிந்த அவருக்கு நன்றியுடையேன்.

சுவடியிலிருந்து பெயர்த்தெழுதிய பொழுது ஏற்பட்ட ஐயங்கள், குறிப்புரை எழுதும் பொழுது ஏற்பட்ட ஐயங்கள் ஆகியவற்றைத் தீர்ப்பதில் பேருதவி புரிந்தவர் செல்வி. இராதா ஜெயலட்சுமி அவர்கள். சொல்லடைவு தயாரித்தல், அச்சுப்படியைத் திருத்துதல் ஆகியவற்றில் தங்கள் உழைப்பை நல்கியவர்கள் செல்வி. ச. சுமதி, திரு.கி. பன்னீர் செல்வம், திரு. மொ.மருதமுத்து, திரு.சி.அருணாசலம், திரு.கே.சிதம்பரம், திரு.சு. வெங்கடேஸ்வரன் ஆகியோர்.

ஆய்வுரையைப் படித்துச் செப்பமடையக் குறிப்புகள் தந்துதவியவர் டாக்டர் ந. சந்திரசேகரன்.

தட்டச்சுப் பணியில் தங்கள் உழைப்பை நல்கியவர் திருமதி நே. உமாராணி, செல்வி பொ. சாந்தி ஆகியோர். இந்நூலுக்கான அழகிய வண்ணப்படத்தை வரைந்து தந்தவர் திரு.அ.செ. நடராஜன். அழகுற அச்சிட்டுத் தந்தவர்கள் பாவை அச்சகத்தார்.

அனைத்து அன்பர்களுக்கும் நன்றியை உரித்தாக்குகிறேன்.

ஆய்வுரை

நூற்பெயர்

'இராமர் கதை' என்ற பெயருடைய சுவடி இந்நூலுக்குரிய அடிப்படைத் தரவுச் சுவடியாகும். இது 'இராமனது கதையைக் கூறும் பாடல் வகையில் அமைந்த கதை' என்கிற பொருளில் விரிந்த பொருள்படும். இக்கதைப் பாடல் பாரத தேசத்தில் எழுந்த இதிகாசங்களான இராமாயணம், மகாபாரதம் இவற்றில் முதன்மையாகத் தோன்றிய இராமாயணத்தை அடியொற்றியது. என்றாலும் 'இராமவதாரம்' என்று பெயரிடப்பட்டு 12-ஆம் நூற்றாண்டில் செய்யப்பட்ட கம்பரின் காவியத்தைப் பெரிதும் தழுவிச் செய்யப்பட்டதாக இந்நூல் திகழ்கிறது. இதை நூலாசிரியர் தனது காப்புப் பாடலில்,

'கூறும்வான் மீகர் சொன்ன சுலோகத்தைக் குறித்துப் பார்த்து
ஆறிரண் டாயிரம் பாவாய்த்தமிழ் கம்பன் சேர்க்கும் தமிழினிற்
தேறிய நூலைத் தேர்ந்து சிறியனோர் கதையாய்ப் பாட
யீறுநற் றுணையாஞ் சித்தி விநாயகர் காப்பு தாமே'

பா.2

எனத் தெரிவிக்கிறார்.

பூர்வகால சரித்திரம்

இராமரின் கதை சொல்லும் வான்மீகரின் இராமாயணம், வியாசர் எழுதிய மகாபாரதம் இரண்டும் இதிகாசங்களாகக் கொள்ளப்படுகின்றன. இதிகாசம் என்பது 'பூர்வகாலத்துச் சரித்திரம்' எனப் பொருள்படும். ஆகவே இராமாயணத்தின் நாயகனாகிய இராமர் பூர்வ காலத்து உதாரண புருஷனாகத் திகழ்ந்தவராவார். இதிகாச காலம் தொடங்கி இராமனது வரலாறு இன்றளவும் காலத்தை வென்று இந்தியாவின் எல்லா பகுதிகளிலும் பரவி உள்ளது. மேலும், இராமாயணம் இந்தியாவின் எல்லையைக் கடந்து ஆசிய நாடுகளாகிய திபெத், நேபாளம், சீனா, கம்போடியா, மலேசியா, இந்தோனேசியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளிலும் நிகழ்த்துக் கலையின் வடிவாக ஊடுருவி உள்ளது. மேலும் மேற்படி நாடுகளில் இராமாயணம் குறித்த செய்திகள் கல்வெட்டுகள் மற்றும் உருவச்சிலைகளிலும் இருப்பதாகக் குறிப்பிடுவர்.[1]

இராமனின் செல்வாக்கு

இராமாயணக் கதைக் கூறுகளில் வரும் கதாபாத்திரத்தில் இராமன், சீதை ஆகியோரின் பெயர்களைத் தங்கள் குழந்தைகளுக்குச் சூட்டிக் கொள்வதை இந்தியர்கள் பெருமையாகக் கருதுகின்றனர். இராமாயணத்தோடு தொடர்புடைய நதிகள், மலைகள், இடங்கள் ஆகியவற்றைத் தத்தம் பகுதிகளுக்குச் சூட்டி மகிழ்கின்றனர். இன்றும் இராமனின் பல்வேறு பெயர்களான கல்யாணராமன், கோசலராமன், கோதண்டராமன், சிவராமன், சீதாராமன், தசரதராமன், ரகுராமன், ராஜாராமன், வெங்கட்ராமன், வைகுண்டராமன், ஜானகிராமன்,

---

1. "Ramayana... Southeast Asia as a whole, and more specifically India, Tibet, Nepal, Laos, Cambodia, Malaysia, Indonesia, China and Japan, Serious literature, folklore, epigraphy, iconography the plastic and performing arts".
   Asian Variations in Ramayana, pp.5-6.

ஜெயராமன், ஸ்ரீராமன் போன்றன இந்தியா முழுமையும் அந்தந்த மொழியமைதிக்கு ஏற்ப வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், இராமன் என்ற பெயரோடு தொடர்புடைய ராமகிருஷ்ணன், ராமச்சந்திரன், ராமசுவாமி, ராமமூர்த்தி போன்ற பெயர்கள் வழக்கத்தில் உள்ளன.

இராமனையும் அவனது நற்பண்புகளையும் இந்தியாவில் பழங்காலந்தொட்டே ஒவ்வொருவரும் தம் வாழ்வில் கடைபிடிக்க முயற்சித்துள்ளனர். காந்தியடிகள் கூட இந்தியாவில் அமையும் ஆட்சி 'இராம ராஜ்யம்' - ஆக இருக்க வேண்டும் என விரும்பினார். அந்த அளவு இராமனது வாழ்வியல் முறைகள் அவரைப் பாதித்துள்ளன.

நூற்பெயரிலுள்ள 'கதை' என்கிற சொல்லாட்சி

கதை, கதைப்பு, கதைத்தல், கதை கட்டுதல், கதைவிடுதல், கதை கூறுதல் போன்ற பல்வேறு சொற்கள் 'கதை' என்கிற சொல்லோடு பெரிதும் தொடர்புடையது. இக்கதை இன்று விரிந்த தளத்தில் பயன்படுத்தப்படுகிறது. வாய்மொழிக் கதை, பாட்டிக் கதை, விநோதக் கதை, சரித்திரக் கதை, புராணக் கதை, இதிகாசக் கதை, உண்மைக் கதை, சிறுகதை, நாவல் என இச்சொல் பல வகைகளில் அடங்குகிறது.

'இராமர் கதை'யிலுள்ள இராமன் இதிகாசம் சார்ந்தவராவார். ஆகவே இதிகாச கதையைச் சார்ந்ததாக இக்கதை அமைகிறது. மேலும், இந்நூற்பெயரிலுள்ள 'கதை' என்ற சொல்லாட்சி இராமன் வாழ்க்கையை மக்களுக்குக் கதைக்கப்படுவதாகப் பொருள் கொள்ளப்படுகிறது.

கதையின் பலன்

குழந்தைகள் முதல் முதியவர் வரை அனைவரும் கதையைக் கேட்பதில் ஆர்வமுடையவராகக் காணப்படுகின்றனர். புராணக் கதையில் கூறப்படும் பிரகலாதன் தெய்வமாகிய நாராயணர் கதையைத் தாயின் கருவிலிருந்த பொழுதே கேட்டு, சிறந்த வைணவப் பக்தனாகத் திகழ்ந்தான். மராட்டிய மன்னன் சிவாஜி தன் தாய் ஜீஜிபாயிடம் கேட்ட கதைகள் அவனை மாவீரனாக்கியது. தேசப்பிதா காந்தியடிகள் பார்த்த 'அரிச்சந்திரன் கதை' அவருடைய வாழ்நாளில் உண்மையைப் பேசுவதற்குத் தூண்டுகோலாய் அமைந்தது. ஆகவே, கதை கேட்டல் வெறும் பொழுது போக்கு தன்மையில் மட்டும் அமையாது பல தளங்களில் மக்களுக்கு நன்மை புரிகிறது. மனச்சோர்வை நீக்குதல், திறமைகளை வளர்த்தல், ஆளுமையை வெளிப்படுத்தல், இன்பம் தருதல் போன்ற பண்புகளைக் கொண்டதாகக் கதை அமைகிறது.

கதையின் தோற்றம்

வான்மீகர், வியாசர் போன்றோருக்கு முன்பிருந்தே இந்தியாவில் பாமரர்கள் மத்தியில் வாய்மொழிக் கதைகள் வழங்கியிருக்க வேண்டும். உலகமெங்கும் பொதுப்படையாக நோக்க மொழிகளின் செம்மைநிலை தோன்றுவதற்கு முன்பாகவே மேற்கூறிய வாய்மொழிக் கதைகள் தோன்றிச் சிறப்பிடம் பெற்றன. இத்தகு கதைகள் அந்தந்த இடங்களில் வாழும் மக்களின் நம்பிக்கைகள், சடங்குகள், பழக்க வழக்கங்கள், ஒழுக்க நெறிமுறைகள் முதலியவற்றைக் கொண்ட பண்பாடுகளோடு ஒப்புமைப் படுத்தி மக்களின் நல்வாழ்விற்காகத் தோன்றியுள்ளன. இத்தகைய சூழல்களில் பிறக்கும் கதைகள் கதை கூறுவோருக்கும் கேட்போருக்கும் இடையே அதிக ஆர்வத்தை ஏற்படுத்தின. மனப்பாடத் திறனையும் வளர்த்தன. ஒருவரிடமிருந்து ஒருவருக்குத் தலைமுறை தலைமுறையாய்க் கூறப்பட்டு வந்த இக்கதைகள் நாளடைவில் சிற்சில திரிபு வடிவங்களைப் பெற்றன.

இதிகாசக் கதைகள்

இராமாயணம், மகாபாரதம் ஆகிய இரு இதிகாசங்களை அடியொற்றிப் பல கதைகள் பாரதம் முழுவதும் வழங்கி வருகின்றன. இதற்குக் காரணமாக இராமாயணம் போன்ற இதிகாசங்கள், நாடகங்கள், நிழல் நாடகங்கள், கதைப்பாடல்கள், தியாகராஜரின் கீர்த்தனைகள், ஓவியங்கள், சிற்பங்கள் மற்றும் கல்வெட்டுகள் ஆகியவைகளின் வழி வெளிப்படுகின்றன.[2]

தமிழகத்தில் மேலும் சிறப்பாக ஒயிலாட்டம், தேவராட்டம், வில்லுப்பாட்டு, கும்மி, கோலாட்டம், தோற்பாவைக் கூத்து, பொம்மலாட்டம், ஹரிகதை, கதைப்பிரசங்கம் மற்றும் சமய சொற்பொழிவு போன்றவற்றின் மூலம் இராமாயணம், மகாபாரதம் ஆகியவை வளர்க்கப்படுகின்றன. இக்கதைகள் கலைகளின் நிகழ்த்து நேரத்திற்கு ஏற்றவாறு முழுமையாகவோ, பகுதியாகவோ நிகழ்த்தப்படுகின்றன.

இதிகாசங்களுள் இராமாயணம் 'ஆதி காவியம்' என்றழைக்கப்படுகிறது. ஏராளமான கிளைக்கதைகள் சேர்ந்த முழுமையான காப்பிய அமைதியுடைய இந்நூல் பாரத தேசத்தின் உதாரண புருஷனாக இராமனைச் சித்தரிக்கிறது. ஆகவே, மானிட சமுதாயத்தில் ஒழுக்க நெறியைப் பரப்ப வேண்டி இடைவிடாது ஏதேனும் ஒரு வெளியீட்டு உத்தி மூலமாக இக்கதையை வெளியிடுகின்றனர். முழுமையாக இராமாயணக் கதையைக் கேட்க முடியாவிடினும் சில பகுதியையேனும் கேட்க வேண்டும் என்ற நோக்கத்தில் பல இராமாயண கதைகள் வழக்கில் காணப்படுகின்றன. அசுவமேதயாகக் கதை, குசலவ வாக்கியம், குசலவன் கதை, குசலவர் அம்மானை, மயில்ராவணன் கதை, வாலிமோட்சக் கதை, இந்திரசித் கதை, அனுமார் கதைப்பாடல், சீதா கலியாணம் போன்ற நூல்கள் இராமாயணக் காவியத்தின் உட்பிரிவுகளை விரிவுபடுத்தி மக்களுக்குத் தெரிவிக்கின்றன. மேலும் காப்பியத்திலுள்ள சிறு நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டும் பல கதைகள் எழுந்துள்ளன. இத்தகைய கதைகள் உண்மை மற்றும் நீதியை வலியுறுத்திப் பெரும்பாலும் பாமர மக்களுக்காக எழுதப்பட்டவையாகத் திகழ்கின்றன.

நூற்பொருள்

இராமர் வரலாற்றை விரிவுபட கூறுவதாக இந்நூல் அமைகிறது. இராமர் பாரத மக்கள் பின்பற்ற வேண்டிய வாழ்வியல் நெறிமுறைகளின் பிரதிநிதியாய், முன்னோடியாய், அடையாளச் சின்னமாய்த் திகழ்கிறார். தாய் தந்தையர் மீது அவர் வைத்த பக்தி, ஏக பத்தினி விரதத் தன்மை, வீரம், சாதி இனங்களைக் கடந்து மானிட சாதியின் மீது அவர் கொண்ட அன்பு, சகோதர பாசம் எனப் பலதிறப்பட்ட நிலைகளில் வாழ்வியல் சிறக்க வாழ்ந்த புருஷனாக இராமர் சித்தரிக்கப்படுகிறார். ஆகவே இக்கதையாசிரியர் இராமரின் வரலாற்றைக் கதைப்பாடலாக வில்லிசையில் வெளியிட்டுள்ளார்.

'மருகமழும் பலவளமும் வளர யோத்தி
மன்னவனார் தசரதற்கே மைந்த னாகத்
திருவவதாரஞ் செய்தருள் கதையைப் பாரில்

பா.10 வரி.2 - 3

---

2. "The itihasa became purana, mahakavya, nataka, shadow-play, folk - song, folk - tale, the theme of Tyagaraja's Kritis of sculptures and stone reliefs in temples of painting and minia'

Asian Variations in Ramayana, p.18.

-என்ற பாடல் வழி தசரதன் மைந்தன் இராமர் திருவவதாரஞ் செய்த நிகழ்வையும் அவர் செய்த செயல்களையும் கதையின் பொருளாகக் கொண்டதாகக் கூறுகிறார்.

மேற்படி செய்தியை விரித்துப் பாடல் 11 முதல் 16 வரையுள்ள ஆறு விருத்தப் பாடல்களில் கதை நுவலும் பொருளைத் தெளிவுபடவும் சுருக்கமாகவும் கூறுகிறார்.

கதைப்பாடல்

வாய்மொழியாகக் கூறப்பட்டு வந்த கதைகள் பிற்காலத்தில் பாடல் வடிவில் தோன்றின. சிறந்த இசையமைதி, தாளக்கட்டுகளுடன் கேட்போரைத் தன்வசப்படுத்தும் தன்மையில் இப்பாடல்கள் தோன்றின. தமிழகம் முழுவதிலும் இத்தகைய தன்மையுடைய பாடல்கள் 1,000-க்கும் மேற்பட்ட அளவில் பரந்து காணப்படுகின்றன. 'கதையொன்றை உள்ளடக்கமாகக் கொண்டு, மக்கள் முன்னர் எடுத்துரைக்கப்பட்டுப் பரம்பரை பரம்பரையாக வாய்மொழியாகப் பாடப்பட்டு வருவது கதைப்பாடலாகும்[3] என்பர். இதே போன்றதொரு கருத்தை, 'நாட்டுப்புறப் பாடலின் தன்மைகளுடைய எளிய பாடல்களால் ஒரு கதையை உருவாக்கிச் செவிக்கு இனிமையாகவும் மனதுக்கு மகிழ்ச்சியாகவும் அமையப் பாடிக் களிப்பது கதைப்பாடல் ஆகும்'[4] என்றும் உரைப்பர்.

கதைப்பாடல்களின் உள்ளீடு

வாழ்ந்து மடிந்த வீரர்களின் வாழ்க்கை வரலாற்று நிகழ்வுகள், சாதீய முரண்பாட்டால் ஏற்பட்ட கலகங்களில் முடிந்த துயர மரணங்கள், பழிக்குப் பழி வாங்கும் செயல்கள், புராணச் செய்திகள், இதிகாசக் கதைகள், இதிகாசக் கிளைக்கதைகள் போன்றவையெல்லாம் கதைப்பாடல்களாக உருவெடுக்கின்றன. பிரச்சார நோக்கிலும் கற்பனையாகவும் சில கதைகள் பாடல் வடிவம் பெறுவது உண்டு. இத்தகைய கதைப்பாடல்களின் அடிக்கருத்துக்களின் உள்ளமைப்பு 60 பிரிவுகளில் அடங்கிவிடும் என்று கூறும் தே.லூர்து அவர்கள் கதைப்பாடலைக் காப்பு முதலாய் வாழ்த்து ஈறாய் அப்பிரிவுகளில் அடக்கிக் காட்டுகிறார்.[5]

கதைப்பாடல்களின் வகைகள்

கதைப்பாடல்களின் கருவுக்கு ஏற்றவாறு அப்பாடல்கள் பொதுவாகப் பல ஆய்வாளர்களால் பல விதமாகப் பிரித்துக் காட்டப்படுகின்றன. நா. வானமாமலை கதைப்பாடல்களை 1.தெய்வப்புனை கதைகள் 2. புராணக் கதைகள், 3. சமூகக் கதைகள், 4. வரலாற்றுக் கதைகள் என நான்காகப் பிரிப்பார்.[6] மற்றொரு நூல் கதைப்பாடல்களை 1. வரலாற்றுக் கதைகள் 2. புராணக் கதைகள் 3. சமுதாயக் கதைகள், 4. வீரக் கதைகள் என்று நான்கு வகைகளாகப் பிரிக்கலாம் எனக் கூறுகிறது.[7] பல கதைப்பாடல் வகைமைகளை ஆராய்ந்த சு. சண்முக சுந்தரம் 'கதைப் பாடல்களைப் புராணம், வரலாறு, சமூகம் ஆகிய மூன்றின் தொடர்பு உள்ளவைகளாகக் கொள்ளலாம்[8] என்கிறார். பதிப்புக்கு இங்கு எடுத்துக் கொண்ட இராமர் கதை 'புராணக்கதை' சார்புடையதாக உள்ளது.

3. நாட்டார் வழக்காறுகள், ப.76
4. தமிழில் கதைப்பாடல், ப.3
5. நாட்டார் வழக்காறுகள், பக்.97 - 98
6. கான்சாகிபு சண்டை, ப.1
7. நாட்டுப்புறவியலாய்வு நெறிமுறைகள், ப.24
8. நாட்டுப்புற இயல், ப.145

கதைப்பாடல்களை நிகழ்த்துவோர்

கதைப்பாடல்கள் தமிழகம் முழுவதும் ஏதேனும் ஒரு நிகழ்த்து கலை மூலம் வெளிப்படும் தன்மையதாக அமைகிறது. அந்தந்தப் பகுதிகளில் வாழும் மக்கள், மேட்டுக்குடியினர், ஜமீன்தார் போன்றோரின் மன விருப்பத்திற்கேற்ற வடிவத்தில் இக்கதைப்பாடல்கள் நிகழ்த்துக் கலையாக நடத்தப்படுகின்றன. கிராமங்களில் இன்றும் குல தெய்வங்களை வழிபட்டுச் சாந்திபடுத்தும் கொடை விழாக்களின் பொழுது சிறு தெய்வங்களைப் பற்றிய கதைப்பாடல்கள் நிகழ்த்தப் படுகின்றன. வீர மரணம் அடைந்த சுதந்திர வீரர்களின் நினைவாகவும் இக்கதைப் பாடல்கள் நிகழ்த்தப்படுதலுண்டு. பூலித்தேவன் சிந்து, கட்டபொம்மன் கும்மி போன்ற கதைப்பாடல்கள் இன்றும் இவ்விதம் பாடப்பெற்று வருகின்றன. கொடையினின்றும் மாறுபட்ட உயர்சாதி மக்களால் நிகழ்த்தப்படுகின்ற திருவிழாக்களின் போதும் கதைப்பாடல்கள் வில்லுப்பாட்டு, ஹரிகதை போன்ற இசைக்கருவிகளுடனான வெளிப்பாட்டு வடிவங்களில் பாடப்பெற்று வருகின்றன.

இராமர் கதை வெளியீட்டு உத்தி

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள திருவானந்தம் என்ற புலவரால் செய்யப்பட்ட இக்கதைப்பாடல் வில்லிசையால் பாடப்பெறும் ஒரு கதைப்பாடலாகும். இவ்வில்லிசைப் பாடல் தமிழகத்தின் தென்மாவட்டங்களில் சிறப்பிடம் பெறும் ஓர் இசைப்பாட்டு வடிவாகும்.

வில்லுப்பாட்டு

வில்லுப்பாட்டின் தோற்றம் தெய்வத்தோடு தொடர்புபடுத்தப்பட்டு பெருமையாகக் கூறப்படுகிறது. ஒரு பழம்பாடல்,

> 'வினாயகர் குடம்போட - வெற்றி
> வேலவர் வலம்போட
> பார்வதியாள் வில்லடிக்க - எங்கள்
> பரமசிவன் கதைகள் கேட்க'

- என விநாயகர், முருகன், பார்வதி, பரமசிவன் ஆகியோரை வில்லடிப் பாட்டோடு தொடர்புபடுத்துகிறது. இப்பாடல் வரிகள் வில்லுப்பாட்டின் பழமையையும், புனிதத்தன்மையையும் ஒருசேர காட்டுவதற்கு எழுந்ததாகும். என்றாலும் வில்லுப்பாட்டின் வழியாகக் கதை கூறும் மரபு 16-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலிருந்து தோன்றியதாகக் குறிப்பிடுவர்.[9]

தமிழகத்தின் தென்மாவட்டங்களில் வில்லுப்பாட்டின் செல்வாக்கு

கும்மி, கீர்த்தனை, நாடகம், ஹரிகதை, கணியான் கூத்து, தேவராட்டம், பொம்மலாட்டம், தோற்பாவைக் கூத்து போன்ற பல்வேறு வகைகள் மூலம் கதைகள் தமிழகத்தின் தென்மாவட்டங்களில் கூறப்பட்டு வருகின்றன. என்றாலும் வில்லுப்பாட்டே அதிகம் செல்வாக்குப் பெற்றுள்ள ஒன்று என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

இதற்கான காரணங்கள் ஆராயத்தக்கன. வில்லுப்பாட்டு அதிகமாக வழக்கிலிருக்கும் கன்னியாகுமரி மாவட்டத்தில் அதிக மக்கள் எண்ணிக்கையிலுள்ள நாடார் மற்றும் வெள்ளாளர் சாதியினர் இக்கலையை நிகழ்த்துவதில் ஆர்வமுடையவராகவும் வல்லவராகவும் திகழ்கின்றனர். மேலும் இக்கலையை நிகழ்த்துவதில் நெல்லைக்

9. "Difinite evidence is available only from the mid - 16th century".
Performance as Paradigm: The Tamil Bow Song Tradition, p.81

கட்டபொம்மன் மற்றும் வ.உ.சிதம்பரனார் மாவட்டங்களில் தேவர் சாதியினர் பெருமளவில் ஈடுபட்டுள்ளனர். விளாத்திக்குளம் வட்டாரத்தில் சில நாயக்கர், ரெட்டியார் பிரிவினர் இக்கலையை நிகழ்த்துகின்றனர். ஈழவர், கோனார், சாலியர், குருப்புமார்கள், சாம்பவர், பறையர் போன்ற சாதியருள் ஒரு சிலரும் இக்கலையை நிகழ்த்துவதில் வல்லராக்க் திகழ்கின்றனர்.

பலதிறப்பட்ட சாதியர் இக்கலையை ஆர்வமுடன் வெளிக்கொணர்வதில் சிறப்பாகச் செயலாற்றுவதால் இன்றும் இக்கலை தென்மாவட்டங்களில் சிறப்பாக நிகழ்த்தப்பட்டு வருகிறது.

வில்லுப்பாட்டு பாடும் காலம்

திருவிழா, கொடை, சாமிக்குச் சிறப்பு எடுத்தல் (சிறப்பு பூஜை - ஒரு நாள் மட்டும் நடைபெறுவது), பிரச்சாரங்கள் போன்ற நிகழ்ச்சிகளின் பொழுது வில்லுப்பாட்டு நிகழ்த்தப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் பொதுவாக வருடந்தோறும் ஜனவரி மாதம் முதல் மே மாதம் ஈறாக உள்ள காலங்களில் கோயில் கொடையின் பொழுது வில்லுப்பாட்டு நிகழ்த்தப்படுகிறது[10]. என்றாலும் அம்மன் கோயில்களில் தமிழ் ஆடி மாதத்தில் (ஜூலை - ஆகஸ்ட்) கூட அதிக அளவில் இக்கதைப்பாடல்கள் வில்லிசையின் மூலம் நிகழ்த்தப்படுகின்றன.

குடும்பக்கட்டுப்பாடு, மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு, காந்திமகான் கதை போன்ற பிரச்சார பாங்கிலான வில்லிசைப்பாடல்கள் அரசு ஆதரவு பெற்றும், பெரியவர்கள் ஆதரவு பெற்றும் ஆண்டு முழுவதும் நிகழ்த்தப்படுகின்றன. தற்பொழுது இவ்வகையில் விவசாய முன்னேற்றம், முதியோர் கல்விப் பிரச்சனைகள் குறித்தும் வில்லிசை நிகழ்த்தப்படுகின்றன. வானொலி, தொலைக்காட்சி, பொருட்காட்சி போன்ற அரசு சார்புச் செய்தித்தொடர்பு சாதனங்கள் மற்றும் இடங்களிலும் வில்லிசைப்பாடல்கள் நிகழ்த்தப்படுகின்றன. பல பிரபலமான வில்லிசைக் குழுவினர் தமிழர்கள் வாழும் வடமாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் சென்று வில்லிசையை நிகழ்த்துகின்றனர்.

வில்லுப்பாட்டு மேடை

வில்லிசைப்பாடும் மேடையில் பொதுவாக ஏழு பேர் கொண்ட குழு இதை நிகழ்த்த அமர்ந்திருக்கும். ஆசான் அல்லது அண்ணாவி, ஆர்மோனியப் பெட்டியை வாசிப்பவர், குடம் அடிப்பவர், உடுக்கு அடிப்பவர், இரு கட்டைகள் கொண்டு தட்டி ஓசையை எழுப்புபவர், ஜால்ரா தட்டுபவர், தபலா வாசிப்பவர் என எழுவர் இதற்குப் பயன்படுவர்.[11]

இவர்கள் எழுவருள்ளும் அண்ணாவியே முதன்மையாளராகக் காணப்படுகிறார். வில்லுப்பாட்டு மேடையில் தன்னை ஒழித்த பிற அறுவரையும் இயக்குவதோடு எதிரே அமர்ந்திருக்கும் மக்களையும் தன்வசப்படுத்திக் கதைப்பாடலோடு ஒன்றச் செய்பவர் இவரே ஆவார். விசைக்கோல் என்று அழைக்கப்படும் இரு குச்சிகள் கொண்டு மணிகள் பூட்டப்பட்ட வில்லிசைக் கருவியைத் தேவைப்படும் பொழுது தாளலயத்தோடு இயக்குபவர் இவரே ஆவார். மேலும், பாடல் பாடும் இவர் இடையிடையே அந்தந்த வட்டாரங்களுக்கு ஏற்ப கதைப்பாடலை நீட்டியும், சுருக்கியும், மாற்றியும் பாடுவதோடு

10. "A Koṭai is conducted annually in nearly all vil pāṭṭu temples in Nāncil Nadu, during the performance season from January to May"
Ibid, p.157.

11 Journal of the Institute of Asian Studies, pp.45 - 46

தேவையான இடங்களில் விளக்கங்களையும் கொடுத்துக் கொண்டு செல்வார். குழுவில் அடுத்து முக்கியமானவர் இவருக்குப் பக்கவாட்டில் இருக்கும் குடம் அடிப்பவர் ஆவார். இவர் ஒத்துப் பாடிக் கொண்டு இருப்பார். மேடையின் புற அமைப்பு அந்தந்தக் கோயில் வருமானத்திற்கு ஏற்ப பெருக்கமாகவும் சுருக்கமாகவும் அமையப்பெறும்.

'வில்' இசைக்கருவி

பொதுவாக, வில் வேட்டையாடுவதற்கும் போரின் பொழுதும் பண்டைக் காலத்தில் பயன்பட்டு வந்த ஒரு போர்க்கருவியாகும். 'தமிழ்ப் பொதிகைக் காட்டிடத்தே வேட்டையாடப் புகுந்த வில்வீரன் ஒருவன் பகற்பொழுதெல்லாம் வேட்டையாடிக் களைத்துச் சோர்ந்தவன், மாலை நேரத்தில் செழித்த மரமொன்றின் அடியில் அமர்ந்தான். தன் கையமர்ந்த வில்லைத் தரையில் சார்த்தி அம்புகோலால் அவ்வில் நாணில் மெல்லிய தாளவோசை தோன்ற அடித்து, அத்தாளத்திற்கேற்ப இன்னிசையுடன் தமிழ்ப்பாடல் பாடித் தன் களைப்பு நீங்கப் பெற்றான்'[12] என்ற செய்தி வில் என்னும் போர்க்கருவி எப்படி இசைக்கருவியாக மாற்றம் பெற்றது என்பதை அறியவைக்கும். வில்லுப்பாட்டின் தோற்றத்தைக் குறிக்கும் பெரும்பாலான கருத்துக்கள் வில்லிசைக்குப் பயன்படுத்தப்படும் வில் கருவியை ராமருடைய வில்லுக்குத் (கோதண்டத்திற்கு) தொடர்புபடுத்திக் கூறுகின்றன[13].

இராமர்கதை ஒரு வில்லுப்பாட்டு கதை

பல சிறப்புகள் வாய்ந்த நிகழ்த்து கலையான வில்லுப்பாட்டில் பதிப்பு நூலான இராமர்கதை மக்களைச் சென்றடைந்துள்ளது. நூலாசிரியரே,

'கண்பார்த் தரிராமன் கருத்தாய் வில்லுக்கிசைக்க'

பா.9

'மூலமதா யொருமுற் கதைவிற் கிசைவாகவே
முகனையதா யொன்றுசெப்புவீர் மோக்ஷமுண் டென்னவே'

பா.79 வ.9

'விற்கதையில் ராமகீர்த்தன வகுப்பென்ற நாமமே
மேவலர்நா வலர்காவலர் கைக்கொள்ளும் நேமமே'

பா.79. வ.15

- போன்ற பாடல்களின் வழி ஆசிரியர் இக்கதைப்பாடலை வில்லின் வழி இசைத்திருப்பதாகக் கூறுகிறார்.

கதைப்பாடல்களின் இரு கூறுகள்

பொதுவாகக் கதைப்பாடல்கள் சோக முடிவினதாகக் காணப்படுகின்றன. இவ்வகைக் கதைப்பாடல்கள் பிறப்பு - திருமணம் - இறப்பு - இறைவனைச் சேர்ந்து வரம் பெறுதல் - மீண்டும் பிறத்தல் என்ற அமைப்பில் காணப்படும். மற்றுமொரு பிரிவு பிறப்பு - திருமணம் - இடையூறு - நாடு சேர்தல் என்ற அமைப்பில் காணப்படும். இரண்டாம் வகைக் கதைப்பாடல்கள் ராஜாக்கள் கதை தொடர்புடையனவாகவும், முதலாம் வகைக் கதைப்பாடல்கள் சிறுதெய்வங்கள் தொடர்புடையனவாகவும் காணப்படுகின்றன.


---

12. தமிழ் வில்லுப்பாட்டுகள், ப.73


13. Performance as Paradigm : The Tamil Bow Song Tradition, p.81

கீழ்க்காணும் இரு வரைபடங்கள் இதை விளக்கும்.

முதலாம் வகையின:



இரண்டாம் வகையின:



இதனுள் இராமர் கதை இரண்டாம் வகையைச் சார்ந்ததாகக் காணப்படுகின்றது.[14] இரண்டாம் வகையினதாகிய இராமர் கதை போன்றன அதற்கென தனித்த சடங்கு ஆச்சாரங்களோடு கூடிய கோயில்கள் இன்மையால் குறிப்பிட்ட காலங்களில் வில்லுப்பாட்டு நிகழ்த்த வேண்டும் என்ற அவசியமின்றி போய்விடுகின்றது. இராமர் தெய்வம் சார்ந்த தன்மையுடையவராக இருந்த போதிலும் வில்லடிப்பாட்டு நடக்கும் எந்த கோயில்களிலும் வழிபாடு நிகழ்த்தப்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.[15]

என்றாலும் பரந்துபட்ட நிலையிலும், வில்லுப்பாட்டு செறிவாக விளங்கும் தென்மாவட்டங்கள் மட்டுமன்றிப் பல இடங்களில் இராமர்கதை வில்லுப்பாட்டில் நிகழ்த்தப்பெறுகிறது. பெருந்தெய்வ வணக்கமுடைய கோயில்களின் விழாக் காலங்களிலும், கோடைக்காலங்களிலும் மக்களின் பொழுதுபோக்கு நிகழ்வுகள் ஆகியவற்றின் பொழுதும் இக்கதைப்பாடல் நிகழ்த்தப்பெறுகிறது.

---

14. Ibid, p.177

15. Although Rāma is regarded as a deity, he is not worshipped in any villuppāṭṭu temple.

Ibid, p.286.

வில்லிசையின் பரந்த தளம்

ஒரு கதைப்பாடல் சிறக்க உதவுவது அக்கதையின் உள்ளீடு, வெளியீட்டு உத்தி ஆகிய இரண்டுமாகும். இதில் முதலாவதாக இராமர் கதை இதிகாசகாலந்தொட்டுத் தற்காலம் வரை இந்தியத் துணைக்கண்டம் முழுமையும் மக்களால் அறியப்பட்ட கதையாகத் திகழ்கிறது.

இக்கதையை வெளியிடும் வில்லிசைப்பாட்டு தற்காலத்தில் தமிழகம் முழுவதும் பரவும் கலையாக விளங்கி வருகிறது. முதன்முதலில் தென்மாவட்டங்களிலிருந்து இக்கலையைக் கலைவாணர் N.S. கிருஷ்ணன் (திரைப்பட நடிகர்) கற்றுத் தமிழகம் முழுவதும் பரப்பினார். இவர் வழியில் திரைப்படத் துறையைச் சார்ந்த குலதெய்வம் ராஜகோபால்,S.S.ராஜேந்திரன் ஆகியோரும் இக்கலையைத் தமிழகத்தில் பரப்பினர். இவர்கள் தவிர்த்து கொத்தமங்கலம் சுப்பு பரப்பினார். தற்காலத்தில் கலைமாமணி சுப்பு ஆறுமுகம் இதிகாசக் கதைகளை வில்லிசையில் நிகழ்த்துவதில் வல்லவராகத் திகழ்கிறார்.[16]

இராமர்கதை - கதைச்சுருக்கம்

சுவடியில் காணப்படும் தலைப்பான இராமர் கதை என்னும் பெயரிலேயே இச்சுவடி பதிப்பிக்கப்படுகிறது. மேலும் பதிவு எண் 166-இல் உள்ள இராமர் கதையைப் பெற்றுத்தந்த டாக்டர் நா. இராமச்சந்திரன் இக்கதைப்பாடலை 'இராமாயண வில்லடிப்பாட்டு' எனக் கூறுவர் என குறிப்பிட்டார். இவ்வில்லுப்பாட்டின் கதை கம்பராமாயணத்தைப் பெரிதும் ஒட்டிச் சென்றாலும் சில இடங்களில் கதை வேறுபாடுகள் காணப்படுவதால் கதைச் சுருக்கம் தரப்படுகிறது.

அரக்கர்களின் தொல்லையால் முனிவர்களும் மக்களும் மிகவும் வருந்தவே அனைவரும் வைகுண்டத்தில் திருமாலைக் காணவந்தனர். திருமால் பிரம்மனையும் பிற தேவர்களையும் அழைத்துக் கொண்டு சிவனிடம் முறையிடவே அவர் திருமாலை இராமன் என்ற தசரதகுமாரனாக அவதரிக்க வேண்டும் என்பதோடு யார் யார் எந்த பிறவி எடுத்து மண்ணுலகம் செல்ல வேண்டும் என்பதையும் கூறுகிறார்.

அயோத்தி ஆளும் தசரதர் குழந்தையின்றித் தவிக்கவே விசுவாமித்திர முனிவர் உரைத்தபடி எழுபது யானைகளை மறைந்து நின்று கொல்லும் பொழுது தவறுதலாக ஒரு முனிவரின் மகன் மீது அம்பு எய்ய அவன் மாண்டுபடுகிறான். பின்னர் அயோதரை நாட்டிற்குப் பஞ்சம் தீர்க்க லேமு, லெம்பை என்கிற இரு நடன மாதர்களால் அழைத்து வரப்படும் கலைக்கோட்டு மாமுனிவர் மூலம் புத்திரிகாமேஷ்டியாகம் செய்து நான்கு குழந்தைகளுக்குத் தசரதன் தந்தை ஆகிறான்.

விசுவாமித்திரர் காட்டில் யாகம் வளர்க்கத் தடையாய் இருக்கும் அரக்கியர்களை அழிக்கத் துணிகிறார். அதற்குத் துணையாக இராம இலட்சுமணர்களை அழைத்துச் செல்கின்றார். தாடகையை வதம் புரியும் இராமன் விசுவாமித்திரரோடு செல்லும் வழியில் தன் கால் பட்ட கல்லில் இருந்து தோன்றிய அகலிகையைக் கண்ணுறுகின்றான். அவள் வரலாற்றைக் கூறிய விசுவாமித்திரர் எதிரில் தோன்றிய பகீரதி யாற்றின் வரலாற்றையும் உரைக்கின்றார்.

மிதிலை நோக்கி விசுவாமித்திரரோடு செல்லும் இராம இலட்சுமணர்களுள் இராமன் சீதையை மணப்பதற்கு அரசபையில் வைத்திருந்த 'சிவதனுசு' என்னும் வில்லை ஒடிக்கின்றான். பின்னர் நகர்வலம் வரும் வேளையில் இராமனும் சீதையும் கண்ணுறுகின்றனர். ஆவணி மாதம் திருமணம் நிச்சயிக்கப்பட்டு இராமன் சீதை திருமணம் இனிதே நடந்தேறுகிறது. இதன் பிற்பாடு இராமன் சீதையோடு அயோத்திக்குத் திரும்பும் வழியில் சீதையின் முறை மாப்பிள்ளையான பரசுராமன் எதிர்கொண்டு சண்டைக்கு அழைக்க

16. Journal of the Institute of Asian Studies, P.56

இராமன் போர் புரிகின்றான். பரசுராமனது கையிலுள்ள வில்லையும் பறித்து வெல்கின்றான்.

அயோத்தியில் தசரதர் இராமருக்கு முடிசூட்ட நிச்சயித்துவிட கூனியின் சூழ்ச்சியால் மனமாறும் கைகேயி பரதனை நாடாளவும் இராமனைப் பதினான்கு வருடங்கள் வனம் ஏகவும் செய்கிறாள். இராமனோடு சீதையும் இலட்சுமணனும் பின் தொடர காடுகளின் ஊடே இவர்கள் செல்கின்றனர். கங்கைக் கரையில் குகன் ஓடம் மூலம் கங்கை ஆற்றைத் தாண்டிச் செல்ல மூவருக்கும் உதவுகின்றான்.

பரதன் கேகய நாட்டிலிருந்து திரும்பியதும் இராமன் வனம் புகுந்ததையும் அத்துயரத்தைத் தாங்க முடியாமல் தசரதன் மாண்டதையும் அறிந்து வருந்தி தன் தாய் கைகேயியைப் பழித்துரைக்கின்றான். இராமனைத் தேடி வனம் செல்லும் பரதன் மிக வருந்தி தன் அண்ணனைக் கண்ணுற்று நாடு திரும்பும்படி அழைக்கிறான். அது முடியாமல் போகவே இராமனின் பாதரட்சைகளைப் பெற்று பரதன் அயோத்தி திரும்புகிறான்.

தண்டகவனத்தில் மூவரும் இருக்கச் சடாயுவைக் கண்ணுறுகின்றனர். பின்னர் மூவரும் தெற்கு நோக்கிச் சென்று அகத்தியரைக் காணுகின்றனர். பின்னர் மந்தாகினி வனத்தில் இராமர் இலட்சுமணர் சீதை மூவரும் இருக்கின்றனர்.

இராவணன் இழைத்த கொடுமையால் சூர்ப்பநகையின் கணவன் சிங்கன் மாண்டுபட அதனால் மனம் வருந்தும் இவர்கள் புதல்வன் வனத்தில் ஒரு மரத்தில் உறைந்து வருகிறான். ஒருமுறை கனி பறிக்க வரும் இலட்சுமணன் ஆலமரம் ஒன்றின் கீழ் நிற்க கூரியதோர் மந்திரவாள் வந்தது. அதைக் கைப்பற்றி இலட்சுமணன் அதன் கூர்மையைச் சோதித்துப் பார்க்கச் சூர்ப்பநகையின் மகன் உறையும் ஆலமரத்தை வெட்டுகின்றான். குருதி ஆறாக அதிலிருந்து வெளிவரவே அச்சத்துடன் நடந்ததை இலட்சுமணன் இராமனிடம் கூறுகின்றான்.

சூர்ப்பநகை தன் மகன் இறக்கும் பொழுது எழுப்பிய பெருங்குரல் கேட்டு வருகிறாள். தன் மகன் இறந்தது கண்டு வருந்தி அருகிலுள்ள பர்ணசாலை வந்து இராமனை மோகிக்கிறாள். அது கூடாது போகவே இலட்சுமணனிடம் வந்து மூக்கும் மார்பும் அறுபட்டு இராவணனிடம் சென்று முறையிடுகிறாள்.

இராவணன் மாரீசனை மாயமானாக அனுப்பித் தானும் தவ வேடம் பூண்ட துறவியாக வருகிறான். மாயமான் மீது ஆசை கொண்ட சீதை அதைப் பிடித்துத் தரும்படி இராமனிடம் வேண்ட அவனும் பின் ஏகுகிறான். மாரீசன் இராமனின் அம்புபட்டு இறக்கும் பொழுது மாயக் குரலில் இலட்சுமணனுக்கு அபயக் குரல் எழுப்பி மடிய, இலட்சுமணன் சீதையைத் தனியே வைத்து இராமனைப் பின்தொடருகிறான். இராவணன் சீதையை நேரம் பார்த்துத் தேரிலேற்றிக் கவர்ந்து செல்கிறான்.

சடாயு இடையில் வழிமறித்து இராவணன் மீது போர்தொடுத்து முடிவில் மாளுகிறான். சீதையைத் தேடி இராம இலட்சுமணர்கள் பயணப்படுகின்றனர். வழியில், கிஷ்கிந்தா கிரியில் அனுமன் தொடர்பு கிடைக்கிறது. சிவனின் விந்துவிலிருந்து தோன்றிய வாயு-அஞ்சனை புத்திரனாகிய அனுமன் சுக்கிரீவனை இராம இலட்சுமணருக்கு அறிமுகம் செய்கிறான்.

பாற்கடலைக் கடைந்து அதிலிருந்து இரண்டாவதாக வரப்பெற்ற தாரையை மனைவியாகக் கொண்ட சுக்கிரீவன் தன் மனைவியை வாலியிடம் பறி கொடுக்கிறான். வாலி ஒரு முறை துந்துபி, கடாமுகன் என்ற இரு பெரும் அரக்கர்களோடு பல் ஆண்டு காலம் மோதிப் பின்னர் வராமல் போகவே வானரர்கள் சுக்கிரீபனை அரசனாக்குகின்றனர். வாலி இரு அரக்கர்களையும் வென்று வரும் வேளையில் சுக்கிரீவன் அரசனாக இருப்பது கண்டு மிகுந்த சினம் கொண்டு அவனைக் கொல்லத் துணிகிறான். உயிருக்குப் பயந்து சுக்கிரீவன் வாலியால் வரமுடியாத ரிஷிமுக பர்வதத்தில் உறைகின்றான்.

சுக்கிரீவனோடு நட்புடன் விளங்கும் இராமன் வாலியை மாளச் செய்து சுக்கிரீவனை மன்னனாக்குகிறான். அனுமன் இராமனிடம் கணையாழியைப் பெற்றுக் கடல் கடந்து, பல இடங்களிலும் தேடி இறுதியில் அசோகவனத்தில் சீதையைக் காணுகின்றான். அவளிடமிருந்து சூடாமணியைப் பெற்றுக் கொண்டு இராவணன் புத்திரர்கள் இருவரை மாளச் செய்து, இராவணனோடு வாதாடி, இலங்கைக்கும் தீயூட்டுகிறான். தீயூட்டும் பொழுது உடனுக்குடன் இலங்கைநகரை மீண்டும் நிர்மாணிக்கும் விஸ்வகர்மனுக்கு அழகிய அனுமக்கொடி ஒன்றைக் கையூட்டாகக் கொடுத்து, அவன் மனம் பேதலித்த வேளையில் இலங்கையை அழிக்கிறான்.

கிஷ்கிந்தா கிரிக்குத் திரும்பும் அனுமன் சீதையால் தரப்பட்ட சூடாமணியை இராமனிடம் கொடுத்து நடந்ததைக் கூறுகிறான். இராமன் ஆணையால் இலங்கை நோக்கி வானரத் தலைவர்கள் இருபத்துநான்கு பேர்கள் தலைமையில் வானரச் சேனைகள் திரளுகின்றன. சேது சமுத்திரத்தில் திருவணை கட்டப்படுகிறது. இராம இலட்சுமணர்களோடு வானரச் சேனைகள் இலங்கையை அடைகின்றன.

விபீஷணன் சீதையைச் சிறைவிடும்படி, அண்ணன் இராவணனிடம் அறிவுரை கூறுகிறான். பல பட இராவணனால் விபீஷணன் இகழ்ந்துரைக்கப்படவே நான்கு மந்திரிமார்களுடன் இவன் இராமனிடம் சரணாகதி அடைகிறான்.

அதிகாயன் என்னும் இராவணனின் மகன் படைக்குத் தலைமை தாங்கிப் போர் செய்து இராம இலட்சுமணரின் படையினரால் கொல்லப்படுகிறான்.

அடுத்ததாக இந்திரசித்து பெரும்படையுடன் போருக்குப் புறப்படுகிறான். பலவித வரங்களைத் தவம் செய்து பெற்ற இவன் மிகுந்த வேகத்துடன் போர் செய்கிறான். அவனது போரை வானரப்படையினர் சலியாமல் எதிர்க்கவே இராவணன் போர்க் களம் வருகிறான். அவன் எய்த அம்பு விபீஷணன் நோக்கிச் செல்லுகின்றது. இது குறி தவறி இலட்சுமணன் மார்பில் பட்டு அவன் மாண்டு போகிறான். அனுமன் இதைக் கண்டு மிகுந்த சினத்தோடு இராவணனை, அவன் உடம்பில் புண் ஏற்படும்படி உதைக்கிறான். இராமன் அருளால் இலட்சுமணன் உயிர்த்தெழுகிறான்.

தன் தந்தையின் உடம்பில் புண் ஏற்பட்ட காரணத்தால் இந்திரசித்து போருக்குச் செல்கிறான். தன்னுடைய பிரம்மாஸ்திரத்தால் அம்பு எய்து வானரச் சேனை அனைத்தையும் மயங்கச் செய்கிறான். அனுமன் மருந்துவாழ்மலையைக் கொண்டு அதிலுள்ள மூலிகை மேன்மையால் அனைவரையும் மீண்டும் எழும்பச் செய்கின்றான்.

இம்முறை இந்திரசித்து நாகாஸ்திரத்தை எய்துவிடவே மீண்டும் அனைவரும் மயங்குகின்றனர். நாகாஸ்திரத்தின் விஷத்தை முறிக்கக் கருடன் எழுந்தருளுகின்றான். கருடனின் சிறகு நிழல் அஸ்திரத்தால் பிணிக்கப்பட்ட வீரர்களின் மீது பட நாகவிஷம் முறிந்து அனைவரும் உயிர்த்தெழுகின்றனர். இறுதியில் இலட்சுமணர் விட்ட அம்பால் இந்திரசித்து மாளுகின்றான்.

கும்பகர்ணன் இராவணனுக்கு உபதேசம் கூறிப் பின்னர் பெரும்போர் புரிந்து வானரப்படைகளைச் சிதைந்து ஓடும்படி செய்கிறான். பின்னர் இராமனால் கைகள் துணிக்கப்பட்டும், கால்கள் துணிக்கப்பட்டும் முடிவில் கொல்லப்படுகிறான்.

பெரும்படைகளை இழந்த இராவணன் தன் தாயாதி வம்சத்தில் வந்த, பாதாள லோகத்தில் வாழும் மயில்ராவணனை உதவிக்கு அணுகுகின்றான். மயில் ராவணனும் இராம இலட்சுமணரைக் கவர்ந்துகொண்டு சிவகெங்கைப் பொய்கையிலுள்ள தாமரைத் தண்டினூடே பாதாள லோகம் சென்று சிறை வைக்கின்றான். விபீஷணன் வழி பாதாளலோகம் இருக்குமிடத்தை அறியும் அனுமன் அங்குச் செல்லுகின்றான்.

மயில்ராவணன் தங்கையாகிய தூரதண்டி மூலம், அவள் மகன், இராம, இலட்சுமணர்கள் ஆகிய மூவரும் நாளை காளிக்கு மயில்ராவணனால் பலியிடப் போவதை அறிகிறான்.

மயில்ராவணனின் அக்கினிக் கோட்டைக்குள் சென்று, எதிர்த்த படையினரை அனுமன் அழிக்கின்றான். இறுதியில் மயில்ராவணனோடு போரிட்டு அவனது வலிமையை அழித்து இறுதியில் அவனையே காளிக்குப் பலியிடுகின்றான். அப்பொழுது மயில் ராவணன் மனைவி தன் நாட்டில் உறைந்த அனுமவிந்தனிடம் தனக்கு உதவி செய்ய வேண்டுகின்றாள். அனுமவிந்தன் அவள் வேண்டுகோளுக்கு இணங்கி அனுமனோடு போர் செய்கின்றான். அனுமவிந்தனின் போர்த்திறமையைக் கண்ட அனுமன் அவன் வரலாற்றை வினவுகிறான். அனுமவிந்தன் வழி இவன் தன் மகன் என்பதை அனுமன் அறிகிறான். அறிந்து மகிழ்ச்சியடையும் அனுமன் அனுமவிந்தனைப் பாதாளநாட்டின் வாசல் பிரதானியாக நியமித்து இராம இலட்சுமணர்களோடு இலங்கை திரும்புகிறான்.

அடுத்து இராவணன் அனுப்பிய மூலப்படையினர் இராமரின் சேனையோடு போரிட்டு அழிந்து போகின்றனர். இராமன் விட்ட அம்பு மூலப்படையினர் ஒவ்வொருவரின் நெற்றியிலும் இராம நாமத்தைப் பொறித்துச் செல்லவே மூலப் படையினர் ஆள்மாறாட்டத்தால் தங்களுக்குள் வெட்டி மாள்கின்றனர்.

இராவணன் இறுதியாக வந்து போரிடுகின்றான். விபீஷணன் அவனது உயிர் இருக்கும் அமுதகலச இடத்தை இராமனிடம் குறிப்பிடுகிறான். இராமனும் அவ்விடத்தைக் குறித்து அம்பு விடவே அவனும் உயிர் மாள்கிறான்.

பின்னர் அனுமன் சீதையை இராமனிடம் அழைத்து வர, இராமன் அவளிடம் தீக்குளிக்கப் பணிக்கின்றான். அவளும் தீயில் மூழ்கி எழுந்து வரவே, அனைவரும் இராமேஸ்வரம் அடைகின்றனர். அங்கு, அனுமனால் காசியிலிருந்து கொண்டு வரப்பட்ட லிங்கத்தை இராமன் பிரதிஷ்டை செய்து பிதிர்கர்மம் மற்றும் பிரம்மஹத்தி தோஷங்களை நிவர்த்தி செய்கிறான்.

அனைவரும் அயோத்தி திரும்புகின்றனர். அனுமன் மூலம் தன் வருகையைப் பரதனுக்குத் தெரிவித்து அவனை நெருப்பில் விழாத வண்ணம் காப்பாற்றி இராமன் அயோத்தி அடைகிறான். ஆவணி மாதத்தில் முகூர்த்தநாள் பார்த்து முனிவர் தேவர்கள் உட்பட அனைவரும் வந்து இராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்கின்றனர். இராமனின் 'இராம ராஜ்ய' ஆட்சி நடக்க வாழ்த்தோடு கதை முடிகிறது.

கதை வேறுபாடுகள்

கம்பராமாயண மூலக்கதையோடு பெரிதும் ஒத்துச்செல்லும் இராமர்கதைப் பாடல் சிலவிடங்களில் கதையமைப்பில் சில வேறுபாடுகளைப் பெற்றுள்ளது. கதை வழங்கும் வட்டாரத்தின் செல்வாக்கு, பண்பாட்டுக் கூறுகள், கதைக் கேட்போரின் மனநிலை, கதையை வில்லிசையில் பாடும் சூழல் இவைகள் இத்தகைய கதை மாற்றத்திற்கான காரணிகளாக அமைகின்றன. இக்கதை வேறுபாடுகள் கம்பராமாயணத்தின் ஒவ்வொரு காண்டத்திலுள்ள படலங்களோடும் ஒப்பு நோக்கி மிகை, குறைகள், கதை வேறுபாடுகள் ஆகியவை அட்டவணை வழி சுட்டப்படுகின்றன. அட்டவணையில் சுட்டப்படும் 'ஆம்' - பிரிவு அப்படியே கம்பராமாயணம் பகுதியைத் தழுவி வருவதாகக் கருத்தில் கொள்ளாது பெரும் பகுதியைக் கொள்கிறது என்கிற நிலையில் அமைகிறது. 'இல்லை' - பிரிவு முழுமையும் கம்பராமாயணத்தோடு ஒப்பிடக் காணப்படவில்லை. 'வேறுபாட்டுடன்' பகுதியில் வரும் வேறுபட்ட கதைக் கூறுகளில் சில அவற்றின் காரணிகளோடு விளக்கப்படுகின்றன.

அட்டவணை I

இராமர்கதை

		ஆம்	இல்லை	வேறுபாட்டுடன்
கம்பராமாயணம் - பால காண்டம்	ஆற்றுப் படலம்		×	
	நாட்டுப் படலம்	✓		
	நகரப் படலம்	✓		
	அரசியற் படலம்		×	
	திருவவதாரப் படலம்			✓
	கையடைப் படலம்	✓		
	தாடகைவதைப் படலம்	✓		
	வேள்விப் படலம்			✓
	அகலிகைப் படலம்	✓		
	மிதிலைக்காட்சிப் படலம்			✓
	கைக்கிளைப் படலம்			✓
	வரலாற்றுப் படலம்	✓		
	கார்முகப் படலம்	✓		
	எழுச்சிப் படலம்	✓		
	சந்திரசயிலப் படலம்		×	
	வரைகாட்சிப் பட்லம்		×	
	பூக்கொய் படலம்		×	
	நீர்விளையாட்டுப் படலம்		×	
	உண்டாட்டுப் படலம்		×	
	எதிர்கொள் படலம்	✓		
	உலாவியற் படலம்	✓		
	கோலம்காண் படலம	✓		
	கடிமணப் படலம்	✓		
	பரசுராமப் படலம்			✓

அட்டவணை II

இராமர் கதை

		ஆம்	இல்லை	வேறுபாட்டுடன்
கம்ப ராமாயணம் - அயோத்தியா காண்டம்	மந்திரப் படலம்	✓		
	மந்திரை சூழ்ச்சிப் படலம்	✓		
	கைகேயி சூழ்வினைப் படலம்	✓		
	நகர்நீங்கு படலம்	✓		
	சுமந்திரன் மீட்சிப் படலம்			✓
	தயரதன் மோட்சப் படலம்	✓		
	கங்கைப் படலம்	✓		
	குகப் படலம்	✓		
	வனம்புகு படலம்	✓		
	சித்திரகூடப் படலம்		×	
	பள்ளிப்படைப் படலம்	✓		
	ஆறுசெல் படலம்	✓		
	கங்கைகாண் படலம்			
	திருவடிசூட்டு படலம்	✓		

அட்டவணை III

இராமர் கதை

		ஆம்	இல்லை	வேறுபாட்டுடன்
கம்ப ராமாயணம் - ஆரணிய காண்டம்	விராதன் வதைப் படலம்		×	
	சரபங்கன் பிறப்புநீங்கு படலம்		×	
	அகத்தியப் படலம்	✓		
	சடாயுகாண் படலம்	✓		
	பஞ்சவடிப் படலம்	✓		
	சூர்ப்பணகைப் படலம்	✓		
	திரிசிராவதைப் படலம்		×	
	தூடணன்வதைப் படலம்	✓		

		ஆம்	இல்லை	வேறுபாட்டுடன்
	கரன்வதைப் படலம்	✓		
	இராவணன் அணங்குறு படலம்	✓		
	மாரீசன் வதைப் படலம்	✓		
	இராவணன் சூழ்ச்சிப் படலம்	✓		
	சடாயு உயிர் நீத்த படலம்	✓		
	அயோமுகிப் படலம்		×	
	கவந்தன் படலம்		×	
	சவரி பிறப்பு நீங்கு படலம்		×	

அட்டவணை IV

இராமர் கதை

		ஆம்	இல்லை	வேறுபாட்டுடன்
கம்ப ராமாயணம் - கிஷ்கிந்தா காண்டம்	பம்பை வாவிப் படலம்	✓		
	அனுமப் படலம்			✓
	நட்புக்கோட் படலம்			✓
	மராமரப் படலம்	✓		
	துந்துபிப் படலம்	✓		
	கலன் காண் படலம்		×	
	வாலி வதைப் படலம்	✓		
	தாரை புலம்புறு படலம்	✓		
	அரசியற் படலம்	✓		
	கார்காலப் படலம்		×	
	கிட்கிந்தைப் படலம்			✓
	தானை காண் படலம்	✓		
	நாட விட்ட படலம்	✓		
	பிலம்புக்கு நீங்கு படலம்		×	
	ஆறு செல் படலம்		×	
	சம்பாதிப் படலம்		×	
	மயேந்திரப் படலம்	✓		

அட்டவணை V

இராமர் கதை

		ஆம்	இல்லை	வேறுபாட்டுடன்
கம்ப ராமாயணம் - சுந்தர காண்டம்	கடல்தாவு படலம்			✓
	ஊர்தேடு படலம்	✓		
	காட்சிப் படலம்			✓
	உருக்காட்டு படலம்	✓		
	சூடாமணிப் படலம்	✓		
	பொழில் இறுத்த படலம்	✓		
	கிங்கரர் வதைப் படலம்	✓		
	சம்புமாலி வதைப் படலம்		×	
	பஞ்ச சேனாபதிகள் வதைப் படலம்			✓
	அக்ககுமாரன் வதைப் படலம்	✓		
	பாசப் படலம்	✓		
	பிணி வீட்டு படலம்	✓		
	இலங்கை எரியூட்டு படலம்	✓		
	திருவடி தொழுத படலம்	✓		

அட்டவணை VI

இராமர் கதை

	ஆம்	இல்லை	வேறுபாட்டுடன்
கடல்காண் படலம்	✓		
இராவணன் மந்திரப் படலம்	✓		
இரணியன் வதைப் படலம்		×	
வீடணன் அடைக்கலப் படலம்	✓		
ஒன்னார் வலி அறி படலம்		×	
கடல் சீறிய படலம்	✓		
வருணன் அடைக்கலப் படலம்	✓		

		ஆம்	இல்லை	வேறுபாட்டுடன்
கம்ப ராமாயணம் - யுத்த காண்டம்	சேதுபந்தனப் படலம்	✓		
	ஒற்றுக் கேள்விப் படலம்		×	
	இலங்கை காண் படலம்	✓		
	இராவணன் வானரத்தானை காண் படலம்		×	
	மகுட பங்கப் படலம்			✓
	அணி வகுப்புப் படலம்	✓		
	அங்கதன் தூதுப் படலம்	✓		
	முதற்போர் புரி படலம்	✓		
	கும்பகருணன் வதைப் படலம்	✓		
	மாயா சனகப் படலம்			✓
	அதிகாயன் வதைப் படலம்	✓		
	நாகபாசப் படலம்	✓		
	படைத்தலைவர் வதைப் படலம்		×	
	மகரக்கண்ணன் வதைப் படலம்		×	
	பிரமாத்திரப் படலம்	✓		
	சீதை களம் காண் படலம்		×	
	மருத்துமலைப் படலம்	✓		
	களியாட்டுப் படலம்		×	
	மாயாசீதைப் படலம்			✓
	நிகும்பலை யாகப் படலம்	✓		
	இந்திரசித்து வதைப் படலம்	✓		
	இராவணன் சோகப் படலம்	✓		
	படைக்காட்சிப் படலம்		×	
	மூலபல வதைப் படலம்			✓
	வேல் ஏற்ற படலம்			✓
	வானரர் களம் காண் படலம்		×	

	ஆம்	இல்லை	வேறுபாட்டுடன்
இராவணன் களம் காண் படலம்		×	
இராவணன் தேர் ஏறு படலம்	✓		
இராமன் தேர் ஏறு படலம்	✓		
இராவணன் வதை படலம்			✓
மண்டோதரி புலம்புறு படலம்	✓		
வீடணன் முடி சூட்டு படலம்	✓		
பிராட்டி திருவடி தொழுத படலம்	✓		
மீட்சிப் படலம்	✓		
திருமுடி சூட்டு படலம்	✓		

கதை வேறுபாட்டு இடங்கள்

பல்வேறு இடங்களில் கம்பராமாயணத்திலிருந்து வில்லுப்பாட்டின் வழி ஒரு நிகழ்த்து கலையாகத் திகழும் இக்கதைப்பாடல் சில மாற்றங்களுடன் எழுதப்பட்டுள்ளது. பல்வேறு கதை மாற்றத்திற்கான காரணங்கள் வட்டாரத்தின் செல்வாக்கினால் ஏற்பட்டவையாகும்.

சுக்கிரீவன் மனைவி தாரை என்ற கூற்று

கம்பராமாயணத்தில் ருமை என்பவள் சுக்கிரீவன் மனைவியாக அமைகிறாள். இங்கு ருமை என்னும் கதாபாத்திரம் தரப்படவில்லை. வாலி, சுக்கிரீவன் ஆகிய இருவருள் தாரை யாருக்குரியவள் என்பதை அடிப்படையாக ஆசிரியர் கொள்கிறார். இக்கதைப்பாடலின் படி பாற்கடலில் வாலியும் சுக்கிரீவனும் அமிர்தம் கடையும் வேளையில் இருவரும் தம்முள் ஒப்பந்தம் செய்து கொள்கின்றனர். அதன்படி பாற்கடலில் முதலில் தோன்று வது வாலிக்கு என்றும் இரண்டாவது தோன்றுவது சுக்கிரீவனுக்கு என்றும் முடிவு மேற்கொள்ளப்படுகிறது.

'தானமுன் வருகை தமையனுக் கேபின் தருவது தம்பிக்கென மதித்தார்
தார்குழல் தாரை பின்வர மூத்தவள் வாகனத் துடன்வரவே'

பா. 34 வ 2

வாலி சொன்ன சொல்லை மாற்றி அழகிய தாரையை மனைவியாக்கிக் கொள்கிறான். சுக்கிரீவன் அதிலிருந்து திருமணம் இல்லாது வாழ்கின்றான். வாலி தாரை மற்றும் ருமையோடு இருக்கும் நிலை; வாலி வதத்திற்குப் பிறகு சுக்கிரீவன் ருமை மற்றும் தன் அண்ணனை மனைவி தாரையோடு இருக்கும் நிலை இங்கு ஒரு தார மணம் ஏற்பட்டு காலூன்றிய பிற்காலத்தில் இக்கதை மாற்றத்தால் தவிர்க்கப்படுகிறது. இராமன் வாலியை அம்புயெய்து கொன்றதற்குக் காரணமும் இதனால் நியாயப்படுத்தப்படுகிறது.

அனுமன் உடற்பலம்

தன்னை எதிர்த்துப் போரிடும் வீரர்களின் பாதி பலத்தைப் பெறும் வீரனாக வாலி கம்பரால் படைக்கப்படுகிறான். இந்நிகழ்ச்சி இக்கதைப்பாடலில் அனுமனுக்காக

மாற்றப்படுகிறது. அனுமன் மிகச்சிறந்த உடல் வலிமையுடையவனாகப் படைக்கப் படுகிறான். சிறு குழந்தையாக இருக்கும் பொழுது உதைய கதிரவனை உண்பதற்குரிய பழம் என நினைத்துக் கைப்பற்றுவனாகத் திகழ்கிறான். சிவன், திருமால், பிரம்மா மூவரும் அனுமனுக்கு வரங்கொடுக்கும் பொழுது,

'என்று மிறப்பில்லை பிறப்புமில்லை இவனைச் செயிப்பவ ரெவருமில்லை
எவர்தா னெதிர்த்தாலு மெதிரிபலம் இவன்கை கொள்ளக் கடவதென்றார்'

பா.35 வரி.45-46

- என்கின்றனர். பிறப்பு. இறப்பற்ற, எவராலும் வெல்ல முடியாத, எதிரிகளின் பலத்தில் பகுதியைப் பெறுகின்றவனாக இங்கு அனுமன் சித்தரிக்கப்படுகின்றான்.

இது கதை கேட்போருக்கு அனுமன் மீது கொண்டுள்ள பக்தியை மிகுதிப்படுத்த கையாளப்பட்ட உத்தியாகும். அனும வணக்கம் மிகுந்த இடமாய் இக்கதைப் பாடல் பரவலாக வழங்கும் குமரி மாவட்டம் திகழ்கிறது. தேவலோகத்தில் தாணு, மால், அயன் மூவராலும் அனுமனுக்கு வரங்கொடுக்கப்பட்டது. அவர்கள் மூவரும் ஒரு சேர உறைந்துள்ள சுசீந்திரம் (கன்னியாகுமரிக்கு வட கிழக்கில் 18 கிலோ மீட்டர் தொலைவில்) என்னும் தலத்திலுள்ள கோயிலினுள் மிகப் பிரமாண்டமான வடிவில் அனுமனும் எழுந்தருளியிருக்கிறான்.

அனுமன் பிறப்பு

வாயு புத்திரனாகக் கம்பராமாயணத்தில் கொள்ளப்படும் அனுமன் சிறு மாறுதலோடு இக்கதைப் பாடலில் படைக்கப்படுகிறான். அதன் படி சிவவிந்துவினால் அஞ்சனைக்கு அனுமன் பிறப்பதாக இக்கதைப்பாடல் கூறப்படுகிறது. சிவபுத்திரனாக இருந்த போதிலும் திருமால் அவதாரமான இராமனின் நாமத்தை உச்சரிக்கும் ஒரு தொண்டனாக இக்கதைப் பாடல் அனுமனை நமக்குக் காட்டுகிறது. இங்கு சைவ வைணவ பிரிவுகளுக்கிடையிலேயான சமயத் தூதுவனாக அனுமன் காட்சி அளிக்கிறான். அனுமனைக் குமரி மாவட்டத்தில் வணங்குவோரும் சைவ, வைணவ காழ்ப்பின்றி வழிபடுவது குறிப்பிடத்தக்கது.

பாத்திரப் படைப்பு

21.18. சோதிரி - சோதிடன். திருச்சாற்று - திருவோலை. தேவிமார் - தசரதன் மனைவியர். 21.19. சர வைத்து - நீர் வைத்து. மஞ்சனம் - அபிஷேக நீர். 21.21. சடாமகுட முடி - சடைமுடியானது மேல் வைத்திருக்கும் கிரீடம். மூர்த்தி - தலைவன். 21.22. தனதுட - தன்னுடைய. தாரணி - பூமி. சமாச்சாரம் - காரணம். 21.23. மலையே - போர்த் தொழிலில் வல்லவரே. சுந்தரனே - அழகனே. 21.24. தாழ்வில்லையே - குறைவில்லையே. குடி - குடும்பம். 21.25. குடி - குடி மக்கள். ஆ - பசு. புனைந்தேனோ - செய்தேனோ. 21.26. துற்சனர் - ஒழுக்கமற்ற நடவடிக்கையில் ஈடுபடுவோர். மணியம் - கிராமம், கோயில், மடம்,முதலியவற்றை மேற்பார்க்கும் வேலை. பறைந்தேனோ - கூறினேனோ. 21.27. அறும்பு - பஞ்சம். கடமை - வரி. அடித்து - வற்புறுத்தி.

8. சமச்சாரம், 9. தற்மம்

By the astrologer himself, about the king's forthcoming visit
To his hermitage, accompanied by his queens;
The king went to the sage and offered him homage due
With obeisances and holy water vessels, and washing his feet.
Welcoming the king of Ayōtti,
The Sage enquired the reason for his visit,
Visvāmittira nodded his head,
In approval of the king's reverence towards him;
Placing his hand in benediction upon his head,
He asked the king of kings;
"What may be the purpose of your visit"
Tacarata sadly spoke of his childless plight;
" O mountain of virtue, Great Sage! your slave I am,
Ruling blamelessly in Ayōtti. No want I have;
But of what use is all my power and pelf,
That I have no children yet?
Did I ruin my people or commit the sin of cow-slaughter?
Did I forget my mentor's teachings?
Did I encounter poor wicked men?
Blame unjustly women chaste or demand tax by force
In time of drought, or corrupt the use of temple funds?
What sin did I commit? O what sin that I am till now,
I am childless yet. Tell me, O Sage, I implore you".
Thus the king, bowing before Visvāmittira, prostrate

விசுவாமித்திரர் குழந்தை பேறு தசரதற்கு உண்டெனல்

மறைமா முனியுரைப்பான் மகாராஜ தசரதனே
மங்கை பங்கீசுரன் மாலருளால் நாலுமைந்த ருனக்குவரும்
பருமதிலோர் மகனைச்சில மாதவர்க் காதரவாய்
வக்கிரம தாடகையைக் கொல்லவேள்வி வளர்க்க விடுவீரே

தசரதர் பதிலுரை

குருமொழி தப்பாம லெனக்குக் குமாரர் களுண்டானால்
குழந்தையை யுங்கள் வசந்தனிலே யான்கூட்டி யனுப்புகிறேன்

குழந்தைப் பேறுக்கு முனிவர் வழிவகை கூறுதல்

விருத்தம்

22. அனுப்பலா மென்ற போது அரஹரா நமசி வாயம்
நினைக்குமா தவத்தோன் நானே நெடும்புவி அயோத்தி வேந்தே
உனக்குமே மைந்தர் வேண்டில் ஒளித்திருந் தெழுப தானை
வனத்திலே வதைப்பா யாகில் மகவுனக் குண்டா மென்றார்.

வேறு

23. உண்டாமுனக்கு மைந்தர் உமையொரு பாகமூர்த்தி
தண்டரளத் துளபத் தாமர ருளாலே
கண்டாலென் வேள்வி காக்கத் துணையாக
மண்டலத்தோர் வேந்தேநீ வரவிட வேணும்

அண்டர் பிரானறிய ஆண்பாலென் கண்ணெதிரே
கண்டால் விடலாம் கடவுளர் மேலாணை
தெண்டுக மண்டலமும் செங்காவி ருத்ராக்ஷம்

கொண்டாதி விஸ்வாமித் திரர்கூத்தாடி னாரே

21.29. மறைமாமுனி - விசுவாமித்திரர். மங்கை பங்கீசுரன் - பெண்ணைத் தன் உடம்பின் இடப்பாகத்தில் சரி பாதியாகக் கொண்டவன்; சிவன். மால் - திருமால், 21.30. மாதவர் - பெருந் தவத்தோர். வக்கிரம - அக்கிரம. வேள்வி - யாகம். 21.31. குரு - விசுவாமித்திரர். குமாரர் - புத்திரர். வசந்தனிலே - பொறுப்பிலே. 22.1. அரஹரா நமசிவாயம் - விசுவாமித்திரர் சிவ மந்திரத்தை மேற்படி ஒலித்தல். 22.4. வதைப்பாயாகில் - கொல்வாயானால். மகவு - குழந்தை. 23.1. உமையொரு பாகமூர்த்தி - பார்வதியைத் தன் உடம்பின் இடப்பாகத்தில் கொண்டவன்; சிவன். 23.2. தண்தரளத் துளபத்தாமரர் - குளிர்ச்சி பொருந்திய முத்து மாலையும், துளசி மாலையும் அணிந்தவர்; திருமால். 23.5. அண்டர் பிரான் - தேவர்கள் தலைவர்; சிவன். 23.7. தெண்டு- தண்டு; பிரமசாரிக்குரிய பலாசக் கோல். கமண்டலம் - துறவு வாழ்வு மேற்கொள்வோர் கையில் வைத்திருக்கும் நீரை மொள்ளுகின்ற பாத்திரம். செங்காவி - குங்கும காவி நிறமுடைய துறவிகள் அணியும் ஆடை. ருத்ராக்ஷம் - ருத்திராட்ச மணி; துறவிகள் கழுத்தில் அணிவது.

In humble veneration, to which the great sage replied;
"O king Tacarata, I tell you true; by the grace of
Siva concorporate with Goddess Uma, and Tirumāl,
Four Sons you are sure to sire.
Only I ask, one of them you should allow to come with me,
In defence of hermits to protect their sacrifices,
So that the terrible Tāṭakai is destroyed;
And Tacarata replied: "If by your holy words of grace
I were to get Sons, I shall entrust him you want
To your custody and care".

22. As Tacarata promised to send his son with the sage,
Visvāmittira happily uttered "Hara Hara!"
"I tell you, O king of Ayōtti, If you desire progeny,
You have to go to the forest and hunt elephants,
Slaying seventy of them,
Then surely you will get your sons.

23. "Surely" said the Sage, "by the grace of the Lord conjoined
With Uma, and of Tirumāl enthroned with pearl chaplets,
Gold and fragrant basil cool;
But when I perform the sacrifice, you should allow
Your son to stand guard; O lord of the wide earth;"
To which replied the king: "By the great God I swear,
When I see my sons before me, as you have promised,
I in turn promise to send him with you,
The Lord of the Universe be my witness".
The ancient Sage Visvāmittira adorned with a chaplet

கூத்தாட யோகவேஷ்டி குழையுஞ் சடையாட
மாத்திரைக் கோல்கைக்கொண்டு மன்னன்றனைப் பார்த்து
காத்தங் கயோத்தியான் காவலா யுந்தனக்குப்
பூத்தான மாகபுத்திரர் வேண்டிற் கேளு

சேத்திரஞ் சேர்தீர்த்தமாடி சிவனை மிகத்தொழுது
ஆத்தாள் கெவுரிபூசை அன்பாகச் செய்வாய்நீ
வாய்த்த வனம்புகுந்து மறைவாயுன் கையாலே
ஏத்த எழுபதானை எய்துமே கொல்வாய்நீ

கொல்லு தந்தியல்லாதே குறித்தோர் பழிசெய்யாதே
வெல்லும் படிதர்மம் விதமாகச் செய்வாய்நீ
அல்லும் பகலும் அட்டாக்ஷரம் பஞ்சாக்ஷரமும்
சொல்லித் தியானஞ்செய்தால் சுதர்பாக்கிய மெய்தும்

விரதம் செய்து தசரதர் வேட்டைக்குப் புறப்படல்

மெய்முனி யிதுரைக்க வேண்டித் தசரதனார்
கைதொழு தயோத்தி கண்டாரே வந்துதவம்
செய்யவனம் புகுந்தார் தேவிமார் தன்கூட
வையக நீதஞ்செய்ய மந்திரிமாரை யழைத்து

கூடும் பதாதிதானை கொடிகள்சிவி கைசேனை
தேடுந் திரவியமும் சேகரஞ்செய் தேயிவர்கள்
நாடும் நதிகடந்து நடைசேத்திரங் கடந்து
ஆடுந் தீர்த்த மாடிஅரனை மிகத்தொழுதார்

பாடும் புலவருக்கும் பரதேசி யாசகர்க்கும்
வாடும் மறையோர்க்கு வஸ்த்திரத் தோடன்ன[10] சொர்ணம்

23.10. மாத்திரைக் கோல் - சித்தர்கள் கையில் கொள்ளும் மந்திரக் கோல். 23.12. பூத்தானமாக- அருமையான. 23.13. சேத்திரம் - புண்ணியத்தலம். 23.14. ஆத்தாள் - தாய்க்கு இணையான தெய்வம். கெவுரி பூசை - பார்வதி பூசை. 23.16. ஏத்த - தகுதியான. 23.17. தந்தி - ஆண் யானை. அல்லாதே - கொல்லாதே. 23.19. அட்டாக்ஷரம் - 'ஓம் நமோ நாராயணாய' என்னும் மந்திரம். பஞ்சாக்ஷரம் - 'நமசிவாய' என்னும் மந்திரம். 23.20. சுதர் பாக்கியம் - மக்கள் செல்வம். 23.24. நீதம் - நியதி முறைகள். 23.25. பதாதி தானை - காலாட் படை. சிவிகை- பல்லக்கு. 23.26. சேகரம் - சம்பாத்தியம். 23.27. சேத்திரம் - புண்ணிய ஸ்தலம். 23.28. அரன்- சிவன். 23.29. பரதேசி - ஆண்டி. யாசகர் - இரப்பவர். 23.30. மறையோர் - வேதம் பயில்வோர். வஸ்த்திரம் - வஸ்திரம்; ஆடை. சொர்ணம் - பொன்.

10. சுர்ணம்.

Of holy eleocarpus, holy staff and holy vessel,
Danced when he said to the king:
"Lord of Ayōtti, if you want darling sons precious,
Hearken unto me: Go thou on a pilgrimage
To holy places: Bathe in sacred waters,
Worship Lord Siva, perform pujas to Great Mother Gowri
And slay tuskers seventy in number:
But only then and naught else!
Do not give offence to others.
After, if you do acts of dharma day and night,
Chanting the eight-syllable and the five-syllable
Mantras, meditating on the Lord, sure then you will
Attain the wealth of children."

TACARATA GOES A HUNTING AFTER PERFORMING AUSTERITIES

Obeying the Sage's behest, Tacarata bowing to him
With folded hands, went into the woods
With his queens accompanying him.
He arranged for the administration in his absence,
By issuing directions to his ministers;
Followed by regiments with fluttering flags,
With all things required for the pilgrimage,
The royal party crossed many a land and river,
Holy place and the bathing ghats,
Ever praying to Hara.
To bards and mendicants
And supplicants and needy Brahmins,
He distributed largesse,
Food, clothes and gold in exceeding measure

நீடும் படிகொடுத்து நெடுநாட்ட லம்புரிந்து
தேடுங் கெவுரிபூசை செய்தினிதே முடித்தார்.

விருத்தம்

24. முகித்தனர் கெவுரி பூசை முடித்தனர் தவம்மு வாண்டு
சுகித்தனர் தேவி மாரும் சூழ்படைத் தளங்க ளெல்லாம்
மகிழ்ச்சியாய் நகர்க்க னுப்பி மாமுனி யுரைதப் பாமல்
அகில்பெரு வனத்தில் யானை அதுக்கொளி யடைத்துப் பார்த்தார்.

தசரதர் யானைகளை வேட்டையாடுதல்

வேறு

25. பார்த்தெழு பதுகரி சாய்த்திர விரத மயோத்தியில் தசரதற்கே
படருமன் மதனென யிடையினிற் கச்சைகட்டி படைபதினெட்டுடனே
சேற்றெழுந் தாமரை வாய்த்தசெங் கழுநீர் பூத்தெழும் பொய்கையிலே
செல்குடி யால்வரும் பெலபிடி யானதை செயித்திடச் சிலைவளைத்தான்
ஆத்தடிக் கேதகை பூத்ததைப் பூவொடு சாய்த்தது சிலகரிகள்
அதில்குருத் தானதைத் துதிக்கையினால் வாயில் முக்குது சிலகரிகள்
காத்தடிச் சோலையி லூற்றெழு வாவியைக் கலக்குது சிலகரிகள்
கலைமா னைக்கட மாவைக் கீறியே கப்புது சிலகரிகள்
சிலையானதுக் கஞ்சி யுலைவாய் மெழுகெனத் திரியுது சிலகரிகள்
செடியொடு தடிபற்றி திரள்திரள் திரளாய் திரியுது சிலகரிகள்
மலையானதை யொட்டி தலையானதை முட்டி வருமே சிலகரிகள்
மடத்திட மரத்தொரு மரத்தைத் துதிக்கை வளைத்தது சிலகரிகள்
துதிக்கை வளைத்து பழுத்தது கோங்கை துணித்தது சிலகரிகள்
தொடுத்திரு களபங் குடித்திடத் தலைகால் சுழற்றுது பலயானை
பதித்த பலாக்கனி வெடித்திட வேர்க்குழி பறித்தது பலயானை
பருவப்பிடிகளைப் பருவக் கனிக்காய் படைத்தது பலயானை.

23.31. நீடும் படி - அதிகமான அளவு. 24.1. முகித்தனர் - முடித்தனர். 24.2. சுகித்தனர் - மகிழ்ச்சி கொண்டனர். தளங்கள் - கூட்டம். 24.4. அகில் - ஒரு வகை மரம். 25.1. கரி - யானை. 25.2. பெலபிடி - வலிமை வாய்ந்த பெண் யானை. சிலை - வில். 25.3. ஆத்தடி - ஆற்றின் கரை. கேதகை - தாழை. 25.4. காத்தடி - காற்று அடிக்கின்ற. வாவி - நீர்நிலை. கலை மான் - ஆண் மான். கடமா - காட்டுப் பசு. கப்புது - வாயிலிட்டு வேகமாக விழுங்குது. 25.5. உலைவாய் மெழுகு - தீயிலிட்ட மெழுகு. மடத்திட(ம்) - முனிவர், பிரம்மச்சாரிகள் வாழும் இடம். 25.7. பழுத்தது - மனங் களித்தது. கோங்கை - கோங்கை மரம். களபம் - நறுஞ் சுண்ணச் சாந்து. 25.8. வேர்க்குழி - பலாமரத்தின் வேர்ப் பாகமுள்ள அடிமரப் பகுதி. பருவக் கனிக்காய் - பக்குவமான, இனிய பழங்கள் மற்றும் காய்கள்.

And after a long period of tapas,
Completing the puja to Goddess Pārvati
As ordained by the sage in proper order.

24. And for three years, this went on.
The queens and the regiments rejoiced at it.
Now, Tacarata sent them back to the city
And himself started for the forest
For tusker-hunt in the *akil* forest great.

TACARATA HUNTING ELEPHANTS

25. From Ayōtti, the king left for the forest
Dressed for the hunt, with eighteen kinds of regiments
To hunt for the elephants coming to drink water
In the ponds of water-lilies and lotuses.
His sturdy bow, he did bend;
Some of the tuskers were brought down,
The screwpine plants growing aslant the river;
Some did place in their mouths their tender shoots;
Some tuskers wallowed in the ponds fed by springs
In the wind-blown groves. Some of them ferocious,
Pierced the antlered stags and wild cows;
Some of them aware of the power of the king's bow,
Moved about fearfully like wax in fire;
Some seized trunks of trees aloft in their trunks.
Some butted mighty foreheads against the trees
Close by the hill side. Some tried to wrench trees
Beside the hermitages; rejoining, some did cut
Even the sturdy *kōṅku*[30] trees; Many did imbibe
The fragrant paste, rolling their heads and limbs;
Many a tusker pulled at the root of jack trees
Causing the fruit to burst; Still many seized
Their juicy fruit, ripe and unripe,
To feed their youthful mates, Honey-combs burst open

30. *Kōṅku* - A tree (Ironwood of Malabar).

படைத்தது தேனை யுடைத்தது கண்டு படுத்தது பலயானை
படுத்திருந் தந்தி குடித்திட வந்து பறித்தது பலயானை
கிடைத்தது போது மெனக்குதி கொண்டு கிழித்தது பலயானை
கிளறும் படிவாய் விடுகு ரலண்டம் கேட்குது மாண்போரே

உதைத்தது வனத்து மரத்தையும் முறித்து நடித்திடும் மதகளிறு
ஓங்கிய மூங்கிலை நாங்கிலைக் கோங்கை உளப்பிடும் மதகளிறு
புதைத்திடு குத்தி எழுப்பியம் மானைகள் போட்டிடும் மதகளிறு
புகபெக டாடல் முகிடு கிழித்துப் போவதும் மதகளிறு
போவதி லேசிலை பூட்டித் தசரத பூபதி நாள்வழியே
பொறுத்த தந்திக்க ளிறுபத் தொன்பதும் புண்பட எய்தனரே
ஆவதி னாலொரு யானையை நோக்கி யரச னிருக்கையிலே
அங்கொரு காரணம் வந்து முடிந்ததை யம்புவி யோர்கேளும்
அம்புவி வாழ்வு கடந்தொரு தவமுனி யந்தக னானவனும்
அவர்மனம் மகிழக் குருபுத் திரமுனி யருமைப் பாலகனும்

முனிமகன் நீர் எடுக்கப் பொய்கை வருதல்

சம்புவை நோக்கியிருந்து வனத்தில் தவசு முடக்கையிலே
தகைபெரி தாகுது மகனே பொய்கைத் தண்ணீர் கொடுவருவாய்
வருவா யெனவே முனிவ னுரைக்க மகன்கமண்ட லமெடுத்து
வந்து தண்ணீரை முகர மண்டலவாய் குடுகுடுகுடென

தசரதன் தவறுதலாய் முனிமகன் மீது அம்பு தொடுத்தல்

பருமாமத கரியெனவே தசரதன் பாரக்கணை தொடுத்தான்
பருங்கணை மார்பிற் படமுனி பாலகன் பரனே யெனவிழுந்தான்

25.9. தந்தி - ஆண் யானை. 25.10. கிளறும் - கலக்கும். வாய்விடுகுரல் - யானை வாய்விட்டு எழுப்பும் குரல். அண்டம் - உலகம். 25.11. மூங்கில், நாங்கு, கோங்கு - சில மர வகைகள். 25.12. அம்மானை - காய்களை வைத்துக் கொண்டு பெண்கள் விளையாடும் விளையாட்டு வகை; யானைகள் இங்கு மரத்தைப் பிடுங்கி இது போன்று விளையாடியது என்ற குறிப்பு. முகிடு - முகடு; வானத்து உச்சி. 25.13. பூபதி - அரசன். தந்திக் களிறு - ஆண் யானை. 25.15. தவமுனி - தவத்தைச் செய்யும் முனிவன்; சுலபோசனன் என்னும் பெயருடையான். அந்தகன் - குருடன். அருமை பாலகன் - முனி மைந்தன்; சுரோசனன் என்னும் பெயருடையவன். 25.16. சம்பு - சிவன். முடக்கையிலே - தவசை நிலைநிறுத்திச் செய்கையிலே. தகை - தண்ணீர்த் தாகம். 25.17. கமண்டலம் - முனிவர்கள் நீர் மொண்டு வருவதற்கு வைத்திருக்கும் பாத்திரம். மண்டல வாய் - கமண்டலத்தின் வாய். குடுகுடுகுடென - தண்ணீர் பாத்திரத்தில் நிரம்பும் போது ஏற்படும் ஓசை; இசை யானையின் நடையால் ஏற்பட்ட சலசலப்புக்கும் பொருந்தும். 25.18. பருமாமதகரி - பருத்த பெரிய மதம் பொருந்திய யானை. பாரக்கணை - கனமான அம்பு. பரனே - கடவுளே!

And the elephants drank the nectar oozing out of them.
Many a tusker trampled about in fenzy,
Their trumpeting heard all over the earth;
Still many others kicked at trees and broke them
And danced with them. Ichorous tuskers many of them,
Destroyed lofty bamboo, the mesua and the *kōṇku* trees.
Lifting and throwing them even as girls play *Ammāṉai*[31]
With dice, which seemed to pierce the very vault
Of heaven. All these rampaging tuskers, Tacarata did slay-
Tuskers sixtynine in number. Till at last,
When as he was waiting for the seventieth;-
O men of the earth, hearken to this tale of woe and pity!-
An old blind anchorite in the evening of his life
And his dear son so tender,
Were living in the wood meditating on Lord Siva;
On the day of the hunt, the sage grew thirsty
And bade his son go to the pond
To fetch water to drink;
And so he went with holy jug to the spring;
But when he dipped the vessel and the water entered it
With a gurgling sound, mistaking it to be a tusker
Drinking water, Tacarata shot a heavy arrow
Thitherward and alas! the young son
Fell by the deadly dart, crying: "Oh God!

31. *Ammāṉai* - A game played by girls with balls thrown up in the air.

முனிமகன் கீழே விழுந்து அழுதல்

தரனே ருடையார் தந்தையார் தண்ணீர் தாக மெழும்புவரே
சரமது கொண்டதி லுரமது தப்பிச் சாக விதிதானோ

தசரதன் கலக்கம்

விதியோ சிவனே யெனமுனி மைந்தன் விழுந்தழும் வேளையிலே
மேதியா ளுந்த சரதராசன் வெருண்டு பயந்தோடி
மதிசேர் பொய்கை யினருகே மாமுனி மைந்தன் வருந்துவதை
மன்னவன் கண்டு முகத்திலறைந்து மலக்கம தாயழுதான்
மலக்கமதாக வயிற்றிலடித்து மேவாய்விட்ட லறியவன்
மைந்த னெனக்கு வரும்படி யேதவம் வந்து முடிக்கையிலே
கலக்கம தாய்முனி பால னுடம்பில் கணைபட் டிடவிதியோ
காரண மெப்படி வந்து முடிந்தது [11]கர்ம வினைப் பயனோ
வினையின் பயனோ எனமுடி மன்னவன் வெருண்டழும் வேளையிலே
மெத்த மகாமுனி புத்திரன் மயக்கம் விடுத்தவ னேதுரைப்பான்

முனி மகன் உரை

எனையறி யாமலே கனகுஞ் சரமென் றெய்திடும் ராசாவே
என்றந் தையர் சொற்படியே கங்கை எடுத்திட வந்தேன்யான்
எடுத்திட வந்தேன் கெடுத்ததுன் சரத்தா லிறப்பே னினிப்பி ழையேன்
இதுகமண் டலத்தில் புதுநீர் கொடுபோய் என்றந்தை யார்க்குதுவும்

முனிவர் முன்னர் தசரதன் செல்லுதல்

அடுத்திது பகர்ந்தான் சடத்தைவிட் டிறந்தா னரசன் றுயரமுற்றான்
அதுகமண்டலத் தில்புதுநீர் கொணர்ந்த அருந்தவமுனி முன்வைத்தான்

முனிவர் வினாவும் தசரதன் பதிலும்

அருந்தவ முனியே பெருந்தகைநீர் புனலானது தானிதென
அரகரா வேற்றுக்குரலே தெனமகனாங் குருபுத்ர னெங்கே

25.19. தரன் - அஷ்ட வசுக்களுள் ஒருவன். ஏருடையார் - அழகுடையார். சரம் - அம்பு. உரம் - வலிமை. 25.21. மலக்கமதாய் - துன்பம் கொண்டவராய். 25.23. கர்ம வினை - முன் சென்ம வினைப்பயன். 25.24. வெருண்டு - மனம் கலங்கி. மெத்த - சிறந்த. மயக்கம் - தளர்ச்சி. குஞ்சரம் - யானை. 25.27. சடம் - உடம்பு. 25.28. புனல் - நீர். அரகரா - ஹரஹரா; சிவ மந்திரம்.

11. கற்ம வினை

Oh my father will be suffering for want of water:
Am I fated to be slain now by this powerful arrow?
Is it my fate; O Lord Siva?"
When as the boy fell crying, the ruler of the earth
Tacarata, came running up to the spot
And seeing the sage's son near the moonlit pond,
He beat his face in agitation sore. Beating his breast,
He cried aloud in grief sincere:
"O son, just when my penance is drawing to a close,
Is it my fate that my arrow should
Cut you down thus. Is it the fruit of my past Karma
That I should slay you thus?"
When the crowned monarch wept thus in grief,
The boy recovered consciousness and spake thus:
"O king who shot this arrow not knowing my presence
And mistaking the gurgling sound to be a tusker's
I came to get water for my thirsty father as he bade me;
Your dart has ended my life. I will not survive;
Sure I am to die forthwith. At least take this vessel,
Filling it with water fresh
And give it to my father that his thirst may be slaked;
As he said this, his soul left his body
And grief-stricken was the great emperor;
Filling the vessel with water,
He placed it before the holy sage.

THE SAGE'S QUERY AND TACARATA'S REPLY

"O Holy Sage, here is the water to slake your thirst"
O God, said the sage, hearing the alien voice.

பெருந்தவ முடையவ யோத்தியின் வேந்தன் பெயர்தசரத னடியேன்
பிள்ளைக ளாற்றவமுள்ள விஸ்வாமுனி பேசிய சொற்படியே
சொற்படி யத்திகுறி தொழிவைத்து தூர யிருந்தேன்யான்
சுந்த்ர மைந்தர் கமண்டலக் கெங்கைதொடுங் குடுகுடுகுடென
அற்புத வத்தி துதிக்கை யுறிஞ்சின தாமென் றெய்தேன்யான்
அந்தண ரேயுன் மைந்த னிறந்தா னையோ[12] வநியாயம்.

முனிவர் இட்ட சாபம்

ஐயோ முனியா னுய்வே னோவென் றழுதான் தவமுனிவன்
அந்தக னுக்கினி யார்தண் ணீர்தரு வாரென் றான்முனிவன்
கையொடு கையை முகத்தி லறைந்து கடுங்கோ பங்கொண்டு
காதலாலே யரசனும் மாளக் கடவதென் றான்முனிவன்
கடவதென் றேமுனி யிடுசா பத்தைக் கேட்ட தசரதனார்
காதினில் நாரா சத்தை நெருப்பில்[13] காய்ச்சி யிறைத்தாப்போல்
உடலது பதறி கால்கை நடுங்கி உயர்முனி யைத்தொழுது
ஊழி விதிப்படி வாழ்வேன் வந்து வயோத்தியிலே புகுந்தான்
புகுந்திட வேசில முனிவரை வருத்தி புதல்வனை யெடுத்தடக்கி
பொய்யாச் சாத்திரம் செய்சடங்கறுத்துப் போய்முனி தவசி ருந்தான்
மகிழ்ந்திடத் தசரதன் முனிவிஸ்வா மித்திரர் மலரடி யைப்பணிந்து
வரலாற தனையும் வகையாய்ச் செப்பி வளநா டாண்டானே.

சம்புவின் தந்தைக்கு ஆஸ்ரமம் அமைத்துக் கொடுத்தல்

விருத்தம்

26. வளமுடனே நாடாளும் அயோத்தி வேந்தன்
மாமுனிபா லகனிறந்த வருத்தத் தாலே
அழகுடனந் தகமுனிக்கே ஏவல் செய்ய
ஆளமைத்து ஆச்சிரமம் மகமுண் டாக்கி

25.29. பிள்ளைகளாற்ற - குழந்தை பேறு வெற்றியாக அமைய. விஸ்வாமுனி - விஸ்வாமித்திரமுனி. 25.30. அத்தி - யானை. குறிதொழி வைத்து - குறித்து செயல் செய்து. 25.32. உய்வேனோ - பிழைப்பேனோ. 25.33. காதலனால் - குழந்தைகள் மீது கொண்ட மிகுந்த அன்பினால். 25.34. நாராசம் - இரும்பு. 25.35. அடக்கி - அடக்கம் செய்து. 25.36. அறுத்து - செய்து முடித்து. 26.2. அந்தக முனி - கண்ணற்ற முனி; சுலபோசனன். ஆச்சிரமம் - ஆஸ்ரமம். மகம் - யாகம்.

12. அனியாயம் 13. காச்சி.

"Where is my son?" The king replied: "O great Hermit,
I am Tacarata, king of Ayōtti.
To succeed in my quest for children, as directed by
Visvāmittira, I came here to slay seventy elephants;
And mistaking the gurgling sound of water entering
The holy vessel of your darling son, as he dipped it
Into the spring, I shot an arrow at the sound.
O Sage, your son was killed by me. "Alas, Alas".
Said the seer; "How can I live hereafter? Who will
Henceforth give water to this blind man?"
And beating his hands on his face in grief,
He grew ferociously angry and cursed the king
To die as a result of his own excessive love for his sons.
As if molten iron had been stuck into his ears.
Trembling all over, his limbs shaking and shivering,
He prayed to the Rishi and he said:
"Let my destiny take its course" and returned to Ayōtti.
Calling for some pandits, he arranged for the obsequies
Of the dead boy as required by the sastras true.
He then went to Visvāmittira. Bowing before his lotus feet,
He narrated all that happened in the forest.

26. The ruler then arranged for a good hermitage
For the blind sage with all equipments necessary,
Along with attendants to take care of him,

உளம்மகிழ உபசாரஞ் செய்து வைத்தார்
உலகாண்டான் சகலபுவி யுடையோர்க் கெல்லாம்
பழவினையால் அரக்கருபத் திரமே செய்யும்
பழங்கதையை அறிந்தமட்டும் பகரு வோமே.

அரக்கர்கள் இழைக்கும் துன்பங்கள்.

வேறு

27. பகருகின்ற வுலகமெல்லாம் படர்ந்தேறி ராக்ஷசரும்
சிகரமது போல்வளர்ந்த தீபாவி தாடகையும்
அகமதியால் குடிமுடிக்க ஆர்ப்பரிக்கும் சூர்ப்பணகை
மிகுவரக்கரு பத்திரந்தான் மேதினியில் மோதினதே.

மோதிவரும் ராக்ஷதர்கள் மூவுலகெல்லாம் பரந்து
சோதிபல சேத்திரங்கள் தொழுபவரைப் பழுதுசெய்வார்
ஆதிசக்தி யாலயத்தை அறனழிப்பார் குறைநினைப்பார்
நீதிதப்ப வாதுசெப்பி நிஷ்டூரஞ் செய்திடுவார்

நிட்டூரஞ் செய்வார்கள் நெறிகேடு செய்வார்கள்
தட்டழியப் பாரரசர் சமஸ்தானத் தனையழிப்பார்
பட்டணத்தை வளைந்துக்கொண்டு பாக்கியத்தைக் கொள்ளைகொள்வார்
சுட்டிறைச்சி மதுவவர்க்கு தொட்டமுது வுண்பாரே.

தொட்டாரும் நடுநடுங்க சூட்டிறைச்சி மாட்டிறைச்சி
திட்டாகச் சுமையாக்கித் தேவர்களை யெடுக்கவைப்பார்
கட்டாக வானவர்தான் காதலிமாரைக் கொணர்ந்து
அட்டாதுட் டிகளுருரைத்து அரக்கர்முற்றந் தொளிக்கவைப்பார்.

அரக்கரெல்லாம் மிகப்பரந்து அந்தணரைச் சைவர்களைத்
தரக்கழிப்பாய் சிவபூசை தவபூசைக் கிடர்நினைப்பார்

27.1. ராக்ஷசர் - அரக்கர். 272.சிகரம் - மலையுச்சி. தீபாவி - தீய பாவி. 27.3. அகமதி - அகம்பாவம். 27.4.மேதினி - உலகம். 27.5. மோதி வரும் - சண்டையிட்டு வரும். மூவுலகு - சுவர்க்கம், மத்தியம், பாதாளம் என்னும் மூவுலகு. 27.6. சோதி - ஒளி. சேத்திரம் - கோவில். பழுது - குற்றம். 27.7. அறன் - நியதி முறைகள். 27.8. வாது செப்பி - தர்க்கம் செய்து. நிஷ்டூரம் - கொடுமை. 27.9. நெறிகேடு - ஒழுக்கக் கேடு. 27.10. தட்டழிய - செய்வதறியாது திகைக்க. பாரரசர் - உலகத்து அரசர். சமஸ்தானம் - நாடு. 27.11. பாக்கியம் - செல்வம். 27.13. சூட்டிறைச்சி - சுட்ட மாமிசம். 27.16. அட்டாதுட்டி - தாறுமாறாகப் பேசி. முற்றம் - வீட்டுத் திண்ணை. தொளிக்க - நீர் தெளிக்க. 27.18. தரக்கழிப்பாய் - அலைக்கழிப்பாய்.

Relieving his distress and pleasing him thereby.
Now we shall turn to the troubles and cruelties
Which the demons were giving to the people of the world
And the gods, as far as we know.

27. The evil demoness Tāṭakai huge as a mountain peak
And other demons, spread over all the worlds
Causing endless trouble to the people of the earth
In the arrogance of their might.
Spreading over the three worlds
They harassed all people good and pious
In all the bright holy places.
Spoiling the sacred ambience
Of the temples of primordial Sakti,
Insulting with false arguments and sinful acts
They corrupted all good:
The lands of the rulers
They ruined wantonly; encircling
The cities, they plundered all wealth.
Their favourite food, boiled meat and wine.
They made the gods carry heaps of beef
And meat, making them tremble for life;
The wives of the celestials they harassed
With foul words and made them cleanse
The courtyards of their houses.
Moving about elsewhere they troubled
Brahmins and Caivites;
They delighted in ruining Siva worship:

பரக்கழித் தவரைவைத்துப் பல்கடித்து வண்டுறுக்கிப்
புரக்கமல ரெடுத்தகையால் புதல்வர்மலம் வழிக்கவைப்பார்

வழித்தலத்தில் மாடாடு வனத்தில்வந்து மேய்கையிலே
ஒளித்திருந்து கழுத்தறுத்து ஒருநொடியில் கறிசமைப்பார்
களித்துவரும் சந்திரனும் கதிரவனும் திசைமாறி
செழித்தமனம் மிகப்பதறித் தெற்குவடக் குதிப்பாரே

குதிப்பார்கள் சபதமிட்டுக் கொடுஞ்சமரம் விளைத்திடுவார்
மதிப்பார்கள் கடலையெல்லாம் வற்றவைப்போ மென்பார்கள்
சதிப்பார்கள் மனிதரையும் தரணிதனி லரசரையும்
பதிப்பார்கள் துரும்பினிலும் பஞ்சையென்றே நினைப்பார்கள்

நினைத்தபடி முடிப்பார்கள் நீள்வருண னொடுவாயு
கனகமுடி இந்திரனும் கமலமல ரயன்வானோர்
அனைத்துயிருங் கவர்காலன் அட்டதிக்குப் பாலகரும்
மனத்துயரப் படப்பாரில் வல்லரக்கர் பொருதாரே

தாடகையின் கொடுமை

பெருத்தமலை போல்வருவாள் பெரும்பாவி தாடகைதான்
ஒருத்திசெய்யும் பலகொடுமை உரைத்திடவும் முடியாது
விருத்தமுனி வோர்கள்செய்யும் வேள்வியைநீர் விட்டழிப்பாள்
செருத்தலையில் பிற்படையில் திடுக்கிடும்மா தவத்தியரை

சூர்பணகையின் கொடுமை

தவத்தர்களின் தவங்குலைப்பாள் சண்டாளி சூர்ப்பணகை
பவத்தொழிலை மறக்கரியாள் பாதகத்தி சூர்ப்பணகை

27.19. பரக்க - அப்பாவியாய் பரக்க பரக்க. வண்டுறுக்கி - உதட்டைமடக்கிக் கடித்துப் பயமுறுத்தி. 27.20. புரக்க - அனுக்கிரகிக்க. 27.23. களித்து - சந்தோஷித்து. கதிரவன் - சூரியன். 27.24. மிகப் பதறி - மிகவும் அச்சம் கொண்டு. 27.25. சமரம் - சமர்; போர். 27.26. மதிப்பார்- கடைவார். 27.27. சதிப்பார் - அழிப்பார். தரணி - உலகம். 27.28. பதிப்பார் - அழுத்துவார். பஞ்சை - அற்பம். 27.29. வருணன் - மழைக்குக் கடவுள். வாயு - காற்றுக்குக் கடவுள். 27.30. கனகமுடி இந்திரன் - பொன்னாலாகிய கிரீடம் தரித்த தேவர் தலைவனான இந்திரன். கமலமலரயன் - தாமரை மலரில் இருக்கும் பிரம்மா. 27.32. அட்டதிக்குப் பாலகர் - எட்டுதிசைகளையும் பாதுகாப்போர்; அவர்கள் இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்னும் எட்டு பேர்கள். 27.32. பட - கொள்ள. 27.33. பெருத்த - பெரிய. 27.35. விருத்த முனிவோர்கள் - ஒழுக்கம் மிகு முனிவோர்கள். 27.36. செருத்தலை- போர்களம். பிற்படை - பின்னால் வரும் படை. 27.38. பவத்தொழில் - பாவத் தொழில். பாதகத்தி - பாதகி; பெரும் பாவஞ் செய்தவள்.

Threatening with angry frowns, gnashing their teeth,
They forced the trembling Devas
To scoop out faeces and dung, with their hands used only
To hold fragrant flowers for the blessing of deities.
Hiding in the woods, they would seize
Grazing kine and sheep and slaughtered them,
To cook them for their food.
The very moon and the sun no longer happy,
In fright did change their normal course,
Rising in the north and south instead.
The Demons did leap in pride and swear
To kill, ever engaged in battle fierce.
'We would churn the sea and dry it up' they said.
They destroyed the people and the rulers of the earth,
Stamping them beneath their feet like worthless things.
Able to do whatever they wanted,
These puissant demons made war
Against the god of the sea, Varuṇa,
Vāyu the god of wind,
Intira with his golden crown,
Brahma seated in the lotus,
The god of death Yama himself,
Beside the [32]guardian deities of the directions eight.

TĀṬAKAI'S CRUELTY

Like a huge hill would she come
The terrible demoness Tāṭakai!
It were vain to describe
The cruelties of this demoness unique.
The holy sacrifices of venerable sages
She would ruin with watery abominations!
The anchorites would startle with fear
At the mere sight of the demon-bands in their train.

32. Guardians of the directions eight - Regents of the eight points of the compass (1. Intira, 2. Akni, 3. Yama, 4. Niruti, 5. Varma, 6. Vāyu, 7. Kupera and Igana).

இவத்தினில் [14]ராக்ஷசஸ்திரிகள் இன்னமுண்டு பலகோடி
அபத்தமின்னம் பெருக்கவுண்டே அரக்கருட உபத்திரந்தான்

மாமுனிவர்கள் இந்திரனுக்கு அறிக்கை செய்தல்

உபத்திரத்தால் மாமுனிவர் உம்பருலகத்தில் வந்தார்
தவத்தியர்கள் வரவறிந்து சந்திரசூரி யன்முதலாய்
நவக்கிரகம் நட்சத்திரம் நல்பிரம னெமன்வருணன்
சிவத்தியானம் மறவாத தேவர்களும் கூடினரே

அனைவரும் கயிலாயம் வருதல்

கூடியேதெய் வேந்திரனார் கொலுவுசமை யத்தில் வந்து
வாடிமனஞ் சலித்தோமே வல்லரக்க ருபத்திரத்தால்
கோடிவிட்டோ மெனமொழிந்து கோனா ரிடமுரைக்க
தேடியரனார் கயிலையிலே சேர்ந்தறிக்கை செய்யநன்றே

நன்றெனவே யிவர்களெல்லாம் நல்லசுப தினம்பார்த்து
சென்றுகயி லாசமலை திடலருகே நின்றனரே
நின்றதெல்லாம் நந்திகண்டு நெடும்பிரம்பால் வழிநோக்கி
இன்றமரர் வந்ததென்ன இயம்புமென்றான் வெள்விடையோன்

அனைவரும் நந்தியிடம் சிவன் தங்களை அழைக்க வேண்டுதல்

விடையானே யாவருக்கும் மெய்ப்பொருளே வேதமுனை
உடையானே வல்லரக்கர் உபத்திரத்தா லிங்கடுத்தோம்
சடையான தையணியும் சங்கரன்பா லெங்களைநீர்
அடையவைப் பாயென்றமரர் அதிகமலர் சொரிந்தனரே

27.39. இவம் - இகம்; இவ்வுலகம். ராக்ஷசஸ்திரிகள் - அரக்க மகளிர். 27.40. அபத்தம் - இடையூறு. பெருக்கவுண்டே - மிகவுண்டே. 27.41. உம்பர் - தேவர். 27.43. நவக்கிரகம் - ஒன்பது கிரகங்கள். 27.45. கொலுவு - அரச சபை. சமையல் - நேரம். 27.46. சலித்தோம் - தளர்ந்தோம். உபத்திரம் - தொந்தரவு. 27.47. கோடி விட்டோம் - வளைந்து விட்டோம். கோனார் - அரசன்; இந்திரன். 27.48. அரன் - சிவன். கயிலை - சிவன் வீற்றிருக்கும் தளத்தின் பெயர். 27.50. திடல் - சிறு குன்று. 27.51. நந்தி - சிவகணத்துள் முதன்மையானவர்; அதிகார நந்தி. நெடும் பிரம்பால் - நீண்ட மூங்கில் குச்சியால். வழி- இருக்குமிடம். 27.52. அமரர் - தேவர். இயம்பு - கூறு. வெள்விடையோன் - வெண்மையான காளை; நந்தி. 27.53. விடையானே - காளை வாகனனே. வேதமுனை உடையானே - வேதங்களை நன்கு உணர்ந்தவனே. 27.54. அடுத்தோம் - வந்து அடைக்கலமானோம். 27.55. சங்கரன் - சிவன்.

14. ராஷஸ்ரீகள்

THE CRUELTY OF CŪRPPAṆAKAI[33]

The tapas of men of askesis would she harass,
The base Cūrppaṇakai; to do evil was ever her aim,
The sinner Cūrppaṇakai; and numerous demonesses
Were with her roaming the earth:
Ever increasing were the troubles they caused.

THE SAGES PRAYING TO INTIRA

Unable to bear their affliction
The sages great went to the celestial world,
Whereupon, all the gods ever meditating
On Siva, the sun and the moon,
The rulers of the planets nine,[34]
And the stars, the creator Brahma,
Varuṇa and Yama, assembled in Intira's court:
'We. have suffered enough at the hands of the demons!
Fallen we are!", they declared to the king of heaven;
Resolved they, then to go to Kailas
And pray for relief to Lord Siva.
Approving this decision, upon an auspicious day
They stood at the foot of a hill near Mount Kailas.
And seeing the thronging celestials,
Nanti[35] with his long wand went amongst them:
'What has made you come here today?'
Spake he of the white bull.
Offering flowers at his feet, the gods said to Nanti
O! Lord of the Bull! Essence true!
O! you learned in Vedas, refuge we seek,
Unable to bear the demons' troubles;
Take us to the presence of Sankara with matted locks!"
Pleased with their flowery offerings

33. Cūrppaṇakai - A demoness, sister of Rāvaṇa
34. Planets nine - Sun, Moon, Mars, Mercury, Jupiter, Venus, Saturn, Rāku and Kētu (The node and the anti-node in the ecliptic)
35. Nanti - The bull-God; Chamberlain of Lord Siva.

சிவன் நந்தியிடம் அனைவரையும் திருமாலிடம் ஏகும்படி கூறல்

சொரிந்ததுகண் டழகுநந்தி சோதிபா லறிக்கைசெய்ய
சரிந்தசடை மதிநதியார் தனதுநந்தி தமக்குரைப்பார்
தெரிந்துயர்வல் லரக்கர்தமை செயித்தவகை நாமறிவோம்
விரிந்திருப் பாற்கடல்வாழ் விண்டுவின்பால் அனுப்புமென்றார்

அனைவரும் திருமாலைச் சரணடைந்து கூறுதல்

அனுப்புமென்ற கற்பனையை அறிந்துநந்தி வாசலிற்போய்
மனுப்பெரிய யிந்திரனே வானவர்கள் நாயகனே
இனித்திருமா லவர்கருணை இரங்குமல்லா லிரங்காது
தனித்திருப்பாற் கடல்திருமால் தனக்கறிக்கை செப்புமென்றார்

செப்பெனவே யிவர்களெல்லாம் திரண்டுதிருப் பாற்கடலில்
குப்பெனவே சென்றடுத்து கோவிந்தா சரணமென்றார்
அப்பொழுதே திருமந்திரம் ஆயிரத்தெட் டெடுத்தோதத்
தப்பரவில் லாமாயன் தான்அவர்கா யெழுந்திருந்தார்

திருமால் வினாவும் முனிவர்கள் உரையும்

எழுந்திருந்து யிந்திரனே இமையவரே முனிமாரே
தொழுந்திருப்பாற் கடலில்நம்மை தோத்திரங்கள் செய்வதென்ன
[15]குளிர்ந்தமொழி மாலுரைக்க ஊறுவாரெழு நரகில்
அழுந்துவர் வல்லரக்கர் தொழில்ஆற்றாதிங் கடுத்தோமையா

ஐயாவே மேகவர்ணா ஆதிமூ லப்பொருளே
வையகமெல் லாமளந்து மாவலியைச் சிறையில்வைத்தாய்

27.57. சோதிபாலர் - சிவன். 27.58. சடைமதி நதியார் - தன் சடையில் சந்திரனையும் கங்கையும் கொண்டவர்; சிவன். 27.59. செயித்தவகை - வெற்றி கொண்ட முறை. 27.60. விண்டு - விஷ்ணு. 27.61. கற்பனை - கட்டளை. 27.62. மனு - தேவர். 27.66. குப்பெனவே - 'விரைவாக' என்பதின் ஒலிக்குறிப்பு. கோவிந்தா - திருமாலே. 27.67. திருமந்திரம் - திருமால் மந்திரமான 'ஓம் நமோ நாராயணாய' என்னும் மந்திரம். 27.68. தப்பரவில்லாமாயன் - பாம்பில் பள்ளி கொண்ட திருமால்; பரவையாம் கடலில் பள்ளி கொண்ட திருமால் என்றும் அமையும். 27.69. இமையவர் - தேவர். 27.73. மேக வர்ணா - மேகம் போலும் நீல வர்ணனே; திருமாலே! 27.74. வையக மெல்லாமளந்து மாவலியைச் சிறையில் வைத்தாய் - மாபலி என்ற அரசனது ஆணவத்தை அடக்க மூன்றடி மண் கேட்டு, ஈரடியில் வானத்தையும் பூமியும் அளந்து, சிறையில் வைத்தாய்.

15. குழுந்தமொழி.

Nanti reported their plea to the flaming God Supreme.
And He who wears the moon and Ganges
On his locks, said to Nanti
"Full well we know the means,
To conquer the mighty demons; send them
To Vishnu[36] in the vast ocean of milk."
Carrying the message of his master
Nanti went back to the suppliant gods:
"O! great Intira, chief of the celestials!
Only Tirumāl can relieve your troubles
By His grace and none else;
Go you therefore and implore the aid
Of the God dwelling in the sea of milk unique."
On hearing which the gods in a trice
Reached thither; crying, "Refuge, Lord Kōvinta!"
Chanting His mystic octad, eight and a thousand times;
And the Lord recumbent on the serpent-bed
In the blameless sea arose from his couch
And spake to them thus:
"O Intira, celestials and sages!
What may this mean, that you thus sing my praise?"
When the Lord spoke thus soft and mild,
Reply made they thus: "We rushed here
For help, unable to bear the harassment of the demons;
May they be damned in the seven hells;
O Lord, Nimbus-hued! Primordial Ens!
You did quell Makāpali[37] and imprisoned him

36. Vishnu - The second of the Hindu Trinity, who incarnated as Rama.
37. Makāpali - A demon emperor quelled by Vishnu as Vāmana.

மெய்யாஞ் சராசரத்தை விளங்கவைத்த மெய்ப்பொருளே
உய்யும்வகை யுதவுமரி ஓம்நமசிவய மென்றார்

கருடனைத் திருமால் நினைத்தல்

ஓம்நம சிவயகுரு உங்களுக்கே உதவிசெய்யும்
ஆமெனவே தாரணரும் அன்றவர்க்கு ஏதுரைப்பார்
வானவரே யிந்திரனே மாமுனிமா தவத்தியரே
ஞானவராம் பிரமசோதி நாதனிடத் துறிக்கைசெய்தால்

ஆனபடி யாகுதென்று அரிகருடன் றனைநினைத்தார்
வானவரை யீடேற்றும் வைகுண்ட மூர்த்திநினைக்க
கனமான பலபேர்கள் காத்திருக்கு மிடத்தைவிட்டு
சினத்துப்பைய சிறகடித்து சிறப்புடனே புறப்படுவார்.

கருடன் வருதல்

விருத்தம்

28. வாரண முகனார் கந்தன் மாதுல னாதி மாயன்
காரணப் பவனி சேர்வார் கனகெரு டாள்வார் தானும்
பூரணா பரணம் பூண்டு பொன்பிதா மகுடஞ் சூடி
தேரணி மறுகி நூடே திறப்பட்டார் புறப்பட் டாரே.

29. புறப்ப டும்படி திறத்து டன்கன
உறுப்பு டன்சிற கடித்துமே
பெரிய வெடிப்புகள் சிதறவே - மிருக
பறவை பக்ஷிகள் பதறவே

பறப்ப திலிறக டிப்பதில் அண்ட
பகிரண் டங்களுங் குலுங்கவே
பருவச் சொரூப புவனம் - இருநூற்றுஇரு
பத்து நாலும் நடுங்கவே

27.75. சராசரம் - அண்ட பெருவெளி. 27.77. நமசிவய குரு - சிவன். 27.78. நாரணர் - திருமால். 27.80. பிரமசோதி நாதன் - பிரம்மன். 27.81. கெருடன் - கருடன்; கருடாழ்வார். 27.83. கனமான பலபேர்கள் - கருடனை வழிபட அதிக நேரமாய் நிற்கும் பலபேர்கள். 27.84. சினத்து - மனத்துள் கோபித்து. பைய - மெதுவாக. 28.1. வாரண முகனார் - யானை முகத்தார்; கணபதி. கந்தன் - முருகன். மாதுலன் - தாய் மாமன்; கணபதிக்கும், முருக னுக்கும் தாய்மாமன்; திருமால். மாயன் - திருமால். 28.3. ஆபரணம் - பொன்னாலாகிய நகை. 28.4. தேரணி மறுகு - தேர் நிற்கும் பக்கம். திறப்பட்டார் - சீர்ப்பட்டார். 29.1. கன உறுப்பு - வலிமையான உறுப்பு. வெடிப்பு - பிளப்பு. பக்ஷி - பறவை. 29.2. அண்ட பகிரண்டம் - அனைத்துலகும். பருவச் சொரூப புவனம் - இளமையான அழகிய உலகம்.

In the nether world, O Supreme essence true!
Who brightens all creation with your light!
Show us a way to save ourselves
O Hari! Om Namacivāya" in chorus they said.

THE LORD SUMMONING KARUṬAṈ

"Siva, the great preceptor will help you",
Said Nārāyaṇa to Intira and the sages.
"The Primal Light Siva will know what is to be done".
Hari then thought of his mount Karuṭaṉ.

28. Leaving his devotees waiting for his darshan
Karuṭaṉ rose from his place beating his mighty wings
Towards his master Tirumāl, Uncle of him
Of the Elephant-face and his brother Kanta,
Adorned with many a golden jewel and crown,
He flew towards the seat of Vishnu.

FLIGHT OF KARUṬAṈ IN THE EMPYREAN

29. Up he rose beating his heavy wings;
The rock cliffs did shatter;
The bees and birds did tremble;
The many worlds in the universe did rock;
The youthful orbs two hundred and twenty four
Did shake and shiver;

சிறப்பு டன்சரப் பணிப தைக்கமும்
சீர்கி ரீடந் துலங்கவே
சிவந்த வுடலும் வெளுத்த - கழுத்தும்
திரண்டு சுருண்ட மூக்குமாய்

சிறப்பு டன்பல பிறப்பு வஞ்சகம்
இருட்ப வந்துலைத் திடவரும்
எங்க ணாயகர் செங்கண் - மாலவர்
இன்ப வாகனக் கருடனே

இன்பக் கெருடன் முந்திக் கிளம்பி
எழும்பி பறவைத் தொனியிலே
எட்டு மலையு மட்ட - கஜமும்
எழு நீளப் பரவையும் 5

கெம்பிக் கெடுவு கலங்கிக் குழம்பி
கிடுகிடு கிடுகி டெனவே
கெண்டைக் காலில் தண்டை - சதங்கை
கிண்கிணி சிலம்பொ லிக்கவே

அம்பில் கொடிய தரக்கர் கயிலை
ஆயிரத் தெட்டு கொடிமுடி
அசைய திசைகள் விசையில் - பிசக
அனந்தன் சூசடன் பதுங்கவே

சம்புத் தீவுஞ் சகல செகமும்
தாண்டித் திருப்பாற் கடலிலே
சங்கு சக்கர பாணி - சரணஞ்
சரண மென்றது கருடனே

29.3. சரப்பணி - வயிரம் பதிக்கப் பெற்ற, கழுத்திலணியும் ஒரு நகை. பதைக்கம் - பதக்கம்; ஓர் கழுத்தணி வகை. துலங்கவே - ஒளி விடவே. சுருண்ட - வளைந்த. 29.4. வஞ்சகம் - சூழ்ச்சி. இருட்ப - இருள் சூழ்ந்திட. துலைத்திட - தொலைத்திட; அழித்திட நாயகர் - தலைவர். செங்கண் மாலவர் - சிவந்த கண்களை உடைய திருமால். 29.5. மட்ட - தாழ்வு பட. கஜம் - யானை. ஏழு நீளப் பரவை - ஏழு நீண்ட கடல்கள். 29.6. கெம்பி - ஆரவாரித்து. கெடுவு - பாம்பு; கலங்கிக் குழம்பி - கலங்கிக் குழம்பிட. கெண்டைக் கால் - கணைக்கால். தண்டை, சதங்கை, கிண்கிணி, சிலம்பு - மேற்படி நாலும் காலில் அணியும் ஆபரண வகைகள். 29.7. கொடி முடி - உயர்ந்த சிகரங்கள். விசை - வேகம். பிசக - தவற. அனந்தன் சேடன் - ஆதி சேடன்; திருமால் பள்ளி கொள்ளும் பாம்பு. 29.8. சம்புத் தீவு - நாவலந் தீவு; இது ஏழு தீவுகளுள் உப்புக்கடல் சூழ்ந்த தீவாக விளங்குவது. செகம் - உலகம். சங்கு சக்கர பாணி - திருமால்; இவர் தன் நான்கு கரங்களுள் இரு கரங்களில் முறையே சங்கு சக்கரத்தைத் தரித்திரிப்பார்.

As the giant eagle bright adorned
With auric crown and carcanet, gem-studded,
On his ruddy body and white neck,
His rotuṇd beak curved in shape,
He came, the happy mount of our Lord
Who destroys all darkṇess, treachery and evil
Besides the cycle of birth and death.
Joyous the bird did fly, uttering his calls
At which the mountain eight,
The eight mammoths[38] cardinal and the seven seas,
Began to tremble in dismay
Fearful of the boisterous roar, the eagle made.
All the serpents did tremble in fear
And in confusion shook and shivered,
At the sound of his tinkling anklets
Tintinnabulating!
The cruel demons did tremble;
The thousand and eight peaks of Kailas
Rocked, the very cardinal directions
Went haywire; Āticēṭaṉ[39] himself slunk in fear,
As the great bird flew across
The isle of Jambolan[40] and all universes,
To reach the Lord of the Conch[41] and the Discus.[42]
"Refuge", said the bird,

38 Cardinal Mammoths	-	Giant Elephants guarding the eight cardinal points.
39 Āticēṭaṉ	-	The Primal serpent, inseparable from Vishnu, as his couch
40 Jambolan	-	One of the annular continents.
41 Conch	-	Pāñcacaṉṉiyam
42 Discus	-	Cutarcaṉam - The weapon of Vishnu

கருடன் மீது திருமால் உலா

சரணஞ் சரண மென்ற ரிஅடி
சாற்றியே கெருடன் போற்றவே
சட்ட மென்றரி ராமர் - நாடவே
அட்ட லக்ஷ்மி கூடவே

மரணப் பிறவி தடுக்கும் மாயனை
வானவர் வரத்தொ டுக்கவே
வட்ட கெருடன் மேற் - பவனி
வந்தனர் முகுந்த கோவிந்தன் 10

பவனியின் மேன்மை

இரணிய சிங்கம் பவனி காண
எவரும் கண்டு தெரிசிக்க
எட்டு கோடி கண்வேணும் - பிறப்பு
இறப்பு மில்லை யவருக்கே

திருமால் சிவனைக் காண வந்து முறையிடல்

கிரண வர்ணத் தங்கக் கயிலை
கிரிமகா மேரு வருகிலே
கேச வன்சுரர் வாச - வன்வர
கிட்டி யேமுறை யிட்டனர்

முறைப ராசத்தி இறைவ னேசுரர்
முதல்வ னேமுறை யோமுறை
மூர்த்தி கருணை ஏறு - வாகனா
முக்க ணாமுறை யோமுறை

29.9. அரி - திருமால்; இவர்அடி - பாதம். சாற்றி - புகழ்ந்து. சட்டம் - மேன்மை. அரி ராமர்- திருமால். நாடவே - என்னவே. அட்ட லக்ஷ்மி - தனலக்ஷ்மி, தானிய லக்ஷ்மி, தைரியலக்ஷ்மி, வீரலக்ஷ்மி, வித்தியலக்ஷ்மி, கீர்த்திலக்ஷ்மி, விஜயலக்ஷ்மி, ராஜ்யலக்ஷ்மி என்னும் எட்டு வகையான திருமகளின் ஸ்ரூபங்கள். 29.10. மாயன் - திருமால். முகுந்த கோவிந்தன் - திருமால். 29.11. இரணிய சிங்கம் - இரணியனை வதைத்த நரசிங்கம்; திருமால். 29.12. கிரண வர்ணம் - ஒளி வர்ணம். கேசவன் - திருமால். சுரர் வாசவர் - தேவர்களின் நெஞ்சங்களில் வாழ்பவன்; திருமால். கிட்டியே - மிக அருகாமையிலே. 29.13. பராசத்தி இறைவன் - உமாதேவியின் கணவன்; சிவன். சுரர் முதல்வன் - தேவர்கள் தலைவன்; சிவன். கருணை ஏறு - கருணை பொருந்திய காளை வாகனத்தன்; சிவன். முறையோ முறை - 'எங்கள் கருத்தை பலபட முறையிட்டோம்' என்கிற பொருளில். முக்கணன் - மூன்று கண்களைக் கொண்டவன்; சிவன்.

Landing at the Lotus feet of Hari!
And the Lord Tirumāl sat upon his eagle mount,
With Lakshmi in Her eight forms:
Lord Mukunta[43] went in a royal procession,
That all creation may have the darshan
Of Lord Naracinka who slew Hiraṇiyaṉ:
A billion eyes were not enough: to encompass,
The great god's glory;
Neither birth nor death will ever be,
For him who is given to see the sight.

TIRUMĀL COMING TO SIVA FOR HIS GUIDANCE

Kēcava ever residing in the heart of celestials
Reaching the great Mēru in the golden-hued Kailas,
Prayed thus: "We appeal, we appeal, Lord of Grace;
Triple-eyed God upon the Bull-mount!

43. Mukunta - A name of Tirumāl.

குறைசெய் தாலும் பிழைபொ றுத்தருள்
கொன்றை சூடிமுறை யோமுறை
குறித்தொன் னார்கள் புரத்தை - யெரித்தருள்
குன்றை வில்லிமுறை யோமுறை

மறைமுத லாணை மேல்சரா சரத்துறை
வஸ்து வேறுமுறை யோமுறை
வல்லரக்கர் செப்பு பத்திரங்களை
மாற்று வாய்முறை யோமுறை

பிறைந தியர வணியும் வேணியா
பிஞ்ஞ காமுறை யோமுறை
பித்த னேமது சித்தனே - பொது
நித்த னேமுறை யோமுறை.

கயிலை மலையின் மேன்மை

விருத்தம்

30. முறையிட்டிடமா தவத்தியரும் முகில்மா தவனுங் கயிலைபுக்க
திறையிட் டிடுங்கோல் பிரமனந்தி சிவனார்க் கறிக்கை செய்திடவே
அறையில் பெருமான் திருமாலை வருக்கத் திருவாய் மலர்ந்ததினால்
நிறையப் புகுந்தா ரரிமுதலோர் நிமலன் கயிலைச் சிறப்பறிந்தார்.

வேறு

31. கயிலாசம் வெள்ளி மகமேரு தங்கம் நமசிவயம்
கலைகோடி தலையா யிரத்தெட்டு கொடுமுடி ராமராமா

29.14. கொன்றை சூடி - கொன்றைப் பூவைச் சூடியவன்; சிவன். ஒன்னார்கள் - பகைவர்கள். புரம் - முப்புரம்; மூன்று நகரங்கள்; பொன், வெள்ளி, இரும்பு என்னும் மூன்று வகை உலோகங்களால் வித்துற்மாலி, தாரகாக்ஷன், கபலாக்ஷன் என்னும் அரக்கர்கள் கட்டிய மூன்று நகரங்கள். குன்றை வில்லை - மேருமலையை வில்லாக வளைத்தவர்; சிவன். 29.15. மறை - வேதம். சராசரம் - அசைகின்ற மற்றும் அசையாத அனைத்து பொருள்கள்; பிரபஞ்சம். உபத்திரம் - இடையூறு. 29.16. பிறை - இளஞ் சந்திரன். நதி - கங்கை நதி. அரவு- பாம்பு. வேணியா - சிவனே. பிஞ்ஞகா - சங்கரிப்போனே; சிவனே! பித்தனே - சிவனே! மது சித்தனே - சிவனே! நித்தனே - சிவனே! 30.1. மா த்வத்தியர் - முனிவர். முகில் மாதவன்- கரு மேக நிறமுடைய திருமால். 30.2. திறையிட்டும் - கப்பம் செலுத்திடும். பிரமனந்தி - நடு நாயகமான நந்தி. 30.3. பெருமான் - சிவன். 30.4. நிமலன் - சிவன். 31.1. கயிலாசம் - கயிலை மலை. வெள்ளி - வெள்ளி போலும் வெண்மை நிறம். மகமேரு - மகா மேரு மலை. தங்கம்- தங்கம் போலும் மஞ்சள் நிறம். கலைகோடி தலையாயிரத்தெட்டு கொடுமுடி - அழகான மூலைகள், ஆயிரத்தெட்டு சிகரகங்கள் கொண்ட கயிலை மலை. குறிப்பு: கண்ணிகள் தோறும் பயின்று வரும் ஈற்றுச் சொற்களான 'நமசிவயம்', 'ராமராமா' என்பன ஆசிரியரின் சமயப் பொதுமையைக் காட்டுகின்றன.

We make appeal, bear with us if we have erred.
O Lord cassia-crowned! we appeal to your Grace.
O Lord who did burn the demons of the triple cities,
Lord who bent the mountain as a bow!
Primal Lord of the Scriptures!
Primordial thing in-dwelling
In all things moving and unmoving!
Relieve the trouble caused by the fearful demons.
Lord adorned with the crescent
And the river and the serpent, we appeal,
"Destroyer, Lord Siva, Lord Eternal
O sempiternal mind We appeal for your grace".

30. As the anchorites and the gods
Led by the nimbus-hued Mātava[44]
Entered Kailas, Nanti, the chamberlain of Siva,
Report did make to his Lord in his sanctum.
And Hari and others, thus began to sing the praise
Of Siva the great, in Mount Kailas.

31. "Obeisances to Lord Siva! ensconced
In Kailas argent, and golden Mēru.

44. Mātava - A name of Tirumāl

ஒயிலான கனகமா மோலக்க மண்டம் நமசிவயம்
உற்பனைக்கால் புஷ்பராகம் நவரெத்தினம் ராமராமா
ரெத்தினப் பத்தியாம் பவளவளை மேல்கொப்பு நமசிவயம்
நீலமா ணிக்கத் தினால் அருகுபாளங்கள் ராமராமா

கொட்டகை விதானங் கள்மேல் கட்டுவிதானங்கள் நமசிவயம்
கூறமுடியா தெழுத ஏடு மடங்காது ஸ்ரீராமராமா
காதலி பராசக்தி சிவகாமி யொருபாகம் நமசிவயம்
கார்வர்ண னாதி நாராயண னொருபாகம் ராமராமா
சீதளச் சந்திரனும் கங்கையுஞ் சடையிலே நமசிவயம்
சிங்காசன சோதி கங்காள ரூபமாம் ராமராமா

கங்காள நாதனார் கைச்சூலம் மான்மழு நமசிவயம்
கணபதியுங் கந்தனும் குணமைந்த ரிருவரும் ராமராமா
மங்காத சங்குகள் வலம்புரிகள் வாத்தியம் நமசிவயம்
வகைவகை யதாய்முழவு திசையெட்டும் அதிருமே ராமராமா
இருபாகமும் வீர பத்திரன் வயிரவன் நமசிவயம்
எட்டுத்திக்குங் காவல் அட்டதிக்கும் பாலர் ராமராமா
மருகமழ் மலர்கொன்றை மாலைப் பிரகாசம் நமசிவயம்
மலியவே [16]சாம்பிராணி கற்பூர கந்தம் ராமராமா

31.2. ஒயிலான - அழகான. கனகம் - பொன். ஓலக்க மண்டபம் - தர்பார் மண்டபம். உற்பனக் கால் - தூண். புஷ்ப ராகம் - நவரெத்தினங்களுள் ஒன்று. 31.3. ரெத்தினப் பத்தி - தூண்களின் இடைவெளிகள் ரெத்தினக் கற்களால் ஆனது. பவள வளை - மேல் விதானம் பவளத்தால் ஆனது. மேல்கொப்பு - மேல்விதானம். நீலமாணிக்கம் - நீலம், மாணிக்கம் ஆகிய நவரெத்தினங்கள். அருகுபானங்கள் - அருகாமையில் கட்டப்பட்ட தொங்கல்கள். 31.4. விதானங்கள் - மேற் கூரைகள். கட்டு விதானம் - மேற்கூரைக்கும் மேலே கட்டப்பட்ட விதானங்கள் 31.5. காதலி பராசக்தி - அன்புக்குரிய உமையவள். சிவகாமி யொருபாகம் - பார்வதியை ஒரு பாகத்தில் கொண்டவன்; சிவன். கார்வர்ணன், ஆதி நாரயணன் - திருமால் நாமங்கள். நாரயணன் ஒருபாகம் - திருமாலை உடலின் ஒரு பாகத்தில் கொண்டவன்; சிவன். 31.6. சீதள - குளிர்ச்சி வாய்ந்த. சிங்காசன சோதி - சிங்க ஆசனத்தில் அமர்ந்த சோதி வடிவுடைய சிவன். கங்காள ரூபம் - சிவ வடிவங்களில் ஒன்று. 31.7. சூலம், மான், மழு - மேற்படியானவற்றைச் சிவன் தன் கைகளில் தரித்துக் கொண்டிருப்பவர். 31.8. மங்காத சங்குகள் - ஒளி விடுதலில் குறைவில்லாத சங்குகள். வலம்புரி - சங்குகளுள் ஒரு வகை. முழவு - முரசு. 31.9. வீரபத்திரன் - சிவபெருமானது நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றியவர்; தட்சன் யாகத்தை அழித்தவர். வயிரவன் - சிவ மூர்த்தங்களில் ஒருவன். எட்டுத்திக்கு - எண்திசை. அட்டதிக்குப் பாலர் - எண்திசைகளையும் காக்கும் இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்னும் எண்மர். 31.10. மரு - வாசனை. பிரகாசம் - ஒளியுடையது. சாம்பிராணி, கற்பூர கந்தம் - சாம்பிராணி, கற்பூரம் இவற்றிலிருந்து வரும் நறுமணம்.

16- சாம்பிறாணி

The mountain with lovely ridges
And peaks a thousand and eight: Rama be praised!
Graceful was the golden audience hall;
Praise be to Siva!
The pillars of bright topaz and nine gems;
Praise be to Rama!
The floor between, ruddy and rubies: the roof of coral made,
Siva be praised,
Sapphire blue and ruby did adorn
The bright hangings suspended from the roof;
Rama be praised!
Inexpressible and ineffable, Siva be praised!
Roof upon roof upon roof, layer upon layer!
Rama be praised!
Praise be to the Lord with Goddess Sakthi
Concorporate! Praise be to the Lord,
With the primal Nārāyaṇa as half his side!
Praise be to Rama!
Praise be to Siva with the cool moon and Ganges in his matted lock
Praise be to Rama Rama!
To Siva in his Kaṅkāḷa[45] form seated
In his lion-throne radiant as flame,
Bone-garlanded O Lord with the trident,
The leaping deer and the battle-axe,
Obeisances to Gaṇapathi and Kantaṉ
The divine sons of Lord Siva!
Ever-bright conches, right-whirled conches,
Siva be praised! And varieties of drums resounding
In directions eight, Rama Rāma!

45. Kaṅkāḷa - Siva who wears a garland of bones.

கங்காதரன் கொலுகு சங்கீத ராகம் நமசிவயம்
கந்தருவர் கின்னரர் கிம்புருட ரோதவே ராமராமா
அங்காதித் தனுடன் அக்கினி சந்திரன் நமசிவயம்
அக்கரவ ணிந்தோர்க்கு முக்கண்ணி லங்கவே ராமராமா
முக்கண்ணனார் கொலுவிருக் கின்ற சமையம் நமசிவயம்
முகில்வண்ணன் தேவர்கோன் முனிவர் களொதுங்கவே ராமராமா

வந்தவர்கள் சிவனைத் தொழுதல்

நக்கனார் கொலுவிலே நருள்விலகு கணநாதா நமசிவயம்
நந்திகை பொற்பிரம் பானதாற் பரிக்கவே ராமராமா
[17]ஆரவார தொனிக்கஞ்சி மாதவர் தேவர் நமசிவயம்
ஆதிவேதி யர்பாரி சாதமலர் சொரியவே ராமராமா

வீரமா காளிவாத குமரனார் கோலம் நமசிவயம்
விவரிக்க வெளிதோ வியன்கொலுகு கண்டனர் ராமராமா
கண்டார் விழுந்தா ரெழுந்துபஞ் சாக்ஷரம் நமசிவயம்
கருத்தில் தியானித்து கைகுவித் தாரேமுன் ராமராமா
சண்டனை யுதைத்துப் பிற்காத்தவனே போற்றி நமசிவயம்
தரியலர் மூன்றெ ரித்தவா போற்றி ராமராமா

தொண்டர் களையாண்ட பரஞ்சோதியே போற்றி நமசிவயம்
சுடலைப்பொது நடமாடுஞ் சுந்தரா போற்றி ராமராமா

31.11. கங்காதரன் - சிவன். கொலுகு - கொலுவு; அரச மண்டபத்துள் அமைச்சர் முதலானோர் சூழ அரசன் இருத்தல். சங்கீத ராகம் - இனிய நாதம். கந்தருவர், கின்னரர், கிம்புருடர் - மூவர்களும் இவண் தேவ சாதியர். *31.12.* ஆதித்தன் - சூரியன். அக்கினி - நெருப்பு. *31.13.* முக்கண்ணன் - சூரியன், அக்கினி, சந்திரன் மூன்றையும் முக்கண்களாகக் கொண்டவன்;சிவன். அரவணிந்தோர் - பாம்பு அணிந்தவன்; சிவன். *31.13* முகில்வண்ணன் - முகில் வண்ண நிறத்தோன்; திருமால். *31.14.* நக்கனார் - சிவனார். நருள் விலகு - சனக்கூட்டத்தை விலக்குகின்ற. கண நாதா - நந்தியே. ஆர்பரிக்கை - பேரோசை செய்தல். *31.15.* தொனி - ஒலி. *31.16.* வீரமா காளி - வீரம் பொருந்திய காளி. அரன் - சிவன். வியன் கொலுகு - வியப்பிற்குரிய கொலுவிருக்கை. *31.17.* பஞ்சாக்ஷரம் - ஐந்தெழுத்து மந்திரமான 'நமசிவாய' என்பது. *31.18.* சண்டன் - யமன். பிற்காத்தவன் - மார்க்கண்டேயனைக் காத்தவன். தரியலர் - பகைவர். மூன்று எரித்தவா - பொன், வெள்ளி, இரும்பாலான மூன்று கோட்டைகளை எரித்தவா. *31.19.* சுடலை - சுடுகாடு. சுந்தரா - அழகனே; சிவனே! மருவு தோழன் - பொருந்துகின்ற கணவன்.

---

17. *அரபார*

On either side Virapaṭtirar[46] and Pairavar![47]
Praise be to Siva!
The guardians of the eight directions
Lord Rama Rama!
Fragrant *Makiḻ*[48] blooms besides
Cassia wreaths refulgent, O Lord Siva!
Plenteous frankincense, camphor odorous, Rama Rama!
Such is the court of Siva-Kaṅkātara,
With sweet music chanted by celestial singers,
Kantarvas[49], Kiṉṉaras[50] and Kimpuruṭas[51]-Rama Rama!
The sun and the moon and Akkṉi[52] shine
As the three eyes of Lord Siva
As he sat in his audience hall in Kailaś
When the nimbus-hued Tirumāl, the king of the celestials
And the sages stood in adoration meek.

THE GOD'S PRAYER TO SIVA

As the chamberlain Nanti, chief of the great God's hosts
Imperiously ordered them with his golden cane
In the court of Siva,
Afraid of his roar, the sages and the gods
And the holy Brahmins, poured *Pārijātham*[53] flowers as offerings!
Rama be praised and Siva be praised!
It were hard to describe the marvellous sight
Of Hara's splendour with valorous Kāḷi by his side,
Rama be praised!
Prostrate they fell in obeisance true,
Chanting the mystic pentad Namacivāya,
With bowed heads they stood in reverential awe.

46. Virapattirar - The terrible commander of the God Subramanya.
47. Pairavar - A manifestation of Siva.
48. *Makiḻ* - The fragrant ape-flower.
49. Kantarvar - A group of celestial singers.
50. Kiṉṉaras - Celestial musicians; half-horse, half-man
51. Kimpuruṭas - Celestial singers; half-horse, half-man
52. Akkṉi - The Fire-God.
53. *Pārijātam* - A celestial flower (Night-flowering jasmine)

சுந்தரா உமைமருவு தோழனே போற்றி நமசிவயம்
துணையென்ற ஏழைபங் காளனே போற்றி ராமராமா
தந்திமுகன் சண்முகன் றந்தையே போற்றி நமசிவயம்
சங்கரா சம்புசிவ சங்கரா போற்றி ராமராமா.

திருமாலைச் சிவன் அருகழைத்தல்

வேறு

32. சங்கரரே என்றவர்கள் சாற்றிப்போற போது
தாண்டவனும் நீண்ட நெடுமாலை முகம்நோக்கி
ஐங்கரனு மாறுமுக னுக்கும் மாதுலனே
ஆதி நாராயணரே வாருமிரு மென்றார்
ஆதி நாராயணரும் முந்தியை யொதுக்கி
அடிதொழுது வாய்பொத்தி அன்பாக நின்றார்

சிவன் திருமாலை அமர வேண்ட அவரும் அமர்தல்

சோதி நாராயணர் மீண்டும் முகம்நோக்கி
சுத்தமா யித்தவிசி லேறியிரு மென்றார்
இருமென்ற போதுதிரு மால்மனம் மகிழ்ந்து
ஈசுரா ஓம்நம சிவயமென் றிருந்தார்

திருமால் தான் வந்த காரணத்தைச் சிவனிடம் கூறுதல்

கருமங்க ளேதேது நீங்கள்வரும் காரியம்
கண்ணனே யிந்திரரே கனக மாதவரே
மாதவன் செப்புவான் நாங்கள்வருங் காரணம்
வரப்பிரம பராபர வஸ்துவே நின்புகழ்
பாதாளம் முதலாக உலகமெங் கெங்கும்
படர்ந்தே யரக்கரு பத்திர மிகுத்தார்

மிகுத்தார் பெருத்தார் வலுத்தார் பெலத்தார்
மேலான சேத்திர சிவாலய மழித்தார்

31.21. தந்தி முகன் - யானை முகன்; கணபதி. சண்முகன் - முருகன். சம்பு - சிவன். 32.1. சாற்றி - கூறி. போற போது - கூறிக்கொண்டிருந்த போது. தாண்டவன் - சிவன். நெடுமால் - திருமால். 32.2. ஐங்கரன் - ஐந்து கரத்தன்; விநாயகன். ஆறுமுகன் - ஆறு முகத்தை உடையவன்; முருகன். மாதுவன் - மாமன். 32.3. முந்தி - ஆடையின் முன்பக்கம். அடி - பாதம். 32.4. தவிசி - இருக்கை. 32.6. கனக மாதவரே - பெருந் தவத்தியரே. 32.7. பிரம பராபர வஸ்து - முதன்மையான பரம்பொருள். 32.9. சேத்திரம் - கோயில்.

Praise be to Siva who kicked Yama
And saved the boy Mārkkaṇṭēyaṉ's[54] life;
He incinerated the triple cities of the demons
Auric, argent and ferric. Rama be praised!
Praise be to Siva, supreme effulgence,
That protects his devotees! Siva be praised!
Praise be to the Lord with the lovely form
Who dances in frenzy in the crematory.
Rama be praised!
Praise be to the handsome Lord
Ever embracing Goddess Uma!
Praise be to the defender and protector
And help of the poor, Rama Rama!
Praise to be Siva, Sire of the tusker-faced God
And the six-faced God!
Praise be to Saṅkara, to Campu[55] and to Siva Saṅkara
Rama Rama!

32. As the assembled devotees hailed him
As Saṅkara, chanting his name
The Great Dancer turned to the lofty Lord Tirumāl
And beckoned him with a welcoming gesture!
'O Primal Nārāyaṇa, come near!"
And Tirumāl arranging his garments
Bowed to Siva in meek and loving kindness.
Again looking at his face, Siva told him
To ascend the dais to be seated by his side.
And glad of heart, Tirumāl chanted
'Oṁ Namacivāya' and sat near the Lord.

TIRUMĀL EXPLAINING TO SIVA THE REASON FOR THEIR COMING

And Siva asked them: "What is your problem,
O! Krishna, Intira and sages great?"

54. Mārkkaṇṭēyaṉ - A young devotee of Lord Siva saved by him from Yama and blessed with eternal youth.
55. Campu - One of the names of Siva.

பகுத்தான சிவபூசை குருபூசை யில்லை
பஞ்சாக்ஷரம் ஏகாக்ஷரம் திரியாக்ஷர மில்லை
சரமில்லை தயவில்லை தருமநெறி யில்லை
சடாக்ஷர மட்டாக்ஷரம் தற்பணமு மில்லை
மரபில்லை யாதியினம் [18]மகத்துவமு மில்லை
மனுநீதி தெரியாது மரியாதை யில்லை
மரியாதை தப்பியே சேத்திர மடைப்பார்
வளரா லயத்திலே மாடாட ழுப்பார்
விரிகான கத்திலே ஒருதரண் டாமல்
வீறிட்டு மார்தட்டி பூசல் செய்வார்
பூசலிடுவார் தேச ராசரை வெருட்டி
பொருத வர்கள்சேர்ந்த புரங்கொள்ளை கொள்வார்
பேசவெளி தல்லவே ராக்கதர்கள் தொல்லை
பெரிதாகில் முப்புவனம் எப்படிப் பிழைக்கும்
எப்படிப் பிழைக்குமென ராகவன் செப்ப
ஈஸ்பரன் திருவாய் மலர்ந்து கற்பிப்பார்

சிவன் பெருமை

முப்புர மானதை முறுவலி லெரித்தோன்
முருகனால் சூரனைப் பொருதழிய வைத்தோன்
வெப்பமுடனே நீங்கள் வெகுவால காலம்
விஷமென்ற நஞ்சுதனை யமுதென்று வுண்டோம்

32.10. பகுத்தான - விதிமுறை வகுக்கப்பட்ட. பஞ்சாக்ஷரம் - 'நமசிவாய' மந்திரம். ஏகாக்ஷரம் - 'ஓம்' மந்திரம். திரியாக்ஷரம் - 'ஓம் கிரீம் ஸ்ரீம்' என்னும் தாரக மந்திரம். 32.11. சரமில்லை - ஏகாந்த மில்லை. தயவில்லை - அருளில்லை. சடாக்ஷரம் - ஆறெழுத்து மந்திரம்; 'சரவணபவ' என்னும் மந்திரம். அட்டாக்ஷரம் - எட்டெழுத்து மந்திரமான 'ஓம் நமோ நாராயணாய' என்பது. தற்பணம் - பிதுர்க்கடன். 32.12. ஆதி - கோயில் முதன்மையான தெய்வம். மகத்துவம் - பெருமை. மனுநீதி - மனுவின் அரசாட்சி தர்மங்கள். 32.12. சேத்திரம் - கோயில். ஆலயம் - கோயில். 32.14. கானகம் - காடு. அண்டாமல் - நெருங்காமல். 32.15. பூசல் - சண்டை. வெருட்டி - பயமுறுத்தி. புரம் - நகரம். 32.16. முப்புவனம் - மூன்று உலகங்கள். 32.17. ராகவன் - திருமால். ஈஸ்பரன் - சிவன். கற்பிப்பார் - கூறுவார். 32.18. முறுவல் - நகைப்பு. சூரன் - சூரபதுமன் என்னும் அரக்கன். பொருது - போர் செய்து. 32.19. ஆலகாலம் விஷம் - திருப்பாற்கடலில் அமுதம் கடையும் பொழுது உண்டான கொடிய நஞ்சு.

---

18. மகுத்துவமு

And Mātava replied thus: "O! Primordial supreme Ens!
Endless your fame throughout the universes all!
The harassment caused by the demons
Through all the worlds from the nether world
Upwards, is becoming unbearable.
Their evil might is exceeding great,
Their puissance crescent;
They keep destroying holy places and temples;
No longer is done worship to Siva,
The great guru, as ordained; No more are uttered
The mystic monosyllable 'OM',
The triad[56] or the pentad;
No sacred solitude, no grace, no righteousness;
Neither the sestet[57], the octad are chanted;
None is allowed to do *Tarppaṇam*,[58]
Oblation's to the ancestors' manes;
Neither tradition nor pedigree nor noble birth is honoured.
Maṇu's code is more honoured in the breach -
Than in the observance;
None respected. All disrespect shown to temple,
Whose doors they close for ever.
In the sacred precincts of the temple,
Slaughter they make of cattle and sheep;
In the wide woods they roar boisterously
Allowing none near them. Rupture they make
Challenging all, chiefly
The rulers of the land.
Battling with them and plundering the cities.
Oh! beyond description is the trouble they cause.
If this were to go on increasing,
How could the three worlds survive?

56. Triad - The Hindu Trinity of Gods.
57. Sestet - The six-syllabled mantra 'Caravaṇapava'
58. *Tarppaṇam* - Ceremonial libations to Gods, Seers and the Manes.

அப்படி மிகுத்திடும் அரக்கரை நீர்தாமே
அல்லாமல் வேறொருத்தர் கொல்ல முடியாது

திருமாலுக்குச் சிவன் வரமருளுதல்

முடிமன்னர் நீதிநெறி தவறா ரிடத்தில்
முகில்வண்ண ரேபாரி லேநீர் பிறந்து
குடிகேடு செய்யும் அரக்கரைப் பொல்லா
கொடுமை செய்ய ரக்கர் ஸ்திரீகளவரை
ஸ்திரீவதை செய்வோர் கோவதைப் போரைச்
செகமழிப் பாரைத் தவமழிப் போரை
நெறிதப்பி சேத்திர சிவாலய மழிப்போர்
நிட்டூரம் செய்பவரைத் தட்டழியப் பொருது
தட்டழிய கொல்லச் சக்கரத் தாலே
தரியலரை வெல்லவரந் தந்தோமே யென்றார்

பிரம்மாவிடம் சிவன் கூறல்

கிட்டித்தொழும் பிரமா வைமுகம் நோக்கி
கேசவனை வாசவனை தேவர்களைப் பாரில்
பாரில் படைத்து நீகரடி ரூபமாய்
பாங்கான சாம்பு வனாகப் பிறப்பாய்
கூறிய வயோத்தியில் தசரதன் மனையில்
குமாரனென ஆதி நாராயணா பிறப்பீர்
பிறப்பும் வகுத்தே பிரானருளிச் செய்ய
பெருமானும் வைகுந்தப் பேர்பகுதி புகுந்தார்
சிறப்பான யிந்திரனும் தேவர் முனிவோரும்
சென்றார்க ளவரவர்கள் தன்பதி யிலேதான்
தன்பதயி லந்தணன் பிரம லோகத்தில்
சார்ந்து சிவனார் கற்பனைப்படி படைத்தார்

32.22. ஸ்திரி - பெண்கள். 32.23. கோ - பசு. செகம் - உலகம். 32.25. சேத்திரம் - கோயில். நிட்டூரம் - கொடுமை. தட்டழிய - நிலைகுலைய. 32.35. சக்கரம் - திருமால் கையில் கொண்டுள்ள சக்கரம். தரியலர் - பகைவர். 32.26. கிட்டி - அருகில் வந்து. 32.27. சாம்புவன்- பிரம்மன் பூலோகத்தில் சாம்புவன் என்கிற கரடியாகப் பிறத்தல். 32.31. கற்பனைப்படி - தன் எண்ணத்தின்படி.

Oh! how survive?" Thus spake Tirumāl to Īsvaran
Who then opened his lips, divine;
He that burnt with a smile the triple demon-cities,
Who caused Muruka to destroy Cūran, the terrible,
Spake thus: 'Of yore we swallowed the burning *Ālakālam*[59]
As if it were nectar,
But these demons who are exceeding evil,
None but you can kill.

SIVA GRANTING A BOON TO TIRUMĀL

"We bless you, O, Tirumāl, to be born on earth
As the son of the unswervingly just king Tacarata
And with your Discus to slay all the demons,
Who ruin human society, and the cruel demonesses.
Slay those who kill women and cows,
Who ruin the earth and the tapas of goodly sages,
Who destroy the temples of the Lord,
Who indulge in wrong-doing,
Who revel ever in cruel acts:
All those forces heinously evil,
We ordain you to destroy in battle fierce;
This boon we grant to you".

SIVA COUNSELS BRAHMA

To the creator standing nearby bowing to Him,
Siva spoke thus:
"Arrange that Kēcava,[60] Intira
And the gods are born on earth:
Be thou born as a bear;
And you Nārāyaṇa will be born in Ayōtti
As the son of Tacarata".
Ordained thus by Siva and informed
Of their coming birth on Earth,

59. *Ālakālam* - The terrible poison that emerged at the time of the churning of the ocean of Milk.
60. Kēcava - A name of Tirumāl.

தேவர்கள் பூமியில் பிறப்பது குறித்துத் திருமால் பிரம்மனிடம் கூறுதல்

அன்பான பிரமாவைத் திருமா லழைத்து
அவரவர் பிறக்கவகை யதுபதி யுரைப்பார்
பதிவான வானவரைப் வானரப் படையாய்
பாங்கான பூங்காவிலே படையு மென்றார்
மதியான புத்தியுடன் அதிகபல[19] வானாய்
மாவிந்தனை வாலியாய்ப் படையு மென்றார்
வாலியின் துணையாகச் சூரியனைத் தானே
வானரச் [20]சுக்கிரீவனாய்ப் படையு மென்றார்
ஆலிக்கும் வேதனே நீகரடி ரூபமாக
ஆம்படியே சாம்புவ னாகப் பிறப்பீரே
பிறவா நெறிபூண்டு அறுபதினா யிரம்வருடம்
பிசகாம லரசுபுரி மகராச ராசன்
திறவான யோத்தியாள் [21]தசரத னிடத்தில்
சிறுவரென நாமும் வந்துகிருபை புரிவோமே.

பிரம்மன் தேவர்களை வானரமாய்ப் படைத்தல்

விருத்தம்

33. கிருபைசேர் திருமால் செப்ப கேட்டயன் படைக்கத் தானே
மறுவில்லா தேவ ரெல்லாம் வானரப் படையாய் வந்தார்
இறையில்மா விந்தன் வாலி யிரவி சுக்கி ரீபனாக
கரடிபோல் வேத நாதன் கால சாம்புவ னானானே.

வாலி சுக்கிரீவன் பகை வளர்ந்தமைக்குக் காரணம்

வேறு

34. ஆனது வாலி வானரத் தலைவன் அண்ணனும் தம்பிசுக்கி ரீபனுமாய்
அலைகடல் புகுந்தே சலமதை வகுந்தே அமுதமா னதுகடை யயிலே
தானமுன் வருவது தமையனுக் கேபின் வருவது தம்பிக்கென மதித்தார்
தார்குழல் தாரை பின்வர மூத்தவள் வாகனத் துடன்வரவே

32.33. வானரப் படையாய் - குரங்குப் படையாய். பூங்கா - வனம். 32.34. மாவிந்தன் - இந்திரன். 32.36. ஆலிக்கும் - ஒலிக்கும்; வேதம் ஒலிக்கும். 32.38. கிருபை - அருள். 33.1. கிருபை - கருணை. 33.2. மறுவில்லா - குற்றமில்லாத. 34.1. சலம் - நீர். வகுந்தே - பிளந்தே. 34.2. தார் குழல் - சுருண்ட மயிர். மூத்தவள் - மூதேவி. வாகனம் - மூதேவியின் வாகனம்; கழுதை.

19. பெலவானாய் 20. சுக்கிரீபனாய் 21 திசரதனடத்தில்

Tirumāl returned to Vaikunṭa while Intira
And the Gods and the sages went each to his place.
Back at his Brahmalōka, the creator began
His new creation as ordered by Siva.

TIRUMĀL INSTRUCTING BRAHMA FURTHER IN THIS REGARD

Calling Brahma to his side,
Tirumāl spoke to him confirming Siva's ordainment;
"See that the celestials are born
As bands of monkeys, in the woods and groves of earth;
Let Intira be born as Vāli,
With matchless might and much wisdom;
Let Cūriyaṉ become Vāli's brother
As simian Cukkirīvaṉ; and you yourself,
The source of the ever sounding Vedas, O Brahma!
May you be born in ursine form as Jāmpavāṉ;
And I shall be born as the son of Tacarata
The great emperor of Ayōtti
The righteous ruler for sixty thousand years".

33. As suggested by Tirumāl
Brahma began his work of creation
Whereby the blameless Devas were born
As simian hordes; Intira was born as Vāli
And Cūriyaṉ as Cukkirīvaṉ while the Lord of Vedas himself
Was born as Jāmpavāṉ the bear.

THE ENMITY BETWEEN VĀLI AND CUKKIRĪVAṈ

34. When as the chief of the monkeys, Vāli
And brother Cukkirīvaṉ took part,
In the churning of the ocean for nectar,
Agreed they, that the elder will get
What ever came first,
And the younger, what came after;
Tara the beautiful with curly tresses
Coming after, upon as ass came first?

சேனைக விக்குல மன்னவன் வாலி செப்பின சொல்மறுத் தடக்கி
சிறுதமி யாயுன் பங்கது சேட்டை தேன்மொழி யென்பங்கா மெனவே
வானரம் வாக்கது மாறில் விடேனென மாறிமல் லாடுவதால்
வாலியுடன் சுக்கிரீ பனுமே பகைவந் தங்கதன் மகவா னானே.

அனுமன் பிறப்பு

வேறு

35. ஆன வானரம் பிறந்ததல்லால் அனுமார் பிறந்தகா ரணமுரைப்பேன்
மானா ளொருத்தியஞ் சனையவள்பேர் மைந்தனில் லாமல் மனதுநொந்து
தேனார் மொழியாருஞ் சிவனைநோக்கிச் சிலநா ளருந்தவஞ் செய்திருந்தாள்
கான கத்திலஞ் சனைதவசைக் காணச் சிவனாரு முமையும்வந்தார்

வந்து பூங்காவி லுருமாறி மற்கடம் போல வடிவெடுத்து
உந்து மரத்துக்கொப்பு கடோறும் ஓடி விளையாடி மோடிசெய்தார்
சிந்தை மயலுற்றாள் அபிராமி சிவனாரவள் மேலே மோகமானார்
அந்த நேரத்தில் சிவவிந்துதான் ஆறுபோல பாயவாயு கண்டான்

கண்டான வன்செம்புக் கிடாரத்திலே கைக்கொண் டேறிய விந்துவதை
வண்டார் குழலியஞ்சனை யுடைய வாயில் புகட்டினான் கிடாரத்தோடே
குண்டலஞ் செம்பொற் கிடாரமாகக் கோமானார் விந்து மாருதியாய்
மண்டலந் தன்னி லதி[22]பலமாய் வந்து பிறந்தானே வாள்னுமான்

34.3. கவிக்குல மன்னவன் - குரங்கு கூட்டத்திற்கு அரசன். சிறு தமியா - சிறுமையான கதியற்றவனே; சுக்கிரீவனே! சேட்டை - மூதேவி. தேன்மொழி - தேன் போன்ற மொழி பேசுபவள்; தாரை. 34.4. மாறி - வேறுபட்டு. மல்லாடுவதலால் - சண்டை செய்ததால். 35.2. மானாள் - மான் போன்ற விழி கொண்டவள்; அஞ்சனை; அனுமன் தாய். 35.3. தேனார் மொழி - தேன் போன்ற மொழி பேசுபவள்; அஞ்சனை. 35.4. கானகம் - காடு. 35.5. மற்கடம் - குரங்கு. 35.6. உந்து - வேகத்துடன். கொப்பு - கொம்பு; மரக்கிளை. மோடி - வேடிக்கைக் காட்சி. 35.7. மயல் - மையல்; ஆசை. அபிராமி - உமையவள். 35.8. சிவவிந்து - சிவபெருமானது சுக்கிலம். வாயு - காற்றுக் கடவுள். 35.9. செம்புக் கிடாரம் - செம்பு என்ற உலோகத்தாலான பாத்திரம். 35.10. வண்டார் குழலி - வண்டு மொய்க்கின்ற பூச்சூடிய கூந்தலையுடையவள் அஞ்சனை. 35.11. குண்டலம் - வட்டம். மாருதி - அனுமன். 35.12. மண்டலம் - உலகம். பலமாய் - வலிமையாய்.

22. பெலமாய்

The elder *Mūtēvi*,[61] the inauspicious,
Seeing which the king of the monkeys,
Contrary to the contract said: "Little brother,
You take as your share, the elder *Mūtēvi*.
While I shall have Tārai of melliferous speech!"
Thus began their quarrel,
From a breach of promise.
And Aṅkataṉ was born as the son of Vāli.

THE BIRTH OF AṈUMAṈ

35. I shall now tell of the birth of Aṉumaṉ;
A certain doe-eyed woman called Añcaṉai
Was for long without a child, and in anguish,
She did pray to Siva performing penance.
And Siva pleased with her Tapas
Came with Goddess Uma down to the earth,
And taking the form of a monkey
He leaped across the branches
Of the trees in majestic sport;
Apirāmi, Goddess Uma grew enamoured of her Lord
At which Siva's essence poured a flood;
Seeing which the god of wind, Vāyu,
Caught it in a copper vessel
And fed it in the mouth of Añcaṉai,
Adorned with flowery wreaths buzzed by bees
With the vessel becoming gold pendants
And the Lord's essence becoming Māruti,
On earth was born with matchless strength

61. *Mūtēvi* - Goddess of Ill-luck, the elder sister of Goddess Lakshmi.

அனுமக் குழந்தை கதிரவனைப் பிடித்தல்

பிறந்த வனுமந்தன் புகழ்கீர்த்தி பேசத் தொலையுமோ தேசத்திலே
சிறந்த அனுமனைத் தனியேவைத்து தேனார் காய்கனி தேடிவந்து
நிறைந்த மகனுக்கும் கனிகொடுத்து நிசிக்கஞ் சனையிளும் புசிப்பதுண்டு
மறந்தஞ் சனையொரு நாள்கனிக்காய் வனத்தில் போய்விட்ட தருணத்திலே

தருண மானதி லனுமானுந் தவழ்ந்து விளையாடுஞ் சமையத்திலே
அருண வுதயத்தில் கதிரோனும் ஆழியிற் சிவந்துதிக் கக்கண்டான்
கருணைத் தாய்தேடுங் கனியெனவே கதிரைப் பாய்ந்துகை யாற்பிடித்தான்
இருணை யப்பறத் திடும்பருதி இந்திர னைசென் றபையமிட்டான்

இந்திரன் அனுமனை மடித்தல்

அபைய மபையந்தெய் வேந்திரனே அனுமனென்னப் பிடித்தடித் தானென்றார்
விபரித் திந்திரன்வச் ராயுத்ததால் வெட்ட மாருதி பட்டு விட்டான்
உபய துண்டமா யனுமன்விழ உடனே மாருத ராயன்கண்டான்
துவரொத் திடுமித ழஞ்சனையும் துண்ட மாகியமக னைக்கண்டாள்

வாயுவின் சபதம்

கண்டு வயற்றிலும் முகத்திலேயுங் கைகொண்ட டித்தெந்தன் காதலனைத்
துண்ட மிட்டதெய் வேந்திரனைத் துணிக்கவகை யானுமறி வேனென்றே
அண்ட ருலகத்தி லிருப்பவர்கள் ஆரெவரெவ ருண்டோ அவருக்கெல்லாம்
கொண்ட வுடலுக்குள் காற்றின்செய்கை குணமென் பதையெல்லாங் குறுக்கிவைத்தான்

35.13. அனுமந்தன் - அனுமன். கீர்த்தி - பெருமை. 35.14. தேனார் - தேன் போன்ற மொழியாள்; அஞ்சனை. 35.15. நிசி - பொன்; பொன் போன்ற அஞ்சனை. 35.16. மறந்து - குழந்தையைப் பாதுகாப்பதை மறந்து. 35.17. சமையம் - நேரம். 35.18. அருணவுதயம் - சூரியவுதயம். ஆழி-கடல். 35.19. கருணைத் தாய் - இரக்கம் பொருந்திய தாய்; அஞ்சனை. கதிர் - சூரியன். 35.20. இருணைய - இருள் நைய. பறந்திடும் - விரட்டி ஓட்டிடும். பருதி - சூரியன். அபயம்-அடைக்கலம். 35.32. விபரித்து - வேகம் கொண்டு. வச்ராயுதம் - இந்திரன் கையிலுள்ள ஆயுதத்தின் பெயர். மாருதி - அனுமன். பட்டு விட்டான் - இறந்து விட்டான். 35.23. உபய துண்டமாய் - இரண்டு துண்டாய். மாருத ராயன் - வாயு பகவான். 35.24. துவர் - மாந்தளிர். இதழ் - உதடு. 35.26. துணிக்க - வெட்ட. 35.27. அண்ட ருலகம் - தேவர் உலகம். 35.28. குறுக்கி - சுருக்கி.

Anuman the great.
Oh, is it possible to describe the greatness
Of Anuman even when a child? Añcanai fed her darling son
With ripe fruit, honey-sweet from the wood;
When on a certain day she left the child
To go in search of edible fruit_
The infant crawling and playing
Did chance to look up at the rising sun,
Ruddy even like a ripe fruit and mistaking it
To be another fruit, he did leap up
Into the sky and seized it in his hand
And the sun, dispeller of darkness, in fear
Did rush to Intira crying to be saved
From the clutches of young Anuman!
And Intira did hit him with his *Vacciràyutam*[62]
And down fell Anuman cut into two pieces.
This did the god of wind perceive and the mother,
Añcanai, with lips lovely as mango sprigs

VĀYU'S VOW

Beating his face and breast with his hands in grief
"I too know the way to punish Intira
Who cut my son into two" swore Vāyu.
The God of the wind did contract himself
And withdrew the life-breath of all living things,
Wheresoever they may be in all the worlds.

62. *Vacciràyutam* - The dreaded bolt of Intira.

தேவர்கள் காற்றின்றி மடிதல்

வைத்தகாற் றெல்லாம் வாங்கியபின் வானுல கத்தி லுள்ளவர்கள்
சற்றும்வாய் பேசமாட் டாதுதனிக் கல்லுருவம் மண்ணுரு வத்தைபோல்
செத்த வுடல்போலும் சுவரிற்செய்த சித்திரம் போலும் விழித்திருந்தார்
உத்தபா ரப்புவெரி யாகாசம் ஒருநால் வரும்வேத னுக்குரைத்தார்

தானு, மால், அயன் மூவரும் வாயுவிடம் கூறல்

வேதன் திருமாலுக் கறிக்கைசெய்ய விண்டு சிவனாருக் கறிக்கைசெய்ய
நாதன் வேதன்மால் மூவருமாய் நல்ல வாயுவின் முன்னேதோன்றி
வாதந் தேவருக் கில்லாமல் மாற்றும் வகையேது மாருதமே
நீத முடன்முன்னாள் தவசுசெய்து நித்த னருளாலே பெற்றமைந்தன்

மைந்தன் சிறுபிள்ளைப் புத்தியினால் வந்து கதிரோனைப் பிடித்தானென்று
[23]இந்திர னனுமானை யறுத்துவிட்டார் யானு மனுமனை
வெறுத்துவிட்டேன்
உந்தன் சரமன்றி மாருதமே உலகம் பிழையாது நலமிலையே
விந்தை யனுமனை யெழுப்புகிறோம் விண்ணுள்ள வரைநீ
யெழுப்புமென்றார்

அனுமனுக்கு மூவரும் வரங் கொடுத்தல்

என்றே தாணுமா லயன்மூவரும் எழுப்பி யனுமற்கு வரங்கொடுப்பார்
கன்ற வனுமனைப் பகைவர்கொன்றால் கடிகை மூன்றேமுக் கால்கழிந்தால்
அன்று பிழைப்பானெக் காலமுமே அழியா உயிர்தந்தோ மரனாணை
என்று மிறப்பில்லை பிறப்புமில்லை இவனை செயிப்பவ ரெவருமில்லை

எவர்தா னெதிர்த்தாலு[24] மெதிரிபலம் இவன்கை கொள்ளக் கடவதென்றார்
அவர்தா னனுமார்க்கு வரங்கொடுத்தார் அமரர் வாய்பேச வாயுசெய்தார்
சுவரி லெழுதின சித்திரம்போல் துயின்ற பேரெலா மெழுந்தி ருந்தார்
சிவனு மயன்மாலும் பதிபுகுந்தார் தெய்வ லோகமும் சிறந்ததுவே.

35.32. உத்த - உற்ற. பார் - பூமி. அப்பு - தண்ணீர். எரி - நெருப்பு. ஆகாசம் - வானம். வேதன்-பிரம்மன். 35.33. விண்டு - விஷ்ணு. 35.34. நாதன் வேதன் மால் - சிவன், பிரம்மன், திருமால் என்னும் மூவர்கள். வாயு - வாயு பகவான். 35.35. வாதம் - காற்று. மாருதம் - வாயு பகவான். 35.36. நீதமுடன் - நியதியுடன். தவசு - தவம். நித்தன் - சிவபெருமான். 35.38. வெறுத்து விட்டேன் - சினத்து விட்டேன். 35.39. சரம் - அம்பு. 35.41. தாணுமாலயன் - சிவன், திருமால், பிரம்மன் என்னும் மூவர். 35.42. கன்ற - அடிபட்ட. கடிகை - நாழிகை; அறுபது விநாடி கொண்ட நேரம். 35.43. அரன் - சிவன். 35.46. அமரர் - தேவர். வாயு - வாயு பகவான். 35.48. பதி - இருப்பிடம்.

23. இந்ரன் 24. மெதிரிபெலம்

THE DEVA'S DYING FOR LACK OF AIR

Whenas Vāyu did withdrew his life-giving breath
All the celestials became still as statues
Of stone or earth or painted-figures on the walls,
Lifeless like corpses; and the other elements
Did report make to Brahma, the creator.

SIVA, TIRUMĀL AND BRAHMA APPEALING TO VĀYU

Brahma spoke to Vishnu and He to Lord Siva,
And all the three of them did appear before Vāyu
And said: "O, god of the wind! How can the Gods
Live without your vital motion?"
"My darling son born after proper penance
Before the eternal, in a childish prank
Did leap up and seize the radiant sun;
For which Intira cut down my son
And I have lost my Aṉumaṉ"
"Without you, O, Lord of Airs The world
Cannot survive and no good ensue thereafter;
We shall revive the miracle child
And you should restore the gods to life".

AṈUMAṈ RECEIVES BOONS FROM THE TRIAD OF GODS

So[63] Tāṉu, Māl and Ayaṉ restored Aṉumaṉ to life
And gave him boons many and rare.
"If killed by foes, within an hour and a half,
He will come back to life; Eternal and deathless
He will be, we declare. No birth or death!
Hence for him; none can defeat him;
Whosoever oppose him he will acquire
The opponent's strength." Thus the Gods
Granted miraculous boons to the lad.
And for his part, Vāyu restored to life
The inert Gods who rose, as if from sleep

63. Tāṉu - A name of Siva.

வாலி சிவபூசை செய்தல்

விருத்தம்

36. சிறந்தனுமன் பூங்காவில் வளர்ந்தீ டேற
தேவர்களும் வாயு சரந்தெ ளிவுண்டாக
பிறந்ததுவா னரப்படைக்குச் செங்கோல் வேந்தன்
பலவாலி பின்னவன்சுக் ரீப னாக
திறம்பெருகி கிஷ்கிந்தா கிரிக்கோன் வாலி
தினந்தினமுஞ் சிவபூசை திருந்தச் செய்வான்
மற்றிலங்கை வல்லரக்கன் வந்து வாலி வாலி(ன்)
முடியில் கட்டுண்ட வகைசொல் வோமே.

இராவணன் வாலியிடம் மல்லுக்கு வருதல்

தரு

37. சொல்லா ழிக்கரை சூழிலங் காபுரி
துடிகோ துடையான் முடிபத் துடையான்
சோதி வரப்பிர காச மிகுத்தவன்
வாலி யிடத்தில்மல் லாட நினைத்திட

வாலி இராவணன் போர்

மல்லாடத் திறவே பகர்ந்தா னோடு
மகிழ்ச்சிவ பூசை யினிற் றயவாய்
வாலி முடித்தபின் னாலி யரக்கனை
வாலில் முளைத்திடு நேமம திற்றனை

கல்லாதிக் கிரிகா னகஞ்சோ லைகள்
கடினத் துடன்மே லடிபட் டிடவே
கால்பத றக்கன கோடி சகத்தில்
கால மதித்திட வாலி குதித்திட

36.1. பூங்கா - வனம். ஈடேற - உய்வடைய. வாயு சரம் - மூச்சு. 36.3. கிஷ்கிந்தா கிரி - கிஷ்கிந்தை என்னும் மலை. கோன் - அரசன். 36.4. இலங்கை வல்லரக்கன் - இராவணன். 37.1. ஆழிக்கரை - கடலால் சூழப்பட்ட கரை. துடி கோதுடையான் - நரம்பால் கட்டப் பட்ட போர் முரசுடையவன்; இராவணன். முடி பத்துடையான் - பத்து தலைகளை உடையவன்; இராவணன். சோதி, பிரகாசம் - ஒளி. மல்லாட - போர் செய்ய. 37.2. தயவாய்- முறையாய். ஆலி யரக்கனை - பூதம் போன்ற அரக்கனை. நேமமதிற்றனை - வாலின் வலிமையான பகுதியால். 37.3. கிரி - மலை. கானகம் - காடு. சகம் - உலகம். கால மதித்திட - காலில் மிதித்திட.

Like painted-figures unmoving on walls.
The triple Gods returned to their abodes,
And the world of the celestials
Restored to its original sheen.

VĀLI'S SIVA PŪJA

36. So noble Aṉumaṉ revived, did flourish and grow
And the Gods were restored to their life again,
In Kiṣkintai mighty Vāli ruled
Over the monkey armies, with Cukkirīvaṉ his brother
By his side. Ardent devotee of the Lord,
Vāli did daily puja perform to Siva.
Let us now narrate the quaint episode
Of how the powerful demon-emperor Rāvaṇa
Of Laṅka in the south, got tied up in the tail
Of Vāli the great.

RĀVAṆA CHALLENGING VĀLI

37. Ten-headed Rāvaṇa, Lord of Laṅka engirt by the sea,
With war - drums well - tied with leathern thongs
In matchless splendour ever dazzling
'Did come to fight with Vāli.
But when he came to him from behind,
While Vāli was at his devotional ablutions,
Without an effort Vāli did seize the huge titan
With the toughest part of his tail,
And rose up in the air so swiftly that
All the ancient mountains, woods and groves
Were battered by the tail.
Throughout the worlds he flew, stamping
With his feet the captive demon seized;

செல்லா மற்றொழுதே பகர்ந்தா னோடு
தினம்நற் குருவே எனவிட் டருள்வாய்
சீல மிகப்பெல வாலி யெனப்பேர்
கூறுவர் பக்கலும் மாறிலை யுற்றசொல்.

வேறு

38. சொல்லாழுஞ் சூழுகின்ற - நல்ல
சூதான மூதூரிலங் கையிலே
பொல்லாத ராவணனும் - மற
புயபல வாலியிடத்தில் வந்து
மல்லாட வேணுமென்று - அரக்கன்
வந்தான் சிவபூசை வேளையிலே
வல்லான ராவணனை - வாலி
வால்முடி யானதில் கட்டிவைத்தான்
வைத்தான் சிவபூசை - செய்து
மாமேரி மகிரி நீலகிரி

குற்றாலம் மைநாக - அட்ட
குலபர்வத மெட்டுனோடித் தாண்டினான்
பத்தாந் தலைப்பூச்சி - போல
படிகொள் தலமெங்கு மடிபடவே
ரெத்தாறு பொங்கிடவே - கண்டு
ரிஷிகள் முனிவர் தவத்தியர்கள்
தவத்தை யழிப்பதற்கோ - இந்த
சண்டாளனை யிங்குகொண்டு வந்தாய்
அவச்சாப மிட்டிடுவோம் - என்
றிருந்தவர்சொல்ல வணங்கிக் கொண்டான்

37.4. எழுதே - எழுந்தே. பகர்ந்தான் - கூறியவன்; இராவணன். குருவே - வாலியே. 38.1. சூதான - பாதுகாப்பான. மூதூர் - பழமையான ஊர். 38.2. மற புயபலம் - வலிமையான தோள் பலம். 38.3. மல்லாட - போர்செய்ய. 38.4. வல்லான - வலிமையான. 38.5. மாமேரிமகிரி - மேரு மகா மலை. நீலகிரி - நீல மலை. 38.6. குற்றாலம் - குற்றாலம் என்னும் மலை. மை நாக - கரிய பெரிய. அட்ட குல பர்வதம் - இமயம், மந்தரம், கைலாசம், விந்தியம், நிடதம், ஏமகடம், நீலம், கந்தமாதனம் என்னும் எண்வகை மலைகள். 38.7. பத்தாந்தலைப்பூச்சி - பத்து தலைகளை உடைய சிறு பூச்சி. படி - பூமி. தலம் - இடம். 38.10. அவச்சாபம் - பொல்லாத சாபம்.

And he did piteous appeal thus make;
"O, my Lord! my preceptor, Let me go, please!
The report that you are mightiest of the mighty
I now realise, alas! Please let go off me."

38. When the fell demon Rāvaṇa, Lord of ancient Lanka,
Came to fight with Vāli when he was performing Siva puja,
Vāli as aforesaid, tied him up with his tail,
And continued with his austerities
And rising aloft in the sky he leapt across
The worlds, over the Mēru Mountains, Blue mountains
Kuṟṟālam,[64] Mynākam[65] and the eight mountain ranges;
And all the while like a ten-headed insect,
Rāvaṇa was battered all over his body;
Crimson-blood pouring like a flood from his limbs;
Whereupon the sages and anchorites
Angry with this abomination, cried to Vāli,
"Why did you bring here this base - born wretch?"
And cursed him for disturbing them so rudely;
And Vāli prayed with folded hands forthwith
Asking to be forgiven for his folly;

64. Kuṟṟālam - The mountain in the south.
65. Mynākam - The mountain in the south.

பவத்தால் வெகுகாலம் - அப்படி
வல்லரக் கனடி பட்டபின்
சிவத்தால் விழ்த்துவிட்டான் - எண்ணை
தேய்த்து முழுகி யசனமிட்டான்.

இராவணனிடம் வந்த காரணத்தை வாலி வினவுதல்

இட்டான் தன்பிறகு - நீயென்
னருகேவந்த தென்ன வென்றான்
எட்டா தரக்கன்சொல்வான் - என்னோ
டெதிர்ப்பா ரில்லாத மதத்துடனே

இராவணன் காரணம் கூறல்

வெட்டாதி மற்பொரவே - மதம்
மீறிவந் தேனென்று கூறியபின்

வாலி மற்போர்க்குச் சம்மதித்தல்

அட்டா துட்டிஅரக்கா - அன்ன
பான மருந்தி யிருந்தவுடன்
வருவாயோ மற்போர்க்கு - என்று
வாலிசொல்ல வல்லரக்கன் சொல்வான்

இராவணன் மறுமொழி

குருவாகும் நீயெனக்கு - உன்னைக்
கும்பிட்டுக் கொண்டுநான் போறேனென்றான்
ஒருவீரர் வாலியென்றே - பேரு
ரைத்தா ரிடத்தி லுரைத்தாலும்
அரிவாளுக் கிரையிடுவேன் - புத்தி
யாகப்பிழையென்று போக விட்டான்

திருமாலிடம் கடாமுகன், துந்துபி சண்டைக்கு வருதல்

போக வதன்பிறகு - மெத்தப்
போரிடும் ராக்ஷதராய் [25]இரண்டுபேர்

38.11. பவம் - பாவம். வல்லரக்கன் - இராவணன். 38.12. சிவத்தால் - சிவத்தின் மேன்மையால். அசனம் - உணவு. 38.14. மதம் - மிகுந்த செருக்கு. 38.15. மற்பொர - மற்போர் செய்ய. 38.16. அட்டாதுட்டி - அடாவடித்தனம். 38.18. போறேன் - போகிறேன். 38.20. அரிவாள் - கதிர், தானிய வகைகளை அரியும் கருவி.

---

25. ருண்டு

After Rāvaṇa suffered thus long and painfully
By the grace of Siva, Vāli let him go.
And purified himself with an oil-bath
Before partaking of his food.
"Why did thou embark on this, O, King?"
And he submissive replied; "In the pride
Of my invincibility, I came to wrestle
With you." And Vāli agreed to it readily,
And told Rāvaṇa, "Yes, after food and drink,
Let us begin our wrestling match".
To which Rāvaṇa thus rejoined: "O, Sire!
You are my mentor. I bow to you and take my leave!
I acknowledge, you are the one and only Vāli!
If any were to speak your name even,
I shall give to sword his life". Thus Rāvaṇa!
And Vāli graciously said to him,
"Go thou and err no more".

THE DEMONS TUNTUPI AND KAṬĀMUKAṈ CHALLENGING LORD TIRUMĀL TO A FIGHT

Now we shall relate how two powerful demons
Kaṭāmukaṉ, the bull-faced, and Tuntupi (son of Mayaṉ[66])

66. Mayaṉ — The architect of the demons.

வேகக் கடாமுகனும் - செய
விந்தை புயபல துந்துபியும்
சாகத் துணிந்தவர்கள் - ஆனார்
சண்டைசெய் வோமென்று கொண்டைகட்டி
பாகத் துடனெழும்பி - திருப்
பாற்கட லில்பள்ளி கொண்டவரை

திருமாலின் விஸ்வரூப காட்சி

வரைபோ லும்வந்தெ - திர்த்து
திருமாலே மற்போர்க்கு வாருமென்றான்
[26]நிரைமேக வண்ணரப் போவுடல்
நீண்டாரே விண்ணுக்கும் மண்ணுக்குமாய்
துரைமா வலியுலகை - யொரு
சொல்லா [27]வளந்திட வல்லமைபோல்
விரைவாய் கண்டமெங்கும் - உடல்
விம்மவே ராக்ஷசர் பம்மிக்கொண்டார்

வாலியோடு போர் செய்ய அரக்கர்களைத் திருமால் பணித்தல்

பம்மிப் பதுங்கியவர் - ஆதி
பச்சைமா லைத்தொழு தச்சமுற்றார்
செம்மிய விடமிட்டுப் - பிரம
தேவ ரிடத்திலே வந்தெதிர்த்தார்
நம்மோடு மற்பொரவா - என்ன
ராக்ஷதர் செப்ப வயனுரைப்பான்
உம்மில் பெரியவனாம் - வாலி
யொருவனுவ னோடே பொருவீரென்றார்

38.22. கடாமுகன் - ஓர் அரக்கன். துந்துபி - மயன் என்பவன் மகன்; வாலியால் மாண்டவன். 38.23. கொண்டை கட்டி - முடியை கொண்டையாகக் கட்டி. 38.24. பாகத்துடன் - பக்குவத்துடன். 38.25. வரை - மலை. 38.26. நிரைமேக வண்ணர் - கருமேக நிறத்தர்; திருமால். அப்போ - அப்பொழுது. 38.27. துரை மா - மிகுதிப்பாடான, பெரிய. 38.28. கண்டமெங்கும் - உலகமெங்கும். விம்மவே - நடுங்கவே. பம்மி - பதுங்கி. 38.29. பச்சைமால் - பச்சை நிறமுடைய திருமேனியன்; திருமால். அச்சமுற்றார் - பயப்பட்டார். 38.30. இடமிட்டு - இடத்தை விட்டு.

26. நீலமேக 27. அழந்திட

Came up to Tirumāl, their tufts tied up,
And challenged him to a fight.
To Him recumbent upon the milky ocean,
"Come to fight with us" they shouted!
And the lofty Lord cloud - hued
Took on a huge form, His limbs touching Heaven and Earth:
(The same he took to measure with a single step
The space promised by Makāpali!)
On seeing which they grew fearful
And praying to the emerald-hued,
They left him fleeing for their lives.
From the glorious seat of Vishnu, and went
To Brahma's place and challenged him!
But he passed them on to Vāli of Kiṣhkintai,
As the only foe worthy of their mettle.

அரக்கர்கள் வாலியை மல்யுத்தத்திற்கு அழைத்தல்

பொருவோமென திருமலி - சிவ
பூசைசெய் வாலியிடத்தில் வந்து
வருவாயடா வாலியிப்போ - மற்
பொருவோ மென்று சொற்பகர
தருவாலி கோபமுற்று - துடை
தட்டிகொண்டான் கச்சை கட்டிகொண்டான்
இருபேர் கடாமுகனை - மல்லு
யுத்தத்தில் வாலி செயித்துவிட்டான்.

வாலி அரக்கர்கள் மற்போர்

விருத்தம்

39. செயித்தனன் வாலி சீறிச் சினத்துபோர்க் கோலங் கொண்டு
உயித்தமல் லுயுத்தம் செய்ய வொருகடா முகனும் முட்டான்
வயிற்றினி லிடித்து வாடி மலங்கிமல் லாடி வித்தை
பயிற்றதுந் துபியுஞ் சீறிப் படர்ந்தடர்ந் தெழும்பி னானே.

பள்ளு

40. வாலியும் மற்பொருதான் - துந்துபியுடன்
வாலியும் மற்பொருதான்
ஆலித்து வாலியைக் குத்தவாலி துந்துபியை குத்த
அதுபாரிது பாரென்று அண்டபகி ரண்டஞ் சுற்றி (வாலி)
அடர்ந்தெ ழும்பிப் பொருது படர்ந்த கையால் துந்துபி
அடிக்க மறுத்து வாலி யிடிக்கத் துடிதுடித்துக் கொண்டு
படர்ந்த புலியைப் போலும் பார மதயானை போலும்
பங்கமில்லாச் சிங்கம் போலு மங்க வதங்களிற் குத்தி (வாலி)
அங்கவ ரிரண்டு பேரு மதட்டி யதட்டிக் கொண்டு
அண்ட லோகத்தை முட்டி ரண்டு மாதம் மற்பொருது

38.35. துடை - தொடை. கச்சை கட்டி - ஆடையை இறுகக் கட்டி. 39.2. உயித்த - உயிர்த்து; தொழில்பட்டு. முட்டான் - முட்டினான். 39.3. மலங்கி - மனம் கலங்கி. மல்லாடி - மற்போர் செய்து. 40.3. ஆலித்து - பேரோசை கொண்டு. 40.4. பொருது - போர் செய்து. படர்ந்த - விரிந்த. 40.5. பார மத யானை - வலிமை பொருந்திய மத நீர் கொண்ட யானை. பங்கமில்லா - குறைபாடில்லா. அங்கவதம் - உடல் உறுப்புக்கள். 40.6. அதட்டி - பயமுறுத்தி. அண்டலோகம் - தேவர் உலகம்.

THE DEMONS CHALLENGING VĀLI

And accordingly, they came to Vāli in all his opulence,
After his devotions to Lord Siva and uttered cries,
Loudly challenging him to wrestle with them forthwith;
Whereat Vāli angrily prepared for the fight,
Girding up his loins and beating on his thighs.

39. Soon Kaṭamukan feel defeated, battered by Vāli's mighty arms.
Expert in wrestling, Tuntupi now took his place
And with an angry shout leapt at Vāli, huge and tall;

40. "And Vāli, he did fight with Tuntupi
And fiercely he did fight!"
Eager to fight, Tuntupi pummelled Vāli,
Who returned it with interest;
Here now, now there, they circled each other
For vantage to hit, all over the worlds.
They rose in the sky and with broad hands,
Battered each other, like fierce tigers
And ichorous tuskers and raging lions,
Pounding and punching and pummelling each other.
The two combatants shouting challenges
And belligerent cries, fought near
The battlements of Heaven for two months;
And leaving the golden boundaries of Heaven

தங்கமண்டர் லோகம் விட்டு எமலோகந் தன்னிற் புக்கி
சந்திர சூரிய பிடலங்கண்டு துந்துபியை மாய்ப்பே னென்று (வாலி)
மாய்ப்பே னென்று துந்துபியும் வாலியுமாய் வண்டு றுக்கி
வதைப்பே னென்றே துந்துபி வாலிமுன் னேதுடை தட்ட
ஆய்ப்பு. விளிப்பார் குதிப்பார் அடிப்பார் கையா லிடிப்பார்
அட்ட திசைக்குஞ் சென்றேத்தி ஆதிமால் வைகுண்டஞ் சுற்றி (வாலி)

அரக்கர் வாலி இருவரும் பாதாள லோகத்தில் பொருதல்

ஆதிமால் வைகுந்தம் முட்டி சோதி கயிலாசங் கிட்டி
ஆயிரத் தொண்டண்டம் முட்டி ஆறேழு மாதம் பொருது
வாதுசெப்பி நீதி செப்பி மண்டி ரண்டு வருடம்
வைப்பிடத் தெரியா மலேயப்படி யறச்சலித்து (வாலி)
அறச்சலித் துமேதுந் துபியா கட்டா கட்டென்ற தட்டி
ஆதாளி யிட்டுப் பறந்து பாதாளத் துக்குட் புகுந்து

எட்டாண்டு போர்

திறத்தில் பெரிய வாலி யுறைத்துப் பாதா ளத்திலே
திட்டு கடோறுந் திரிந்து எட்டாண்டு சுற்றி சுற்றி (வாலி)
எட்டெட்டு வருடம் வாலி யிங்கு வரக்காணா தென்று
இருந்த வானரச் சேனை எல்லாரு மொன்று கூடிப்

வாலி வராமையால் சுக்கிரீவன் அரசனாதல்

பட்டங் கட்டி சுக்ரீபனைப் பாராள வைக்க வென்று
பாவித்த வான ரத்தை கோபித் தான்சுக் ரீவன் (வாலி)
கோபித்து துந்துபியை கொன்று வாலி வென்று வந்தால்
கூண்டபகை மூண்டுவிடும் வேணாமென் றரசன் செப்ப
மேவித் தயவு சொல்லி வான ரங்கள் கைதொழுது
வேந்தனுந் துந்துபியை வெல்ல மாட்டான் விணி தென்ன (வாலி)

40.7. மண்டர் லோகம் - தேவர் உலகம். புக்கி- புகுந்து. படலம் - அடுக்கு. 40.8. வண்டுறுக்கி - உதட்டை மடக்கிக் கடித்து; சினத்து. 40.9. ஆய்ப்பு விளிப்பார் - ஒடுங்கிக் கூப்பிடுவார். அட்ட திசை - எண் திசை. 40.10. கிட்டி - அடைந்து. தொண்டண்டம் - பழமையான தேவருலகம். 40.11. மண்டி - நெருங்கி. 40.12. அறச்சலித்து - கடும் போர் செய்து. கட்டா கட்டென்ற தட்டி - கட்டிப் புரண்டு சண்டையிட்டு. ஆதாளியிட்டு - கலங்கச்செய்து. 40.13. திட்டு - மேடு. 40.15. பாராள - உலகாள. பாவித்த - நினைத்த. வானரத்தை - குரங்கு கூட்டத்தை. 40.16. கூண்ட பகை - பெரும் பகை. 40.17. மேவி - பொருந்தி. தயவு சொல்லி - தாழ்மையாகச் சொல்லி.

They fought in the nether world of Yama.
And then on to the zones of the Moon and the Sun,
Each swearing to slay the other.
With angry frowns and louring looks they shouted
Challenges again, beating their thighs
Calling each to the other, leaping
And beating and boxing,
Wheeling and circling in directions eight,
Round the Vaikuṇṭa of Primal Tirumāl,
And Mount Kailas resplendent. In orbs
A thousand and eight, they fought for months on end:
Closing in and leaping back, a fierce battle they fought,
Till Vāli roaring boisterously, rolled Tuntupi about,
Chasing him into the underworld, where
For eight long years, they fought in all the plateaus.

CUKKIRĪVAṈ BECOMING KING OWING TO VĀLI'S LONG ABSENCE

To the ministers who suggested that he become king,
In the place of his long - absent brother Vāli,
Cukkirīvaṉ angrily protested thus: "No, if Vāli
Were to return after killing Tuntupi
There will be great trouble between us".
But the elders of the clan with persuasive words
And bowed hands, said: "The king cannot kill Tuntupi.

வீணிப் போவாரா னென்று விந்தை கிஷ்கிந்தை மலைக்கு
வேந்த னென்று சுக்ரீபற்கு வெகுண்ட பிசேகஞ் செய்து
மாணிக்கக் கிரீடஞ் சூட்டி சுக்கிரீபனுந் தாரகை யுடன்
வாழ்ந்திருக்க வானரங்கள் சூழ்ந்து அடிபேணி நிற்க
பேணிப் பாதாள வாசல் தன்னையுங் கல்லா லடைத்து
பெருத்த வானரச் சேனை யிருக்குந் தகுணத் திலே

வாலி அரக்கனை அழித்து நாடு திரும்பல்

ஊணிப் பாதாளத் திலேதுந் துபியைக் கொன்று ளக்கி
உடலில் முதுகெ லும்பை மடலோ டெடுத்துக் கொண்டு (வாலி)
கொண்டு வாலி மேலெழும்பி யடைத்த பாதாள வாசல்
கூறு கண்டு மீறியவன் வேறி டத்திலே புடைத்துத்
தொண்டு செய்யுஞ் சுக்கிரீபன் சுகமா யரசு செய்ய
துந்துபியைக் கொன்ற கையா லுந்தனையும் மாய்ப்பே னென்று. (வாலி)

வாலியின் சினம்

விருத்தம்

41. உந்தனைச் சுக்கிரீபா ஒருநொடி தனிலே கொல்வேன்
எந்தனக் கிளையோ னானாய் யானுனக் கண்ண னானேன்
சந்தயம் தமயன் பாரி தன்னைநீ ஆசித் தாயே
இந்தலோ கத்தி னுன்னை இருத்தேனென் றடித்தான் வாலி.

சிந்து

42. அடித்தான் பெலவாலி - சுக்ரீபனும்
துடித்தான் மலைபோலே

துடித்தான் விடுகுரல் வெடித்தானா காசத்தில்
தூக்கி யெறிந்தேயுன்னை ஆக்கினை செய்வேனென்ன
இடித்தான் அரசுனக்குக் கொடுத்ததா ரென்னவென்று
எரியெனவே கண்ணுகள் பொறிகள் பறந்திடவே (அடி)

40.18. வெகுண்டபிசேகம் செய்து - விரைந்து அபிஷேகம் செய்து. தாரகை - தாரை. 40.20. தகுணத்திலே - தருணத்திலே. 40.21. ஊணி - அழுத்தி. உளக்கி - ஒழித்து. மடல் - குருத்து. 40.22. கூறு - அமைப்பு; பாதளக் குகைவாசல் மூடியிருந்த நிலை. புடைத்து - உடைத்து. 40.23. தொண்டு செய்யும் - மக்களுக்கு ஊழியஞ் செய்யும். 41.3. சந்தயம் - சந்தேகம் தீர. பாரி- மனைவி. ஆசித்தாயே - விரும்பினாயே. 42.2.விடுகுரல் - வாய்விட்டு ஒலித்த குரல். ஆக்கினை - தண்டனை. 42.3. அரசு ஆட்சியுரிமை. எரி - தீ.

Let us not waste time" and crowned Cukkirīvaṉ swiftly,
With a rubied crown. With Tārai as queen
Cukkirīvaṉ lived happily, with monkeys
All around in adoring obedience.
They closed the entrance to the rocky cave
For fear of Tuntupi returning.
While in the nether world Vāli at last
Crushed Tuntupi to death,
And plucking out his back-bone
Rose up to the earth, only to find
The entrance to the cave blocked with a rock.
Angrily he rammed his way through another spot,
Only to come up and see Cukkirīvaṉ ruling
Happily in his place.

VĀLI'S WRATH

41. "With the hand that slew Tuntupi
I shall kill you, O Cukkirīvaṉ, in a trice!
You are youngster to me;
I am your elder brother.
You have treacherously taken over
Your brother's wife. Should you
Continue to live on earth?"

42. And Vāli belaboured Cukkirīvaṉ
While he trembled and cried in pain,
As he was thrown up into the sky.
"I shall punish you for your crime;
Who is it who gave you the kingship?
Can the monkeys of Kiṣkintai come to your help now?"
So saying with inflamed eyes,

உந்தனக் குதவியோ கிஷ்கிந்தை கிரிவானரமென
உரத்துச் சினத்தெழும்பிக் கரத்தினாற் குத்திடவே
அந்தநேரம் வாலிகுத்துக் காற்றாமல் சுக்கிரீபன்
ஐயோவென மயங்கி மெய்கலங்கிப் பாரில்விழ (அடி)

பாரில்விழக் கண்டுவாலி பயல்செத்தா னென்றுசொல்லி
பவம்வந் தணுகாமலே சிவபூசை செய்யப்போக
சோர்வுகண்டு வானரங்கள் தொடுத்த நீலகிரியில்
சுக்ரீபனை மாதவர்க் கடைக்கல மெனவைக்க (அடி)

நீலகிரி மலையில் சுக்கிரீபன் வாழ்தல்

வைக்கவே நீலகிரியில் மாமுனிவர்க் கச்சமுற்று
வந்தாலுஞ் சுக்ரீபனை அந்தநேரங் கொல்வேனென்று
திக்கெட்டும் முரசறைந்து தாரகையைப் பாரியாக்கி
செங்கோல் நடத்திச் சத்துருசங் காரகொடிகட்டி. (அடி)

திருமால் தசரதன் மகவாகப் பிறக்க முடிவெடுத்தல்

விருத்தம்

43. *கொடியிடை பயின்ற பாலனங் கதனுடன் வாலி வாழ*
நெடியபாற் கடலில் மாயன் நெஞ்சினிற் றிருவைப் பார்த்து
படியில்வீற் றிருப்பா யானும் பாரினில் ராஜ ராஜன்
குடிவளர் தசர தற்கே குழந்தையாய்ப் பிறப்பே னென்றார்.

திருமகள் வேண்டுகோள்

தரு

44. *பிறப்போ மென்றுதிரு மால் செப்ப பெரியமகா லக்ஷ்மி*
பெருமான் றனைப்பிரிந்தே மன்றிலொரு மானிலத் திருந்தாள்
சிறப்பாய்அழ லெரிகோட்டையில் தேனார்கொலு விருக்க
சிலையான் பத்துத் தலையான்தவஞ் செய்துமாமே ரணுகி

42.4. கிரி - மலை. 42.6. பயல் - சிறுவன்; சுக்கிரீவன். பவம் - பாவம் 42.7. நீலகிரி - கிஷ்கிந்தா மலையின் அருகிலுள்ள ருச்யமூகபர்வதம் என்னும் மலை; இவ்விடத்திற்கு வாலி வந்தால் அவன் தலை சிதறும் என்பது வரலாறு. 42.9. திக்கெட்டும் - திசை யெட்டும். பாரி - மனைவி. சத்துரு சங்கார கொடி கட்டி - பகைவர்களை அழித்ததின் அடையாளமான வெற்றிக் கொடியைக் கட்டி. 43.1. அங்கதன் - வாலி மகன். 43.2. திரு - திருமகள்; லட்சுமி. 43.3. படியில் - பூமியில். 43.4. குடிவளர் - குடி மக்களை வளர்க்கின்ற. 44.1. மன்றில் - சபை. 44.2. அழல் - தீ. தேனார் - தேன் போன்ற மொழியாள்; சீதை. சிலையான் - வில்லுடையான்; இராவணன். பத்து தலையான் - பத்து தலைகளை உடையவன்; இராவணன். மாமேரு - மகா மேரு மலை.

Wrathfully he punched Cukkirīvaṉ.
Unable to bear the pain, Cukkirīvaṉ fell down,
And Vāli thinking he was dead,
Went off to cleanse himself of his sin,
By performing Siva worship;
While Cukkirīvaṉ's friends took him up
To a nearby mountain where he sought
Sanctuary with a holy sage Mataṅka.[67]
After of the Sage's curse, Vāli left him alone,
Waiting for a chance to kill him
If Cukkirīvaṉ strayed into Kiṣkintai.
Making again Tārai his wife, he began to rule
Happily with Aṅkataṉ, his son.

43. While so on earth, in the wide ocean of milk
Tirumāl turning to Lakshmi seated in his heart
Said: "You shall go down to the earth to be born
The daughter of king Jaṉakaṉ, while I
Will be born as the son of Tacarata!"

44. The great Goddess Lakshmi leaving Tirumāl
Was in a place elsewhere in a flaming fortress
In splendorous beauty. The ten-headed Rāvaṇa
Having done intense Tapas near the Mēru Mount

67. Mataṅka - A great sage who cursed Vāli.

அறப்பார்பதி யுடையான்வர மருள்சேர்பெலத் துடனே
அரக்கன்வரு கையிலேதிரு வழகானதைக் கண்டு தானே
இறப்பான்எரி பிறப்பாயவள் கிச்சித்தான் மனங் கெச்சித்தான்
இராவணன் மனக்கருத்தை யரிராகவன் றிருவறிந்து
அறிந்து வல்லரக்கர் யெனக்காசித் தாய்நீசத் தோசிநீ
அழிவாய் வரமழிவாய் நகரழி வாயுயி ரழிவாய் 5
முறிந்து விழுமரக்கா என்பொருட் டானுந்தன் பெருமை
முடிவாயெனச் சயித்தேயம் மன்முறை பாரிற்கை யறைவாள்
பறிந்தான் சாபமேற்றோன் தலைபத்து ளானிலங் கையிற்போய்
பாரினில ரசுகந்தே வெகுபவுசா யவனி யிருந்தார்
பிறந்தே மகாலட்சுமி யதின்பின் பூமியி னிடமாய்
பெருமாணட் டாக்ஷரமு மொருபெட்ட கந்தனு மகவோ

திருமகள் ஜனகன் மகளாய் பூமியில் அவதரித்தல்

பெட்டகந் தனில்தனு வோடொரு பெண்மாதெனச் சமைந்து
புரமேமிது லையிலே ஜனகனார் பூமியி னாலே
திட்டமா யுறைந்திருக்க வாதி திருமால் வைகுந்தத்தில்
சென்றார் கெருடனைத் தானரிதேச மான திலிருத்தி 10

சங்கு, சக்கரம், ஆதிசேடனோடு பிறக்கத் திருமால் முடிவெடுத்தல்

சட்டமான வயோத்தியிற் றசரதனார் பன்னி வயிற்றில்
சங்கு சக்கரத் தோடுபாம்பணை தகுநாலு சந்ததியாய்
இட்டமாய்ப் பிறந்திடவே மனத்தெண்ணி னார்புவி நண்ணினார்
ஏலவே வடவாலிலே யதற்கிசைவாய்த் தவசி ருந்தார்

44.3. அறம் - 32 வகை அறங்கள். பார்பதி யுடையான் - பார்வதியை இடப்பாகம் கொண்டவன். திருவழகு - திருமகள் அழகு. *44.4.* இறப்பான் - இறக்க வேண்டி. எரிபிறப்பாய் - தீயில் எரிந்து போவதற்குரியப் பிறப்பாய். கெச்சித்தான் - கெர்சித்தான். அரி ராகவன் - திருமால். திருவறிந்து - திருமகளை இராவணன் இச்சித்ததை அறிந்து. *44.5.* ஆசித்தாய் - விரும்பினாய். நீசத் தோசி - பாவி. *44.6.* சயித்தே - சாபமிட்டே. அம்மன்- திருமகள். பாரில் - உலகில். கையறைவாள் - இளைப்பாறுவாள். *44.7.* பறிந்தான் - விலகிப்போனான். உகந்தே - விரும்பியே. வெகு பவுசாய் - மிகுந்த செருக்குடன். அவனி- உலகம். *44.8.* அட்டாக்ஷரம் - 'ஓம் நமோ நாராயணாய' மந்திரம். பெட்டகம் - பெட்டி. தனு - சிவ தனுசு என்னும் வில். மகவோ - மகவாய். *44.9.* மிதுலை - மிதிலை; ஜனகன் ஆண்ட விதேக நாட்டின் தலைநகர். *44.10.* வாதி - கதையின் சூத்திர தார். அரி - திருமால். தேசமானத்திலிருத்தி - அயோத்தி தேசத்தை மனதில் இருத்தி. *44.11.* பன்னி - பத்தினி; கௌசலை. நாலு சந்ததி - நான்கு பிள்ளைகள். *44.12.* இட்டமாய் - விருப்பமுடன். புவி - உலகம். வடவால் - வடபகுதி. இசைவாய் - பொருத்தமாய்.

To Siva, Lord of Pārvati, the righteous,
Acquired many boons; in the arrogance
Of his might, Rāvaṇa desired the Goddess
In the fiery fort, the spouse of Tirumāl,
And thereby sealing his fate!
Knowing his evil unholy desire, she
Cursed him thus: "You base sinner vile!
Surely you will fall! Your boons will
Come to nought. Your City
Will be destroyed. And too your life.
On my account, your entire grove
Will be ruined ending your greatness".
Thus the Goddess did curse him
And Rāvaṇa fearful left the place
For Laṅka, where he ruled
In all splendour.

GODDESS TIRUMAKAḶ IS BORN ON EARTH

Mahalakshmi appeared a baby - girl
In a casket along with a bow
With the mystic octad written upon it,
In a furrowed land of king Jaṉakaṉ
In Mitilai city.
While earlier, Tirumāl, the hero of our story
In Vaikuṇṭa with his Karuṭaṉ Mount
Willed to himself to be born
In the wombs of Tacarata's queens
Along with his Conch, his Discus
And his serpent - couch
As four sons to the king
And waited for the propitious hour for the same.

அயோதரைப் பட்டணத்துப் பஞ்சம்

இருந்தார்செகம் புரந்தார்தச ரதனார்புகழ் பெறவே
ஏத்தபாம்புனல் சரவைநதி யாற்றிலும் வடகிழக்காய்
அருந்த யோதரைப் பட்டணமுண் டதில்பன் னிருவருடம்
அறுத்தேமுகில் வெறுத்தேமழை பொறுத்தேவிலை சிறுத்தே
சிறுத்தே பஞ்சம் பிடித்தாற்குடி யிருப்பதென்று விரதன்
சிந்தை சீர்சொல்லும் மந்த ணர்ஒரு செப்பு முறைப்படியே 15

மறுத்தோர்சடு தியிலேதவ வடிவாய் வனம் புகுந்தான்
மாதவன் ரோமரிஷியைக் கண்டு மனத்தாபம துரைத்தான்
மனத்தாகமும் மழைத்தாகமும் ஒழிப்பான்வெகு செழிப்பாய்
வாட்டத்தீர்க் கலைக்கோட்டு மாமுனிவந்து பூமியில் மிதித்தால்

விரதன் உரை

நினைத்தோ யவன்வரப் பாரென நெடுமுச்சொடு விரதன்
ரிஷியோ கலைக்கோட்டு மாமுனி வசிகானக மறியேன்
அறியேன் நான்சிறியே விதற்காளோ எந்த நாளோ
ஆனாலுயிர் விடுவே னென்று போனார் பதிவிரதன்

விலை மடவார் இருவர் கூற்று

நெறிபூபதி மயமா தையல் ரெண்டு பேர்விலை மடவார்
நீலைநாடக சாலைப்பெண்களில் லேலை லெம்பையர் ரண்டுபேர் 20
ரண்டு மாதரும் முனியை நாங்கள் கொண்டு தான்வரு வோமென
நீங்கள் கேட்ட பொருளெலாந் தந்துரெக்ஷிப் பேனெனக் கர்ச்சித்தான்

முனியைப் பெண்கள் வசப்படுத்தல்

கண்டு சர்க்கரை சீனி நெய்படி தேனு டன்தினை மாவுமாய்
கரைபாகஞ் செய்திறைத்துகொப் பறையாயிரம் நிறைத்தார்

44.13. செகம் - உலகம். புரந்தார் - பாதுகாத்தார். பாம்புனல் - பாம்பு போலும் நெளிந்து ஓடும் ஆறு. சரவை - சரயு நதி; அயோத்தி நகரில் ஓடுவது. 44.14. அறுத்தே - மழை அற்றே. முகில் - மழை முகில். சிறுத்தே - சிறுமை அடைந்தே. 44.15. விரதன் - அயோதரை நாட்டு அந்தணன். 44.16. மாதவன் ரோமரிக்ஷி - பெரிய தவமுனியான ரோமரிஷி. 44.18. கானகம் - காடு. 44.20. பூபதி - அரசன். மயமாது - தேவலோக மகளிர். விலை மடவார் - விபசாரிகள். லேலை, லெம்பை - இரு மடவார்களின் பெயர்கள். 44.21. ரெக்ஷிப்பேன் - பாதுகாப்பேன். கர்ச்சித்தான் - ஒலி எழுப்பினான். 44.22. கண்டு - கற்கண்டு. கரைபாகஞ் செய்து - முறையாக இளக்கிச் சேர்த்து. கொப்பறை - ஒருவகை பாத்திரம்.

THE FAMINE IN AYŌTARAI CITY

To the north-east of the city of Tacarata
Ruler of the earth, and of the serpentine river Carayu,
In the town of Ayōtarai, a twelve - year drought
Raged with neither cloud nor rain to be seen.
Famine racked the land. A certain Brahmin
Viratan called went to the forest and met
A great sage by name Rōmariṣi and told him
About their woes. "If you were to bring
The stag- antlered sage, Risyasringa[68] the moment
He steps on your soil, you will be relieved
Of all your thirsts" But Viratan unaware
Of the location of the sage's wood
Was about to give up his life
When he was met by two hetaerae
Lēlai and Lempai, lovely women
Who lived for money who offered
To bring the great sage
And Viratan promised them whatever they
Wanted for this assignment.
Countless vessels were filled with common - millet flour
Well - mixed with jaggery and sugar and ghee and honey

68. Risyasringa - Son of Vipantaka, A Seer; The deer-horned Sage of great power.

நிறைமோ ரெனரண்டு தேர்சுவடித் தாரதில் வைத்தார்
நிசமாய்ப் பெண்கள் ஏறினார் வனவாசமே கண்டுதேறினார்
குறையாத் தவமுடிக்குங் கலைக்கோட்டு மாமுனி புசிக்கும்
குருவாய்விழும் சரகிற்றென கூட்டி னார்ரச மூட்டினார்
சோலைக் காட்டிலே ரதம்ஒழித்தார் மணங்க ளித்தார்
ஒருமா முனியிரு மாதரை யூடலாய் விளையாடினார்
காட்டினார் முகங்காட்டி னாரின்பம் காட்டினார் லீலைமூட்டினார்
கண்டுகொள் ளாமையாலே முனிபெண்கள் கைவச மானார்

அயோதரை நகருக்கு முனிவர் வருதல்

மானாருடன் றுடர்ந்தார் தேரில் மங்கைமா ரேற்றிநடந்தார்
வனவாசமிட் டெற்றி னான்முனி மடவார்களைப் பற்றினான்
தேனான ரோமபத னானவன் சென்றான்தளத் துடனே
சினத்தான் முனி யெரித்தான்விர தனைத்தான் பெண்கள் செறுத்தார்
செறுத்தார் கண்டுமழுப்பிப் பட்டசேனை யானதை யெழுப்பி
தேரிலே முனிவோரும யோதரை மாநகர் சேரும்

முனிவர் வருகையால் நாடு செழித்தல்

கறுத்தார்கடல் துளும்பிச் சினை கருமாமுகி லெழும்பிக்
கனமாரிகள் பொழியப் பல பலபேர்களும் விளைய
பலபேர்களும் விளைவாய்அக விலையான தும்மலிய
பன்னிரண்டு வருட மாயுள்ள பஞ்சமானதுந் தெளிய
விலைமாதரு மல்லால்பதி விரதன்மக டனையும்
வேள்வியே செய்து தாழ்வில்லா முனிபோகதா ரையிலிருந்தான்

44.23. தேர் - சிறுவண்டி. சுவடித்தார் - உருவாக்கினார். நிசமாய் - உண்மையாய். 44.24. தவமுடிக்கு - கலைக்கோட்டு முனிக்கு. புசிக்கும் - உண்ணுவார். சரக்கு - கொண்டு வந்த உணவு பொருட்கள். இற்றென - இதுவென. ரசமூட்டினார் - இன்பம் ஊட்டினார். 44.25. ரதம் ஒழித்தார் - தேரைத் தவிர்த்தார். களித்தார் - மகிழ்ச்சி அடைந்தார். இருமாதர் - லேலை, லெம்பை என்னும் மாதர்கள். 44.26. லீலை - காம இன்பம். 44.27. மானாருடன் - மான் போன்ற விழியாருடன்; இங்கு தேவ தாசியர். எற்றினான் - நீங்கினான். 44.28. ரோமபதன்- கலைக்கோட்டு மாமுனிவன். தளத்துடன் - கூட்டத்துடன். முனியெரித்தான் விரதனைத்தான் - தன் தவம் கலையக் காரணமாய் இருந்த அயோதரை நாட்டு மன்னனை எரித்தான் 44.29. செறுத்தார் - தடுத்தார். மழுப்பி - தான் எரித்த காரியத்தைப் பயனற்றதாக்கி. 44.30. கறுத்தார் - கறுத்த அலைகள். துளும்பி - மேலெழுந்து. பேர்கள் - பொருட்கள். 44.31. விளைவாய் - விளையவே. அகவிலை - கொள்ளும் அல்லது வாங்கும் விலை. மலிய - குறைய. 44.32. பதிவிரதன் - கலைக்கோட்டு மாமுனி. மகடனையும் வேள்வி - மகிழ்தலை ஏற்படுத்தும் யாகம். போகதாரை - இன்ப வரிசை.

And loading them into hand - carts
They went towards the wood
Where the stag - horned sage lived,
And fed him with goodies they had brought;
Leaving the chariots aside, they indulged
In amorous dalliance with the innocent,
Trusting sage, showing all their charms and wiles
And pleasured him!
And in ignorant innocence, the gentle sage
Became enamoured of them, a toy in their hands.

THE SAGE COMING TO AYŌTARAI CITY

With the dove-like damsels, he left the wood behind
Towards the city where he was received
By king Rōmapataṉ with his retinue.
The sage now becoming angry, burnt them all
With his glance, but the women interceded
And the sage relenting, revived them again
And all of them went into Ayōtarai city.

AYŌTARAI CITY BECOMING PROSPEROUS AT THE ADVENT THE SAGE

The dark waves rising high, formed gravid clouds
That poured heavy rains;
On the land, the crops all, flourished in the fields;
With rich yield, the prices came down
And the twelve-year drought was ended.
Besides the damsels from the wood
The sage married the daughter of the king
And lived in great connubial bliss.

வசிட்டர், விசுவாமித்திரர் இருவர் தசரதரிடம் கலைக்கோட்டுமுனி பற்றிக் கூறுதல்

இந்தமா யிதுசெய்திப் பிரனார்தர விஸ்வா மித்திரர்
ராசனார் குருவசிட்ட ரொடுபேசி னார்வந் தயோத்தியில்
வந்தமாதவருந் தசரத மன்னர் மன்னனைப் பார்த்துமே
வாட்டந்தீர் கலைக்கோட்டு மாமுனி வரப்பாரென வுரைத்தார்
சிந்தைமெய்த் துதசாதன் ரதசேனை யோடயோ தரைக்கே
செல்லரோம பதனன் வந்தெதிர் சென்றுமே கண்டழைத்தான்
அழைத்தவேந் தனிடத்திலே சொல்அயோத்தி வேந்தனி யும்புவான்
ஆடுமேலை யரம்பைக்கே மிகவாடை சொன்னம் வழங்கவே
தழைத்த யோத்தியில் வருவார்கள் முன்சந்ததி பலன்தருவார்
தாரணி யெங்குஞ் சிறப்பாய் மகரதோரணங் கட்டுமென்னவே.

கலைக்கோட்டு முனிவரை அனைவரும் காணுதல்

விருத்தம்

45. என்னவே தசர தேந்திரன் இருந்தநா டயோத்தி சேர்ந்து
பொன்னக ரெனவ யோத்தி புரியலங் காரஞ் செய்ய
கன்னிய ருபாயத் தாலே கலைக்கோட்டு முனிவர் தம்மை
நன்னகர் காண்போ மென்று ரதத்தொடு கொடுவந் தானே.

நடை

46. வந்துமுனி தன்னைக்கண்டு வசிட்டர் விஸ்வாமித்திரர்
மாதவ ரெல்லோருங் கண்டார்களே
அந்தமன்னன் தசரதன் அணிபொன் மலர்சொரிந்து
ஆசனங் கிஷ்ணாசனஞ் சிங்காசனம்
சிங்காசன மும்வைத்து சீர்பெரிய மாதவர்க்கு
செம்பொன் னால்மேடை பன்னகசாலை
அங்கவர்க் கன்பாயிருந்து அரசர் கறுகட்சதை
ஆசிர்வாதஞ் செய்தருள் புரிந்தார்

44.33. இந்தமாய் - இந்த விதமாய். பிரனார் - வசிட்டர். ராசனார் - தசரதனார். 44.35. அயோதரை - அயோதரை நாடு. ரோமபதனன் - அயோதரை நாட்டு மன்னன். 44.36. அரம்பை - லேலை, லெம்பை என்னும் மடவார். ஆடை, சொன்னம் - புத்தாடை, சொர்ணம். 44.37. சந்ததி - குழந்தைப்பேறு. தாரணி - உலகம். மகர தோரணம் - மகரமீன் வடிவில் அமைந்த அலங்காரத் தொங்கல்.45.1. வேதசரதேந்திரன் - வியாசர். 45.3. உபாயம் - உதவி. 46.1. மாதவர் - மாதவத்தோர். 46.2. கிஷ்ணாசனம் - கரிய மான் தோலால் ஆன ஆசனம். சிங்காசனம் - சிங்க முகத்தாலான ஆசனம். 46.3. பன்னக சாலை - இலை வேய்ந்த குடில்; முனிவர் தவ இருப்பிடம். 46.4. அட்சதை - மஞ்சள் தடவிய மங்கல அரிசி.

VACITTAR AND VISVĀMITTIRA SPEAKING TO TACARATA ABOUT RISYASRINGA

King Tacarata decided to invite the reputed sage
As instructed by his preceptors;
With his chariot and infantry, Tacarata
Went to Ayōtarai where king Rōmapataṉ
Rushed to welcome him. To him did
The king of Ayōtti speak his mind.
It was agreed that the reputed sage
Would come to Ayōtti with his wife
And the two women Lēlai and Lempai,
In order that Tacarata may get his
Progeny sure, by a sacrifice appropriate.

45. Ayōtti prepared to receive the royal sage,
With golden arches and shark - shaped hangings,
And flags and festoons. With the aid of the damsels
The people of Ayōtti were able to see
The stag - horned sage with miraculous powers
Brought from Ayōtarai in a royal car to Ayōtti.

46. Vaciṭṭar and Visvāmittira and other seers,
Saw the stag - horned sage received
By Tacarata with a shower of golden flowers.
Seated in a royal lion - throne
Spread over with holy black - buck skin,
All great honours were done to the guest;
The hermitage of the visitor had a golden dais
To seat the sage; from where
Risyasringa did bestow his blessings
On the king, strewing saffron - rice on him.

கலைக்கோட்டு முனியின் ஆசியுரை

அருள்புரிந்தே யுரைப்பார் ஆனகலைக் கோட்டுமுனி
அரசனே நீபாக்கிய சாலி
குருவாயிருந் தாருங்கள் குலத்துக்கெல் லாம்வசிட்டர்
குறையென்ன நீயதிர்ஷ்ட சாலி

தசரதர் புத்திரயாகம் செய்தல்

குறையென்ன மாதவரே கோவாகில் பூவுலகில்
குமாரர்களுண் டாகில்நல மென்றார்
திறைகொண்ட புத்திரயாகம் செய்விக்க மகவுண்டாகும்
சிந்தைவைத் தாக்குவ தென்றானே
அதற்கான சங்கைமெய்க்க அமைச்சர் வருத்திவைக்க
யாகசாலை மாகமுட்டச் செய்தார்
சதக்கிரி தேவர்மெய்க்கத் தத்திதத்தி நவரெத்தினம்
தங்கரேக்குத் தகடு சேர்த்தார்
தங்கரேக்க முத்திமுத்து தண்டரள மாலைதூக்கி
தரணிமதிக்க மகர தோரணம்
சிங்காரித்துச் சுவடித்து தேனினிக்கும் கமுகுவாழை
திக்கெட்டிலு முக்கனி நிறைத்தார்
முக்கனிகளும் நிறைத்து முல்லைபிச்சி செண்பகப்பூ
முலயாகச் சாலை விதானித்தார்
எக்கியசாலை ஓமகுண்டம் எட்டெழுத்து மாறெழுத்தும்
ஈசுரன் பஞ்சாக்ஷரத்தை வொட்டியே
ஒட்டிலே சமிதை யொடுஓமத் திரவியங்களும்
ஒன்பது கிரகங்களு முச்சமாய்

46.7. கோ - அரசர். குமாரர் - மக்கள். 46.8. திறைகொண்ட - திறம் படைத்த. சிந்தை - அறிவு. ஆக்குவது - படைப்பது. 46.9. சங்கை - எண்ணம். மெய்க்க - பெரியதாக. மாகமுட்ட - மேல் வானம் தொட. 46.10. சதக்கிரி - பத்து மலைகள். தங்க ரேக்கு - தங்கமுலாம். 46.11. தரள மாலை - முத்து மாலை. 46.12. சுவடித்து - ஒப்பனை செய்து. திக்கெட்டிலும் - திசைஎட்டிலும் முக்கனி - மா, பலா, வாழை என்னும் முக்கனிகள். 46.13. முல்லை பிச்சி செண்பகப்பூ - பூ வகைகள். மூல யாக சாலை - யாக சாலையின் உட்புறம். விதானித்தார் - மேல் தூவினார். 46.14. எக்கிய சாலை - யாக சாலை. எட்டெழுத்து - 'ஓம் நமோ நாராயணாய' என்னும் மந்திரம். ஆறெழுத்து - 'சரவணபவ' மந்திரம். பஞ்சாக்ஷரம்-'நமசிவாய' மந்திரம். 46.15. சமிதை -யாகத்திற்குரிய ஆல், அரசு, அத்தி, இத்தி, மா, பலா, வன்னி, நாயுருவி, கருங்காலி' என்பவற்றின் சுள்ளி கொண்ட பொருட்கூட்டம். ஓமம் - வேள்வித்தீயில் பெய்யப்படும் நெய் முதலியன. ஒன்பதுகிரகங்கள் - ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, ராகு, கேது என்னும் நவக்கிரகங்கள். உச்சமாய்-தலை சிறந்த நிலையினதாய்.

With grace abounding, he said to Tacarata:
"O king! you are fortunate that you have
The great Vacittar as your family preceptor,
Your desire will be fulfilled. Fortunate you will be"
To which Tacarata replied: "Great sage!
I yearn for off - spring, to complete my joy".
"If you perform properly a yagna for progeny
Surely you will get children. Think well,
What action you should take in this regard".
At once at the king's command
The Ministers all swung into action and built,
A sacrificial pavilion high as the sky,
Covered over with gold - plating bright
And with [69]nine kinds of gems inlaid,
So that the very Gods upon the ten Mountains
Did approve! Coral and pearl chaplets cool,
Hung from the roof, with shark - shaped
Hangings decked and beautified;
The pillars all were bright with
Melliferous fruits - jack, plantain and mango;
Plantain and Arecanut trees were seen everywhere
Adding to the colour, fragrance and beauty
With jasmine and champak[70] flowers strewed
All over the inner court of the Yagna-sala.
The sacrificial pits were marked
With the mystic syllables, the octad,
The sestet, and the pentad of Lord Isvara!
Piles of sacred twigs of peepul tree,
Along with various ingredients for the sacrifice
Were heaped up in abundant piles,
With most of planets in exalted positions.

69. Nine kinds of gems - Nine gems (Diamond, Ruby, Sapphire, Emerald, Coral, Pearl, Sardonyx, Lapis Lazuli, Topaz).

70. Champak flower - Cenpakam flower.

யாகசாலை பெருமை

கட்டிவைத்த யாகசாலை காண்பவர்க்குக் கோடிலக்ஷம்
கண்ணயன் படைத்திலானீ துண்மையே
உண்மையெக்கிய குண்டம்முழ மோராயிரம் நீளம்
ஓமத்தி லாமைப்பலகை மேலே

கலைக்கோட்டு முனி புத்திரகாமேஷ்டியாகம் வளர்த்தல்

வண்மையா யிருந்துகொண்டு வாய்த்தகலைக் கோட்டுமுனி
வாழ்வுபுத்திர வேள்வி வளர்த்தாரே
வளர்த்த குருவசிட்டர் மாதவர் புரோகிதரும்
மகாகணபதியை கன்னியில் மானித்து
தளர்த்தி லெட்டெட்டு திக்கும் சதுர கோடிகும்பம் வைத்து
தாரணியூரன் கும்பம் பூரித்தார்
பூரிக்க மேளவாத்தியம்[28] போதயிடிபோல் முழங்க
பொன்னுலகோர் பூதலர் புரந்தரர்

கிண்ணத்தில் பிண்டம் வருதல்

பாரிக்கும் யாகத்திலோர் பாரிடந்தங்கக் கிண்ணத்தில்
பண்டரன் கற்பனைப்படி பிண்டந்தான்
பிண்டமொன்று வந்தெழும்ப பெருமையு லகறிய
பெருந்தவன் கலைக்கோட்டு மாமுனி
அண்டர்புகழ் பிண்டமது அறிதுயி லரவணை
ஆழியங் கன்றூழி யறிந்தானே.

46.16. அயன் - பிரம்மன். ஏது - இது. *46.17.* எக்கிய குண்டம் - யாக குண்டம். ஆமைப் பலகை - ஆமை ஓட்டாலான பலகை. *46.18.* வண்மையாய் - அழகாய். *46.19.* கன்னியில் - கிழக்கு மூலையில். மானித்து - ஸ்தாபித்து. *46.20.* எட்டு திக்கும்-எட்டு திசையும். சதுரகோடி- நாலு கோடி. தாரணியூரன் - கலைக்கோட்டு முனி. *46.21.* போதயிடி போல - யானைகள் முழங்கினாற் போல. பொன்னுலகோர் - தேவர். பூதலர் - பூமியிலுள்ளோர்; மனிதர். புரந்தரர் - இந்திரர். *46.22.* பாரிக்கும் - வளர்க்கும். பாரிட - உலகிடத்தில். பண்டரன் கற்பனைப்படி - முன்பு சிவன் நினைத்த படி. பிண்டந்தான் - கருப்பம் உண்டாக்கும் உருண்டைதான். *46.23.* பெருந்தவன் - பெரிய தவத்தை டையோன். அறிதுயில் அரவணை ஆழியங் கன்றூழி - ஞானத்துயிலை ஆதிசேடன் பாம்பு மீது கொள்கின்ற உலகத்தைக் காக்கின்ற திருமால்.

---

28. வாச்சியம்

True, it is that the Creator had not given
A million eyes for all to see the splendour
Of the Yākacālai; truly, the sacrificial pits
Were a thousand cubits long.

THE STAG HORNED SAGE SUPERVISING THE SACRIFICES FOR PROGENY

Seated upon a plank made of tortoise shell
Risyasringa in perfect order as ordained,
Began the Vedic sacrifice for giving
Tacarata the child he desired;
The preceptor Vacittar and the prohits established
In the eastern corner Lord Gaṇapathi'
While in the eight directions
Four crores of holy pots were placed;
The presiding sage proudly announced the mantras
In a stentorian voice like a tusker trumpeting!
The celestials in heaven and the denizens of the earth,
Watched the sacrifice as it progressed.
In a golden bowl as willed by Lord Tirumāl earlier
Appeared a ball of matter embryonic,
Which the great sage knew to be the advent
Of the Lord recumbent on the serpent-bed
In the ocean of milk in conscious slumber.

தசரதன் மனைவியர் மூவரும் வருதல்

விருத்தம்

47. அறிந்து முனிமன்னவனை யழைக்க வேந்தன்
அமைச்சரொடுந் தேவிமார் மூவரோடும்
செறிந்த தளம்படை சேரும்சரவை யாற்றில்
சென்றுபுன லாடிவெகு சிறப்பதாக
முறிந்த பெலஅரக்கரு பத்திரத்தைத் தீர்க்க
முகில்வானர் பிறப்பதற்க்கு முகூர்த்தம் வாய்ப்ப
பிறிந்த திசைதிசை தோறும் தானதர்மம்
பெய்திட யாகத்தினி வந்தெய்தினாரே.

பிண்டத்தை மனைவியர் அருந்துதல்

சிந்து

48. யாகத்தில் தங்கக் கிண்ணத்தில் காயாம்பூ நீலமாம் வர்ணத்தில்
ஆதியா யொருபிண்டம் பரஞ்சோதியாய் வருவதைத்தான்
பாகத்தில் முனிவோரும் செகம்பதியாண்ட யிந்திரனும்
பாரில் வேந்தரும் புகழ சிவன் பார்வதி - மனம்மகிழ

[29]மகிழ்ந்த தசரதனும் தேவிமார் மூவருமாகவே
வசிட்டர் விஸ்வாமித்திரர் கலைவகனன் முனிமாதவர்
புகழும் முனிவோரைச் சுற்றிப் போற்றினர் - தொழுதேத்தினார்
பொன்போல் தங்க கிண்ணத்தில் வரும் பிண்டமே நாலுபங்காய்

கௌசலையிடம் திருமால் அவதரித்தல்

பங்காதி லொன்றைத் தசரதன்பால் [30]முனிவழுங்க
பாரிகௌசலை கையிலுடன் வாரிமன்னவன் கொடுத்தான்
மங்கையாளுடன் விழுங்கத்திரு வயற்றில் அவதரித்தே
வாசமாம் புனர்பூசம் கற்கடகந்தனில் திருமால்

47.1. முனி - கலைக் கோட்டு மாமுனி. தேவிமார் மூவர் - கௌசலை, கைகேயி, சுமித்திரை என்னும் மூவர். 47.2. தளம்படை பூவிதழ்கள் நெருங்கிய கல்லணை, 47.3. முறிந்த - வலிமையான. முகி ல் ானர் - முகில்வர்ண நிறத்தவர்; திருமால். முகூர்த்தம் - நேரம். 47.4. பிறிந்த - பிரிந்த. 48.1. காயாம் பூ நீலம் - நீல நிறம் வாய்ந்த காயாம் பூ; திருமால் மேனி நிறத்தை ஒத்தது. ஆதியாய் - முதலாவதாய். பரஞ்சோதி - எங்கும் பரந்த கடவுள்; திருமால். 48.2. செகம்பதி - தேவருலகம். 48.3. கலைவகனன் - கலைக்கோட்டுமுனி. 48.5. பாரி - மனைவி. 48.6. புனர்பூசம் - 27 நட்சத்திரங்களில் 7-வது நட்சத்திரம். கற்கடகம் - 12 ராசிகளில் நான்காவது ராசி.

---

29. மகிழுந்த 30. வளங்க

THE COMING OF THE QUEENS

Recognising the miraculous emergence of the bowl
For what it really was,
The sage called the king to his side
And instructed him accordingly.
The king and his three queens went to the holy Carayu,
Where they bathed and returned to wait
For the propitious time, for the birth of the cloud - hued One
To relieve the world of the misery of the demons.
Giving away charities and gifts endless in all directions
They came back to the hall of sacrifice.

THE QUEENS CONSUMING THE CONTENTS OF THE BOWL

48. To the great joy of Intira, ruler of the heavens
The kings of the earth, the holy sages
And God Siva and Pārvati as well,
Saw the golden bowl emerging from the sacrificial pit.
With the colour of Kāyā[71] flower dark
It was the primal flame that emerged therein;
The king and his queens offered obeisances,
To sage Vaciṭṭar, Visvāmittira and Risyasringa and others.

THE DISTRIBUTION OF THE CONTENTS AMONG THE THREE QUEENS

A part of it, the sage gave to Tacarata,
The which he presented to his chief queen Kaucalai.
After she consumed it,
In her womb was born in the sign of Cancer,
With *Puṉarpūcam*[72] as the ruling star,
Lord Tirumāl, the saviour of the earth;

71. Kāyā - A dark flower (Bilberry)
72. *Puṉarpūcam* - One of the Gemini Twins; The Star, Castor.

திருமாலொரு நெடுமால் வினைதீர்த்த மாலானை - காத்தமால்
செய்கேசவன் நாரணன் நரசிங்கமால் மதுசூதனன்
பெருமான் பத்மநாபன் ஆதிபிரமன் றந்தை - முகுந்தன்
பேர்வைகுந்த பூமன்வந்து பிறந்தா ரரிராமன்
அரிராகவன் பச்சைமால் திருவ வதாரஞ்செய் தருள
அதன்மேல் ஒருபிண்டம் முனியரசன் கரத்தளித்தான்

கைகேசியிடம் பரதன் பிறத்தல்

பரிவாக கைகேசி யுண்ணப் பரதன் - பூசநாளில்
பயின்றாள் முனிபின்னோர் பிண்டம் பகிர்ந்தான் நிறைகரத்தில்

சுமத்திரைக்கு இலட்சுமணன், சத்துருக்கனன் பிறத்தல்

கிரகத்தில் வரும்பிண்டத்தைச் சிறுகாதலி சுமத்தி - ரைக்கே
கருதியவள் உண்ண நாளது கவ்வைகற்கடகத்தினில்
வரத்தி லக்ஷ்மணன் தானுடன் வந்து - பிறந்தானே
மற்றுமொரு பிண்டம் முனிமன்னவன் கையில்கொடுக்க

கொடுக்கத் தசரதனார் பின்னும் கொடுத்தார் - சுமத்திரைக்கே
குறிப்பாய் உண்ண மகனாள் சத்துருக்கன் பிறந்தானே
அடுக்காய் மைந்தர் நால்வரும் வந்தறந் - தாங்கவே பிறந்தார்
அண்டர் மாதவர் முனிவர் வைகுண்டராமனை வாழ்த்தினார்.

இராமனை மக்கள் வாழ்த்துதல்

வேறு

49. நாரண ராமன் வந்தான் நரசிங்க ரூபன் வந்தான்
பூரண திருமால் வந்தான் புரந்தர கோமான் வந்தான்
காரண பெருமான் வந்தான் கௌசலை குமாரன் வந்தான்
ஆரணன் வந்தான் என்று ஆர்த்தது முழவைச் சங்கம்.

48.7,8. நெடுமால், வினை தீர்த்த மால், காத்த மால், கேசவன், நாரணன், நரசிங்கம், மதுசூதனன், பெருமான், பத்மநாபன், ஆதிபிரமன் தந்தை, முகுந்தன், வைகுந்தன், பூமன்- திருமாலின் பல்வேறு நாமங்கள். 48.10.பூசம் - 27 நட்சத்திரங்களில் எட்டாவது நட்சத்திரம். 48.11. கவ்வை - ஒலி. 48.14. அறம் - தர்மம். வைகுண்ட ராமன் - வைகுண்டத்தில் உறைந்து பூவுலகத்தில் இராமனாக அவதரித்தவர். 49.1 நாரண ராமன் - நாராயணனாகிய ராமன். நரசிங்க ரூபன் - முன்பு நரசிங்க வடிவமெடுத்து அவதரித்த ராமன். 49.2. புரந்தர கோமான்- மக்களைப் பாதுகாக்கும் பெருந்தலைவன். 49.3. காரண பெருமான் - உலக நிகழ்வுகளுக்குக் காரணமான பெருமான்; திருமால். 49.4. ஆரணன் - திருமால். ஆர்த்தது - ஒலித்தது. முழவைச் சங்கம் - முழவு என்னும் பறையும் சங்கும்.

The protector Kēcava, Matucūtaṉa, Patmanāpa,
The father of Brahma - the Ancient of the Days, Mukunta,
The Lord of Vaikuṇṭa himself was born
As Hari Rama.

THE BIRTH OF PARATA

Another piece from the bowl the king received
From the sage, the which Kaikēyi consuming,
On a certain day of the asterism of *Pūcam*[73]
Parata was born.

THE BIRTH OF LAKSHMAṆA AND CATTURUKKAṈA

Another piece was given to Cumittirai,
And after she had consumed it,
In the sign of Cancer was born Lakshmaṇa.
The remaining piece, the sage giving to the king,
He bestowed it again upon his youngest queen
And in time Catturukkaṉa was born.
Thus one after another four sons were born to the emperor.
To foster the earth and protect the just!
The celestials and the sages prayed to Vaikuṇṭarāma.

THE PEOPLE ADORING RAMA

49. "Rama has come, who is Nārāyaṇa, Naraciṅka,
The incarnation of Tirumāl, the Perfect
Who is the protector of the world;
Who is the primal cause, the source of the Vedas,
He is born as the son of Kaucalai", and conches resounded drums

73. *Pūcam* - -do- The Pollex

சங்குசக் கரத்தான் வந்தான் தாமோத ராதி வந்தான்
வெங்கட ராமன் திக்கு விசயகோ விந்தன் வந்தான்
செங்கண்மால் முகுந்தன் வந்தான் தசரத குமாரன் வந்தான்
எங்குமாய் நிறைந்தான் வந்தான் என்றது நாத கீதம்

பல்வேறு மங்கலவோசை ஒலித்தல்

நாத கீதத்தின் ஓசை ராமகீர்த் தனத்தி னோசை
வேதவே தத்தின் ஓசை வேந்தர்தே ருருட்டும் ஓசை
கோதையர் குரவை யோசை கொட்டுவாத் தியத்தின் ஓசை
ஈதெல்லாம் தொனித்த யோத்தி எழுகடல் முழக்க மாமே.

தசரதன் மகிழ்ச்சி

சிந்து
50. *முழக்க மிப்படி சிறக்கவே முகில்வண்ணன் வந்து பிறக்கவே*
மூவருக்கும் முப்பத்து முக்கோடி தேவருக்குமே சோபனம்
தழைக்கும் பரதனொடு லக்குவன் தன்பின் சத்துருக்கன் பிறக்கவே
சங்கரருக்கு மைங்கர ருக்கும் சண்முக ருக்கும் சோபனம்
விளையாடும் பாலகர்கள் நால்வரைக் கண்டு உளமகிழ் தசரதர்
உலக மெங்குமே நலமதாக உமைய வட்க்கும் சோபனம்

மக்கள் தான தர்மங்கள் செய்தல்

பழக்குலையொடு மஞ்சள் சிதறுவார் பன்னீர் சந்தனம் விசறுவார்
பாக்கு வெற்றிலை விளம்புவார்அது பூக்கள் மஞ்சணை வழங்குவார்
வளங்க ளானதோர் பட்டணம் மறுதெ ருவதிலே கொட்டகையாம்
மாடமாளிகை கூடகோபுரம் மேடைதோறும் விதானிப்பார்

49.5. சங்கு சக்கரத்தான் - சங்கு சக்கரத்தைக் கைகளில் கொண்டவன்; திருமால். தாமோத ராதி - திருமால். 49.6. வெங்கடராமன் - திருமால். திக்கு விசய கோவிந்தன் - திசைகள் தோறும் வெற்றி நாட்டும் கோவிந்தன்; திருமால். 47.7. செங்கண்மால் - சிவந்த கண்களையுடைய திருமால். முகுந்தன் - திருமால். 49.8. நாத கீதம் - இனிய ஓசை. 49.9. ராம கீர்த்தனம் - ராமனைப் பாடும் இனிய பாடல்கள். 49.11. குரவை - மகளிர் மங்கல நிமித்தம் வாயில் நாவைக்குழறி உருவாக்கும் ஓசை. 50.1. மூவருக்கும் - சிவன், விஷ்ணு; பிரம்மன் என்னும் மூவருக்கும். சோபனம் - வாழ்த்து. 50.2. சங்கரருக்கும் - சிவனுக்கும். ஐங்கரருக்கும் - ஐந்து கரத்தை உடையவருக்கும்; விநாயகருக்கும். சண்முகன் - முருகன். 50.3. உமையவள் - பார்வதி. 50.4. விசறுவார் - தெளிப்பார். 50.5. கொட்டகை - பந்தல். விதானிப்பார் - அழகுபடுத்துவார்.

The musical instruments spoke,
"He with the Conch and Discus has come,
Tāmōtara has come; Kōtaṇṭarāma,
Kōvinta, the all - conquering has come,
The red - eyed Mukuntaṉ has come,
And he who is all - pervading has come,
As the son of Tacarata".

AUSPICIOUS SOUNDS

Celebrating the births were heard the sounds
Of music melodious, and the chant of Rama's name;
The sound of Vedas chanted;
The sound of royal chariots rushing in joy;
The chorus of women rejoicing at the birth;
The sound of drums and tabors;
With all these various sounds, the city
Was resounding like the fremescent seas seven.

THE JOY OF TACARATA

50. Auspicious praise be at the birth of the nimbus - hued!
To the Gods thirty three crores, auspicious praise be!
To Lord Saṅkara and the five - handed Gaṇapathi and Shanmugha,
For the birth of parata and Lakshmaṇa
And Catturukkaṉa after him: auspicious praise be!
To Goddess Uma, praise be! that the world may prosper,
To Tacarata, praise be! as he rejoices
At the sight of frolicking children four.

THE PEOPLE THEMSELVES GIVING GIFTS AWAY

All the people of Ayōtti in happy celebrations
Sprinkled rose-water and sandal - paste
And strewed turmeric and bunches of fruit everywhere!
Betel and betelnut they gave, besides flowers and turmeric.
All along the streets of the city they erected pavilions
The storeyed mansions and palaces they decked beauteously:

களஞ்சி யங்களைத் திறந்துமே கனகமாணிக்க மளந்தெ டுத்தனர்
காவணங்களில் நிறைபாரம் காவலர் கையா லிறைப்பாராம்
தளங்களோடு ரதங்கள் ஏறி [31]சரயு நதியில்
தீர்த்தமாடி தாபதர்கொற் றவர்அமைச்சர் சூழ்பூமி புத்திரர்
முகங்கண்டார்

அளந்தெடுத்த கனக ரத்தினம் யாசகர் கவிரா சர்க்கே
அன்ன தானமும் சொன்ன தானமும் அந்தணர்க்குக் கொடுப்பாரவர்

குழந்தைகளுக்கான தொட்டிலலங்காரம்

அந்தணர் பூரண கும்பம் அடுக்கி யடுக்கிச் செபிப்பராம்
அஞ்செழு தாரெழுத் தெட்டுடன் அறியுங் காயத்தி ரியுடன்
மந்திர மெல்லா முருவேற மைந்தர் செல்வமும் நிறைவேற
வைகுந்த ராமன் றனையுடன் வாழ்த்தித் தேவர்ப் பூசொரியவே

சந்திர காந்தத் தொட்டிலாம் தகடு தங்க ரெட்டினமாம்
சாதிவிசுவன் சமைத்த தொட்டில் மேதினி விலை பிடிக்குமே
கந்த சந்தன மெழுகியே களப கஸ்தூரி யெழுதியே
கணபதி கந்தனை வாழ்த்தியே காதலரைத் தொட்டி லேற்றியே.

இராமனைத் தாலாட்டுதல்

விருத்தம்

51. *ஏற்றரிய ஸ்ரீராமன் தொட்டிலேற இளையதம்பி பரதாள்வான்*
தொட்டிலேற
சாற்றரிய லட்சுமணர் தொட்டிலேற சத்துருக்கன் சித்திரஞ்சேர்
தொட்டிலேற

50.6. களஞ்சியம் - பொருள் வைப்பறை. கனக(ம்) - பொன். மாணிக்கம் - நவரத்தினங்களுள் ஒன்று. காவணம் - பந்தல். நிறைபாரம் - அதிக சுமை. இறைப்பாராம் - வீசுவாராம். 50.7. தளங்கள் - கூட்டம். ரதம் - தேர். சரயு - அயோத்தியில் ஓடும் நதி. தாபதர் - முனிவர். கொற்றவர் - அரசர். 50.8. ரத்தினம் - மணி. யாசகர் - பிச்சை எடுப்போர். கவிராசர் - கவி பாடும் வல்லமையுடையோர். சொன்ன தானம் - சொர்ண தானம்; தங்கத் தானம். 50.9. காயத்திரி - காயத்திரி மந்திரம். உருவேற - செபித்துக் கொண்டிருக்க. 50.11. சந்திர காந்தத் தொட்டில் - சந்திர காந்தக் கல்லால் ஆக்கப்பட்ட தொட்டில்; இது குளிர்ச்சியானது. சாதிவிசுவன் - விஸ்வ கர்மா. மேதினி விலை - உலகத்தையே வாங்குமளவு விலை. 50.12. கந்த சந்தனம் - மணம் பொருந்திய சந்தனம். களப கஸ்தூரி - கஸ்தூரி மானிலிருந்து கிடைக்கும் புனுகால் கிடைக்கும் கலவைச் சாந்து. காதலரை - குழந்தைகளை. 51.1. ஏற்றரிய - ஏற்றமிகுந்த. 51.2. சாற்றரிய - சொல்வதற்கரிய. சித்திரஞ்சேர் - அழகு சேர்ந்த.

---

31. சரவை

Opening sumptuaries and treasuries they gave away
Gold and rubies, measure after measure!
In the pandals, bags were opened and scattered
In chariots, did the throngs of citizens come
To bathe in the Carayu and returned,
For darshan of the sages and the kings and ministers.
Gold and rubies were given away to solicitors and bards,
While Brahmins were given gifts of gold and cooked food.

THE DECORATION OF THE CRADLES FOR THE CHILDREN

The learned Brahmins chanted for the children's good,
With holy vessels arranged in rows.
The gods showered flowers,
So that in time the children may prosper;
Holy men chanted the mystic syllables, the pentad,
The sestet and octad along with Gayathri mantra.
The crib was made of moonstone cool
And plated with shining gold by Visvakarma himself!
Odorous sandal paste and fragrant musk were daubed on them,
After due prayer to Gaṇapathi and Kantaṉ,
The darling children were placed in the cots.

51. As Shrirāma got into the cradle, and Parata in another
And Lakshmaṇa in the third and Catturukkaṉa in the fourth

காத்ததச ரதன்மனது களிகூர்ந்தான் கவுசலைகை கேசிசுமித் திரைகொண்டாட
தோற்றமுயர் பாற்கடலில் பள்ளிகொண்ட சுந்தரத்தைத் தோகையர்தா லாட்டினாரே.

தாலாட்டு

52\. நாரணனோ காரணனோ நான்முகனைத் தந்தவனோ
பூரணனோ மாயப் பொருளோ வருட்கடலோ
ஆரண சராசரமாம் அண்டபகிரண்ட மெல்லாம்
தாரணி ரெக்ஷிக்கவந்த தற்பரனோ - பிள்ளாய் நீ

தற்பரனார் மைத்துனனோ சங்கரி சகோதரனோ
கற்பக விநாயகற்கும் கந்தனுக்கும் மாதுலனோ
விற்பனஞ் சேர்மாவலியை வென்றே சிறையில்வைத்த
பத்மநாபன் நானோ பாரளந்த மாயவனோ

மாயா யிரணியனை வதைத்தநர சிங்கமென்ற
காயாம் பூமேனி கடவுளே கண்வளரீர்
வாயாற் றசரதர்க்கே மதலைமொழி கூறவந்த
சேயாதி மூலத்திரு மாலே கண்வளரீர்

மாலாதி கேசவனோ மதுசூதனப் பொருளோ
மேலான பச்சைநிற மேனியனே கண்வளரீர்
ஆலா லிலையில் அமர்ந்துதிருப் பாற்கடலில்
கோலமாய்ப் பள்ளிகொண்ட கோவிந்தா கண்வளரீர்.

51.3. களி கூர்ந்தான் - மகிழ்வு அடைந்தான். சுந்தரத்தை - அழகான குழந்தையை. 52.1. நாரணன் - நாராயணன்; திருமால், காரணன் - திருமால். நான்முகனைத் தந்தவன் - நான்முகனான பிரம்மன் தந்தை;திருமால். 52.2. பூரணன் - முழுமையானவன்; திருமால். மாயப்பொருள் - ஆணவம், கன்மம், மாயைக்கு உட்பட்டவர்கள் அறிய முடியாத மாயப் பொருளாம் திருமால். 52.3. ஆரணம் - வேதம். சராசரமாம் - இயங்கும் மற்றும் இயங்கா பொருள்கள். 52.4. தாரணி - உலகம். தற்பரனோ - திருமாலோ! 52.5. தற்பரனார் மைத்துனன்- சிவன் மைத்துனன்; திருமால். சங்கரி - உமையவள். 52.6. மாதுலன் - மாமன். 52.7. விற்பனம் - விந்தை. மாவலி - ஓர் அரசன். 52.8. பத்மநாபன் - திருமால். பாரளந்த மாயவன் - மூன்றடிகளில் இவ்வுலகளந்த மாயவனாம் திருமால். 52.9. மாயா யிரணியன் - மாயச் செயல்களைச் செய்யும் இரணிய அரக்கன். நரசிங்கம் இரணியனை அழிக்கத் திருமால் எடுத்த வடிவம். 52.12. சேய் - குழந்தை. மூலத்திருமாலே - எல்லாவுமாகத் திகழும் திருமாலே. 52.13. ஆதி கேசவன் - திருமால். மதுசூதனப் பெருமாள் - திருமால். 52.14. பச்சைநிற மேனியன் - பச்சை நிற உடம்புடையவன்; திருமால். 52.15. ஆலாலிலையில் அமர்ந்து - பிரளய காலத்தில் ஆல் இலையில் அமர்ந்து இருந்த திருமால்.

Well - adorned with carvings, the heart of Tacarata
Overflowed with joy, as Kaucalai, Kaikēyi and Cumittirai
Rejoiced, while the maids singing lullabies,
Swung the cot where the Lord lay slumbering.

LULLABY

52. Sleep, darling child!
Are you Nārāyaṇa himself? Are you the primal cause?
Are you he who gave us the four - faced one?
Are the Supreme one perfect beyond comprehension?
Are you the fountain of grace?
Are you the Vedic base, the support of the earth,
Born to foster the universe? Oh, darling boy?
Are you Lord Tirumāl, Siva's brother - in - law?
Are you the brother of Goddess Saṅkari?
Are you the uncle of Kaṟpaka Vināyaka and Kanta?
Are you Patmanāpa who put in prison
Mighty Makāpali of endless guile?
Are you the mystic one who measured
The earth with a single step?
O God with complexion of the Kāyā flower,
Who as Naraciṅka slew the terrible Hiraṇiyaṉ,
Sleep my darling child!
O you who are the Primal Tirumāl,
Born to speak in lisping prattle to Tacarata,
Sleep my darling; go to sleep;
Are you Ātikēcava or Matucūtaṉa with emerald hue?
Sleep, my child, go to sleep!
O Kōvinta in conscious sleep in the ocean of milk upon the banyan leaf
Sleep, my darling, go to sleep.

குழந்தைகளுக்கு ஆபரணம் சூட்டுதல்

நடை

53. வளரும் மைந்தர் நால்வரையும் மங்கையர் தாலாட் டியபின்
முளரி கொண்டு நாட்டுதவ முனிவன்தவ சாலை புக்கி
துளபமணி மார்ப னுக்கும் கொடுத்ததம்பி மூவ ருக்கும்
அழகான பூஷ ணங்கள் அருமை யுடன் பூட்டினரே

பூட்டியதோர் தங்கநகை பொருந்துசுட்டி குண்டலமுந்
நீட்டியகைக் காப்பணிந்து நிழலாடக் கண்ணாடி
ஆட்டிய காறைகெவுடு அரைஞாண் கிணியொலிக்க
தாட்டியவான் திருப்பதத்தில் சதங்கைதண்டை சிலம்பணிந்தார்

குழந்தைகளின் ஆறுமாத வளர்ச்சி

சதங்கை தண்டை தான ணிந்து தாமோ தரனார்க்கு
இதம்பெற ஆறா மாதம் யிருந்துவிளை யாடினர்காண்
சிதம்பர சுந்தர ரருளால் சிரித்துவிளை யாடினர்காண்
விதம்பெறமுன் னேதவழ்ந்து விளங்கிவிளை யாடினர்காண்

குழந்தைகளின் ஓராண்டு வளர்ச்சி

விளங்கிய செங்கீரை கண்டு விளையாடித் தாலேலம்
முழங்கிய சப்பாணி கொட்டி முத்தமிட்டு விளையாடி
களங்க மில்லாத அம்புலியைக் கண்டாடி கொண்டாடி
உளங்குளிரப் புதல்வருக்கு ஓராண்டு நிறைந்ததுவே

53.2. முளரி - ஓமத்தில் போடும் விறகுத் துண்டுகள். 53.3. துளபமணி மார்பன் - துளசிமணி மாலை அணிந்த மார்பன். தம்பி மூவர் - இலட்சுமணர், பரதன், சத்துருக்கனன் என்னும் மூவர். 53.4. பூஷணம் - நகை. 53.5. சுட்டி - நெற்றிச் சுட்டி என்னும் ஆபரணம். குண்டலம் ஒரு வகை காதணி. 53.6. காப்பு - கையில் அணியும் அணி வகை. நிழலாட - ஒளி வீச. 53.7. காறை - கழுத்தணிகளி லொன்று. கெவுடு - கழுத்தணிகளிலொன்று. அரைஞாண் - இடுப்பில் அணியும் நகை வகை. 53.8. தாட்டியவான் - திருமால். திருப்பதம் - திருப்பாதம். சதங்கை, தண்டை, சிலம்பு - காலணி வகைகள். 53.9. தாமோதரன் - திருமால். 53.11. சிதம்பர சுந்தரர் - சிதம்பரம் என்கிற தலத்திலுள்ள அழகர்; சிவன். 53.12. விதம் - சாயல். 53.13. செங்கீரை - குழந்தைப் பருவத்துள் ஒன்று; அது குழந்தை ஊர்ந்து தலை நிமிர்ந்து பார்க்கும் பருவம். 53.14. முழங்கிய - ஒலிக்கின்ற. சப்பாணி - குழந்தை இரு கைகள் கொண்டு தட்டி விளையாடும் பருவம். 53.15. களங்கமில்லா - குற்றமில்லா. அம்புலி - சந்திரன்.

THE CHILDREN BEING ADORNED WITH ORNAMENTS

53. The four children grew up fast
Fed by their maids and put to sleep
By melodious lullabies somniferous;
The basil - garlanded lord and his three brothers
Were adorned with golden ornaments of various kinds;
Forehead - jewels, ear - pendants, bracelets, besides
Collars and chaplets and carcanets of gold;
Girdles with tinkling bells shone upon their wrists,
While sounding anklets adorned our Lord's tiny feet.

THE GROWTH OF THE CHILDREN AT SIX MONTHS

Tāmōtara with ankleted feet played happily,
Lo! when he was six months old!
Lo! by the grace of the lord of Citamparam;
They laughed and played merrily,
Lo! they did crawl about playing so happily!

THEIR GROWTH AT THE END OF THE FIRST YEAR

Joyous their pranks in their first year,
Passing through the *Ceṅkīrai*[74] stage,
(Nodding their heads from side to side)
And the stage of clapping hands in glee!
Seeing the flawless full moon in the sky
Beckoning to it to come and play with them;
And thus did pass their first year!

74. *Ceṅkīrai* - One of the stages in an infant's growth when the child nods its head.

குழந்தைகளின் இரண்டாண்டு வளர்ச்சி

நிறைந்தரெண் டாண்டுசெல்ல நிமிர்ந்து தள்ளி நடைநடந்து
அறைந்து தந்தை தசரதன்பால் அடுக்க நடையடுத்தனரே
உறைந்து தங்கள் தாய்மார்கள் ஊட்டமுதம் பருகிமொழி
பறைந்து சிற்றில் சிதையல்சிறு பறைமுழக்கி விளையாடி

சிறுபறையில் மத்தாடி சேறளைந்து கூத்தாடி
முறுவல்செய்யுந் திருவயசு மூன்றாகி நாலாகி
குறுவிரலி லாழியது கோகனகத் தாலணிந்து
மறுகுதொறும் சிறியமன்னர் வளைந்துசிறு தேருருட்டி

ஐந்தாம் வயதில் குழந்தைகள் கல்வி பயிலல்

வளைந்துசிறு தேருருட்டி மன்னருடன் பொற்கலத்தில்
அளைந்துபா லமுதமுண்ண அன்னைதந்தை யகம்மகிழ
குழைந்துமொழி தான்கூற குமரர்வய தஞ்சதிலே
விளைந்துகல்வி கலியாணம் மிகுந்தவித்தை படித்தனரே

பல்வகை வித்தைகளைக் கற்றல்

மிகுத்தவித்தை கலைக்யானம் விற்பனசற் பனபாஷை
சுகத்துடனா யுத்ததொழிலும் தொடுத்திடும்விற் றொழில்பலதும்
இகத்திலுள்ள பலதொழிலும் இராஜனுட மக்களவர்
மகத்துவமாய்ப் படித்தறிந்தார் வயசுபன்னி ரண்டதிலே

பன்னிரண்டு வயசளவில் பச்சைமால் படித்ததெல்லாம்
இன்னிலத்திலே எவராலும் எடுத்துரைக்கத் தொலையாது
மன்னவரில் சூரியகுல வங்கிசத்தால் ரெகுராமன்
ஒன்னலர்கள் சிங்கமென்பார் உலகளந்தார் திட்டமென்பார்

53.18. அறைந்து - ஒலி எழுப்பி. 53.20. பறைந்து - கூறி. சிற்றில் - சிறு வீடு கட்டி விளையாடும் குழந்தைப்பருவம். சிறுபறை - சிறிய பறையென்னும் இசைக்கருவியைத்தட்டி விளையாடும் குழந்தைப்பருவம். 53.21. மத்தாடி - சிறு தடியால் அடித்து விளையாடி. சேறு - மண்ணாலாகிய சேறு. 53.22. முறுவல் - புன்னகை. 53.23. ஆழி - கைவிரல் மோதிரம். கோகனம் - பதுமராகம்; நவரெத்தினங்களுளொன்று. 53.24. மறுகு - பக்கம். 53.26. அளைந்து - கையால் சோற்றை அளைந்து. அகம் - உள்ளம். 53.28. கலியாணம் - கொண்டாட்டம். 53.29. கலைக்யானம் - கலைக்கியானம்; கலைகளின் வழி பெறும் அறிவு. விற்பனம் - விற்பன்னம்; கல்வி. சற்பன பாஷை - சமஸ்த பாஷை என்னும் மொழி. 53.30. சுகத்துடன் - இன்பத்துடன். 53.31. இகம் - உலகம். 53.32. மகத்துவமாய் - மேன்மையாய். 53.34.* இன்னிலம் - இந்த உலகம். தொலையாது - கூறி முடியாது. 53.35. வங்கிசம் - வமிசம். 53.36. ஒன்னலர் - பகைவர். உலகளந்தார் - பேரரசர்கள். திட்டம் - பூரணம். இங்கு இராமன் பகைவர்க்குச் சிங்கம் போன்றவன் என்றும் உறவுடைய அரசர்களுக்கு நிறைவானவன் என்றும் பொருள்.

THE GROWTH IN THEIR SECOND YEAR

When they had completed their second year,
They had begun to toddle along with noise and merriment
Towards their loving father Tacarata.
Fed choice food by their mothers.
Sweetly they lisped and prattled as they pleased,
Playing at building tiny sand - houses
And kicking them down again,
Beating on their toy - drums merrily!
Laving their fingers in water and slush,
They went through all stages of happy childhood;
Till they turned three and then four;
Wearing on their tiny fingers, lovely rings
Inlaid with sparkling jacinth they played,
At trundling toy - chariots throughout the palace!

THE CHILDREN BEGINNING THEIR EDUCATION AT THE FIFTH YEAR

Trundling tiny toy chariots,
They ate in golden bowls, food cooked in milk;
To the great joy of their parents
They started to lisp in childish prattle;
In their fifth year, the king celebrated
The ceremony of their being put to school.

LEARNING MANY A ROYAL ART

Many a royal art did they learn
Acquiring knowledge of all kinds;
Sanskrit they did learn with joy,
Besides warfare and archery; the young princes
Learnt all the arts and trades under the sun
And by their twelfth year, they had mastered all the texts.
It is impossible to relate
All the quantum of studies they had put by;
In the solar dynasty, Rakurāma was hailed
As a lion terrible to the foes
And friendly to all rulers in the clan.

வசிட்டரை இராமர் முதலியோர் குருவாகக் கொள்ளுதல்

திட்டமென்றே மூவுலகும் தேவர்களும் மனம்மகிழ
இட்டாரே திருநாமம் எழுதரிய நெற்றியிலே
பட்டாலே கச்சைகட்டிப் பத்திரங்கள் விரற்கணிந்து
தொட்டாரே பாதரெக்ஷை சுண்டுவில்லுங் கைப்பிடித்து

சுண்டுவில்லுங் கைப்பிடித்துத் தொடுபதினெண் படையுடனே
அண்டர்பிரான் ஸ்ரீராமன் அவர்க்குலக்ஷ மணன்றுணையாய்
தண்டமிழ்சேர் பரதனுக்கே சத்துருக்கனன் துணையாக
கொண்டாடி நால்பேரும் குருவசிட்டர் தனைத்தொழுதார்

வசிட்டர் வழி உபதேசம் பெறுதல்

தொழுதுகுரு வடிபணிந்து தொட்டஅட்டா க்ஷரத்யானம்
பழுதில்லா வுபதேசம் பரமன்பஞ்சா க்ஷரமுணர்ந்து
எழுதரிய பேரழகர் இறைஞ்சினார் தசரதன்பால்(லே)
முழுதுமுகில் வண்ணனென்றே மூவுலகம் புகழ்ந்ததுவே

இராம இலட்சுமணர்களின் தான தர்மம்

மூவுலகம் புகழ்ந்திடவே முகில்வண்ணரு மிளையவரும்
காவனத்தி லேபுகுந்து கலைமான்புல் வாய்வேட்டை
தாவிவிளை யாடையிலே தபோதனர்கள் தனைப்பணிந்து
மேவலர்கள் மாதவத்தோர் மேகவர்ன ரூபமென்பார்

ரூபமதாய் நாடுசுற்றி நோக்கிநகர் பார்க்கையிலே
தாபரமென் றடுத்தவர்க்கும் தரித்தி ரற்கும் பாவலர்க்கும்

53.38. திருநாமம் - தெய்வீக நாமம்; விஷ்ணுவை வழிபடுவோர் நெற்றியிலிடும் நாமம். 53.39. கச்சை கட்டி - இடுப்பில் கட்டி. பத்திரம் - கையிலணியும் இலை வடிவிலமைந்த ஆபரணம். 53.40. தொட்டார் - அணிவித்தார். பாதரக்ஷை - காலணி. சுண்டு வில் - விளையாட்டுக்கு உதவும் சிறுவில். 53.41. பதி - பூமி. எண்படை - எட்டுவகை படை; எண்ண முடியா படை என்றும் அமையும். 53.42. அண்டர் பிரான் - தேவர்த் தலைவன்; விஷ்ணு. 53.45. அட்டா க்ஷரத்யானம் - 'ஓம் நமோ நாராயணாய' என்னும் எட்டெழுத்து மந்திரத்தின் மேன்மை. 53.46. பழுதில்லா - குற்றமில்லா. பரமன் பஞ்சாக்ஷரம் - சிவ மந்திரமான 'நமசிவாய' என்னும் ஐந்தெழுத்து மந்திரம். 53.47. பேரழகர் - சொல்லொண்ணா அழகுடையவர்; இராமன். 53.48. முகில்வண்ணன் - மழை மேகம் போன்ற நிறமுடையவன்; இராமன். 53.49. இளையவர் - இலட்சுமணர். 53.50. காவனம் - சோலைகள் நிரம்பிய இடம். கலைமான் - ஆண்மான். புல்வாய் - மான். 53.51. தபோதனர்- தவசியர். 53.52. மேவலர் - பகைவர். ரூபம் - வடிவம். 53.54. தாபரம் - தஞ்சம். பாவலர் - புலவர்.

RAMA AND OTHERS HAVE VACITTAR AS THEIR PRECEPTOR

To the delight of the celestials
All the sacred marks vertical
Were daubed on their foreheads;
With silken sashes round their waist
And leaf - rings of gold on their fingers;
Besides splendid sandals on their feet;
Holding toy - bows apt for their size,
The Lord of the world, Srirāma,
Followed by Lakshmaṉa, Catturukkaṉa and following Parata,
The Princes prostrated before the royal preceptor,
Bowing at his feet, when by him they were initiated
Into the mystic octad mantra with all ceremony due
Besides the mystic pentad of the Supreme Siva too.
The inexpressibly lovely Lord prayed to his father oft
And the triple worlds hailed Rama as the cloud - hued Lord.
The dark - hued one and his younger brother
Entered the wood for hunting the stags and hinds,
Cheerfully leaping into the sport royal
They offered their respects to the hermits there;
Sages, friends and foes hailed Rama the nimbus - hued.

THE GIFTS OFFERED BY RAMA AND LAKSHMAṈA

Touring the country, they visited the towns and cities;
Jewels and garlands, gold and cooked food,
They gave aplenty to the poor and the needy

ஆபரண முடையாடை அன்னசொன்ன மளித்திடுவோர்
பூபதி ராமனெனவே புவனமெல்லாம் யெய்த்ததுவே

முனிவர்கள் வேள்வியைத் தாடகை அழித்தல்

மெய்த்தவர்கள் வாழ்ந்திருக்க விஸ்வாமித் திரமுனிவர்
மற்றுமுள்ள ரிஷிமுனிவோர் வளர்க்குகின்ற வேள்வியெல்லாம்
சத்துருவாய் வல்லரக்கி தாடகைவந் தழிப்பதனால்
கொற்றவனார்தச ரதர்முன் குறுகிவந்தான் விஸ்வமுனி

விசுவாமித்திரர் தசரதனைக் காண வருதல்

வந்தமுனிக் கெதிர்நடந்து மன்னவனார் தொழுதேற்றி
சந்ததிதந் தெமதுகலி தவிர்த்தமகா தவமுனியே
எந்தனிடத் தெழுந்தருளும் இயல்பேதோ வெனக்கேட்க
மைந்தருனக் கேப்பிறந்த மகத்துவமே பெருமையென்றார்

விசுவாமித்திரர் இராமனைத் துணைக்கழைத்தல்

பெருமைமைந்தர் நால்வர்வந்து பிறந்ததுநின் பெருந்தவமாம்
திருமகன்பாற் கடலிலுறை திருமாலே ரெகுராமர்
பருமுடியா யிரம்படமாம் பாம்பணையே லட்சுமணன்
தருமடங்கா ழியும்பரதன் சத்துருக்கன் தார்வேந்தன்

தார்வேந்தன் ரகுராமன் தபோதனர்க்கு உதவிசெய்வான்
தேர்வேந்தே வரவிடுவாய் செயவேள்வி நிறைவேற
போர்வேந்தே நீர்முன்செய்த புண்ணியமே புண்ணியங்காண்
பார்வேந்தே உனக்குவந்த பாக்கியமே பாக்கியங்காண்

55. ஆபரணம் - அணிகலன். சொன்னம் - சொர்ணம்; பொன். 53.56. பூபதி - பூமிக்கு ...ரசன். எய்த்ததுவே - அறிந்ததுவே. 53.57. மெய்த்தவர் - தவமுனிகள். 53.59. சத்துரு - ...கைவர். வல்லரக்கி - கொடுமையான அரக்கி. 53.60. கொற்றவனார் - அரசர். குறுகி - ...ரைந்து. விஸ்வமுனி - விஸ்வாமித்திர முனிவர். 53.62. கலி - துன்பம். 53.63. எந்தனிடம்- ...னிடம். இயல்பு - காரணம். 53.64. மகத்துவம் - மேன்மை. 53.67. பருமுடி - பெரி தலை. ...ம் - பாம்பின் படம். பாம்பு - ஆதிசேடன் என்னும் பாம்பு. 53.68. தருமடங்குகாழி - ...மால் கையிலுள்ள சங்கு சக்கரங்கள். 53.69. தபோதனர் - தவமுனிகள். 53.70. செய ...ள்வி - வெற்றி மிகுந்த யாகம்.

Besides bards and all who came to them for aid.
The whole world knew him to be Lord Rama, the munificent!

TĀṬAKAI RUINING THE SACRIFICES OF THE SAGES

While so, in the forest where the true sages
Dwelt along with Visvāmittira and other seers,
The powerful demoness Tāṭakai began to destroy
The yagnas and sacrifices offered by them;
And so, Visvāmittira hied to the court of Tacarata forthwith;
Seeing the sage, the king walked forward
To receive him and offered his deep obeisances
"O great sage! who relieved my suffering
By granting us the boon of progeny!
May I know the reason for your gracious presence now?
To which the sage thus replied.

VISVĀMITTIRA ASKING FOR RAMA'S HELP

"It is because of your great askesis
That four noble sons are born to you.
Tirumāl himself dwelling in the ocean of milk, is Rama!
Lakshmaṇa is none other than his Serpent - couch,
With a thousand hoods; While Parata and Catturukkaṉa
Are the Conch and Discus in the hands of the lord.
Rakurāma will surely relieve the Sages' distress;
Monarch of the mighty chariot! Permit him to come with me
To guard the sacrifices begun by us!
O king, mighty in warfare! Great is the merit
Earned by you in earlier births;
Fortunate you are as none else on earth!

தசரதன் கலக்கம்

பாக்கிய மென்றமுனியே பாலன்சிறு பசலையல்லோ
யோக்கியமாற் றலரைவெல்ல உறுபூசை யறிவானோ
ஆக்கியவ னழைக்கவந்தால் அதுக்கேது செய்வாமென
தேக்கிலையில் நீர்போல தசரதனார் தியங்கினரே

தியங்கினனே பலகாலம் சிறுமதலை யில்லாமல்
மயங்கினனே பலகாலம் மலடிருந்து பெற்றெடுத்தேன்
முயங்கினேன் முனிவர்வந்து மூத்தமகனை யழைத்ததால்
தயங்கினேன் ரெகுராமன் தனைப்பிரிந்து தரிப்பேனோ

தரிப்பான தலைமகனைத் தவமுனிபின் போகவிட்டால்
சிரிப்பாரே பார்வேந்தர் தேசமதி லுள்ளவர்கள்
புரிப்பார்மந் திரிமார்க்கும் பூவையர்க்கு மேறாதோ
விரிப்பார சடைமுனிவன் விளம்பினதுக் கென்னசெய்வேன்

விசுவாமித்திரர் சினவுரை

என்னசெய்வே னென்றுமன்ன னிடைந்துமனந் தள்ளாடி
மன்னவனை முனிபார்த்து வாக்குமொழி மாறாதே
முன்னுரைத்த சொற்படியே மூத்தமகன் றனைத்துணையாய்
தென்னவனே வரவிடென்று சினந்துரைத்தான் மாமுனிவன்

தசரதன் இராம இலட்சுமணர்களை விசுவாமித்திரருடன் அனுப்புதல்

சினந்தெழுந்த மாமுனியைத் தெண்டனிட்டுத் தசரதனார்
மனத்தெழுந்த துயரோடே மகன்ஸ்ரீராம னையழைத்து
கனத்தமந்திர வாள்கொடுத்து கணையும்வில்லும் கைக்கொடுத்து
நின்றணைத்து முத்தமிட்டு லக்ஷ்மணனையு மழைத்து

53.73. சிறுபசலை - சிறு குழந்தை. 53.74. யோக்கிய மாற்றலர் - தகுதியினும் மிஞ்சிய பகைவர். உறுபூசை - வரும் போர்முறை. 53.75. ஆக்கியவன் - குழந்தை பேறுக்கு வழி கோலியவன்; விசுவாமித்திர முனி. 53.76. தேக்கிலையில் நீர் போல் - தேக்குமரத்து இலையின் மேல் விழுந்த நீர் தத்தளிப்பது போல. தியங்கினார் - சோர்வடைந்தார். 53.78. மலடிருந்து - குழந்தை யில்லாதவனாகயிருந்து. 53.79. முயங்கினேன் - குழந்தையைத் (இராமனை) தழுவினேன். 53.80. தரிப்பேனோ - உயிர் வாழ்வேனோ. 53.81. தரிப்பான - வாழ்க்கையில் எனக்கு (தசரதனுக்கு) பிடிப்பான. தலைமகன் - மூத்த மகன். தவமுனி - விசுவாமித்திர முனி. 53.83. புரிப்பார் - நாட்டு மக்கள். ஏறாதே - சொன்னால் மனங்கொள்ள மாட்டார்களே. 53.84. சடைமுனிவன் - சடாமுடியுடன் அவைக்கு வந்த முனிவன்; விசுவாமித்திரன். 53.86. வாக்கு மொழி - சொன்னசொல். 53.88. தென்னவன் - மன்னவனாம் தசரதன். 53.89. தெண்டனிட்டு - பணிந்து. 53.91. கனத்த - வலிமையான. கணை - அம்பு.

TACARATA'S ANGUISH

"O great sage who speaks of my good fortune!
Is not my boy still a child? Does he know
The right methods to quell the miscreants?"
Like water upon teak leaf, this way and that
The king's mind wavered, bewildered by the request
Of him who paved the way for his getting progeny.
"For long I suffered yearning for children;
After many a barren year hankering in vain,
I at last got these darlings in my embrace!
I hesitate only, as he is my eldest;
Oh how can I live away from my dear Rama?
My people and other rulers will laught at me
If I send my eldest after the sage.
The citizens and the people and the ministers
Will refuse to accept it; but what can I
Say to the Rishi with matted locks outspread?"

VISVĀMITTIRA'S ANGER

Seeing the king unwilling and hesitant
And agitated in mind at his request for Rama,
Visvāmittira angrily chastised him thus:
"O king do not go back on your plighted word;
Send your son with me atonce, as promised
To the forest to guard our sacrifice".

TACARATA SENDS RAMA AND LAKSHMAṆA WITH VISVĀMITTIRA

Bowing at the feet of the irate sage
Tacarata with a heavy heart called for Rama
And giving him a magic sword and bow and arrows,
Embraced him fondly and kissed him farewell
And Lakshmaṇa as well. Prostrating again

அனுப்பிநன்றாய் விடைகொடுத்து அருந்தவரை அடிதொழுது
மனுப்பெரிய மாமுனியே மைந்தருனக் கடைக்கலமே
தனுப்பயிலுந் தொழிலறியா சந்ததியா னவர்கள் பத்து
தினத்தில்வர வேணுமென்று செல்லவிட்டார் தசரதனார்

நல்லகொத்து மாலையிட்டு நவமணி பூஷணமணிந்து
வெல்லமிகக் கச்சைகட்டி வீரத்தண்டை சிலம்பணிந்து
வில்லெடுத்து சரமணிந்து வேதமுனி கூடவந்தார்
நல்லவராம் மூவருமே நாடுவிட்டுக் கூடவர

கூடவந்த வேதமுனி கோவிந்தர்க்கு மிளையவர்க்கும்
நாடழகும் நதியழகும் நல்லபூங் காவழகும்
தேடரிய முனிகாட்டி செல்கையில் வேள்வித்தலத்தில்
தாடகைவந் தார்பரித் தாட்டிமையை யுரைப்பேனே.

தாடகை தோற்றம்

விருத்தம்

54. *உரைத்தசப்த ரிஷிரோம முனிமற் றோரும்*
ஒழுக்கமிட்டே எக்கியங்கள் வளர்க்கும் போது
வரைக்குமேல் வரையசைந்தாப் போலே கொங்கை
வயற்றில்விழ வானமட்டாய் வளர்ந்து நின்றாள்
தரைக்கிருகால் கவட்டுவழி சகலோர் செல்ல
தலைக்களுந் தடவித் தாடகை சண்டாளி
இரைத்துவர நாசியில்அக் கினிமுச்சாலே
எரிப்பனென்று அரக்கியும்ஆர்ப் பரித்திட் டாளே.

53.93. அருந்தவர் - தவமுனியாகிய விஸ்வாமித்திரர். 53.94. மனுப்பெரிய - மனு தர்மங்களில் பெரிய. 53.95. தனு - வில். சந்ததியானவர் - தசரதனின் சந்ததியரான இராம இலட்சுமணர்கள். 53.97. கொத்துமாலை - கழுத்தணிகளிலொன்று. நவமணி பூஷணம்-நவரெத்தினங்களாலான அணிகலன்கள். 53.98. கச்சை - கவசம். வீரத்தண்டை, சிலம்பு - காலணி வகைகள். 53.99. சரம் - அம்பு. வேதமுனி - வசிட்டர். 53.100. மூவர் - விஸ்வாமித்திரர், இராமர், இலட்சுமணர் என்னும் மூவர். நாடு விட்டு - அயோத்தியை விட்டு. 53.101. கோவிந்தர் - இராமர். இளையவர் - இலட்சுமணர். 53.103. காட்டி - காண்பித்து. வேள்வித் தலம் - யாகம் செய்யுமிடம். 53.104. ஆட்டியமை - அலைக்கழித்த செயல். 54 1. சப்த ரிஷி - மரீசி, அங்கிரசன், புலகன், வசிஷ்டன், அத்திரி, புலஸ்தியன், கிருது என்னும் ஏழு முனிவர்கள். எக்கியம் - யாகம். 54.2. வரைக்கு மேல்வரை - மலையின் முகடுகள். கொங்கை - மார்பு. வானமட்டாய் - வானம் வரை. 54.3.கவட்டு - தொடைச் சந்து. சகலோர் - நிரம்ப மக்கள். தடவி - கையால் தடவி. 54.4. இரைத்து வர - இரைந்து வர வேகமாக வர. நாசி - மூக்கு.

At the feet of the sage, he prayed to him:
"O sage well-versed in Maṉu's code,
My sons I give into your charge and care,
My sons inexpert in archery.
They must come back to me in ten days' time."
And so adorned with necklaces of gold, gems - inlaid,
With bright sashes around their waists and heroic anklets,
The lads followed the sage, with bows and arrows armed.
As the noble threesome went towards the woods,
The learned seer showed them the beauties of the land,
River, grove and sylvan woods; and then said:
"I shall tell you now about the wicked Tāṭakai
And her sacrileges in our sacrificial ground."

THE APPEARANCE OF TĀṬAKAI

54. As the seven sages great and Rōmarishi and others
Began to prepare for their yagnas as ordained.
Kindling sacred fire in the sacrificial pits,
There appeared before them a female huge and monstrous;
Her ponderous breasts, massive like moving hills,
Voluminous, dangled against her capacious belly;
Her head seemed to touch the very heavens;
Colossal her form, such that through the fork
Of her outspread legs, an army could pass with ease!
This was Tāṭakai, the abominable demoness
Who rushed forward roaring and threatening
To burn them with her fiery breath.

தாடகை செயல்கள்

தரு

55. திட்டாகுந் சோலையி லந்தணர் - செலுத்தும்
வேள்வியில் வலுத்த தாடகை
திடுதிடு திடுதிடு திடுதிடு - திடென
மடமட மடமட மடமடெனவும்
விட்டானும் பால்பெரு கும்படி - வளைத்த
தோல்முலை முழுத்தி லாயிரம்
மடுவொடு மடுவது கிடுகிடு - கிடென
முடலொடு மடலொடு தரவரையோடு
தட்டான சண்டாளி யலங்கிருத - சகத்தின்
வாடகை மதத்த தாடகை
தடுசுடு சுடரென நெடுவிழி - கடைவிழி
சடுதிகை தொடுவது தொடைபுடைசூல்
தொட்டாள் கண்டாள் பெண்ணாள் - கலகம்
[32]தொடைக்குளே தொடையடிக்கு மோசைகள்
துடிபடு கொடுமுடி யிடிவது - பொடிவது
யிடியெழு முகிலிடி கடலொலியேற்க
ஏறிடும் படிவீறிடு வாள்கை - யிருக்கு
வாள்வண் டுறுக்கு வாள்கால்
எத்து வாளவள் சுத்துவள் - குத்தி
எடுத்தொரு வெற்பையிடிப் பள்பொடிப்பள் 5

55.1. திட்டாகும் - மேடாகயிருக்கும். 55.2. விட்டானும் பால் பெருகும் படி - கறந்த பசுவின் அளவை விட மிகுதியான அளவு. மரு - பள்ளம். முடல் - முடலை; வலிமை. மடல் - மரக்கிளை. தரவரை - வலிமையான மலை. 55.3. தட்டான சண்டாளி - குற்றம் குறை நிறைந்த கொடியவள். அலங்கிருத சகம் - அழகிய உலகம். வாடகை - சுற்றுவட்டம். மதத்த- கொழுத்த; தாடகை உலகமளவு பருத்து கொழுத்தவள் என உயர்வு நவிற்சியால் கூறியவாறு. தடுசுடு சுடர் - சூரியன். நெடுவிழி - நீண்ட விழி. கடைவிழி - கடைக்கண். சடுதிகை - விரைவோடு. தொடையுடைசூல் - உடம்பின் தொடைப்பகுதி, புடைத்த வயறு. 55.4. தொடையடிக்குமோசை - தொடைகளைத் தட்டும் ஓசை. துடி - ஒருவகை பறை. கொடு முடி - உயர்ந்த மலைச்சிகரம். முகிலிடி - மேகக் கூட்டங்களின் இடியோசை. 55.5. ஏறிடும் படி - மிகுந்து ஒலிக்கும்படி. வீறிடுவாள் - மிகுந்த குரலெழுப்புவாள். இறுக்குவாள்- நெரிப்பாள். வண்டுறுக்குவாள் - உதட்டையும் பல்லையும் கடித்து பயமுறுத்துவாள். குத்தி - கையால் குத்தி. வெற்பு - மலை.

32. துடை

THE ACTIVITIES OF TĀṬAKAI

55. Where the holy Brahmins were performing
Their sacrifices powerful, Tāṭakai would come.
Huge she came with a thunderous roar
Stamping on the ground with her feet;
Her breasts each a thousand cubits long,
Ponderously swinging, she came;
The trees and the hardy hills shaking as this
horrid demoness
With a massive girth, rotund like the earth,
Her eyes fiery like the blazing sun,
Her hands slapping her monstrous belly
and immense thighs,
She caused dismay by her very presence;
She shrieked in a crescendo; the very peaks
of the mountains
Were pulverised by her shout, boisterous like
the roaring seas
Her huge sword she wielded fearfully;
Gnashing her teeth and frowning fiercely
She kicked with her sturdy feet at the hills
Which were smashed to tiny pieces.

மாறிடுஞ் சிலமாமுனி வேள்வி - வளர்கிறான்
சென்று ளப்புறேன் என்பாள்
வக்ரம் உக்ரம் மிக்க - அதிக்ரமி
வற்கரையுள்ப்பட எக்கிய [33]மழிப்பவள்

நீறி டும்பித போதன ரோடே நினைத்துமே
கண் சினத்து மேலவாய்
நெட்டி லுதட்டை மடிப்பள் கடிப்பள்
நிறுத்தி மீகத்தை யடிப்பள் பிடிப்பள்

சீறி டும்படி மோதிடுந் தாடகை
செகத்தி லேவஞ் சகத்திலே வாறாள்
சித்தர்கள் பக்தர்கள் மெய்த்தவ முற்றவர்
செக்கிரி பக்க லடைக்கல முற்றனர்

முத்தரஞ் சேர்துளப மார்புயன் முகுந்தன்
முடுகியடுகி நடைகொடி யவள்நெடியவள்
மடியி லடிபரவ முடிவானந் தொட
நடையில் மிகுந்த தாடகை
வைத்தாள் கண்டே ஒருகுரல் மலங்கி
மலங்கி மாதவர் கலங்கி வாய்விட
வலதுகை யுதறின ளிடதுகை தடவினள்
வரிவிழி யெரியெழ புகையெழு மண்டென 10

55.6. உளப்புறேன் - குழப்புகிறேன். வக்ரம் - வக்ரப் புத்தி. உக்ரம் - வலிமை. அதிக்ரமி - அக்கிரமக்காரி; தாடகை. வற்கரை - யாகசாலை எக்கியம் - யாகம். 55.7. பிதபோதனர் - வேதம் சொல்லும் தவசியர். நினைத்துமே - நினைத்தவுடனே. மீகம் - ஆகாயம். 55.8. சித்தர் - சித்தி வாய்க்கப்பெற்றவர். பத்தர் - பக்தர். செக்கிரி - சிவந்த மலை. பக்கல் - பக்கம். 55.9. முத்தரஞ் சேர்துளப மார்புயன் - முத்து மாலையும் துளசி மாலையும் அணிந்த மார்புடைய வலிமையான தோளுடையவன்; இராமன். முகுந்தன் - இராமன். முடுகி - விரைந்து. அடுகி - அருகில் வந்து. நெடியவள் - மிகவும் உயரமானவள். மடி - மார்பு. அடி பரவ - பூமியைத் தொட்டு பரந்து நிற்க. முடி - தலை. 55.10. வைத்தாள் - யாகசாலையின் அருகே கால் வைத்தாள்: மலங்கி - செய்வதறியாது திகைத்து. வாய்விட - வாய்விட்டு குரலெழுப்ப. வரிவிழி - செவ்வரி படர்ந்த கண்கள். புகையெழுமண்டென - அடர்ந்து புகை யெழும்ப.

33. அளிப்பவள்

"Some sers are conducting sacrifices;
Straight I will go and spoil them",
She cried, this perverse mighty miscreant.
Yākacālās and Yagnas both, she loved to destroy;
The very thought of the holy men at their penances
Inflamed her eyes; biting her nether lip,
She would beat the very sky in anger;
Expert in guile and wile, a terror she was
To the siddhas, devotees and the true tapasvins
Who lived in the hill-slope beside the red peaks.
Such was Tāṭakai, as she hove into the view
Of Mukunta, with chaplets of pearls and basil garlands!
Rapidly she approached, this cruel, colossal creature,
Her bosom touching the earth, her head hitting the sky:
As she came near the hermitage of the holy men,
Agitated they cried aloud in fear.
Shaking her right hand and her left
Her red-streaked eyes, inflamed belching
Fire and smoke!

பெத்தனள் பெண்டாட கைபுத்திரர் பிரண
பாரிய ரிரண்டு வீரியர்
பெறுவதி லொருமக னிடமது கடைமகன்
வலமது பிடிபிடி பிடிதா யென்றொரு

மித்தார கொந்தார் பருவப் புலி
விளங்கி யாடுகள் முழங்கி மாடுகள்
விடுபொழு திரவினில் அடுமயிர் கதறிட
முடிகு தவளை வடுவிடுவாய் வம்பர்கள்

தாடகையைப் பார்த்த இராமன் விசுவாமித்திரருடன் வினவுதல்

வம்பதாய் வந்தா ளிவளை க்ஷணம்
வதைத்தீ ருடல்சி தைத்தி டீரென
மாமுனி செப்பிட ராம னுரைப்பது
வாலை யெமக்கிது வாகும் முதற்சமர்
பெண்பா லைமுன் போரில் வதைப்பது
பிழைக்கு மோநெறி விளைக்கு மோபகை
பேதை பசுசிசு வாதை பிரமஹத்தி
விடாத ரசர்க் கிதுநீதம கற்றுதல்

விசுவாமித்திரர் பதிலுரை

என்பார் சங்காழி தரிப்பவர்
இதற்கு மாமுனி பிதற்றும் வாய்மொழி

55.11. பெத்தனள் - அரக்க குழந்தையைப் பெற்றவள்; தாடகை. பிரணபாரியர் - பழமையான வலிமை கொண்ட அரக்கர். வீரியர் - மிகுந்த வீரமுடையவர். ஒருமகன் - தாடகையின் மூத்த மகன். இடம் - இடக்கையிலும். கடைமகன் - தாடகையின் கடைசி மகன். வலமது - வலக் கையிலும், ஆரும் - ஆரவாரிக்கும். 55.12. மித்தார கொந்தார் பருவப்புலி - வேங்கை மலர்கள் பூத்தாற் போன்ற தோற்றமுடைய வலிமையான புலி. முழுங்கி - விழுங்கி; உண்டு. அடுமுயிர் கதறிட - கொல்லும் நிலையில்; உயிர் போகும் தறுவாயில். கதறி - அழுதிட. முடிகு - முடுகு; வி-ரைந்த. வடுவிடுவாய் - பிளவுபட்ட வாய். வம்பர்கள் - மோசமானவர்; தவளை போல ஒலி எழுப்பி புலி போல விரைந்து வரும் அரக்கக் கூட்டத்தார். 55.13. க்ஷணம் - உடனடியாக. ஈருடல் - உடல் இரண்டு துண்டாகுமாறு. வாலை - இளையவன்; சிறுவன். 55.14. நெறி விளைக்குமோ - அறமான தாகுமோ? பேதை - பெண். சிசு - குழந்தை. வாதை - சிறு தெய்வம். பிரமஹத்தி- உயிர்களைக் கொல்லுவதால் உண்டாகும் தோஷம். 55.15. சங்காழி தரிப்பவர் - சங்கு சக்கரங்களைத் தரித்தவர்; திருமால். பிதற்றும் - கூறும்.

Two sons born to her, powerful demons bold,
On either side came with her, fierce as cheetahs,
Their skin bright as kino flowers!
They swallowed whole, sheep and cattle
Which cried,when seized by these demons
With voices harsh like croaking frogs.

RAMA INQUIRING VISWĀMITTIRA ABOUT TĀṬAKAI

And the great sage told Rama!
"Of a trice cut her down to pieces;
Kill this troublesome wretch at once"
And Rama said:
"For me a boy, this, is my first battle
Should I slay a woman
Will it be fair and honourable?
Will I not be swerving from royal justice,
If I were to kill (prohibited by Dharma)
Women, cows, infants or Brahmins?"
Said Rama Lord of the Conch and Discus.
To which the great sage thus rejoined:

யிடுதிவளை [34]ஸ்திரி யோடு நினைப்பது
கேடு துணிப்பது கோடி மகக்கெதி

அம்பி னாலஞ்ச மால்வ தைத்திடும்
அரக்கி தாடகை யிரக்க மேபகை
ஆமெனு மெய்த்தவ மாமுனி கொற்றவ
ராமனு முற்பனம் வைத்தனரே.

தாடகையின் சினவுரை

சிந்து

56. வைத்தெ மும்பி மதம்பட்ட தாடகை
மண்டலத் தடிவிண் டலைம்பத்தவே
சித்தர் மாதவர் தேவர் முனிவர்கள்
சிந்தை நொந்து தவித்து மறுகவே

மெத்த வீறிட்ட கோதரித் தாரடோ
வேள்வித் தீயில் விழத்தட்டு வேனடா
பித்த டக்கி நரம்பெடுப் பேனடா
பிச்சுப் பிச்சினி நச்செறி வேனடா

ஏனடோ சிறுபா லர்க ளேதடோ
இந்தக் காட்டுக்குள் ளேவந்த தேதடோ
நானடோ முனிவோரைக் கொல்வே னடா
நன்றல்ல மக்களொன் றல்ல ரண்டடோ

யிடுதி - கேட்பாய். நினைப்பது - ஒப்புமைப்படுத்தி நினைப்பது. துணிப்பது - கொல்வது. கோடி மகக்கெதி - கோடிக்கணக்கான முனிகளுக்கு நன்மை. 55.16. அஞ்சமால் - மை போலும் கறுத்த மேனியுடைய திருமால். தாடகை இரக்கமே பகை - 'முனிகளுக்குப் பகையாக விளங்குவது இராமர் தாடகை மேல்கொண்ட இரக்கமே' என்ற பொருளில். ஆமெனும் - ஆம் என்று. மெய்த்தவமுனி - விஸ்வாமித்திரர். உற்பனம் - உண்மை; இராமர் உண்மை நிலையை உணர்ந்தார் என்றவாறு. 56.1 விண்டலைம்பத்தவே - விண்ணுலகத்தில் சென்று படவே. 56.2. சித்தர் - சித்துக்கள் கைவரப் பெற்றவர். மாதவர் பெரிய தவம்புரிவோர். சிந்தை - அறிவு. மறுகவே - மனம் குழம்பவே. 56.3. மெத்த - மிகுதியான. வீறிட்ட - வேகமாகச் செல்லக் கூடிய. கோ - வில்லம்பு. தட்டுவேன் - வேள்வித் தீயில் விழும்படிச் செய்வேன். 56.4. பித்தடக்கி - என் வலிமையைக் குறைத்து எடை போட்ட அறியாமையை அடக்கி. நரம்பு - உடலிலுள்ள நரம்பு. பிச்சு - பிய்த்து. நச்சு - நைந்து போகும்படி. 56.5. சிறுபாலர் - சிறியவர்; இராம இலக்குமணர்கள். 56.6. நானடோ - நான்தான்.

34. ஸ்ரீயோடு

"Listen! to equate her with ordinary women
Were great wrong; destroying evil, is but doing good,
For millions of sages virtuous!
It is your pity for the demoness
That is now working against the sages" said he.
And Rama, realizing the truth of his words,
Decided to engage the demoness in battle.

THE ANGRY CHALLENGE OF TĀṬAKAI

56. As arrogant haughty Tāṭakai, rose huge and tall
As if to touch the very heavens; siddhas and Devas
And seers and hermits were grieved,
And afflicted and bewildered at her prowess:
When the demoness shouted her challenges thus:
"Sirrah! who is that who stands
With bows and arrows exceeding fast? Sirrah!
I will cast you into the sacrificial fire!
I shall pluck out your nerves and sinews,
Putting down your ignorance of my true power,
I shall batter your limbs thread bare.
Piece by piece! O you tiny urchins!
What brings you to this forest deep?
Sirrah! I will kill these sages sure!
Why should you boys come to the forest?
I shall wipe off both of you, Sirrah"!
Thus she chastised the youngsters,

கான கந்தனி லெக்கிய மேதடோ
　　கண்டே யினியா னழிப்பே னடோ
ஆன தாடகை சாடிய தட்டியே
　　அண்டம் முட்ட எழும்பிகை கொட்டியே

கொட்டு மாதாளி யிட்டு மெருப்படியே
　　கொலையோ டென்மலையைப் பிடுங்கியே
எட்டு மேரும் நடுங்கத் திடுக்கிட
　　யிமைய மாதவர் சமையங் கலங்கிட

முனிவர்கள் வருத்தவுரை

முட்டு மாமலை போல்வருந் தாடகை
　　முனிவர் வேள்வியை நீர்விட்ட ழிப்பதால்
விட்டு நாங்கள் மெலிந்து சலிக்கிறோம்
　　மேக வர்ணா விளையாட்டு பார்க்கிறீர்

பார்க்க நீதியே ஆதி நாராயணா
　　பாவி எங்களைக் கோபித்து கொல்லுவாள்
தீர்க்க மாகிய தாடகை தோசியை
　　சீற்றமா யுயிர்மாய்த் திருவீ ரென்றான்

இராமன் தாடகை நோக்கி அம்பெய்தல்

காக்கவே வந்த மாயன் செந்தாமரை
　　கண்ணினால் முனிஎண்ண மெல்லாங் கண்டு
சேர்க்கு மஞ்செழுத் தெட்டெழுத் தானதைத்
　　திரிமூ லத்தோ டாறெழுத் தானதைக்

56.7. கானகம் - காடு. எக்கியம் - யாகம். அண்டம் - தேவருலகம். கை.கொட்டி - கையால் தாளமிட்டு. 56.9. ஆதாளி - சப்தம். எருப்படியே - யாகம் வளர்க்கும் குண்டம் அருகே. கொலையோடு - கொலை வெறியோடு. என்மலை - பெரியமலை. 56.10. மேரும் மலையும். சமையம் கலங்கிட - கொடிய நேரத்தைக் கண்டு அச்சம் கொள்ள. 56.11. முட்டு மாமலை - வானத்தைத் தொடும் பெரிய மலை. 56.12. மேகவர்ணா - நீல நிறத்தவனே; இராமனே. 56.14. தீர்க்கமாகிய - வலிமை பெற்ற. தோசி - பாவி. சீற்றமாய்-சினம் கொண்டு. 56.15. மாயன் - திருமால் அவதாரமாகிய இராமன். 56.16. அஞ்செழுத்து, எட்டெழுத்து-'நமசிவாய' மற்றும் 'ஓம் நமோ நாராயணாய' என்னும் மந்திரங்கள். திரிமூலம் - சிவன், திருமால், பிரம்மன் ஆகிய மூவர்க்கும் முதலான ஆதிகடவுள். ஆறெழுத்து - சரவணபவ மந்திரம்.

Clapping her hands as they rose sky high;
Thus with hideous noise she neared
The pit of sacrifice, and in murderous frenzy plucked
Hillocks huge and prepared for battle,
So that Mēru mount itself shivered in fright,
And the sages in the Himalayas trembled at the evil hour.

THE POIGNANT PLEA OF THE ANCHORITES

"We are anguished, afflicted and ever in agony
At the blasphemous abominations she pours
Upon our kindled sacrificial fires;
This mountainous Tāṭakai, O nimbus - hued lord,
You are looking on as if in sport:
Is it fair, primal Nārāyaṇa,
That we should suffer like this with you present?
This horrid sinner vile will kill us all.
Therefore, O lord, slay this dreadful woman straightway,
And save us all for good".

RAMA SHOOTING AN ARROW AT TĀṬAKAI

Tirumāl incarnate, Sri Rama with his red - lotus eyes
Saw now, that the time had come to carry out
The thought of the great sage; and meditating
On the pentad and octad and the sestet,
And the primordial power behind the divine Triad,

கோர்க்க வுன்னி வரிசிலை பூட்டியே
குணமாகக் கணபதி கூட்டியே
பார்க்கவே குருவசிட்டரை வுன்னியே
பரிந்தம்பு தெரிந்தொன்று விட்டனர்

தாடகை வதம்

விட்ட தோர்கணை தாடகை நெஞ்சிலே
வெற்பி லாப்பென மீறியுள் ளேறவே
பட்டங் கேவலு தாடகை கீறியே
பதினாறு துண்டாக விழுந்தனள்

அட்ட திக்குள்ள யாகங்க ளோமங்கள்
அரக்கி பட்ட ரத்தம் பெருகியே
வட்டச் செங்கடல் போல செவத்துமே
மாகம் முட்டிச்செம் மேகப் பரந்ததே

மாரியவான்கள் தாடகை மாண்டதை இராவணனிடம் கூறுதல்

மேக வர்ணர் தீக்கைச் சரத்தினால்
வெட்ட ராக்ஷசி தாடகை மாண்டபின்
தேக முத்த சிறுவரி ரண்டுபேர்
சேர்ந்த மாரியவான் சின்ன மாரியான்
ஆக மெத்தப் புழுங்கிக் கலங்கியே
ஆற்றாம லஞ்சித் தோற்றோடி னார்கள்

இந்திரசித்து போருக்கு வருதல்

போக மக்களி லங்கை புகுந்துதான்
புரிய ராவண னுக்குரை செப்பவே
செப்ப யிந்திர சித்தனை யேவினான்
சேகரஞ் செய்து மேகத்திலே வந்தான்

56.17. கோர்க்க உன்னி - சேர்த்து நினைத்து வரிசிலை - அம்பு. கணபதி- விநாயகர். கூட்டி- தியானித்து. 56.19. ஆப்பு - மலை, மரம் முதலியன பிளக்கும் கருவி. 56.20. வலு தாடகை- வலிமையான தாடகை. 56.21. அட்ட திக்கு - எண்திசை. யாகம், ஓமம் - யாகச் சாலைகள். 56.22. செவத்துமே - சிவந்துமே. மாகம் - ஆகாயம். செம்மேகம் பரந்துவே - மேகங்கள் சிவந்த நிறமானது வானத்தில் பரந்ததுவே. 56.23. தீக்கை சரத்தினால் - வலிமையான கையிலுள்ள அம்பினால். 56.24 தேகமுத்த - உடல்வலிமை யற்ற. சிறுவர் - தாடகையின் இரு புதல்வர்கள். மாரியவான், சின்ன மாரியான் - இரு அரக்கர்களின் பெயர்கள். 56.27 இந்திரசித்து - இராவணன் மைந்தன் பெயர். சேகரம் - படை கூட்டம்.

He fixed a dart to his well-lined bow
And praying to Gaṇapathi, lord of the hosts
And his own preceptor Vacittar
He shot it at the monstrous ogress.

THE DEATH OF TĀṬAKAI

The deadly arrow pierced the breast of the demoness,
Like a powerful wedge into a great hill;
And she fell down dead cut to pieces sixteen.
The crimson flood pouring from her body
Flowed everywhere, as a sea incarnadine;
The very sky and the clouds became ruddy with it.

THE TWO SONS OF TĀṬAKAI REPORTING TO RĀVĀṆA ABOUT TĀṬAKAI'S DEATH

After Tāṭakai was slain by Rama's fiery dart,
Her two sons, (lads not so strong) Māriyavāṉ
The elder and the younger, unable to bear the loss
Of their mighty mother, fled in fear and confusion,
And informed Rāvaṇa in Laṅka: and he despatched
[75]Intirajit to fight with the killers of Tāṭakai;

75. Intirajit - The famous son of Rāvaṇa, as conqueror of Intira.

ஒப்பி லாபத்துக் கோடி யரக்கரும்
ஒன்பது கோடிப் பூதப் படையுமாய்

வைப்ப தாய்ப்பர மேகத்திலே வந்து
மாமுனி வார்வளர்க் கிறவேள் வித்தீ
வெப்ப மாய்ப்புகை மேலெழுந்தாப் போல
வெல்லு வோமென மேகத்திலே நின்றார்
நின்று மேகப் படலத்தி லேயவர்
நிறைந்த சேனை மறைந்தங் கிருக்கவே

தாடகை இறப்பால் முனிவர்கள் மகிழ்தல்

வென்று தாடகையைக் கொன்ற போதிலே
வேத மாமுனி வோர்தேவ தேவரும்
நன்றி செய்தவன் வைகுண்ட ராமனே
நம்மைக் காத்தவன் நாரண ராமனே
என்று மேபுட்ப மாரி சொரிந்தனர்
இன்ன மென்ன சகாயம் செய்வோமெனச்

இராமன் அம்பின் மகிமை

செய்ய மந்திரத்தை யுச்ச ரித்துத்தான்
சிவசங்கர நாதன் கிருபை யால்(லே)
பைய வாளி பலதும் வருத்தினர்
பார வாளியின் பேரை விளம்புவோம்

தையல் சத்தி பராசத்தி வாளியும்
தரியலர் புரம்எரி யிட்ட வாளியும்
மையல் சேர்மதன் மாய்ந்திட்ட வாளியும்
வாலை வாணனை மாய்த்திட்ட வாளியும்

56.29. பரமேகம்- உயர்ந்த வானவெளி. 56.31. மேகப்படலம் - வான்வெளி பகுதி. 56.34. புட்ப மாரி - பூக்களை மழை போல சொரிதல். சகாயம் - உதவி. 56.35. செய்ய மந்திரம்- செய மந்திரம்; வெற்றி மந்திரம். சிவசங்கர நாதன் - சிவன். கிருபை - அருள். 56.36. வாளி - அம்பு. 56.37. தையல் சத்தி, பராசத்தி - உமையவள். தரியலர் புரம் எரியிட்ட- மூன்று கோட்டைகளிலிருந்து கொண்டு கொடுமை பகைவர்களின் கோட்டையைத் தீயிட்ட; சிவன் முப்புரங்களை வதைத்தான் என்பது புராணச் செய்தி. 56.38. மையல் சேர்மதன் - மயக்கம் ஏற்படுத்துகின்ற மன்மதன்; சிவன் தவத்திலிருக்கும் பொழுது மன்மதன் மலர் அம்பு தொடுக்க அவனைச் சிவன் மாய்த்தது புராணச் செய்தி.

And he came, with millions of Rakshasas and goblins,
Fierce and stout, hovering in the sky,
Even like the smoke rising from the sacrificial fires,
And lay hiding behind the fleecy clouds.

THE SEERS REJOICING AT THE DEATH OF TĀṬAKAI

At the sight of the evil demoness falling to Rama's arrows
The vedic sages and the celestials rained flowers from on high;
Singing the praise of Vaikuṇṭarāma and Nārāyaṇar
As the only one who saved them,
To whom they owed gratitude eternal.

THE POWER OF RAMA'S ARROWS

By the grace of lord Sivasaṅkara,
As Rama chanted the respective mystic syllables
Pertaining to the particular arrow divine,
His victory was sure and certain.
Let us now list the various weapons,
Wielded by the lord; the arrow of Uma, Goddess Parasakthi;
The arrow of Siva that burnt the triple cities;[76]
The arrow that burnt Manmath,
And that which killed Pāṇācūraṉ;[77]

76. Triple cities - Flying cities of Gold, Silver and Iron, Burnt by Siva.
77. Pāṅācuraṉ - A demon devotee of Siva.

திட்ட வட்டக் கயமுகன் அஞ்சவே
செல்லக் கணபதி வென்றிட்ட வாளியும்
வட்ட மிட்டே வரும் வரபக்கணை
வருண னத்திர மருணன் கைவாளியும்
அட்ட திக்குறு பாலகர் கைக்கணை
ஆதித் தன்கணை சந்திரன் கைக்கணை
இட்ட மானதோர் எமனார் தன்கணை
இந்தி ரன்கணை யக்கினி யத்திரம்
அக்கினி யத்திரம் பிரம (அ)த்திரம்
ஆதி வைகுண்ட மால்சக்க ராயுதம்
விக்கி னேஸ்வரன் கைக்கணை யாதியாய்
வெற்றி வேலம்பு மாலம்பு கோலம்பு
முக்கி அக்கினி அம்பை விழுங்கிடும்
முக்கண்ணன் சடையிற் கங்கை அத்திரம்
சக்கரஞ் சங்கு யித்தனை யாயுதம்
தவமா முனிவோர் கள்வ ருத்தினார்

இராமனை முனிவர்கள் வாழ்த்துதல்

வருத்தி வந்த படைக்கலத்துக் கெல்லாம்
வரப்பிர சாத மகிமை யிருப்பதால்
குருக்கள் மாமுனி வோர்கள் கொடுப்பதால்
கோடிப் பூதப்படை யேவல் செய்யுமாம்
திருத்த னாரருள் சேரும்படை யெல்லாம்
நீல வர்ணர்க்கு வாழ்த்திக் கொடுப்பாராம்

56.39. கயமுகன் - கயமுகன் என்ற அரக்கன். கண்பதி - கணபதி. கயமுகன் என்னும் அரக்கன் விநாயகரால் கொல்லப்பட்டு அவரின் வாகனமான பெருச்சாளிஆனவன் என்பது புராணச் செய்தி. 56.40.வரப்பக்கணை - கருடன் அம்பு. வருணன் அத்திரம் - வருணன் கையிலுள்ள அம்பு. அருணன் - வருணபகவான். 56.41. அட்டதிக்கு பாலகர் - எண்திசைகளையும் காவல் பார்க்கும் பாலகர்கள். ஆதித்தன் - சூரியன். 56.42. அக்கினி - நெருப்பு. 56.43 அத்திரம் - அம்பு. ஆதி வைகுண்ட மால் - திருமால். 56.44. விக்கினேஸ்வரன் - விநாயகன். வேலம்பு - முருகன் கையிலுள்ள அம்பு. மாலம்பு - திருமால் கையிலுள்ள அம்பு. கோலம்பு - அழகிய அம்பு. 56.45. முக்கி - மூழ்கச் செய்து. முக்கண்ணன் - மூன்று கண்ணுடையார்; சிவன். சடையிற் கங்கை - முடியில் கங்கையைச் சூடியவன்; சிவன். 56.46. வருத்தினார் - வரும்படிச் செய்தார். 56.47. பிரசாத மகிமை - தெய்வீக தன்மை. 56.48. குருக்கள் - ஆசான்கள். ஏவல்- தொண்டு. 56.49. நிருத்தனார் - சிவன். நீலவர்ணர் - திருமால்.

The dart that helped Gaṉapathi to slay the demon Kayamukaṉ;[78]
The dart of Karuṭaṉ circling the empyrean;
The dart of Varuṇa and the dart of Aruṇa;
The arrows in the hands of Eight Guardian lords;
The dart of the Sun; the dart of the Moon;
And the weapon of Yama the God of death;
That of Intira and of Akkṉi;
The great Brahmastra;
The whirling discus of the lord of Vaikuṇṭa;
The arrows again of Viṉēsvaraṉ, the victorious;
The victorious spear of Muruka and the weapon of Tirumāl;
The dart of Ganga neutralising the weapon of Akkṉi.
All the divine weapons of all the Gods,
The holy sages brought down to charge Rama's armoury.
Given by the sages and his preceptors,
They would summon myriads of goblin hosts to the invoker.
The great dancer Siva, gave with his blessings,
All these weapons to the blue - hued God;

78. Kayamukaṉ - A demon slain by the God Ganesa.

தீர்த்த மான தசரத ராமர்க்குத்
தீக்கை தன்னில் முனிவர் கொடுக்கவே

தாடகையை இராமன் மடித்ததை மேலோர் அறிதல்

முனிவரே தம்பி லட்சும ணருக்கே
மோக வாளிய னேகங் கொடுமென்றார்
கனிவாய் ரெகுரா மன்கற் பிக்கவே
கனவா ளிமுன் சொன்ன வகைப்படி
படியில் லட்சு மணருக் கருளவே
படைகொட் டெழுத்தால் முத்திரை சாற்றியே

அடிகள் பஞ்சாக்ஷரம் செப்பினோ மும்மை
அழைக்கும் வேளையி லேவரு வீரே
வடிவழ கன்திரு மால னுப்பவே
வைகுண் டத்தில் கெருடனி டத்திலே

குடிகொண் டங்க டங்கிட ராமனும்
கூண்ட தம்பியுந் தசரதன் பாலகர்
பாலர் தாடகையைச் செயித்தா ரென்றே
பரமன் பார்வதி பண்ணவம் விண்ணவம்
தால மானதி லீரே ழுலகமும்
சந்திர சூரிய ரிந்திரன் மெய்க்கவே

முனிகள் மீண்டும் வேள்வி செய்தல்

மாலுடன் தம்பியைக் காவ லாக்கியே
மாமுனி யொருவேள்வி செய்தா ரங்கே
சீல வேள்வி யெழும்பும் புகையிலே
தேக ராக்ஷசர் மேகத்தில் கூடினார்

56.50. தீர்த்தமான - சுத்தமான. தீக்கை - விரத நியமம். 56.51. மோக வாளி - விருப்பம் தரும் அம்பு. அனேகம் - மிகுதியாக. கனவாளி- மிகுதியான அம்புகள். 56.53. கொட்டெழுத்தால்- அளவில் பெரிய எழுத்துக்களால். முத்திரை - இலைச்சினை. 56.54. அடிகள் பஞ்சாக்ஷரம் - சிவமந்திரமாம் 'நமசிவாய'. 56.5. வடிவழகன் - வடிவத்தில் பேரழகன். கெருடன் - திருமால் வாகனம். 56.56. அங்கு அடங்கிட - அங்கே (வானுலகத்தில்) சென்று அமைதியாயிருக்க. கூண்ட - இராமனுடன் இணைபிரியாது பொருந்திய. 56.57. பரமன் - சிவன். பண்ணவம் - தேவருலகம். விண்ணவம் - விண்ணுலகம். 56.58. தாலமானதில் - உலகமானதில். மெய்க்கவே - புகழவே. 56.59. மால் - திருமாலாகிய இராமன். 56.60. சீல - மேன்மையான. தேக ராக்ஷசர் - பெரிய வடிவமுடைய அரக்கர்.

And the sages gave him too
Initiation, proper, to the presiding deities.

THE CELESTIALS ABOVE BECOME AWARE OF THE SLAYING OF TĀṬAKAI BY RAMA

"Please give my brother too, desirable weapons
Requested Rama to the sages
And accordingly the younger brother was bestowed
With exceeding numerous darts and weapons!
"We will chant Lord Siva's name, when we require you".
And the divinities went back to their respective abodes,
The tidings of Tacarata's sons having destroyed Tāṭakai,
Reached the celestial world of the Devas,
And the world of Siva and Pārvati:
And the entire earth came to know about it;
The twice-seven worlds rejoiced
With the Sun and the Moon and Intira, besides.

THE SAGES RECOMMENDING THE SACRIFICES

With Rama and his brother standing guard
The sage began the sacrifice interrupted earlier,
In the smoke sent forth by the auspicious fires,
The demons with monstrous bodies congregated
And began to come down, roaring blasphemies:

அரக்கர்களை இராம இலட்சுமணர்கள் அழித்தல்

கூடி யார்ப்பரித் தார்முனி வேள்விக்கே
கோவிந் தன்சரக் கூடங்கள் கட்டினார்
நீடி மேகத் தில்சூழு மரக்கரை
ரெகுரா மரும் லட்சு மணருமாய்
தேடி யம்பெடுத் தெய்திட ராக்ஷசர்
சேனை பட்டு சிரங்கள் விழுந்ததே

வாடி ராக்ஷசர் ஓடி யொளித்திட
வந்த சேனை பலதும் விழுந்திட
விழும ரக்கர் தலைகள் மலைகள்போல்
வெங்கு ருதிகள் வேலையி லாறுபோல்
பழுது தாடகை பாலரி லொருதனை
பார வேலினா லேமனூர் சேர்த்தனர்
கொழுக ராவணன் பால னிலங்கையில்
கூடி னான்விழுந் தோடியுள் ளஞ்சினான்
வழுவில் லாமுனி வேள்வி முடித்தனன்
மாலுந் தம்பியும் மாமகங் காக்கவே.

கவிக் கூற்று

விருத்தம்

57. காக்குமால் கிருபை யாலே கனகஞ்சூழ் மிதுலை நாட்டில்
[35]சேர்க்குபொற் கலப்பை நாவில் சீதையாய்ப் பிறக்க ராமன்
தார்கொண்டு வதுவை சூடும் தகைமையைச் சபையிற் றானே
ஏற்கயா னறிந்த மட்டும் எடுத்துரை செய்கு வேனே.

56.61. சரக்கூடங்கள் - அம்பினால் ஏற்படுத்திய மறைப்பு. 56.62. நீடி - பொருந்தி. 56.63. சேனை- படை. பட்டு - இறந்து. சிரம் -தலை.56.64. வாடி - மனந் தளர்ந்து. 56.65. குருதி - இரத்தம். வேலை - கடல். 56.66. பழுது தாடகை - இறந்த தாடகை. ஒருதனை - ஒருத்தனை. பாரவேல் - வலிமையான 'வேல்' என்ற படைக்கருவி. எமனூர் - எமலோகம். 56.67. கொழுக ராவணன் பாலன் - வலிமையான இராவணன் மகன் இந்திர சித்து. உள்ளஞ்சினான் - நெஞ்சத்தில் அச்சம் கொண்டான். 56.68. வழுவில்லா முனி - குற்றமில்லா முனியாம் விஸ்வாமித்திரர். மாமகம் - பெரிய ஆகம நெறிமுறைகள். 57.1 கிருபை - கருணை. கனகம் - பொன். மிதுலை - மிதிலை; ஜனகன் நாட்டின் தலைநகர். 57.2 பொற்கலப்பை - பொன்னால் செய்யப்பட்ட உழவுக் கருவி. நா - கலப்பையின் கூர்முனி. 57.3. தார் கொண்டு - மாலை அணிவித்து. வதுவை - திருமணம். தகைமை - செய்தி.

---

35. சேற்கு

Kōvintarāma built with his arrows,
A canopy protective, over the sacrificial pits;
And seeking out the Rakshasas hidden in the clouds,
Rakurāma and Lakshmaṇa shot their divine arrows
And all the demons were killed forthwith,
Their heads rolling on the ground.
The rest of the demon-hordes fled in fear;
The pile of heads of the slain demons
Were heaped like hillocks;
Their pouring blood ran like rivers:
One of the sons of Tāṭakai was sent to the land of death,
And mighty Rāvaṇa's own son Intirajit,
Went back to Laṅka, his heart full of fear;
Thus the sage completed his sacrifice
With Rama and Lakshmaṇa safeguarding the proper conduct
Of the rituals, according to the Agama texts.

57. And now I shall relate as far as I know,
How by the grace of Tirumāl, the Protector
In the city of Mitilai at the coulter of a plough.
In a furrow Sita was born,
And how Rama came to marry her.

மிதிலையின் சிறப்பு

58\. செய்ய மாதவர் வேள்வி யாகஞ் சிறக்குந் தமிழ்மிதுலை
தேசத் தோர்விசு வாசத் தார்புவி செழிக்கும் தங்கமிதுலை
தையல் பாகர்க்குச் செய்ய சேத்திரம் தழைக்கும் வளர்மிதுலை
சாத்தி ரங்களின் சத்தெல் லாம்வெகு தருமஞ் செய்யுமிதுலை
தருமத் தொழில்நெகி ழாம லேசக லோர்(கள்) வளர்மிதுலை
தத்திவர்த் தகர்கொற்ற வர்குடி தழைக்குஞ் ஜெயமிதுலை
அருமைத் தொழில் காராளர் கண்ணா ளர்வளர் மிதுலை
அடுத்தார் கலிதடுத்தே செங்கோ லெடுத்தாள் மன்னர்மிதுலை
எடுத்தே [36]தர்மங் கொடுப்பா ருண்டு இரப்போர் கிடையாது
ஈசனைக் கைலாசனைத் தினம் பூசனைச் செயுந் தாசன்
அடுத்தே பெரிய வர்க்கே கவிஞ ருக்கே உபசரிப்பார்
ஆலய மன்னச் சத்திரமடம் அந்தணர் பிரம சேத்திரம்
சேத்திரங் குருசேத் திரம் சத்திசேத்திர மோடும் பாத்திரம்
சிறப்பா யாக உத்சவம் தொனிபிறப் பேரிகை வாத்தியம்
கோத்திரம் குடிகோத் திரம் பிரம கோத்திர முயர்மிதுலை
கோமான் சனக னானார் வெகுசீ மானாளும் மிதுலை
ஆளுஞ் சனகனார் தேசத் தரசன் றனில் சீமான்
அழகாம் மிதுலை யிலேகுடி யான பேர்வெகு சீமான்
வாழுந் திரவி யத்தில் பெருவணிகர் மக்கள் சீமான்
மதியானதில் மிதுலை பெருவளஞ் சேர்வள நாடு

58.1. தமிழ் மிதுலை - தமிழ் மொழி பேசப்படும் மிதிலை. விசுவாசத்தார் - நம்பிக்கையானவர். 58.2. தையல் பாகர் - உமையொரு பாகர்; சிவன். செய்ய சேத்திரம் - உருவாக்கப்பட்ட கோயில். தழைக்கும் - செழிக்கும். சாத்திரங்கள் - வேதங்கள். சத்து - உள்வீடு 58.3. நெகிழாமல் - வழுவாமல். சகலோர் - எல்லாவித மக்கள். வர்த்தகர் - வியாபாரி. கொற்றவர் - அரசர். ஜெய - வெற்றி. 58.4. காராளர் - வேளாள சாதியர். கண்ணாளர் - கம்மாள சாதியர். அடுத்தார் கலி தடுத்தே - தன்னை நெருங்கியவர் துன்பம் நீக்கியே எடுத்தாள் - எடுத்து ஆளுகின்ற. 58.5. கைலாசன் - சிவன். தாசன் - பக்தர். 58.6. பெரியவர் - வயதில் பெரியவர். ஆலயம் - கோயில். அன்னச் சத்திரம் - உணவுமடம். அந்தணர் பிரம சேத்திரம் - பிராமண வேதியர் தங்குமிடம். 58.7. சேத்திரம் - கோயில். குருசேத்திரம் - கல்வி அறிவிக்கும் குருக்கள் வாழுமிடம். சத்தி சேத்திரம் - உமையவள் கோயில். ஓடும் பாத்திரம் - நதிநீர் ஓடும் வாய்க்கால். உத்சவம் - தெய்வங்களுக்கு எடுக்கப்படும் சிறப்பு வழிபாடு. பேரிகை வாத்தியம் - ஓர் இசைக் கருவி. 58.8. கோத்திரம்- சாதி. குடி - குடி மக்கள். பிரமம் - பிராமணர். கோமான் - பேரரசன். வெகுசீமான் - பெருந்தலைவன். 58.9. சீமான் - தலைவன். 58.10. திரவியம் - செல்வம். மதி- அறிவு.

---

[36] தர்மங்

MITILAI'S GREATNESS

58. The city where perfect men of askesis perform Yagnas,
Where the people are loyal to the king;
Where the earth yields foison a - plenty;
A city with well - structured temples to the Lord Siva,
With Goddess Uma as part of his body:
Mitilai where the essence of scriptures and the Vedas
Are followed by the righteous,
Who remain ever unswerving from virtue;
Where all kinds of people lived in amity;
Traders and craftsmen and smiths and farmers flourished,
Where the king lived only to relieve the troubles of others,
In Mitilai there were people to give charity;
But none there was who begged for alms,
Elders, wisemen and poets were honoured here.
Temples and choultries and places where Brahmins would rest,
Preceptors' quarters and fanes to the Goddess Shakti were here
Rivers ran full; holy sacrifices were performed regularly;
The sound of drums and tabors resounded ever.
Mitilai where the clans lived in honour,
Where Brahmins lived noble lives,
In Mitilai ruled the king Janakan, wise and good,
All were noble men from the king downwards.
Men of noble birth resided there.
Merchants and traders earned much wealth;
Mitilai was rich in wise men too:

வளருங் கன்னல் செந்நெல் சொன்னம்
மனுநீதி தப்பாது செய்மன்ன வர்வள நாடு
தளஞ்சேர் பரியானை கெதிதரும் நால்வகை சேனை
தரிப்பாய் வெகுசிறப்பாய னுசரித் தேவளர் நாடு
தரித்தே காராளர் மேன்மோளர் கண்ணாளர்
சகலோர் பலசாதியும் செலவந் தழைத்தே வளர்நாடு
பரித்தே செங்கோல் செலுத்த வறுபதி னாயிர மமைச்சர்
பதிசேர் வளம்மிது லாபுரி பட்ட ணமிது தானே

ஜனகர் குழந்தைப்பேறு இன்மையால் தவம் புரிதல்

தீரனே தினக ரற்கும்மனைத் தனக்கு மிச்சை ஒன்றுதான்
சந்ததி நமக்கில் லையே எனமந்தி ரியுடன் சொல்லியே
மானுடன் மழுவேந்து வாருமை மணவா ளனை நோக்கியே
வனத்தில் தவமுடித் தான்சிவன் வந்தே காட்சிக் கொடுத்தார்

சிவன் வரம் அளித்தல்

காட்சி கொடுத்த ரனார்ச னகனோடு ரைசொல்வார்
கடிதாய் தவம்புரிந் தாயுயர் படியாள் தினகரனே
ஆக்ஷி யாலுனக்காண் பால் யன்மைத் தானிலை யானால்
அருள்வோ மொருபெண் பால்புவி தருவாள் மகளுனக்கே
மகளாய் வளர்த்தெ டுப்பாய் தனுவளைத் தாருக்கே கொடுப்பாய்
மகத்துவ முனக்கென் றேசிவன் மறைந்தான் சொர்க்க முறைந்தான்

58.11. கன்னல் - கரும்பு. சொன்னம் - சொர்ணம். 58.12. பரி - குதிரை. தரிப்பாய் - நிலைபெற்று. அனுசரித்தே - பின்பற்றியே. 58.13. தரித்தே - நிலைபெற்றே. காராளர் - வேளாளர். மேன் மோளர் - ஒரு சாதியர். கண்ணாளர் - கம்மாள சாதியர். 58.14. பரித்தே - குடிமக்களைப் பாதுகாத்தே. பதி - உலகம். வளம் - செழிப்பு. 58.15. தீரனே தினகரர் - வீரனான ஜனகர். மனை - இல்லம். இச்சை - விருப்பம். ஒன்றுதான் - குழந்தை இல்லையே என்ற விருப்பம் ஒன்றுதான். சந்ததி - வாரிசு. 58.16. மானுடன் - ஜனக மகாராஜா. மழுவேந்துவார் - மழு ஆயுதத்தை கையில் தரித்தவர்; சிவன். உமை மணவாளன் - பார்வதியின் கணவன்; சிவன். 58.17. அரன் - சிவன். கடிதாய் - வலிமையாய். உயர்படியாள் தினகரனே - உயர்ந்த உலகம் ஆளுகின்ற ஜனகனே. 58.18. ஆக்ஷி - ஆட்சி. ஆண்பால் - ஆண் குழந்தை. அயன்மைத்தான் - நிறைவேறா இடந்தான். இலையானால் - இல்லாததினால். பெண்பால் - பெண் குழந்தை. புவி தருவாள் - பூமியிலிருந்து கிடைப்பாள். 58.19. தனு - வில். மகத்துவம் - மேன்மை.

The land did yield sugarcane fine, paddy and gold.
Never did any swerve from Maṉu's code.
Four kinds of armies were there;
Infantry, chariotry, cavalry and elephantry.

The Vellalas, Molas and blacksmiths,
And other guildsmen lived in harmony and amity,
The king had ministers sixty thousand in number:
This was the great prosperous city of Mitilāpuri.

THE KING PERFORMING AUSTERITIES FOR GETTING CHILDREN

But Jaṉakaṉ was not blessed with children yet!
As advised by his ministers he went to the forest
And performed penance towards Uma's spouse, Lord Siva,–
The Lord armed with the axe and the leaping deer
For a long time, till the God appeared 'fore him.

SIVA GRANTING A BOON

Hara who appeared before Jaṉakaṉ spake thus:
"Hard and pleasing to us was your penance, O, king!
It is ordained you will never have male issue!
But we will grant you a female child;
Goddess Earth herself will yield her to you;
Bring her up as your darling daughter;
Give her in marriage only to the hero,
Who can bend the bow, she is found with;
May you prosper" said the Lord.
And vanishing from his sight, went back to his own abode.

பொற்கலப்பையில் பெட்டகம் தட்டுப்படல்

புகழாய்த் தவமு டித்துத் தினக ரனார் மிதுலையிலே
புகுந்தார் செகம்புரந்தார் லக்ஷம் பொற்கலப் பையுண் டாக்கினார்
உண்டாக் கும்பொற் கலப்பை எல்லாம் உழுவோர் வசங்கொடுத்தே
உழுவீர் பூமி யிடமாய் யெழுமொரு காரணப் பொருடான்
கண்டாலு கொடுவரு வீரென கற்பித் தார்தின கரனார்
காவலன் பண்ணை நிலத்தில் பொற்கலப்பை யுழுந் தலத்தில்

சீதையை ஜனகன் கண்ணுறுதல்

பொற்க லப்பை உழவேயொரு பெட்டக மெழும்பினதே
பூபதி கண்டெடுத் தானுடன் பெட்ட கந்தனைத் திறந்தான்
வற்க மாய்ப்பொன் மகளும் கூடவளை யாத்தனு வொன்றும்
வாழ்க்கை சீர்சக லாக்ஷியாஞ் சீதை நாச்சியாரைக் கண்டானே

சீதையைச் சீராட்டிப் பாராட்டல்

நாச்சி யாரெழும் பிடவே மேள வாத்தியம் முழங்கிடவே
ராச ராசர் கொண்டாடவே தமிழ்நா வலரிசை பாடவே
பூச்சி சிங்காரப் பல்லக்கிலே சீதை பொன்மா தெழுந்தருள
புகுந்தார் தினகர னார்மியர் பொன்மாளிகை தனிலே
மாளிகை தனில்வரவே யந்த மன்னவன் சொந்த தேவிமார்
மகளைக் கண்ட வுடனே சிந்தை மகிழ்ந்தே முலைசுரந்தே

ஊழியூழி யிடவே யெமக்கு உண்மை யாய்வந்த மகளே
உன்னைத் தானுயர் பொன்னைப்போல் சிவனு தவசெய்த மகளே
உதவி நவரெட் டினம்போல் உதித்த பொன்ன மகளே
உன்னை யா(ர்) செய்ததவமோ யிந்த உலகோர் செய்த தவமோ

58.20. தினகரன் - ஜனகன். செகம் புரந்தார் - உலகத்தை ஆட்சி செய்தார். பொற்கலப்பை - பொன்னாலாகிய உழுகருவி. 58.21. பொருடான் - பொருள்தான். 58.22. கொடுவருவீர் - கொண்டு வருவீர். கற்பித்தார் - கட்டளையிட்டார். காவலன் - அரசன். பண்ணைநிலம் - மருதநிலம். 58.23 பெட்டகம் - பெட்டி. எழும்பினதே வெளியில் தெரிய வந்ததே. பூபதி- அரசன். 58.24. வற்கமாய் - மரவுரி. வளையாத்தனு - வளையாத வில்; சிவதனுசு. சகலாக்ஷி- திருமகள். நாச்சியார் - பெருந்தேவி. 58.25. தமிழ் நாவலர் - தமிழ் மொழி பேசும் பண்டிதர்.இசை - புகழ். 58.26. பூச்சி சிங்கார பல்லக்கு - பொன்மயமான புள்ளிகள் பொறிக்கப்பட்ட அழகான பல்லக்கு. 58.27. தேவிமார் - மனைவிமார். முலைசுரந்தே - மார்பில் பால் சுரந்தே. 58.28. ஊழி - நீண்டகாலம். இடவே - பெயர் சொல்லிடவே. சிவனு தவசெய்த மகளே - எங்கள் தவத்தால் சிவனால் தரப்பட்ட மகளே. 58.29. நவரெட்டினம் - நவரெத்தினம். பொன்ன மகளே - பொன் போன்ற மகளே; சீதையே.

A CASKET BEING SEEN NEAR A GOLDEN PLOUGH

Completing his penance, Janakan returned to Mitilai;
A lakh of golden ploughs he caused to be made,
Which he gave to the ploughmen of the land with the command:
"Go thou and plough all our lands; bring to me
Whatever strange object you may see on earth
During your ploughing". And the tillers
Began their work as ordered by the king.
While so, a certain farmer tilling a field
Hit upon a casket in the furrow he was ploughing,
The which was promptly reported to the ruler.
And the king came to the spot and found
To his great joy a casket golden;
Wherein he found a golden baby-girl and a bow;
This was Goddess Lakshmi incarnate as Sita!

THE ADVENT OF SITA BEING CELEBRATED

As the Goddess came out of the earth
The king of kings Janakan celebrated it with great eclat!
The pipes and tabors sounded musically;
Tamil bards sang the praise of the king.
In a decorated palanquin with lovely fret-work,
Gazelle-eyed Sita entered royal palace golden.
Whereupon the king's own queens
On seeing the princess grew glad of heart.
Their breasts spirting milk, they said:
"O our daughter true, who has come to honour our name
For aeons to come! Daughter dear,
Granted to us by Siva because of our long tapas;
Golden girl! bright as nine kinds of gems
By whose tapas, ours or the people's

மதலை யொன்றில் லாமல்பெரு மலடி ருந்த மனையில்
மைந்தன் கலிதீர்க் கவென வந்த தோர்பொன் மகளே
வந்தாய்கெதி தந்தாய்மன மகிழ்ந்தோமுனைப் புகழ்ந்தோம்
மன்னவன் தினகர ருக்குப்பெரும் வாழ்வா னதோர் மகளே
பிந்தா வீரலட் சுமிமுதல் பெருகும் [37]சொர்ண லட்சுமி
பிள்ளைக் கலிதீர்க்க வந்து பிறந்தா யாதி லட்சுமி
ஆதி மகாலட் சுமிபரஞ் சோதி போல்வந்த போதே
அன்ன தானமுஞ் சொர்ண தானமு மளிப்பா ரந்தணர்க்கே

சீதையைத் தாலாட்டல்

வேதி யர்கும்பம் பூரிக்கப் பாக்கு வெற்றிலை சீனிபாரிக்க
மெல்லி யர்செய சோபனம் சொல்லி விளக்குரவை முழக்கி
முழக்கி மேளந் தொனிக்கச் சீதை முகம்பார்த்தவள் சிரிக்க
முகந்தே சந்திரகாந்தத் தொட்டில் மீதே பெண்ணை ஏற்றினார்
குழைக்கே கொந்தளப் பொன்இரு விழிக்கே மையு மெழுதிக்
கூட்டினார் தொட்டி லேற்றினார் தாதி மூப்பிமார் தாலாட்டினார்.

தாலாட்டு

59. *மூப்பிட் டரசாண்ட முகனைத் தினகரற்குக்*
கூப்பிட்ட செல்வங் கொடுக்கவந்த பொன்மகளோ
பொன்மகளோ ராச புரந்தரியோ சுந்தரியோ
நன்மைதர வந்துதித்த நல்லசீதா லட்சுமியோ

லட்சுமியோ கற்புநிலை யுள்ள பத்தினியோ
உச்சிதமாய் சொன்னம் உதவும் மகாலட்சுமியோ

58.30. மதலை - குழந்தை. பெருமலடி - குழந்தை பேறற்றவள். மனை - இல்லம். மைந்தன்- ஜனகன். கலி - துன்பம். 58.31. கெதி - அடைக்க லம். 58.32. பிந்தா வீரலட்சுமி, சொர்ண லட்சுமி, ஆதிலட்சுமி - திருமகளின் வெவ்வேறு பெயர்கள். 58.33. ஆதிமகாலட்சுமி - திருமகள். பரஞ்சோதி - கடவுள். 58.34. வேதியர் - அந்தணர். கும்பம் - குடம். பூரிக்க - நிறைந்து விளங்க. சீனி பாரிக்க - சர்க்கரையைப் பரப்ப. செயசோபனம் - வெற்றி பொருந்திய வாழ்த்துக்கள். குரவை - மகளிர் நாவால் குழறி எழுப்பும் சந்தோஷ ஒலி. 58.35. தொனிக்க - ஒலிக்க. முகந்தே - எடுத்தே. சந்திரகாந்தத் தொட்டில் - குளிர்ச்சிப் பொருந்திய சந்திரகாந்த கல்லால் செய்யப்பட்ட தொட்டில். 58.36. குழை - காது. கொந்தளப் பொன் - தலைமயிர் போல் வளைந்த பொன்னால் செய்யப்பட்ட பொன்னாபரணம். தாதி மூப்பிமார்- செவிலித்தாயர். 59 1 மூப்பிட்டு - தலைமையேற்று. முகனைத் தினகரர் - நாட்டுக்கு முகம் போன்ற ஜனகருக்கு. 59.3. ராசபுரந்தரி - நாட்டைப் பாதுகாக்க வந்தவள். சுந்தரி - அழகி. 59.6. சொன்னம் - சொர்ணம்; பொன்.

37. சொன்ன

Have you come to remove our affliction
Of childlessness in this barren royal house,
For long without issues?
You have come to us;
Joyous we are! Praise we, the powers holy!
O, daughter who gives meaning to the life of the king!
Auric Lakshmi, born to relieve our barrenness!
They sang, gifts of rice and gold were given to Brahmins holy;

THE BABY-GIRL BEING PLACED IN THE CRADLE

The holy Brahmins chanted mantras with sacred vessels!
With auspicious betel, and betel-nut and sugar,
Women gave auspicious praise to the gods concerned!
They sang in holy chorus; and pipes spoke musically,
When the child princess was put into the royal cradle,
Made of moonstone: her ears adorned with golden jewel
And both her eyes beautified with collyrium,
As she was put into the lovely cradle,
Elderly matrons swung the crib.

LULLABY TO THE BABY PRINCESS

59. "O, are you the golden girl, come to give
Endless wealth to the far-famed king Mitilai's chief?
Are you the angel come to protect the land?
O golden girl! are you the Sitalakshmi
Born to bring prosperity to Mitilai country?
Are you the chaste Lakshmi incarnate?
Are you Mahalakshmi come to increase our stock of gold?

உதவும் தினகரனார் உளமகிழ்ந்து கொண்டாட
மதலைமொழி கூறவந்த மாணிக்கப் பொற்கொடியோ
பொற்கொடியோ நித்தம் பொருமி மலடிருந்த
முற்கவலை என்றதுயர் முழுதுந் தவிப்பவளோ

முழுதுமெங் கள்மூதாக்கள் முன்செய்த மாதவத்தால்
உழுதுவர பெட்டகத்தில் உதித்துவந்த சானகியோ
பொட்டகத்துக் குள்ளிருந்து பொற்கலப்பை நாவில்வந்து
அட்டாள தேசமெங்கும் ஆளவந்த ஜானகியோ
ஜானகியோ செல்வம் தருஞ்சீதா லட்சுமியோ
தேனமுதோ யீசனருள் தெள்ளமுதோ பெண்ணரசு
பெண்ணரசு சீதைப் பிராட்டியென்று பேருமிட்டு
கண்ணரசைத் தாராட்டிக் கனகநகை பூட்டினாரே.

சீதையை அலங்கரித்தல்

விருத்தம்

60. பூட்டினார் பூவையர் தாராட்டி னார்கள்
பொற்கனக ரெத்தினத்தால் பூஷ ணாதி
கூட்டினார் உலகம் மதியா வஸ்தும்
கோலவர்னப் பட்டாடை கொய்து டுத்து
நீட்டியகைக் காப்பணிந்து தோள்காப் பிட்டு
நிழலாட கண்ணாடி நெற்றிச் சுட்டி
சூட்டினார் சீதைநிறை பொன்போல் தேசிகர்
துணைப்பொன்போ லிணைப்பணியைச் சுமத்திட் டாரே.

சீதையின் முதலாண்டு சிறப்பு

ஏசல்

61. திட்டாந் திசைதப்புங் கப்பல்விட்டவன் கைவந்து சேர்ந்தாப்போலே
சீதாலட்சுமி பிறக்கத் தினகரனார் மனதும் மகிழ

59.8. மதலை மொழி - குழந்தை மொழி. 59 9. பொருமி - மனம் வருந்தி. 59.10. என்றதுயர்- எனது துயர். 59.11 மூதாக்கள் - மூதாதையர்கள். 59.13. பொட்டகம் - பெட்டகம். நா - கலப்பையின் கொழு. 59.14. அட்டாள தேசம் - மேலுலகம் உட்பட்ட நாடுகள். 59.18. கண்ணரசை - கண்போன்ற சீதாலட்சுமியை. தாராட்டி - தாலாட்டி. கனகநகை - பொன்னாபரணம். 60 1. பூஷணாதி - பொன்னாபரணங்கள் முதலியன. 60.2. மதியா - மதிப்பிட முடியாத. வஸ்து - சொத்து. கோலவர்ன - அழகிய நிறமுடைய. கொய்துடுத்து - நேரியாக உடுத்து. 60.3. கைகாப்பு - கைவளையல். தோள்காப்பு - தோளிலணியும் வளையல். நிழலாட - ஒளி வீச. நெற்றிச் சுட்டி - நெற்றியிலணியும் அணிவகை. 60.4. தேசிகர் - வேதம் ஓதுவோர். இணைப்பணி - ஈடில்லா ஆபரணம். சுமத்திட்டார் - அணிவித்தார். 61.1.திட்டு - மேடான தீவு.

Are you a ruby-radiant liana come to prattle
In lovely lisp, to cheer our king's heart?
Are you the golden vine, come to relieve my grief
Of barren solitude, and my distress entire?
Aren't you Jāṉaki from the casket in a furrow ploughed
As a result of the great askesis of our ancestors?
Aren't you Jāṉaki who has come to rule the land
And the upper regions of the air beside,
Coming out near the coulter of a golden plough
From within a casket? Are you she
Born to give us wealth and prosperity?
Are you nectar melliferous or essential ambrosia
Granted us by the grace of Eswara?"
Thus they carolled naming her as Sita
And swinging the cradle as they sang,
They put to sleep the baby - girl,
Adorned with golden jewels bright.

SITA DECKED WITH JEWELS

60. The maids all, did adore her singing lullaby,
After lullaby; with jewels of gold and rubies
Was she adorned; her garments silken, many-hued,
Priceless on earth, beautiful her word:
Her slender hands had golden bangles,
Besides armlets peerless of virgin gold;
And on her radiant forehead a *cuṭṭi*[79] sparkled.
And all the while holy men chanted Vedas.

SITA'S GROWTH

61. Even as a mariner at sea missing a landfall,
Reaching shore safely, king Jaṉakaṉ rejoiced

79. *Cuṭṭi* - A forehead jewel.

கட்டழகிக் கோராண்டு நிரம்பயிலே அன்னசொன்ன மாடை
கவிஞருக்கும் மறையவருக்கும் புவிஞருக்குங் கன(க)தானஞ் செய்தார்

சீதை பருவமடைதல்

இட்டமுடனே வயதிரண்டு மூன்றுநாலு ஐந்தா றேழாய்
இன்பமுட னெண்பிராய மொன்பதிலே தான்பருவ மானாள்
பட்டைரத்ன மணிமேகலை பாதம்ரண்டில் பத்துவிரற் பணியும்
பாடகந்தண் டைகொலுசு பருஞ்சிலம்பு சதங்கை யிசைபாட

சீதையை அலங்கரித்தல்

இசைசுதலித் துடையிளநூல் இடையதன்மே லிட்டஅரை ஞாணும்
ஏறிட்ட கச்சைப்பிறமும் மார்பில் சரப்பணி பதைக்க மாலை
நிசமுயர் தங்கஸ்தனத்தில் ரத்னகட்டாரிக்குத் துணிக்கச்சும்
நேர்கழுத்துக் காரம்பெரும் பூணுமக் கட்டான பட்டைக்கான்ற
அசையும் வள்ளைக் குழையதிலே அந்தமான கொந்தளப்பொன் னோலை
அதில்சிமிக்கு ராமராக்கு தங்கரேக்கு தொங்கல்சுட்டி குப்பி
திசையெங்கும் பிரகாசிக்கவே செம்பொன் னினால்வயிரக் கொப்பும்
சீதாலட்சுமிக் கணிந்து தாதிமார் களாயிரம் பேர்சூழ
சூழ்ந்திருக்க தினகரர்க்குச் சொந்த மகளாக வந்தசீதை
சொன்னலட் சுமியெனவே அன்னைபிதா வைத்து வளர்த்தாரே

61 2. கட்டழகி - சிறந்த அழகி; சீதை. சொன்னம் - சொர்ணம்; பொன். மறையவர் - வேதம் ஓதுவோர். புவிஞர் - பூமியிலுள்ளவர். 61.3. பருவமானாள் - ருதுவடைந்தாள். 61.4. பட்டை ரத்ன மணிமேகலை - பட்டை திட்டப்பட்ட இரத்தினத்தால் செய்யப்பட்ட இடையிலணியும் மணிமேகலை என்னும் ஆபரணம். பணி - ஒரு வகை ஆபரணம். பாடகம் - காலணியில் ஒரு வகை. தண்டை, கொலுசு, சிலம்பு, சதங்கை - இவைகள் காலில் அணியும் வேறு சில அணிகலன்களின் பெயர்கள். இசைபாட - ஓசை யெழுப்ப. 61.5. இசை- புகழ். கதலித் துடை - கதலித் தொடை; வாழைமரம் போன்ற தொடை என்றவாறு. இளநூல் இடை - மெல்லிய நூல் போல் சிறுத்த இடை. அரைஞாண் - இடையிலணியும் ஓர் ஆபரணம். கச்சைப்பிறம் - ஓர் ஆபரண வகை. சரப்பணி, பதைக்கமாலை - மார்பிலணியும் அணி வகைகள். 61 6 தங்க ஸ்தனம் - பொன் போலும் ஒளிவிடும் மார்பு. ரத்ன கட்டாரி - இரத்தினம்போல் ஒளிவிடும் குறுவாள்; மார்புக்கு உவமை. துணிக்கச்சு - துணியால் செய்யப்பட்ட மார்பைக்கட்டும் துணி. ஆரம் பூண் - மாலை என்ற ஆபரணம். அக்கட்டான பட்டைக்கான்ற அசையும் - அந்தவிதம் கட்டப்பெற்ற முலைக்கச்சுக்கு ஏற்ப அசையும். 61 7 வள்ளைக் குழை - கொடி போன்ற வளைந்த காது. அந்தமான கொந்தளப் பொன்னோலை - கறுத்த மயிர்போல் கருண்ட வடிவம் போல் திகழும் மகளிர் காதணி வகை. சிமிக்கு, ராமராக்கு, தங்கரேக்கு, தொங்கல், சுட்டிகுப்பி - காதணி வகைகளின் பெயர்கள் 61.8. வயிரக்கொப்பு - வயிரத்தால் செய்யப்பட்ட ஒரு காதணி. தாதிமார் - செவிலிமார். 61 9. சொன்ன லட்சுமி - சொர்ண லட்சுமி. வைத்து - பாதுகாத்து.

At the birth of Sitalakshmi
When she attained her first year
The happy monarch gave away food, gold and garments
To bards, Vedic sages and all people of the earth.
Thus Sita grew up passing her second, third, fourth
Fifth, sixth, seventh years and after the eight
In her ninth year she came of age.

SITA BEING ADORNED

To celebrate which she was adorned with
Girdles wrought of pearl, gems and rubies
Cut and polished; ten toe-rings adorned her feet twain
Besides jewels such as[80] *pāṭakam* and angle-rings and anklets
Variously called *Kolucu*, *Cilampu* and *Catankai* and *Taṇṭai*
Upon her lovely waist, slender as a thread;
Over thighs rotund like plantain-stems,
A zone of gold she wore. Chaplets and necklaces
And collars adorned her bosom, bright like chaste gold, and pointed
Like daggers radiant as rubies; over which
She wore a silken corset; around her neck
Were a carcanet of gold and a necklet,
Her necklaces swaying in tune with her heaving bosom
On her ears pliant like liana, she wore
Ear-jewels curved like dark curly locks;
Besides various kinds of ear jewels such as
Jimikki, *Rāmarākku*, *Tonkal*, *Cuṭṭi* and *Kuppi*
Besides diamond *Koppus* set in virgin gold
That cast their sheen in all directions,
A thousand handmaids attended on her,
Brought up by her parents like Swarnalakshmi herself.

80. *Pāṭakam* - A jewel worn around the ankles.

விசுவாமித்திரனோடு இராம இலட்சுமணர் வருதல்

வாழ்ந்திருக்கும் நாளையிலே மாமுனியும் மாலுமிளை யோனும்
வனந்தனிலே வளம்புதுமை அனைத்தையுமே இனந்தெளிவாய்க்
கண்டு
தாழ்ந்து முனிவரிடத் திலிந்த வனமதிசய மேதென்ன
சகலபுவி மாவலிதான் மகம்வளர்த்த பரிசெடுத்துச் சாற்ற
சாற்று மெக்கியம் வளர்க்கையிலே தானவர்வானர் வெருவதிருமால்
ஏற்றமுள்ள காசிபர னீன்ற மகவாக வுருவெடுத்து
ஏற்றமுள்ள காசி பரனீன்ற மகவாக வுருவெடுத்து
இரப்பவர் போல்மூன்றடி மண்ணெனக்குத் தருவாயென்று
உரைத்தவாறும்
வாறுகண்டு சுக்கிரன்போய் மறுத்துவழி செறுத்திடவும் மாயோன்
மாரணமாய் மதிமயக்கி ஓரடியா [38]லுலகளந்த வளந்தான்

இராமனுக்கு விசுவாமித்திரர் பகீரதி யாற்றின் வரலாறு கூறல்

தேறுமொழி மாலறிந்து செப்புகையி லோரகல நதிவர
திருமாலு மாறுகண்டு வருமுனியே இதுநதியே தென்றார்
ஏதெனவே மாயவர்க்கும் இளையவர்க்கும் முனிவசனம் சொல்வார்
இந்தநதி விந்தையதாய் வந்தகதை அதிசயந்தான் ராமா.

62. ராமா அதிசயந்தான் - அதிரெகு
ராமா அதிசயந்தான்
வங்கிச மயோத்தி யாளும் அங்கிச பிரகாச ராஜன்

61.10 வளம் - செழிப்பு. இனம் - அடையாளம். 61.11. தாழ்ந்து - பணிந்து. முனிவர் - விசுவாமித்திரர். மாவலி - மாவலி சக்ரவர்த்தி; விரோசநன் என்பவர் மகன். மகம் - யாகம். பரிசு - பெருமை. 61.12. எக்கியம் - யாகம். தானவர் - வித்தியாதரர் என்னும் தேவ சாதியர். வானர் - தேவர். வெருவ - அச்சமடைய. ஏற்றமுள்ள - பெருமையுள்ள. காசிபரன் - ஒரு முனி. மகவு - குழந்தை. 61.14. சுக்கிரன் - மாவலி சக்கரவர்த்தியின் மந்திரியின் பெயர்; மாவலி சக்கரவர்த்தியிடம் வாமன அவதாரமெடுத்து திருமால் மூன்றடி மண் கேட்க அவரின் உள்ளக் குறிப்பை அறிந்து அரசருக்கு அறிவுரை கூறியவன். செறுத்திட - சினத்திட. மாயோன் - திருமால். மாரணமாய் - மந்திரத்தால். மதிமயக்கி - அறிவை மயக்கி. வளந்தான்-சிறப்புதான் 61.15. செப்புகையில் - கூறுகையில். 61.16. மாயவர் - இராமர். இளையவர் - இலட்சுமணர். 62.2. வங்கிசம் - வமிசம். அங்கிச பிரகாச ராஜன் - அங்கிமான் என்று அழைக்கப்படும் சூரிய குலத்து புகழ்மிக்க அரசன் திலீபன்.

38. உலகளந்த

RAMA AND LAKSHMAṆA ARRIVING WITH VISVĀMITTIRA

While so, in Mitilai Visvāmitira and the princes
Walking through the woods came towards the city;
On the way the sage pointed out the history
Of a certain grove; "when the all-powerful Makāpali
Performed a great sacrifice intended
To make him invincible, ruler of the world,
The celestials became afraid and lord Tirumāl
Incarnated as the son of Kācipar, the sage
And came to Makāpali in a dwarf form
As if he were a solicitor of gifts;
And asked Makāpali for three paces of earth;
His preceptor Cukkiraṉ[81] tried to stop the gift
As he knew the visitor for what he really was.
But Makāpali bent upon keeping his word
Granted the boon; and Vāmaṉa measured the entire universe
With a single step; this is the wood
Where the sacrifice took place".

VISVĀMITTIRA NARRATES TO RAMA THE ORIGIN OF RIVER PAKĪRATI

62. The travellers then came to a broad river
And Rama asked his mentor, to tell him about it
And the sage sang thus;
"Wonderful is the origin of this river, O Rama!
Wonderful it is, O Rama, very wonderful it is!"

81. *Cukkiraṉ* - The preceptor of the demons (The planet Venus)

ஆமவன் மனையவள் காசிபன் வரத்தினால்
அறுபதி னாயிரம் சிறுவரைப் பயின்றதும் (ராமா)
அறுபதி னாயிரம் அரசர்கள் மிகுந்தே
அசுவத் யாகஞ்செய்ய அதனில் கந்துகம்வர
மறுபடி யடிக்கடி மகம்வளர்ப் போமென்று
வையத்தி லிட்டமாவைத் தேவேந்திரன் கவர்ந்ததும் (ராமா)
கவர்ந்திடும் புரவியைக் கபிலன டிக்கீழ்
கட்டிவைக்க மன்னவர்க ளட்டதிக்குஞ் சென்றுதேடித்
தவழ்ந்து பாதலத்திலும் சல்லடையிட் டரிக்கையில்
தரிவிப்புக் கபிலவ னிருப்புக்குள் கண்டதும் (ராமா)

கண்டு கபிலவனை வண்டுறுக்கியே பார்த்துக்
கரையிலு மறுபதி னாயிரம் மன்னவர்கள்
ஆண்டு கையில்மாதவன் கண்விளித்திமைக் குமுன்னே
ஆம்பிழை செய்தவர்களைச் சாம்பலாகச் சபித்தார் (ராமா)

சபித்த மன்னரைக் கண்டுதந்தையும் மனதுநொந்து
தவமுனி கபிலவன் இடத்தினில் சென்றுகை
குவித்துப் பரிதிருப்பி சதககிரிக்கே கொடுத்துக்
குறையாம லடிக்கூடி நிறைமகம் முடித்ததும் (ராமா)
முடிந்த மன்னவர்மனை முதற்றேவி வயற்றினில்
முகனைச்செகம் புரக்கப் பகீரதன் வந்துதித்து
மடிந்தவர் சாம்பலாற் ஆறுகொண்டு வாறேனென்று
வைப்பதே தவசின்கோலம் முப்பதினாயிரம் காலம் (ராமா)

62.3. மனையவள் - மனைவி. காசிபன் - ஒரு முனிவர். பயின்றதும் - தேர்ச்சியடைந்ததும். 62.4. அசுவத்யாகம் - அசுவமேத யாகம்; குதிரைகள் கொண்டு செய்யப்படும் ஒருவகை யாகம். கந்துகம் - குதிரை. 62.5. அடிக்கூடி - எல்லோரும் சேர்ந்து. மகம் - யாகம். வையகம்- பூமி. மா - குதிரை. தேவேந்திரன் - தேவர்த் தலைவன்; இந்திரன். 62.6. கபிலன் - விஷ்ணுவின் அமிசம்; இந்திரன் யாகக் குதிரையை இவருக்குப் பின் கட்டினான். அடிக்கீழ்- காலருகில் அட்டதிக்கு - எண் திசைகள். 62.7. பாதலம் - பாதாள லோகம். சல்லடையிட்டு அரிக்கையில் - நுட்பமாக ஒரு இடம் விடாமல் தேடுகையில். தரிவிப்பு - குதிரை. இருப்புக்குள் - இருப்பிடத்தில். 62.8. வண்டுறுக்கி - இதழ், பல் முதலியன கடித்து அச்சுறுத்தி. மாதவன் - முனிவர்; கபில முனி 62.10. தந்தையும் - அறுபதினாயிரம் குழந்தைகளின் தந்தையான அங்கிச பிரகாச மன்னனும். 62.11. சதககிரி - நூறுமலைகளை உடைய அயோத்தி. அடிகூடி - பொருந்தி. நிறைமகம் - நிறைவான யாகம். 62.12. முதற்றேவி - முதல் தேவி; பேரரசி. முகனைச் செகம் புரக்க - உலகத்திற்கு முகமாயிருந்து பாதுகாக்க. பகீரதன் - திலீபன் மகன்; தவ வலிமையால் ஆகாய கங்கையைப் பூமிக்குக் கொண்டு வந்தவன்.

"When king Sakara was ruling Ayōtti
His wife by a boon of sage Kācipar,
Had sixty thousand sons born to her
Together they began to perform a horse sacrifice
And the princes sent the sacred horse round the earth
To affirm their suzerainty over kingdoms.
Afraid of losing his position,
Devendra stole the horse and tethered it
It the hermitage of great sage Kapilan;
Searching for the missing sacrificial horse
The princes finally traced it to the hermitage
Of the sage, in the nether world;
When they frowned with displeasure upon the sage,
The great Rishi burnt them all with an angry glance;
And they became all heaps of ashes,
The anguished father went to the sage
With hands folded, in obeisance;
Recovering his horse he brought it back to Ayōtti,
Where he completed the yagna in proper form;
To his chief queen was born Pakīratan to foster the earth;
Who coming to know of the death of his brothers,
Went to the woods to perform penance long and severe,
To bring down Ganga from the heavens,
To redeem his brothers back to life.

காலமா றாயிரம் மால்மகனை நோக்கித்தவம்
கண்ணுதலை நோக்கித்தவம் பன்னீரா யிரம்ஆண்டு
ஓலமிடும் கெங்கைபர மேஸ்வரியை நோக்கித் தவம்
ஒருபன் னீராயிரம் வருடம் தவம்புரிய (ராமா)
புரியஒரு வண்டித்தேர் சிவனருள் தடத்திலே
புனல்மகள் நடந்திட அகத்தியன் குடித்திட
விரிமுனியைப் பணிய பரிவுடனே நீர்விட
வேந்தர் சாம்பல் கரைந்திடவந்த பகீரதியிது (ராமா)

மிதிலை நோக்கி மூவரும் செல்லுதல்

விருத்தம்

63. இதுபகீ ரதனால் முந்நாள் இயற்றிய தவத்தி னாலே
சதுர்முக னருளால் வந்த தண்பகீ ரதியாம் கெங்கை
அதிசயம் திருமால் கேட்க அவர்களை யவனும் கேட்க
மிதிலையாம் பதிநன் னாடு வியநகர் நோக்கிச் சென்றார்.

கல் பெண்ணுரு பெறுதல்

64. சென்றனர் பூஞ்சோலை - தடந்திகழ்
செங்கழு நீரோடை
செந்தாமரைப் பொய்கை செந்நெல் கன்னல்நிலம்
ஐந்தரு விளைகின்ற பஞ்சவர் ணநிலம்
நன்றெனக் கொண்டாடி - ரகுபதி
இராமன் வருகையிலே
இராமன் வருகையிலே - இருங்
கானக மானதிலே
நாரண னார்களும் பாறையி லேறிட
ஓர்மட மாதுகல் உள்ளிருந் தேவர

62.14. மால் மகன் - திருமால் மகன்; பிரம்மன். கண்ணுதல் - நெற்றிக் கண்ணை உடையவன்; சிவன். 62.15. கெங்கை பரமேஸ்வரி - உமா பார்வதி. 62.16. வண்டித்தேர் சிவனருள் தடத்திலே - சிவனருளால் தேர் செல்லும் இடத்தளவு. புனல்மகள் - கங்கை. அகத்தியன் - அகத்திய முனி. 62.17. விரிமுனி - விரிந்த சடையுடைய முனி; அகத்தியர். வேந்தர் சாம்பல்- கபில முனியால் இறந்து போன அரசர்கள் சாம்பல். 63.2. சதுர்முகன் - நான்முகன்; பிரம்மன். தண் பகீரதி - குளிர்ச்சியான கங்கை நதி. 64.1. தடம்- குளம். 64.2. பொய்கை - நீர் நிறைந்த குட்டை. 64.3. ஐந்தரு - அழகிய மரங்கள். பஞ்சவர்ண நிலம் - ஐந்து பிரிவான நிலங்கள்; குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் நில வகைகள் 64.4. ரகுபதி - ரகு (சூரிய) வமிசத்து உறைகின்ற இளவரசன். 64.5.கானகம்- காடு. 64.6. நாரணர் - திருமால். 64.7. மட மாது - அகலிகை.

Towards Brahma he prayed for six thousand years;
And twelve thousand to the lord with the forehead-eye;
And to the goddess Ganga
Yet another twelve thousand years,
Till at last she agreed to come down,
With the width of a chariot's track.
Akattiyar drinking her up to stop her avalanch fury,
Pakīrataṉ humbly prayed to the sage,
At which he let a little of Ganges
To flow on the earth, past the ashes
Of the incinerated Sakara princes now redeemed;
This is the river called Pakīrati,
As she was brought down to the earth by Pakīrataṉ.

63. Thus listening to the story of the intense askesis
Of Pakīrataṉ towards all the gods,
Whereby cool Pakīrati came to the earth,
Rama exclaimed, "Wonderful it is, O! wonderful!"
And then they proceeded towards Mitilai city.

THE STONE BECOMING A WOMAN

64. Thus passing by many a grove and pond
And stream where red water-lilies grew,
And pools of red lotus and rich fields
Of fine paddy and sugarcane through the five-fold tracts,
With five kinds of trees flourishing,
The sage and the princes walked along
Enjoying the various beauties of nature,
Till at last in a big forest,
As Rama set his foot upon a rock,
A beautiful woman emerged from it.

இன்றி வளாரெனவே - முனியுடன்
எம்பெருமான் கேட்க
எம்பெருமான் கேட்க - முனியவர்
ரகுபதிக்கே உரைப்பார்

விசுவாமித்திரர் அகலிகை கதை கூறல்

ஏகத மாமுனி காதலி தானிவள்
சூதுசெய் திந்திரன் மாதை விரும்பினன்
அன்று நடுச்சாமம் - சேவலென
நின்றிந் திரன்கூவ
கூவினதைக் கேட்டு - முனியவர்
கொஞ்சமும் எண்ணாமல்
கூர்மையுடன் பூசை செய்யப் போககெங்கை
கூண்டதோர் நித்திரை தாண்டா திருந்திட
ஆண்டவன் சோதனையோ - எனவெண்ணி
ஆசிரமம் நண்ணிட
கண்டதோ ரிந்திரனும் - மனங்கன்னி
கார்பூனை போலோட

கௌதமர் இந்திரனைச் சபித்தல்

கானில்வாழ் மாமுனி காட்டுத்தீ போற்சீறிக்
கட்டுடன் இந்திரன் தன்னை நிறுத்தியே
காய்வுட னேதுரைப்பான் - யோகியுன்
காந்தை உடனிருக்க
ஆசித்தாய் ஓர்யோனி - அழகென
அந்தரம் விட்டுவந்து
அன்புடை யாளென் உரிமையை இச்சித்தாய்

64.8. இன்றி வளாரெனவே- கல்லினுள் இருந்து வளர்வது யாரனெவே. எம்பெருமான் - இராமன். 64.9. முனிவர்- விசுவாமித்திர முனி. 64.10. ஏகத மாமுனி - கௌதம முனி. 64.11. சூதுசெய்து- சூழ்ச்சி செய்து. 64.14. கூர்மையுடன் - அறிவுடன். 64.15. கூண்டதோர் - பொருந்தியதோர். நித்திரை - தூக்கம். 64.17. மனங்கன்னி - மனம் வருந்தி. கார்பூனை - கறுத்த பூனை. 64.18. கானில் - காட்டில். சீறி - சினத்து. 64.19. கட்டுடன் - ஆணையுடன். 64.20. காய்வுடனே - சினத்துடனே. யோகி - முனி. உண்காந்தை - அழகிய மனைவி; இந்திராணி. 64.21. ஆசித்தாய் - விரும்பினாய். அந்தரம் - தேவலோகம். 64.22. அன்புடையாள் - என்மீது (கௌதமர்) அன்புடைய அகலிகை.

"Who may this be?" Our lord asked the sage,
And thus the sage made reply.

VISVĀMITTIRA TELLING AKALIKAI'S STORY

The sage Kautama's wedded wife is she;
By guile treacherous, did Intira try to attain her;
On a certain day in the early hours of dawn
Intira came down and crowed like a cock
Hearing which, the pious sage unsuspecting went to perform
His predawn ablutions in the Ganges;
But, finding everything in deep slumber
Back he returned, worried, and wondering
What might have happened;
And nearing the hut he saw the king of the celestials,
Slinking out in the form of a black cat.

KAUTAMA CURSES INTIRA

The sage angry like a forest-fire
Commanded Intira to stay where he was
And in great fury said to him;
With a lawful wife by your side,
You hankered, after another woman;
Leaving the upper world you desired,

ஆனதி னாலுந்தன் அங்கமெங்கும் யோனி
ஆயிரம் ஆகுமென - முனிசொல
அப்படி யானதுவே

கெளதமர் அகலிகையைச் சபித்தல்

ஏச்சிழுக் காகும்முன்னே - விலைமாதர்
ஈடு நினைத்தமின்னே
இல்லறம் நீங்கிநீ அல்பக லாய்க்கருங்
கல்லாகு வாயென்று வல்லவன் சபிக்க

அகலிகை வினாவும் கெளதமர் பதிலும்

பேச்சினி ஏன்சாமி - அடியாளைப்
பிழைதவிர்த் தாள்வதெப்போ
பிழைதவிர்த் தாள்வதெப்போ - எனக்கேட்ட
பேரழ கானகுலப்
பெண்ணே தசரதன் மண்ணாளத் தாமரைக்
கண்ணன் வந்தாலவன் கால்படத் தீர்ந்திடும்
கோதையே பெண்ணேயென - அகலிகை
கும்பிட்டுப் பாறையானாள்

இந்திரனுக்குச் சாபத்தைக் கெளதமர் குறைத்தல்

கோதையும் பாறையாக - இந்திரன்
கூத்தமதாய் வணங்கிக்
கோமானே எந்தனைக் கொற்றவர் மற்றவர்
கூடிச் சிரியாமல் வாடிநான் போகாமல்
குற்றம் பொறுத்தருள்வீர் - எனமொழி
கூறமுனி புங்கவன்

64.23. அங்கம் - உடம்பு. யோனி - பெண்குறி. 64.25. ஏச்சிழுக்காகும் முன்னே - ஊரார் தகாத வார்த்தைகள் கூறும் முன்னே. விலைமாதர் ஈடு நினைத்தமின்னே - விலைமாதர்களுக்கு இணையாக நினைத்து உன்னை (அகலிகையை) பேசும் முன்பாகவே. 64.26. அல்பகலாய்- இரவும் பகலும். 64.27. வல்லவன் - கெளதமமுனி. 64.28. ஆள்வதெப்போ - மீண்டும் கல்லுருவிலிருந்து நீங்குவது எப்பொழுது? 64.29. பேரழகான குலப்பெண்ணே - அகலிகையே. 64.30. தாமரைக் கண்ணன் - தாமரை மலர் போன்ற செவ்வரி ஓடும் சிவந்த கண்ணுடையவன்; இராமன். 64.32. பாறை -சிறுகுன்று. 64.33. கூத்தமதாய் - பணிவாய். 64.34. கொற்றவர் - அரசர். 64.35. சிரியாமல் - சிரிக்காமல். வாடி - தளர்ந்து. 64.36. புனிபுங்கவன் - கெளதம முனி.

My rightful spouse for her great beauty;
Therefore may your whole body be covered
By a thousand of what you are enamoured of,
As the sage said, so it happened.

KAUTAMA CURSING AKALIKAI

"Before you become a by-word
Equated with a woman of ill-fame,
Leave the world, becoming a stone
For days on end, "the sage cursed his wife.

AKALIKAI BEGS PARDON AND KAUTAMA'S REPLY

"How can I defend myself and face you,
O lord? Tell me only when I will be redeemed?
Oh when shall I get redemption?"
"O, beautiful Akalikai! the curse will be lifted
When the lotus-eyed Rama, son of Tacarata,
Ruler of the earth comes this way,
And his feet come into contact with you"
And Akalikai bowed to him
And stood petrified as a black stone.

KAUTAMA REDUCING THE PUNISHMENT TO INTIRA

When the good wife became a stone
Intira reverentially bowed to the sage
And implored him; "O lord, let me not become
A figure of scorn for everyone to point their fingers at,
Pardon me, O lord, my sin";

உத்தமத் தேவேந்திரா - பெண்குறி
உன்கண்ணுக் காயிரந்தான்
உலகர்க்கும் தேவர்க்கும் அரசர்க்கும் யாவர்க்கும்
நலமுற்றுக் காணும்நின் நயனங்க ளாயிரம்
கர்த்தன்சொல் லாலிளைத்தாள் - அகலிகை
கரும்பாறையாய் முளைத்தாள்
கரும்பாறை யாள்முளைக்க - அதைநம்பிக்
கட்டாய் முனிசொல்லுவார்

விசுவாமித்திரர் இராமனைப் புகழ்தல்

கைத்திறந் தாடகை யுத்தங்கண் டேனின்று
கால்திறம் கல்லைப்பெண் ணாக்கக்கண் டேனின்று
என்றந்த மாமுனிவன் - உரைத்திட
இராமச்சந் திரன்கேட்டு
இராமச் சந்திரன்கேட்டு - அகலிகை
எண்ணி மலங்காதே
ஏந்திழை தாயேநீ போந்திடு வாய்கெதி
சேர்ந்திடு வாயெனத் தேன்மொழி யாள்செல்ல

மிதிலையின் செழிப்பு

சித்தலங் காரமுனி - மிதிலையில்
சேர்சோலை வாவிகளும்
சோலைசேர் வாவிகளில் - தளிர்த்திடும்
சுந்தர விந்தமதில்
சுரும்புகள் பூவினில் இருந்திசை பாடவும்
தோகை களாடவும் கார்குயில் கூவவும்

64.38. நலமுற்று - அழகாக. நயனம் - யோனிக் கண்கள்; 64.40. கர்த்தன் - கணவன். இளைத்தாள் - வாடினாள். முளைத்தாள் - தோன்றினாள். 64.41. கரும் பாறையின் - கரும் பாறையில் உறைந்த அகலிகை. நம்பி - நம்பிக்கு, இராமனுக்கு. கட்டாய் - மறையாய். 64.42. கைத்திறம் - வில்லாற்றல். 64.43. கால் திறம் - காலால் மிதிபடக் கல் பெண்ணான மகிமை. 64.46. போந்திடுவாய் - போயிடுவாய். கெதி - நற்கதி. 64.47. தேன்மொழியாள் - தேன் போன்ற இனிமையான மொழி பேசும் அகலிகை. 64.48. சித்தலங்கார முனி - அறிவிற் சிறந்த முனி; விஸ்வாமித்திர முனி. வாவி - குளம். 64.49. சுந்தர விந்தம் - அழகிய தாமரை மலர். 64.50. சுரும்பு - வண்டினத்துள் ஒன்று. 64.51. தோகை - மயில். கார் குயில் - கருமை நிறமுடைய குயில்.

And the generous Kautama, relenting said;
"Noble Intira! the opprobrious mark all over your body
Will be seen only by your eyes;
To the world at large, to the gods, and kings and others
They will appear to be a thousand eyes only."
But the woman lost her shape, and became a black rock.
To Rama thus the sage explained,
The poignant tale of chaste Akalikai!
And Visvāmittira praised the Lord in this way;
"The other day I saw the Valiancy of your hand,
In the fight with demoness Tāṭakai!
While today I have seen the Valiancy of your feet,
When you restored a stone back to life as a woman."
And Lord Ramachandra on seeing Akalikai consoled her:
"Do not grieve worthy mother, on all that is past;
Go back to your husband,
Now that you are redeemed of your curse,
May you prosper! "And Akalikai of honeyed speech
Went back to sage Kautama her husband.

THE PROSPERITY OF MITILAI CITY

The all-wise sage and his companions'
Approaching Mitilai, saw to their delight,
Beauteous groves with ponds in them;
And in the ponds lovely lotuses bloomed,
With bees humming sweetly upon them.
They saw peacocks dancing and black kuyils warbling

கார்முகில் வார்குழலார் - கடைச்சியர்
கையொலி வாயொலியும்
ஏரியின் வாய்மதகும் - நதியில்
எழும்பிடும் நீரழகும்
எள்பயிர் நெற்பயிர் கைக்கொளும் மள்ளர்கள்
இக்கண போகம் இயற்றும் வயற்றலை
வாரணக் கொம்பரக்கும் - அகிலும்
மயிலிறகும் நறவும்
நறவெனும் தேனுடனே - குங்குமம்
நான முடன்மலர்கள்
வாரிக் குவிப்பதும் ஏருத் திரவியம்
சீராய்க் குவிப்பதும் சேருமங் காடியில்
சேர்வதுங் கண்டனரே - நகரச்
சிறப்பையுங் கண்டனரே
கண்டனராம் முனிவர் - அவருடன்
கட்டுடன் கூடவரும்
தென்னர் மிதிலையில் மன்னனாம் ராமனும்
தீரனாம் பின்னவன் சேரும் இலக்குவன்
தன்னுடன் கூடிவர - மிதிலையாம்
நன்னகர் வந்தனரே.

விருத்தம்

சென்றனர் மிதிலை நாட்டில் சேர்ந்தபூங் காவாம் சோலை
குன்றுபோ லுயர்ந்த மேடை கோபுரம் தாப ரங்கள்
ஒன்றுபோ லுயர்ந்த மாட வொழுங்கு மாளிகையுங் கண்டு
நன்றுதா னெனம கிழ்ந்து நடந்தனர் நகரினூடே.

64.52. கார்முகில் - கறுத்த மழைமுகில். வார் குழலார் - நீண்ட மயிருடையாள். கடைச்சியர்- இடைச்சியர். கையொலி, வாயொலி - கையால் தயிர்மத்து கடையும் ஓசை மற்றும் வாயால் பேசும் ஓசைகள். 64.53. மதகு -ஏரி நீர் வெளியே செல்வதற்குரிய வழி. 64.54. மள்ளர் - உழவர். 64.55. கண போகம் - மிகுதியான விளைச்சல். வயற்றலை - வயல் நிலங்களைத் தலைமையிடமாகக் கொண்ட இடம். 64.56. வாரணக் கொம்பு - யானைத் தந்தம். அரக்கு- சாதிலிங்கம். அகில் - ஒரு மரம். நறவு - கள். நானமுடன் மலர்கள் - நறுமணமுடைய மலர்கள். 64.58. ஏருத் திரவியம் - உழவுத் தொழிலால் வந்த செல்வம். 64.59. அங்காடி - கடைத்தெரு. 64.63. தீரனாம் பின்னவன் - வீரனாம் இளையவன்; இலட்சுமணன். 65.2. தாபரங்கள் - கோயில்கள். 65.3. மாடவொழுங்கு - உப்பரிகை ஒழுங்கு முறை.

And cowherdess with tresses dark as black clouds
Churning for butter; the sound of their sweet speech
Mingled with the wimpling sound of water
Flowing through sluice gates in the lakes.
They saw too the beautiful sight of water rushing
In the flooding river; and farmers reaping sesame and paddy,
In a land full of arable fields with plentiful harvest.
They saw the rich produces like elephant tusks and lac
And akilwood; peacock's feathers, toddy and honey from the combs;
Kumkum and fragrant flowers in abundance heaped up.
Besides the wealth brought about by the plough;
All these various products found their way
To the busy marts and markets,
Betokening the opulent prosperity of the city,
All these the sage and the two princes saw,
Till they reached the border of the city.

65. At the outskirts of the city too they saw
Flowery groves and parks; entering the city,
They saw platforms huge as hills
Towers, and temples, and in the streets
Storeyed mansions with terraces uniformly high;
At the sight of which, they exclaimed
"Good! O good to see is this city!"

சனகர் மூவரையும் வரவேற்க விசுவாமித்திரர் கூறல்

66. வந்தமுனி வனுக்கெதிராய்ச் சனக மன்னன்
வணங்கிமல ரடிபணிந்தா சனத்தில் வைத்து
அந்தணரே வந்ததென்ன பச்சை மேனி
அழகுமைந்தர் எத்தலத்து அரசன் பாலர்
கொந்தழகர் அயோத்தியாள் தசர தன்றன்
குமாரரிலே முன்னுதித்த கோன்ஸ்ரீ[39] ராமன்
உந்தன்மகள் தனையவர்க்கே வதுவை செய்ய
உவந்து வந்தோம் உன்கருத்தை உரைசெய்வாயே.

சனகன் மறுமொழி

ஐந்தடி சிந்து

67. செய்யும் மிதிலைநா டாளும் சனகனாம் ராசனார்
செந்தா மரைமுகில் வண்ணன் பரிமள வாசனார்
ஐயா முனிவரே நீர்வாறதே எங்கள் பாக்கியம்
அயோத்தி தசரதர் மைந்தரு மேவெகு யோக்கியம்
தையலொரு பெண்குழந் தையைச் சங்கரன் தந்தார்
தனுவுட னேசீதா லட்சுமி வந்து பிறந்தாள்
மொய்குழல் சானகி பெட்டகத் தோடபி மானம்
மோதிய வில்லை வளைத்தவர்க்கே கன்னி தானம்

சிவதனுசின் மகிமை

தானவள் சானகி வேட்டலுக் கேமனம் நாடி
சந்தடி கூடியே வந்த மன்னர்பல கோடி
ஆன தனுவை வளைக்க மலைத்துத்தள் ளாடி
ஆற்றாமல் தோற்ற அரசருண் டேபல கோடி

66.1. ஆசனத்தில் - இருக்கையில். 66.2. பச்சைமேனி அழகு மைந்தர் - பச்சை நிற மேனியனான இராமன். 66.3. கொந்தழகர் - அழகிய மயிருடைய அழகர்; இராமன். முன்னுதித்த கோன் - முதலாவதாகத் தோன்றிய இளவரசன். 66.4. வதுவை - திருமணம். 67.1. செந்தாமரை முகில் வண்ணன் - சிவந்த தாமரை மலர் போலும் முகமுடைய மழை மேக நிறத்தன்; இராமன். பரிமள வாசன் - மிகுந்த நறுமணமுடைய இராமன். 67.2. முனிவர்- விஸ்வாமித்திரர். பாக்கியம் - புண்ணியம். யோக்கியம் - நல்லவர். 67.3. தையல்- பெண். சங்கரன் - சிவன், தனு - வில். 67.4. அபிமானம் - விருப்பம். மோதிய வில் - தடிமனான வில். கன்னி தானம்- பெண் கொடை. 67.5. வேட்டலுக்கே - விவாகம் செய்வதற்கே. சந்தடி - இரைச்சல்.

39. சிறீராமன்.

VISVĀMITTIRA SPEAKS TO JAṈAKAṈ WHO WELCOMES THEM

66. Rushing forward to welcome the holy seer, Jaṉakaṉ bowed
At his feet, and after seating him in a throne, "Great sage!"
Said he; "what may be the reason for your visit?
Who is this jasper-hued youth?
Of what country is he the ruler,
Who has sired these lovely children?".
"This prince with beautiful locks of hair
Is Rama, the eldest son of Tacarata of Ayōtti!
We have a proposal to marry your daughter
To this lad. What do you say?"

JAṈAKAṈ'S REPLY

67. The ruler of Mitilai joyous replied:
"Noble sage! it is my great good fortune
That you have come with the sons of Tacarata,
Lotus-faced, nimbus-hued and of fragrant breath.
A female child, Lord Saṅkara gave me;
With her appeared a bow;
I have proclaimed that he who bends
The stout bow that accompanied Jāṉaki
Will marry her".

THE GREATNESS OF SIVA'S BOW

"Desirous of winning her hand
In a noisy concourse, myriads of kings
Have come and failed:
Baffled by the weight of the bow
Many have fled in shame;

வான வில்லைக்கண்டால் அண்டாமல் பாலகர் ஏகுவார்
மன்னன் தசரதர் உன்னையும் என்னையும் நோகுவார்
ஈனம தாய்மொழி மன்னவன் சொல்ல அருந்தவன்
ஏறிட்டுப் பார்த்துக் குறுநகை செய்தங் கிருந்தவன்

வீரர்கள் சிவதனுசைக் கொண்டு வருதல்

இருந்து சனகனே வில்லை இராமன்கண் காணட்டும்
இந்தச் சபையில் இருக்கின்ற ராசர்க்கும் தோணட்டும்
அருந்தவன் சொல்ல வெண்ணாயிரம் தூதுவர் கூட்டமாய்
அமர்ந்த சிலையைச் சுமந்து வந்தார்கள் திண்டாட்டமாய்
பொருந்த வில்வைத்து பூமி நெளித்தது கோணவே
பூமன் தசரத ராமன் கமலக்கண் காணவே

ஸ்ரீராமன் வில்லை ஒடித்தல்

திருந்த முனிவர் திருமாலைப் பார்த்துக்கண் காட்டினார்
சீராமன் வசிட்டரைக் குருவென் றகத்தியானம் கூட்டினார்
கூட்டியே கல்லைப்பெண் ணாக்கிய செம்பொற் பதத்தினால்
கூன்சிலை யோர்பக்க மோங்கி மிதித்த விதத்தினால்
ஆட்டிய வில்லை அசைத்து விசைகொண்டு தென்னியே
அஞ்சா றெட்சக்ஷரம் பஞ்சா க்ஷரைத்தையு முன்னியே
தாட்டிமை செய்யவில் ஆகாசம் முட்டிப் பறிந்ததே
தாமோ தரன்ரெகு ராமன் வளைக்க முறிந்ததே
நாட்டினில் கோடை யிடியென வில்லு முறியவே
ராஜ ராஜாக்களும் தேசத்துள் ளோரு மறியவே

67.7. வானவில் - பெரிய வில். அண்டாமல் - பொருந்தாமல். பாலகர் -இராமர். 67.8. ஈனமதாய்- குறைவு பட. அருந்தவன் - விஸ்வாமித்திரர். 67.9. கண் காணட்டும் - கண்ணால் பார்க்கட்டும். தோணட்டும் - இராமன் வலிமை தெரியட்டும். 67.10. தூதுவர் : சேவகர். அமர்ந்த - ஓரிடத்தில் நிலையாக இருந்த. திண்டாட்டமாய் - கடினத்துடன். 67.11.- கோணவே - வளையவே. பூமன் - அரசன். கமலக் கண்காணவே - தாமரை மலர் போன்ற கண்ணால் பார்க்கவே. 67.12. அகத்தியானம் - மனத்தில் தியானம். 67.13. செம்பொற்பதம்- சிவந்த பொன் போன்ற பாதம். கூன் சிலை- வளைந்த வில். மிதித்த விதத்தினால் - காலால் மிதித்த முறையால். 67.14. விசை கொண்டு- வேகம் கொண்டு. தென்னியே - நெம்பியே. எட்சக்ஷரம் - 'ஓம் நமோ நாராயணாய' என்னும் திருமால் மந்திரம். பஞ்சாக்ஷரம் - 'நமசிவாய' என்னும் மந்திரம். 67.15. தாட்டிமை செய்ய- உறுதியுடன் வளைக்க. முட்டி - பொருந்தி. பறிந்ததே - நிலை பெயர்ந்ததே.

Seeing the big bow, the boys may go away
Unable to lift it; and king Tacarata
Will find fault with both, you and I."
When Janakan spoke these words,
Underestimating Rama's strength,
Visvāmittira looked up at him with a smile.

THE SOLDIERS BRINGING SIVA'S BOW

And with a smile, the sage told Janakan
"O king! let Rama see the bow,
Let the people in this court realise
The prowess of my lord!"
When the sage of rare askesis spake thus
Sturdy men, eight thousand of them,
Together carried the huge bow with great effort;
The very earth writhed under its weight.
When the lotus-eyed Tacaratarāma saw this,
The perfect sage glanced at him with a sign
And meditating upon his preceptor in his mind,
Rama with his perfect feet that transformed
A stone into a woman, held one end of the bow
And lifted it, at which it jerked up
As if to hit the very sky;
Invoking the mystic syllables pentad and the octad,
Rakurāma bent Siva's bow,
At which it broke with a mighty crash;
With the noise of thunder in summer,-
All the kings in the court and all the people,
Recognising his supreme strength.

இராமர் - சீதை திருமணம் குறித்துச் தசரதற்குச் செய்தி அனுப்புதல்

அறியும் பெரிய அருந்தவன் பாதம் வணங்கியே
[40]ஆயிழை சீதையை ராமன் கைகொள்ள யிணங்கியே
செறியும் தினகர ராஜனும் மந்திரி மார்களும்
சீதர னுமிளை யோனும் மகாமுனி வோர்க்கும்
பிறியும் செகங்கள் புரந்திடும் மன்னருங் கூடியே
பேசித் தசரதர் வாசித் திடும்படி நாடியே
குறியான மன்ன ரறிய வெழுதின செய்தியைக்
கோவிந்த ராமனும் தம்பியும் பூங்காவி லெய்தியே
எய்து தாடகையை மாய்த்தெங்கள் வேள்வியுங் காத்தார்
எண்ணாம லோர்கல்லைப் பெண்ணாகப் பொன்னடி சேர்த்தார்
செய்ய மிதுலைச் சனகரின் மாளிகை கண்டுமே
சீதை யுடன்வந்த வில்லை முறித்தது கொண்டுமே
மொய்குழல் சீதையை ராமனுக் கேபாணிக் கிரகணம்
மூவர்சொல் லாவணி மூலத் திலேகலி யாணம்
செய்தியறிந் தோர்தினத் தில்மிதுலை யடுத்தாட
தசரதன் கையில் கொடுத்தீடு மென்றுள் விடுத்திட

தசரதன் மகிழ்ச்சி

கொடுத்த எழுத்தைத் துடுக்கான தூதர்கள் கொண்டுபோய்
கோமன யோத்தி தசரத பூமனைக் கண்டுமே
அடுத்தவன் வைக்க அமைச்ச ரெடுத்ததை வாசித்தார்
ஆச்சரிய மென்ற ரசனுங் கண்டு சந்தோசித்தார்(ன்)

67.17. அருந்தவன் - அரிய தவத்தோன்; விஸ்வாமித்திரன். ஆயிழை சீதை - அழகிய ஆபரணங்கள் அணிந்த சீதை. இணங்கியே - சம்மதித்தே. 67.18. தினகர ராஜன் - ஜனக மன்னன். சீதரன் - இராமன். இளையோன் - இலட்சுமணன். 67.19. பிறியும் செகம் - பல வேறு நாடு. புரந்திடும் - ஆண்டிடும். 67.23. மூவர் - மேலோர். ஆவணி - தமிழ் மாதங்களிலொன்று. மூலம் - மூல நட்சத்திரம்; இது பத்தொன்பதாவது நட்சத்திரம். 67.24. அடுத்தாட - மிதிலை நகரை அடுத்துக் காணப்படுகின்ற. என்றுள் விடுத்திட - என்று மன்னர் உள்ளம் மகிழ்ந்து தசரதன்பால் விடுத்திட. 67.25. துடுக்கான - விரைவான. கோமன யோத்தி- அயோத்தியின் அரசன். பூமன் - அரசன். 67.26. அதை - தூதுவன் கொண்டு வந்த ஓலையை.

---

40. ஆயிளை

TIDINGS SENT ABOUT THE MARRIAGE OF RAMA AND SITA TO TACARATA AND OTHERS

Bowing at the feet of his mentor Visvamittira
Rama agreed to wed Sita a priceless jewel;
Then Jaṉakaṉ and his ministers and Sridara and Lakshmaṇa,
The seers, holy men, rulers of many lands sat together,
Decided upon the marriage between the prince and princess,
A message was prepared to be given to the king of Ayōtti!
"Kōtaṇṭarāma and his brother, in the woods slew Tāṭakai
And saved our sacrifices; without effort
He transformed a stone into a woman
And reunited her with her husband.
And coming to Mitilai in Jaṉakaṉ's court
He broke with his hands the mighty bow that appeared
With Sita at her birth in the furrow,
It is proposed to marry dark-haired Sita
To prince Rama as suggested by wise elders
On the day in the month of *Āvaṇi*,
With the star *Mūlam* as the ruling star,
All those who received this, are requested to assemble
In Mitilai forthwith"
With great joy in his heart Jaṉakaṉ wrote to Tacarata
Messengers to hand the missive personally to the king.

JOY OF TACARATA

Swift heralds carrying the urgent message
Reached Ayōtti and handed it over to the king
Which he gave to the ministers to be read
On hearing the contents of the letter
Oh wonderful, most wonderful and yet more wonderful!
Shouted the king and rejoiced greatly!

அனைவரும் மிதிலைக்குப் புறப்படுதல்

தொடுத்தழ காய்வரும் தாரமும் தேவிமார் மூவரும்
சூழ்ந்து அயோத்தி யில்வாழ்ந்த மகாசனம் யாவரும்
விடுத்தருள் சோபனங் கண்டு மனங்களி கூரவே
மேதினி வேந்த ரெல்லோரு மயோத்தியில் சேரவே

சேரும் படைத்திற வீரரும் நால்வகைத் தானையும்
சிங்காரத் தேவிமார் தேருஞ் சிவிகையு மானையும்
தாருங் கொடிகுடை தண்டிகை தந்திமேல் பேரிகை
தாக்ஷியில்லா மேள வாச்சியம் எக்காளம் பூரிகை
பாருந் தொனிக்க அறுபதி னாயிரம் மந்திரிமார்
பைந்தமிழ் வாணர்கள் அந்தணர் சாஸ்திரி தந்திரிமார்
சீருள்ள மன்னன் தசரதன் வந்து தேரேறவே
திட்டம தாயெட்டுத் திக்கிலுங் கட்டியங் கூறவே
கட்டியங் கூற கனபடை சேனைத் தளத்துடன்
காவலி னால்மிது லாபுரி காண வளத்துடன்

ஜனகர் அனைவரையும் வரவேற்றல்

எட்டி வரும்தொனி கேட்டுத் தினகர ராசனார்
எதிர்கொண்டு தன்படை சூழ வெகுபிர காசமாய்
[41]கட்டித் தழுவிகை கோர்த்துடல் பூரித்துப் பாகமாய்
[42]கர்சித்து மைத்துன னார்முறை செப்பி விவேகமாய்
மட்டில்லா சேனை [43] சூழமன்னர் [44]மிதிலை புகுந்துதான்
மாமுனியைக் கண்டு ராமனைச் சிந்தை மகிழ்ந்துதான்

67.27. மகாசனம் - பெருமக்கள். 67.28. சோபனம் - சந்தோஷம். மேதினி - உலகம். 67.29. நால்வகைத் தானை - நால்வகைப் படை; காலாள், யானை, தேர், குதிரைப்படைகள். சிங்காரத் தேவிமார் - அழகிய தேவிமார்; கௌசலை, கைகேயி, சுமித்திரை என்னும் மூவர். 67.30. தார் - மாலை. கொடி, குடை, தண்டிகை - அரச சின்னங்களுள் சில. தந்தி - யானை, பேரிகை - முரசு. தாக்ஷியில்லா - ஒலிப்பதில் குறைவில்லா. வாச்சியம் - வாத்தியம். எக்காளம், பூரிகை - ஊது குழல் வகைகளின் பெயர்கள். 67.31. பைந்தமிழ் வாணர்கள் - புலவர்கள். சாஸ்திரி - வேதம் ஓதிவிப்போன். தந்திரிமார் - மந்திரிகள். 67.32. சீருள்ள - செல்வமுள்ள. கட்டியம் கூறவே - அரசர் புகழை எடுத்துக் கூறவே. 67.34. எட்டிவரும் - நெருங்கி வரும். பாகமாய் கர்சித்து - இதமாய் பேரோசை எழுப்பி. மைத்துனனார் முறை செப்பி - மைத்துனனார் உறவு முறையை ஜனகர் தசரதரிடம் கூறி. விவேகமாய் - அறிவுடன்.

41. கிட்டி 42. செர்சித்து 43. சூள 44. மிதுளை

THE DEPARTURE FOR MITILAI

All his wives and three queens,
And all the people of Ayōtti
Rejoiced on hearing the auspicious news
The people of the country, converged on the capital
Before leaving for the wedding at Mitilai,
The wives and queens in chariots, and in palanquins
And on horses garlanded happily with royal emblems;
With flags and festoons and drums upon elephants
And pipes and tabors giving forth blameless music,
And the flutes singing melodiously
With all royal appointments accoutrements
With all pomp and circumstance of imperial power
Sixty thousand ministers, learned poets, and Brahmins
Pandits, wisemen, and experts in various arts
Accompanying him, great Tacarata climbed into his royal chariot
While his heralds announced his pedigree
With vast armies following behind the royal procession
Began its happy march to Mitilai city for the wedding.

JAṈAKAṈ WELCOMING THE ROYAL ENTOURAGE

Hearing the sound of the approaching guests
Jaṉakaṉ came forward with happy acclamation;
Embracing his royal visitor, he shouted in joy,
His genuine welcome cordial, and escorted them
With all due respect into his city; and Tacarata
Was overjoyed to see his sons in the company of the sage.

மிதிலை அலங்கரிக்கப்படல்

சிந்தை மகிழ்ந்திடப் பட்டண மெங்கெங்கும் காவணம்
சீர்முத்து மாலை விதானித்து மங்கல சோபனம்
அந்தத் தினகரன் மாடக் கூடம் மணிமாளிகை
அட்டதிக்கும் சொர்ணக் கொட்டகை மேற்கூட்டிச் சூழிகை
சந்தனத் தால்கோல மிட்டு சாந்தாலே மெழுகியே
தார்சுருட்டிக் கொடித்தேர் நிலைசப்பரம் கொழுகியே
விந்தைக் கொடிகளிடைக் கயம்மேல் மகர தோரணம்
மிதிலையில் சானகி வதுவைக் கிதேபரி பூரணம்.

விருத்தம்

68. பூரணக் கும்ப மேந்தி பொன்புனை [45]பிரமன் தீட்டி
ஆரணக் காவில் பூத்தார் அரம்பையுங் கரும்பும் சேர்த்தார்
தோரண மருகெங் கெங்கும் சுவடினை விதானந் தங்கும்
காரண மிதுவே யெல்லாம் கனகக்கா வணமிட் டாரே.

சிந்து

69. இட்டார் மிதிலையில் பட்டண மெங்கெங்கும்
கொட்டகைக் காமணமாம்
[46]ஏந்திழை சீதையர் சேர்ந்தபொன் மாளிகை
ஏகாந்த மண்டபமாம்
பட்டால் விதானித்து யெட்டெட்டுத் திக்கும்
பவளத்தால் கால்நிறுத்திப்

67.37. காவணம் - பந்தல் அலங்காரம். சீர் - பெருமையுள்ள. விதானித்து - பந்தல் இட்டு. சோபனம் - வாழ்த்து. 67.38. தினகரன் - ஜனகர். அட்டதிக்கு - எட்டு திசை. சொர்ண கொட்டகை - பொன்னால் வேயப்பட்ட பந்தல். சூழிகை உச்சிக் கொண்டைப் பகுதி. 67.39. தார் சுருட்டி - பூவால் அலங்கரித்து. நிலைசப்பரம் - நிலைபெற்ற இருக்கை (தேர் மேல் வைக்கப்பட்ட இருக்கை). கொழுகியே - பொருத்தியே. 67.40. கயம் - யானை. மகர தோரணம் - மகர மீன் வடிவிலமைந்த அலங்காரத் தொங்கல். 68.2. ஆரணக் காவில் பூத்தார்- அழகிய பூங்காவில் பூத்தாற் போன்ற. அரம்பை - வாழை. 68.3. சுவடினை - கட்டுமான இடங்களை. விதானந் தங்கும் - செல்வம் தங்கும். 68.4. கனகக் காவணம் - பொன்னாலாகிய பந்தல். 69.1. கொட்டகை - பந்தல். காமணம் - பந்தலின் கீழ் போடப்படும் வெள்ளைத் துணி. ஏகாந்த- தனித்த, பெரிய. 69.2. விதானித்து - மேல் விரிப்பாய்க் கட்டி. கால் - தூண்.

45. பிரமண் 46. ஏந்திளை

MITILAI BEING DECORATED FOR THE WEDDING

The entire city was decorated with pandals and shamianas;
The pavilions were covered with fine cloth;
Storeyed mansions and palaces in the directions eight
Were decorated with golden coverings,
Auric cupolas crowned them all.
All the roads and streets were cleansed:
And ornamental designs were drawn
With sandal-paste and coloured powders;
The chariots and palanquins and litters,
Were all decked with flowery wreaths;
Flags and fastoons fluttered everywhere;
Upon the backs of tuskers, shark-shaped hangings swayed;

68. All this and more to celebrate
The ensuing wedding of Jānaki with Rama;
Auspicious plantain-trees and sugarcane,
Were tied to the pillars everywhere;
Cloths of gold adorned all canopies.

69. White cloths shone bright under the pandals;
The golden palace of princess Sita was secluded as it should be
But resplendent and vast; silken cloth covered all the pavilions
Erected over pillars of coral;

பதித்துப் பொருத்தமு மிட்டுச் சதுக்கை
பதித்து பிரமணிட்டு

வட்டார மாளிகை முத்தாயி சுபதம்
மாணிக்கக் கோமேதகம்
மாலையுந் தூக்கியே கோல மெழுதி
வயிர விளக்கேற்றி

பலதேசத்து அரசர், வானவர்களுக்கு திருமண முடங்கல் அனுப்புதல்

அட்டாள தேசமும் கட்டாக ஏழெட்டு
அரசர்க்கு மோலையிட்டார்
அளகை குபேரன் தேவ தேவந்திர
னாருக்குஞ் சேர்பனமாள

பெரியவர்கள் மிதிலை வருதல்

ஆளுந் தருமனும் வாழும் பிரம்மனும்
அண்டர் முனிவோரும்
அதிக வசிட்டர் அகத்தியர் சப்த
ரிஷிகளும் வந்தனரே 5
சூழும் பெரும்படை தேர்மத யானை
துரக பதாதிகளும்
சோதி பராசக்தி ஆதி விநாயகர்
சுப்பிரமணியக் கடவுள்
ஏழுல கம்பதி னாலு புவன
மிருநூற்றி யிருப்பத்திநால்
இருப்பவர் சேர விருப்பம் மிதிலையினில்
வந்து சேர்ந்தனரே

பத்து பொருத்தம் - திருமணத்திற்குரிய பத்து பொருத்தம்; அவை நட்சத்திரம், கணம், மகேந்திரம், ஸ்திரீ தீர்க்கம், யோனி, ராசி, இராசியதிபதி, வசியம், வேதை, ரச்சு பொருத்தங்கள் என்னும் பத்து. சதுக்கை பதித்து பிரமணிட்டு - நான்கு கால் மண்டபம் கட்டி அதில் மேடை அமைத்து. 69.3. முத்தாயி சுபதம் - முத்து மாலைகள் தொங்கவிடப்பட்ட அரசமரம். மாணிக்க கோமேதகம் - நவரெத்தின வகைகளில் இரண்டின் பெயர். 69.4. அட்டாள தேசம் - மேலோக நாடுகள். ஓலை - திருமணப் பத்திரிகை. அளகை குபேரன் - குபேரன்; இருபெயரொட்டு பண்புத்தொகை. தேவ தேவந்திரன் - இந்திரன். சோபனம் - வாழ்த்து. 69.5. தருமன் - எமன். அண்டர் முனிவோர் - தேவலோக முனிவர்கள். சப்த ரிஷி - மரிசீ, அங்கிரசன், புலகன், வசிட்டன், அத்திரி, புலஸ்தியன், கிருது என்னும் எழுவர். 69.6. துரக பதாதி - காலாட்படையுடன் கூடிய பெருஞ்சேனை.

The ten connubial agreements horoscopic,
As ordained by astrological texts were confirmed;
Within a four-pillared hall a dais was erected;
Strings of pearl hung from a pipal tree;
Chaplets of ruby and sardonyx adorned the hall;
On the floor were drawn ornamental designs;
And diamond-bright lamps were lit in the hall.

THE WEDDING INVITATIONS BEING SENT

Invitations for the wedding were sent
To the celestials in the upper world;
The kings of the fifty-six countries,
To Kupēraṉ in Aḷakāpuri and Devendra in heaven,
With auspicious greetings proper.

GODS, DIGNITARIES AND ELDERS COMING TO MITILAI

Yama and Brahma, the celestial sages,
The seers Vaciṭṭa, Akattiya and the seven sages,
Besides Goddess Parasakthi effulgent, Vinayaga and Subramaṅya
And all the invitees from the fourteen worlds
And two hundred and twenty four orbs,
Desirous of attending the marriage, congregated in Mitilai.

ஆவணி மூலநட்சத்திரத்தில் திருமண ஏற்பாடு செய்தல்

நாளும் பொருந்தவைத் தார்கள் முகூர்த்தம்
நல்லாவணி மூலத்திலே
ராமர்க்குஞ் சீதைக்கும் மாமணக் காமண
ராஜமேளந் தொனிக்க

இராமன் தம்பியரோடு பவனிவர மக்கள் மகிழ்ச்சி நிலை

ராசதி டிமனும் வாசலில் பேரிகை
டம்மாளந் தானதிர
ராமனுந் தம்பிமார் மூவரும் நாடுநகர்
சுற்றிப் பார்க்கையிலே

தேச மடமாதர் வாசமலர் சூடிச்
சிந்துபதம் படிப்பார்
தெருவுக் கிலகூடி மரிவையர் கூடித்
திரண்டு கும்மியடிப்பார் 10

ஆசை மின்னார் மஞ்சள்பூசிச் சிங்காரித்து
அம்மானை யாடிடுவார்
ஆடவரை நாடிக் கூடி மோகித்து
யரக்கவி பாடிடுவார்

பூசண மிட்டுக் குரவை முழக்கியே
பூமியில் பந்தடிப்பார்
பொன்னிட்டு மையிட்டு பொட்டிட்டு பூவிட்டு
பொங்கலிட்டே நடிப்பார்

நடித்திட ராமனும் தம்பிமார் மூவரும்
நாட்டில் பவனிவர
நாரியர் கண்டு மயங்கி யிவர்
நல்லராஜ குமாரனென்பார்

69.8. முகூர்த்தம் - திருமணம். மாமண - திருமண. காமண - பந்தல். ராஜமேளம் - மங்கல முரசு. தொனிக்க - ஒலிக்க. 69.9 ராசதிடிமன் - ராஜாதி ராஜனான ஜனகன். டம்மாளம் - ஒருவகை பேரிகை. 69.10. சிந்து பதம் - சிந்து இசையால் இயற்றப்பட்ட பாடல். தெருவுக்கி- தெருவில் பொருந்தி. கும்மியடிப்பார் - கையால் கொட்டி கும்மி என்னும் விளையாட்டைச் செய்வார். 69.11. ஆசை மின்னார் - விருப்பமுடைய மின்னல் போலும் இளைய பெண்கள். அம்மானை - பெண்கள் விளையாடும் ஒரு விளையாட்டு வகை. கூடி - சேர்ந்து. மோகித்து- ஆசை கொண்டு. யரக்கவி - அழகிய் கவிதை. 69.12. பூசணமிட்டு - நேர்த்திக் கடன்கள் செய்து. குரவை - குரவை யொலி. 69.13. நாரியர் - பெண்கள்.

The wedding was fixed for the day with the asterism *Mūlam*
In the auspicious month of *Āvaṇi.*

RAMA WITH HIS BROTHER WALKING ALONG THE STREETS OF THE CITY

Even as timbrels, tabors and drums, sounded
And trumpets, horns and pipes blared forth,
Rama and his brothers went round the city;
Women adorned with odorous flowers singing *Cintu*[82]
In chorus danced, beating their hands in *Kummi*,[83]
Thousands of them in every street;
Bevies of damsels turmeric-daubed,
Would sing and dance the *Ammāṇai;*
With desire in their hearts,
Some would sing lovely carols,
Inviting youth for amorous union;
Singing in chorus, some others
Would discharge their vows;
Some would engage themselves playing ball;
With kohl in their eyes and vermilion upon their forehead,
And flowers in their tresses they danced in joy;
Seeing Rama and his brothers in procession,
Maids all did fall in love and swoon,
At the sight of his matchless beauty.

82. *Cintu* - A kind of musical composition.
83. *Kummi* - A kind of dance by women, with clapping of hands.

இராமனை மிதிலை மக்கள் புகழ்தல்

படித்திரு வாகிய சீதைக்கு வாய்த்த
பரிமள வாசனென்பார்
பவளக் கொடிக்கொரு பச்சைக் கொழுநனும்
பாபித்தது பாக்கியமென்பார்

குடித்திரு மாதிவள் சீதைக் கிணங்கின
கோவிந்த ராமனென்பார்
கோமானுக் காமென சீதையை வேதன்
குறித்துப் படைத்ததென்பார் 15

அடித்திரு மாதரைக் கல்லைப் பெண்ணாக்கும்
அதிசயத் துங்கனென்பார்
அரியில்லை என்ற யிரணியனை வென்ற
ஆண்பிள்ளைச் சிங்கமென்பார்

ஆண்பிள்ளைச் சிங்க மயோத்தித் தசரதர்க்
கானகுமார னென்பார்
அழகு தினகர னார்மனம் மெய்த்த
அழகு மருகனென்பார்

கோன்பணி மேற்றிருப் பாற்கடலில் பள்ளி
கொண்ட முகுந்தனென்பார்
கோதையர் சீதைக்குத் தசரத ராமன்
குலத்திலுதித் ததென்பார்

விண்பகை சாரிக்குச் சாண்பிழை யாச்சரம்
விடும்மகா விஷ்ணுவென்பார்
மேதினி வேந்தரிச் சோதிநிறம் பச்சை
மேனி விசேடமென்பார்

69.14. திருவாகிய - திருமகளாகிய. பரிமளவாசன் - நறுமணமுடையோன்; திருமால். பவளக்கொடி - பவளத்தாலான கொடி போன்றவள் சீதை. பச்சை கொழுநன் - பச்சை நிறத்தையுடைய தலைவன்; இராமன். பாபித்தது - அமைந்தது. பாக்யம் - புண்ணியம். 69 15. கோமான் - பேரரசன். வேதன் - பிரம்மன். 69.17. குமாரன் - மகன். தினகரனார் - ஜனக அரசன். மருகன் - மருமகன். 69.18. கோன்பணிமேல் - ஆதிசேடன் என்னும் பாம்பு மேல் பள்ளி கொண்ட அரசன். முகுந்தன் - திருமால். 69.19. பகைசாரி - பகைவர். சாண் பிழையாச் சரம் - சிறிதளவு கூட தவறாத அம்பு. மேதினி - உலகம்.

THE PEOPLE PRAISING RAMA

They hailed him thus variously
The people of Mitilai, on seeing the handsome prince;
"O, isn't this fragrant lord
Fit consort for Sita, Goddess Lakshmi incarnate?"
"It is fortunate", they cried,
"Our princess lovely like a coral liana,
Has got the jasper-hued lord as her husband!"
They hailed him "Kōvinta Rama,
Match proper for the Goddess of our line,"
They said: "The creator intended Sita for Rama
Even when he fashioned her."
They hailed him as the miraculous one
Who made a mere stone into a woman,
And as the lion who quelled Hiraṇiaṇ
Who denied Hari, Lord Nārāyaṇa.
"The lovely son of Tacarata, Rama is in everyway
The ideal son-in-law for king Jaṇakaṇ!"
They hailed him as "Mukunta in conscious slumber
In the sea of milk, upon the serpent-bed,
Who incarnated as Tacaratarāma,
Just to wed our lovely princess Sita!"
They hailed him as Mahavishnu
Whose unfailing arrows never miss the foes!
Of all the kings of the earth
They said: "None like him,
With his emerald complexion."

சீதை கன்னிமாடத்திலிருந்து இராமனைக் காணுதல்

காண்பவ ரிப்படி கண்டு மயங்கி
கலந்து மொழிபேசக்
கன்னியர் சீதையர் பொன்மேடை வீதியில்
காவலர் செல்கையிலே 20

செல்கையிலே சீதை பூங்குழ லாளதைச்
சீவிச் சிணுக்கெடுத்துச்
சிங்கார மேடையி லங்கே யுலாவிச்
சிறப்பாய் நிற்கையிலே

பலகணி வாசலை மெல்லத் திறந்ததுமே
பார்க்கத் தெருதனிலே
பச்சை மாலுந் தம்பிமாரும் வருகிற
பவனியைக் கண்டாளே

உல்லாச மாய்வரும் ராம னழகைப்
பொன்னோவியப் பெண்பார்த்து
உலகளந் தார்மெய் மரகதப் பச்சை
ஒளிகண்டு கண்பூத்து

எல்கையில் பூச்சக் கரவாள் குடைக்குளி
ராமனெ ழுந்தருள
இளையவர் மூவ ருடைவா ளெடுத்து
யிணையடி பேணிவர

இராமன் அழகில் சீதை மயங்குதல்

இணையடி யாதி சிரசு வரைக்கொண்டு
இராமன் சொரூபமெல்லாம்
ஏந்திழை யாள்சீதை கண்டு மயங்கிட
எய்தினன் மாரனம்பு 25

69.20. காவலர் - இராம, இலக்குவர். 69.21. பூங்குழல் - அழகிய தலை மயிர். சிணுக்கெடுத்து- மயிரைக் கோதி சிக்கல் இல்லாமல் எடுத்து. 69.22. பலகணி - சாளரம். 69.23. பொன்னோவியப் பெண் - பொற்குழம்பால் எழுதப்பட்ட ஓவியப் பெண்; சீதை. மரகதப் பச்சை ஒளி - திருமால் மேனி நிறத்து ஒளி. கண் பூத்து - கண் மகிழ்ந்து. 69.24. எல்கையில் - பூமியின் எல்லையில். பூச்சக்கரவாள் - பூமியின் வட்டப் பாதை. குடைக்குள்- வெண் கொற்றக்குடைக்குள். இளையவர் - இலட்சுமணன். மூவருடை - சிவன், திருமால், பிரம்மன் மூவரால் தரப்பட்ட. இணையடி - ராமனின் பாதம். 69.25. சிரசு - தலை. சொரூபம்- வடிவம். மாரன் - மன்மதன். அம்பு - மன்மத பாணம்.

SITA SEEING LORD RAMA FROM THE RAMPARTS OF THE GYMNASIUM

While all the women who saw him,
Where talking in rapturous praise of the Lord,
Upon a golden terrace in her mansion,
Stood Sita dressing her hair and promenading in her balcony;
While opening a magic casement,
She espied down in the street
The jasper-hued Lord and his brother in procession;
Sita, herself lovely like a golden painting,
Saw the dazzling beauty of the Lord
Him, who measured the triple worlds in a step.
Gladsome her eyes, she rejoiced at her groom,
As he walked under a royal canopy round like the ecliptic
While his younger brother
Carried the sword given by the triad of the Gods.

SITA LOST IN RAMA'S BEAUTY

From head to foot as the fascinating form
Of Rama, enthralled, princess Sita, '
The God of love shot his arrow at her,

துணைவிழி தேகம் புளகித்து ஜானகி
சோர்ந்துருக மன்மதன்
தூயவள் சீதையைத் தாயென்று போற்றிச்
சொரிந்தானே புட்பசரம்

இராமன் சீதையைக் கண்டு மயங்குதல்

கணைசிலை ஏந்துகை ராமனுஞ் சீதையைக்
கண்டானே கண்குளிர
கல்லிலே தங்க மழுத்திய மாளிகைப்
பலகணி வாசலிலே

பணையிரு கொங்கைபொற் பாவை சொரூபத்தைப்
பாதாதி கேசம்வரை
பார்த்துப்பார்த்துக் கண்கள் பூத்துப் புளகித்துப்
பச்சைமா லுள்மயங்க

பச்சைமால் தந்தைஎன் றெண்ணாமல் மன்மதன்
பஞ்சபாணந் தொடவே
பாக்கிய லக்ஷ்மி யோக்கியம் பார்த்துப்
படைமதனை யாற்றி

தசரதன் முதலோர் மாளிகையில் தங்கியிருத்தல்

லக்ஷ்ம ணன்சத்து ருக்கன் பரதனும்
ராமனும் சேனையுமாய்
நேச தசரத ராசனி றங்கியே
நீடைபொன் மாளிகையில் 30

சீதையை மகளிர் அலங்கரித்தல்

அச்சுத னார்கொலு வாச லிருந்திட
அங்கங்கே சீதையர்க்கே

69.26. புளகித்து - மகிழ்ந்து. சொரிந்தானே - எய்தினானே. புட்பசரம் - மலர் அம்புகள். 69.27. கணை சிலை - அம்பு, வில். கல்லிலே - மாணிக்க கல்லிலே. பலகணி - சாளரம். 69.28. பணையிரு கொங்கை - பருத்த இரண்டு மார்பகங்கள். பொற்பாவை - பொன்னால் செய்யப்பட்ட பாவை போன்ற சீதை. சொரூபம் - வடிவம். பாதாதி கேசம் வரை - கால் முதல் தலை வரை. மயங்க - மோகம் கொள்ள. 69.29. மன்மதன் - காதலர் தெய்வம்; திருமாலின் மகன். பஞ்ச பாணம் - ஐந்து வகை மலர் அம்புகள்; அவை முல்லை, அசோகு, தாமரை, மா, கருங்குவளை என்னும் மலர்கள். பாக்கியலக்ஷ்மி - சீதை. யோக்கியம் - தகுதி. படைமதன் - மன்மதன் மற்றும் படைகள். 69.31. அச்சுதனார் - இராமன். கொலு வாசல் - உல்லாச மண்டபம்.

And she grew weak and dizzy with desire;
And Manmath remembering Sita to be his mother
Mildly his flowery arrows, showered at her.

RAMA FASCINATED BY SITA'S CHARMS

Bow in hand, Rama did behold her
To his heart's content as she stood
Beside the casement of her balcony,
Gold embossed with gems inlaid,
At sight of this divine pulchritude
Of the golden Sita with lovely breasts,
He gazed and gazed till his eyes grew dazed!
The emerald-hued, inly swooned,
While without consideration Manmath shot
His five-fold flowery arrows at them both
His parents of yore, Māl and Lakshmi!
The four brothers with their retinue
And the genial emperor happy Tacarata,
Stayed in the palace vast,
Intended for the royal guests.

SITA BEING ADORNED

While Accuta (Rama) was in his quarters allotted
Princess Sita was adorned by elderly matrons

அந்தாதி மூப்பிமார் சந்தனம் சாந்து
[47]சவ்வாது [48]பன்னீர் தெளித்து
மிச்ச மயிற்கண் விசிறிவெண் சாமரம்
வீசிஉல் லாசமதாய்
மெல்லியர் மையலு மாற்றி மணிப்பொன்
வியன்கை பூட்டினாரே
பூட்டிய பாடகந் தண்டை சதங்கை
புலம்பு சிலம்புசரம்
பூலோக லக்ஷ்மி காலாழி பீலி
பொருந்து விரற்பணியாம்
நீட்டிய சூடகம் காப்பு நகைவந்தி
நெளிவு வளைமுடுகு
நேரிட்ட மார்பில் பதைக்கம் சரப்பணி
நீண்டபொன் னாபரணம்
வாட்டிய பொன்முத்து மாலைச் சவடி
வயிரத்தினா லாட்டு
வாலை மணிப்பட்டைக் காறை யெருக்கலை
மாலை ஏகவடமும் 35
சூட்டிய குப்பியும் தொங்கலும் முத்துச்
சுடிகை நிலவுடனே
சுட்டியும் பட்டமும் சூழெழு நாயறும்
தோற்றமதா யணிந்தார்

அந்தாதி மூப்பிமார் - உடல் முழுமையும் மூத்த வயதான பெண்கள். சந்தனம், சாந்து, சவ்வாது, பன்னீர் - நறுமணப் பொருட்களின் பெயர்கள். 69.32. மிச்ச மயிற்கண் விசிறி - மயில் தோகையால் செய்யப்பட்ட விசிறி. வெண்சாமரம் - ஒரு வகை விசிறி. மையல் - மோகம். மணிப்பொன் - அழகிய பொன்னாபரணம். வியல் கை - அழகிய கை. 69.33. பாடகம், தண்டை, சதங்கை, சிலம்பு, காலாழி, பீலி, விரற்பணி - காலணி வகைகள் சிலவற்றின் பெயர்கள். புலம்பு சிலம்பு - ஓசை உண்டாக்கும் சிலம்பு. 69.34. சூடகம், காப்பு வந்தி, நெளிவு, வளைமுடுகு - கைகளின் வெவ்வேறு பாகங்களில் அணியப்படும் ஆபரண வகைகள். பதைக்கம் - பதக்கம், மார்பணி வகையிலொன்று. சரப்பணி - பொன்னில் வயிரமழுத்தின மார்பிலணியும் ஓர் ஆபரணம். 69.35. சவடி, ஆட்டு வாலை, மணிப்பட்டைக் காறை, எருக்கலை மாலை, ஏகவடம் - மகளிர் மார்பிலணியும் ஆபரண வகைகள். 69.36. குப்பி, தொங்கல், முத்துச்சுடிகை - நெற்றியணிகளின் வகைகள். நிலவு - சந்திரப் பிரபை என வழங்கப்படும் ஆபரண வகை. சுட்டி - நெற்றிச் சுட்டி. பட்டம் - நெற்றிப்பட்டம் என்னும் ஆபரணம். சூழெழு நாயறு - கடலிலிருந்து உதிக்கும் கதிரவன்.

47- சவாது 48.பனீர்

With sandal-paste, kohl and Civet;
And with rose-water sprinkled at her,
Maids on either side waved white chowries
Of peacock-feathers to assuage her lovesickness;
Gems of gold, they placed on her lovely hands,
While at her feet they fixed jewels like *Pātakam*
And various kinds of anklets and ankle rings
Like *Catańkai* and *Taṇṭai*
And golden armlets of various kinds,
Like *Cūṭakam, Kāppu, Vanti, Neḷivu, Muṭuku.*
Upon her erect breasts they placed necklaces
Inlaid with diamonds;- golden necklaces,
Such as *Cavaṭi, Attuvalai, Kāṟai, Erukkalai Mālai*
And chains of single strand;
Besides ornaments on the forehead hanging
Named *Kuppi, Cuṭṭikai, Tońkal*
Ornaments shaped like the crescent; *Cuṭṭi* and *Paṭṭam*
And jewels, like the rising sun resplendent shone

அணியுந் திருக்குழை கொந்தளப் பொன்ராம
ராக்குகொப்புச் சிமிக்கி
ஆபர ணம்பல கோடி யெழுத
அடங்குமோ ஏட்டுக்குள்ளே

இராமனை அலங்கரித்தல்

வணிகன் திருச்செந்தி லாறு முகன்குகன்
மாமனை ராமனையே
மாமணக் கோலம் புனைந்த விஸ்தாரம்
வழுத்த முடியாது
தணியாச் சிரசு முதற்செம் பதுமச்
சரணம் வரைச்சிறப்பாய்
சாதில க்ஷ்ம்பணி யாதி லக்ஷிமியுட
தருமண வாளனுக்கே
கணிச முடன்விரல் மிஞ்சியும் வீரக்
கழல்கன கக்கொலுசு
கைவிரல் பத்திலும் கல்வைத்த மோதிரம்
கஞ்சப்பூ பஞ்சரத்னம் 40
பஞ்ச ரெத்தினம் நவரெத்தின பவித்திரம்
பளிரிட்டொளி துலங்க
பங்கயம் போலிரு செங்கை யிலாழி
பதித்தவளை துலங்க

69.37. தீக்குழை, கொந்தளம், பொன் ராமராக்கு, கொப்பு, சிமிக்கி - காதணி வகைகள் சிலவற்றின் பெயர்கள். ஏட்டுக்குள்ளே - நூலுக்குள்ளே. 69.38. வணிகன் - முருகன். திருச்செந்திலாறுமுகன் - திருச்செந்தூர் என்னும் பதியிலுறையும் ஆறு முகங்களை உடையவன்; முருகன். குகன் - முருகன். குகன் மாமன் - முருகன் மாமனான திருமால் அவதாரமான இராமன். மாமணக் கோலம் -. திருமணக் கோலம். விஸ்தாரம் - நிகழ்ச்சியின் விவரிப்பு. வழுத்த - கூற. 69.39. தணியாச் சிரசு - எவர்க்கும் பணியாத தலை. செம்பதுமச் சரணம் - சிவந்த தாமரைமலர் போன்ற பாதம். சாதி - வகை. பணி - ஆபரணம். ஆதிலக்ஷிமியுட - ஆதிலக்ஷிமியாம் சீதையுடைய. தருமணவாளன் - கணவனாம் இராமன். 69.40. கணிசமுடன் - அதிக அளவில். மிஞ்சி - கால் விரலிலணியும் ஓர் ஆபரணம். வீரக்கழல், கனகக் கொலுசு - காலணி வகைகள்; இவை ஆடவர் அணிவது. கல் - மாணிக்கம், கோமேதகம் போன்ற நவரெத்தின கற்கள். கஞ்சப்பூ - ஓர் அணிகலன். பஞ்சரத்னம் - வைடூரியம், வைரம், பச்சை, நீலம், முத்து என்பன. 69.41. நவரெத்தினம் - ஒன்பது வகை ரெத்தினங்கள். பவித்திரம் - மார்பிலணியும் பூணூல். பளிரிட்டு - ஒளிவிட்டு. துலங்க - ஒளிவீச. பங்கயம் - தாமரை. செங்கை - சிவந்த கை. ஆழி- மோதிரம். வளை - 'கங்கணம்' என்னும் ஆபரணம்.

And ornaments for the ear such as *Kuḷai, Rāmarākku*
Kontaḷam, Koppu and *Cimikki.*
Indescribable in number
Were the various jewels and ornaments.

RAMA BEING ADORNED FOR THE WEDDING

Oh! beyond telling, is the beauty of Rama
(Uncle of Lord Muruka the six-faced lord at Tiruchendur)
When he was adorned as a bridegroom,
From his unbowing head top to his red lotus feet,
Endless kinds of jewels were used
To adorn the spouse of Primal Lakshmi
Now princess Sita born!
Numerous toe-rings and golden ankle-rings
And heroic anklet, adorned his feet.
Upon his ten fingers blazed rings
Inlaid with five kinds of precious stones
Diamond, Lapis Lazuli, emerald, sapphire and pearl,
The ring on the left third finger *Pavittiram*[84] called
Blazed brilliantly; bracelets inlaid
With the discus design, he wore on his hand;

84. *Pavittiram* - A ring made in the form of a blade of grass entwined.

துஞ்சாத அட்டை துடர்வீரச் சங்கிலி
சுத்திக்கல் பத்திமின்ன
சுகுர்தத் தரிரூபம் பதித்த முடுகுகள்
சூரியப்பிர காசமென்ன
நெஞ்சில் சரப்பணி பதக்கம்பொன் மாலையும்
நீள்முத்துத் தாழ்வடமும்
லக்ஷ்மி தாய்வீற் றிருக்கின்ற மார்பில்
நிரம்ப எடுத்தணிந்தார்
கஞ்ச மலர்ச்சொரி முத்துக் கடுக்கன்
காதுக்கொரு சிறங்கை
காதல்க் கிட்டத்தில்ச் சூதான வட்டக்
கடுக்கன் துவண்டசைய
அசையு முடையுத் தரீகத்திற் பட்டை
யரைஞாணுங் கச்சையும்
ஆகவே சோடினை லோகத்தில் மெய்க்க
வலங்காரஞ் செய்தனரே

இராமர் - சீதை மணவறை வருதல்

திசைபுகழ் வாத்தியம் முழங்க விளங்கச்
சிவிகையின் மீதேறி
சீதை பிராட்டி கதலி குழித்தவள்
தேசப்பிர தக்ஷிணமாய் 45

69.42. துஞ்சாத - நிலைபெற்ற. அட்டை - அட்டிகை; கழுத்தணி வகையிலொன்று. வீரச் சங்கிலி - கழுத்தணி வகையிலொன்று. சுத்திக்கல் பத்தி மின்ன சுகுர்தத்தரிரூபம் - முழுமையும் நவரெத்தின கற்கள் பதிக்கப் பெற்று ஒளி வீசுகின்ற சுகுர்தத்தரிரூபம் என்னும் அணிகலன். 69.43. சரப்பணி பதக்கம், பொன்மாலை - மார்பிலணியும் ஆபரண வகைகள். நீள்முத்து தாழ்வடம் - முத்துக்களால் கோர்க்கப்பட்ட நீண்ட ஆபரணம். லக்ஷிமிதாய் வீற்றிருக்கின்ற மார்பு - திருமால் மார்பில் திருமகள் உறைவதான ஐதீகத்தை ஒட்டிய தொடர். 69.44. கஞ்சமலர் - தாமரைமலர். சொரி - ஈன்ற. முத்துக் கடுக்கன் - முத்தால் செய்யப்பெற்ற காதணி. சிறங்கை - காதணி வகையிலொன்று. சூதானவட்டக் கடுக்கன் - பாதுகாப்பான வட்டமான 'கடுக்கன்' என்னும் காதணி வகை. துவண்டு - தெளிந்து. 69.45. உடை - ஆடை. உத்தரீகம் - மேலாடை. பட்டை, அரைஞாண் கச்சை - இடுப்பில் கட்டும் ஆபரணங்கள். சோடினை - சோடித்து; அலங்காரம் செய்து. லோகத்தில் மெய்க்க - உலக மக்கள் வியந்து நோக்க, 69.46. சிவிகை - பல்லக்கு. கதலி குழித்து - நீராடி. பிரதக்ஷணமாய் - நகரை வலம் வருகின்றதாய்.

Round his neck were a well-set collar of diamonds
And hero's golden chain; and rare jewel
Cukurtattarirūpam with nine kinds of gems inlaid,
Shone radiant like the refulgent sun;
Carappaṇi[85] and carcanets of gold,
And a long pearl - chaplet nestled against his chest
Where Goddess Lakshmi sits enthroned;
On the ears resembling lotus flowers, ear-studs
Of pearl dangled, besides *Cirańkai*[86] rare;
His upper cloth of rare silk and a ciclaton
Covered his chest;
Golden bands went round his waist,
Like a cummerbund or sash
With so many scintillating ornaments
Was Rama adorned,
To the great wonderment of the people of the world.

RAMA AND SITA COMING TO THE WEDDING HALL

While the traditional instruments played auspicious music,
Upon a palanquin, Sita after ritual bathing,
Went around the city in procession;

85. *Carappaṇi* - A necklace.
86. *Cirańkai* - A jewel.

இசையப் பணிகள் புனைந்து மதகரி
யேறிச் [49]ஸ்ரீராமன்
ஏற்ற சரவையிற் றீர்த்தமு மாடி
யெழுந்து நகர்வலமாய்
விசையுற்ற நால்வகைத் தானைகள் தாய்தந்தை
வேந்தருஞ் சூழ்ந்திடவே
மேக வர்ணரும் விவாக மணவறை
வீதியில் வந்தனரே.

இராமன் சீதை திருமணம்

விருத்தம்

70. வந்திருந்தார் மணிமேடை தனில்ஸ்ரீ ராமன்
வசிட்டர்ருத்திர கலசகும்பம் வைத்தே மிக்க
என்தாய்சீ தையைச்சகிமார் கூட்டி வந்து
இடப்புறமா லினிதிருக்க யிமையோர் வாழ்த்த
அந்தணர்கள் மறைமுழங்க சகல தேசத்
தரசர்திறை யிடயிடிபோ லறைந்தார் மேளம்
பந்தலிலே லட்சுமியைப் பச்சை மாலைப்
பார்க்கவயன் அனந்தம்விழி படைத்தி லானே.

விருந்தினர் உணவு உண்டல்

சிந்து

71. படைதச ரதனாரும் நெடுஞ்சடை தவமுனிவோரும்
பச்சை மால்தனை வாழ்த்த
மிச்சமாம் தம்பிமார்கள் வச்சிர உடைவாளேந்த

69.47. இசைய - பொருந்த. மதகரி - மதம் பொருந்திய யானை. சரவை - சரயு என்னும் நதி. 69.48. நால்வகை தானைகள் - காலாள், யானை, குதிரை, தேர் என்னும் நால்வகைப் படைகள். 70.1. மணிமேடை - மாணிக்கக் கற்களால் அலங்கரிக்கப்பட்ட மணமேடை. ருத்திர கலச கும்பம் - சிவனைத் தியானித்து வைக்கப்பட்ட புனிதநீர் குடம். 70.2. சகிமார்- தோழிமார். மாலின் - திருமாலின்; இங்கு இராமன் என்ற பொருளில். இமையோர் - தேவர். 70.3. மறை - வேதம். திறை - கப்பம் அல்லது பரிசுப் பொருள். அறைந்தார் - ஓசை எழுப்பினார். 70.4.லட்சுமி - திருமகள்; சீதை. பச்சைமால் - பச்சைநிற மேனியனான திருமால்; இராமன். அயன் - பிரம்மன். அனந்தம் - அளவற்ற. 71.1. மிச்சமாம் தம்பிமார்கள்- இராமனின் எஞ்சிய தம்பியர்களான இலக்குவன், பரதன், சத்துருக்கனன். வச்சிர உடைவாள்- கூர்மையான உடைவாள்.

49. சிறிராமன்

Upon an ichorous tusker, Rama went to the Carayu,
To bathe before the wedding ceremony;
And escorted by four kinds of troops,
His parents and the feudatory kings,
The nimbus-hued Lord came to the wedding hall.

THE MARRIAGE OF RAMA AND SITA

70. Upon the wedding dais wrought of rubies,
Vaciṭṭa placed a *Rutirakalacam*[87] with holy water;
While Sita was brought by her maid-companions
And seated to the left of Tirumāl, that was Rama:
And all hailed them together:
The Brahmins chanted the Vedas;
The assembled kings offered their tributes;
The drummers beat the tabors loud;
"O, that Brahma, the creator had given us,
A myriad-eyes to encompass
And enjoy this glorious heavenly sight,
Of Goddess Lakshmi with Tirumāl jasper-hued,
Seated thus in the royal wedding hall."

THE GUESTS AT DINNER

71. As the armipotent king Tacarata
And the holy sages with matted locks,
Blessed the emerald-hued Lord Rama,
And the younger brothers, each carried
A diamond-encrusted sword,

87. *Rutirakalacam* - Pot of sacred water invoking Siva.

உடைத்த களபச் சேறு திமிர்த்த
அடைக்காய் வெள்ளிலை விளம்ப
உண்பார்க் கமுது கறிகண் பார்த்துவிளம்புவர்

மங்கல மேள முழக்கம்

பண்பாக வந்தவர்க் கெல்லாம் வந்த
வந்த வேந்தர்களும் சுரருடன்
அந்தணர் தபோதனரும் வட்டமிட்டு சபைகூடித்

திட்ட வட்ட மாயிருக்க அட்ட
திக்கும் மேளம் முழங்க

கலப்பருப்பு சடங்கு

உந்திய முக்கனி தேங்காய் பாக்கு
மஞ்சள் வெற்றிலையும் பாங்காய்
உத்தமியாள் சீதை கைபற்ற வுமைபார்வதி

சத்தி கலப்பருப் பெடுத்தாள் சத்தி
கலப்பருப் பெடுக்க தமருற்ற
மாமன் முளைதெ ளிக்கத்

தத்தி தத்தியாக வரும்கொற்றவர்கள் சம்மதிக்க
முத்தளந்து பரிச மிட்டார்

பரிசம் கொடுப்பு சடங்கு

கற்றவர் கொற்றவர் சூழும் பரிச
முத்தளந்த வகை கேளும்
கன்னல் முத்து [50]செந்நெல் முத்து

71.2. களபம் - ஒரு நறுமண பொருள். அடைக்காய் - பாக்கு. வெள்ளிலை - வெற்றிலை. விளம்ப - விநியோகிக்க. 71.3.சுரர் - தேவர். தபோதனர் - தவசியர். 71.4. அட்டதிக்கு - எட்டு திக்கு. 71.5. உந்திய - முதன்மையான. முக்கனி - மா, பலா, வாழைப் பழங்கள். பாங்காய் - முறையாய். 71.6. கலப்பருப்பு - குமரி மாவட்ட திருமண சடங்குகளுள் ஒன்று. தமருற்ற - விருப்பம் கொண்ட. மாமன் - முறை மாமன். முளை தெளிக்க - முறைப் பாலிகையிலுள்ள நவதானியங்களை எடுத்து வீச. 71.7. தத்தி தத்தியாக - கூட்டம் கூட்டமாக. பரிசம் - அன்பளிப்பு.

50. சென்னல்

Odoriferous paste of sandalwood
Along with betel-leaves and arecanuts,
Were offered to all the guests.
After they had partaken of the rich repast
Of cooked rice nectarine, and vegetables galore.

AUSPICIOUS CEREMONIES

Visiting kings, celestials and all
Distinguished guests, relaxed
In their seats in assembly round,
While the pipes and drums played
Auspicious music everywhere.
Princess Sita, the resplendent bride
Holding in her hands auspicious things
Such as turmeric, betel-leaf and nut,
Coconuts and three kinds of fruit,
(Plantain, Jack and Mango).
Goddess Sakthi took the ceremonial dhall,
While the uncles strewed the germinated
Pulses nine, according to tradition;
Bands of kings then came forward,
To offer their gifts of pearls with blessings;
O, hearken to the way they measured the pearls!
Pearls found in mature sugarcane and superior paddy,

காட்டானை கோட்டு முத்தும் பொன்னு
முத்தும் சங்கு முத்தும்
முத்து நிறைநாழி மரக்கால்
கன்னி புத்தி விநாயகன் தனக்கோர்
நாழிட்டார் வற்க வகைவட்ட யிலையில்
படைத்து அட்ட மங்கலமும் படைத்தார்
சுற்றுக்குச் சுற்ற னந்த லக்ஷம்
சுடர்பூத் தரவணி மணி வெளிச்சம்
சுருள்வைத்து பாகாடை தெருவுக்குச் சீகாடை
கருமத் தலைவர் கொடுப்பார்
தலைவர்க்கும் தாய்மார்க்கும் மணம்நல முற்று
வருவார்க்கும் சந்தனம் மஞ்சணை
பூச கொந்து கொந்தாய் மலர்வாசம்
பந்தலில் விதானங்கள் பார்த்தார்

விஸ்வகர்மன் திருமாங்கலியம் கொடுத்தல்

உலகத்தில் விஸ்வ கர்மன் செய்த
குலப்பொட்டுத் திருமங்கலம்
உற்பன பட்டங் காலாளி விற்பனன்
சமைத்துத் தங்கச்
செப்பில் வைத்துக் கொடுத்தானே - செப்பரிக்கும்
ஜானகிக்கும் வசிட்டர் சங்கல்ப

71.8.9. கன்னல் முத்து, செந்நெல் முத்து, காட்டானை கோட்டு முத்து (யானைத் தந்தத்திலிருந்து பிறக்கும் முத்து) பொன்னு முத்து, சங்கு முத்து (சங்கிலிருந்து பிறக்கும் முத்து) - பல வகைப்பட்ட முத்துக்களின் வகைகள். 71.9.நாழி, மரக்கால் - அளவைகளின் பெயர்கள். 71.10. நாழிட்டார் - ஒரு நாழியளவு முத்து படைத்தார். வற்கவகை வட்டயிலை- வருக்கை பலா மரத்தின் வட்டமான இலையில். அட்ட மங்கலம் - எண்வகை மங்கல பொருள்கள்; இவை இணைக்கயல், கண்ணாடி, சாமரம், கொடி, தோட்டி, நிறைகுடம், முரசு, விளக்கு என்னும் எட்டு பொருள்கள். 71.11. அனந்த லக்ஷம் - பல லட்சமளவு. அரவணி மணி வெளிச்சம் - பாம்பு தலையிலுள்ள மாணிக்கத்தின் ஒளி. 71.12. சுருள் - வெற்றிலை. பாகாடை - பாலாடை. சீகாடை - சிறந்த ஆடை. கருமத்.தலைவர் - தொண்டு செய்யும் அரசர். 71.13. மஞ்சணை - எண்ணெய்க் குங்குமம். 71.14. கொந்து கொந்தாய் - கொத்துகொத்தாய். விதானம் - மேற்கூரை. 71.15. விஸ்வகர்மன் - தேவதச்சனின் பெயர். குலப்பொட்டுத் திருமங்கலம் - குலப்பெண்ணாய் காட்டுதற்குரிய திருமாங்கல்யம். உற்பனபட்டம் - கல்வி பட்டம். காலாளி விற்பனன் - கலை நுட்பமான பொருட்களைச் செய்வதில் வல்லவன்; விஸ்வகர்மன். சமைத்து - செய்து. 71.16. செப்பு - சிறு பாத்திரம். செப்பரிக்கும் - செப்ப முடியா திருமாலுக்கும்.

Pearls growing in the tusks of wild elephants,
Golden pearls, pearls in oysters and chank,
They poured in measuring vessels,
Like *Naḻi* and *Marakkāl*
They gave to the bride of the day!
Then to Lord Vinayaga, they prayed
With offerings of eight auspicious things
Heaped on round leaves of the jack.
Round on round came the gifts,
Bright as the gems on a serpent's head,
Myriads of them innumerable!
The feudatory kings paid their tribute;
With betel-leaf, golden milk-ladles, and garments fine!
To the assembled chiefs and all matrons
And guests attending the royal wedding
Fragrant sandal–paste, oils and kumkum
And clusters of flowers odoriferous;
As they looked up wondering at the decorated
Roofs of the royal pavilions.

VISVAKARMA FASHIONS THE THIRUMANGALYAM

It was the divine artificer Visvakarma
Himself, who fashioned the sacred Thirumangalyam;
Proper for brides and royal pedigree,
[88]Visvakarma, expert draftsman in his art!
Who placed it in a golden casket
And gave it to the preceptor Vaciṭṭa,
Who then began the rituals in order.

88. Visvakarma - The artificer of the Gods.

விதிகாப்பு தரித்து சித்திரமாய் நாமமிருபத்
தேழிட்டு நுதலில்

சீதை புத்தாடை புனைதல்

கஸ்தூரித் திலர்த மிட்டார் ஒப்பனை
செய்மானார்கள் சீதை கற்பினிய
தேனார்க்கே ஒருவளும் நவரெத்ன
மணிச்சிற்றாடை யுடுத்தி
இருகைக்கும் சுருள் தொடுத்தார் கொடுத்திடக்
குரவை சங்கு தொடுத்திட்டு
யெனமுழங்கும் கோதையுகை திருக்கையி
லாதிமங்க லத்தை வேண்டிச்

சனகன் சீதையைக் கன்னிகாதானம் செய்தல்

சீதையர்க்குத் திருப்பூட் டினார்அடுத்து வசிட்டர்
வாழ்த்த அருள்கொடுத்
தட்சதைகள் தூற்ற அற்புத மதாக
விந்தை பொற்பணி சீதையைத்
தந்தை கைப்பிடித்துக் கொடுத்தாரே தாரணியில்
பாணிக் கிரணம் ஆதி
நாரணர்க்கே கன்னிகை தானம் சங்கரன்
பிரமன் சாக்ஷி தானவர் 20

தேவர்கள் திருமணத்திற்குச் சாட்சியாக நிற்றல்

வானவர் சாக்ஷி ஐங்கரன் கந்தனும்
சாக்ஷி ஆரண மாதவன்

சங்கல்ப விதி காப்பு - திருமணத்தின் போது அதற்குச் சற்று முன்னர் கையில் கட்டப்படும் மங்கல மஞ்சள் கயிறு. நாமம் - தலை மற்றும் உடம்பில் இடும் விஷ்ணு சின்னம். நுதல் - நெற்றி. 71.17. கஸ்தூரி திலர்தம் - கஸ்தூரிப் பொட்டு. மானார்கள் - மான் போன்ற விழி படைத்த சீதையின் தோழிமார்கள். சிற்றாடை - இடையில் அணியும் நவரெத்தினங்கள் பதிக்கப் பெற்ற ஆடை. 71.18. சுருள் - வெற்றிலைச் சுருள். குரவை - பெண்கள் வாயாலிடும் மங்கலவோசை. சங்கு தொடுத்திட்டு யென - சங்கு ஒலித்தால்போல். ஆதி மங்கலத்தை வேண்டி - முதன்மையாய் என்றும் நிலைபெற்றிருக்கும் மங்கலவாழ்வை வேண்டி. 71.19. திருப் பூட்டினார் - மங்கல நாணாம் தாலியைக் கட்டினார். அட்சதை - மங்கல அரிசி; தாலிகட்டும் நேரத்தில் மணமக்கள் மேல் பெரியவர் தூவி ஆசிர்வதிப்பர். பொற்பணி சீதை- பொன்னாலாகிய ஆபரணமணிந்த சீதை. 71.20. தாரணி - உலகம். பாணிக் கிரணம் - திருமணம். ஆதி நாரணர் - திருமால்; இராமன். சங்கரன் - சிவன். தானவர் - தேவர். 71. 21. ஐங்கரன் - ஐந்து கரத்தையுடையவன்; கணபதி. கந்தன் - முருகன். ஆரண மாதவன் - காட்டில் வாழும் பெரிய தவமுனி; விஸ்வாமித்திரன்.

SITA WEARING NEW WEDDING GARMENTS

The doe-eyed maids of princess Sita
Placed a *Kastūri*[89] tilak on her forehead;
Another did dress her in wedding garments
Sparkling with nine kinds of gems.
The royal bride sweet as honey!
Auspicious betel-leaf rolls were placed
In both her hands, when the women
Cried in chorus auspicious,
Which sounded like conches being blown,
Praying for her welfare eternal!
Rama tied the sacred Thirumangalyam round her neck,
And Vaciṭṭar blessed the couple with holy rice,
Jaṉakaṉ did thus give away Sita into Rama's hand
To Primal Lord Rama himself incarnate,
With God Sañkara, Brahma and the celestials
As witnesses to the auspicious event!
The Gods in heaven were witnesses to this event,
Besides the five-handed Lord Gaṇapathi
And Kanta; the great seers of the forest
Visvāmittira witnessed it,

89. *Kastūri* - The perfume, musk, from musk-deer.

சாக்ஷி சந்திரன் சூரியனக்கினி சாக்ஷி
ஆச்சிச்சக லாச்சிசபை
யரசரு டன்சனங்கள் சாக்ஷி யென்றே
தாரை வார்த்தான்
வார்த்தனன் சீதையரை ராமன்கை ஏர்த்தனன்
முகூர்த்த மதில்மா தவர்க்குத்
திருவாழி சானகிக்குச் சூடாமணி நாதன்
சங்கரன் தரித்தார்

சீதை இராமனுக்கு மாலை அணிவித்தல்

தாமோதரன் மாதை மகிழ்ந்து துளபத்
தாமன் பூமாலை பகிர்ந்து
தாதியர்கள் புடைசூழுஞ் சீதை கந்தரத்துமாலை
ஆதிமாயன் மார்பிலணிந்தார்

ஜனகன் கொடுத்த வரதட்சனை

ஆதி ராமனுக்கு மாமனார் பொன்ஸ்ரீதனங்
கொடுக்க நேமமாய் ஆதிலக்ஷம்
தேர்சிவிகை யாதிலக்ஷம் ரதகஜப தாதி
லக்ஷம் ஸ்ரீதனமாம் 25
மேதினி மிதிலை நகரும் சர்வாதிகாரிய
மந்திரி மாரும் மேற்படை
மகாதளங்கள் தார்கொடி பொற்பூஷி ணங்கள்
பாற்பசுக்கள் ஸ்ரீதனமாம்

ஆச்சி - ஆட்சி. சகலாச்சி சபை அரசர் - அனைத்து ஆட்சி சபையிலுள்ள அரசர். 71.22. தாரை- தன் மகளை தானமாகக் கொடுத்தல். 71.23. ஏர்த்தனன் - ஏற்றனன். திருவாழி - கைவிரலில் அணியும் மோதிர வகை. சூடாமணி - தலை முடியிலணியும் ஓர் அணி கலன். நாதன், சங்கரன் - சிவன். 71.24. தாமோதரன் - திருமால். மாது - சீதை. துளபத்தாபன் - துளசி மாலை அணிந்த திருமால்; இராமன். பகிர்ந்து - எடுத்து. தாதியர் - தோழியர். கந்தரத்து மாலை - கழுத்தில் சூடும் மாலை. 71.25. மாமனார் - ஜனகன். பொன் ஸ்ரீதனம் - பொன் முதலிய சீர்வரிசை. நேமமாய் - முறையாய். சிவிகை - பல்லக்கு. ரதகஜபதாதி - தேர்ப்படை, யானைப் படை, காலாள்படை என்னும் மூன்று. 71.26. மேதினி - உலகம். சர்வாதிகாரிய- சர்வ அதிகாரங்களும் பொருந்திய. மகாதளங்கள் - பெரிய படைகள். தார் கொடி - பறக்கும் கொடி. பொற் பூஷணம் - பொன்னாபரணம்.

Besides the sun and the moon,
All the ruling kings and potentates
In the hall and all the people assembled.
And pouring water into Rama's hand
To confirm the gift, Janakan gave away Sita to Rama.
And the Lord gracious did accept her;
To Rama a signet ring sacred,
And a crest-jewel to Sita,
At the auspicious hour, Lord Siva did present.

SITA GARLANDING RAMA

Tāmōtara (Rama) adorned with basil-wreath,
Happily took up a garland of flowers
And placed it round Sita's neck,
While Sita surrounded by her maids,
Did place a lovely chaplet on Rama's chest.

THE DOWRY GIVEN BY JANAKAN

To Rama his father-in-law did gladly give,
As bride's dowry in traditional manner
A hundred thousand chariots and palanquins;
And an equal number of elephants
And horses and infantry men, in battalions,
Besides counsellers all-powerful;
And fluttering flags and ornaments innumerable;
And too, herds of milch-cows by way of dowry
To Sita his darling daughter,
Given away with affirming water poured
By his ever victorious father-in-law.

மணவறையில் இராமன் சீதை வீற்றிருத்தல்

ஸ்ரீத னங்கள் மாலுமேற்க ஜெயமாதுலன்
கைதாரை ஏற்க சணமாயெழுந்
தருளிக் குணமாது சீதையோடு மணவறைக்
கோயில் புகுந்தார்
வேதமுஞ் சங்கோலம் விளங்க சங்கீத
யந்தமேளம் முழங்க விண்ணவர்
மலர்சொரிய பெண்ணரசியும் பதுமன்
கண்ணனுமாய் வீற்றிருந்தார்

சப்பரமஞ்சத்தில் சீதை இராமன் கால்பிடித்துவிடல்

வீற்றிருக்கும் நாழிகையில் சுடர்பூத் திருக்கும்
மாளிகையிலே விந்தை மல்லிகை
விரித்த ஏழடுக்கு தூள்சப்பர மஞ்ச
மெத்தை மீதிலிருக்கக்
காத்திருக்கு மாதிலட்சுமி மால்பார்த் திருக்க
கால்வருடையில் கற்கற டழுத்தின்
பௌத்திர மகற்றினது மிக்க ரெகுராம
ணறிந்து மேற்சங்க 30
அறிமலர் சூழலணங்கே கையில் நிறைவிரல்
பணியதெங்கே ஆண்டவர் மிதித்த
கல்லு மீண்டொரு பெண்ணாக வந்து
பூண்ட திருப்பாத மல்லவோ
நெறிரத்ன கல்லடுத்தால் திருமணம் பிரியப்
பெண்வடி வெடுத்தால் நெகிழ்ந்திடு

71.27. ஸ்ரீதனம் - சீர்வரிசை. மால் - திருமாலாகிய இராமன். ஜெயமாதுலன் - வெற்றி பொருந்திய திருமால் மாமனாகிய ஜனகன். தாரை ஏற்க - தாரை வார்த்து கொடுக்க, அதை இராமன் ஏற்க. சணமாய் - விரைவாய். மணவறை கோயில் - பள்ளியறை. 71.28. சங்கோலம்- சங்கின் ஓசை. அந்தமேளம் - ஒரு வகை முரசு. பதுமன், கண்ணன் - இராமன். 71.29. நாழிகை - நேரம். சுடர் - விளக்கு. சப்பரமஞ்சம் - கட்டில். 71.30. கால்வருடையில்- சீதை இராமனது காலைத் தடவி விடுகையில். கற்கறடழுத்தின்- கையில் அணிந்துள்ள மோதிரத்தின் கல் இராமர் பாதத்தை அழுத்தியதால். பௌத்திரம் - தருப்பைப் புல்லின் வடிவில் செய்யப்பட்ட கல் பதித்த பொன் மோதிரம். அகற்றினது - நீக்கியது. சங்க அறிமலர்- சங்கு போன்ற வெண்மையான மலர். 71.31. பணி- மோதிரம். ஆண்டவர் - இராமன். 71.32. கல்லடுத்தால் - இராமனே! உங்கள் காலை வருடுகையில் என் கை மோதிரக்கல் பொருந்தினால். திருமணம் பிரிய - திருமகளாம் என் மனம் வாடிப் பிரிய.

Swiftly the bridal pair did enter
Their decorated bridal chamber,
While the sound of Vedic chanting
Blended with conches being blown;
Drums and timbrels resounded
And pipes and horns played sweet music,
While the gods rained down
Showers of flowers in benediction
Upon the paragon among women Sita
And lotus-eyed Rama seated within.

SITA PRESSING RAMA'S FEET IN THE BRIDAL COUCH

In the bridal chamber with lamps burning bright,
With jasmine blooms strewn upon a bridal bed,
Made of eiderdown quilt seven-layered,
While the Lord looked on lovingly,
Sita pressed his legs gently to comfort him;
Her ring with precious stone inlaid,
She removed (the *pavitiram* shaped
Like holy grass entwined;)
At which Rama asked her: "O lovely damsel,
With dark tresses adorned with blooms
White as conches!' where is the ring
You had on your finger?" And Sita replied:
"Is not this the divine foot
That by a touch turned a stone
Into a woman? Afraid of this,
And the consequence thereof,
I removed my ring!"

மென்னையென்று தவிர்ந்தது பொன்னே யென்று
பகர்ந்தாள் சீதை தானே.

கால்பிடித்த காரணத்தை இராமன் வினவ சீதையின் பதில்

விருத்தம்

72. *சீதையரே செங்கைவிரல் பவித்திரம் நீக்கிச்*
சீலமுடன் கால்பிடித்த செயலே தென்ன
காதலிசொல் வாள்வழியில் பாறை யான
கருங்கல்லைப் பெண்ணாக்குங் கமல பாதம்
பாதரெத்னங் கோதையுரு வெடுத்தா லென்னப்
பழிக்குமென்றே பவித்திரக்கல் லொழித்தே னென்ன
ஆதரித்து பரமரெக சியமாய் ராமன்
அற்புதமா யொருவசனங் கற்பிப் பானே.

இராமன் உறுதிமொதி

கற்பினிய காதலியே நீயல் லாமல்
காசினியில் வேறொருவர் கண்ணால் கண்டால்
இப்பிறப்பில் தாய்தமக்கை இளையாள் புத்ரி
இருதயத்தில் மறுமுறையென் றெண்ணேன் சத்யம்
செப்பினது குறியிதுவே நெறிய தாகும்
சிவனாணை குலகுருக்கள் வசிட்ட ராணை
உற்பனமாய் விரற்பணியை யணிவா யென்றான்
உரம்பெற்றாள் சீதையிந்த வரம்பெற் றாளே.

இராமர் சீதை பட்டணப் பிரவேசம்

வரம்படைத்த சீதையரும் மாலு மாக
மகிழ்ந்திருந்து ஆறுசுவை வகையோ டன்னம்
சுரந்திடும்பால் பழமருந்தி அடுத்த நாளில்
சூரியன்வரக் காரியத்தால் தொழுது போற்றித்

பொன்னே - 'இராமனே' என்ற விளி. பகர்ந்தாள் - கூறினாள். 72.1. பவித்திரம் - தருப்பையால் செய்யப்பட்ட மோதிரம். சீலமுடன் - அழகுடன். 72.2. கமல பாதம் - தாமரை மலர் போன்ற பாதம். 72.3. பாதரெத்னம் - ஸ்ரீராமன் காலில் அணிந்த அணிகலனிலுள்ள இரத்தினமாகிய கல். கோதையுரு - பெண் வடிவம். பவித்திரக்கல் - தருப்பை புல் வடிவில் செய்யப்பட்ட கல் பதித்த மோதிரம். ஒழித்தேன் - நீக்கினேன். 72.4. ரெகசியமாய் - ரகசியமாய். வசனம் - கூற்று. கற்பிப்பானே - கூறுவானே. 72.5. காசினி - உலகம். 72-6. இளையாள் - தங்கை. புத்ரி - மகள். சத்யம் - சத்தியம். 72.7. குறி - அடையாளம். 72.8. உற்பனமாய் - உத்தமமாய். விரற்பணி - விரலில் அணிந்த மோதிரம். உரம் - வலிமை. 72.10. சுரந்திடும் - பசுவின் மடியிலிருந்து ஊறுகின்ற. காரியத்தால் - கரும முறையால்; இராமன் ரகுகுலத்தில் பிறந்தவன் என்பதால்.

72. When thus Rama did ask his beloved
To explain why she did take off the ring
From her rubious finger, the princess replied:
"This is the lotus-foot that has the power,
To transform a black stone into a woman!
If the ruby were to take a woman's shape
It would be disastrous! and to avoid this,
I removed the ring" said the princess.

RAMA'S ASSURANCE TO SITA

And conforting her, Rama swore thus:
"In the name of Lord Siva and my preceptor Vaciṭṭar
My chaste beloved, this I swear;
On this earth if I see other women,
I will deem them only as my mother, sister
Or daughter, and naught else!
So, wear your ring confidently"
Assured thus by the chaste among men
Sita put on the ring
Her fears dispelled and happy again.

THE WEDDING PROCESSION OF RAMA AND SITA

Happily Sita and Rama spent their first night,
Enjoying sweet milk and fruit, with delicacies
Of all tastes, six in numbers:
Rising at dawn they welcomed the sun,
With morning prayers and rituals;

தரந்தரமாய்ப் புடைசூழ ஆதி ராமன்
 தந்தியின்மேல் சானகிதண்டி கையி லேறிப்
புரந்தனிலே பட்டணப்பிர வேசம் வந்து
 பொன்னூஞ்சல் தனிலேறப் பொருந்தி னாரே

இராமன் சீதை ஊஞ்சல் ஆடுதல்

பொருந்தியநற் பவளத்தால் கால்கள் நாட்டி
 புகழ்வயிர வச்சிரத்தால் விட்டம் பூட்டி
வருந்துதங்கக் கம்பிகொண்டே வடங்கள் கோர்த்து
 மரகதமா ணிக்கவச்ர பலகை சேர்த்து
அருந்தவ ரண்டர்கள்மா துளங்கொண் டாட
 அரம்பையர்கிம் புருடர்சங் கீதம் பாட
திருந்துதச ரதராம னாடீ ரூஞ்சல்
 சீதைமகா லக்ஷிமியோ டாடீ ரூஞ்சல்
ஆடுமறை நாலு சங்கீதம் பாட
 ஆதித்தன் சந்திரனுந் தாளம் போட
கூடுசபை ராமகீர்த் தனங்கள் பாட
 கோமதிசீ தைதுணர்கள் கூர்ந்து சூட
நாடுமெண்ணே ழரசர்களும் வடந்தொட் டாட்ட
 நாதனுமை மாதவரும் நலங்கொண் டாட
தேடுமடி யார்க்கிரங்கும் பச்சை மாலும்
 சீதைமகா லட்சுமியா ராடீ ரூசல்
பெருமழை போற்றேவர் புட்பமாரி பெய்ய
 பிரமசப்த ரிஷிகள் மகாபெருமை யுய்ய

72.11. தரந்தரமாய் - குழுக்களாக. தந்தி - யானை. தண்டிகை - பல்லக்கு. 72.12. புரந்தனிலே- நாட்டினிலே. பட்டணப்பிரவேசம் - மங்கல ஊர்வலம். 72.13. கால்கள் - தூண்கள். வயிர வச்சிரம் - வயிர மணி. விட்டம் - மேல் விதானம். பூட்டி - சேர்த்து. 72.14. வடங்கள் - கயிறுகள். மரகதமாணிக்க வச்ர பலகை - மரகதக்கற்கள், மாணிக்கக் கற்கள் ஆகியன பதிக்கப்பெற்ற உறுதியான ஊஞ்சலாடுதற்குரிய பலகை. 72.15. அருந்தவர் - தவமுனிகள். அண்டர் - தேவர். மாது - பெண்கள். அரம்பையர், கிம்புருடர் - தேவலோக மக்களின் சில பெயர்கள். சங்கீதம் - பாட்டு. 72.16. ஆடீரூஞ்சல்- ஊஞ்சல் ஆடி அருள்வீரே என்றவாறு. 72.17. ஆடுமறை - வெற்றி தரவல்ல வேதங்கள். நாலு- நான்கு வேதங்களான ரிக், யசூர், சாமம், அதர்வணம் என்பன. ஆதித்தன் - சூரியன். 72.18. துணர்கள் - பூங்கொத்துக்கள். 72.19. எண்ணேழு அரசர் - 15 அரசர்கள்; 56 அரசர்கள் எனினும் பொருந்தும். நாதன் - சிவன். உமை-பார்வதி. மாதவர் - தவ முனிகள். 72.21. புட்பமாரி பெய்ய - மலரை மழை போல் ராமர், சீதை மீது சொரிய. சப்த ரிஷிகள் - ஏழு முனிவர்கள்.

And then went round the city, in procession
With bands of followers escorting them,
Rama upon a tusker and Jāṇaki, in a palanquin
And after, back they came to their palace.

RAMA AND SITA UPON THE SWING

Upon a swing with legs of choice coral,
With the canopy covered by diamond-stones
And chains wrought of gold,
Its plank inlaid with emerald, rubies and diamonds,
The bridal pair started swinging,
While the celestials, sages and women rejoiced
And the heavenly musicians carolled sweetly;
Tacaratarāma sat on the swing with Sita,
Mahalakshmi incarnate, close beside him,
While the Vedas four themselves did sing,
And the sun and the moon did beat time!
The assembled audience in chorus praised
Rama's glory in song and hymn;
As the royal couple sat on the plank of the swing.
Rama and Sita decked with choice clusters of flowers,
Kings of fiftysix lands pushed the swing to and fro!
As Siva and Pārvati and the holy sages,
Showered their blessings on the emerald-hued Lord
And his consort Sita, the bridal pair,
Swung gaily on the swing.
The Gods from on high rained flowers upon them!
Brahma and the seven sages sang their greatness;

குருவசிட்டர் கமண்டலநீர் புரோக்ஷித் தாசீர்
கூறிரெகு பதிராமன் குணங்கொண் டாட
வருபரத னிலக்குவன்சத்[51] துருக்கனன் போற்ற
மந்திரிசுமந் திரன்முதலோர் வணங்கி ஏற்ற
திருவிருக்கும் மணிமார்ப ராடீ ரூசல்
சீதைமகா லக்ஷுமியோ டாடீ ரூசல்
விண்ணவர்மன் னவர்முனிவோர் சகல தேச
வேந்தர்குழாம் வென்றெ ராடீ ரூசல்
எண்ணரிய ராசவர்க் கங்க ளெல்லாம்
ஈடேற ரெக்ஷிக்கு லாடீ ரூசல்
கண்ணதுசெங் கமலத்தார் கிருபை கூர்ந்து
கருணையருட் கடலிலே யாடீ ரூசல்
பெண்ணரசி யெனுஞ்சீதா பிராட்டி மேவும்
பெருமாளே அரிராம னாடீ ரூசல்.

நாலாம்நீர் ஏழாம்நீர் சடங்குகள்

சிந்து

73. *சீதையரும் ராமருமாய்த் திருவூஞ்ச லாடியபின்*
தாதையர்கள் மனதுமெய்க்க சாத்திரத்தின் சடங்குமுகித்து
நீதமுடன் நாலாநீர் நிறைவேற்றித் திறமாக
மாதவரும் சீதையரும் மணிவயிரத் தேரேறி

தேரேறி மிதிலைநகர் தெருவீதி வலம்புரிந்து
நீராடி யேழாம்நீர் நெறிமுறையாய்ப் பொங்கலிட்டு

72.22. புரோஷித்து - தெளித்து. ஆசீர் - ஆசீர்வாதம். 72.23. சுமந்திரன் - தசரதன் மந்திரியுள் ஒருவன். 72.24. திருவிருக்கும் - திருமகள் இருக்கும். மணிமார்ப - மாணிக்கம் பதித்த மாலையை மார்பிலணிந்த இராமா! 72.26. வர்க்கம் - பிரிவு. ரெக்ஷிக்கு லாடீர் - காக்கும்படி ஆடுவீர். 72.27. செங்கமலத்தார் - சிவந்த தாமரை மலராகிய மாலை யணிந்த திருமாலே! 72.28. மேவும் - பொருந்தும். 73.2. தாதையர் - தந்தையர். மெய்க்க - மகிழ. முகித்து - முடித்து. 73.3. நீதமுடன் - முறையுடன். நாலாநீர் - குமரி மாவட்டத்தில் உள்ள திருமண சடங்கு முறைகளிலொன்று. 73.4. மணி வயிரத் தேர் - மாணிக்கம் வயிரம் பதிக்கப் பெற்ற தேர். 73.6. ஏழாம் நீர் - குமரி மாவட்டத்தில் உள்ள திருமண சடங்கு முறைகளிலொன்று. பொங்கல் - புதுப்பானையில் மணமகளாம் சீதை பொங்கலிட்டு. 73.7. சீராடி - அழகு செய்து. இறைத்து - நீரை வீசியடித்து. 73.8. குழவி - அம்மிக் குழவி. அம்மிக் கால் ஊன்றி- அம்மிக் கல்லில் காலைப் பதித்து. அருந்ததி - அருந்ததி என்னும் நட்சத்திரம். திருமணமான மணப்பெண்கள் திருமணத்தினத்தன்று கற்பின் சின்னமாக விளங்கும் இந்நட்சத்திரத்தைப் பார்ப்பது வழக்கம்.

51 சத்தருக்கன்

Vacittar sprinkled holy water from his vessel,
Invoking his benison upon them;
Parata, Lakshmaṇa and Catturukkaṇa did adore
Their brother and sister-in-law!
Cumantiraṉ and others, bowed to them in fealty,
The Lord with rubied chaplets on his bosom
With Goddess Lakshmi ensconced therein.
The Lord swung happily to and fro in the swing.
With Sita Mahalakshmi seated by his side,
The celestial kings of the earth, sages
And potentates prayed for his success,
Swing, gaily, O swing!
Protector of the countless royal clans and families!
Swing gaily on the swing!
O Lord, with red lotus eye,
Ocean of grace save us,
Swinging gaily on the swing!
Noble Lord Hari Rama seated with princess Sita
Queen among women, swing gaily on the swing.

CEREMONIES ON THE FOURTH AND THE SEVENTH DAY

73. After Sita and Rama happily completed the ceremony
On the swing, to the great joy of the parents,
All the ceremonies were completed in form;
The fourth day rituals duly performed,
Rama and Sita went round the streets of Mitilai,
Seated upon the royal chariot, bedecked with diamonds.
And then the rituals of the seventh day
Were gone through; in a new earthen pot,
The bride Sita cooked pongal as was the custom;

சீராடி மஞ்சள்தண்ணீர் தெளித்திறைத்து விளையாடி
ஓர்குழலியணைத் தம்மிக்கால் ஊன்றியருந் ததிபார்த்து

மணமக்களும் உறவினர்களும் அயோத்தி புறப்படல்

அருந்ததிபா கனைப்போற்ற அவன்வாழ்த்த மனமகிழ்ந்து
பொருந்தியதோர் தேரானைப் புடைசூழப் பவனிவந்தார்
வருந்துறவோர் மணங்காண்போர் மன்னருந்தன் பதியடுத்தார்
தருந்தாய்மார் தந்தையரும் தம்பியரும் தார்குழலுந்

பரசுராமன் இராமனை எதிர்த்தல்

தாரணியிற் றினகரனார் தருவரிசை புடைசூழ
தேரணியுங் காலாளும் சேனைபரி யானையுமாய்
பூரண வயோத்திநகர் புகத்தேடி வருகையிலே
பாரவலுச் சிலையுடனே பரசூர ராமன்வந்தார்

பரசூர ராமன்வந்து பச்சைமா லுடனெதிர்த்து
உரமான முனிமருட்டால் ஒருசெத்தை வில்லொடித்து
தரமாயென் மாமன்மகள் சானகியை மணம்புரிந்தாய்
பொரவாடா ரெகுராமா எனவேபுயம் பூரித்தானே

இராமன் பரசுராமன் போர்

புயம்பூரித் திடுபரசு ராமனுடன் போர்நடத்த
செயந்தருமோ குழந்தையென்று தசரதனார் மனஞ்சலிக்கப்
பயந்திடவும் ஸ்ரீராமர் பரசூர ராமனுடன்
மயங்காமலே பொருதார்மண் ணும்விண்ணுந் திடுக்கிடவே

73.9. அருந்ததிப் பாகன் - வசிட்ட முனி. 73.10. தேரானை - தேரில் அமர்ந்த இராமனை. 73.11. பதி - இல்லம். 73.13. தாரணியில் - உலகில். தினகரனார் - ஜனகன். வரிசை - சீர்வரிசை. 73.14. தேர் - தேர்ப்படை. பரி - குதிரைப்படை. 73.15. பாரவலுச்சிலை - கனத்த வலிமையான வில். 73.16. பரசூரராமன் - பரசுராமன்; சமதக்னி முனிவர்க்கும் இரேணுகைக்கும் பிறந்த குமாரர். 73.18. உரமான முனி - விஸ்வாமித்திரர். செத்தை வில்- உள்ளீடற்ற, வலிமையற்ற வில். 73.19. தரமாய் - பொருத்தமாய். என் மாமன் மகள் - பரசுராமனாம் நான் முறைப்படி மணம் புரிய வேண்டிய எனது மாமனான ஜனகன் மகள். 73.20. பொர - போர் செய்ய. புயம் பூரித்தான் - தோள் தட்டி ஆர்ப்பரித்தான். 73.22. செயம்- வெற்றி. குழந்தையென்று - இராமன் சிறுவனென்று. சலிக்க - வாட.

Turmeric water auspicious they splashed on each other!
Rama pointing to the star *Aruntati*,[90] in the sky
Showed it to Princess Sita, his wife.

THE WEDDING GUESTS AND BRIDAL PAIR LEAVING FOR AYŌTTI

While *Aruntati*'s consort, the sage Vacitta
Gave his benediction to Rama and Sita,
They then returned to Ayōtti, surrounded
By their retinue along with the other wedding guests,
His father and his mothers, and his brothers
Along with the anchorites and all those
Who came to see the wedding.

PARACURĀMA CHALLENGING RĀMA

As they were returning to Ayōtti
With the wedding gifts of Jaṉakaṉ,
Surrounded by regiments of infantry, cavalry
Brigades of elephants and chariots,
With a mighty bow in hand Paracurāma
Encountered them; scornfully he did speak
To Lord Rama thus: "At the instance
Of Visvāmittira you broke a rotten bow
And snatched away Jāṉaki
Meant for me; Sirrah, come fight with me"
And thus he challenged him to a combat.

THE BATTLE BETWEEN RAMA AND PARACURĀMA

Even as Tacarata grew fearful, uncertain
In mind if his child might succeed
Against Paracurāma mighty-armed,
Sri Rama unhesitating engaged the other,
In battle fierce that shook Heaven and Earth.

90. *Aruntati* - Wife of Vacitta: The binary star Alcor in the Great Bear constellation.

திடுக்கிடச்செந் தூள்பறக்கச் சேடன்முடி தானசைய
படுக்கரிய அட்டகுல பர்வதங்கள் கிடுகிடென
தொடுத்திருந்த தம்பியரும் சூழ்ந்தபடை வேந்தர்களும்
அடுத்தமா தவத்தியரும் அன்னைபிதா வெல்லோரும்

எல்லாருந் தான்கலங்கி எங்கொளிப்போ மெனமறுக
கல்லாளைப் பெண்ணாக்கும் காயாம்பூ மேனியனார்
மல்லாருந் திண்புயத்தான் வரும்பரசு ராமனைத்தான்
வெல்லாம லின்றுவுனை விடேனென்றிரு கண்சிவந்து

செங்கண்நெடு மால்சினத்துச் செருவாடிப் பொருதாப்போல்
தங்கமுடி யான்பரசு ராமனொடு சமராட்டம்
சிங்கமது ரண்டுவந்து செருவாடிப் பொருதாப்போல்
அங்குசர மாரிபெய்து அவனைவென்று சிலைபறித்தான்

சீதை மேனி தொட்ட காகத்திற்கு இராமர் சாபவிமோசனம் வழங்கல்

சிலைபறித்துத் தாய்தந்தை தசரதனுஞ் சேனையுமாய்
மலைவாவி வனங்கடந்து வந்துபகிரதி யாற்றில்
தலைமுழுகி யமுதருந்தி தாமதித்தங் கிருக்கையிலே
கலையாம லோர்காகம் கார்குழல் சீதையைமேவி

மேனிதொட்ட காகமதை மேகவர்னரோர் புல்லினால்
கானிலொரு கண்பிடுங்க காகமும்வந் தடிவணங்க
மானியமாய் விழியிரண்டுக்கும் மணியொன்றாய் வரங்கொடுத்துச்
சேனைபுடை சூழ்ந்திடவே சென்றன ரயோத்தியிலே

73.25. செந்தூள் - சிவந்த மண். சேடன் முடி - பூமியைத் தாங்கும் ஆதிசேடன் என்னும் பாம்பின் தலை பாரம் தாங்காமல் அசைய. 73.26. படுக்கரிய - பெரிய கறுத்த. அட்டகுல பர்வதங்கள் - எண் திசைகளிலுமுள்ள மலைகள். 73.27. தொடுத்திருந்த - பொருந்தியிருந்த. 73.28. மாதவத்தியர் - மாமுனிவர். 73.29. ஒளிப்போம் - பதுங்குவோம். மறுக - மனம் வாட. 73.30. காயாம் பூ மேனி - நீல நிறமுடைய காயாம் பூ போன்ற மேனியுடையவர். 73.31. மல்லாரும் - மல் யுத்தம்·செய்யும். திண் புயம் - வலிமையான தோள். 73.33. சினந்து - கோபம் கொண்டு. 73.35. செருவாடிப் பொருதாப் போல் - மிக வேகமாகப் போர் செய்தாற் போல். 73.36. சரமாரி - அம்பை மழை போல் விழச் செய்து. சிலை - வில். 73.38. வாவி - குளம். 78.39. அமுது - உணவு. தாமதித்தங்கு இருக்கையில் - சற்று இளைப்பாறி அங்கு இருக்கின்ற வேளையில். 73.40. கலையாமல் - இராமனும் சீதையுமிருந்த இடத்தை விட்டு கலைந்து போகாமல். மேவி - பொருந்த. 73.42. கானிலொரு கண் பிடுங்க - காட்டிடத்தில் காகத்தின் கண்ணைப் பிடுங்க. 73.43. மானியமாய் - சன்மானமாய். மணி - கருமணி; பார்வையைத் தரும் கரு விழி.

The red earth became dust; the great hood
Of Āticēṭaṉ himself shook in alarm;
The huge dark mountain ranges eight
Shivered in fright.
As his brothers and monarchs with him,
Beside the great sages and his parents,
Became agitated in mind
Fearful of the outcome, the Lord dark-hued
As Kāyā flower—He who could transform
A stone into a woman, grew wrathful:
And with eyes red with anger, swore at Paracurāma
With sturdy arms fit for wrestling:
I shall not let you go without defeating you"
Fierce was the battle: the Lord with the golden crown
And red-streaked eyes fought with Paracurāma.
Like two lions they fought, furious and angry,
Till at last with a shower of arrows Rama
Vanquished Paracurāma and snatched
His bow in forfeit betokening his defeat.

RAMA GRANTING REDEMPTION TO A CROW THAT PECKED SITA

Thus quelling Paracurāma and getting his bow,
Rama accompanied by his parents, regiments
And others crossed many a hill and grove
And pool, came to the River Pakīrati
Where all of them bathed; and resting
After partaking food, of a sudden,
A certain crow did swoop down
To peck at Sita; at which the Lord
Plucking a blade of grass did send it
As a dart power-charged,
At the mischievous bird; fleeing from which
All over the world and finding succour none
The bird sought refuge at Rama's feet:

அயோத்தி நகர் அலங்காரம்

சென்றா ரயோத்தியென்ற தேசமதில் வாசமுள்ளோர்
நன்றாக வலங்கரித்து நல்லமலர்ப் பந்தலிட்டு
குன்றாத மாளிகையில் கொட்டகை விதானமிட்டார்
அன்றாதி சீதையுடன் அரிராமர் பவனிவந்தார்.

சீதையுடன் இராமன் அயோத்தியில் பவனிவரல்

வேறு

74. *பவனி வந்தனரே - அரிராமன்*
பவனி வந்தனரே

சிவனிறைத் தருள்புரி யயோத்தியில்
தேசாதி ராசன் தசரதன் மேவிய
துவரிதழ் தேவி கௌசலை பெற்ற
சுத்தத் தாமோதரன் அர்த்த ரதத்தேறியே. (பவனி)

வானவர் கூட்டமுந் தானவர் கூட்டமும்
மாதவர் கூட்டமும் பூதல மானிடர்
ஆனவர் கூட்டமும் தாயதர் பூபதி
அந்தணர் கூட்டமும் முந்தவே வந்திட (பவனி)

தேனாறு பாலாறாய் மாதவர் வேதியர்
தீரும் மயேஸ்வர குருபூசை போசனம்
சானகி பெயர்சொல்லித் தானங்கள் செய்யவே
சைவரும் பாரி சாதமலர் பெய்யவே (பவனி)

தந்திப் பெருக்கமும் குதிரைப் பெருக்கமும்
தாரணி வேந்தர்கள் தேரின் பெருக்கமும்
மந்திரி மார்தள கர்த்தர் பெருக்கமும்
மாநி லமானதி லோடி நெருக்கவே (பவனி)

73.45. வாசமுள்ளோர் - அயோத்தியில் வாழ்வோர். 73.47. கொட்டகை விதானம் - கீற்றுக் கொட்டகை மற்றும் அதன் கீழ் வெள்ளைத் துணியால் வேயப்பட்ட விதானம். 74.2. இறைந்து - முழுமையாக இருந்து. தேசாதிராசன் - தேசங்களுக்கெல்லாம் அரசன்; தசரதன். 74.3. துவரிதழ் தேவி - பவளம் போன்று சிவந்த இதழ்கள் உடைய அரசி. சுத்தத் தாமோதரன் - பரிசுத்த தாமோதரனாம் இராமன். அர்த்த ரதம் - மேன்மையான தேர். 74.4. வானவர் - தேவர். தானவர் - தவம் செய்வோர். மாதவர் - முனிவர். பூதலம் - பூமி. 74.5. தாயதர் பூபதி - தந்தை வழியில் உறவுடைய அரசர்கள். 74.6. மயேஸ்வர குருபூசை - குருவாம் சிவபூசை. போசனம் - உணவு. 74.8. தந்தி - யானை. தாரணி வேந்தர்கள் - மாலையணிந்த அரசர்கள். 74.9. தளகர்த்தர் - சேனைத் தலைவர். மாநிலம் - உலகம்.

And taking away one of the eyes forfeit,
The gracious Lord did pardon the errant bird,
One pupil serving both its eyes!
And then they reached Ayōtti with all their hosts.

AYŌTTI DECORATED

The citizens of Ayōtti had in the meanwhile,
Decked the capital city with pandals, flower-adorned,
And the palaces, decorated proper to the occasion
The pavilions and canopies were covered
By white silken cloth well-bedecked.

RAMA AND SITA ENTERING AYŌTTI IN PROCESSION

74. "Riding in state, in procession did he come,
Rama, did come riding in state!"
In Ayōtti city, full of Siva's grace.
Tāmōtara, the pure, born to red-lipped Kaucalai
And the king of kings Tacarata, climbing
Into his noble chariot, -
Rama, did come riding in state!
Preceded by bands of celestials, men of askesis
And seers, crowds of citizens, the relatives
On the paternal side, the agnates, and holy Brahmins,
Rama, did come riding in state!
It flowed rivers of milk and honey;
Holy men and Brahmins did perform puja
To the God Siva, the Great Preceptor.
Food galore was supplied to all;
Gifts were given away in the name of Jāṉaki;
Devotees of Siva strewed Pārijāta flowers,-
As Rama did come riding in state!
Throngs of ministers and counsellors,
Troops of horses and elephant brigades,
Companies of chariots, with garlanded kings;
All did crowd the busy streets,
As Rama rode in state!

புந்திதர் நாவலர் பைந்தமிழ் பாடவே
பொன்னா டரம்பையர் மின்னார் களாடவே
இந்திரனார் தருவுங் காம தேனுவும்
எவற்கும் பதார்த்த மெல்லோர்க்குங் கொடுக்கவே (பவனி)

மாக முகிலிடி போற்றிடி மன்றவில்
வட்ட மல்லாரி தம்பட்டை கனகதப்பு
ஆக மகாமத யானைமேற் பேரிகை
அட்ட திக்கெங்கு மதிர முழங்கவே (பவனி)

நாக சின்னமுதல் நாத கீதவகை
நாலெட்டாய் விளங்கி மேலிட்டே முழங்க
பாக மதாயார கீர்த்தனந் திருமந்திரம்
பதினா யிரம்விதி நான்மறை விளம்ப (பவனி)

அட்டதிக் கும்புக ழாகுவா கனத்தை
ஐங்கர னாரொரு பாவலர்
வட்டமிட் டேபரி யேறிய சண்முகன்
வாலை கந்தன் மயில்மேல் வராமரும் (பவனி)

சட்டம தாய்விடை மேற்சிவனும் பரா
சத்தியு மன்னமதி லேறி யேவர

74.10. புந்திதர் - புலவர். நாவலர் - அறிவாளிகள். பொன்னாடு - தேவலோகம். அரம்பையர்- தேவலோக மகளிர். மின்னார்கள் - மின்னல் போல் இடையுடைய மகளிர். 74.11. தரு - கற்பகத் தரு; தேவ லோகத்திலுள்ள, கேட்பவர்களுக்குக் கேட்டதைக் கொடுக்கும் மரம். காமதேனு - தேவலோக பசு; கேட்பவர்களுக்குக் கேட்டதைத் தர வல்லது. 74.12. மாக முகிலிடி - ஆகாயத்தில் தோன்றும் மழை மேக இடி. மன்றவில், வட்ட மல்லாரி, தம்பட்டை, கனகதப்பு - பேரோசை எழுப்பும் சில இசைக் கருவிகளின் பெயர்கள். 74.13. மகாமத யானை - பெரிய மதம் பொருந்திய யானை. பேரிகை - போர் முரசு. 74.14. நாக சின்னம் - ஒரு வகை ஊதுகுழல். நாதகீத வகை - இனிய ஓசையுடன் கூடிய பாடல் வகைகள். நாலெட்டாய் - 'பன்னிரெண்டு வகையாய்', 'முப்பத்திரண்டு வகையாய்' எனினும் அமையும். 74.15. பாகமதாய் - பொருத்தமாய். ஆர - ஒலிக்கும். கீர்த்தனம் - ஓர் இசைப்பாட்டு வகை. நான்மறை - நான்கு வேதங்கள். 74.16. அட்டதிக்கும் - எண் திசையும். ஆகு வாகனம் - பெருச்சாளி வாகனம்; இது விநாயகர் வாகனம். ஐங்கரன் - ஐந்து கரத்தையுடையவன்; விநாயகர். ஒரு பாலவர் - ஒரு சிறுவர். 74.17. பரி - குதிரை. சண்முகன் - முருகன். வாலை கந்தன் - இளம் பருவ முருகன். 74.18. சட்டமதாய் - பூரணமாய். விடைமேல் - காளை வாகனத்தின் மேல். பராசக்தி - உமையவள். அன்ன - அன்னப் பறவை.

As bards and men of wisdom,
Sang in Tamil pellucid sweet,
And celestial damsels lightning-waisted
Did dance in joy, and Intira's *Karpaka* and *kāmatēṉu*.
The wish-yielding tree and cow of Heaven,
Supplied all that was desired to everyone,
Rama did come riding in state!
Like the rumbling noise of rain - clouds
In the sky, like thunder resounded,
The various drums like *Vaṭṭamallāri*, *Tampaṭṭai*
And *Kaṉakatappu*, besides war-drums huge
Upon the backs of ichorous tuskers,
In directions eight reverberating,
And Rama did come riding in state!
As flutes and other instruments of music
Of thirtytwo kinds, sweetly sounded,
In tune with which holy hymns and songs
Were sung, and Vedas four variously chanted,
Rama did come riding in state!
The five-handed God Gaṇapathi came far-famed
In directions eight, mounted upon his sacred shrew;
And the youthful God Shanmugha upon his caracoling horse,
Now seated upon a peacock mount,
As Rama did come riding in state!
As the perfect God Siva upon his bull-mount
And Parasakthi upon her swan-mount

எட்டா க்ஷரத்தெம் பிரான்றுள பத்தாமன்
இலங்க கெருடக் கொடியில் துவசம்வர (பவனி)
உருத்திர வீணை கயிலாச வீணை
தம்புரு கின்னரர் கீதம் வாசிக்க
சத்துருக்கனன் பரதாள் வாரி லக்குவன்
தம்பி மாருட னனைவர் சந்தோஷிக்க (பவனி)
வீளுமிடக் கயம் பாவாடை கொடி
ஆலவட்ட மெங்கெங்கும் பிரகா சிக்கச்
சித்திர நீலவர்னன் பச்சைமாலைக் கண்டு
தெரிசனஞ் செய்வார்கள் நேசிக்க (பவனி)
அற்புத மாயனைப் பெற்றவர் தாய்தந்தை
அனைவரும் கண்டுதன் உள்ளம் மகிழவே
விற்பன மந்திரிமார் கொற்றவர் சூழ
மகாவிட்டுணு சரண மென்று கூறவே (பவனி)
பத்ம நாபனைக் கண்டு தெரிசித்தும்
பணிமலரடி தொழ துயரமு மாறவே
புட்ப மாரியது பெய்ய கற்பகோடி
புவன மெங்கும் நீடுழி யீடேறவே (பவனி)
பச்சை மால்வரவு கண்டு எச்சரிக்கை
கட்டியு மின்னார் குரவை முழக்கவே
வச்சிர பாணியிட்ட தேவ [52]துந்துபி
கொட்ட மடந்தையர் நடனம் பெருக்கவே (பவனி)

74.19. எட்டாக்ஷரத் தெம்பிரான் - எட்டெழுத்து மந்திரத்திற்கு உரிமை உடைய திருமால்; எட்டெழுத்து மந்திரமாவது 'ஓம் நமோ நாராயணாய'. துளபத்தாமன் - துளசி மாலையை அணிந்தவன்; திருமால். இலங்க - ஒளிவிட. துவசம் - அடையாளம். 74.20. உருத்திர வீணை, கயிலாச வீணை, தம்புரு - வீணை வகைகள் சிலவற்றின் பெயர்கள். கின்னரர் - தேவ மக்களுள் ஒரு பிரிவினர். 74.22. வீளுமிடக் கயம் - பொருந்தும் பெரிய யானை. பாவாடை கொடி - நிலத்தினில் விரிக்கும் துணியால் செய்யப்பட்ட கொடி. ஆலவட்டம் - விசிறி. 74.23. சித்திர நீலவர்னன் பச்சைமால் - அழகிய நீல வர்ணனாகிய திருமால்; இராமன். 74.24. மாயன் - திருமால். 74.25. விற்பன மந்திரி - கல்வி அறிவில் சிறந்த மந்திரி. 74.26. பத்மநாபன்- திருமால்; திருவனந்தபுரத்தில் பள்ளி கொண்டுள்ள திருமாலுக்கு இப்பெயர் வழங்கப்படுகிறது. 74.27. கற்பகோடி - கோடிகணக்கான. புவனம் - உலகம். ஈடேறவே - உய்யவே. 74.28. எச்சரிக்கை கட்டியும் - கட்டியம் கூறியும். 74.24. வச்சிர பாணி- வச்சிராயுதத்தைக் கையில் கொண்ட இந்திரன். தேவ துந்துபி - தேவ லோகத்தில் ஒலிக்கும் ஓர் இசைக்கருவி.

52. துந்துமி

And the Lord of the Octad, the basil-garlanded
Tirumāl with Karuṭaṉ-flag blessing him;
Rama did come riding in state!
As the *Kiṉṉaras* celestial, did play on *Viṇais*
Such as Urithira, Kailasa and Tambur
And while Parata, Catturukkaṉa
And Lakshmaṇa did rejoice greatly,
Rama did come riding in state!
With giant tuskers everywhere
And wide carpets spread on the ground,
And big circular fans of cloth and flags
Preceding them, innumerable were the devotees
Who came to gaze with love upon the lovely
Blue-hued Lord Tirumāl incarnate,
As Rama did come riding in state!
To the great joy of the parents who sired
The marvellous Lord, the learned counsellors
And Chieftains all did cry in one-voice!
"Refuge, Lord Mahavishnu, refuge!"
As Rama did come riding in state!
Having darshan of the lotus-navelled Lord
And relieved of all suffering, people
Did rain flowers in worship;
And the myriad universes all, attained salvation,
As Rama did come riding in state!
Heralding the arrival of the emerald-hued,
Fulgurant women did sing in chorus,
While the trumpets and tabors of Intira
With his bolt, did resound musically,
And damsels did dance divinely,
Rama did come riding in state!

அச்சுதன் சொல்லட் டாக்ஷரப் பொருள்நம்பும்
அடியவர் கருத்தை யன்பு ருக்கவே
ரக்ஷகர்த்தர் நெஞ்ச மகலா பொன்மகள்
சீதா லட்சுமி தானிட மிருக்கவே (பவனி)

அனைவரும் மகிழ இராமன் அரியாசனம் அமர்தல்

விருத்தம்

75. *பவனியதாய் ரெகுராம னயோத்தி நாட்டில்*
பட்டணப் பிரவேசம் வரபதும பாதம்
அவனி யுள்ளோர் தொழுதேற்ற தேவர்வாழ்த்த
அன்னை பிதாமன மகிழஅரன் கொண்டாட
புவனி புகழ்பொன் மணிமாளிகை யிற்சேர்ந்து
போசனஞ் செய்தரி யாசனத்தி லேற
இவனிறை யோன ரசர்திறையிட சீராமன்
எம்பெரு மானிசைந்து கொலுவீற்றார் தானே.

இராமன் கொலுவிருக்கும் காட்சி

சிந்து

76. *கொலு விருந்தினரே - ரெகுராமன்*
கொலு விருந்தினரே

மாற்ற லரன்றென்னை காத்தருள் வீரென்கை.
கொலுகு சீதரன் சலுகை வைத்திட
குப்பங் குப்பமாய்க் கப்பம் குவித்திட (கொலு)
வங்காளர் கொங்கணர் சிங்களர் சீனர்
மராட்டிய ராதி பலருந் திறையிட
தங்கள் தங்கள்செய்தி சாற்றி மலர்பெய்து
தங்கள் திறைவைத்துமே முறை யிட்டிட (கொலு)

74.30. அச்சுதன் - திருமால். அன்புருக்கவே - இராமர் பவனி கண்டு அடியவர் உள்ளம் அன்பால் உருகவே. 74.31. ரக்ஷகர்த்தர் - ரெட்சிக்கின்றவர்; இராமன். பொன்மகள் - பொன் போலும் ஒளி விடும் சீதை. 75.1. பவனியதாய் - ஊர்வலமாய்; பட்டணப் பிரவேசமாய். பதும பாதம் - தாமரை மலர் போன்ற கால்கள். 75.2. அவனி - உலகம். அரன் - சிவன். 75.3. புவனி - உலகம். போசனம் - உணவு. 75.4. திறை - கப்பம். இசைந்து - பொருந்தி. 76.1. கொலு - அரச மண்டபத்தில் வீற்றிருத்தல். 76.2. மாற்றல் அரன் - மாறுதலில்லா சிவன். கொலுகு சீதரன் - திருமகளை மார்பில் கொலு வீற்றிருக்கும்படிச் செய்த திருமால். சலுகை- வேண்டுதல். 76.3 குப்பம் - மிகுதியான தொகை. கப்பம் - திறைப் பொருள். 76.4 வங்காளர், கொங்கணர், சிங்களர், சீனர், மராட்டியர் ஆதி பலரும் - மேற்படிக் கூறிய பல தேசத்து அரசர்களும். திறையிட - கப்பம் செலுத்த. 76.5 முறையிட்டிட - நிறை குறைகளைக் கூறிட.

With love melting the hearts of devotees
Ever believing in the essence of the mystic octad,
Of Accutaṉ with golden Sitalakshmi
Ever ensconced in the protector's heart,
Rama did come riding in state!

75. After Rakurāma came in state
Into the city of Ayōtti, his lotus-feet
Adored by the people of the Earth,
The celestials blessing him,
His father and mother greatly rejoicing
And Lord Siva happily approving him,
Rama did enter his gemmed-palace
Famed all over the world!
And after partaking of repast,
He ascended the lion-throne
And all the kings did offer their tributes,
As Sri Rama sat in state in the audience hall.

THE GLORIOUS SIGHT OF RAMA SITTING IN DURBAR

76. "Rama did sit in state in the royal durbar hall;
And Rama did sit in state!"
As Sridara prayed to eternal, unchanging
Siva to protect him, feudatory kings
And chieftains did pour heaps of tributes
Before Rama in the court,
And Rama did sit in state!
People of Bengal, Konkan, Ceylon and China
Mahratta and other lands and regions,
Made their report adoring his feet with flowers,
And paying their tributes, made their pleas,
And Rama did sit in state!

பிங்கல மானதெல்லாந் தொண்டர் வாரியே
பெரிய பொக்கிஷத் தாரறை யிட்டிட
திங்கள்க் குடைக்கொடி நவரெத்ன மணிமுடி
திறைவளி காத ரரசு நிறையிட (கொலு)

தும்பிமுகன் கந்தன் சங்கரி பங்காளன்
சோதியுங் கயிலாச மடுத்திட
எம்பிரா னேதுணை யென்று முனிவர்செல்ல
இந்திரன் விண்ணவர் சாக்ஷி கொடுத்திட (கொலு)

தம்பிமார் மூவரும் மந்திரி மார்களும்
சகல மன்னவரும் கையை எடுத்திட
நம்பிக் கவிஞ்ஞருக்கும் நன்மை மறையோருக்கும்
நலமா கப்பல தானங் கொடுத்தாட (கொலு)

மகாதசரதர் கௌசலை கைகேசி
மகிழ்சு மித்திரை கூடி வாழ்கவே
சுகராசா தினகரன் மகிழ் சீதா
லட்சுமி துளபத் தாமன் மேவிவாழ் (கொலு)
சுகராச ரமைச்சரும் நால்வகை
தானையும் வியன்விய னாக வாழவே
நாக ராதிகோசலை நாடு மிதிலை
நகரம் நாடெங்கும் நீடூழி வாழ்கவே (கொலு)

இராமன் சீதையின் நிறைவான வாழ்க்கை

விருத்தம்

77. அரிராமன் கொலுவிருக்கத் தம்பி மார்கள்
பணியப் படிதழைக்க அருட்டி யாணம்

76.6. பிங்கலமானது-பொன் மற்றும் அதை ஒத்த விலை உயர்ந்த ஆபரணங்களாவது. பொக்கிஷத்தாரறை-பொருள்களைச் சேமித்து வைக்கும் கிடங்கு. 76.7. திங்கள் குடை - சந்திரன் போல் வெண்மை ஒளி வீசும் முத்துக் குடை. திறைவளி காதர் - நீண்ட தொலைவிலுள்ள அரசர். நிறையிட - திறை செலுத்த. 76.8. தும்பி முகன் - யானை முகன்; விநாயகர். கந்தன் - முருகன். சங்கரி பங்காளன் - சங்கரியாகிய பார்வதியை இடப்பாகத்தில் கொண்ட சிவபெருமான். அடுத்திட - சேர்ந்திட. 76.9. எம்பிரான் - திருமால். விண்ணவர்- தேவர். சாக்ஷி - அத்தாட்சி.76.10. கை-ஒப்பனை. 76.11. நம்பி - திருமால். கவிஞ்ஞர் - கவிஞர்; புலவர். 76.13. சுக ராசா - மகிழ்ச்சியான மன்னர். தினகரன் - ஜனகர். துளபத்தாமன்- துளபமாலை அணிந்தவன்; திருமால். 76.14. தானை - படை. வியன் - மகிழ்ச்சியுடன். 76.15. நாகர் - நாக நாடு. 77.1. படி - பூமி. தழைக்க - செழிக்க.

The servitors all did gather
The treasures of the gold to be kept
In safe custody in the strongholds
And Royal treasuries-pearl, umbrellas,
White as the moon; diadems,
Tiaras of nine kinds of gems,
The kings from the distance gave-as tributes,
And Rama did sit in state!
The elephant-faced God, Kantaṉ,
And the Lord with Saṅkari concorporate,
Went back to their seats in Kailas;
The sages praying to Rama as their own Lord,
And Intira and the celestials bore witness,
And Rama did sit in state!
While his brothers three and ministers
And kings all, prayed with folded hands,
To the poets and goodly Vedic Brahmins
Were given many a rich gifts,
And Rama did sit in state!
Thus the great Tacarata with his queens
Kaucalai, Cumittirai and Kaikēyi,
Lived happily; and king Jaṉakaṉ too rejoiced
As Goddess Lakshmi as Sita and the Lord
With basil-wreath as Rama incarnated on Earth,
And Rama did sit in state!
His brother kings, ministers
And four-fold armies, lived in great joy:
The land of the Nagas, the Kōcalai country and Mitilai
Grew properous and happy
And Rama did sit in state.

77. As Hari Rama sat in state
His younger brothers showed him all respect

விரிவான குருவசிட்டர் பாதம் போற்றி
வேந்தர்தொழ பச்சைமால் ரெக்ஷிக்க பாரோர் மெய்க்கப்
பெரிதான மாமிமார் பாதம் போற்றிப்
பெண்ணரசி சீதைசெல்வம் பெருகி னாளே.

குரு வணக்கம்

78. *சீரணங்கு சுப்ரமண்ய வாத்தியார் சீஷன்*
செந்தூரி லுகந்தகந்த சுவாமி தாசன்
நாரணன்போல் கீர்த்தனங்கள் நவிலு நேசன்
ராசமந்திரி பெயர்வரிசை நல்ப்பிர காசன்
ஆரணத்தா லெனைக்குடுமி திருத்தி முன்னாள்
அரிநமோத்து சிந்த மறைந்த வாசன்
பூரண குருதிரு வானந்தம் வெற்றிகொண்டான்
புலவர்பதஞ் சிரசில்வைத்துப் புகழு வோமே.

வேறு

79. *சீரணி தென்சுசிந்தா புரிவாழ் சிவதாணுவே*
சீதரனே பொன்ன னந்தையில் ஸ்ரீபத்மனாபனே
வாரண பூரண செண்பக ராமவிநாயகா
மார்த்தாண்ட ஐங்கரனே துணைசெய்ய வரந்தாராய்

77.2. ரெக்ஷிக்க - பாதுகாக்க 77.3. மாமிமார் - சீதையின் மாமியார்களான கௌசலை, கைகேயி, சுமித்திரை என்னும் மூவர். 78.1. சீரணங்கு - செல்வம் பொருந்திய. சீஷன் - சீடன். செந்தூர் - திருச்செந்தூர். உகந்த- விரும்பி உறைகின்ற. கந்தசுவாமி தாசன் - கந்தசுவாமி என்றும் அழைக்கப்படுகின்ற முருகனின் அடிமை. 78.2. நாரணன்-நாராயணன். கீர்த்தனங்கள் - இசைப்பாடல்கள். நவிலும்-உரைக்கும். 78.3. ஆரணம் - வேதம். 'அரிநமோத்து'-திருமால் பக்தர் மற்றும் பள்ளிச் சிறார்களுக்கு முதலில் எழுதும்படிக் கூறும் தெய்வச் சொல். சிந்த மறைந்த வாசன்-அறிவில் வாழ்ந்து மறைந்த ஆசிரியன். திருவானந்தம் வெற்றிகொண்டான் - இராமர் கதையைப் பாடிய ஆசிரியர் பெயர். 79.1. சீரணி-செல்வம் பொருந்திய. தென் சுசிந்தாபுரி - தற்பொழுது 'சுசீந்தரம்' என்றழைக்கப்படும் இடம்; இது கன்னியாகுமரிக்கு வடமேற்கே பதினெட்டு கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. சிவதாணு-சுசீந்தரம் கோயிலில் உறையும் சிவனின் திருநாமம். சீதரன்-திருமால். பொன்னனந்தை - பொன் போன்ற திருவனந்தபுரம். ஸ்ரீபத்மனாபன்- திருவனந்தபுரத்தில் பள்ளி கொண்டுள்ள திருமாலின் பெயர். 79.2. வாரணம் - யானை. செண்பகராம விநாயகா - செண்பகராமன் புதூர் என்னும் இடத்தில் உறையும் விநாயகர்; வண்டுண்ணாத மலரை அணிந்த திருமாலினால் விரும்பப் பட்ட விநாயகர் எனினும் அமையும். மார்த்தாண்ட ஐங்கரன்-'மார்த்தாண்டம்' என்ற ஊரில் உறைகின்ற விநாயகர்.

Praise be to the feet of preceptor Vaciṭṭar
By whose grace the earth prospered!
The kings bowed in submission to Rama,
Jasper-hued, and the people of the Earth
Lived in happiness ever true.
And the paragon among women, Sita,
Adoring the feet of her mothers-in-law
Found increasing joy and prosperity.

OBEISANCES TO THE GURU

78. The disciple of the prosperous teacher
Named Subramanian, servitor of
Lord Kanta whose beloved seat is Tiruchendur,
Capable of singing divine hymns of Nārāyaṇa,
Well-known among kings and ministers,
Did initiate me into the studies
With the eight-syllabled mantra:
He is no more now, but he is my own
Perfect mentor; and I, Tiruvānantam
Thus do praise my master, his feet
Upon my head.

79. O, Lord Sivatāṉu seated in opulent Cucīntaram!
Sridhara! Lord of golden Tiruvanantapuram,
Lord Patmanāpa! O, Lord Vinayaga
Of Ceṉpakarāmaṉpu·tūr! O, five-handed
Tusker-god of Mārttāṇṭam! come thou

ஆரணஞ் சேர்திருச் செந்தூரில் மேவியகந்தனே
　　ஆறுமுகப் பெருமாளே யெனக்கு வரந்தாதா
காரணஞ் சேர்தளவா வீரவாகுக் கடவுளே
　　காவலவா யெனைக்காப்பது முன்னடைக் கலமே.

வில்லுப்பாட்டில் கதை பாடின நோக்கத்தை ஆசிரியர் கூறல்

கலந்த செகத்தில் வளந்தரு மானிடர்க்கெல்லாம்
　　காப்பதும் வைகுண்டம் சேர்ப்பதும் மோக்ஷங்கொடுப்பதும்
தலந்தனிலே ராமகீர்த்தன மென்பத னாலேயே
　　சகலரும் ராமபுராணத்தைக் கைக்கொள்ளாத தாலேயே
பலந்தரும் ராமாவதாரமுந் தாடகை பட்டதும்
　　பாறையதான அகலிக்கு மோஷங் கொடுத்ததும்
நிலந்தனிலே வந்தசீதையை ராமன் மணந்ததும்
　　நேச வயோத்தியில் சேர்ந்ததுமே யாதிமூலமாய்

மூலமதா யொருமுற் கதைவிற் கிசைவாகவே
　　முகனையதா யொன்றுசெப்புவீர் மோக்ஷமுண் டென்னவே
வாலைபர மேஸ்வரி மகாலக்ஷிமி தாசனார்
　　வடிவேல் முருகன் சிவசங்கர ராமன்சொற்படி
சீலமுடன் திருவானந்தம் முற்கதை பாடினார்
　　தேசமெல்லாம் பிரகாசிக்கவே ராம கீர்த்தனம்

79.3. ஆரணம் சேர்-வேதம் ஒலிக்கும். திருச்செந்தூர்-முருகனின் அறுபடை தலங்களுள் ஒன்று; இவ்விடத்தில் முருகன் சூரனை வதம்புரிந்தருளினார். கந்தன் - முருகன். ஆறுமுகப் பெருமாள் - ஆறுமுகங்களைக் கொண்ட இறைவன்; முருகன். 79.4.காரணம் சேர்-பார்வை பொருந்திய. தளவா வீரவாகுக் கடவுள்-முருகனின் படைத்தளபதியாய் இருந்த வீரபாகுக் கடவுள். 79.5. கலந்த செகத்தில் - பொருந்திய உலகத்தில். வைகுண்டம் சேர்ப்பதும் - வைகுண்ட பதவியைச் சென்றடைய செய்வதும். 79.6. தலம் - உலகம். ராமபுராணம் - இராம கதை. கைக்கொள்வதால் - வாழ்க்கை நெறிமுறையாய்க் கொள்வதால். 79.7. பலந்தரும் - நன்மை தரும். 79.8. நிலந்தனிலே வந்த சீதை - நிலத்தில் உதித்த சீதை. ஆதிமூலமாய் - ஆதிபகவானாய். 79.9. மூலமதாய் - மூலக் கடவுளாய். விற்கிசைவாகவே- வில்லுப்பாட்டுக்குத் தகுந்தாற் போலவே. முகனையதாய் - ஆதியோடு அந்தமாய். செப்புவீர் - கூறுவீர். 79.10. வாலை - இளம் பெண். பரமேஸ்வரி - பார்வதி. மகாலக்ஷிமி - திருமகள். தாசனார் - அடிமைப்பட்டவர். வடிவேல் முருகன் - கூர்மையாக வடிக்கப்பெற்ற வேலையுடைய முருகன். சிவசங்கர ராமன் - திருமால். 'வடிவேல் முருகன், சிவசங்கர ராமன் என்னும் இருவர் ஆள் பெயராய் அமைந்து மேற்படி இருவரும் வேண்ட' என்ற பொருளிலும் கொள்ளலாம். 79.11. சீலமுடன் - அழகுடன். திருவானந்தம் - திருவானந்தம் என்னும் பெயருடையவர்.

To my aid and support! Lord Kanta dwelling
In Tiruchendur where Vedic chants resound!
Lord Arumuga, grant me your boons!
O, Lord of the hosts, Vīrapāku! come,
Come thou to guard me, as I seek refuge!

THE AUTHOR EXPLAINING HIS REASON FOR NARRATING THE TALE AS A BOW-SONG

It is by discoursing on Rama's glory with song and hymn
That all the people of the world are saved.
It is the sure means
To get salvation and reach Vaikuṇṭa!
Hence it is that Rama's story
Is loved by all people, high and low.
O, beneficial and good it is,
To speak of the birth of Sri Rama; the slaying
Of Tāṭakai; the redemption of Akalikai,
From a rock back to her original form;
The wedding of Rama and Sita at Mitilai;
And their return to Ayōtti:
This is the story so far indited,
In close conformity with the original primary epic,
From the beginning, as befits a bow-song;
Hoping to be saved, this, the author Tiruvāṉantam
Has written, by the grace of the young Goddess Parameswari,
The spouse of Mahalakshmi, Murukā with
His beautiful spear, and Lord Tirumāl
Sivacaṅkararāma! May the country
Shine in prosperity with all joy,

தாலமாதேவன் சிதம்பர தாணுவன் கேட்டுமே
சந்தோஷமே யிதுமுற் கதைபாடல் சௌக்யம்

அவையடக்கம்

முற்கதைப் பாடலைப் போலின்னம் பிற்கதை யெல்லாம்
முட்டாமல் பாடியே பட்டாபிசேகமும் சூடினார்
நற்கதை யாமிதுகேட் பதுமோஷ மெனச்சொல்லி
நவிலமதுர கவிவெற்றி கொண்டா னுரைப்பது
சொற்கதையிற் பிழைதீர்த்துக் கவிபுல வோர்களே
சுகமென்று செப்பிஅக மகிழ்வோர்கள் நல்லோர்களே
விற்கதையில் ராமகீர்த்தன வகுப்பென்ற நாமமே
மேவலர்நா வலர்காவலர் கைக்கொள்ளும் நேமமே.

சரஸ்வதி வணக்கம்

விருத்தம்

80. *நேமமுட னுலகினில் வாழ்மானுடர்க்[53] கெல்லாம்*
நிச்சியமாம் பச்சைநிற நீல வர்னன்
ராமனென்று துதித்திட வைகுண்ட மூர்த்தி
நல்குவா ரென்று மறைநவில் வதாலே
தாமமணித் துளபமால் வனத்தி லேகிச்
சத்துருவைச் சங்கரிக்கும் தமிழைப் பாடப்
பாமகளென் னாவினி லிருந்துதவி செய்து
பாக்கியம் வெகுயோக்கியந்தா பதுமத் தாயே.

விநாயகர் வணக்கம்

81. *பதுமமுகச் சானகிக்கு வதுவை யாகிப்*
பச்சமால் கைப்பிடித்து பதியில் சேர்ந்து

79.12. மாதேவன் - மஹாதேவன்; சிவன். சிதம்பர தாணு - சிவன்; மாதேவன், சிதம்பரதாணு என்னும் பெரியவர்கள் எனினும் அமையும். சௌக்யம் - வசதி. 79.13. இன்னம் - இனிமேல். முட்டாமல் - குறைபாடு ஏதும் ஏற்படாமல். 79.14. நவில - உரைக்க. வெற்றிக்கொண்டான்- வெற்றிகொண்டான் என்ற பெயரையுடைய கவிஞர். 79.16. மேவலர் - பகைவர். நாவலர்- நாவன்மை மிக்கவர். காவலர் - அரசர். நேமமே - முறையாகவே. 80.2. மறை - வேதம். நவில்வதாலே - கூறுவதாலே. 80.3. தாமமணி துளபமால் - ஒளி பொருந்திய மணிகளாலான மாலையையும், துளசி மாலையையும் அணிந்த திருமால். சத்துரு - பகைவன்; இராவணன். 80.4. பாமகள் - சரஸ்வதி. பாக்கியம் - அதிர்ஷ்டம். யோக்கியம் - தகுதி. பதுமத்தாய் - சரஸ்வதி. 81.1. பதுமமுக - தாமரை மலர் போன்ற முகமுடைய . வதுவை - திருமணம். பச்சமால் - பச்சைமால்; திருமால். பதி - இருப்பிடம்.

53. மனுடர்

By the grace of the great God Mahātēva,
Citamparatāṉu! May happiness
Pervade everywhere and all good accrue,
To those who listen to the story
Thus far narrated!
Even like the story so far narrated,
Without hindrance the rest was indited
Upto the coronation: "It is salvation to listen to this tale"
Said the sweet-tongued bard Veṟṟikoṇṭāṉ!
Bards and poets and good people all,
Friends and foes, were happy listening
To this story of Rama in the form of a bowsong,
Chanting his holy name in proper mode and frame.

PRAYER TO SARASWATHI

80. As the scriptures say that the Lord of Vaikuṇṭa,
Will yield all good to those living on earth
Who chant the name of Rama, jasper-hued,
O, Goddess, seated in the Lotus!
Dwell on my tongue and make me fortunate and fit
To sing in Tamil sweet, the further story
Of Rama, (slayer of the foes), after he went to the forest,
The Lord adorned with bright-gemmed garlands and
basil-wreaths.

PRAYER TO VINAYAGA

81. May the ichorous tusker-God, us protect,
With his feet twain so that the poet
Veṟṟikoṇṭāṉ may bless my endeavour
As I proceed with the tale,

கதிமைரெகு ராமனுக்கு முடிசூ டாமல்
கைகேசி வரங்கேட்ட கருமத் தாலே
பிதிர்மாய பெருமானும் வனத்தி லேகப்
பேரரக்கர் வேறும்பிற் கதையைப் பேசி
மதுரகவி வெற்றிகொண்டார் வழுத்தி வாழ்த்த
மதகளிறி னுபயபதங் காப்ப தாமே.

தசரதன் இராமனுக்கு முடிசூட்டக் கருதுதல்

வேறு

82. *காக்கும்புகழ் சேர்க்குந்திரு வயோத்திப்பட் டணத்தில்*
காவலனார் தசரதருந் தேவிமார் களுமாய்
பார்க்கும்மன்னர் திறையிடவே பாராளும் நாளில்
பாலருக்கே முடிதரித்துப் பார்க்கவேணு மென்று
வேணுமென்று மனதுமெய்த்து சிந்தைதனில் வைத்து
மிகுந்தமகன் முகுந்தனுக்கே மகிழ்ந்துஅபி ஷேகம்
காணும்மணி முடிதரிக்க கருத்துள்நிறை வாக
காவலனார் [54]அமைச்சனுக்கே கற்பனையுண் டாக்கி

முடிசூட்டு நிகழ்வைப் பரதன்வழி கேகயனிடத்தில் தெரிவித்தல்

கற்பனையாய் மைத்துனரைக் கலந்தழைப் பிடத்தான்
கருதிகே கயனிடத்தில் பரதனை யனுப்பி
நற்புடைய பரதன்மாமன் நாட்டிடத்தே செல்ல
ராமனுக்கே அபிஷேகக் கோப்புக்கூட்டு நாளில்
நாளையில்முன் சம்பரனாம் மாற்றலருக் காக
ரதம்நடத்தித் தசரதனார் போர்பொருதும் வேளை

81.2. கதிமை - கூர்த்த ஞானமுடைய. கருமத்தாலே - செயலாலே. 81.3. பிதிர் - தந்தையாம் தசரதன். பேரரக்கர் - பெரிய அரக்கக் கூட்டத்தார். 81.4. மதுர கவி - இனிய கவிதைகளைப் பாடுபவர். வெற்றி கொண்டார் - புலவர் பெயர். மத களிறு - மதம் பொருந்திய யானை; விநாயகர். உபய பதம் - இரு பாதங்கள். 82.2. பாலருக்கே - சிறுவருக்கே; இராமனுக்கே. வேணுமென்று - வேண்டுமென்று. 82,3. மெய்த்து - விரும்பி, 82.3. முகுந்தன் - இராமன். 82.4. மணிமுடி - மாணிக்கக் கற்கள் பதித்த கிரீடம். கருத்துள் - மனத்துள். காவலனார் - அரசனார்; தசரதன். கற்பனை - கட்டளை. 82.5. மைத்துனர் - தசரதன் மைத்துனன்; கைகேயின் தந்தையான கேகய நாட்டு மன்னன். 82.6. கோப்பு - உல்லாசம். 82.7. சம்பரன்- ஓர் அசுரன்; தசரதன் இவனுடன் போரிட்டு அழித்தான்.

54. அமச்சனுக்கே

Of how lotus-visaged Jāṉaki wedded jasper-hued Rama:
Of how in Ayōtti later, due to the fateful boons
Of Kaikēyi, the wise Rakurāma lost his crown;
Of how king Tacarata died thereupon
And our Lord Rama went into exile
And how the great demons were rooted out.
May the twin feet of Lord Vinayaga guard us ever.

TACARATA PLANS TO CROWN RAMA

82. In the days when king Tacarata and his queen
In the reputed city of Ayōtti ruled in splendour,
With kings offering tributes a plenty,
The king bethought himself to see
His eldest son, Rama crowned.
So deciding, he ordered his ministers
To arrange for the same.

THE KING OF KĒKAYAṈ BEING INFORMED OF THE CORONATION BY PARATA

And Parata was sent to Kēkaya land
To invite the king, his uncle, for the coronation;
We must now relate how on an earlier day
When Tacarata went to battle in his chariot
Against the fierce Camparācuraṉ,

வேளையிலே தேரிலச்சு தான்முறிந் ததனால்
வேதனையைக் காதலிகை கேசிகண் டுடனே

தசரதன் கைகேயிக்குப் பண்டு கொடுத்த இரு வரங்கள்

கண்டவுடன் கைகேசி காந்தன்மனம் மெய்க்கக்
கைகொடுத்து ரதந்திருப்பிக் காத்துக்கொண் டதினால்
மண்டலங்கள் மெய்த்திடவே மனைவிதனைப் பார்த்து
மகிழ்ந்துனக்கு வேணுமென்ற வரமதனைக் கேளு
கேள்வனே எப்போதுதுய ராகும்போது நானும்
கேட்டவரந் தாருமென்று வீடதிலே வந்து
ஆளும்போது கீரீடமுடி ராமனுக் கெனவே
அறைந்துமுரா சறைந்த தெல்லா மறிந்துகூனி தானும்

கூனி கைகேயிக்குக் கூறிய துர்போதனை

அறிந்துடன்கை கேசிவீட்டில் அமர்ந்தந்தக் கூனிதான்
அழகுடன்கை கேசிகூடி வளமை பேசுவாள்
முறிந்தஅச்சி லாணிகையால் திருப்பியகை கேசி
முன்னாளில் மன்னனைக்குடி காத்தகை கேசி
இருத்துமல்லால் பெருத்தவாழ்வு படைக்குங்கை கேசி
இன்றிருக்கும் பெருமைதனை எண்ணாதேகை கேசி
ஒருத்திபிள்ளை ஒருத்திக்கு உதவாதுகை கேசி
ஒகப்படசசி சரிமுத்த மொவ்வாதுகை கேசி
வாதுசொல்லி ராமன்முடி வைத்தால்கை கேசி
வாழ்விழந்து சோறிழந்து போவாய்கை கேசி
பாதியில்சக் களத்திதனை நம்பாதேகை கேசி
பரதனுக்கே முடிதரிக்கச் சொல்வாய்கை கேசி

82.8. அச்சு - கடையாணி. 82.9. காந்தன் - கணவன்; தசரதன். மனம் மெய்க்க - மனம் பெருமிதம் கொள்ள. கைகொடுத்து - அச்சாணிக்குப் பதில் தன் கையைக் கைகேயி கொடுத்து. 82.10. மண்டலங்கள் - நாடுகள். மெய்த்திடவே - பொருந்திடவே; நாட்டு மக்கள் அறியும் படியாகவே என்றவாறு. 82.11. கேள்வனே - கணவனே. 82.12. கூனி - மந்தரை என்னும் பெயருடைய கைகேயியின் தோழி. 82.13. வளமை - இராமனுக்குப் பட்டாபிஷேகம் என்னும் செய்தியின் செழுமை. 82.16. ஒருத்தி பிள்ளை ஒருத்திக்கு உதவாது - 'கௌசலை மகனாகிய இராமன் உனக்கு உதவ மாட்டான்' என்ற பொருளி லமைந்த தொடர். ஒகப்பட சசி சரி முத்த மொவ்வாது - தேய்ந்து போகும் சந்திரன் முழுமையான நிலவுக்கு ஒப்பாக மாட்டான் என்ற பொருளில் அமைந்த தொடர். இங்குப் பட்டாபிஷேகம் இராமனுக்கு நடந்தால் அவன் முழுநிலவு ஆவான் என்றும் பரதன் தேயும் நிலவு ஆவான் என்றும் கூனி உரைத்தாள். 82.17. வாது சொல்லி - தர்க்கம் செய்து. 82.18. சக்களத்தி - இங்குக் கௌசலையைக் குறித்தது.

In the midst of the fight, the axle of his car broke.
On seeing which Kaikēyi, driving the chariot
Came to his rescue by inserting
Her own hands in the place of axle
And saved the day for the emperor,
To his great joy and pride; whereon
Full of gratitude he turned to his wife
And offered her any boon she desired;
"I will ask you for them,
When my Lord, I need them later", She said.
And the promise was given by the king
This happened of yore.

THE HUNCHBACK MANTARA'S EVIL ADVICE TO KAIKĒYI

When the crown was given to Prince Rama,
The drums proclaimed the same in the city:
When the confidant of Kaikēyi came to know all this,
She began to brainwash her mistress, the queen,
"O Kaikēyi, you who saved the king's car
With your hand when the axle broke,
You who saved the king, his life and reputation:
Do not think only of today's joy, O Kaikēyi!
One woman's son will be of no use to another;
The waning moon cannot become the full moon!
If Rama were to be crowned, you will lose
Your life and even your daily food;
Do not trust the co-wife Kaucalai;
Demand that Parata must be crowned
O, Kaikēyi"

கைகேயின் பதிலுரை

சொல்லுமென்று கூனிசூது சொல்லச் சொல்லவே
சொன்னகூனி தன்னைப்பார்த்துச் சொல்லுவாள்கை கேசி
நல்லபாத கத்திநீ மூதேவிவெள் ளாட்டி
ராமன்வேறு பரதன்வேறு நாமென்றெண்ண லாமோ
எண்ணிலறு பதினாயிரம் பெண்நம் மன்னர்க்குண்டே
இதுவல்லாமல் மூன்று பெண்கள் நாங்களுமுண்டே
மண்ணில் வெகுதவம் புரிந்துஎங்கள் நாயகன்
வரத்தினில் வந்துதித்த மக்கள்தனக்குள் மூத்தமைந்தன்
மூத்தமகன் ராமனுக்கு முடிதரி யாமல்
முடக்குமென்றே தடுத்ததினால் மோக்ஷ முண்டோடி
பார்த்தவர்க்கு ஏற்றிடுமோ நரைத்த வெள்ளாட்டி
பாவிநீ மூதேவிபோடி அப்பாலே வெள்ளாட்டி

கூனி பரதனுக்கு முடிசூட்ட வழி கூறுதல்

பாலனெனும் பரதனுக்கு முடிதரிக் கொட்டாது
பகுத்துடன்வாய் மிகுத்துரைத்த பாவி கைகேசி
நீலவர்னன் ராமனுக்கு முடிதரிக் காமல்
நிலமுனக்கே தகலத்தூர நிற்பாய் கைகேசி
தூரநிற்கவே பரதனைப் பெற்றாய் கைகேசி
தோகைகௌ சலைமகனோ சுமதி கைகேசி
தேரதிலே கைகொடுத்த வார்த்தை கேளடி
சீர்மகுடம் பரதனுக்கே தரிக்கப் பாரடி
பாரிலுள்ளோர் பழவசனஞ் சொல்லக் கேளடி
பாதிச்சக் களத்தி மக்கள் பக்ஷமேதடி
தாரணி யெல்லாமிழந்து போவ தென்னடி
தாய்க்கு விளையினும் தனக்கு விளையணமடி

82.20. பாதகத்தி - 'துரோகி' என்ற பொருளில் அமைந்த பெண்பால் பெயர். வெள்ளாட்டி-வேலைக்காரி; ஏவல்பெண். 82.23. முடக்கும் - செயல்படுத்த விடாது தடுப்பாய். மோக்ஷம்-மோட்சம்; வீடுபேறு. 82.24. ஏற்றிடுமோ - தகுதியானது ஆகுமோ. 82.25. ஒட்டாது-விடாமல். பகுத்து-ஆராய்ந்து. 82.29. பழவசனம் - பழமொழி; இங்கு 'காற்றுள்ள போதே தூற்றிக் கொள்' என்ற பழமொழி. பக்ஷம் - உருக்கம்; அன்பு என்ற பொருளிலும் அமையும். 82.30. தாரணி - நாடு. 'தாய்க்கு விளையினும் தனக்கு விளையணமடி' என்பது வழி நீ பெற்ற அரச போகத்தைப் போலவே உன் மகன் பரதனும் பெற வேண்டுமடி என்ற பொருளில் கூனியால் பெறப்பட்டது.

KAIKĒYI'S REPLY

When as the hunchback spewed her treachery thus,
Kaikēyi angrily turned to her,
And roundly abusing her said:
"Sinner you are, a mere servitor full of evil
How can you think of Rama and Parata,
As different from one another?
Our lord has sixty thousand wives,
Besides we three queens,
After a long period of austerities
Our master was blessed with four sons:
Can we hope for salvation
If the eldest Rama is not crowned?
Will it look proper and fair before the citizenry?
You grey-haired witch, get thee gone! Sinner vile!"

MANTARAI CONTINUING HER PROPOSAL TO CROWN PARATA

"You are the sinner, Kaikēyi!
You do not take steps to crown your son Parata,
Preventing the blue-hued Rama from ascending the throne.
If you do not do as I say,
Territory you will have none for your son;
Away from power you will stand,
Did you bear Parata only to stand away?
Should the son of Kaucalai become the ruler?
O Kaikēyi! ask for the promised boon
Given by the king when you saved his car;
See that the royal crown is won by Parata.
Forget not the wisdom of the saying,
"Make hay while the sun shines!"
Why this love for your stepson; O Kaikēyi?
Should you lose the earth thus O Kaikēyi?
Remember your son must succeed

விளைநிலத்தைக் களையவினை விளைக்கி றாயடி
வீணுனக்கே வெள்ளாட்டியாய் வந்தேன் னானடி
பழையவரந் தாருமென்று பகர்ந்து கேளடி
பரதனுக்கே முடிதரித்துப் பதியை யாளடி

கைகேசி தசரதனிடம் வரம் வேண்டல்

பதிவுடனே கூனிசொல்லப் பார்த்துக் கைகேசி
பழவினையால் மதிகெட்டுக் கண்பூத்துக் கைகேசி
கெதியுடனே தசரதனைக் கண்டு கைகேசி
கேட்டவரந் தாருமென்று நின்று கைகேசி
கேசவனாம் ராமனுக்கே முடிதரி யாமல்
கிருபைமைந்தன் பரதனுக்கே கிரீடஞ் சூடுவீர்
ஆசைமொழி தசரதனார் காதி லேறவே
அதிசெப்பு நாராசம் காதிலறைந்த வாறுபோல்

தசரதன் மயக்கம்

அறைந்து மொழிகேட்டு மயக்கம்நிறைந் துள்ளேறவே
அந்தரமாய் அரசனுயிர் அமைந்து மாயவே
குறைந்து வுயிர்போம் வழியிலமைச்சர் கூடிவந்துமே
கூகூவென்று அபயமிட்டார் கோவைத் தேடியே

கைகேசி இராமனிடம் உரைத்தல்

தேடியே கைகேசி ராமன்மாளி புகவே
சீதையரும் ராமருமாய் சென்றடி தொழவே
நாடியுந்தன் தம்பிபரதன் நாட்டை யாளவும்
ராமா நீயீரேழ் வருடம் காட்டிலேகவும்
ஏகும்படிநான் கேட்டவரங் களின்றுன் றந்தைதான்
எனக்கருளினா ருனக்கிவ்வாறு இயம்ப வந்தேன்யான்

82.31. களைய - வீணாக்க. வினை - பொருந்தா செயல். வெள்ளாட்டி - பணிப்பெண். 82.32. பதி - நாடு. 82.33. பதிவுடனே - நெஞ்சில் பதியும் விதத்திலே. கண் பூத்து - அறிவு மயங்கி. 82.34. கெதியுடன் - ஆதரவுடன். 82.35. கேசவன் - திருமால். முடி - கிரீடம். கிருபை மைந்தன் - கருணையுள்ள மகன். 82.36. செப்பு நாராசம் - செம்பினால் செய்யப்பட்ட அம்பு. அறைந்தவாறு - காதில் சொருகியதைப் போல. 82.37. உள்ளேறவே - மனதுக்குள் கைகேயி சொன்ன சொல் புகவே. அந்தரமாய் - மனதுக்குள். 82.38 அபயமிட்டார் - துயரத்தால் ஓலமிட்டார். கோ - அரசன்; இராமன். 82.39. மாளி - மாளிகை; கைகேயி தங்கியிருக்கும் அரண்மனை. சென்றடி தொழவே - இராமரும் சீதையும் சென்று கைகேயின் பாதத்தை வணங்கவே. 82.40. ஈரேழ் வருடம் - பதினான்கு வருடம்.

To the greatness of his mother,
You are wasting fertile land by sowing wrong; O, why
Should I have come as your servitor in vain?
Demand of the king that he make good his promise;
Get the crown for Parata and the rule of Ayōtti".

KAIKĒYI ASKING TACARATA TWO BOONS AS PROMISED BY HIM

When as the hunchback with wily tongue,
Persuaded and convinced Kaikēyi thus,
Owing to her fate, the queen lost her wits
And met king Tacarata forthwith;
And with endearing words she asked
That his pledge of boons be given now!
"Instead of Rama, may my son Parata
Be given the royal crown,"
As these fatal words fell on his ears
Tacarata became anguished as if
Red-hot copper rods had pierced his ears.

TACARATA SWOONS

On hearing these terrible words,
The king inly suffered and his life began to ebb,
The ministers and counsellers all
Crying: "Oh! Oh! Alas the day!"
On seeing the plight of the king.

KAIKĒYI SPEAKS TO RAMA

Entering Rama's palace, Kaikēyi was welcomed
By Sita and Rama who bowed at her feet:
And the stepmother declared:
"Rama! as requested by me;
Your father has granted me two boons:
Your younger brother Parata should rule Ayōtti,
And you should go into exile,
For twice seven years in the forest."

இராமன் சம்மத உரை

ஆகும்படியென் தாயுரைதனை நான்மறப் பேனோ
அரைக்ஷணந் தரியேனென் றரிசினத் தெழுந்தனரே.

இராமன் இலட்சுமனன் வனம் புகத் தாயிடம் ஆசீர்வாதம் வேண்டுதல்

விருத்தம்

83. எழுந்திருந்து கைகேசி பாதம் போற்றி
என்தாயே வனவாச மேகி வர்றேன்
குளுந்தமொழி பரதாள்வா ருலகை யாண்டு
குணம்பெற வென்றரி யுரைக்க கோமான்வாடி
தொழுந்திருமால் முன்னடக்க யிதெல்லாம் கண்டு
துணையாக லட்சுமணன் தொடுத்தே செல்ல
அழுந்து மலர்பதம் போற்றிச்சீதை தானும்
அத்தைமாருட னனுப்ப அவர்செல் வாளே.

சிந்து

84. வாழவனம் போய்வாறோம் - தாயே நாங்கள்
வாழவனம் போய் வாறோம்.

படியாள கோசலைமுன் நெடியோனிது சொல்ல
பதறிமனங் கலங்கி கதறியவள் புரள
அடிமாமலர் தொழுதவளை மனந்தி ருத்தி
அம்மா மலைக்கரிது பொன்மேடை தன்னிலிரு (வாழ)
பொன்மேடை யிற்புகுந்து சுமித்திரை பாதத்தில்
பூபதி பணிந்திட கோவென்றவள் கதற
நன்மார்க்கமாய்ச் செப்பித் தாயே வருஷம்பதி
னாலுகடந்தால்த் தினமேல் வருவோ முறுதி (வாழ)

82.42. க்ஷணம் - நிமிடம் போன்ற சிறு நேர அளவு. சினந்தெழுந்தனர் - விரைந்து பறப்பட்டனர்; கோபம் கொண்டு புறப்பட்டனர் எனினும் அமையும். 83.1. ஏகி - சென்று. 83.2. குளுந்த மொழி - குளிர்ந்த மொழி. அரி - திருமால்; இராமன். கோமான் - தசரதன். 83.3. முன்னடக்க - முன்னால் நடந்து போக. தொடுத்தே - பின்பாகவே. 83.4. மலர்பதம் - மலர் போன்ற மென்மையான பாதம். அத்தைமார் - கௌசலை, சுமித்திரை என்னுமிருவர். அனுப்ப - இராமன், இலட்சுமணன் இருவருடன் தன்னை அனுப்ப. 84.2. படியாள் - வனத்தை ஆள்வதற்கு. பதறி - மனம் துடித்து. 84.3. அடிமாமலர் - பெரிய மலர் போன்ற பாதம். திருத்தி - தேறுதல் மொழிகள் சொல்லி. மலைக்கரிது - 'திகைக்காதே' என்ற பொருளுடைய மலையாளச்சொல். பொன்மேடை - பொன்னால் செய்யப்பட்ட மாளிகை. 84.4. பூபதி - அரசன்; இராமன். 84.5. நன்மார்க்கமாய் - நல்ல விதமாய். செப்பி - கூறி. தினமேல் - குறிப்பிட்ட நாளில்.

RAMA AGREES AT ONCE

"Can I forget my mother's words ever?
Not a minute I shall stay here"
Said Rama rising swiftly and falling at her feet.

RAMA ASKING FOR KAIKĒYI'S BLESSING

83. "Mother I shall go as ordered into exile
And then come back after the appointed time;
May by brother Parata with cool speech
Rule the earth well and wisely" said Hari Rama.
The lord walking in front, his brother Lakshmana
And Sita of flower-soft feet followed behind
Go we to the forest exile my mother
Go we to the forest; bless us!

84. As the lord said thus to queen Kaucalai,
She rolled upon the ground in agony,
Anguished agitated and wailing in grief.
But Rama bowed at her flowery feet,
And consoled her thus:
"Do not stand perplexed, mother;
Stay in your golden palace till my return".
Then to Cumittirai's palace
They went; bowing at her feet,
They sought her blessing,
She too cried in grief.
Speaking soft words to solace her
He assured: "Mother, we will return
Fourteen years to the day from today
This is certain."

உறுதியாய் ராமன்செப்ப கௌசலை சுமித்திரை
உதவுமைந்தரை விட்டுப் பிரியவுந் தரியாமல்
மறுகிட மூவரும் மந்திரி சுமந்திரர்
வந்ததேரி லேறிச்சென்று அந்தரதமுந் தவிர்ந்து (வாழ)

மக்கள் வருத்தம்

விருத்தம்

85. வாழ்புவி அயோத்தியில் வாழ்சனங் களெல்லாம்
மாலேக மதிகலங்கி மயங்கி வாட
சூழ்மறை யோர்கள் சைவர்ஞான மக்கள்
சுத்தமுயர் வர்த்தகன்மார் தொழுவோ ரெல்லாம்
காளமுகில் மேனியனார் தேன்பா லோடும்
கடுங்கானம் புகவயன் கற்பித் தானோ
ஆளுமரி ராமனை நாமென்று காண்போம்
அரகரா சிவனே யென்றறைகு வாரே.

சிந்து

86. வாரணி கும்பத் தனத்திரு மாதவள் மங்கையர் சீதையரும்
மன்னனி ராமனும் லட்சுமணனும் வனம்புக வென்றேகச்
சீரணி கின்ற அயோத்தி வளநகர் தேசத்தி லுள்ளவர்கள்
தென்னவர் மன்னவர் மந்திரிமார்களும் சேர்ந்த மறையோரும்
தாரணி தன்னி லரியைப் பிரிந்துத் தரிப்பற்ற பாய்மரம்போல்
தாயைத் தவிர்த்திடும் பிள்ளைகள்போல் தவித்து மறுகுவரே

சீதையிடம் இராமன் வேண்டுதல்

காரணி மேனிய ரிராமன் பின்வரும் காதலியைப் பார்த்துக்
காலுஞ் சலித்திடும் மேலுஞ்சடைத்திடும் காந்தியுங் கொண்டிடுமே

84.6. தரியாமல் - முடியாமல். 84.7. மறுகிட - வருந்திட. மூவரும் - இராமர், இலட்சுமணர், சீதை என்னும் மூவரும். சுமந்திரர் - தசரதனின் அமைச்சர்களுள் ஒருவன். 85.1. மாலேக - திருமால் செல்ல. 85.2. மறையோர்கள் - வேதம் ஓதுவோர்கள். சுத்தமுயர் வர்த்தகன்மார் - தொழிலில் நியாயத்தைக் கடைபிடிக்கும் வியாபாரிகள். 85.3. காளமுகில் மேனியனார் - மழைமேக கரிய நிறமுடைய இராமன். அயன் - பிரம்மன். கற்பித்தானோ - படைத்தானோ. 85.4. அறைகுவாரே - நெஞ்சிலடித்துப் புலம்புவாரே. 86.1. வாரணி - மார்புக் கச்சை அணிந்த. தனம் - மார்பு. 86.2. சீரணிகின்ற - அழகை ஆடையாகக் கொண்ட. 86.3. தாரணி- உலகம். அரி - திருமால். தரிப்பற்ற - நிலை நிறுத்தும் இடமற்ற. பாய்மரம் - பாய்மரக் கப்பல். 86.4. காரணி மேனி - கார்மேகம் போன்ற கறுத்த மேனி. காதலி - தன்னிடம் அன்பு கொண்ட சீதை. சலித்திடும், சடைத்திடும் - நடக்கின்ற காரணத்தால் துவண்டிடும். காந்தி- உஷ்ணம்.

As Rama spoke thus, Kaucalai and Cumittirai
Unable to part from them, followed behind
Along with ministers, Cumantiraṉ in the royal chariot.

THE PEOPLE'S GRIEF

85. As the lord left Ayōtti, the entire city
Followed them, in bewilderment and grief;
The Vedic Brahmins and devotees to Siva,
Wisemen, traders, merchants and all did cry;
"Hara, Hara, Siva, Siva!"
"Our cloud-hued Lord and his spouse of melliferous speech,
Did the creator Brahma so ordain them
To go to the forest wild?
Oh when shall we ever see Rama again?
Hara Hara Siva Siva"
They lamented.

86. When as Mātava lord of her, with corseted bosom
And Lakshmaṇa and Sita started for the forest,
All the people of prosperous Ayōtti, captains and kings,
And chiefs and ministers followed them in grief,
Unable to bear the separation from Hari.
Distressed like a sailing ship without moorings,
Even like infants parted from their mothers.

RAMA'S REQUEST TO SITA

Dark-hued Rama turning to his beloved
Said thus: "Your feet will grow tired
And your body grow weary, the heat parch you.

காந்தி யுடைய அழகுகுன் றாமலே காலுஞ் சடையாமல்
காரிய மாகநின் மாமிமாரோடு கலந்திருப் பாய்சீதா
பாந்தவமாய்ப் பதினாலு வருடம் படந்து சென்றால் நாங்கள்
பதிக்குள் வருவோம் விதிப்படி வாழ்வு படைக்குமென் பெண்ணரசே

சீதையின் பதில்

ஏந்திழை ராமனுரைப்பதைக் கேட்டு இருகண் ணும்முத் துதிர
இறைவனை விட்டுப் பிரிந்திருக்க எனக்குவிதி வசமோ
சேர்ந்திடும் பிள்ளைகள் தாய்தந்தை யோடு சிறந்துரு வேறாது
திரையதை விட்டுவிரி கடலானது சென்றொருபால் போமோ
பாலுடன் வெண்ணை கலந்தது போலவே பாக்கியம் பெற்றிருந்தும்
பரதனுக்கே பட்டமென்பது கொண்டு பகர்ந்து வனம்போறீர்
ஆலுடன் வாழு மிலைகள் பிரிந்தாலது சருகா காதோ
ஆவைப் பிரிந்திடுங் கன்றன்னையைத் தேடி யங்ஙனே சாகாதோ
மாலுடன் தம்பியு மென்னைக் கைவிட்டு வனத்துக்குச் செல்வீரேல்
வாணாளை யிங்ஙனே மாய்ப்பது திட்டம் மகாதேவராணை யென்றாள்

சீதையுடன் இராம இலக்குமணர் வனம் புகல்

சீலமுடன் சீதை யிந்தமொழி சொல்லிசெவ் விழிமுத் துதிர
சீதையும் ராமருந் தம்பியு மாகவே தென்பாலதாய் நடந்தார்
நடந்தாரே கோசலை நாடென்ற பட்டணம் நாற்பதின் காதவழி
நாடுங் கடந்தவர் தெக்குக்கோட்டை வாசல் கூடி நடக்கையிலே

சீதையின் கேள்வியும் இராமர் பதிலும்

இடந்தான் பெரியவன வாசமென்பது யின்னமுந் தூர முண்டோ
என்கண் மணிக்கு இளையவரே யென்று லட்சுமணர்க் குரைத்தாள்

85.5. காந்தி - ஒளி. 86.6. பாந்தவமாய் - பெரிய தவ நெறியோடு. பதி - இல்லம். வாழ்வு படைக்கும் - சிறந்த வாழ்க்கை வாழும். 86.7. ஏந்திழை - சீதை. முத்துதிர - முத்து விழுந்தாற் போல் கண்ணீர்த் துளிகள் விழ. இறைவன் - கணவன்; இராமன் 86.8. சேர்ந்திடும் பிள்ளைகள் தாய்தந்தையோடு சிறந்திரு வேறாது - தாய் தந்தையைச் சேர்ந்தே குழந்தைகள் சிறந்து விளங்க முடியும்' என்ற பொருளில் அமைந்த தொடர். 86.9. பாக்கியம் - புண்ணியம். 86.10. ஆல் - ஆலமரம். சருகு - உதிர்ந்த இலையின் வாடிய நிலை. ஆ-பசு. 86.11. மாலுடன் தம்பியும் - திருமாலும் அவர் தம்பியுமாம் இலட்சுமணனும். மகாதேவர் - சிவன். 86.12. செவ்விழி முத்துதிர - சிவந்த விழியிலிருந்து முத்துக்கள் போல கண்ணீர்த் துளிகள் விழ. தென்பாலதாய் - தெற்குப் பக்கமாய். நாற்பதில் காத வழி - நாற்பது காத தூரம்; ஒரு காதம் என்பது ஏழரை நாழிகையில் நடந்து கடக்கும் தூரம். தெக்கு கோட்டை - அயோத்தி நகரின் தெற்குக் கோட்டை. 86.14. என் கண்மணிக்கு - எனது கண்ணின் மணி போன்றவருக்கு; இராமனுக்கு.

Without ruining your radiant beauty and tiring your feet,
Why don't you stay with your mothers-in-law?
Sita! we shall surely come back after fourteen years,
Returning to the city as per our given word
Queen among women! It is fate that ordains all these"

SITA'S REPLY

Hearing the words of Rama, the eyes of Sita
Shed pearly tears! "It is my fate
That I should exist away from my Lord,
Children must live only with parents;
The waving billows cannot part from the wide sea,
Though fortunate like butter merged with milk.
You are going to the woods,
Yielding up your crown to younger Parata,
Won't a leaf falling from the banyan become dried?
Won't the calf separated from its dam,
Die soon of grief? I swear,
I swear upon Mahātēva If you
And your brother leave me and go to the forest,
Doubtless I shall end my life."
Saying so, Sita followed Rama and his brother,
Her red eyes shedding drops like pearls.
Southwards they wended their way,
Crossing forty [91]*kātams* through the southern gate.
"Is it still far from us, this forest place?
O, my Lord's younger brother?"
Asked Sita of Lakshmaṇa;

91. *Kātam* -- A unit of distance; abo[illegible] [illegible] miles.

மடந்தை மொழியை இருவருங் கேட்டு மனதுக்குள் ளேசலித்து
வனவாச மின்னம் வெகுதூரமுண்டு மலையாமல் வாரு மென்றார்

மூவரும் குகனைக் காணுதல்

துடர்ந்திடவே தெக்குக் கோட்டை வாசல்விட்டு தூரவழி நடந்து
சோலையுஞ் சாலையும் பாலை வனமும் தொடுத்து நடந்தனரே
பாலைநிலத் தோடு முல்லை நிலங்கள் பரிந்த மருதநிலம்
பக்ஷிபறவை சராசர வர்க்கம் பருத்த விலங்கினமும்
மேலே எழும்பிப் பறக்கும் நடந்திடும் மேகநிரை சாயும்
வேனத்திரள் திரளாய் வந்துகூடி விளையாடியே கதறும்

காலை வளைத்து நரிமுத்தும் மந்தி கருங்குரங்கு குதிக்கும்
கார்குயில் கூவிடும் தோகை மயிலினம் காவிலே கூத்தாடும்
வாலை கெங்கா பரமேஸ்வரி தானும் மகிழ்ந்தொரு மித்தாராய்
வாராமலே குகனோ டங்கடத்தி வருங்கரை கண்டாரே.

குகனது ஓடத்தில் மூவரும் ஏறுதல்

விருத்தம்

87. கண்டனர் குகனும் வந்து கார்வர்னர் மலர்த்தாட் போற்றிக்
கொண்டனன் மனது மெய்க்கக் கூறினன் தயவு பேசி
மண்டலத் தரசர் போற்றும் மன்னர் சீதையரும் மெய்க்க
தொண்டருங் குகனு மாகத் தோணியி லேறி னாரே.

ஓடத்தில் இராமனது மனவோட்டம்

சிந்து

88. அரிராம ராமசெயம் தத்தினா - அரிராம
ராம ஜெயம்

86.15. சலித்து - சோர்வடைந்து. மலையாமல் - திகைப்படையாமல். 86.16. துடந்திடவே - தொடர்ந்திடவே. 86.17. சுராசர வர்க்கம் - பிரபஞ்சத்திலிருக்கும் பிராணி வகைகள். பருத்த- பெரிய 86.18. மேகநிரை - மேகக் கூட்டம். சாயும் - வானத்தில்.சாய்ந்து செல்லும். வேனத்திரள் - கானல்நதிக் கூட்டம். கதறும் - வருத்தத்தை ஏற்படுத்தும். 86.19. மந்தி - பெண்குரங்கு. காவிலே - சோலையிலே. 86.20. வாலை கெங்கா பரமேஸ்வரி - பார்வதி. மித்தராய் - நண்பராய். 87.1. குகன் - வேடர்த் தலைவன்; கங்கைக் கரையில் படகு செலுத்தபவன். 87.2. தயவு - தாழ்மையான சொற்கள். 87.3. மண்டலத்தரசர் - உலகத்தரசர். மெய்க்க - பொருந்த. 87.4. தொண்டர் - இராமர் தொண்டர்; இலட்சுமணர். தோணி - ஓடம். 88.1. அரிராமராம ஜெயம் - இராமநாமத்தில் அவதரித்த திருமாலுக்கு வெற்றி.

Grieved at heart on hearing her innocent words,
Rama said: "We have a long way to go
Come along with us without bafflement."

THE MEETING WITH KUKAṈ

Continuing their southward journey crossing
Many a grove
And road and wild tract;
They passed the *Pālai, Mullai* and *Marutam* tracts,
Encountering birds and beasts of many a kind
Big wild animals and flying birds on the way,
Flock of fleecy clouds sailing in the sky,
While mirages one after another played with their plight;
The jackal would bend its legs in joy and jump,
While the monkeys male and female,
Would frolic; among the trees;
The black kuyils warbled,
While the peacock with fantails danced in the grove!
Goddess Parvati herself rejoiced,
As a good friend Kukaṉ with his ferry boat
Met them on the banks of the Ganges.

THE THREE GET INTO KUKAṈ'S BOAT

87. Bowing at the flowery feet of the dark-hued Lord,
Kukaṉ spoke loving words pleasing to his heart,
And he whom the kings of the earth obey,
With Sita and his faithful servitor-brother,
Got into the ferry boat of Kukaṉ.

RAMA'S THOUGHTS WHILE CROSSING THE RIVER

88. "Victory to Rama Tirumāl incarnate!
Victory to Hari Rama!"

ஏற்றியதோ ரோடமதில் யிளையவரும் ராமருமாய்
வாய்த்தபுகழ் தினகரனார் மகிழ்ந்தெடுத்த சானகியும்
ஆற்றிலே வோடமதில் மூவரு மிருக்க
அறலான சிவகெங்கை அலமலைப் பாக
நேற்றிருந் தோம்நமது மாட மாளிகையில்
நில்லாமல் வனவாசம் மல்லேற விதியோ (அரி)

காலங்கெட்ட விதிவசத்தால் கைகேசி விபரீதத்தால்
நாலுமக்கள் தனில்மூத்த ராமனென்று பெயர்படைந்தோம்
கோலமுடனே பரத னரசு புரியட்டும்
குருசுவாமி வசிட்டர் முனிகிருபையே கிட்டும்
சீலமுட னேயழுந்தி கூடிவரு மாற்றில்
சீதையுடனே தீர்த்த மாடுவதும் நலமே (அரி)

இராமர் கங்கையில் நீராடிப் பூஜை செய்தல்

நலமான கரைசேர்ந்து நாரணனா ரோடம்விட்டு
சலமான சிவகெங்கையில் தீர்த்தமாடி மாத்துடுத்துப்
பெலமான குகன்வந்து உபசாரஞ் செய்யப்
பெருமானு முருவேற சிவபூசை செய்ய
பலகோடி மாதவர்கள் வீற்றி ருக்கின்ற
பாங்கான சித்திரப் பூங்காவில் வந்தார் (அரி)

தசரதன் இறப்பும் இராமர் வனவாசமும்

கர்த்த னெங்கள் மாயவனார் காடுறைந்தா ரென்று சொல்லி
அத்தி வெல்லு முற்கால மருந்தவனார் சாபங் கொண்டு

88.2. இளையவர் - இலட்சுமணர். தினகரனார் - ஜனகன். 82.3. அறலான சிவகெங்கை - அற்று அற்று அலையெழுப்பும் சிவனது சடையிலிருந்து வந்த கங்கை நதி. அலமலைப்பாக - மனப்பாரத்துடன்; துன்பத்துடன். 88.4. மல்லேற - புகுந்து வர. 88.5. விபரீதத்தால் - விபரித எண்ணத்தால். நாலுமக்கள் - நான்கு மக்கள்; இராமன், இலட்சுமணன், பரதன், சத்துருக்கனன் என்னும் நால்வர். 88.6. கிருபை-அருள். கிட்டும் - கிடைக்கும். 88.7. அழுந்தி - மூழ்கி. 88.8. நாரணனார் - திருமால். ஓடம் - படகு. சலம் - நீர். மாத்துடுத்து - மாற்றாடையை அணிந்து. 88.9. பெலமான - பலசாலியான. பெருமானும் - இராமனும். உருவேற - சிவன் உருவம் மனதில் பதிய. 88.10. சித்திர பூங்கா - அழகிய பூங்கா. 88.11. கர்த்தன் - தலைவன். மாயவனார் - திருமாலாம் இராமன்.

As Rama and his brother Lakshmaṇa
And Jaṉakaṉ's beloved daughter in the ferry-boat,
Were crossing the Ganges (descended from Siva's locks)
With a heavy heart Rama thought:
"But yesterday, we were in our storeyed palace,
Is it our fate now, as we to-day go into exile?
But a quirk of fate and Kaikēyi's perversity we are here today.
Eldest of four, Rama, I was named,
But let Parata rule the land!
Our preceptor Vaciṭṭar is sure to bless us;
Let us now bathe in the holy river
In proper form, along with Sita".

RAMA BATHING IN GANGES AND PERFORMING PUJA

Reaching the other bank, Nārāyaṇa left the boat
And bathed in the holy Civakaṅkai
And changed his dress,
While strong-limbed Kukaṉ did him the honours.
Having Siva in mind Rama
Performed puja in proper form,
And reached at last the forest
Where myriads of sages dwelt.

TACARATA'S DEATH AND RAMA'S EXILE TO THE FOREST

On hearing that Lord Rama
Had gone to dwell in the forest,
Consequent on a curse when of yore,
He had gone a hunting tuskers in the woods,

புத்திரனெங் கேயென்று தசரத னிறந்தார்
பூதல [55]மள்ந்தமால் காவதனில் வந்தார்
சித்திரப் பூங்காவில் மெய்ப்புடன் மகிழ்ந்து
திருப்பாற் கடற்கிணை விருப்புட னிருந்தார் (அரி)

பரதன் துயரம்

விருத்தம்

89. இருந்தனர்கள் திருமாலுஞ் சீதை யாரும்
இளையவரு மங்கிருக்க அயோத்தி நாட்டில்
பொருந்துகின்ற மந்திரிமார் பலருங் கூடிப்
பூபதியாம் பரதனுக்குப் புகழா மோலை
இருந்தெழுதி அனுப்பி வைத்தார் பரதன்கண்டு
இடித்தானே வயறுநெஞ்சந் துடிக்கத் தானே
பெருந்திருமால் வனம்புகுந்த துயரத் தோடே
பிதாவிறந்த துயர்கேட்டுப் புறப்பட் டானே.

வேறு

90. பட்டமேது திட்டமேது பரதனேது வரதனேது
பச்சைமாலைப் பிரிந்துசீவன் வைப்பதேது நிற்பதேது
சட்டமேது நாடுவிட்டு தமையன்போன செய்தியேது
தம்பியோடு மதனியாரும் சடைவுகொண்டு துடர்ந்ததேது
கெட்டதோசி யிவள்கைகேசி கெடுத்தவார்த்தை கொடுத்தகூனி
கிழவிநரைத்த தலையைச்சிரைத்துக் கீறிநெஞ்சைக் கூறிட்டெரிப்பேன்
வட்டமாகச் சுற்றியோடி வாளுடன் சமுதாடுமெடுத்து
மன்னர்கிடக்கு மறையில் புகுந்துவாயில் முகத்தில் வயற்றி லறைந்து

88.12. அத்தி வெல்லு - யானையை வேட்டையாடி. வெல்லுகின்ற. அருந்தவனார் சாபம் - யானையைக் காலடி ஓசை யென முனி மகன் நீர் மொள்ளுகின்ற ஓசையைத் தவறுபட கொண்டு தசரதன் முனிமகனைக் கொன்றதால் முனிவர் தசரதனுக்குக் கொடுத்த சாபம். 88.13. பூதலமளந்த மால் - வாமன அவதாரம் எடுத்து பூமியை ஓரடியில் அளந்த திருமால். கா-சோலை. 88.14. இணை விருப்புடன் - இணையான விருப்பத்துடன். 89.2. பூபதி - அரசன். புகழாமோலை - தசரதன் இறந்த செய்தி மற்றும் இராமன் வனம் புகுந்த புகழற்ற செய்திகள் அடங்கிய ஓலை. 89.4. பிதா - தந்தை. 90.1. பட்டமேது - இளவரசு பட்டமேது. திட்டமேது - வருங்கால திட்டமேது. வரதனேது - சிவனேது. சீவன் - உயிர். 90.2. மதனி - பரதனின் மதனியான சீதை. சடைவு - தளர்வு. துடர்ந்தபோது - தொடர்ந்த போது. 90.3. கெட்டதோசி - புத்தி கெட்ட பாவி. கூனிகிழவி - கூனல் முதுகுடைய கிழவி; மந்தரை. சிரைத்து - மொட்டையடித்து. 90.4. சமுதாடு - ஓர் ஆயுத வகை. கிடக்கும் அறையில் - இறந்து கிடக்கும் அறையில்.

55. மழந்த

Tacarata called aloud
For his son and breathed his last;
While he who had earlier measured the triple worlds,
Came into the forest and stayed there with equanimity,
As if he were in his own
Original ocean of milk.

PĀRATA'S GRIEF

89. When as Rama and Sita and the younger Lakshmana dwelt here,
In Ayōtti there, the ministers sent tidings to Lord Parata,
Conveying the news of the death of the king
And the exile of the crown prince; seeing which
Parata's heart broke and racked by the grief
Of Rama in exile and the death of his father,
Parata left for Ayōtti.

90. "Oh! what use is the crown?
Of what avail, our plans without the jasper-hued Lord,
By my side" What is Parata now? How can my life
Continue in this body? Where is the law?
What is this terrible news
Of my elder brother and my sister-in-law,
And my brother leaving for the forest
At the behest of evil sinner my mother, Kaikēyi
Corrupted by the words of the wicked hunchback?
I shall shave off her grey hair,
Cleave her heart and burn it." said he.
As he entered the chamber of death
Where the king lay in state,
Beating his breast and belly and his face;

வயிற்றிலிடித்து யென்னைப் பயின்ற மன்னவன் றனையிழந் தேனையோ
வையகத் தரசுபுரியும் ராமன்வனம் புகுதிட விதியோ ஐயோ
இயற்றும் மந்திரி மாரைவருத்தி என்னைத் தோணியொன்று திருத்தி
ஈன்ற தசரத ராஜனவரை எண்ணைத் தோணிதன்னிலே போட்டு
நயற்றில் பெட்டகம் பூட்டும் பூட்டி ராமன்முத்திரை யதனிற்றிட்டி
நளிகைகேசி கழுத்தை யறுத்து நரைத்த கூனிகுடலைப் பிடுங்கி
உயர்த்தி மாலைகழுத்தில் போட்டு உருவுகத் தியிலுயிரை மாய்த்து
ஒருநொடியில் பரதன் னுடபேரை ஒழிக்கிறேன் சடம ழிக்கிறேன்
அழிக்கிறேனென வெளியிலே சாடி அன்னைமாளிகை தன்னில் புகுத
அடுத்தமந் திரிமார்கள் தொழுது அழுதழுது பணிந்து விலக்கினார்
வெளிப்படும் படிபரதனுஞ் சென்று வினக்கை கேசிதனைக் கண்பார்த்து
விதனமுடனே தாயைக் கீற விண்ணும் மண்ணும் கலங்கிடுமே.

பரதன் தாயைச் சினந்துரைத்தல்

விருத்தம்

91. விண்ணாள்வான் தசரதனோ விரிகடல்சூழு முலக மெல்லாம்
மண்ணாள்வான் பரதனன்றோ வரம்பெற்றா னின்பொ ருட்டால்
கண்ணாள காகுத்தன் றான்கடுங்கா னம்புகு வானோ
பெண்ணானாய் தாயானாய் ரண்டா லும்பிழைத் தேனே.

சிந்து

92. தனைப்பயின்றா ரிறந்திடவும் தமையனார் வனம்புகவும்
உனைப்புகழ்ந்து நானிருந்து உலகாள வேணுமன்றோ
எனைப்பயின்றாய் வரங்கள் பெறாய் ஈடழித்தாய் நாடழித்தாய்
நின்றிருந்தாய் பாதகத்தி நின்னைத்தாய் என்றேனே

90.5. வையகம் - உலகம். 90.6. இயற்றும் - சட்டங்களை இயற்றி அமல் படுத்தும். வருத்தி- வரச்செய்து. எண்ணைத் தோணி-பெரிய எண்ணைப் பாத்திரம்; இது இறந்தவர் உடலைச் சிதையாமல் பாதுகாக்க வல்லது. 90.7. நயற்றில் - சோர்வடைந்து. பெட்டகம் - தசரத ராஜன் உடல் வைக்கப்பட்ட பெட்டகம். ராமன் முத்திரை - ராமன் வந்து பெட்டகத்தைத் திறக்கும் படி முத்திரை இட்டு. நளி கைகேசி - தேள் போன்ற கொடிய கைகேயி. 90.8. உருவு கத்தி- உறையிலிருந்து உருவப்பட்ட கத்தி. சடம் - பரதனாகிய என் உடம்பு. 90.9. வினகைகேசி - வினை கைகேசி; வஞ்சகம் நிறைந்த கைகேசி. விதனமுடனே - வேதனையுடனே. கீற - உடலைப் பிளக்க. 91.1. விண்ணாள்வான் - தேவ லோகம் புகுந்த தசரதன். 91.2. நின் பொருட்டால் - கைகேகியான உன்னால். 91.3. காகுத்தன் - இராமன். கடுங்கானம் - கடுமையான காடு. 91.4. பிழைத்தேனே - உன்னைத் தண்டிக்கும் செயல் செய்யாது பிழை செய்தேன். 92.1. தனைப்பயின்றார் - பரதனாம் என்னை வளர்த்தவர்; தசரதன். தமையனார்- இராமன். 92.2. உனை-கைகேயியான உன்னை. 92.3. எனைப்பயின்றாய் - என்னைப் பெற்று வளர்த்தாய். வரங்கள் பெறாய்-நல்வரங்களைப் பெறவில்லை. 92.4. பாதகத்தி- துரோகி.

"Oh! I have lost my king who sired me;
Is it fate, that he who should rule
Should go to the woods?"
And calling for his ministers,
He caused a vessel of fragrant oil to be brought
And placed the king Tacarata embalmed in it,
And in grief, locked the casket,
Sealing it with Rama's seal:
"I shall cut the throat of scorpion Kaikēyi
"I shall pluck the entrails of the hunchback,
And wear it as a garland round my neck,
And kill her with my drawn sword.
I shall wipe off the name Parata
And slay myself", he raged in ire and grief.
Saying which, he entered his mother's palace.
Fearing the consequences of his ire, the ministers
Prayed to him and their tears prevented him
From his wrathful purpose;
And Parata met treacherous Kaikēyi and in anguish
Looked daggers at her,
While earth and heaven trembled at his grief.

PARATA'S ANGER TOWARDS HIS MOTHER

91. "Has the Lord Tacarata gone to rule the heaven?
And all this earth engirt by the sea,
Because of you, Parata has got the right to rule,
While Kākuttaṉ[92] has entered into the exile wild:
As a woman and as my mother, I find no way
To punish you and thus I am in the wrong
For allowing you to live in your infamy.

92. Should I rule the world praising you
For your wonderful work,
When he who reared me is no more
And my own elder brother has gone to the forest?
You who yearned me, got your boons:

92. Kākuttaṉ - Rama, descending from Kakutstha's Line.

தாயென்றால் குற்றம்வரும் சதிகேடி நிட்டூரி
நீயிருக்க நானிருக்க நீலவர்ணர் வனம்போக
காயிருக்க மரம்போன கதையாச்சே சதிகேட்டு
பேயிருக்கும் நீயிருந்த பெருத்தமா ளிகைதனிலே

தலைகெட்ட நூலானேன் தாயில்லாத் தமரானேன்
நிலைகெட்ட மரமானேன் நீயெனக்குத் தாயானால்
உலகத்தோர் நகையாரே உனையறுத்தே னானாலும்
பலபுத்தி நினைப்பானேன் பாவியிரு வெனநடந்தான்

பரதன் அழுகை

நடந்துவந்தார் பரதாழ்வார் நாட்டிலுள்ளோர் வந்துகண்டார்
அடர்ந்தகையால் முகத்தறைவான் அடிவயிற்றில் இடித்தழுவான்
மடந்தையெங்கள் மதனியரும் மன்னரண்ணர்த் தம்பியரும்
தடந்தேடி யவரையெங்கே தான்காண்பே னென்றழுதான்

தவவேடம் பூண்டு பரதன் இராமனைத் தேடிச் செல்லுதல்

அழுதுதவ வேடமிட்டு ஆண்டியைப் போல் வடிவெடுத்து
தொழுதுவரு வாரையெல்லாம் துலங்கமுகம் பாராமல்
பழுதுசெய்யா மந்திரியைப் பாரிலிரு மென்றுசொல்லி
முழுதுமுகில் வர்ணர்சென்ற முதற்பாதை தொடுத்தானே

பரதனை அனைவரும் தொடர்ந்து செல்லுதல்

தொடுத்துவர சத்ருக்னன் துணையாகப் பின்னடக்க
அடுத்தமந் திரிகளெல்லாம் அவர்பிறகே அழுதுசெல்ல
படுத்தடியாய் அயோத்தி பட்டணத்தி லுள்ளவர்கள்
எடுத்தகையைத் தலைமேல்வைத்து என்கோவே எனநடந்தான்

92.5. சதிகேடி - அழிவு ஏற்படுத்தும் கேடு எண்ணம் கொண்டவள். நிட்டூரி - கொடூரமானவள். 92.6. நீலவர்ணர் - இராமர். 92.7. சதி கேட்டு - மந்தரையின் சதி வார்த்தைகள் கேட்டு. 92.8. பேயிருக்கும் - பேய் இனிமேல் குடியிருக்கும். 92.9. தலை கெட்ட - முதன்மை பாகம் அழிந்து போன. தமர் - மூடன். 92.11. நகையாரே - நகைப்பார்களே. 92.12. பலபுத்தி - பலர் பலவிதமாகத் தங்கள் அறிவில். இரு - இவ்வரண்மனையில் இரு. 92.13. அடர்ந்த - பரந்த. 92.16. தடந்தேடி - அவர் சென்ற வழியைத் தேடி. 92.17. ஆண்டி - பரதேசி. 92.18. துலங்க முகம் பாராமல் - ஒளிவிடும் பிரகாசமான கண்களால் பார்க்காமல். 92.19. பழுது செய்யா - குற்றம் புரியாத. பார் - நாடு; அயோத்தி. 92.20. முழுது முகில் வர்ணர் - முழுமையான, எல்லாமுமான முகில் வர்ண நிறமுடையவர்; இராமன். தொடுத்தானே - அடைந்தானே. 92.23. படுத்தடியாய் - செறிந்து பரதனின் பாதத்தைப் பின்பற்றி. 92.24. கோ - அரசன்.

But you have destroyed and ruined the country,
You sinner vile! How can I think of you as my mother?
To call you one, were a sin;
You are wicked conspirator, a cruel woman!
You are staying here happily and I with you in Ayōtti,
When the blue-hued Lord goes to the forest.
This is like unto the loss of a tree,
With the only fruit left.
In this big mansion inhabited by you,
Ghoul-like and fiendish,
Like a piece of thread without a head, I am:
I am, like a fool, without a mother:
Like a tree uprooted; will not the world
Laugh at me if I call you mother?
People will think ill of me even if I were
To cut you to pieces; therefore, Oh, you evil one,
Stay happily here". And Parata left her.

PARATA'S LAMENT

So lamenting, saintly Parata walked along
And all the people saw him, beating his face
And slapping his breast and crying aloud;
"Oh! where are my Lord, my brother and sister-in-law?
Oh, where shall I go in search of them?"

PARATA DONS AN ANCHORITE'S GARB

So weeping and crying in anchorite's garb,
Like a mendicant in shape, ashamed to face the people,
Parata followed the path of the cloud-hued one,
Instructing his ministers to stay behind in the capital.

ALL THE PEOPLE FOLLOW PARATA

Followed by Catturukkaṉa his faithful brother, went Parata:
The counsellors followed crying, and the city entire;
With hands over his head, he cried: "My Lord, my king".

எனத்தொடர்ந்தே பட்டணத்தார் இரக்கமெத்த உரைக்கரிது
மனத்துயரம் மந்திரிமார் மறுக்கமெத்த வழுத்தரிது
கனத்தெழுந்த ஜனம்தொடர காவலவன் பரதாழ்வான்
சினத்தெழுந்து மனத்துயரால் தென்கோட்டை தனிலடுத்தான்

பரதன் குகனைக் காணுதல்

அடுத்ததெக்கு கோட்டைவிட்டு அடர்ந்தவன வாசமிட்டு
நடுக்காட்டு வழியாக ராமகீர்த்தன முரைத்து
இடுக்கமுடன் பரதாழ்வான் சிவகெங்கை நதிக்கரையில்
விடுத்தகுக னோடமிடும் மெய்த்தலம் வந்துற்றனரே

பரதனின் வினாவும் குகன் மறுமொழியும்

உத்தமனே நற்குகனே உபயமன்ன ரொருமாதும்
இத்தலத்திலடுத் ததுண்டோ எனக்கேட்க குகனுரைப்பான்
கர்த்தனெங்கள் ரகுராமன் காதலியும் தம்பியுமாய்
முத்தலத்தார் வந்ததுண்டு முடிவேந்தே மலையாதே

மலையாதே முடிவேந்தே மன்னரையும் மங்கையையும்
நிலையாத கெங்கையிலே நெறியோடங் கடத்திவிட்டான்
சிலையேந்தும் மன்னவரைச் சித்திர கூடத்தலத்தில்
அலையாமல் கண்டிடலாம் அரசேநீ யஞ்சாதே

பஞ்சவனத்திற்குப் பரதன் வருதல்

அஞ்சாதே யென்றுசொல்லி அவனோடம் கடத்திவிடக்
கஞ்சமலர் கண்ணனையே காணவென்று வருவாரை

92.25. இரக்க மெத்த உரைக்கரிது - பரதனைத் தொடர்ந்து வந்தவர்களின் மனத்துயரைக் கூறுதல் அருமையானது. 92.26. மறுக்க - மனம் மிகவும் குழம்ப. மெத்த வழுத்தரிது - அதிகமாய்க் கூறுவது அரியகாரியம். 92.27. கனத்தெழுந்த - மிகுதியான கூட்டமாய் எழுந்த. 92.28. அடுத்தான் - சேர்ந்தான். 92.29. தெக்கு கோட்டை - தெற்குக் கோட்டை. 92.30 ராமகீர்த்தனம் - ராமர் புகழ்பாடும் பாடல்கள். 92.31. இடுக்கமுடன் - துன்பத்துடன். சிவகெங்கை - கங்கை நதி. 92.32. மெய்த்தலம் - மேன்மையான ஸ்தலம். 92.33. உபயமன்னர் ஒருமாதும் - இராமரும் அவரைத் தொடர்ந்து சீதையும். 92.34. அடுத்தது - சேர்ந்தது. 92.35. கர்த்தன் - தலைவன். காதலி - சீதை. தம்பி - இராமன் தம்பியாம் இலட்சுமணன். 92.36. மலையாதே - கலங்காதே. 92.38. கடத்தி விட்டேன் - கங்கையைக் கடந்து போகும்படி செய்தேன். 92.39. சிலை - வில். சித்திரகூடத் தலம் - இராமன் மற்றும் இருவரும் தங்கியிருக்கும் இடத்தின் பெயர். 92.42. கஞ்சமலர் - தாமரை மலர்.

Impossible it were to describe the anguish
Of the entire citizenry; to write about the grief
Of the ministers were equally vain;
Followed by throngs of people thick and strong;
Saintly Parata, anger and sorrow filling his heart
Left the city through the southern gate.

PARATA'S MEETING WITH KUKAṈ

Leaving the southern gate he wended his
Way towards the woods singing Rama's praise.
Grief-stricken Parata reached at last
The banks of the Ganges where noble Kukaṉ lived.

PARATA'S QUERY AND KUKAṈ'S REPLY

"Oh noble boatman, good Kukaṉ! did you meet
With princes twain and a princess, hereabouts?"
And Kukaṉ replied: "Oh yes! our Lord Rama
His beloved queen and brother, rulers of the triple world
Came here a while ago; grieve not, my Lord!
Grieve not! It was I who ferried the noble three
Across the Ganges in my boat;
You can meet the royal bowmen in Cittirakūṭam, my lord,
Without any difficulty; do not be afraid of missing them."

PARATA COMING TO PAÑCAVAṬI

As Rama and Jāṉaki adorned with fragrant blossoms,
Were waiting for Lakshmaṇa who had gone
To pluck fruits and other edibles for their food,

நெஞ்சமலை யாதவண்ணம் நீர்கடத்தும் ஓடமென்றே
பஞ்சவன வாசமதில் பரதன்வந்து புகுந்தானே

பரதனை இராமன் கண்டு இது யார் என ஐயுறல்

புகுத்துமுன்னா ளிருந்தகண்ணன் புத்தியுட னிளையவரை
மகிழ்ந்துகனி காய்பறிக்க வனத்தேகிக் கனிகள்வந்ததால்
சுகந்தமலர் சனகியொடுந் துணைவனிடும் கனிபுசித்துத்
தகும்படியங் கிருக்கையிலே தவவேட வடிவுகண்டார்

தவவேட வடிவாகச் சன்னாசி வருவதென்ன
அவவேட மிதுதானோ அரக்கருட சூதுகளோ
இவனாரோ வெனப்பார்த்து இறையவனங் கிருக்கையிலே
சிவநமா ஸ்ரீநமா எனப்புலம்பச் செவிகேட்டார்

பரதன் இராமனை வணங்குதல்

கேட்டவுடன் பரதனல்லோ கிட்டியதோ வருவதுதான்
நாட்டிலர சுரிமைசெய்ய நானுரைத்து வந்தனே
கூட்டமிட்ட வெகுசனமும் கூக்குரலும் கேட்குதன்றே
ஆட்டமுட னிருக்கையிலே அடியில்வந்து விழுந்தானே

பலரும் இராமனை வணங்குதல்

வீழ்ந்தெழுந்த பரதனையே மேகவர்ன றெடுத்தணைக்கத்
தாழந்துதம்பி லட்சுமணன் சத்துருக்கன பயமிட
[56]ஏந்திழையு மபயமிட எண்டிசை யயோத்திநகர்
வாழ்ந்தகுடி யானவரும் வந்தபய மிட்டனரே

வந்தபய மிட்டகுரல் வானமட்டும் தான்கேட்கத்
தந்தைசொர்க்க முற்றசெய்தி தானறிந்து முகத்தறைவார்
இந்தப்படி யபயமிட்டு இருபதுநா ழிகையளவும்
மந்திரிமார் முதலாக மலரடியில் விழுந்ததோர்

92.44. பஞ்சவனவாசம் - ஐந்து வனங்கள் சூழ்ந்த இடத்தில் வாசம் புரியும். 92.45. கண்ணன்- இராமன். இளையவன் - இலட்சுமணர். 92.46. வனத்தேகி - காட்டில் சென்று. 92.47. சுகந்த மலர் சனகி - நறுமணம் மிகுந்த மலர்கள் சூடிய ஜானகி. 92.48. தவவேட வடிவு - பரதனின் தவவடிவு. 92.49. சன்னாசி - சன்னியாசி; தவமுனி. 92.50. அவவேடம் - பயனற்ற வேடம். சூது -சூழ்ச்சி. 92.51. இறையவன் - இராமன். 92.56. ஆட்டமுடன் - அசைவுடன். இருக்கையிலே -இராமன் இருக்கும் பொழுதிலே. அடியில்-காலடியில். 92.57. மேகவர்னர்- இராமர். 92.58. அபயமிட - ஓலமிட. 92.64.மலரடி - மலர் போன்ற பாதம்.

56. ஏந்திளையும்

Rama saw at a distance a saintly figure in hermit's garb,.
Wondering if it were a demon in guile;
When he heard the chant, "Obeisances to Siva
And obeisances to Sri."
The moment he heard the pious greeting,
He knew it was Parata who was approaching;
"Did we not leave the kingship
To him when I left the city?
What is this huge cry of thronging people?"
Wondered Rama, when at his feet
Prostrate fell Parata.

PARATA BOWING TO RAMA

Cloud-hued Rama lifted him up
While all of them did cry in grief,
Lakshmaṇa, Catturukkaṇa and Sita,
And all the people of Ayōtti did cry
Which reached the very roof of heaven;
And hearing the news
Of the tragic death of Tacarata
Rama beat his face, and all cried for hours on end.

இராமன் தேற்ற மொழி

அடியில்விழு வாரையெல்லாம் அரிராமன் முகந்திருத்திக்
குடியிலுள்ள சனத்தையெல்லாம் கோவிந்தராமன் திருத்திப்
படியாளப் பரதனுண்டு பதினாலுவ ருடமுற்றால்
வடிவுடனங் கேயடுப்போம் மலைக்கரிது சனமேநீர்

பரதன் அரசாள மறுத்தல்

சனத்தையெல்லாம் ரகுராமன் தயவுசொல்லி மனந்தேற்ற
எனைத்துணையென் றுலகாள இனிப்பரதன் செல்லுமென்ன
உனைப்பிரிந்து உய்வேனோ உலகரசு செய்வேனோ
அனர்த்தமது உனைப்பிரியேன் அடித்துணையாய் நிற்பேனான்

இராமன் பதிலுரை

அடித்துணையென் றிடும்பரதா அன்பெனக்குத் தெரியாதோ
படித்துணையா யுலகாளப் பாரரசு வேண்டாமோ
குடித்தயவாய் நீயிருந்து கோவரசு செய்திடுவாய்
முடித்தகர் மமையருக்கே முன்யான்வந்து முடிப்பேன்

இராமன் பாதரக்ஷை நல்கல்

என்றுபர தாள்வார்க்கு யிருபாத ரக்ஷநல்கிச்
சென்றுநம் மயோத்தியிலே சேர்ந்தரசு செய்யுமென
ஒன்றுகுறை யாதவண்ணம் ஒருபதினா லாண்டுசென்றால்
அன்றுமைக்கா ணாதிருக்கில் அக்கினியில் விழ்வனென்றார்

இராமன் அறிவுரை

அக்கினியில் விழ்வனென்ற அருள்த்துணையென் றம்பியரே
கக்கிசமாய்க் குடியிலொரு காசிறைநீ வாங்காதே

92.65. அரிராமன் - ஸ்ரீராமன். முகந்திருத்தி - முகத்தை மலரும் படி செய்து. 92.67. படியாள - உலகத்தை ஆள. 92.68. வடிவுடன் - அழகாக. மலைக்கரிது - 'திகைக்க வேண்டாம்' என்ற பொருளுடைய மலையாளச் சொல். சனம் - மக்கள். 92.70. செல்லுமென்ன - அயோத்திக்குச் செல்வாயென. 92.72. அனர்த்தமது - தவறான செயலது. அடித்துணையாய் - உன் பாதத்திற்குத் துணையாய்: 92.74. படித்துணையாய் - உலகத்திற்குத் துணையாய். பாரரசு - பேரரசு. 92.75. குடித்தயவாய் - குடி மக்களுக்கு அன்பாய். கோ - அரசன். 92.76. கர்மமையருக்கே - 14 வருடம் தவம் முடித்து அமைந்த பிறகு முடிப்பேன் - கீரீடம் சூடுவேன். 92.77. பாத ரக்ஷ - பாத ரக்ஷை; பாதவணி. 92.80. அக்கினி - நெருப்பு. 92.82. கச்கிசமாய் - வருந்தும் படியாக. குடி - குடி மக்கள். இறை - வரிப்பணம்.

RAMA CONSOLING THEM

Harirāma lifting up the prostrate devotees
Consoled them all; "O, people! there is
Parata to rule over you for fourteen years;
After which we shall be back; grieve not in perplexity".

PARATA REFUSING KINGSHIP

Even as Rakurāma consoled the people telling them
That Parata will henceforth rule in his stead,
Parata declared: "Can I leave you and live?
How can I rule the world in your place?
Great wrong it is; I shall not part from you;
I shall be ever at your feet, your slave and servitor".

RAMA'S REPLY

"O, Parata! Don't I know your love for me?
But should not our country, be ruled by someone?
Rule thou in my place; loving the people as your own;
After fourteen years I shall return,
And accept the crown from you".

RAMA PRESENTING PARATA WITH HIS SANDALS

Thus saying, Rama gave to Parata his sandals twain
Asking him to go and rule in Ayōtti; at which
Parata declared: "If after fourteen years,
I do not see you, the day after,
I shall immolate myself in fire" said he.

RAMA'S ADVICE

To him did Rama thus give advice:
"My brother full of grace;
Do not tax the people beyond their capacity;

அக்குடியா பாரிகள்பால் ஆயிரத்துக் கொருகாசு
சிக்குசுங்கம் வாங்கிநம்மூர்[57] செலவுதர்மஞ் செய்யுமென்றார்

பரதன் அரசாட்சி

செலவுதர்மஞ் செய்யுமென்ற ஸ்ரீராமன் கற்பனையை
நலமெனவே சம்மதித்து நாட்டிலுள்ள சனத்தோடும்
பலவமைச்சர் தம்மோடும் பரதாழ்வார் பதியில்வந்து
உலகளந்தார் பாதம்வைத்து உலகரசு தான்புரிந்தார்

தண்டகாரணிய வனத்தில் மூவரும் இருத்தல்

புரிந்துவர ஸ்ரீராமன் புரிகுழலோ டிளையவரும்
பரிந்துதண்ட காரணிய பருவதத்தி லெழுந்தருளி
விரிந்தசடை தவமுனிவோர் மெய்த்தவத்தோ ரைத்தொழுது
தெரிந்துபன் னகசாலைகட்டித் திகழ்வனத்தில் வீற்றிருந்தார்

வீற்றிருக்க லட்சுமணர் வெகுகனியைக் கொண்டுவந்து
தோத்திரஞ் செய்தடிதொழுது சுவாமிமுன்னே தான்படைக்கக்
காத்திருக்குஞ் சீதையரும் காவலரும் பசியாறிப்
பார்த்திருக்கச் சூர்ப்பனகை பரிசெடுத்துச் செப்புகிறேன்.

சூர்ப்பணகையின் கொட்டம் அடக்குவதாக இராமன் கூறல்

விருத்தம்

93. சூர்ப்பனகை யுபத்திரமும் துட்டரக்கர் தவங்குலைக்க
பார்ப்பதுவுந் தவமுனிவோர் பச்சைமால்க் கறிக்கைசெய்ய

92.83. குடியாபாரிகள் - குடிமக்கள் மற்றும் வியாபாரிகள். 92:84. சிக்கு சுங்கம் - வரி. 92.85. கற்பனையை - கட்டளையை. 92.87. பதி - நாடு. 92.88. உலகளந்தார் பாதம் - உலகத்தை வாமன அவதாரத்தின் போது அளந்த திருமாலின் அவதாரமான இராமர் பாதவணி. 92.89. புரிகுழல் - சீதை. இளையவர் - இலட்சுமணர். 92.90. தண்ட காரணிய(ம்)- தண்டகன் என்ற அரசனால் ஆளப்பட்டு முனிவர் சாபத்தால் மண்மூடி போன வனம். பருவதம் - மலை. 92.92. பன்னக சாலை - பர்ண சாலை; தவமுனிவர்கள் வாழும் சிறுகுடில். 92.94. தோத்திரம் - பல புகழ் மொழிகள். சுவாமி - தசரதன். 92.95. காவலர் - இராமன். 92.96. பரிசெடுத்து - செயலெடுத்து. 93.1. உபத்திரம் - தொந்திரவு. 93.2. பச்சைமால் - திருமால். அறிக்கை - வேண்டுதல்.

57. செலைவுதற்மஞ்

From the traders and merchants take
One coin in a thousand as tax,
Wherewith to perform Dharma
And meet the expenses of administration.
And Parata accepting the order of Rama and his advice,
Returned to Ayōtti with the ministers and others,
And enthroning reverentially the sandals
Of Him who measured the earth with a single step,
Began his surrogate rule of Ayōtti.

THE SOJOURN OF THE THREE IN TAṆṬAKĀRAṆYAM

Sri Rama with his beloved spouse and younger brother,
Stayed on in a hillside in Taṇṭake forest,
Offering obeisances to sages with matted locks and holy men,
In a hermitage built by Lakshmaṇa in the forest.
And Lakshmaṇa did bring many a fruit from the wood
Offering them with prayers at the feet of his Lord;
Wherewith Sita and Rama sated their hunger.
And now I shall begin to relate
The episode of Cūrppaṇakai.

RAMA PROMISING TO PUT DOWN CŪRPPAṆAKAI'S ATROCITIES

93. When the sages reported to greet-hued Rama
About the harassment and troubles from the demons vile,

ஆர்ப்பரித்து தாடகைபோல் அரக்கருயிர் களைந்துங்களைக்
கார்ப்பதுநா மஞ்சல்தண்ட காரணியரே எனச்செப்பினார்.

சூர்ப்பணகையின் மகன் விராதன் தவம்

சிந்து

94. செபம்வென்ற கொங்கை மங்கை தேன்மொழி கைகேசி வார்த்தை
தப்பாம லெங்கள் ரகுராமன் தண்டக வனத்திலி ருந்தாரே
அப்படி யிருக்கை யிலே ஆழிசூழ் மூதூரி லங்கை
ஒப்பமுள்ள ராவணற்குத் தங்கை உகந்தகண வன்வெலத்தில் சிங்கன்
வெலத்தில் சிங்க னிடத்தில் வேதனை ராவணன் செய்து
தர்க்க மிட்டவனி றந்ததாலே தாக்குடைய சூர்ப்பனகை பாலன்
மிக்கதோர் வனத்தில் வந்து வேண்டிய தவம் புரிந்து
தக்கமந்திர வாளொன்று கைக்கொண்டு தந்தைபழி மீட்பெனென்று நின்றான்

இராமன் விராதனை மடித்தல்

நின்றபெருங் காவனத்தில் நீலவர்னரோடு தம்மை
அன்றிளைய மன்னர் வரும்போது
    ஆனகுல வாளரக்கன் கண்டான்
சென்று மன்னரை வளைந்து செருஞ்செய் துசம ராடி
நின்று பொரக்கண்டு ரகுராமன்
    நெருக்கிச் சமர்பொருது கொன்றான்
பொருதவர் பாதைவழி போகின்ற நேரத்திலே
விருது சொல்லி வாதுகேட்டு வந்தான்
    வீரன் விராதன வரக்கன்

93.3. தாடகை - தாடகை என்ற அரக்கியைப் போல. 93.4. கார்ப்பது - அரக்கர் துன்பங்களிலிருந்து காப்பது. நாம் - 'நாம்' என்பது இராமர். அஞ்சல் - அஞ்சாதே. 94.1. செபம் வென்ற - வரங்கள் இரண்டும் கேட்டு வென்ற. 94.3. ஆழிசூழ் - கடலால் சூழப்பட்ட. மூதூர் - பழமையான ஊர். 94.4. ராவணற்குத் தங்கை - இலங்கை வேந்தனாகிய இராவணன் தங்கை; சூர்ப்பநகை. வெலத்தின் சிங்கன் - இராவணன் தங்கை சூர்ப்பநகையின் கணவன் பெயர். 94.5. வேதனை - துன்பம். 94.6. தர்க்கமிட்டு - வாதம் செய்து. அவன் - சூர்ப்பநகை கணவன். தாக்குடைய - தன் தந்தை இறந்ததால் மனம் வருத்தம் கொண்ட. பாலன் - சூர்ப்பனகை மகனாகிய சம்பு. 94.8. தந்தைபழி மீட்பேன் - தந்தையைக் கொன்ற இராவணனை அழிப்பேன். 94.9. இளைய மன்னர் - இலட்சுமணர். வாளரக்கன் - சூர்ப்பநகை மகனான சம்பு. 94.11. செரு, சமர் - போர். பொர - போர் செய்ய. 94.12. அவர் - இராமர். விருது சொல்லி - தன் பராக்கிரமங்களைக் கூறி. வாது கேட்டு - சண்டை செய்யும் ஓசையைக் கேட்டு; இராமன் சம்புவோடு செய்யும் போரோசைக் கேட்டு. விராதன அரக்கன் - ஆரணிய வனத்தில் உறையும் ஓர் அரக்கன்; தேவர்கள் சாபத்தால் அரக்கனாய்ப் பிறந்தவன்.

Rama declared that he will take the lives of Tāṭakai
And her tribe and save them without delay.

94. Our Rakurāma stayed thus in Taṉṭaka forest,
Faithfully keeping his plighted word to Kaikēyi,
(Who had won boons from the emperor);
While at Lañka engirt by the sea,
The matchless Rāvaṇa in an altercation,
With his sister's husband by name Ciṅkaṉ, slew him.
Grieving, Cūrppaṉakai's son Campu did perform tapas,
And got a magic sword to avenge his father's death.

RAMA'S SLAYING VIRĀTAṈ

While in the forest Lakshmaṇa moved about
With his blue-hued elder, they were seen
By Campu with a magic sword
And in the battle Rakurāma closed in with him and slew him.
As they continued, along their way
Hearing the noise of the battle,
Came there, the demon Virātaṉ, who challenged them

கருதிவந்த செய்திகண்டு காதலி நடுநடுங்கித்
திருமாலம் பேத்தி சிலைபூட்ட
சிறிய விராதன் பட்டானே
பட்டவன் விழுந்தபின்பு பச்சைமாலுடன் திரும்பி
சட்டமாய் மிருகம் விளையாடும்
சரபங்கர் சோலைவளம் பார்த்தார்

கசன் வதம்

வட்டவிராதன் பட்டமறுக்கத் திலந்த கசன்
துட்டனொரு வல்ல ரக்கன் வந்து
சூர மன்னவரை மறித்தானே 15
மறித்தவன் வந்துபொர மாலும்வரி வில்லெடுத்து
அறுக்கணை யொன்று தொடுத்தாரே
அந்தகசன் பட்டு விழுந்தானே

சப்தரிஷிமார் வனத்திற்கு மூவரும் வருதல்

குறித்தவனங் கடந்து குங்கிலியச் சோலைகண்டு
நெறித்தவ சப்த ரிக்ஷிமார்கள்
நிறைந்த வனத்தினில் வந்தாரே
நிறைந்த வனத்தில்வந்து ரிஷிமுதலோரைக் கண்டு
உறைந்திட வந்த முனிவோர்கள்
உத்தமனே நீங்களாரு வென்றார்
பறைந்த கைகேசிசொல்லைப் பழுதென்று தசரதன்
குறைந்துயிர் போக அவர்பாலர்
குழந்தைகள் நாங்களென்று கூற

94.13. காதலி - சீதை. அம்பேத்தி - அம்பை வில்லில் தொடுத்து. சிலை - வில். பட்டானே- இறந்தானே. 94.14. சரபங்கர் - தண்டகாரணியத்தில் வாழுகின்ற ஒரு முனிவர். 94.15. வட்ட விராதன் - பெரிய விராதன் என்னும் அரக்கன். பட்டமறுக்கத்தில் - மடிந்து விழுமிடத்தில். அந்த கசன் - ஓர் அரக்கன். சூரமன்னவரை - வீரமுள்ள மன்னவரை; இராமனை. 94.16. அறுகுகணை - புலிப்போல் பாய்ந்து செல்லும் அம்பு. 94.17. குங்கிலிய சோலை - 'குங்கிலியம்' என்னும் மரவகை நிறைந்த சோலை. சப்த ரிஷிமார் - ஏழு தவமுனிகள். 94.18. உறைந்திட வந்த - வனத்தில் நிலைப்பெற்று வாழ்ந்து வந்த. 94.19. பறைந்த - 'கூறிய' என்ற பொருளிலமைந்த மலையாள மொழிச் சொல். பழுதென்று - குற்றமென்று. பாலர் - குழந்தைகள்.

Proclaiming his prowess, which hearing,
Rama's beloved, trembled in fear:
But Rama bent his bow, and fixed his dart
And Virātaṉ died in a trice.
After his fall, the Lord turned back
And entered the grove of sage Carapaṅka,
Where the birds and beasts were at play.

THE DEATH OF ANTAKACAṈ

Soon after the slaying of Virātaṉ
Near the plaçe where he fell dead
A wicked woman strong, by name Antakacaṉ
Blocked their way and challenged them.
And the Lord bending his well-lined bow,
Shot an arrow fierce as a tiger,
And that was the end of Antakacaṉ.

THE THREE COMING TO THE GROVE OF THE SEVEN SAGES

Passing the wood they came to a grove,
Where grew frankincense trees;
Where seven sages famed for their righteous askesis
Resided; and the hermits and the sages, all asked them;
"Noble sirs, who may you be?"
"We are the children of king Tacarata
Who lost his life,
Consequent on the grant of boons by him to Kaikēyi".

மூவரையும் ரிஷிகள் வரவேற்றல்

கூறுந் தசரதர்க்குக் குழந்தைகாள் வாருமென்று
தேறும் படியாசிர் வாதஞ்செப்பி
செப்பியவர் நட்புட னிருத்தி
ஏறும் பெலத்திலரக்கர் எங்கள் தவசையுலைத்து
வீறும் பலாநடத்தி வாரார்
மேகவர்னரே தவிர்க்க வேணும்
வேணுமிந்த ராக்ஷசரை வேரறுக்க வென்றுசொல்லிக்
காணும்படி யும்மைக் கொடுத்தோம்
காவலர் தசரதற்குத் தாமே

ரிஷிகள் தவமழிக்கும் அரக்கரைக் கொல்ல படை கொடுத்தல்

ஆணவஞ் செய்யுமிந்த அரக்கரைச் சங்கரித்து
பூணும்படி யும்மைக் காண நாங்கள்
போதவே தவசு செய்திட்டோமே
தபசுசெய் மகிமைகொண்டு தாமோதரா யிங்குவந்தீர்
அவஞ்செய்யும் ராக்ஷதரைக் கொல்ல
ஆயுதப்படை தருவோ மென்றார்
சிவஞ்செய்யு மாமுனிவர் தேவர்ரிஷி மாதவர்கள்
பவஞ்செய்யும் ராக்ஷசரைக் கொல்ல
படைவெகு கோடி கொடுத்தாரே.

சடாயுவுக்கு இராமர் அறிமுகமாதலும் சடாயு உரையும்

விருத்தம்

95. கொடுத்திடவே ரெகுராமன் வார போது
கூண்டமுனி சடாயுகண்டு கோவே நீங்கள்
அடுத்ததென்ன ஆர்புதல்வ ரென்று கேட்க
அயோத்தியில்வாழ் தசரதற்குப் பால ரென்ன

94.21. பெலத்தில் - வலிமையில். உலைத்து - இல்லாமல் செய்து. வீறும்பலா - வெறுப்புடன் வம்புகள். 94.22. வேரறுக்க - பூண்டோடு அழிக்க. உம்மைக் கொடுத்தோம்- இராமரே! உம்மை மகனாகப் பிறக்கும்படி தசரதற்கு அருள் செய்தோம். 94.24. தாமோதரா- இராமரே. அவஞ் செய்யும் - துன்பம் செய்யும். 94.25. சிவஞ் செய்யும் - சிவனை நோக்கித் தவஞ் செய்யும். பவஞ் செய்யும் - துன்பம் செய்யும். 95.1. வார போது - வருகிற பொழுது. கூண்ட முனி சடாயு - தவத்தில் சிறந்த முனியாகிய சடாயு. 95.2. அடுத்ததென்ன - காட்டிற்கு வந்த காரணமென்ன? ஆர் - யார்.

THE SAGES WELCOMING THE THREE

"Welcome, O children of Tacarata!
Our benisons be upon you!" they said,
And seating them with loving kindness
They made a plea to Rama thus:
"The ever-present demons disturb our Tapas
And harass us in many a way;
Cloud-hued Lord! You alone can protect us
By rooting out these evil demons.
It is for this purpose that we caused
You to be born as the son of Tacarata".

THE SAGES GIVING RAMA WEAPONS TO DESTROY DEMONS

"We have been performing askesis
Only to see you: destroy the arrogant demons;
It is our tapas that has brought you here,
Tamōtara! we will give you now weapons divine
To slay the malignant fiends", and so saying
The great sages, devas and gods, gave myriads of weapons
To Sri Rama, to destroy the sinful demons.

THE MEETING WITH CAṬĀYU

95. Receiving these divine weapons
As Rama proceeded on his way
Sage Caṭāyu meeting them, hailed them thus:
"O princes! what brought you here in this wood?
Whose sons may you be?".
"We are the children of Tacarata of Ayōtti"

தொடுத்தவேந்தன் தமையன்மக்கள் நீங்க ளாகும்
துணைவன்மக்க ளானதினால் சுகமே நீங்கள்
மடுச்சிறந்த புவனத்தில் வாசஞ் செய்து
மகிழ்ச்சையுடன் செல்வீர்தா ரணிக்கே யென்றார்.

இராமன் அகத்தியரைக் காணுதல்

தாரணியில் தவமுனியும் வரங்க ளீந்து
சதாகோடி படைகள்நல்கி தய்வ தாக
ஆரணஞ்சேர் தவமழிக்கத் துணியுந் தோசி
அரக்கருபத் திரந்தீர்க்க அடுத்த தாலே
நாரணஞ்சேர் பஞ்சவர்ண ஆற்றில் சென்று
நதியாடிப் பொதிகையகத் தியரைக் கண்டு
பூரணமாய்ப் பகையைவென்று அயோத்தி புக்கி
புவிவாழ்வ ரென்றுவரம் புகழ்ந்திட் டாரே.

தனன னன்ன தனன னனன தன்ன னன்னனா மெட்டு

நொண்டிச் சிந்து

96. புகழ்ந்த முனிவர் பதம் - போற்றி ஏற்றிப்
பூபதியிளைய வரும்பொன் னனையாரும்
மகத்துவ முள்ள பஞ்ச - வர்ன நதியில்
வந்துதீர்த்த மாடிமலர் சிந்திப்பூசித்து
பூசை சிவபூசை செய்துமே - பசி யாறியே
பொதிகை அகத்தியர் பொருப்பிற் செல்லவே
வாச மணவா ளமுனி - வனங் கடந்து
மந்திர மயேந்திரமுனி வனங்கடந்து

94.23 தமையன் மக்கள் - தசரத ராசனாம் எனது அண்ணன் குழந்தைகள் நீங்கள் என சடாயு கூறுதல். சடாயு தண்டகாரணிய வனத்தில் ஒரு முறை தசரதன் உயிரை காத்ததால் அன்று முதல் தசரதனுக்குத் தம்பி முறையாகினார். 95.4. மடு சிறந்த - குளம் நிரம்பிய. புவனம் - உலகம். தாரணி - நாடு. 95.5. தயவதாக - இரக்கத்துடன். 95.6. ஆரணம் - வேதம். தோசி - பாவி. உபத்திரம் - தொந்தரவு; இடையூறு. அடுத்ததாலே - நெருங்கியதாலே. 95.7. நாரணஞ் சேர் பஞ்சவர்ண ஆறு - நாராயணனாகிய இராமன் சேரும் பஞ்சவர்ண ஆறு. பொதிகை - பொதிகை மலை. அகத்தியர் - ஒரு தவமுனி; தமிழ் சித்தர்களுள் முதன்மையாளராகக் கருதப்படுபவர். 95.8. பகையை வென்று - இராவணர் போன்ற அரக்கர்களைக் வென்று. புக்கி - சென்றடைந்து. புகழ்ந்திட்டாரே - மனமகிழ்ச்சியுடன் வழங்கினாரே. 96.1. பூபதி - அரசனாம் இராமன். இளையவர் - இலட்சுமணர். பொன்னனையார் - பொன் போன்ற நிறமுடையாள்; சீதை. 96.2. மகத்துவம் - மேன்மை. 96.3. பொருப்பு - மலை. 96.4. வாச மணவாளமுனி - அகத்தியர். மயேந்திரமுனி - ஒரு முனி.

"You are my brother's sons; welcome!
You can stay here in this wood with goodly pools
And go back in time to your land" said the giant bird.

RAMA MEETING AKATTIYAR

Receiving boons and weapons from the sages,
Rama bent upon retrieving their distress
Went forward till he reached the [93] Pañcavarṇa river;
And after bathing therein, met the sage Akattiyar,
Who blessed them that he may conquer his foes,
And return to Ayōtti to live in glory everafter,

96. Praising the feet of the holy sage,
Our Lore, his younger, and the golden damsel
After bathing in the Pañcavarṇa river, performed
Siva worship, strewing fresh flowers;
And sating their hunger went towards the hill
Of sage Akattiyar, where lived many a seer divine,

93. Pañcavarṇa - Perhaps the Tāmiraparaṇi river.

மந்திர முனிதந் திரமுனி - சம்மந் தமுனி
மச்சமுனி ரோமமுனி கொங்கணமுனி
இந்திர னிறைஞ்சு முனி - வணங் கடந்து
இவர்பொருட் டாலனேக வரங்கள்பெறு
வரம்பெறு கும்ப முனி - பொதிகை வெற்பில்
வந்துகண்ட கத்தியரைத் தெண்டனிட்டார்கள்

அகத்தியரிடம் இராமன் உரையாடுதல்

பரம பரமனான குறு - முனி யுரைப்பார்
பார்மன்னன் தசரத பாலகரென்றார்
பாலகனான் அயோத்தி யாம் - பாரர சாளும்
பதமன்னரான தசரத முன்னர்க்கே
சீலமுள்ள புத்திர னென்பேர் - ஸ்ரீராமன்
சீதையிவன் காதலிசிறுவன் தம்பியாம்
தம்பி பரதனை யீன்ற - தாயே கைகேசி
தாயுரை தப்பாமல் வனவாசம் புகுந்தோம்
கும்பமுனி நாதா வுனை - காண வேண்டியே
கோடாகோடித் தவப்பேறு கொண்டேமே நாங்கள்
நாங்களிது வரையிற் செய்த - பாவந் தவிர்ந்தோம்
நல்லவரந் தந்தெங்களை ரெக்ஷிப்பீரே

இராமன் புகழை அகத்தியர் எடுத்தியம்பல்

தாங்களிது சொல்லக் கும்ப - முனி யுரைப்பார்
தாமோதர வைகுண்டாதி ராமசந்திராநீ
ராமஜெயம் ராம ஜெயம் - எனத் துதித்தே
நற்சரா சரங்களுயிர் பெற்றிருப்பதே
ஓம வேள்வி யாகத்துக்கும் - ராமனே துணை
உத்தமர்க்கும் பத்தருக்கும் ராமனே துணை

96.5.6. மந்திர முனி, தந்திர முனி, சம்மந்த முனி, மச்சமனி, ரோமமுனி, கொங்கண முனி, இந்திரனிறைஞ்சு முனி - பொதிகைமலை மற்றும் அதனைச் சுற்றி வாழும் முனிவர்கள் சிலரின் பெயர்கள். 96.7. கும்பமுனி - அகத்தியர். தெண்டனிட்டார் - அடிபணிந்தார். 96.8. பரமபரமனான குறுமுனி - மேன்மையான ஞானம் கைவரப்பெற்ற அகத்தியர். 96.13. ரெக்ஷிப்பீரே - பாதுகாத்து அருள்வீரே. 96.14. தாமோதர - திருமால். வைகுண்டாதி ராமசந்திரா - வைகுண்டத்தில் உறையும் திருமால். 96.15. ராம ஜெயம் - ராம நாமம்; வெற்றி தரும் நாமம். சராசரங்கள் - அண்டங்கள்; பிரபஞ்சம். 96.16. ஓம வேள்வி - ஒரு யாகம்; ஒருபொருட் பன்மொழி.

Besides; to wit; sages Mantira, Mayēntira, Tantira,
Cammanta, Macca, Nēma and Konkaṇa.
Passing the groves where the sages resided,
They reached Potikai hill
Where the great [94] Pot-sage lived
And prostrated before him.

AKATTIYAR CONVERSES WITH RAMA

Thus Rama spake; "I am the son of Tacarata of Ayōtti
Sri Rama, my name; this is my wife Sita
And the youngster, my younger brother Lakshmaṇa.
She who yearned my brother Parata, my step-mother Kaikēyi,
Asked for my exile and in obedience to her
We came to live in the forest. O Master!
To meet you, we must have performed askesis for aeons!
All our sins so far done,
Have been wiped away by your presence
Protect us with your goodly boons".

AKATTIYAR SINGING THE PRAISE OF RAMA

Hearing Rama's words, the Pot-sage said:
"Lord Ramachandra! you are Tāmōtara of Vaikuṇṭa!
All the creatures of the world live only
By chanting your name, that confers victory;
You are the support of all those who perform
Sacrifices and yagnas: Rama, you are the help
Of all noble souls and devotees

94. Pot-sage - Akattiyar, said to have been born in a pot.

பத்தரிலே பாவல ருக்கும் - ராமனே துணை
பாரரசர் ராமனுக்கும் ராமனே துணை

சப்த ரிஷி மாதவர்க்கும் - ராமனே துணை
சகல புவனத்துக்கும் ராமனே துணை
புவனத்தில் சர மென்றும் - சராசர மென்றும்
பொருந்து சுருதிமறை சாத்திர மென்றும்
அவனன்றித் தேக மில்லை - லோகமு மில்லை
ஆதி நாராயண னேநீ ஸ்ரீராமன்

நீவர யான்செய்த துமெத்த - கோடி தவமோ
நீள்வனங்கள் செய்தது யெக்கோடித் தவமோ
மாய யிரணியனை - கொன்ற சிங்கமே
வல்லரக்கரைச் செயிக்க வந்த சிங்கமே
வந்ததிலே பேத கமிலை - மாத வருக்கோ
வானவர்க் குமுள்ள துயர்தீரு முள்ளதே

அகத்தியர் இராமனுக்கு வரங்கள் ஈதல்

இந்தமுறை கும்ப முனி - வாழ்த்திச் சொல்லவே
எம்பெருமான் அன்புகொண்டு சிந்தை மெய்க்கவே
சிந்தை மெய்க்க கும்பமுனி - வரங் கொடுத்துச்
சிறப்புட னிவ்வனத் திருப்பீ ரென்றார்

மந்தாகினி வனத்தின் மகிமை

மந்தா கினிஎன்ற தீர்த்தம் - உள்ள வனத்தில்
வானவர்கள் தானவர் வசிக்கும் வனத்தில்
வணங்கண் டதியங்கள் - பார்க்கும் பொழுது
மயிலினங்கள் கூத்தாட [58]குயில்கள் பாடுமாம்

96.17. பத்தரிலே - பக்தர்களிலே. பாவலர் - புலவர். பாரரசர் - உலகை ஆளும் அரசர். 96.18. சப்தரிஷி - ஏழு முனிவர்கள். 96.19. சரம். அசையும் பொருள். சராசரம் - அசையா பொருள். சுருதி - மந்திரம். மறை - வேதம். 96.20. லோகம் - உலகம். 96.21. எக்கோடி - எவ்வளவு கோடி. 96.22. மாய யிரணியனைக் கொன்ற சிங்கமே - நரசிங்க அவதாரமெடுத்து இரணியனை அழித்தவனே. 96.23. பேதகமில்லை - குறைபாடு இல்லை. மாதவர் - முனி. வானவர் - தேவர். 96.26. மந்தாகினி என்ற தீர்த்தம் - தேவ கங்கை பொதிகையில் ஓடுவதான ஐதீகம் பற்றி இத்தீர்த்தம் இங்குள்ளதாக அகத்தியர் உரைத்தார்.

58. குமிகள்

And among them are bards and even rulers!
You, O Rama are their only support!
O Rama, you are the prop, to the sages seven!
Aye, for all the universes too;
And all things moving and unmoving
Draw their sustenance only from you!
No world, nor Vēdas, nor scriptures,
Without Rama, Primal Nārāyaṇa!
Myriad years of askesis must I have performed
For you to come to me! what tapas
Did these broad woods do, to have you in their midst?
O you, who slew guileful Hiraṇiaṉ! Lion Supreme
Who came to conquer the mighty demons!
Right it is that you have come, and proper;
Gone are the travails of the sages and devas!
Hailing Lord Rama thus, the Pot-sage
Blessed him with many a boon in loving kindness,
And bade them sojourn happily in the forest.

THE GREATNESS OF MANTĀKIṆI WOOD

In the wood where flowed the holy stream
Mantākiṉi by name, where sages and celestials dwelt,
The three stayed happily while all round them,
Musters of peacocks danced and the kuyils warbled;

கனங்கொண்ட தும்பித்திரள் - காட்டி லோடுமாம்
    கரடிபுலி கடுவாய் மிருகம் வாழுமாம்
வாழைகள் பழுத்திடவே - வருக்கை பழுக்க
    மதுவென்ற தேனு னடந்ததில் மிதக்க
வேளையில் மந்தி குரங்கு - குதிபாய
    வெள்ளைப்புள்ளி மான்கலைகள் துள்ளிச் சாட
தாழை யிருபூகம் - செண்பக மலருடனே
    சங்கையுள்ள கொங்கு நாங்கும் பண்பாய் வளர
பாளை மலர்சிவனுக் - கர்ச்சனை யாகப்
    பச்சைமாலு மிச்சைகொண்டு பார்த்து மகிழ்ந்தார்
பார்த்தங்கு லட்சுமணரும் - பைந்தொடி யாளும்
    பரிபூரணங் களாக அரிமகிழ
எத்தங்குச் சூதான மாகப் - பன்னக சாலை
    இடங்கண்டு கந்துரா மனினி திருந்தார்.

மந்தாகினி வனத்தில் மூவரும் இருத்தல்

விருத்தம்

97. இனிதிருக்க ரகுராமன் சீதை யோடே
    இசைந்திருக்க இளையவர்தான் வனத்தி லேகிக்
கனிபறித்துக் கொடுவந்து அடியிறையாய் வைக்கக்
    காதலியுஞ் சீதரனுங் கருணை கூர்ந்து
தனியிருப்பா ரிப்படியீ ரையாண் டாகத்
    தவம்புரிந்து வனவாசம் சாரும் நாளில்
தொனிபெறவில்த் திறசிங்கன் பாலன் போய்நற்
    றுணையானி னருகிளையோன் தோன்றினானே.

96.28. கனங் கொண்ட தும்பி - வலிமை மிகப் பெற்ற யானை. கரடி, புலி, கடுவாய் - சில விலங்குகளின் பெயர்கள். 96.29. வருக்கை - பலா மரத்தில் உயர்ந்த சாதி வகை பழம். 96.30. மந்தி - பெண் குரங்கு. 96.31. தாழை, இருபூகம், செண்பகம் - மலர் வகைகள். சங்கையுள்ள - கனம் நிரம்பிய. கொங்கு, நாங்கு - மரங்களின் பெயர்கள். 96.32. பாளை மலர்- தென்னை மரத்தின் பூவை மூடிய பாளையோடு கூடிய மலர். 96.33. அரி - திருமாலாகிய இராமன். சூதானமாக - பாதுகாப்பாக. 96.34. கந்து ராமன் - உடம்பினின்றும் நறுமணம் வீசும் ராமன். 97.2. அடியிறையாய் - பாதத்தடியில். காதலி - சீதை. சீதரன் - இராமன். 97.3. ஈரையாண்டாக - பத்து ஆண்டுகளாக. 97.4. தொனி - ஓசை. சிங்கன் பாலன்- சூர்ப்பநகையின் மைந்தன். நற்துணையான் - இராமனுக்கு நல்ல துணைவன்; இலட்சுமணன். இளையோன் - சிங்கன்பாலன்.

Thick swarms of bees buzzed about; while
Bears and tigers, pards and ounces, lived in joy.
Plantain and jack. ripened on their stems;
While honey from the broken hives spilled out in rills,
As the female monkey leaped about among the branches
And white-spotted dear gambolled about;
Screwpine and Campak and [95]*Irupōkam* bloomed;
Sturdy *Koṅku* and [96]*Nāṅku* grew tall and lofty;
The *Pālai* flower dear to Siva blossomed all over;
All these the jasper-hued,
Saw with pleasure and rejoiced, as also,
Lakshmaṇa and Sita adorned with golden bracelets!
Fragrant Rama stayed there in the lovely wood,
In a hermitage built for their safe sojourn.

97. As Rakurāma stayed with Sita happily in the hut,
The younger brother would go forth into the wood,
And plucking fruits place them before their feet,
As his loving offering for the day.
While Sridara and Sita graciously accepted them;
Thus they lived in harmony for twice-five years
Performing tapas; when on a certain day
Ciṅkaṉ Pālan, son of Cūrppaṉakai came there
Before young Lakshmaṇa, with a boisterous noise.

95. *Irupōkam* - A flower.
96. *Nāṅku* - A tree.

மந்திரவாள் இலட்சுமணனை நோக்கி வருதல்

நடை

98. இளையவர் தானவ் வனத்தில் இனிதா னகனி பார்த்துப்
பழைய கனிகாய் பறித்துப் படர்ந்தா லினருகு சென்று
வளைய மிட்டு நிற்கையிலே வான மதின்மீதி ருந்து
குளையும் மந்திர வாள்வாற குறிப்பறிந் தானிளை யோனும்

வாளை இலட்சுமணன் பெறுதல்

அறிந்தா லின்மீ தேறி அவர்கரங் கொண்டேந் துகையால்
பிறிந்து மந்த மந்திரவாள் பின்வா னந்தனிற் புகுந்து
அறிந்தா லினிருவர் கையி லார்கரத்தி லிருக்க வென்ன
மறிந்த வகைகேட்க வந்தேன் மாதவ ரேயெனக் கேட்க

மாதவ தெய்வேந் திரனும் வலுவுடனே நெடிய கையில்
நீதரித் தங்கிரு வெனவே நீளமந்திர வாளும் வந்து
பூதலத் தில்லட் சுமணர் பொற்க ரத்தி லேறியதே
வேத மந்திரவாள் பிடித்து வெகுண்டி ளையோன் கீழிறங்கி

வாள் கொண்டு ஆல மரத்தை வெட்டுதல்

கீழி றங்கி லட்சுமணர் கிட்டிய வாள்கூர்மை கண்டு
சூழ மந்த ஆலைவெட்ட சூர்ப்பனகை மகனும் பட்டான்
விழு மந்த வல்லரக்கன் வெங்கு ருதிபுன லாறாய்
வாழு மந்த வல்லரக்கர் வாய லறும்குரல் முழங்க

ஆலமரத்துக்குளிருந்து இரத்தம் வடிதல்

முழங்கு சத்தந்தனைக் கேட்டு முகிலிளை யோன்மன துழன்று
களங்கம் வைத்து இவனாரோ காவலரோரா கூஷதரோ

98.2. ஆல் - ஆலமரம். 98.3. வளையமிட்டு - வட்டமிட்டு 98.4. குளையும் - விரையும். வாற- வருகிற. இளையோன் - இலட்சுமணன். 98.5. அவர் - இலட்சுமணர். 98.6. பிறிந்தும் - மீண்டும். 98.7. ஆலினிருவர் கையில் - ஆலமரத்தின் அருகிலிருக்கும் இலட்சுமணர் மற்றும் அம்மரத்திலேயே உறைகின்ற சூர்ப்பநகை மகன் சிங்கன்பாலன். 98.8. மாதவர் - இந்திரன். 98.9. நெடிய கையில் - நெடியவனாம் இலட்சுமணன் கையில். 98.10. தரித்து - சேர்ந்து. 98.12. வெகுண்டு - சினந்து. கீழிறங்கி - ஆலமரத்திலிருந்து கீழிறங்கி. 98.14. ஆலை வெட்ட சூர்ப்பனகை மகனும் பட்டான் - ஆலமரத்தை இலட்சுமணன் வெட்டியதால் அம்மரத்தில் உறைந்த சூர்ப்பநகை மகனான சிங்கன் பாலன் இறந்தான். 98.15. வல்லரக்கன் - கொடிய அரக்கன். 98.17. முகிலிளையோன் - முகில்வர்ண நிறத்தையடைய இராமன் தம்பி; இலட்சுமணன். 98.18. களங்கம் வைத்து - குற்றம் வைத்து. காவலரோ - அரசரோ.

THE MAGIC SWORD COMING TOWARDS LAKSHMAṆA

98. As Lakshmaṇa roamed the wood in search of sweet fruit
For his Lord, he came near a spreading banyan tree;
Going round it, he saw there on high,
A magic sword speeding towards him;
Which he clutched with his hands to hold it,
When it went back into the sky; when the same asked
Intira, to whom it belonged, Teventra replied:
"You stay in the hands of noble Lakshmaṇa!"
And accordingly it rested in his hands.
Wielding the magic sword, Lakshmaṇa angrily slashed
At the banyan tree and cut it down,
While the blood of the demon living within
Poured out a crimson river;
And the hideous voice of Cūrppaṇakai's son,
Cried out in mortal agony.
On hearing which Lakshmaṇa grew agitated,
Not knowing, what may be residing within the tree:

இளங்கு குருதி புனலாறாய் எடுத்த் தென்ன மாயமிதோ
விளங்கு மண்ணரி டத்தினிலே விளம்புவோ மென்றோடி வந்தார்

இராமன் வினவ இலக்குவணன் நடந்ததைக்கூறல்

ஓடிவந்து மாயரிடம் உவந்துமல ரடிதொழவே
வாடியுந்தன் கமலமுக மலங்குவதேன் தம்பியரே
நாடியுந்தன் மேனியெல்லாம் ரத்தமென்ன தம்பியரே
மோடிசெய்யும் ராக்ஷதர்கள் மொய்வனத்தி லெதிர்த்ததுண்டோ

எதிர்த்தவனா ரென்றுசொல்லி எம்பெருமாள் தர்க்கிக்கவே
பதுக்கநின் றங்கடி தொழுதுபகர்ந் திடுவா னிளையோனும்
மதுப்பொழிபூங் காவனத்தில் வளம்பார்த்து வருகையிலே
அதுக்குள்நின்ற ஆலமரத்தில் அந்தரத்தி லேயிருந்து

அந்தரத்தின் மேலிருந்தோர் மந்திரவாள் வரவேகண்டேன்
மந்திரவா ளைப்பிடித்தேன் வாளினுட கூர்மைகண்டேன்
அந்தமந்திர வாளாலே ஆலமரத்தை வெட்டிவிட்டேன்
சிந்திரத்தம் பாயக்கண்டேன் சேர்ந்தொருவ னறைக்கண்டேன்

கண்டதெல்லா முரைத்திடவே கருதிவந்தே னுங்களிடம்
மண்டலத்தில் மானிடரோ மாதவரோ முனிவர்களோ
துண்டமதா யலறினது துற்சனராம் ராக்ஷசரோ
கண்டறிவோ மென்றுசொல்லிக் கண்ணர்தம்பி தனைத்தேற்ற

சூர்ப்பணகை மகனுக்கு உணவு கொண்டு வருதல்

தேற்றமுட னவரிருக்க சேற்றரக்க னலறுசத்தம்
ஆற்றகுரல் தனைக்கேட்டு ஆர்ப்பரித்துச் சூர்ப்பனகை

98.19. இளங்கு - இளகி வடிகின்ற. 98.20. அண்ணர் - இராமர். விளம்புவோம் - கூறுவோம். 98.21. மாயர் - திருமால்; இராமன். உவந்து - மகிழ்ந்து. 98.22. கமல முகம் - தாமரை போன்ற முகம். மலங்குவதேன் - கலங்குவதேன். 98.23. மோடி - மந்திரம் மாயம் போன்றவற்றைச் செய்யும் வித்தை. மொய்வனத்திலே - பெருமைக்குரிய வனத்திலே. எதிர்த்ததுண்டோ - உன்னைப் போருக்கு அழைத்தார்களா. 98.25. எம்பெருமாள் - இராமன். தர்க்கிக்கவே - கேட்கவே. 98.26. பதுங்கநின்று - பணிவாய் நின்று. அடி - பாதம். பகர்ந்திடுவான் - கூறிடுவான். 98.27. மதுபொழி பூங்காவனம் - தேன் சொட்டுகின்ற மலர்வனம். 98.28. அந்தரம் - வானம். 98.30. வாளினுட - வாளின். 98.34. மண்டலத்தில் - பூமியில். 98.35. துண்டமதாய் - உடல் துண்டுபட்டவராய். துற்சனர் - துர்ச் செய்கையுடைய ராக்ஷசர்கள். 98.36. கண்ணர் - இராமர். 98.37. அவரிருக்க - இராமரும் இலட்சுமணரும் இருக்க. சேற்றரக்கன் - இனிய அரக்கன்; சூர்ப்பநகையின் மகனாதலால் அரக்கன் இனியவனானான். 98.38. ஆற்றகுரல் - வலிமையான குரல்.

"Ruler or demon, whose may be this river of blood?
What black magic is this?
Let me run up to my Lord and report it to him".
And accordingly he rushed to Rama and bowed at his feet:
"Why is your face so clouded. my brother?
Why so much blood all over you? Did any wily demon
Oppose you in the wood?
Who was it who dared to fight with you?"
Respectfully, with folded hands, Lakshmaṇa replied:
"As I went round the melliferous wood
From the banyan tree, a magic sword came towards me!
Which I seized; and with its sharp edge
I cut down the banyan tree; whereupon
Blood poured out of it, while one cried
Fearfully from within the tree.
I rushed up to you to tell you this."
"Do not worry, let us see who on earth cried like that;
Humans or celestials or sages or evil fiends".
Thus the Lord, comforted Lakshmaṇa.

CŪRPPAṈAKAI BRINGING FOOD TO HER SON

As they were conversing thus,
Hearing the cry of her son, Cūrppaṇakai rushed

வாய்த்த மகன் பசியாற வண்டியிலே சோறேற்றிச்
சாய்த்தகள்ளுஞ் சுள்ளுடனே சாராய இறைச்சிவைத்து

சூர்ப்பணகை சினம்

வைத்து வண்டியுருட்டி யங்கேமைந்தனின் தலத்தில் வந்தாள்
சுத்திரத்தம் பாயக்கண்டாள் துண்டமிட்ட மகனைக்கண்டாள்
இத்தலத்தில் வந்தவனார் என்மகனைக் கொன்றவனார்
சத்துருவாம வனெனக்கு தரியாமல் தின்றிடுவேன்

தின்றிடுவேன் கொன்றிடுவேன் தீயெரியப் பார்த்திடுவேன்
கொன்றவனார் என்மகனைக் கோகூவென்ற பயமிட்டார்
நன்றிடவா தென்னிலங்கை ராவணனார் தங்கையடோ
ஒன்றடவே மாற்றலரை ஒருநொடியில் கொல்வனெடோ

ஒருநொடியிற் கொல்வேனென்று ஓலமிட்டுத் தானலறி
வருவதந்தப் பூங்காவில் மாலுடனே லட்சுமியும்
இருவரங்கு யிருக்கக்கண்டாள் ராமன்பச்சை ரூபங் கண்டாள்
ஒருமகன்பட் டாலுமிவன் உரிமை வைத்தாற் போதுமென்றே

சூர்ப்பணகை மோகினி வடிவெடுத்து வருதல்

போதுமென்றே சூர்ப்பணகை பூபதியாம் ராமன்முன்னே
வாதுசெய்யும் மோகினிபோல் வடிவெடுத்துச் செல்லலுற்றாள்
சீதரனார் முன்பில்சென்று சிமிட்டிவிழி யால்மருட்டி
மாதவரே நீருமெனை மருவுமென்றே வந்தடுத்தாள்.

98.40. சாய்த்த கள் - வடித்த கள். சுள்ளுடனே - உறைப்புடனே. 98.41. வண்டி யுருட்டி - ஒரு வண்டி அளவுக்கு மகனுக்கு உணவுப் பொருட்கள் வைத்து அதை உருட்டி. 98.42. துண்டமிட்ட - வெட்டுண்ட. 98.44. சத்துருவாம் அவன் எனக்கு - என் மகனைக் கொன்றவன் எனக்குப் பகைவனாம். தரியாமல் - பொறுத்திருக்காமல்; உடனடியாக. 98.47. நன்றிடவா - நல்லிடமாம். ஒன்றடவே - போர் செய்யவே. மாற்றலர்- பகைவர். 98.50. மால்- திருமால்; இராமன். லட்சுமி - திருமகள்; சீதை. 98.51. ரூபம் - வடிவம். 98.52. இவன் உரிமை வைத்தாற் போதுமென்றே - தன் மகன் இறந்தாலும் இராமனாம் இவன் 'தன் மனைவி இவள்' என்கிற உரிமையை என்மீது வைத்தால் அது போதுமென்றே. 98.53. பூபதி - அரசன்; இராமன். 98.54. வாது - தர்க்கம். மோகினி - அழகிய, மயக்கம் தரவல்ல பெண். 98.55. சீதரனார் - சீதையின் கணவனாம் இராமன். சிமிட்டி விழி- மருட்டுகின்ற, மயக்குகின்ற கண்கள். 98.56. மருவும் - உடலோடு பொருந்துவீர்.

With heaps of cooked rice piled in a cart,
With pots of toddy and hot meat, to her son's place,
Where she saw blood all around flowing in a river,
And her darling cut to pieces.
"O, who has come here and killed my son?
He is my foe; I shall eat him up at once;"
And she fearfully howled:
"I am the sister of Rāvaṇa of Laṅka in the south;
In a trice I will kill all my foes;
In a moment I will kill;" thus she swore in anger and grief:
And then she saw in the grove, Goddess Sita with Lord Rama;
And seeing the loveliness of the emerald-hued Lord:
She bethought herself: "though a son may be lost to me,
If this Lord were to claim me as his wife,
That is recompense enough for me!"

CŪRPPAṈAKAI TAKES AN ENCHANTING MŌKIṈI FORM

So before the Lord of the world,
Cūrppaṉakai took a dazzling Mōkiṉi form;
Before Sridara she went with inviting glances,
Ogling him with Oeillades with intent to charm him;
"O great Lord! come thou and embrace me in amorous union!"

விருத்தம்

99. அடுத்தாளே சூர்ப்பனகை கொண்ட கோலம்
அருந்தவரும் முனிவருமே அவளைக் கண்டால்
தொடுத்தாள்வா யெனத்துடரும் ரூப மாகிச்
சொரிதரள மணிமாலை சுவடாய்ப் பூட்டி
வடுத்தாவுங் கணைவிழியும் பிறைபோல் நெற்றி
மலையெனவே உயர்ந்தரண்டு முலையுங் காட்டி
எடுத்தமலர்ச் செண்டுகையாற் பிடித்தே நாணம்
இல்லாமல் ராமன்முன்னே செல்லு வாளே.

தன்னை அழகுபடுத்திச் சூர்ப்பணகை இராமனிடம் வினாவுதல்

சிந்து

100. செல்லுமளவும் சிறப்பித்து மோகினி காட்டிச்
செந்தூரப் பொட்டுந்தில தமுமேநுதல் தீட்டிக்
கல்லும்மலையும் இரும்பு முருகக்கண் காட்டிக்
கன்னியைப் போல்வெகுபொன் மணிமாலைகள் பூட்டி
அல்லும் பகலுமெனக்கு நீநாயக னாகும்
ஆசைகள் தீரத்தழுவிக் கொள்வேனெனை மேவும்
சொல்லுமயக்கமும் மோகினி யாட்டமுங் கண்டு
தோகையரே யெந்தன் பாகத்தில்காதலி யுண்டு

இராமன் பதில்

காதலியுண்டு நமக்கு உன்மேலிச்சை யில்லை
கண்ணில் முழியாதேபெண்ணே நீயப்புறங் செல்லு
பூதலந்தன்னிலே நாங்களும் வேந்தர்கள் சாதி
பொல்லாத நீசப்புலைச்சியைத் தீண்டவோ நீதி

99.2. தொடுத்தாள்வாய் - என்னைப் பொருந்துவாய். துடரும் ரூபமாகி - தொடரும் அழகியாகி. சொரிதரளமணிமாலை - பொழிகின்ற முத்து மற்றும் மாணிக்க மாலைகள். சுவடாய் - உயர்வாய். பூட்டி - அணிந்து. 99.3. வடுத்தாவுங் கணைவிழி - வடுவை ஏற்படுத்தும் அம்பு பாய்ந்தாற் போன்ற கண்கள். 100.1. மோகினி காட்டி - மோகினி வடிவம் தன்னை இராமருக்குக் காட்டி. திலதம் - நெற்றிப் பொட்டு. நுதல் தீட்டி - கண்ணின் விழிகளில் மையெழுதி. 100.2. உருக - உருகும் படி. மணி - மாணிக்கம். 100.3. மேவும் - பொருந்தும். 100.4. பாதத்தில் - எனக்கு உரிமையாய். காதலி - அன்பு மனைவி; சீதை. 100.5. இச்சை - ஆசை. முழியாதே - நிற்காதே. அப்புறம் செல்லு - தள்ளிச் செல்லு. 100.6. பூதலம் - உலகம். வேந்தர் - அரசர். நீசப் புலைச்சி - பொல்லாத புலைச்சாதிப் பெண்.

99. The pulchritudinous form that Cūrppaṉakai took
Was so fascinating, that even austere sages
Seeing her, would be tempted to offer themselves,
To become her bond slaves! Necklaces of pearl
And bright jewels she wore; her eyes like
Arrows sharp that make a mark; her forehead
A lovely crescent; and like loft peaks
Her jutting breasts; a fragrant bouquet in her hand,
Shameless she strutted before Rama.

100. Showing herself to Rama in all her loveliness,
The vermilion mark on her forehead as a tilak,
Casting glances that melted stone and rock and iron;
Decked with gold chaplets gemmed,
Even like a virgin, she crooned: "You are, my own lord,
Forever and a day! I shall embrace you
To my heart's content! come into my arms; my lord!"

RAMA'S REPLY

To which Rama thus did reply make:
"I have my own darling wife;
I have no desire for you; avaunt!
Get away from my sight. Go hence!
On earth we belong to the ruling race;
To touch a base-born belle as you,
Were not right; go and seek out

ஆதரவா யுனக்கேற்ற வல்லாளரைப் பாரு
அப்புறம்போ வெகுதுர்ப்பிச்சக் காரி யென்றாரே
நீதழுவா விட்டால் நானினியார் கிட்டச்செல்வேன்
நீலவர்ணா வென்றுவேல் விழியாசையை நல்க

ஆசையினா லவள்கிட்ட வருவது கண்டு
அப்புறஞ்செல் லென்றுநற்பொடு செப்பின துண்டு
வேசையராசை நமக்கிலை வேறிடம் பாரு
மின்னாரி ருப்பதுசொன் னேனுன்கண் தெரியாதோ
தாசியரே யுந்தன் மோகந்தவிர்க் கணமானால்
தம்பியிளையவர் சம்மதித் தாலங்கே [59]போநீ
காசைப்பறிப் பதுவேசையர்க் கேற்ற தொழிலு
கசுமாலி யிங்குநீநில் லாதேபோ போயொழி

சூர்ப்பணகை இலக்குவனிடம் வருதல்

தம்பியுண் டென்றுசமர்த் தனுரைத்த தினாலே
[60]தந்திரமாக யிளையவர் பாலடுத் தாளே
வம்பியொருத்தி வருவதை மால்தம்பி கண்டு
மங்கையரே நாங்கள் மற்றொருசாதியைத் தீண்டோம்
மற்றொரு கொற்றவருன் னுடஅண்ணர் முன்செனறேன்
வல்லவர்தம்பி முன்செல்ல வுரைத்திட வந்தேன்
[61]கொற்றவரே யெனைக்கூடி மருவென்று மெத்தவே
கோவிந்த ராமர்க்குஇளைய பெருமாளும் கூறுவார்

100.7. வல்லாளர் - வலிமையுடையவன்; தகுதியானவன். துர்ப்பிச்சக்காரி - மோசமான பிச்சையெடுப்பவள் போன்றவளே! 100.8. யார்க்கிட்ட - யாரிடம். வேல்விழி - வேல் போன்ற விழியை உடைய சூர்ப்பநகை. 100.9. கிட்ட வருவது - அருகில் வருவது. நற்பொடு- நல்லவிதமாய். செப்பினதுண்டு - கூறியதுண்டு. 100.10. வேசையர் - பொருட் பெண்டிர். மின்னார் - மின்னல் கொடிபோலும் இளமையான மனைவியார்; சீதை. கண் தெரியாதோ - 'அறிவு கிடையாதோ' என்ற பொருளில். 100.11. மோகம் - உடல் தழுவும் ஆசை. தவிர்க்கணமானால் - நீங்க வேண்டுமானால். தம்பி இளையவர் - எனது தம்பியான இலட்சுமணர். 100.12. கசுமாலி - கெட்டவளே. 100.13. சமர்த்தன் - இராமன். அடுத்தாளே- நெருங்கினாளே. 100.14. வம்பி - வம்பு செய்கின்றவள். மால் தம்பி - இராமன் தம்பியாம் இலட்சுமணன். 100.15. கொற்றவர் - அரசர்; இராமன். வல்லவர் - வலிமையானவர்; இராமர். 100.16. மெத்தவே - பொருத்தமாகவே.

59. போனீ 60. தத்திரமாக 61. கொத்தவரே

Someone more suitable to you,
Get thee gone, you base beggar-woman!"
And passionate Cūrppaṇakai did protest;
"If you do not me embrace, to whom
Shall I turn, O sapphire-hued lord?"
Said the spear-eyed demoness, impelled by lust.
And seeing her approach still nearer,
"Get off" said Rama in good humour still.
"Desire we have none for women of ill-fame!
Look elsewhere, Did you not hear me mention,
My fulgurant spouse? Have you lost your wits?
If still you want to sate your lust,
Look, there is my brother; go thou to him!
Selling their bodies for gold is the work of jades:
Get away from here, you strumpet!"

CŪRPPAṆAKAI COMING TO LAKSHMAṆA

As the Lord had directed her to go to Lakshmaṇa,
Cūrppaṇakai sidled up to the youngster.
Seeing the woman coming to him, mischief-bound,
He said: "We do not touch women of other castes"
And she pleaded: "The other lord, your elder,
Directed me to go to you, youthful swain!
Embrace me in amorous bliss"
Whereupon Lakshmana did declare

சூர்ப்பணகை தன் சுயவடிவை எடுத்தல்

கூறுமென் னண்ணர்கண் கண்டபெண்ணென்று ரைத்தாயே
கோதையேநீ பெற்றமாதா வெனச்சொல்ல லாமே
மாறுமாறென் றென்னைநீ தழுவாமலே போனால்
வாணாளை மாய்த்தமகன் பழிவீணிலே போமோ
வீணிலிவர் களைத்தின்பதே காரிய மென்று
வேகம்பெருத்த வரக்கி சொருப மெடுத்தாள்
ஆண்மையதாக அகோரித்துக் கொண்டுகண் சீறினாள்
அண்டமும் மண்டலமெங் குங்குலுங்க வலறினாள்

இலட்சுமணன் சூர்ப்பணகை முலை மூக்குகளை அரிதல்

அலறி யுதறி யிலட்சுமணப் பெருமாளை
அற்பரச் சூர்ப்பணகை யொக்கலையி லெடுத்தாள்
மலையினிறகு தெய்வேந்திர னரிந்தது போலவே
வல்லரக்கி முலைமூக்கை இளையனரிந் தானே.

சூர்பணகையின் சபதம்

பள்ளு

101. அரிந்த முலையும் மூக்குங்கரத்தி லரக்கி யெடுத்துத் துடிக்கவே
அதறிக்கதறி யுதறிப் புடைத்து ஆதாளி யிட்டு மோதினாள்
சரிந்த முலையில் சாயுமிரத்தம் சாறுபெரு குமாறு போல
தடதட தடதிடு திடுவென தடவரை களும சையவே
வரைகளசைய கதறுந் தொனிகள் வாரி யிரைச்சல் போலவே
மண்ணுங்குலுங்க விண்ணுங் கலங்க மரங்கள் தவிடு பொடிபட

100.17. நீ பெற்ற மாதாவெனச் சொல்லலாமே - 'எனது அண்ணன் இராமன் உன்னை முதலாவதாகவே கண்டு விட்டதாலும், நீ அவர் மேல் ஆசை வைத்ததாலும் நீ எனக்கு தாயாவாய்' என்றார் இலட்சுமணர். 100.18. மாறு - நீங்கு. வாணாளை - வாழ்நாளை. வீணிலே போமோ - வீணாகப் போகுமா? போகாது என்ற பொருளில். 100.19. தின்பதே - உண்பதே. காரியம் - சரியான செயல். சொருபம் - வடிவம். 100.20. ஆண்மையதாக - வீரம் பொருந்தியவளாக. அகோரித்து - மிகுந்த சினம் கொண்டு. அண்டமும் மண்டலம் - பூமி மற்றும் அண்ட பகிரண்டம் முதலியன. 100.21. அற்பரச் சூர்ப்பனகை - அற்பத் தன்மை வாய்ந்த அரக்கி சூர்ப்பனகை. யொக்கலையில் - இடுப்பில். 100.22. மலையினிறகு தெய்வேந்திர னரிந்தது போலவே - 'ஒரு சமையம் மலைகளுக்கு இறக்கு முளைத்து அவைகள் பறக்கும் நேரத்தில் அதன் சிறகுகளை அரிந்து மக்கள், தேவர், முனிகளை இந்திரன் காத்தான்' என்ற புராணிகக் கதையைப் போல. இளையன் - இலட்சுமணன். 101.1. ஆதாளி - மிகுந்த ஓசை. 101.2. சாறு - கள். தடவரைகள் - மலைகள். 101.3. வாரி - கடலலை.

"As you have said, you went first to my elder brother,
I can say, woman, that you are my mother!"
"If you don't embrace me but ask me to leave,
The sin of scorning my love will fall on you!" she said.
But, at last, realising the futility of her advances,
The demoness decided to devour them up,
And promptly took her original fearful form:
With valorous roar she did shriek,
That all the worlds did shake in fear;

LAKSHMAṆA DISFIGURING CŪRPPAṈAKAI

Roaring and stamping upon the earth,
The base Cūrppaṇakai did lift up Lakshmaṇa
Like a doll on her waist, whereupon
Even as Teventra on an earlier day
Cut off the wings of the hills,
Lakshmaṇa cut off the nose and breasts of the mighty demoness.

CŪRPPAṈAKAI'S OATH

101. Picking up her nose and her sliced off breasts
From the ground, the demoness roared and howled,
And cried and beat upon the earth;
From her bosom poured red blood like a river,
And as she shouted in pain and discomfiture
The very hills did shake; her cries resounded
Such that the earth trembled
And the heavens grew agitated;
The trees were smashed to smithereens;
And the noise she made, reached
The ears of the demons in their cities,

இரையு மிரைச்ச லரக்கர்பதி யிலிருக்க வரக்கர் திடுக்கிட
இந்தாபாரு வுந்தன் மேல்படை எடுக்கிறேன் குடிமுடிக் கிறேன்
முடிக்கிறேனடா நீவிவாகம் முடித்த மாதைப் பிடிக்கிறேன்
மூட்டுகிறேன் திறங் காட்டுகிறேன் நடுகாட்டிலே விழத்தாட் டுறேன்

அடிக்கி றேனுயிர் குடிக்கிறேனெ மதரக்கர் குலத்துக் கிழுக்கென
அறுத்த மூக்கைக் காட்டுறேன் புவிவெறுக்க வேபகை மூட்டுறேன்
மூட்டுறேன் பணிசூட் டுறேன் மூக்கையறுத்த உந்தன் கரத்தையே
முறிக்கிறேன் தலைய றுக்கிறேன் பழிமுடிக்கி றேனுயிர் குடிக்கிறேன்
கூட்டித் தவசுகுலைத்த மகனைக் கொன்ற பழியு மெடுக்கிறேன்
கொங்கை மூக்கை லங்கையரக்கர் குலத்திலே யினிக்காட் டுறேன்

கர தூஷணனிடம் சூர்பணகை முறையிடல்

குலத்துக் கிழுக்கு வைத்த வேடர்குடி கெடாமல் விடுவேனோ
கூடப் பிறந்த ராவணன் வலுவும் நாடொக்க வறியாததோ
பெலத்தைப் புகழ்த்திச் சூர்ப்பணகையும் பெருங்கரன் கரதூ ஷணன்
பெருத்த சபையிலடித்து விழுந்து பிறையிட் டாளவள் முறையிட்டாள்

கர தூஷணன் படையெடுத்தல்

முறையிட் டரக்கிகரனுக் கோத முடிக்கரன் கரதூ ஷணன்
முச்சினாயிரங் கோடிப் படையை முடிக்கிறான் படை எடுக்கிறான்
திறையிட்ட ரக்கர் தேருங்கொடியும் சிலையும் வளைத்துப் புறப்படத்
தசரத ரகுராமன் கண்டு சிரித்துத் தம்பியை நோக்கியே

இராமன் அரக்கர் படையை எதிர்த்துப் போரிடல்

நோக்கிச் சீதையைக் காத்துநில்லுநீ நொடிக்குள் நான்சென்ற டிக்கிறேன்
நூறுகோடி யரக்கர் வரினும் வேறு கூறு செய்கிறேன்

101.4. பதி - இருப்பிடம். குடி - ஆட்சி. 101.5. விவாகம் - திருமணம். மாது - பெண்; சீதை. மூட்டுகிறேன் - பகையை வளர்க்கிறேன். விழத்தாட்டுறேன் - வலிமை இழக்கச் செய்கிறேன். அடிக்கிறேன் - அடிபெறும்படிச் செய்கிறேன். புவி வெறுக்கவே - பூமி வெறுக்கும் படியாகவே. 101.7. பணி சூட்டுகிறேன் - மிகுந்த போர் தொழிலைச் செய்கிறேன். 101.8. தவசு குலைத்த - தவத்தைக் கெடுத்த. கொங்கை - மார்பு. 101.9. வேடர் குடி - வில் அம்பு கைக் கொண்டமையால் அரக்கர்களால் இராமர் முதலானோர் 'வேடர் குடியினர்' என்றே அழைக்கப்பட்டனர். நாடொக்க - நாடு முழுமையும். 101.10. பெருங்கரன் - வலிமையான கரன்; ஓர் அரக்கன். கரதூஷணன் - விசிரவசுக்கும் கலைக்கும் பிறந்த மகன்; ஓர் அரக்கன். 101.12. சிலை - வில்.

When she shouted her terrible challenge;
"See you, now I will battle against you
And wipe off your race; I will seize
The woman you have married;
I will raise many enemies against you;
I will show you my power and make you powerless·
I will suck your life;
I will report to my race and show them
My severed nose and breasts and create terrible foes;
I will wrench off the hand that cut my nose
I shall cut your head off;
Vengeance I shall take for slaying my son;
My severed limbs I will show to my tribe".

CŪRPPAṈAKAI REPORTS TO KARAṈ AND TŪṢAṈAṈ

Falling at the court of Karaṉ and Tūṣaṇaṉ
And praising their might she demanded,
That the bowmen who disgraced the demon-race
Should be punished; "The entire earth knows
The might of brother Rāvaṇa!, she said;
Thus when she reported to Karaṉ and Tūṣaṇaṉ,
Of a breath, thousand million troops
Marched against the brothers with flagged chariots;
Seeing which, Rakurāma son of Tacarata,
Asking his brother to guard Sita,
Declared; "I shall go and cut them to pieces'
Even if myriads of demons come against us"

பாக்ய வசிட்டர் பதத்தைத் துதித்துப் பச்சைமால் வெகுமிச்சமாய்
படைஎடுத்தனர் கரனைத் துரத்திப் பறக்கவே படையி றக்கவே
இறந்த படையில்சரிந்த குடலை யிழுத்து நரிகள் பிடுங்கவே
எட்டுத் திசையுங் காகங் கழுகு சுற்றவலகை கூட்டமாய்
பறிந்த வாளியொன்றிற் காணும் படையும் பட்டு மடியவே
பாவித்துக் கரதூ ஷணன்மனங் கோபித்துப் படைத்த டுக்கவே

இராமன் வில்லாற்றல்

தொடுத்திடச் சரமடுத் திடபுயந் துளைத்தது திருமால் சரம்
துடித்திட தலைவெடித்திட சடந்துளைத்தது திருமால் சரம்
கடுத்திடக் கரதூ ஷணன்படக் கலக்குது திருமால் சரம்
காளிகூளி வாழி பாடக் களிக்குது திருமால் சரம்
களித்துத் தேரை யொழித்து வானில் கட்டுது திருமால் சரம்
கரியைப் பரியை எரியிட்டெரித்துக் கருக்குது திருமால் சரம்
ஒழிக்கு மூழியிடியைப் போல உறுக்குது திருமால் சரம்
ஒட்டிப் பொருத ரெட்டிச்சமரில் ஒடுக்குது திருமால் சரம்
ஒடுக்கியே கரதூஷணன் சேனையை உழக்குது திருமால் சரம்
உந்தி வாற தந்திக்குருதி யுண்பது திருமால் சரம்
கடுத்து முப்பதினாயிரங்கோடி கனத்த சேனை தளத்தையும்
கதறக்கதற உதறிப் பொருது களித்தது திருமால் சரம்
பொருத போரில்கரனை வதைத்துப் போட்டுது திருமால் சரம்
போதாமல் கரதூஷணன் படபொ ருதது திருமால் சரம்
ஒருக்ஷணத் தினில்கரனை வதைத்து உடனே பாற்கட லாடியே
ஊணி யம்புறாத் தூணியிற் புகுந்துறைந்தது திருமால் சரம்.

101.14. பதம் - பாதம். பறக்கவே - அம்புகள் பறக்கவே. படையிறக்கவே - கரனின் படைகள் இறந்து போகவே. 101.15. அலகை-பேய், பிசாசு. 101.16. வாளி - அம்பு. 101.17. தொடுத்திட - அம்பினை விட்டிட. சரம்- அம்பு. திடபுயம் - வலிமையான தோள். துளைத்தது- ஊடுருவியது. சடம் - உடம்பு. 101.18. கடுத்திட - இராமர் அம்பு வேகம் கொண்டிட. வாழி- வாழ்த்து. களிக்குது - மகிழ்கின்றது. 101.19. தேரை - கரதூஷணன் ஏறி வந்த தேரை. ஒழித்து - அழித்து. கட்டுது - நிலைப்பெற செய்கிறது. கரி - யானை. பரி - குதிரை. எரி - தீ. ஊழியிடி - உலகம் முடியும் தருவாயில் உண்டாகும் பேரிடியோசை. உறுக்குது-அதட்டல் செய்கிறது. 101.20. எட்டிச் சமரில் - பெரிய போரில். ஒடுக்குது - ஒடுங்கும்படிச் செய்கிறது. 101.21. உழக்குது - வருந்தும் படி செய்தது. உந்தி - வேகமாக. வாற - வருகிற. தந்தி - யானை. 101.22. கடுத்து-சினங் கொண்டு. கனத்த - பெரிய. சேனை தளம்-படைக்கூட்டம். களித்தது- மகிழ்ந்தது. 101.23. வதைத்துப் போட்டுது - கொன்று போட்டது. பட - மடிய. பொருதது - போர் செய்தது. 101.24. வதைத்து - கொன்று. பாற்கடலாடியே - கரனைக் கொன்றதால் ஏற்பட்ட இரத்தக் கறையைப் பாற்கடலில் சென்று கழுவியே. ஊணி - ஊன்றி. அம்புறாத்தூணி - அம்புகள் வைக்கும் உறை.

So saying, Rama, emerald-hued, praying first
To preceptor Vaciṭṭar, took up his weapons
Against Karaṉ and the army entire was annihilated'
The jackal pulled at the entrails of the slain,
In all directions, crows and carrion-kites did hover.
By a single arrow of the Lord, an army vast,
Was destroyed; at which Karaṉ and Tūṣaṇaṉ
Full of wrath took up their arms.

THE BOWMANSHIP OF RAMA

Arrows from Rama's bow pierced the foes,
Entering their bodies and cleaving their heads
Rama's arrow like Lord Tirumāl's own arrows
Destroyed Karaṉ and Tūṣaṇaṉ with all their hosts.
While Goddess Kāḷi and her goblin bands danced in glee!
Destroying the chariots, the elephants, and the horses
The Lord's arrows caused havoc in the enemy ranks;
Like thunder at the aeon's end, Tirumāl's arrows resounded;
His arrows folded up the foes in battle fierce:
It did agitate Karaṉ's troops;
Tirumāl's arrows swift did slay,
The tuskers and drink their blood.
The angry arrows of the Lord did kill
Millions and millions of the enemy hordes;
Helpless they ran helter-skelter, fore the pursuing darts!
Karaṉ and Tūṣaṇaṉ were destroyed by Tirumāl's darts;
In a trice the slaughter took place,
And the terrible darts of Rama,
Bathed in the ocean of milk
And purified, back returned to the quiver of the Lord.

சூர்பணகை இராவனிடம் முறையிடல்

விருத்தம்

102. சரத்தினால் தூஷணனா தியர்க ளெல்லாம்
தார்கொடியுந் தேருமற்றுத் தணலாய் வேக
உரத்தினால் சூர்ப்பனகை எல்லாங் கண்டு
ஓடினாள் சாடினா ளுயரப் பாய்ந்தாள்
பரத்தினா லிருபதுகை யுடையோ னான
பத்துமுடி ராவணன்முன் பாரில் வீழ்ந்து
வரத்தினா லுலகாண்ட எனது மூக்கும்
மகிழ்தனமும் மானிடவ னறுத்திட் டானே.

சிந்து

103. திட்ட மாயுல காளுமுயர் திண்ண னேஎன் கண்ணனே
தென்னி லங்கையி லுன்னுடன் வந்து [62]ஸ்திரியாய் பிறந்தேனே
வட்ட மாயந்த வனத்தி லெந்தன்மகன் வேட்டைக்குப் போனான்
மறுநாள் வரக்கா ணாமலென் மகனைத் தேடிப் போனேன்
போனேன்வனம் புகுந்தேனதில் புனவேடர்க ளிருபேர்
பொன்போலொரு பெண்பாலொடு புகழாயிருந் தார்கள்
ஆனாலவ ளுமக்காமென அடுத்தேன்துணிந் தெடுத்தேன்
அதற்காயெனை மூக்கும்முலை யறுத்தா னந்தவேடன்
நானேனினி யிருப்பேன் துணைநமக்கே தொருதமையன்
நாக்கேதினி மூக்கேதினி வாக்கேதினி யுனக்கே
தேனேஉந்த லுடலில்வடுச் செய்தானவ னெங்கே
செப்புவா யென்றுதுப்பி வேகித்துச் சீறிஎழுந் தானே

102.1. தூஷணனாதியர் - கரன், தூஷணன் முதலிய அரக்கர். தார்கொடி - படைக்கொடி. தணலாய் - நெருப்பாய். உரத்தினால் - மன வலிமையால். 102.3. பரத்தினால் - இறைவன் அருளால். ராவணன் - சூர்ப்பநகையின் சகோதரன்; இலங்கை அரசன். பாரில் வீழ்ந்து - நிலத்தில் விழுந்து. 102.4. தனம் - மார்பு.103.1. உயர் திண்ணனே - உயர்ந்த வலிமையாளனே; இராவணனே! கண்ணனே - என் கண் போன்றவனே; இராவணனே! ஸ்திரியாய் - பெண்ணாய்; தங்கையாய். 103.2. வட்டமாய் - சீக்கிரமாய். 103.3. புனவேடர் காட்டில் வாழும் வேடர்; இராமரும் இலட்சுமணரும். பெண்பாலொடு - பெண்மகளோடு; சீதையோடு. 103.4. அவள் உமக்காமென - அந்த பெண் உனக்கு ஆகுமென. அடுத்தேன் - நெருங்கினேன். அந்த வேடன் - அந்த வேடனாகிய இலட்சுமணன். 103.5. நமக்கேதொரு தமையன் - 'நமக்கு எங்கே அண்ணன் உள்ளான்' என்ற குறிப்பில். வாக்கு - பேச்சு. 103.6. தேனே - தேன் போன்ற இனிமையுடையவளே; சூர்ப்பநகையே. வடு - காயம். துப்பி - எச்சிலைத் துப்பி. வேகித்து - வேகம் கொண்டு.

62. ஸ்ரீயாய்

102. Seeing how Karaṉ and Tūṣaṇaṉ with all their armies
And flagged chariots, became ashes
At the hands of the Lord, Cūrppaṇakai rose to the sky
And fled towards Laṅka.
"By the grace of God was I born
Sister of ten-headed Rāvaṇa with twenty hands!
Falling in front of him, she moaned:

103. "My nose, and my beauteous breasts.
A mere human did cut off, O, Rāvaṇa,
Dear to me as my eye! woe is me,
That I am born a woman in Laṅka!
My son, he did go to hunt in the wood;
I went in search of him and there I met
Hunters twain, with a golden belle, living happily.
Thinking she might be of use to you as your spouse.
I seized her for your pleasure;
For which the hunter cut off my nose and breasts.
Why should I live?
For I have no brother; I have no words,
And no tongue to speak in pride."
Thus lamented Cūrppaṇakai to her dear brother Rāvaṇa;
At which he said; "Sister mine, sweet as honey!
Who is he who maimed you thus? Where is she?
Tell me;" and he spat out in anger, and rose from his seat.

இராவணன் மாரீசனை அழைத்தல்

சீறி மாமனை மாரீசனைத் தேடி வரவ ழைத்துச்
செங்கை யாற்றொழு தங்கேயொரு செய்தி யெடுத்து ரைப்பான்
ஊறு மாதிரி லென்றங் கையை உந்தன் மருமகளை
உடலில் வடுச்செய் தார்தமை உம்மு பாயத்தி னாலே
நானா விதத்தாலே வேடர் ரண்டு பேரையுங் கொண்டுபோ
நானிதோ வனமடுப் பேனுயர் தேனை யேசிறை எடுப்பேன்

மாரீசன் அறிவுரை

மானாய் வடிவெடுத் தாலந்த வனமா தவர்கொல் லுவார்
மாட்டே னெனவுரைத் தால்நீயும் வாளினால் வெட்டி கொல்லுவாய்
கான வேடரை மானிட ரென்று கருத்தில் நினையாதே
கார்மேக நிறத்தி னன்ரெகு ராம னேயெனச் சொல்லலாம்
நானே யினிமுன்னமே சென்று நமனார் தலமதிலே
நடைச்சே னைக்கு முனக்கு மிடம்பிடித் தேவெளி யாக்கிறேன்

மாய மானாய் வரும் மாரீசனைச் சீதை காணுதல்

ஆக்குவே னென்றானே சனகமக ளாசையால் மாரீ சனும்
அடுத்தே பொன்மா னாய்விளை யாடினா னந்த வனத்தில்
காக்கும் நாயகன் சீதையிரு கண்ணி னாலது காண
காவல னிளையோனும் வாசல் காத்தே யடி பூண
நோக்கு வாளவள் சீதை யந்தநொடி மான்வந்த போதே
நொந்து மான்வந்து துள்ளியே அரைநொடிக் குள்மிக நடக்கும்
தீர்க்கமாகப் பொன்மானை வைத்துத் தினமே விளையாட
சனப்போ தினில்பிடிப் பிரென மணச்சீதை சொல்வாளே

103.7. மாரீசன் - ஓர் அரக்கன்; இராவணனுக்கு மாமன். செங்கையால் தொழுது - சிவந்த கைகளால் மாமனைத் தொழுது. 103.8. ஊறு - காயம். மாதர் - சூர்ப்பநகை. வடு - புண். உபாயம் - தந்திரம். 103.9. நானாவிதத்தாலே - பல வித தந்திர முறைகளாலே. கொண்டுபோ- உன்னருகில் அவர்கள் சீதையை விட்டு பிரிந்து வரும்படிச் செய். அடுப்பேன்- சேர்வேன். உயர் தேன் - தேன் போன்ற மொழியாள்; சீதை. 103.11. கான வேடரை - காட்டிலுள்ள வேடர்குல மக்களாம் இராமன், இலட்சுமணரை. 103.12. நமனார் தலமதிலே - எமனின் இருப்பிடந்தனிலே. சேனைக்கும் உனக்கும் இடம் பிடித்தே - எமலோகத்தில் நான் முதலில் சென்று உனக்கும் உன் படை வீரர்களுக்கும் இடம் பிடித்தே. வெளியாக்கிறேன் - வெற்றிடத்தை வைக்கிறேன். 103.13. சனகமக(ள்) - ஜனகன் மகள்; சீதை. 103.14. காவலன்-அரசன்; இராமன். இளையோன் -இலட்சுமணன். 103.16. தீர்க்கமாக- உறுதியாக. சனப்போதில் - மிக விரைவில். மணச்சீதை - அழகிய சீதை.

RĀVAṆA CALLING FOR MĀRĪCAṈ

Rāvaṇa sent for Māṙīcaṉ his uncle;
And after due obeisance, with his ruddy hands folded,
Said to him: "Wounded in mind and body is your niece;
You should by your guile and wile draw off
The two young men; and then I shall seize the
Honey-sweet woman with them."

MĀRĪCAṈ'S ADVICE

"If I were to take the form of a deer
Those noble brothers will kill me sure;
If I were to say 'no' to you,
You will cut me down with your sword!
Do not think that the hunters in the wood,
Are just human beings;
The cloud-hued One is doubtless Rakurāma himself!
And so, I have nothing to do
But go in advance to the land of Death
And reserve vacant places for you and your armies"
Thus resigned to his fate
Wise Māṙīcaṉ did speak to Rāvaṇa.

SITA ESPYING MĀRĪCAṈ COMING IN THE FORM OF A FASCINATING DEER

But as ordered by his nephew
Who was impelled by desire for Jaṉakaṉ's daughter,
Māṙīcaṉ transformed into a golden deer,
Frisked and gambolled about in the wood,
Before the eyes of Sita, the beloved of the Lord!
She was tempted by its fatal charm!
And seeing the gazelle leaping about,
Running fast here and there,
She requested Rama: "Catch it swiftly for me,
And let me keep it as my deer pet
To play with every day! And the Lord replied:

சீதையே பொன்மா னல்லயிது தீது ராக்ஷசர் சூதுதான்
செம்மான் நமக்கா தினி சும்மா யிரு பெண்ணே
ஏதையோ சூது வாதையோ மானெ னக்காமென வழுதாள்
இவள்க்கே காவலிளை யோன்நிற்க ராமனுந் துடர்ந் தானே

இராமர் மாயமானை அம்பால் எய்தலும் மாரீசன் சூழ்ச்சியும்

துடர்ந்தே யண்ணல்நாட மானது துள்ளித் துள்ளியே யோடச்
சுற்றி னார்வனம் பற்றிநாராணன் பத்துநாழிகை மட்டுமே
தடந்தேடிப் பொன்மானை ராமர் சரத்தா லெய்த போதே
தம்பி வாலட்சு மணனே யென்று சாய்ந்தானே மாரீசன்
சாய்ந்தே தம்பிக் கபயமென ஜானகி யம்மன் கேட்டு
தாமோதரர்க் கிடையூ றுகள் சளமே வந்தது துண்டுகாண்

சீதையின் புலம்பல்

வாய்ந்த மானைப்பிடித்துத் தாவென மாபாவி சொன்னேனே
மணவா ளரைஎந்த ராக்ஷசர் வனத்தில் சதித்தாரோ
கூந்தல்விரித் தலறிமனங் கொதித்தா ளுயிர்துடித்தாள்
கோனேயிளை யோனேயிது குறிப்பேதெனப் பாரீர்

இலக்குவன் மறுமொழி

சாய்ந்தேமனத் துயரேனினி தாயே மாதாவே
சலியா தேயும் பலியா திடர்மெலி யாதேயும் மதனி
மதனி யெங்க ளண்ணர்க் கிடர்வரு கிலுலகம் முடியும்
வாரி யானது சுவறும் கதிர்மதி யானது மாறும்

103.17. தீது ராக்ஷசர் - கொடிய ராட்சதர். சூது - சூழ்ச்சி. 103.18. ஏதையோ சூது வாதையோ- எதுவானால் என்ன? சூது வாதுவாக இருந்தாலென்ன? நான் அது குறித்து கவலைப்படேன் என்றவாறு. துடர்ந்தானே - தொடர்ந்தானே: 103.19. நாட - தொடர்ந்து செல்ல. வனம் - காடு. நாரணர் - நாராயணர்; இராமர். 103.20. சரம் - அம்பு. தம்பி வா லட்சுமணனே என்று- மாரீசன் இராமன் அம்புபட்டு விழும் பொழுது இராமனுக்கு ஆபத்து என்கிற குறிப்பைச் சீதை உணரும்படி மேற்படி உரைத்தது. சாய்ந்தானே - வீழ்ந்தானே. 103.21. அபயம் - ஆபத்து. ஜானகியம்மன் - சீதை. தாமோதரர் - திருமால்; இராமர். சளமே - ஏராளமாகவே. 103.22. வாய்ந்த - பொருந்திய. மணவாளரை - கணவரை. சதித்தாரோ - கொடுமை செய்தாரோ. 103.23. கோனே, இளையோனே - இலட்சுமணனைக் குறித்தது. 103.24. சலியாதேயும் - மனம் சலிப்பு அடைய வேண்டாம். பலியாது - அண்ணனுக்குத் துன்பம் என்பது நடக்காது. மெலியாதேயும் - வருந்தாதீர். 103.25. இடர் - துன்பம். உலகம் முடியும் - உலகம் அழிந்து விடும். வாரி - கடல்நீர். சுவறும் - வற்றும். கதிர் - சூரியன். மதி - சந்திரன்.

"Oh! Sita! This is not a deer golden!
This is nought but evil;
This bright deer is not for us;
It is surely the treachery of the demons;
So be quiet, my beloved!"
But she insistent, cried:
"Be it wile or guile,
The deer I want, for me to play with."
Thus compelled, in an evil hour,
With younger Lakshmaṇa
Standing guard at the entrance to the hut,
Rama went after the deer.

RAMA SHOOTING THE MAGIC DEER AND MĀRĪCAṈ'S TREACHERY

As the Lord followed the leaping deer,
That ran faster and faster
Drawing him deeper and deeper into the wood,
Nārāyaṇa went in search of it for hours four;
Till at last he shot the deer with an arrow
And Mārīcaṉ fell, crying with his dying voice:
"O brother Lakshmaṇa! come to my aid".
Which cry of distress Jāṉaki hearing, she lamented:
"Oh my Lord Tāmōtara is sure to have met
With troubles a plenty; Oh sinner I am,
That I insisted on his catching the deer for me.
I do not know which demon has cruelly hurt my Lord"
So saying, Sita untied her tresses and cried aloud,
Agonised at heart, she turned to Lakshmaṇa
And said: "Young Lord! what may be
The meaning of this cry of distress, from my Lord?"

LAKSHMAṆA'S REPLY

"Mother mine! do not be distressed in mind
And worry yourself; my brother cannot come to any grief.
If so, then this earth entire
Would be destroyed; the sea go dry

இதுநீர் சொல்வ தரிதே சும்மாயிருப் பீரெந்தன் மதனி
இந்த நேரத்தில் வருவா ரண்ணர் சிந்தாகுலம் தவிர்வீர்
மதிசேர் மகமேரு வாகிய மலையே நகண்டி டினும்
வைய மன்னவர் தெய்வ லோகத்து வாசவனிறந் திடினும்
விதியான் பசுபதி யான்அரி விண்டு தான்து யருறினும்
மேகவர் னருக்கி டரேதுயர் வினையேது சொல் மதனி

சீதை சுடுசொல் உரைத்தலும் இலக்குவன் நிலையும்

வினையே தெனச்சீதை தான்கனல் விழ்யா யுரை மொழிவாள்
வீழ்ந்த பேருட பாக்கியம் புவிவாழ்ந்த பேர்களுக் காகுமோ
அனைவாகிய சீதை யிப்படி அசங்கி யமொழிபகர
அடித்தான் வயறிடித் தான்உயிர் துடித்தான் செல்லப் படித்தான்

இராவணன் வருகை

படிச்சானகி தனித்தேயது பன்ன சாலையி லிருக்கப்
பதறிக் குரல் கதறியாதி பச்சைமால்பேரி லிச்சையாய்
நடித்தோடு பொன்மானை யேவிய ராவண னொருதே ரைத்தான்
நல்லபூமி யிலொழித்தே யுவன் நலஞ்சேர் பரதேசி போல்
பரதேசி கள்போலே யொருப்பண் டாரத்தின் ரூபமாய்
பண்பாய்ச் செம்புக் கடுக்கன் கக்கப் பாளமும் இரப்பானாய்
வரவே மாத்திரைக் கோல்ஒட்டி யாணங் காவிச் சேலை
மடிகொண் டவன்மிடி கொண்டவர் வந்த வாறென வந்தான்

103.26. சிந்தாகுலம் - மனக்கவலை. தவிர்வீர் - தவிர்ப்பீர். 103.27. மதி - சந்திரன். மகமேரு- மகாமேருமலை. நகண்டினும் - நகர்ந்துவிட்டாலும். வைய மன்னவர் - உலகத்து மன்னர்கள். தெய்வலோகத்து வாசவன் - இந்திரன். 103.28. விதியான் - விதிகளுக்கு விதியாய் விளங்குபவன்; பிரம்மன். பசுபதியான் - சிவபெருமான். அரிவிண்டுதான் - அரியாகிய விஷ்ணுதான். துயருறினும் - வருந்தினும். மேகவர்னருக்கு - மேக நிறமுடைய இராமருக்கு. இடர் - துன்பம். 103.29. வீழ்ந்த பேருட பாக்கியம் புவி வாழ்ந்த பேர்களுக்காகுமோ - இறந்து போன இராமனோடு வாழ்ந்த எனது வாழ்க்கை உயிருடன் வாழும் உனக்கு ஆகுமோ? ஆகாது என்ற பொருளில். 103.30. அனைவாகிய - இத்தன்மையதாகிய. அசங்கிய மொழி - அசிங்கமான கூற்று. பகர - கூற. செல்லப்படித்தான்- சென்றான். 103.31. இச்சையாய் - ஆசையாய். 103.32. பரதேசி - பண்டாரம். 103.33. ரூபமாய் - வடிவமாய். செம்புக் கடுக்கன் - செம்பு என்னும் உலோக வகையால் செய்யப்பட்ட கடுக்கன்; ஒரு காதணி வகை. கக்கப்பாளம் - துறவிகள் கக்கத்தில் வைத்திருக்கும் ஒரு கருவி அல்லது பாத்திரம். 103.34. மாத்திரைக் கோல் - சித்தர். பண்டாரம் முதலியோர் கையில் வைத்திருக்கும் மந்திரக் கோல். ஒட்டியாணம் - இடையிலணியும் ஓர் ஆபரண வகை. காவிச்சேலை - காவியாடை. மடி - நோய். மிடி கொண்டவர் - வறுமை கொண்டவன். வந்த வாறென - வந்ததைப்போல.

And the Sun and the Moon change their courses.
Be tranquil, my dear sister-in-law!
What you say, will not happen;
Soon my brother will come back;
Do not distress yourself:
Even if the great Mēru Mount where the moon rests
Were to move from its position,
Or the Lord of heavens, Intira and the Kings of earth,
Or Pacupati or Vishnu were to come to grief,
Our Lord will not suffer in any way.
So rest assured; he is safe".

SITA SPEAKING HARSHLY TO LAKSHMAṆA AND HIS PLIGHT

When Lakshmaṇa thus assured her,
With eyes spitting fire, Sita spoke thus harshly:
"Can the life that I led so happily
With my Lord, belong to any one else?"
Thus when she spoke offensive words opprobrious,
Lakshmaṇa closed his ears
And beat his breast; and unable
To bear this unjust accusation,
He left the place to aid his brother.

THE COMING OF RĀVAṆA

Thus when Jāṉaki was in the hermitage all alone,
Rāvaṇa who had sent Māricaṉ to come in the form
Of a golden deer and draw Rama off,
Came thither dressed like a mendicant pious,
With vessel under his arm,
Copper-rings in his ears and a wand in hand;
Ochre-robed, with a sash around the waist,
As if he were in utter indigence.

இராவணன் பிச்சை வேண்டி நிற்றல்

வந்து சீதை தனித்தி ருக்கிற வளர்பன்னக சாலையில்
மாதே பிச்சை யிடுவீ ரென(உ)பாய மாகவே கேட்டான்
இந்தப் பெருவ னத்தி லமுதில் லையேகறி யில்லையே
என்னம் மேகனி யெனினும் பிச்சை யிடுவீ ரிதுநலமே
இடுவீ ரெனச்சட்டு வங்கையி லெடுத்தாள் கனியெ டுத்தாள்
எந்தாயே உள்ளும் புறமாய் பிச்சை யிட்டாலது பலனோ
படுபாவி யீது ரைக்கஅவள் பன்னக சாலை விட்டிறங்கிப்
பரதே சிக்குப் பிச்சையிட வரவே தேரி லேற்றினான்

இராவணன் சீதையைத் தேரில் ஏற்ற அவள் நிலை

ஏற்றினான் கையில் ஓடொன்றை யுமிசங் கொன்றையுங் காட்டினான்
இசங்கோ டென்று சீதை சொல்ல ரதந்தான் பறந்ததுவே
காற்றில் விடும்பட்டம் போல தேர்கடந் தோடவே சீதை
கண்ணீர் ஆறுபாய வேயுடல் புண்ணாய் விழுந்த ழுதாள்
தூற்றினாள் தலைவி ரித்தாள் பரஞ்சோதி யேபிரம தேவனே
துணைக்கா வலரிலை யேயெனத் தொழுவாள் விழுந் தழுவாள்
மாற்றி னானிளை யவரைப் பெண்மதி யாலி கழ்ந்தேனே
மணவா ளனைமா னால்பெண் மானால்ப் பிரிந் தேனே

சீதையின் புலம்பல்

தேனேவரிக் குயிலேயொயில் சிறக்கும்மட வன்னமே
சிங்கமே மிருகங் களேசொல் மரங்களே பக்ஷி சாலமே
மானேயொரு தேனே வல்லரக்கன் வந்து கவர்ந்து
வனத்தில் கொடுபோறா னென்று வழுத்துந் திருமா லுக்கே

103.36. அமுது - அன்னம். என்னம்மே - என் அம்மை போன்றவளே; அம்மே' என்பது அம்மா என்ற பொருள் தரும் மலையாளச் சொல். 103.37. சட்டுவம் - உணவு வைப்பதற்குரிய ஒரு வகை பாத்திரம். உள்ளும் புறமாய் - சீதை பர்ணகசாலையினுள்ளும் இராவணன் வெளியிலுமிருக்க. பிச்சையிட்டால் - இவ்விதம் உள்ளும் புறமாய் பிச்சையிட்டால். பலனோ - பிச்சையிடுதற்குரிய தர்மமோ. 103.38. படுபாவி - துஷ்ட எண்ணம் கொண்ட பாவியாகிய இராவணன். தேரிலேற்றினாள் - இராவணன் சீதையைத் தேரிலேற்றினான். 103.39. இசங்கொன்றையும் - ஒரு வகை நாற்றமுடைய கொன்றை மரத்தையும். இசங்கோடென்று - கொன்றை மரத்தின் கிளை என்று. 103.41. பரஞ்சோதியே- சிவனே. பிரமதேவனே - பிரம்மனே. இலை-இல்லை; இடைக்குறை 103.42. மாற்றினான்- இளையவராம் இலட்சுமணர் கூறிய சொற்களுக்கு நேர்மாறாய் மாற்றினான். 103.43. தேனே- வண்டே. ஒயில் சிறக்கும் - அழகு சிறக்கும். 103.44. தேனே - பெண்வண்டே. வழுத்தும்- துதிக்கும்.

RĀVAṆA BEGGING FOR ALMS

Coming to the hermitage with Sita alone inside
He spoke aloud: O, Lady of the house! please give alms;
There is not food of any kind to eat
In this wide wood; mother mine!
Please give alms to me!"
Hearing the cry for alms,
Sita with her ladle in hand and vessel,
Came to the door-step to give alms;
The wily sinner laughing said:
"My mother! is it proper
That you stand within and throw alms
To one standing outside the hut?
What merit will you earn from this charity?"
And so Sita came out to give the food
To the mendicant, who promptly lifted her up
And placed her in his chariot.

THE PLIGHT OF SITA IN RĀVAṆA'S CAR

As it sped fast like a kite flying in the wind,
Sita fell on the deck of the car,
Tears flowing like a river; and her body full of pain
With tresses spread out, she cursed him.
Then she called out in distress:
"O Spureme flame! O Brahma
There is none to help me, none to protect!"
She prayed and she fell down
And cried: "Discarding my brother's advice,
With a woman's folly, I chastised him, in a pet:
Because of a deer, I have been parted
From my own Lord", Sita lamented.
"O beetles! O kuyils! O lovely swan with much grace!
O beasts like lions! O trees!
O birds of the air!
O deer! please inform Lord Tirumāl,

திருமாலையும் பிரிந்தாள்பின் சிறியோனையும் நெகிழ்ந்தே
சீதையைக் கொடுபோறா னென்று செப்பு வீர்திரு மாலுக்கே
ஒருகூக்குர லிடுவாள்கை யுடலிற்பணி யெறிவாள்
உஷ்ணமாய் விரல்நெரித்தே வைத்துத் திட்டுவாள் தேரில்முட்டுவாள்
அருவாள்க்கிரை யிடுவாளென்று அரக்கன்தனக் கஞ்சுவாள்
அவன்றீண்டிலு மெரிப்பேன் கற்பி லக்கினி யுண்டுமென்பாள்
பெருமானையு மிளையோனையும் பிரிந்தேன்விதி வசத்தால்
பெண்பேதையென் றலறியவள் பெருத்தோலமிட் டாளே.

சடாயு வருகை

விருத்தம்

104. அழுவது சடாயு கேட்டு ஆரடா யிந்தக் காட்டில்
எழுவது பொன்மா தேது யிவளைநீ திருட லேது
தழுவிய கணவ னெங்கே தம்பிதா னிளையோ னெங்கே
விழுவதுன் முடிகள் தேரை விடேனென மறித்துத் தானே.

சடாயு இராவணன் போர்

துடுக்கு

105. தானவர் கோமகள் சானகி தன்னைத்
தாவி யிராவணன் பாவி எடுத்துப்
போனது கண்டு சடாயு மறித்துப்
பொருது குதித்துக் குருதிகள் கக்கப்
பானுவு மஞ்சி மலைத்து மலங்க
பறவை சினத்துப் பொருதிட வேதான்
ஏனம தாகிய ராவண னப்போ
இருபது கையு மொருபத் முடியும்

103.45. சிறியோன் - இலட்சுமணன். நெகிழ்ந்தே - பிரிந்தே. கொடுபோறான் - கொண்டு போறான்; இடைக்குறை. 103.46. கையுடலிற்பணியெறிவாள் - கை மற்றும் உடம்பிலுள்ள ஆபரணங்களைத் தரையில் எறிவாள். (அடையாளத்திற்காக). 103.47. அருவாள் - அரிவாள். இரையிடுவாள் - இரையாகிவிடுவேன் என்று வருந்துவாள். 103.48. ஓலம் - ஓசை. 104.1. சடாயு - சடாயு என்னும் பெயருடைய கழுகு. 104.2. பொன் மாதேது - பொன் போன்ற நிறமுடைய பெண் ஏது; சீதை ஏது? 104.4. விழுவதுன் முடிகள் - 'சீதையைக் கொண்டு சென்றால் உன் தலைகளு் விழும்' என்ற பொருளில்.105.1. தானவர் – அசுரர். கோமகள் - அரசி. 105.2. குருதி - இரத்தம். 105.3. பானு - சூரியன். மலங்க - திகைக்க. பறவை - சடாயு. 105.4. ஏனமதாகிய - பாவத்தின் வடிவமாகிய. அப்போ - அப்பொழுது. பது முடியும் - பத்து தலையும்.

My Lord, that a fierce demon has seized me
And is carrying me aloft;
Tell my lord, that after making him go from me
I also insulted my brother-in-law
And hence Sita is being abducted!"
Suddenly she would cry aloud;
She would remove her jewels from her limbs;
Abuse and curse Rāvaṇa;
Snapping her fingers,
She would bang her head against the chariot;
She would become afraid,
The demon might give her to the sword:
But she would also say: "If he touches me,
I will burn him; there is fire in my chastity!
My Lord and his younger brother,
I parted from them because of fate!
Woe is me!"
Thus she cried aloud in sore distress.

THE COMING OF JAṬĀYU

104. Hearing her cries, Jaṭāyu, the king of the eagles,
Came shouting: O! who are you, Sirrah, in this forest
Thus stealing a golden damsel?
Where is her husband?
Amd where is her brother-in-law?
I shall not let you go.
Your heads will roll on the ground;"
And thus he blocked the chariot.

THE BATTLE BETWEEN JAṬĀYU AND RĀVAṆA

105. Seeing how the cruel demon had by guile
Seized the Princess Jānakı,
Jaṭāyu intercepted Rāvaṇa and engaged him fiercely,
Blood flowing from both opponents.
Thbc very sun did, baffled stand, perplexed,

முடிகள சைத்துக் கிடுகிடு கிடென
    முட்டி முழங்கிய மட்டி யெழுந்தார்
மடிவது பாரென ராவணன் முன்னே
    வந்து சடாயு மறித்தது பாராய்
துடிசே ரிடையாள் ஜானகி காண
    துட்டனை வெட்டி முழக்கிது பாராய்
இடிக ளிடித்தது போலு முழங்கி
    இறகை விரித்துப் பொருகிற ஓசை

ஓசை யுடன்போய் [63]ராவணன் சீறி
    உன்னி நிமிர்ந்து கிளம்பி எழும்பி
பாசை படித்து ராவணன் றானும்
    பண்புடன் சாடிச் சடாயுவைத் தட்டப்
பாரில் பறவை மிருகமு மஞ்ச
    பாதல மேழும் நடுங்குது பாராய்
தேரினிற் சீதை வருத்த மறிந்து
    தீயது கோட்டை திருத்துது பாராய்
ஆரிலும் மிச்சம தாகிய தாயை
    அக்கினிக் கோட்டை வளைந்தது பாராய்
கூறிய தாயை அடுக்க மருண்டு
    கொடுங்கை யரக்கன் நெருங்குதல் பாராய்

கொடுங்கை யரக்கன் நெருங்கிய போது
    கோதறு மன்னன் சடாயு எதுக்க
நடுங்கி யரக்கன் மருட்டி மருட்டி
    நல்ல சடாயுவின் கூடப் பொரவே

105.7. துடி.சேரிடையாள் - துடி போன்ற சிறுத்த இடையை உடைய்வள். துட்டன் - துஷ்ட குணமுடையவன்; இராவணன். முழக்கிது - முழக்க ஓசையை. 105.8. இறகை - சிறகை. பொருகிற - போர் செய்கிற. 105.9. உன்னி - உயர்ந்து. 105.10. பாசை படித்து - மந்திர மொழியை உச்சரித்து. தட்ட - அடிக்க. 105.11. பாதலம் - உலகம். 105.12. தீயது கோட்டை திருத்துது பாராய் - அக்கினியானது இராவணன் தேர் மேலும் முன்னேறிச் செல்லா வண்ணம் நெருப்பால் கோட்டை செய்வதைப் பார்ப்பாய். 105.13. ஆரிலும் - யாரை விடவும். மிச்சமதாகிய தாய் - பெருமையில் மிகுந்த தாய்; சீதை. வளைந்தது - பாதுகாப்பு கருதிச் சுற்றியது. 105.14. அடுக்க - பொருந்த. மருண்டு - திகைத்து. 105.15. கோதறு மன்னன் - குற்றமற்ற மன்னன்; சடாயு. எதுக்க - எதிர்க்க.

63. றாவணன்

As the giant-bird fought with Rāvaṇa,
The very embodiment of sin,
With twenty hands and ten heads.
Oh see how Jaṭāyu blocked Rāvaṇa's passage,
Swearing that he was sure to die!
O see how with Jānaki looking on,
(Jānaki of slender waist)
The bird beat its wings against the miscreant,
Rumbling like thunder!
As the wings battered against him,
Rāvaṇa with great effort lifted himself into the air;
And with magic incantations beat Jaṭāyu,
While on earth birds and beasts trembled in fear!
Hearing this noise of battle the seven underworlds
Shivered in fright!
Oh see! How the fire-god,
Realising the grief of Sita in the car,
Created a protective ring of fire around her,
(Sita, greater than all other women!)
The evil-hearted demon tried his best to near her,
While blameless Jaṭāyu resisted his attempt;
Rāvaṇa fought with the noble bird,

படுங்கிரி பத்துச் சிரமு மறுத்து
பறிந்து சடாயு எறிந்தது பாராய்
பிடுங்கிய பத்துச் சிரசு முடியும்
பின்னையும் வந்து முளைப்பது பாராய்

வந்திடும் மானிட ரென்று பயந்து
வாது செய்ராவண னேது சொல்வானாம்
இந்த வனத்தினில் வந்திடு பக்ஷி
என்னுடன் வந்து எதிர்த்திடும் பக்ஷி
சந்ததி முன்திற மென்திற மறிய
சபத முரைத்து எதிர்த்திடும் பக்ஷி
வந்திடு ராவண னுயிர்நிலை யெங்கே
வலது புறத்துப் பெருவிர லென்றான்

பெருகு சடாயு வினுயிர் நிலையெங்கே
பிறகு வலத்தே சிறகதி லென்றான்
நிருத னரக்கன் பெருவிர லறவே
நீண்டிடு ராவணன் மீண்டு பொருதான்

சடாயு வெட்டப்பட்டு விழுதல்

மருவு சடாயு வினிறகதை வெட்ட
மாண்டு சடாயு மயங்கி விழுந்தான்
திருமுகில் மன்னவர் வருகிற மட்டும்
சீவ னிருக்கச் சீதை சபித்தாள்

105.17. படுங்கிரி - சடாயுவால் பிடுங்கப்பட்ட மலை. பத்துச் சிரமும் அறுத்து - பத்து தலைகளையும் அறுத்தெறியவே 105.18. பின்னையும் - மீண்டும். 105.19. மானிடர் - மானிடர்களாகிய இராம, இலட்சுமணர். வாது - போர். 105.20. பக்ஷி - பறவை; சடாயு. 105.21. சந்ததி முன்திற மென்திற மறிய - விஸ்தாரமாக (தெளிவாக) உனது திறமையையும் எனது திறமையையும் அறிய. 105.24. நிருதனரக்கன் - இராக்கத அரக்கன்; இராவணன். பெருவிரல் - கட்டை விரல்; இராவணனால் பொய்யாகத் தன் உயிர்நிலை இருப்பிடம் இதுவென தெரிவித்த விரல். அறவே-துண்டாகவே. 105.25. மருவு-யுத்தத்தில் இராவணனுடன் பொருந்தும். இறகதை வெட்ட - இறக்கை வெட்ட.. 105.26. திருமுகில் மன்னவர் - அழகிய மேகம் போன்ற வர்ணம் உடைய மன்னவர்; இராமர். சீவன் - உயிர். சபித்தாள் - சாபமிட்டாள்; சாபமிடுதல் இங்கு இராவணனை நோக்கி.

Who with the immense power of its wings,
Plucked all the ten heads of Rāvaṇa
And threw them upon the ground.
But see, the heads growing in a trice,
Back on Rāvaṇa's trunk again and again!
Now afraid of Rama and Lakshmaṇa,
Rāvaṇa said thus!
"O bird, in this wood who thus opposed me!
Let us tell each other the secret source of our strength".
"Where is your life" and replied:
"In my right thumb" – all too false!
Rāvaṇa asked Jaṭāyu: "Where is your life enshrined?"
And he replied "In my right wing".
But when the demon lost his right thumb,
It came back in full form again;
But when Rāvaṇa slashed at the right wing of Jaṭāyu,
He fell down mortally hurt.
Sita cursed Rāvaṇa; but she blessed Jaṭāyu
To hold on to his life till the coming of Rama.

சீதையை இராவணன் அசோகவனத்தில் சிறைவைத்தல்

சீதை யிருப்பு ரதத்தை முடுக்கித்
தேடி வளைத்தலை கூடி நடத்தி
ஆதர வந்தர மேபுக விட்டு
அசோக வனத்தில் சிறையிட் டானே

இட்ட திலேசிறை தட்டழி வாக
ஏந்திழை சீதை கலங்கி மயங்க
வட்டம தாயிடு மக்கினி கோட்டை
மங்கையர் கற்புக்கு மாயம் வராமல்
திட்ட மதான விபீஷணன் மகளார்
திரிச்சடை யென்றொரு புரிகுழ லோடே
துட்டவ ரக்கிய ராயிரம் பேர்கள்
தோத்திரச் சீதையைக் காத்திருந் தாரே

தாரணி லங்கை யிராவணன் வந்து
தளத்துடன் மேடையில் வீற்றிருந் தானே
தோரணி மூதா ரழிவது திட்டம்
சூர்ப்பனகைசம் மந்திகெ டுத்தாள்.

மண்டோதரியின் கலக்கம்

விருத்தம்

106. கெடுத்தமொழி பகர்சூர்ப்ப னகைசண் டாளி
கெடுதோசி மாபாவி கெட்டேன் கெட்டேன்
தொடுத்த திருமால்தேவி சீதை தன்னைத்
துயரமுறச் சிறையில்வைத்த தோஷத் தாலே

105.27. முடுக்கி - வேகப்படுத்தி. தேடி வளைத்தலை கூடி நடத்தி - தேடி சீதையை வளைத்து வேகமாக தேரை நடத்தி. 105.28. அந்தரமே - அந்தரத்திலே. புகவிட்டு - செலுத்தி. அசோகவனம் - இலங்கையிலுள்ள ஒரு வனம். 105.29. தட்டழிவாக - மனம் குமைந்து வாடி. மயங்க - மனத்தில் செய்வதறியாது திகைக்க. 105.30. வட்டமதாயிடும் அக்கினி கோட்டை- சீதையின் கற்புக்குப் பங்கம் வராமல் அவளையே காத்து வட்டமாக நிற்கும் நெருப்புக் கோளம். மாயம் - தீமை. 105.31. விபீஷணன் - இராவணனின் சகோதரன். புரிகுழலோடே- சுருண்ட மயிர்க்கற்றை உடைய கூந்தலாள்; திரிசடை. 105.32. துட்டவரக்கியர் - கொடுமை நிறைந்த அரக்கியர். தோத்திரச் சீதை - புகழ்பாடுதற்குரிய சீதை. 105.33. தாரணி - மாலையணிந்த. லங்கை - இலங்கை. தளத்துடன் - அமைச்சர் முதலானோர் கூட்டத்துடன். 105.34. தோரணி - வரலாறு படைத்த அல்லது ஒழுங்கான முறையில் கட்டப்பட்ட. மூதூர்- பழைமையான ஊராம் இலங்கை. சம்மந்தி - பெண். 106.1. கெடுத்த மொழி - இராவணன் மனம் கெட்டுப்போகும்படி கூறிய கூற்று. கெடுதோசி - கெட்ட செயல்கள் புரியும் பாவி.

SITA IMPRISONED BY RĀVAṈA IN ACŌKAVAṈAM

Driving fast the aerial car with Sita on it,
Rāvaṇa raced across the sky towards Lanka!
And there he confined her to Acōkavaṉam.
The imprisoned princess, agitated in mind,
Was sore afraid and wondering what to do,
When a fiery ring guarded her to protect her chastity.
And now good Tiricaṭai, the daughter of Vipīṣaṇa,
Was also there along with a thousand demonesses
Guarding Sita (worthy of praise):
While in durbar, Rāvaṇa sat in state,
With all his ministers and commanders!
But woe to this well-built city,
Sure to be destroyed soon,
The demoness Cūrppaṉakai being the cause!

MAṈṬŌTARI'S AGITATION

106. "O ruined I am, because of Cūrppaṉakai
The evil sinner's words that led
To the imprisonment of Sita, spouse of Tirumāl!

அடுத்தவுந்தன் கழுத்துபோல் யானுந் தாலி
அறுக்கவென்றோ தமையன்பா லறைந்தாய் நீலி
வடுத்தானே யரக்கர்குலம் மாள காலம்
வந்துதடி யிதுநிசமாய் மனம்வைத் தேனே.

இராமன் துயரம்

வைத்தசிறை தனிலிருந்து சீதை வாட
மாபாவி ராவணனும் மகிழ்ச்சை கூட
கொற்றவனார் திருமாலை யிளையோன் றேட
கூடியண்ணர் தனைத்தேடக் கோமான் வாடி
அத்தலத்தில் சீதையற்குத் துணையார் தம்பி
அரக்கர் சூதெப்படியோ அறியோந் தம்பி
குற்றமது செய்தசிறுபிள்ளாய் தம்பி
குலத்தினுக்கே இழுக்குவந்து குடிகே டாமோ.

பெண்சொற் கேட்டு நம்மையா பெரிய வானமது வடைந்தார்
பெண்சொற் கேட்டு யானுமிந்த பிரியமானின் பின்பு வந்தேன்
பெண்சொற் கேட்டு நீயுமிந்தப் பேதை திருவைக் கைநெகிழ்ந்தாய்
பெண்சொற் கேட்க நங்குடிக்குப் பிரமன் விதியின் பயனென்றார்.

106.3 அடுத்தவுந்தன் கழுத்து போல் யானும் - தாலியறுந்த, மங்கலமிழந்த உன்னுடைய கழுத்தைப் போல எனக்கும் தமையன் பாலறைந்தாய் நீலி - 'கொடியவளே! சீதையைக் கடத்திவரச் சொன்னது மூலம் என் தாலியும் இழக்கச் செய்தாய்' என்ற பொருளில். 106.4. வடுத்தானே - அடுத்தானே; அருகில் வந்தானே; இராமர் அரக்கம் குலம் அழிக்கவந்தான் என்றவாறு. வந்துதடி - வந்ததடி. 106.5. மகிழ்ச்சை - மகிழ்ச்சி. 106.6. கொற்றவனார் திருமால் - அரசனாம் இராமன். இளையோன் - இலட்சுமணன். அண்ணர் - அண்ணனாகிய இராமர். கோமான் - அரசன்; இராமன். 106.7. அத்தலத்தில் 'இலட்சுமணா! சீதை தனித்திருக்கும் அத்தலத்தில்' என்ற பொருளில். சூதெப்படியோ - சூழ்ச்சி. குற்றமது செய்த சிறுபிள்ளாய் - 'சீதை பர்னக சாலையில் தனித்து இருக்க நீ அவளைப் பிரிந்து வந்தது சிறுபிள்ளைத்தனம்' என்ற பொருளில். 106.8. குடி கேடாமோ - வம்சத்திற்குக் கேடுவருமோ? 106.9. பெண்சொற்கேட்டு - கைகேயியின் சொல் கேட்டு. ஐயா - தந்தை; தசரதன். வானமது - சொர்க்கமது. 106.10. பெண் சொற் கேட்டு - சீதையின் சொல்கேட்டு. பிரிய மானின் - விருப்பமான மானின். பெண் சொற் கேட்டு - 'நீ போய் அண்ணனைக் காப்பாற்றுவாய்' என்ற சீதையின் சொற் கேட்டு. 106.11. பேதை திருவை - பேதை குணத்தாளாம் சீதையை. கைநெகிழந்தாய் - கை விட்டாய். 106.12. நங்குடிக்கு - நமது குடும்பத்திற்கு.

Like Cūrppaṇakai, I too am going to lose my husband:
Is it for this that you came to your brother
And tempted him to abduct Sita?
Oh, this evil whitch is sure to bring about
The destruction of the demon race;
For Rama is sure to come and destroy all of us".

RAMA'S GRIEF

While Sita was wilting in grief in the grove,
Where she was imprisoned,
And Rāvaṇa was hoping to get her somehow;
Our Lord and Lakshmaṇa together grieved at her loss:
And Rama said to his brother; "I left you to guard her;
By the treachery of the demons
We have lost her now.
You have done wrong by leaving her alone
This has cast a stigma upon the family itself!
Our father, he went up to Heaven,
Listening to the words of a woman!
And I listening to another woman's words,
Went after an enchanting deer;
Again because of a woman's words,
You have let go the Goddess Lakshmi of our family:
Oh, is it fate or a family curse,
That all of us should be ruined by women?"

இராமன் இலக்குவனிடம் வருந்தி கூறும் துயர மொழி

சிந்து

107. விதிப்பயனோ எனதுதம்பி மெல்லியரைக் கைநெகிழ்ந்தாய்
சதிப்பாரே ராக்ஷசர்கள் சானகியைத் தோற்றோமே

தோற்றமுள்ள சானகிக்காய் தொலைக்கவொண் ணாவில்முறித்து
மாற்றவர்கள் பார்த்திருக்க வதுவைசெய்த சீதையரை

சீதையரை நான்பிரிந்து தேகம்வைத்துத் திரிவேனோ
மாதைஎப்போ காண்பதையோ மன்னவரே தம்பியரே

தம்பியரே நாமிருவர் சன்னாசி யானோமே
வெம்பிமனம் நோகுதையோ வெகுதளர்ச்சை யாகுதையா

ஆக்கமுள்ள பாக்கியத்தை யங்குவைத்து வந்தாயே
பாக்யமின்னாள் தனித்திருந்து பதறாளோ கதறாளோ

கதறாளோ வென்றுசொல்லிக் கமலக்கண்ணால் நீர்சொரிய
உதறிமனம் புண்ணாக உபயமன்ன ரோலமிட

சீதை இழப்பு குறித்து இருவரும் உரையாடல்

ஓலமிட்டு மாலிளையோனும் உயர்பன்னகச் சாலைபுக்க
சீலமுள்ள காதலியைச் சீதையரைக் காணாமல்

காணாமல் முகங்கோடி கதறினரே யிருபேரும்
பூணாரம் பூண்டவளே பொன்னரசே மின்னரசே

மின்னரசே பொன்மானை வேணுமென்று கேட்டாயே
என்னளவும் புத்திகெட்டு ஏகினனே மான்பிறகே

107.1. மெல்லியர் - மென்மை குணம் படைத்தவள்; சீதை. 107.2. சதிப்பாரே- அழிவு செய்வாரே. தோற்றோமே - இழந்தோமே. 107.3. தோற்றமுள்ள - அழகிய வடிவமுள்ள. தொலைக்க வொண்ணா - முறிக்க முடியாத. 107.4. மாற்றவர்கள் - ஏனைய அரசர்கள். வதுவை - திருமணம். 107.7. சன்னாசி - சந்நியாசி; துறவி. 107.8. வெம்பி - கலங்கி. நோகுதையோ - வேதனை தருகிறது; ஐயோ. 107.9. ஆக்கமுள்ள பாக்கியம் - வெற்றியைத் தருகின்ற செல்வம். 107.10. பாக்ய மின்னார் - பாக்கியவதியும் மின்னல் போன்ற ஒளியுடைவளுமான சீதை. பதறாளோ-மனம் திகைக்கமாட்டாளோ? 107.11. கமலக் கண்ணால் - தாமரைபோன்ற கண்ணால். நீர் சொரிய - கண்ணீர் வடிய. 107.12. உதறி மனம்- மனம் கலங்கி. உபயமன்னர் - மகிமை பெருந்திய மன்னர்; இராமன். ஓலமிட - அழுவோசை எழுப்ப.107.14. சீலமுள்ள - பெருமையுள்ள. காதலி - அன்புடையவள். 107.15. முகம் கோடி - முகத்தின் வருத்தச் சாயலால் அது கோணிப் போக. 107.16. பூணாரம் பூண்டவளே - அணிகலன்கள் பல அணிந்தவளே. 107.18. என்னளவும் - என் அறிவில் சிறிதும் சிந்திக்காமல் ஏகினனே - சென்றேனே. பிறகே - பின்னால்.

RAMA'S GRIEF-STRICKEN SPEECH TO LAKSHMAṆA

107. "Oh is it destiny, my dear brother,
That you let Sita out of your sight?
The demons are sure to harm her;
And sure we have lost her.
Sita, for whom I broke the mighty bow,
While other kings were looking on
To win her in marriage;
Oh how can I wander about
With life in the body, away from her?
O brother mine! O brother mine!
When can I see Sita again;
We have become both like wandering mendicants!
O my heart is grief-stricken;
My flesh has become weak;
Oh, How could I leave dear Sita, alone?
And I don't know where she is now --
All alone trembling and crying in grief
Wherever she is:"
Thus the Lord lotus-eyed, shed tears,
His heart lacerated with agony.
Thus talking among themselves
On the loss of Sita and crying aloud,
Rama and his brother entered the hermitage,
And not finding the virtuous Sita within,
Rama lamented: "O My golden princess!
(Bright like lightning, adorned with many a jewel!)
You asked for a golden deer;
Fool that I was to listen to you,
And go after the deer.

மான்பிறகே யான்போக வாய்த்ததம்பி காவல்நின்றாய்
நான்பிரிந்து போனபின்பு நடந்தசெய்தி யென்னதம்பி

என்னம்மையே காத்துநின்றேன் இறந்திடும்மா னிட்டசப்தம்
மின்னிளையோர்க் கபயமென பேதகச்சொல் மாதறிந்து

மாதறிந்து என்னையுந்தான் மாயவரைப் பாருமென்றாள்
தீதுவரா தண்ணருக்கே செல்வதில்லை யென்றுரைத்தேன்

செல்வதில்லை என்றுரைக்கத் தேன்மொழியாள் கோபமுற்று
சொல்லாத வார்த்தையொன்று சொன்னதினால் நானும்வந்தேன்

இராமன் சீதையின் பிரிவால் புலம்பல்

வந்தேனென்று தம்பிசெப்ப வயற்றலடித் தேயழுதார்
கந்தநறும் பூங்கொடியைக் கைநெகிழ்த்தோம் தம்பியரே

கைநெகிழ்ந்த சீதையரே காண்பதெப்போ வுன்னையுந்தான்
மெய்நெகிழ்ந்த தம்பியரே விஷமொழி தானேன்பகர்ந்தாய்

ஏன்பகர்ந்தாய் காத்துநிற்கும் இளையோனைக் களையாமல்
தேன்போலே பேசாமல் சிறுத்தமொழி பேசினையே

சிறுத்தமொழி பேசினதால் சிறியோனுமுனை நெகிழ்ந்தான்
மறுத்துமொழி பேசாமல் வந்துவிட்டா னென்னிடத்தில்

என்னிடத்தில் வந்ததம்பி ஏதுசெய்வான் விதிவசமோ
முன்னுமென்றாய் கைகேசி மொழிந்ததனால் வனம்புகுந்தோம்

107.21. என்னம்மை - என் தாய், சீதை. மானிட்ட சப்தம் - மான் எழுப்பிய ஓசை; 'தம்பி வா லட்சுமணனே' என்று எழுப்பிய ஓசை. பேதகச் சொல் - மான் எழுப்பிய மாறுபட்ட, பொருந்தாத சொல். மாது - சீதை. 107.23. மாயவரை - இராமரை. 107.24. செல்வதில்லை - இராமரைக் காண நான் செல்வதில்லை. 107.25. தேன்மொழியாள் - தேன் போன்று இனிமையாகப் பேசுபவள்; சீதை. 107.26. சொல்லாத வார்த்தையொன்று - 'வீழ்ந்த பேருட பாக்கியம் புவி வாழ்ந்த பேர்களுக்கு ஆகுமோ' என்ற தகாத வார்த்தை ஒன்று. 107.28. கந்தநறும் பூங்கொடி - இனிய மணம் வீசும் பூங்கொடி போன்றவள்; சீதை. 107.29. சீதையரே - சீதையரை. 107.30. தம்பியரே - தம்பியரை. விஷமொழி - கொடிய மொழி. 107.31. இளையோன் - இலட்சுமணன். களையாமல் - நீக்காமல். 107.32. சிறுத்தமொழி - சிறுமையான மொழி. 107.33. சிறியோன் - எனக்கு இளையவன்; இலட்சுமணன். 107.34. மறுத்து மொழி பேசாமல் - சீதையே! நீ பேசிய தகாத சொல்லுக்கு மறுமொழி பேசாமல். 107.35. ஏது - என்ன.

O brother! you stood guard at my orders,
When I went after the deer.
"Tell me what happened after I left".
"When I stood guarding my mother,
The dying deer, in your voice called out to be saved;
What happened to you".
But I stoutly stood at my place,
Declaring no harm would touch my brother;
But then my lady (of honeyed speech),
Grew angry with me for refusing to leave the hut
And spoke words unfair and harsh;
And that was why I left my post".

RAMA LAMENTING AT THE SEPARATION OF SITA

Hearing thus how it came about
That Lakshmaṇa deserted his post,
Rama beat his breast and lamented thus:
"O brother, we have lost our fragrant Sita,
Lovely like a flowery liana!
Oh, when will I see my Sita,
Who has gone from us?
Why did you, O, Sita, speak venomous words
Against Lakshmaṇa and thus make him leave your side?
Oh, why did you speak to him words of abuse
Instead of your usual honeyed speech?
It is because of that he let go of you,
And without a word, he came after me.
Oh what could he do,
When you have made him go thus after me?
Is this our fate?
And earlier too, it was fate,
Which made us go into the exile
In the wood, because of Kaikēyi's words;

வனம்புகுந்தே யானுமிப்போ மனைவியில்லாப் பேயானேன்
இனம்பிரிந்த மான்போலே எங்கொளித்தாய் சீதையரே

சீதமுள்ள கார்குயிலே தேனினமே மானினமே
சாதகப்புள் ளரியன்னமே சானகியைக் கண்டீரோ

கண்டீரோ வண்டினமே கருங்குரங்கே மந்தியரே
தண்டரளத் தாராவே சானகியைக் கண்டீரோ

சானகியைத் தேடியிவர் தானழுது வரும்வழிக்கே
தானேயிற கறக்கொடுத்து சடாயுமுனி கிடக்கக்கண்டார்

இராம இலக்குவணர் சடாயுவிடம் விவரம் அறிதல்

கண்டசடாயு முனியைக் காவலவ ரெடுத்தணைத்து
மண்டலத்தி விந்தவிதி வருவானேன் மாதவரே

மாதவரே யென்றுரைக்க மயங்கிய சடாயுசொல்வான்
சீதையரைத் தேரேற்றித் தீபாவி ராவணனும்

ராவணன்றான் கொடுபோனான் நான்மறுத்துப் போரும்செய்தேன்
பூவுலகெல் லாமதிரப் போர்த்தலத்தில் பதஞ்சொல்லி

சொல்லிவந்தா னுயிர்நிலைதான் தொடுத்தபெரு விரலிலென்றான்
நல்லதெந்த னுயிர்நிலைதான் நான்வலது சிறகிலென்றேன்

சிறகறுத்து யெனைமயக்கிச் சீதையரைக் கொடுபோனான்
அறமெலிந்து சானகிப்பெண் ணழுதயர்ந்து போறாள்காண்

107.37. பேயானேன் - பேய் போல் அலைந்து திரிபவனானேன். 107.38. இனம்பிரிந்த மான் போலே - தன் துணையைப் பிரிந்த பெண்மானைப் போல. ஒளித்தாய் - மறைந்தாய். 107.39. சீதமுள்ள - குளிர்ச்சியுள்ள. தேனினமே - வண்டுகளே. 107.40. சாதகப்புள் - வானம்பாடி என்ற பறவை. அரி - கிளி. அன்னம் - ஒரு வகை பறவை. 107.41. மந்தியரே - பெண் குரங்கே. 107.42. தண்தரளத்தாராவே - குளிர்ச்சியான முத்து போல வெண்மையாய் பிரகாசிக்கும் தாராவே. 107.44. இறகு - சிறகு. அற - அற்றுப் போக. சடாயு முனி - சடாயு என்னும் பெயருடைய கழுகு வடிவம் கொண்ட, சீதையை இராவணன் தூக்கிச் செல்லும் பொழுது இராவணனைத் தடுத்தவர். 107.45. காவலர் - அரசர்; இராம இலட்சுமணர். 107.46. மண்டலத்தில் - பூமியில். விதி - துன்பம். மாதவரே - தவமுனியாகிய சடாயுவே. 107.48. தீபாவி - தீய எண்ணமுடைய இராவணன். 107.49. கொடு போனான் - கொண்டு போனான். மறுத்து - இராவணனை மறித்து. 107.50. பதஞ்சொல்லி - அடையாளம் சொல்லி; உயிர்நிலை இருக்கும் அடையாளம் சொல்லி. 107.54. அறமெலிந்து - மிக வாடி. அயர்ந்து - வாடி.

And I, now in the wood, have become
A miserable ghoul without a wife.
O Sita, where have you hidden yourself,
Like a deer that has left its herd?
O warbling dark Kuyil! O bees and beetles!
O herds of deer! O birds of the wood! O lark! O parrots!
O swans! Did you see my Sita?
O black monkeys and their mates! O cool swan, bright as pearl!"
Did you see my Jāṉaki?"
Thus pathetically crying, the princes in search of Sita
Came across the sage Jaṭāyu fallen on the ground,
With its wings cut off.

RAMA AND LAKSHMAṆA LEARN WHAT HAPPENED FROM JAṬĀYU

On seeing the aged Jaṭāyu, the princes lifted him up,
Asking him: "O noble seer! why should you come
To such a pass?" And the dying bird weakly replied:
"The fell fiend Rāvaṇa lifting Sita on to his chariot
Has abducted her; I tried to stop him
And fought with him all over the field,
While the earth trembled:
Treacherously he told me,
That the secret of his life
Was in his right thumb; and I responded;
"My life is concentrated in my right wing."
The cruel false demon cut off my wings,
And taking Sita with him in his chariot,
He flew away in his aerial car.
I saw the grief-stricken Jāṉaki
Weeping and crying, as he went

போறாளே சீதையரும் பொற்றேரின் மீதேறி
வேறாருந் துணையில்லையே மெல்லியரா லவன்வாழ்வு

வாழ்விழந்து நாடிழந்து மணிமுடிதான் பத்திழந்து
தாழ்விழந்து ராவணனும் தான்படுவா னெனச்சபித்தான்

இறந்த சடாயுவை இருவரும் அடக்கம் செய்து ஏகுதல்

சாபமிட்ட நேரத்திலே சடாயுசொர்க்க மேறினரே
கோபமுற்று மாண்டவனைக் கோவிந்தனா ரெடுத்தடக்கி

தடஞ்சேரும் பஞ்சந்தி தற்பணமுஞ் செய்தனரே
அடந்தலன வேடரைப்போல் அறிவழிந்து காடுசுற்றி

சுற்றிஎங்குஞ் சீதையைப்போல் சொருபமொன்றுங் காணாமல்
புத்திகளெல் லாங்கலங்கி பொறிகலங்கித் தட்டழிந்து

தட்டழிந்து தடுமாறித் தம்பியரு மண்ணருமாய்
கெட்டோமே நாமுந்தான் கெடுத்தோமே நம்பதியைப்

பதினாலு வருடமுற்றும் பட்டணஞ் சேராதிருந்தால்
அதிகோபப் பரதனுந்தா னக்கினியில் விழுவானே

இராமன் புலம்பிச் சோர்தல்

வானவரே தானவரே மாதவரே யிந்திரரே
நானுமொரு ஆண்பிறந்து ராசனென்றும் பேரெடுத்து

பேரெடுத்தேன் கானகத்தில் பெண்கொடியைப் பறிகொடுத்தேன்
ஆரிடத்தி லொளித்தானோ அரக்கனென்ன செய்தானோ

107.56. மெல்லியராலவன் வாழ்வு - மென்மை குணம் படைத்த சீதையால் இராவணன் வாழ்வு. 107.57. மணிமுடிதான் பத்திழந்து - இராவணன் தலைமுடிகள் பத்தையும் இழந்து. 107.58. தாழ்விழந்து - தன் நிலையில் தாழ்ந்து. படுவான் - இறப்பான். சபித்தான் - சாபம் கொடுத்தான். 107.59. சொர்க்கமேறினரே - சொர்க்கத்தை அடைந்தாரே. 107.60. மாண்டவனை - இறந்துபோன சடாயுவை. அடக்கி - அடக்கம் செய்து. 107.61. தடஞ்சேரும்- குளம் சேர்ந்த. பஞ்சந்தி தற்பணமுஞ் செய்தனரே - ஈமக்கிரியை மற்றும் தற்பணச் சடங்கு செய்தார்களே. 107.64. பொறி கலங்கி - ஐம்புலன்களும் கலங்கி. தட்டழிந்து - தடுமாறி. 107 66. நாமுந்தான் - நாமிருவர்தான். பதியை - சீதையை. 107.68. அதிகோப - மிகுந்த கோபமுடைய. 107.70. ஆண்பிறந்து - ஆணாகப் பிறந்து. 107. 71. கானகத்தில் - காட்டில். பெண்கொடி - சீதை. பறிகொடுத்தேன் - இழந்தேன். 107.72. ஒளித்தானோ - ஒளித்து வைத்தானோ.

With no one to help her in her distress.
But it is by a woman, sure,
His life is going to be ended;
Losing his country, his crowned heads ten
And falling from his high estate,
Rāvaṇa is sure to meet his end".
Thus with his curse upon the demon,
But blessing the brothers,
Sage Jaṭāyu breathed his last,
And went up to heaven.

THE PRINCESS PERFORMING THE FUNERAL RITES FOR JAṬĀYU

The two princes then performed the obsequies,
To the dead king of the eagles,
And did *tarpaṇam* proper,
As if they were the next of kin.
And then like hunters crazed,
They searched, the two of them,
High and low in the forest;
And not finding any one resembling Sita,
Their wits all lost, their five senses confused,
Agitated and in agony, the princes tried still,
To trace the missing princess: "Lost we are!
We have lost also our life and future!
Oh, if after fourteen years,
We return not to the capital,
Parata will also fall into the fire!"

RAMA'S LAMENT

"O God in heaven! O holy sages!
O celestials! O Intira! I was born
In a royal family as the son of a great king;
Here I am wandering now, in search
Of my beautiful wife in the forest.
Oh, where has he hidden her?-
What has the demon done to her?

செய்யபுகழ் தம்பியரும் சிறந்தீன்ற தாய்மாரும்
தையலெங்கே யென்றுரைத்தால் தானவற்கு எதுரைப்பேன்

சொல்லரிய மந்திரிமார் தோற்றமுள்ள பட்டணத்தார்
பல்சனமுந் தாரமில்லா பாவியென்று பகருவரே

பகருவரே வனத்தில்வந்து பாரிபறி கொடுத்தேனே
சகலோருந் தான்நகைக்க தானேயுட லெடுத்தேனே

உடலெடுத்து மென்னபலன் உயிரிருந்து மென்னபலன்
கடல்புகுந்து மாளுவதே கருமமென்று துயரமுற்றான்

துயரமுற்றுச் சோலையிலே தொண்ணூறு நாட்டிரிந்து
செயலழிந்து பசிபெருகித் தீன்கனியுந் தீண்டாமல்

தீண்டாத பாவியல்லோ சீதையரைக் கொடுபோனான்
மாண்டலுஞ் சீதையைப் போல் மனைவிவரக் காண்பேனோ

காண்பேனோ வென்றிவர்கள் கானகத்து வேடரைப்போல்
மாண்புடைய யிருபேரும் மானைபிரிந்த வேடரைப்போல்

வேடரைப்போல் தட்டழிந்து வேர்வைகொண்டா ராலடியில்
தேடுமிளை யோன்மடியில் ஸ்ரீராமன் பள்ளிகொண்டார்

அனுமன் இராமஇலக்குவனரைக் காணல்

பள்ளிகொண்டா ராலடியில் பச்சைமாலு மங்கிருக்க
தெள்ளுதமிழ் வாளனுமான் சிறந்தஆலின் மீதேறி

மேலேறி யிலைபறித்து மேவகர்னர்க் கர்ச்சனையாய்
ஆலிலைதான் வந்துவிழ அறிந்திளையோன் சிலையெடுக்க

107.73. செய்யபுகழ் தம்பியர் - மிகுந்த புகழுடைய தம்பியான பரதன். 107.74. தையலெங்கே- பெண்ணெங்கே; சீதை எங்கே. தானவற்கு - நான் அவர்களிடம். 107.76. தாரமில்லா - மனைவியில்லாத. 107.77. பாரி - மனைவி. 107.80. கருமம் - செயல். 107.82. தீன்கனி - சுவையான பழங்கள் 107.86. மாண்புடையயிருபேர் - மாட்சிமைக்குரிய இருவர்களான இராமன், இலட்சுமணன். 107.87. தட்டழிந்து - செய்வதறியாது திகைத்து. ஆலடியில் - ஆலமரத்தின் அடியில். 107.88. பள்ளி கொண்டார் - துயில் கொண்டார். 107.90. தெள்ளுதமிழ் வாளனுமான் - தெளிந்த தமிழ்மொழியில் வல்லவனான அனுமான். 107.91. மேகவர்னர் - மேகம் போன்ற கரிய நிறமுடையவர்; இராமர். அர்ச்சனையாய் - பூசனையாய். 107.92. இளையோன் - இலட்சுமணன். சிலையெடுக்க - வில்லை எடுக்க.

Oh, what can I reply
To my brothers in the city and my mothers
If they ask me "Where is Sita?"
Oh, my ministers rare, and all my people,
All of them will call me a sinner,
Who has lost his wife.
Surely they will abuse me;
For I have given away my wife in the forest.
Every one will laugh at me,
For I have given away my wife in the forest.
Every one will laugh at me,
For I have not been able to guard her well!
Oh, of what use is this body or the life within?
It were better that I give up my life.
Drowning myself in the sea".
For ninety days on end
Thus in grief, in grove and wood,
Without touching fruit of any kind
Baffled and bewildered they wandered;
"Oh is it not a terrible sinner vile
Who has taken away my Sita?
Can I ever come across a spouse like Sita?"
Thus the noble two verily like hunters
Who had missed their quarry, roamed about:
Much fatigued and tired, they came
To a big banyan tree;
And Rama laying his head upon Lakshmaṇa's lap
Reclined to rest, for a while.

ANUMĀN SEEING RAMA AND LAKSHMAṆA

As the emerald - hued Lord relaxed under the tree,
Anumān who was on a branch of the tree,
Plucked the banyan leaves and dropped them
By way of offerings, up on the Lord!
Seeing leaves fall from above,
On a sudden Lakshmaṇa seized his bow,

அனுமன் சரணாகதி

சிலையெடுக்கத் துடையசைய ஸ்ரீராமன் கண்விழித்து
மலையெடுத்த திண்புயனே வானரத்தை எய்யாதே

வானரத்தி லிவன்வீரன் வளர்கவச குண்டலங்கள்
தானியிருக்குஞ் சமர்த்தனைத்தான் தம்பிகையா லெய்வர்களோ

எய்யாதே என்றுரைக்க இறங்கிவந்து வாளனுமான்
கையாலே அடிதொழுது கார்வர்னரே சரணமென்றான்.

விருத்தம்

108. சரண கீர்த்தன சுந்த ராதிசிவ சங்க ராதிபரன் மைத்துனா
சம்பு மாதவ முகுந்த னேசரா சரங்கள் யாவையும் மகிழ்ந்தவா
கிரண பூஷண சுகந்த வாசவா கிளந்த கேசவரி கிட்டினா
கிரியி டாதிசெய்த சரதாதிபதி கௌதபோச னாதி மைந்தனே
புரண பூரண கற்கியா பரசுராமனார் சிலைகொள் பூமனே
புங்க வாதிபல பத்திராநர சிங்க ரூபமுகில் மச்சயா
தரணி யானதடி வைத்த ளந்தசத சம்பு மோகன சகத்திரா
தாம கூர்மரெகு ராம ராகவா சதாங்கு பொற்பத சரணமே.

107.93. துடையசைய - இலட்சுமணன் வில்லெடுத்த வேகத்தால் அவர் தொடை அசைய. 107.94. திண்புயனே - வலிமையான தோள் உடையவனே. வானரம் - குரங்கு. 107.95. கவச குண்டலங்கள் - காதணியிலொன்று; கவச குண்டலங்கள் அனுமன் அணிந்தமையால் அவன் குரங்கன்று; அறிவில் சிறந்தவன் என்ற குறிப்பை இராமர் இதன் வழி தெரிவித்தார். 107.96 எய்வார்களோ - அம்பால் எய்வார்களா; எய்யமாட்டார்கள் என்ற பொருளில். 107.98. கார்வர்னரே - மழை வர்ண நிறமுடையவரே; இராமரே. சரணம் - வணக்கம். 108.1. சரண கீர்த்தன சுந்தராதி சிவ சங்கராதி பரன் மைத்துனா - அடியவர்கள் வணங்கிப் பாடும் அழகுடைய சிவசங்கரனின் மைத்துனா; விஷ்ணுவே! சம்பு - திருமால். மாதவ - விஷ்ணு. முகுந்தனே - விஷ்ணுவே! சராசரங்கள் - பிரபஞ்சம். மகிழ்ந்தவா - மகிழும் படி திகழ்பவனே! திருமாலே!! 108.2. கிரண பூஷண சுகந்த வாசவா - ஒளி பொருந்திய ஆபரணங்கள் அணிந்த மணம் வீசும் திருமாலே! கேசவரி கிட்டினா - கேசவன், அரி, கிருஷ்ணன் என்பன திருமாலை குறித்தது. கிரியிடாதி செய் தசரதாதி ப தி கௌதபோசனாதி மைந்தன் - மலைகள் சூழ்ந்த அழகிய முறையில் செய்யப்பட்ட அயோத்தி நகர் தசரதன் மைந்தன்; இராமன். 108.3. புரண பூரண கற்கி - முழுமையான பத்தாவது அவதாரம் எடுக்கும் 'கல்கி' என்ற தெய்வமே! பரசுராமனார் சிலைகொள் பூமனே - பரசுராமனின் வலிமையான வில்லைக் கைப்பற்றிய அரசனே! இராமனே! புங்கவாதி - அம்பு விடுதலில் வல்லவனே; இராமனே! பலபத்திரா - மிகுந்த பலசாலியே; இராமா! நரசிங்க ரூப - நரசிங்க வடிவம் எடுத்து இரணியனைக்கொன்ற வடிவுடையவனே; இராமா! முகில் மச்சயா - முகில் வர்ணத்துடன் மீன் அவதாரம் எடுத்தவனே; இராமா! 108.4. தரணியானது அடிவைத்து அளந்த சதசம்பு - உலகை ஓரடியில் அளந்த நிலைத்த விஷ்ணு; இராமனே! மோகன சகத்திரா - ஆயிரம் அழகிய நாமங்களை உடையவனே; இராமனே! தாமகூர்ம ரெகு ராமராகவா - ஆமை அவதாரமெடுத்துப் பூமியைக் காத்த ராகவனே! இராமனே! சதாங்க - தேரையுடையவனே; இராமனே. பொற்பதம் - பொன்போன்ற பாதம்.

Aftaid of some enemy in the tree;
When by the sudden movement disturbed,
Rama woke up from his nap,
And said: "O Thou with arms sturdy like hills!
Don't shoot the monkey; look at it,
With its body armour and its ear - rings!
Sure, it is not an ordinary monkey; do not shoot!"
As he said thus, Aṉumāṉ climbed down
And with folded hands, prostrated before Rama
In prayerful adoration.

108. "Refuge O Lord! Lord Campu! Mukunda!
Refuge, Primal Lord!
Lord who is brother-in-law to Sivacaṅkara!
Lord who delights all the universe!
Lord with radiant beauty and fragrance,
Kēcava! Harikrishna! Noble son of Tacarata!
Lord of Ayōtti surrounded by hills!
O Lord, who is to come yet
As the tenth avatar of Kalki!
O Lord! who seized in forfeit
The bow of Paracurāma! O Lord expert in archery!
Lord Palatēva! Naraciṅka Lord Maccai!
O Lord who with a single step measured the earth!
O Lord with a thousand names!
O Lord Kūrma! Rakurāma!
Refuge, refuge at your golden feet!"

வேறு

109\. சரணஞ் சரணம் ரெகுராமராகவ சம்பு முகுந்தா தவசரணம்
மரணப் பிறவிதவிர்க் கவரும் மாதவ சீதரனே சரணம்
சீதர நாதர் ஸ்ரீகிட்டிணா செயகோ பாலா தவசரணம்
பூதலம் யாவும ளந்தவனே பூபதி ராகவனே சரணம்
ராகவ நாதாதவ சரணம் நரசிங்க ரூபாநம சரணம்
கோகுல சீதை மணாளபத கோவிந்தா அரிநம சரணம்
கோவிந்தா கயிலா சபதி குணமைத்து னனேநம சரணம்
வாவிந்தாதி கணேச குகன் மாதுல நீதாநம சரணம்
நீதமுடன் சரணம் பணிய நீத மாமுகிலேது சொல்வார்
மாதவ கோத்திர பூதரனே வானரர் கோனேநீ யார்சொல்

இராமனிடம் அனுமன் தன்னை அறிமுகம் செய்தல்

சொல்லிய அஞ்சனை மைந்தனும்நான் சோதி விந்திர துரந்தரனான்
வல்லி வயற்றிலு தித்தவன்யான் மாருத ராயன் மகிழ்ந்தவன்யான்
நானே யதிபெல தோழனுமாம் ராமா வென்பேர் வாளனுமான்
கோனே நின்பதமே பணிய கோடி வரங்கள் புரிந்தவனான்
புரியிது கிஷ்கிந்தா கிரியில் பூபதி வாலிசுக் கிரீபனுமாய்

இருபத்து நாலுபடைத் தலைவர் எழுபது வெள்ளம் கவித்திரளும்
திரளாயரசு செலுத்தை யிலே திரைவா யமுதம் மிகக்கடையக்

109.1. சம்பு - திருமால். முகுந்தா - திருமாலே! 109.2. சீதரன் - இலட்சுமியை மார்பிலுடையவன்; திருமால். 109.3. ஸ்ரீகிட்டினா - ஸ்ரீ கிருஷ்ணா. கோபாலா - கிருஷ்ணா. 109.4. பூதலம் - பூமி. பூபதி - பூமிக்கு அதிபதி; அரசன். 109.5. நாதா - நாத வடிவினனே; திருமாலே! நரசிங்க ரூபா - நரசிங்க அவதாரம் கொண்ட வடிவினனே. 109.7. கயிலாசபதி குண மைத்துனனே - சிவபெருமானின் மைத்துனனே; திருமாலே! 109.8. வாவிந்தாதி - குளக்கரை முதலாகியவற்றில் எழுந்தருளியிருக்கும். கணேசன் - விநாயகர். குகன் - முருகன். மாதுல - மாமனே. நீதா - நிலை பெற்றவனே. 109.9. நீதயுடன் - முறையுடன். மாமுகில் - பெரிய மழைமேகம்; மழைமேகம் போன்ற இராமன். 109.10. மாதவ கோத்திர பூதரனே - மாதவத்தைச் செய்யும் சிறந்த கோத்திரத்தில் பிறந்த அரசனே. வானரர் கோனே- குரங்குகளின் அரசனே. 109.11. அஞ்சனை - அனுமன் தாயின் பெயர். மைந்தன் - புதல்வன். சோதிவிந்திர துரந்திரன் நான் - சோதி வடிவாய்த் திகழும் இந்திரன் போன்ற வலிமையாளன் நான். 109.12. வல்லி - அஞ்சனை; அனுமன் தாய். மாருதராயன் - வாயு பகவான். 109.13. அதிபல தோழன் - அதிபலசாலியான சுக்கிரீவன் நண்பன். 109.14. கோனே - அரசே. பதமே- பாதத்தையே. 109.15. கிஷ்கிந்தா கிரி - கிஷ்கிந்தை மலை. பூபதி - அரசன். வாலி - கிஷ்கிந்தை மலையின் அரசன். சுக்கிரீபன் - வாலியின் இளையவன். 109.16. வெள்ளம் - மிகப்பெரிய அளவைக் குறிக்கும் ஒரெண். கவித்திரள் - குரங்குக் கூட்டம். 109.17. திரைவாய்- திரைகளுடைய கடல். கடைய - மத்தால் கடைய.

109. "Refuge, Refuge Rakurāma! Rākava!
Mukunta! Sritara! Who alone
Can give redemption from the cycle
Of birth and death! O Lord of primal sound!
Gopala! Refuge, O Lord who measured
The entire earth! Rakurāma refuge!
Rākava refuge! Naracinka refuge!
Kōvinta refuge! Hari."
Refuge, O Lord who is the brother-in-law of the Lord at Kailas!
O uncle of the God enshrined near the pools and ponds,
Ganesa, and his brother Kukan̲! O Lord well - established!
Refuge!" Thus when he bowed at Rama's feet,
The cloud - hued Lord enquired;
"O who may you be, best of monkeys?"

AN̲UMĀN̲ INTRODUCING HIMSELF TO RAMA

Añcan̲ēya thus did speak:" Strong like Intira am I;
I was born in the womb of Āñcan̲a,
To delight the God of the winds!
I am the friend of mighty Cukkirīva!
My name is An̲uman̲; myriad boons
Must I have acquired, to be at your feet!
This is Kishkinta city ruled by Vāli and Cukkirīva,
With twenty four army chiefs
Commanding seventy *veḷḷam* monkeys.
When once the billowy ocean of milk was churned,

கரமாய் முன்பு பிறந்திடவே கார்குழல் தாரையும் பின்புவர
பின்புவருங் கொடிதார கையைப் பெலமுள்ள வாலியெனக் கெனவும்
முன்புபிறந் ததுனக் கெனவும் முடிசுக் ரீவன் மொழிந்ததினால்

வாலியைக் கொல்ல இராமன் முடிவெடுத்தல்

நாலாயிர வருடம் சமராய் ராமர் கண்டிடவுங் கொடிதே
மாலா யிந்த வழக்கினையே வன்பகை தீர்ப்பது யென்சிலையே
நின்செயல் வாலியை வென்றிடிலே நிலைசுக் ரீபனும் நின்றிடிலே
உன்பணி ஏவல்புரிந் திடுவான் ஓம்நம நாரணனே சரணம்
நாரணர் செப்புவார் மாருதியே நமது வருத்தம தாரறிவர்
பூரண யோத்தித் தசரதனார் புத்திரர் நால்வரில் முந்தினயாம்
முந்திய தாய்கைகேசி யுரைமொழி மாறாவழி வனம டைய
வந்தொரு பாதக ராவணனும் மனைவியை வந்து கவர்ந்ததினால்
அதுவே தனையை எவர்க்கறை வேனடை வாயெவரை யடுத்திடுவேன்
இதுவே துயரமிகுந் ததுகாண் எவர்போய் வருவா ரிலங்கையிலே
இலங்கை என்பதை ஒருதோளில் ராவணன் வங்கிஷ மொருதோளில்
மலங்கிய மாதரை என்சிரசில் மகன்கொடு வருவேன் மாதவனே.

அனுமன் உரை

விருத்தம்

110. மாதவனே ராவணனை வதைக்கும் மாலே வானரவெள் ளச்சேனை எழுப
தோடே
சீதரனே சுக்ரீப னடிமை யாவான் செபவாலி யொருவனைநீர் செயிப்பீ
ரையா

109.18. கரமாய் - கழுதை; இங்கு கழுதை வாகனத்தையுடைய மூதேவியைக் குறித்தது. 109.19. கொடி தாரகை - கொடி போன்ற தாரை என்னும் பெண்; வாலி சுக்கிரீபன் நிபந்தனைப்படி இவள் சுக்கிரீபன் மனைவி ஆக வேண்டியவள். 109.21. சமராய் - போராய். 109.22. மாலாய் இந்த வழக்கினை - திருமாலே! வாலி சுக்கிரீவன் பகையை. என்சிலையே- என் வில்லே! இங்கு அனுமன் வில். 109.23. நின்செயல் - இராமா! உன் செயல். நின்றிடிலே- உயிரோடு இருந்தால். 109.25. நாரணர் - நாராயணர்; இராமர். மாருதி - அனுமன். 109.26. முந்தினயாம் - மூத்தவனான நான். 109.27. வனமடைய - காடடைய. 109.28. பாதக - துரோக. 109.29. எவர்க்கறைவேன் - எவரிடம் கூறுவேன். அடைவாய் - என்னோடு வருவாய். வரை - மலை. அடுத்திடுவேன் - சேர்ந்திடுவேன் 109.30. இதுவே துயரமிகுந்தது காண் - சீதையைப் பிரிந்த இந்த எண்ணமே துயரத்தை வளர்க்கின்றது பார். 109.31. வங்கிஷம் - வமிசம்; இங்கு இராவணன் குடும்பத்தார். 109.32. மலங்கிய மாதரை - வாடிய சீதையை. சிரசில் - தலையில். மகன் - இராமா! உன் மகன் போன்ற நான்; இங்கு அனுமனைக் குறித்தது. மாதவனே - இராமா. 110.1. வதைக்கும் - கொல்லும். மாலே - திருமாலே; இராமனே. வெள்ளம் - ஒரு பேரெண்ணைக் குறிக்கும் சொல். 110.2. சீதரனே- திருமகளை மார்பில் கொண்டவனே; இராமனே! செயவாலி - வெற்றி பொருந்திய வாலி.

Upon an ass was born *Mūtēvi* first,
And then Tārai with lovely dark tresses:
Breaking their agreement that Cukkirīva could take
Whoever came first,
Vāli took the liana - like Tārai for himself!
Their enmity resulted in a battle
For four thousand years!
"Cruel it is"' said Rama,
"This dispute I will settle with my bow".
And Aṉumaṉ said:"If you defeat Vāli,
And if Cukkirīva were to come out victorious,
He would carry out your behests, O Nārāyaṇa!"
And the Lord replied;" Māruti, who knows my grief?
I am the eldest of the four sons
Of Tacarata of Ayōtti! in obedience
To my stepmother, Kaikēyi, we came to the forest,
Where the evil Rāvaṇa abducted my wife.
To whom shall I speak about my agony?
To whom can I turn for assistance?
This thought causes ever - increasing pain in me.
"Who will go to Laṅka to trace here?"

110. And Aṉumaṉ said: "I will go to Laṅka,
On one shoulder I will bring Rāvaṇa
And his entire race on the other!
And the afflicted Sita on my head!
I, your son will do so!
Lord: who is sure to destroy Rāvaṇa!
With seventy *veḷḷam* vāṉara armies,
Cukkirīva will become your slave,
Provided you conquer the victorious Vāli,

காதலியைக் கண்டுவர நானே யுண்டு கடலடைக்க விஸ்வகர்மன்
நளன்தா னுண்டு
தீதரக்க ருயிர்முடிக்க ராமா வுந்தன் தீக்கரத்தில் சிலையுண்டு
செயங்கொள் வோமே.

அனுமன் வழி இராமனைச் சுக்கிரீவன் காணுதல்

சிந்து

111. செயமாருதி நீயே சுக்ரீபனைச் சென்று கொடுவா
செய்தியான பின்புசெப்பு றேன்என எய்தினான் நீலகிரிக்கே
நயமா யனுமானு மினிப்பய மேதெனப் புரிந்து
ராமனைக் கண்டவா றெல்லாம் சுக்கிரீபனைக் கண்டுகூறினான்
கூறியே சுக்கிரீபனைச் சேர்த்துக்கொண்டு மாருதி வந்துதான்
கோவிந்தா அரிசரண மென்று கூடினான் மனம்நாடினான்
தேறியே நாலாறு படைத் தலைவர் கவிச்சேனை
திருமால் திருப்பாதங் கண்டு தொழுதார் களப்போது
போதுவாலி யிடத்திலே சமர்போக்கு வாசுக்கி ரீபா
பொறைகேள் சரல்மறை வாய்சரம் போக்குவோம் பகைநீக்குவோம்

சுக்கிரீவன் வாலி போர்

சீதரனிது செப்பவே வாலிசெலுத்தும் படைவீட்டில்
சென்றான் அதைத்திடமாகவே படைவீட்டிலது கண்டான் பெலவாலி
வாலிதான் கண்டுதம்பி நீகிட்ட வாடா பொருவாடா
வதைப்பேனுடல் சிதைப்பே னிந்த வானரப் படைகாணவே

110.3. காதலியை - இராமா! உன் காதலியை; சீதையை. கடலடைக்க - இராமேஸ்வரத்திற்கும் இலங்கைக்கும் இடையே உள்ள கடல்நீரை அடைக்க. விஸ்வகர்மன் - தேவ தச்சன். நளன் - விஸ்வகர்மாவிற்குப் பிறந்த குரங்குச் சாதியன். 110.4. தீதரக்கர் - கொடிய அரக்கர். தீக்கரம் - வலிமையான கரம். சிலை - வில். 111.1. செயமாருதி - வெற்றி பொருந்திய அனுமான். கொடுவா - கொண்டுவா. செய்தியான பின்பு செப்புகிறேன். - 'செய்தியைச் சுக்கிரீவனிடம் பிறகு நான் கூறுகிறேன்' என இராமன் அனுமனிடம் கூற. நீலகிரிக்கே - சுக்கிரீவன் உறையும் மலையான ருச்யமுக பர்வதத்திற்கே. 111.2. நயமாய் - சிறப்பாய். 111.3. கோவிந்தா, அரி - திருமாலே! இங்கு இராமனைக் குறித்தது. மனம் நாடினான் - மனத்துள் துதித்தான். 111.4. கவிச்சேனை - குரங்குப் படைகள். 111.5. சமர்போக்குவா - போருக்கு போய்வா. பொறை கேள் - மலை போன்றவனே நான் கூறுவதைக் கேள்; பொறுமைக்குணம் வாய்ந்தவனே என்றும் பொருள் படும். சரல் மறைவாய் - சிறு கல்குன்றுக்குப் பின் நின்று மறைவாக. சரம் போக்குவோம் - வாலி மீது அம்பு விடுகிறேன். 111.6. சீதரன் - இராமன். படைவீட்டில் - பாசறையில். அதைத் திடமாகவே - சுக்கிரீவன் தன் பாசறைக்கு வருவதை தெளிவாகவே. 111.7. கிட்ட வாடா - அருகில் வாடா. பொருவாடா - போர் செய்ய வருவாயடா. வதைப்பேன் - கொல்லுவேன்.

I am here to find out her where abouts;
And Visvakarma's son Naḷaṉ is there,
To build a bridge across the sea"
Tp end the lives of the evil demons!
Your fiery hand has a deadly bow,
To consume the demon's lives!
Surely, victory will be ours!"

RAMA MEETING CUKKIRĪVA WITH AṈUMAṈ'S HELP

111. "Victorious Māruti! go thou and bring Cukkirīva here:
I shall speak further after he comes".
And Aṉumāṉ went to the blue - mountain (Riṣimuka)[97]
And told Cukkirīva all that transpired
Between him and Rama; and returning with Cukkirīva
Hailed Rama as Kōvinta Hari with a prayerful heart!
Followed by the monkey regiments he prostrated
At the feet of the king of the human race Rama,
The Lord then told him; "By the side of the flowery pond,
Cukkirīva, begin your fight with Vāli:
We will shoot from the outcrop of rock
And put an end to your enemy's life!"

THE FIGHT BETWEEN CUKKIRĪVA AND VĀLI

Thus emboldened by Rama's assurance,
Cukkirīva went to the encampment of Vāli.
Seeing his brother's approach, Vāli shouted:
"Sirrah come thou near, to fight with me!
I will kill you; I will smash you.
Before the eyes of these armies", he roared;

97. Riṣimuka - Mountain where lived the sage Matanka forbidden to Vāli.

ஆலித்தான் கொக்கரித்தான் சென்றடித்தான் மாறிப் பிடித்தான்
அண்டமான திலெறிந்தான் மண்டிரெண்டு பேர்களும் பொருதார்
பொருதான் பெலவாலி திறப்பொலி வும்புய வலிவும்
புயமேகண்டு திருமா லதிசெய மேதெனக் கேட்டார்

அனுமன் வேண்டுகோள்

விருதா புகழனுமான் வந்துவிண் ணப்பமுறை செய்குவான்
வேதனே யரிநாதனே யிந்தவிந்த வாலியை வெல்லவே 10
விந்தை யேழுமரா மரத்தை விழவே துணிந்திடுவார்
வெற்றிதுந்துபி யத்தி தூக்குவர் வெல்வரே யிதுகொல்லுவர்
அந்தவார்த் தையும்துந்துபி எலும்பான கீர்த்தியு மறிந்தார்
ஆனயேழு மராமரஞ் சுற்றிவாளை நாகமென் றெறிந்தார்
நாகலோகத் திலெறிந்தான் சுக்கி ரீவனைப் பெலவாலி
நாட்டினான் புயந்தீட் டினான்துடை தட்டினான் புயவாலி

சுக்கிரீவன் ராமனிடம் அபயமடைதல்

ஆகமானது புழுங்கி மனம்நடுங்கி சுக்கி ரீபன்
அண்ணன் வாலியைக் கண்ணன்மாய்க் குமென்றடித்தான்
விண்ணில் விடுத்தான்

111.8. ஆலித்தான் - சந்தோஷித்தான். கொக்கரித்தான் - கர்ச்சித்தான். சென்றடித்தான் - சுக்கிரீவனைச் சென்று அடித்தான். அண்டமானதில் - வானத்தை நோக்கி. மண்டி - சேர்ந்து. ரெண்டு - இரண்டு. 111.9. திறப்பொலிவும் - வலிமையுடன் கூடிய அழகும். புய வலிவும்- தோள்களின் வலிமையையும். திருமாலதிசெய மேதனக் கேட்டார் - திருமால் அவதாரமாகிய இராமர் வாலி வலிமைதான் அதிசயமானது எனக் கூறினார். 111.10. விருதா - ஒப்புமையில்லா. விண்ணப்பமுறை - வேண்டுகோள். வேதனே - வேதங்களுக்குத் தலைவனே; இராமனே! அரிநாதனே - திருமாலே; இராமனே! விந்தவாலியை - வலிமையான வாலியை. 111.11. விந்தை - வியப்பான. ஏழு மராமரம் - நேர்கோட்டிலுள்ள ஏழு அரச மரம். துணிந்திடுவார் - வெட்டிடுவார். வெற்றி துந்துபி யத்தி - வாலியால் வெல்லப்பட்ட துந்துபி என்ற அரக்கனின் எலும்பு. வெல்வரே யிது கொல்லுவார் —'ஏழு மராமத்தைத் துளைப்பவரும் துந்துபி என்ற அரக்கனின் எலும்பைக் காலால் எற்றுபவருமே வாலியைக் கொல்லுவார்' என்ற பொருளில். 111.12. துந்துபி எலும்பான கீர்த்தியு மறிந்தார்- துந்துபியாகிய அரக்கன் வாலியால் கொல்லப்பட்டு மலைபோல் எலும்பாகக் குவிக்கப்பட்ட மேன்மையும் அறிந்தார். நாகம் - பாம்பு. என்றெறிந்தார் - பாம்பு சீறியது போல வீசி எறிந்தார். 111.13. நாகலோகம் - பாதாள லோகம். நாட்டினான் - புகழை நாட்டினான். புயந்தீட்டினான் - தோளை வலிமையாக்கினான். துடை - தொடை. 111.14. ஆகமானது - மனமானது. புழுங்கி - வெப்பமடைந்து. கண்ணன் - இராமன். மாய்க்கும் - கொல்வான். விண்ணில் விடுத்தனன் - வாலியின் அடியால் சுக்கிரீபன் வானத்தை நோக்கி எறியப்பட்டான்.

And going nearer, he beat him;
Seizing him, he threw him up in the air:
In close combat fierce, the two brothers fought!
On seeing the great prowess of Vāli,
Rama marvelled at their well-matched fight.

AṈUMAṈ'S REQUEST

Aṉumaṉ of peerless fame, this plea did make,
To Rama Lord of the Vedas:" O, Māl! he who can cut down
These seven sal trees huge, alone,
Can defeat Vāli; and he who can lift
The skelcton of Tuntupi"; and the Lord
Cut off the seven trees, and flicked with his foot
The monstrous Tuntubi frame afar!
While mighty Vāli in the meantime had thrown Cukkirīva
Deep down into the netherworld,
And proudly beat upon his own arms and thighs!.

CUKKIRĪVA FALLING AT RAMA'S FEET FOR PROTECTION

Thrown up again by Vāli into the sky
And falling with a thud back on the earth,

விண்ணிலே சென்றுமீண்டு வந்து விழுந்தான் சுக்ரீபன்
மெலிந்தே ரெகுராமன் பாதத்தில் விழுந்தான் சுக்கிரீபன் 15

இராமன் சுக்கிரீவனிடம் மீண்டும் போர்செய்ய கூறுதல்

அண்ணன் வாலியும் நீயுமொரு அச்சா யிருந்ததினால்
அடையாளங் கள்தெரி யாமலேபடை ஏவின திலையான்

இலைசேர் கருவிஷ்ணு காந்திப்பூ இடக்காதடை யாளஞ்செய்
இனிமேல் சிலைதொடுவோங் கணைவிடுவோம் வாலி படுவான்
தலைசே ரிடக்காதில் வரித்தரும் பூவடை யாளம்
தரித்தான் கொக்கரித்தான் எதிர்தாவித் தான்பகை பாவித்தான்
பாவித்தான் பெலவாலி யோடமர் பற்றினான் சுக்கிரீபன்
படர்த்தான் வாலிதுடர்ந்தான் விண்ணலெறிந் தான்மண்ணில்
பிறிந்தான்

வாலி மார்பில் இராமர் அம்பு எய்தல்

மேவித்தான் தம்பிவிண் ணிலேசெல்ல வியன்வாலி தனிக்கவே
மேகவண்ணரும் நாகமானதில் மேலமா ராமர் துணிந்தார் 20
துணித்தவர் தனுக்கொடி யாலெற்றி துந்துபி யெலும்பெறிந்தார்
தொட்டனர் சரம்விட்டனர் மார்பில் பட்டதே கணைவாலிக்குப்
பிணிதான் கையில்பிடித்தான் கண்டு பிரண்டான் விழுந்துருண்டான்
பித்தனே கத்தபத்தனே பிழைத்தாயே யொழித்தெய் ததனாலே

111.16. அச்சாய் - ஒரே வடிவமாய். படை ஏவினதிலை யான் - 'நீங்கள் இருவரும் ஒரே வடிவத்தினராய் இருந்ததால் நான் அம்பு செலுத்தவில்லை' என இராமன் கூறியவாறு. 111.17. இலைசேர் கருவிஷ்ணு காந்திப்பூ - இலையோடு கூடிய கருவிஷ்ணு காந்தி மலர். இடக்காதடையாளம் - இடக்காதில் சொருகி அடையாளம். சிலைதொடுவோம் - வில்லிலிருந்து அம்பு தொடுப்பேன். கணை - அம்பு. படுவான் - இறப்பான். 111.18. தலைசேர் இடக்காதில் - தலையோடு சேர்ந்த இடக்காதில். கொக்கரித்தான் - பேரோசையிட்டான். எதிர் தாவித்தான் பகை பாவித்தான் - வாலியின் எதிரே சென்று தாவி அவனோடு பகையை வளர்த்தான். 111.19. அமர் பற்றினான் - போர் தொடங்கினான். துடர்ந்தான் - தொடர்ந்தான். பிறிந்தான் - புரட்டினான். 111.20. மேவித்தான் - பொருந்தித்தான். தம்பி - சுக்கிரீவன். வியன்வாலி - வலிமையான வாலி. தனிக்கவே - தனித்திருக்கவே. நாகமானதில் மேலமா ராமர் துணித்தார் - மேன்மையான பெரிய மராமரத்தை ராமர் அம்பால் துளைத்தார். 111.21 தனுக்கொடியால் எற்றி துந்துபி எலும்பு எறிந்தார் - வில்லினால் துந்துபி எனும் அரக்கனது எலும்பு கூட்டத்தையும் சிதறும்படி செய்தார். தொட்டனர் சரம் - அம்பைத் தொட்டார். கணை - அம்பு. 111.22. பிணித்தான் - செலுத்தினான். கையில் பிடித்தான் - இராமன் விட்ட அம்பைக் கையில் வாலி பிடித்தான். பிரண்டான், உருண்டான் - வேதனையால் தரையில் உருண்டு பிரண்டான். பித்தனே - அறிவற்றனே. கத்தபத்தனே - மூடத்தன்மையனே. பிழைத்தாயே - தவறு செய்தாயே.

His heart sore with grief, trembling did Cukkirīva
Fall at the feet of Rakurāma;
Disappointed that Kaṇṇaṉ[98] did not kill his brother.

RAMA ASKING CUKKIRĪVA TO CHALLENGE VĀLI AGAIN

"As you and your brother Vāli are alike as twins;
I was unable to distinguish between you two;
And so I did not want to shoot;
Take thou this spring of dark Viṣṇukānti[99] flower,
And fix it behind your left ear as a mark;
Now you will see me take my bow
And shoot my arrow at Vāli;
Fall he will surely!"
And so wearing the identifying spring
On his left ear, Cukkirīva crowed boisterously,
Opposing his brother again; and mighty Vāli
Back to the battle came; and again Vāli
Seized Cukkirīva, and rolled him on the ground,
And then threw him up into the sky.

RAMA SHOOTING HIS FATAL DART AT VĀLI'S CHEST

The cloud - hued Lord, he who cut the sal trees seven
With a single arrow and who with the end of his bow
Smashed the skeleton of Tuntupi,
Now took a choice arrow and sent it
Speading towards Vāli, and it pierced his chest:
And Vāli seized the dart in his hand and stopped its progress,
And in mortal agony rolled on the ground
Crying aloud thus: "O senseless fool!
You have done grievous wrong!
Grossly you have erred!"

98. Kaṇṇaṉ - A name of Lord Krishna (here used for Rāma)
99. *Viṣṇu Kānti* - A medical plant.

வாலியின் இகழ்ச்சி மொழி

ஒளித்தெய்வது திறமோ பாரா சர்க்கிது சரியோ
உனக்கென் பிழைசெய்தேன் நீயுமெனக் கேன்கணை தொடுத்தாய்
செழிப்பாகிய ராமா வனைப்பழிப்பா ரீந்த வுலகோர்
தேசராசர்க்கு முறையோ யிதுராச யோக்கியத் திறமோ
திறமோ யிதுவறமோ வெந்தன் றிறம்நீ யறிவாயோ
தென்னிலங்கை யரக்கன் ராவணன் றன்னைவால் முடிகட்டினேன்
தறையோ டடிபடவே காலஞ் சதாகோடி கொண்டெற்றினேன்
தாரமானதை யவனே கொடுபோகப் பறிகொ டுத்தாய்
கொடுத்தாயிது புகழோநல்ல குணமோயிது வுனக்கு
கொட்டிச் சிங்கத்தை வெட்டினாய் நரிக்குட்டியைத் துணைகிட்டினாய்
கெடுத்தாயடா விஷ்ணுவே ஆதிகேசவா விண்ணில் வாசவா
கெஞ்சுவா னுனக்கஞ் சுவானென்னுன் நெஞ்சிலே யறிந்திலையோ.

விருத்தம்

112. நெஞ்சிலே பட்ட அம்பை நெடுங்கையால் பிடித்து வாலி
வஞ்சக ராமன் கையில் வரிசிலை யெழுத்தைக் கண்டு
துஞ்சுவா யெந்தன் முன்னே துலங்கிநின் றெய்தா யாகில்
பஞ்சிலே பட்ட தீப்போல் பறக்கின்றா யிறக்கின் றேனே.

நடை

113. இறக்கிவிட்டு வாளிகொண்டு எய்த்திளைந்து வாலிசொல்வான்
அறக்குறைவு செய்தாயே அரசருக்கு நீதியிதோ
நீதிதப்பா யென்னையுந்தான் நீயொழித்து எய்வதென்ன
பாதிவைத்த சீதையரைப் பறிகொடுத்த ராகவனே

111.23. என்பிழை - என்ன பிழை. 111.24. ராச யோக்கியம் - அரச தர்மம். 111.25. திறம் - வலிமை. வால்முடி - வாலிலுள்ள மயிர். 111.26. எற்றினேன் - உதைத்தேன். தாரம் - மனைவி. அவனே - இராவணனே. கொடுபோக - கொண்டுபோக. 111 27. கொட்டி சிங்கம்- வலிமையான சிங்கம்; இங்கு வாலியை உவமையாய் குறித்தது. நரிக்குட்டி - குள்ளநரி; இங்குச் சுக்கிரீவனை உவமையாய் குறித்தது. 111.28. விண்ணில் வாசவா - தேவலோக வாசியே; திருமாலே. நெஞ்சிலே யறிந்திலையோ - நான் உனக்கு அடிமை என்பதை நீ மனப்பூர்வமாய் உணரவில்லையோ. 112.2. வரிசிலை யெழுத்தைக் கண்டு - வில்லில் பொறிக்கப்பட்ட 'இராமன்' என்ற எழுத்தைக் கண்டு. 112.3. துஞ்சுவாய் - இறந்து போவாய். துலங்கி நின்று - வெளிப்படையாக நின்று. 112.4. பறக்கின்றாய் - 'பறந்து போவாய்' என்றவாறு. 113.1. இறக்கிவிட்டு - இறந்து போகும் தன்மையை சிறிது, தனது உடல் வலிமையால் நிறுத்தி. வாளி - அம்பு. எய்த்திளைத்து - மிகுந்தளவு வாடி. 113.2. அறக் குறைவு செய்தாய் - அறநெறிக்கு குறைவு ஏற்படச் செய்தாய். 113.3. ஒழித்து - ஒழிந்து நின்று. 113.4. பாதி வைத்த - தன் உடம்பில் சீதைக்கும் பகுதியிடம் கொடுத்த.

VĀLI'S SCORNFUL SPEECH TO RAMA

"Is it bravery on your part to shoot at a foe
Hiding behind a rock? is it fair
To a king of the earth? in what way
Have I offended you? why should you shoot at me
Opulent Rama? The world will hold you in disgrace!
For kings of the earth, this is not proper;
Is it honourable for any one or righteous?
Don't you know my valour and prowess?
Don't you know that the demon of Laṅka in the south,
Rāvaṇa, was once tied to my tail,
Battered and bruiged for aeons together?
You have allowed your wife to be taken away by him;
Is this all your reputation?
Is this your nobility?
You have cut down a powerful lion,
Choosing the company of a base jackal!
O Vishnu! you have spoiled everything!
Ātikēcava, Lord of the heavens! Don't you know
That Rāvaṇa is mortally afraid of me
I, who am your slave?"

112. Gripping the arrow that pierced his chest
Vāli saw carved on it the name of Rama
And said; "you would have died
If you had stood before me face to face,
And shot your arrow! Like cotton before fire,
You would have been burnt at once!
Now I am dying!"

113. Holding on to his fleeing life,
And weakened by the deadly dart
Vāli said! "O you have caused great harm
To Dharma! You have offended royal justice,
How can you shoot at me,
When I have not swerved from justice?
O, Rākava! you have lost your Sita, your better half:

ராகவனே ராவணனை நாெனாடியிற் கொல்வேனே
ஆகாதார் சொற்கேட்டு அடர்சிங்கத்தைக் கொன்றாயே
கொன்றாயே முன்னாளில் கொடிவிரந்தை யொருதிதன்னால்
சென்றாயே சுடுகாட்டில் சித்தரைப்போ லுருண்டாயே

சித்தம்வைத்து மாவலியைத் தேசம்விட்டு ஓட்டிவிட்டாய்
பக்தசனந் தன்னைவிட்டுப் பாற்கடலில் பள்ளிகொண்டாய்
பள்ளிகொண்ட திருமாலே பச்சைமுகில் மேனியனே
தெள்ளியசொற் றேன்மொழியாள் தேவியையா னிழந்ததென்றால்

[64]இழந்ததென்றா லொருநொடியில் ராவணனை வரவழைப்பேன்
விளங்குமுந்தன் பெண்ணரசை விடவுரைப்பேன் குற்றமில்லை
குற்றமெத்தச் செய்தாயே கோலரசர் முறைமையிதோ
பெற்றவர்க்கு உதவாமல் பெருங்கானம் புகுந்தாயே

பெருங்கானம் புகுந்ததல்லால் பெண்டீரு மிழந்தாயே
வருங்கரும மறியாமல் வலியதுணை கொள்ளாமல்
கொள்ளாத சிறியவர்கள் கூறுபுத்தி கேட்டாயே
கள்ளமல்லோ செய்தாய்நீ கண்ணுமுன்னே தோன்றாமுன்

முன்னிருந்தா ரெத்தனைபேர் முடிதரித்தா ரெத்தனைபேர்
இன்னிலத்தில் சடமெடுத்தா லிறப்பதுவே திட்டமென்றான்

வாலியிடம் இராமன் உரைத்தல்

திட்டமென்ற வாலிமுன்னே ஸ்ரீராமன் கிட்டவந்து
கட்டழகா வுன்னையும்நான் கண்பிழையா லெய்துவிட்டேன்

113.6. ஆகாதார் - இராமனுக்கு வேண்டாதார். அடர்சிங்கத்தை - வலிமையான சிங்கம் போன்ற என்னைக் கொன்றாயே என்ற பொருளில் வாலி கூறியவாறு. 113.7. கொடி விரந்தை- கொடிய கைகேசி. ஒருதி - ஒருத்தி; இடைக்குறை. 113.8. சென்றாயே - அடர்ந்த வனம் புகுந்தாயே. 113.9. மாவலி - திருமால் வாமன அவதாரம் எடுத்து ஓரடி மண்ணில் மண்ணுலகம் அளக்கக் காரணமாயிருந்த மன்னவன். 113.12. தெள்ளிய - தெளிவான. சொற்றேன்மொழியாள் - தேன் போன்று இனிமையாகப் பேசும் மொழியுடையாள்; சீதை. 113.15. கோலரசர் - செங்கோலேந்திய அரசர்; அழகிய அரசர் என்றும் அமையும். 113.17. பெண்டீர் - சீதை. 113.18. கருமமறியாமல் - வரும் விதியை அறியாமல். வலிய துணை - சீதையை மீட்பதற்கு ஏற்ற துணை. 113.19. சிறியவர்கள் - இங்குச் சுக்கிரீவன், அனுமன் முதலியோரைக் குறித்தது. 113.20. கள்ளமல்லோ செய்தாய் - திருட்டுச் செயல் போல என்னை மறைந்திருந்தன்றோ கொன்றாய். 113.22. இன்னிலத்தில்- இந்த உலகத்தில். சடமெடுத்தார் - உடம்பைத் தாங்கி வந்தவர். 113.24. கண்பிழையால் - பார்வை மாறுபாட்டால்.

64. இளந்த

In a trice I would have killed Rāvaṇa!
Believing the words of others,
You have killed a Vāliant lion!
Earlier too because of a cruel woman's words,
You went into the hot wild forest, like a poor mendicant!
You have driven away Makāpali deliberately,
From his own empire! O Lord who reclines
On the serpent - bed in the ocean of milk!
O Lord with a jasper-hued complexion!
If you had lost your queen of clear, honeyed speech
And had you but asked my help, in a second
I would have summoned Rāvaṇa to our side;
I would have ordered your spouse to be released by him!
Great wrong you have committed, Rama,
Unbecoming of a sceptred king! wothout being of use
To your parents, you went to the giant forest
And having entered it, lost also your woman!
Not knowing what is in store for you,
Nor caring to set proper aid,
You chose to listen to little men's advice
By stealth you have acted, without appearing face to face."
And then wearily Vāli said:
"How many have died before!
How many crowned kings have lived on this earth!
Only to die at last!"

RAMA'S REPLY TO VĀLI

Nearing the dying monkey - king, Rama said;
"Handsome King! by a wrong perspective,
I have shot this arrow!

எய்துவிட்ட புண்ணாற்றி இருத்திவைப்பேன் பட்டணத்தில்
செய்தியைச்சுக் ரீபனுக்குச் செப்பியுனை வணங்கவைப்பேன்

வாலியின் மறுப்புரை

வணங்கவைப்பே னென்றுசொல்லி மாலுரைக்க வாலிசொல்வான்
குணம்படைத்தா ருன்குலத்தில் கொடியவடுப் பட்டிருப்பார்
கொடியவடு வென்குலத்தில் கொண்டிருப்பா ரில்லையென்றான்
நெடியசிலை ரெகுராமா நீலவர்ணா எனைக்களைந்தாய்

தாரகையின் புலம்பல்

எனைக்களைந்தா யென்றேங்க ஏந்திழையாள் தாரகையும்
மனக்கவலை யங்கதனும் வாலிபடும் படுகளத்தில்
படுகளத்தில் வாலிமுகம் பார்த்தழுது துயரமுற்று
கெடுதியுற்றார் சொற்கேட்டு கேசவனார் பாசம்விட்டார்

விட்டமைந்த னங்கதற்கு மிகுந்தபுத்தி சொன்னாயே
பட்டங்கெட்டி யங்கதனைப் பாராள வையாமல்
வையாமல் மாளவிதி வந்ததென்ன என்கணவா
தெய்வநெறி தவறாயே சிவபூசை செய்தனையே

தனைத்தமைய னென்பாரே சத்துருவாய் வந்தாரே
எனைக்கருதி நீரிறக்க என்றலையில் விதிவசமோ

அங்கதன் புலம்பல்

விதிவசமென் றவளழவே மேல்விழுந்தா னங்கதனும்
கெதியுடைய தந்தையரைக் கெட்டேனா னென்றழுதான்

113.25. எய்துவிட்ட புண்ணாற்றி - அம்பால் உன்மீது ஏற்பட்ட புண்ணைக் குணப்படுத்தி. பட்டணத்தில் - கிஷ்கிந்தை நகரில். 113.26. செப்பி - கூறி. 113.27. மாலுரைக்க - திருமால் கூற. 113.28. வடு - புண்ணால் ஏற்பட்ட தழும்பு. 113.30. நெடிய சிலை - பெரிய வில். களைந்தாய் - இழந்தாய். 113.31. ஏங்க - வருந்த. ஏந்திழையாள் - அழகிய பெண்ணாள். தாரகை - வாலியின் மனைவியாய் இருப்பவள்; முறைப்படி சுக்கிரீவனுக்கு மனைவியாக அமைய வேண்டியவள். 113.32. அங்கதன் - வாலியின் மகன். படுகளம் - போர்க்களம். 113.34. கெடுதியுற்றார் - கேடு நினைப்பவர். கேசவனார் - இராமன். பாசம் விட்டார் - அம்பு விட்டார். 113.36. பட்டங்கெட்டி - அங்கதனுக்கு அரசபட்டம் கட்டி. பாராள - உலகத்தை ஆள; ஆட்சி செய்ய. வையாமல் - வைக்காமல். 113.42. கெதியுடைய - நற்கதியுடைய. கெட்டேன் - இழந்தேன்.

I will cure your wound and put you back
On your throne! I will send word to Cukkirīva
And ask him to obey you."

VĀLI'S REFUSAL

As Rama said this, Vāli replied; "perhaps in your line,
People may bear such a scar on their name!
In my line, we do not choose to bear such a disgrace!
O Rakurāma of the long bow! you have lost me."

THE LAMENT OF TĀRAI

As Vāli spoke to Rama thus, Tārai, the queen of Vāli,
And his grieving son came to the field
Where Vāli lay mortally wounded,
And weeping said; "Listening to the words of wicked persons,
Kēcava sent his arrow violating the laws of warfare.
O my Lord! you used to give advice to your son
As to how he should rule:
And now what fate is it,
That you are slain thus.
Ere you could see your son rule the earth?
O my husband! you used to perform pūja
To Siva; you never swerved from the righteous path;
Oh pity it is, that he who called you elder brother,
Should have proved to be your own enemy! Oh is it my fate,
That you have died on my account?"
And Aṅkata falling on Vāli's body
Wailed; "I have lost my dear father."

தாரகை இராமனிடம் வினாவுதல்

அழுதுசொல்வாள் தாரகையும் ஆதிநா ராயணரே
பழுதுசெய்து போட்டீரே பகைத்தவர்கள் சொற்கேட்டு
சொற்கேட்டு மறைந்துநின்று துணித்தீரே மாயவரே
பற்காட்டும் வானரங்கள் பகர்ந்தபுத்தி கேட்டீரே

இராமனின் பதிலுரை

கேட்டீரே என்றுசொல்லக் கேசவனா ரேதுரைப்பார்
தாட்டிமைசேர் பூங்கொடியே தாரகையே மாதரசே
மாதரசே யம்புபட்ட வடுவாற்றித் தாரேனென்றார்
தீதரசே செய்ததெல்லாம் தெரியாம லெய்துவிட்டேன்

வாலியின் மரணம்

எய்துவிட்டே னென்றுரைக்க ஏதுசொல்வான் வாலியவன்
பையரவில் பள்ளிகொண்ட பச்சமாலே துணையெனக்கு
எனக்கிளைய தம்பியரும் எந்தன்மக னங்கதனும்
உனக்கவர்க ளடைக்கலமே உலகளந்த மாயவரே

மாயவரே சரணமென்று வாலியுந்தா னிறந்துவிட்டான்
ஆயவனே சுக்கிரீபன் அங்கதனு மனுமானும்

வாலிக்கு இறப்புக்கடன் முடித்தல்

அனுமானும் வானரமும் ஆனபடைத் தலைவருமாய்
மனுவாக யெடுத்தடக்கி வாய்த்தகர்மக்[65] குறைமுடித்து

சுக்கிரீவன் பட்டர்பிஷேகம்

குறைமுடித்து வானரங்கள் கோவிந்தர் தனைப்பணிந்தார்
இறையவனார் திருவுளத்தால் எல்லார்க்கும் பதிவுரைத்து

113.44. பழுது செய்து போட்டீரே - தவறுசெய்து விட்டீரே. பகைத்தவர்கள் - என் கணவரைப் பகைத்தவர்கள்; சுக்கிரீவன், அனுமன் முதலியோர். 113.45. மாயவரே - இராமரே. 113.46. பற்காட்டும் - பல்லைக்காட்டும். 113.47. கேசவனார் - இராமர். 113.48. தாட்டிமை- மனவுறுதி. 113.49. வடு - புண். ஆற்றித் தாரேனென்றார் - குணப்படுத்தித் தருகிறேன் என்றார். 113.52. பையரவு - பாம்புப்படுக்கை. பச்சமாலே - பச்சைமாலே; திருமாலே; இராமனே. 113.53. இளையதம்பியர் - சுக்கிரீவன். 113.56. ஆயவன் - இராமன். 113.58. மனுவாக - மனிதனாக. கர்மக்குறை - இறந்தாருக்குச் செய்யும் சடங்கு. 113.60. இறையனார்- இராமர். பதி - தங்குமிடம்.

65. கற்ம

TĀRAI QUESTIONS RAMA

Weeping Tārai said to Rama: "O Primal Nārāyaṇa!
You have done cruel wrong to us, misled by our enemies' words;
Thus, hiding behind a rock and shooting my husband,
Listening to the promise of grinning monkeys!"

RAMA'S REPLY

As Tārai charged him thus, Kēcava replied:
"O strong-minded one, fair like a liana!
Queen among monkey-women! I shall cure
The wound I have caused! unwittingly
I have committed a mistake".
As Rama confessed his error,
Vāli with his last breath spoke to Rama;
"O Lord recumbent on the serpent-couch!
You are my support! to me, to my brother,
And to my son Aṅkata!
All of them are now, under your protection"
O Lord who measured the world, Refuge! Refuge!"
Cried Vāli, and breathed his last,
And now Cukkirīva, Aṅkata, Aṉumāṉ
And all the monkey chieftains together,
Took up the dead Vāli and performed
All the funeral ceremonies, as if he were human.

THE CORONATION OF CUKKIRIVA

The monkeys all, now bowed at Govinta's feet,
And the Lord suitably blessed them:

பதியில்சுக்கி ரீவனுக்குப் பட்டங்கட்டி முடிதரித்து
மதியிற்கிஷ் கிந்தையிலே வானரத்தை யாளவைத்தான்

ஆளவைத்துத் தாரகையை அரசனுக்குப் பாரியென்று
வாழவைத்துச் சுக்கிரீபன் வானரத்தை யாண்டிருந்தான்.

விருத்தம்

114. ஆண்டிருக்கச் சுக்ரீப னரச னாக
அண்ணன்மக னங்கதனு முடைவா ளேந்த
வேண்டியவா னரமுமிரு பத்து நாலு
வேந்தர்களு மடிதொழுது விருப்ப மாக
நீண்டிருந்த திருமாலை யிளையோ னான
லட்சுமணப் பெருமாளு மனுமன் றானும்
தாண்டியதோர் படைத்தலைவர் சகல பேரும்
சாம்புவனு மடிபணிய யிருந்தார் தாமே.

படைதிரட்ட அனுமன் வழி இராமர் சுக்கிரீவனைப் பணித்தல்

துடுக்கு

115. இருந்தானே சுக்ரீபன் வானத் தரசாய்
இக்கரம்பை வருக்கைவளர் கிஷ்கிந் தையிலே
தருந்தேவர் கோமானு மனுமானை நோக்கிச்
சானகியை மறந்திருக்கத் தரியாது சொல்வாய்

சொல்லிருக்கத் தாமிருக்கத் துணையிருக்க வனுமான்
சுக்கிரீபன் முதலாகத் தொழுதுபடை யிருக்கச்
செல்வியெந்தன் சீதையரைக் கன்னமிட்டுக் கொடுபோய்
தென்னிலங்கை ராவணனும் தேகம்வைத் திருக்கத்

113.61. பதியில் - கிஷ்கிந்தையில். முடிதரித்து - அரசனாகப் பட்டங்கட்டி. 113.62. மதியில்- சுற்கடக இராசியாகிய நல்ல நாளில் பாரி - மனைவி. 114.1. உடைவாளேந்த - வாள் ஏந்திய படைத்தலைவனாக இருக்க. 114.2. அடிதொழுது - சுக்கிரீபன் பாதத்தைத் தொழுது. 114.4. தாண்டியதோர் - கண்ணுக்குப் பார்வையைத் தாண்டிய அளவு. சாம்புவன் - கரடி வடிவம் கொண்ட வேந்தன். 115.1. கரம்பை - களர்நிலம். வருக்கை வளர் - ஒழுக்கம் மிகுகின்ற. 115.2. தேவர் கோமான் - தேவர் அரசன்; இராமன். தரியாது - பொறுத்திருக்க முடியாது. 115.3. துணையிருக்க - வானரப் படைகள் துணையாயிருக்க. 115.14. கன்னமிட்டு - திருடி. கொடுபோய் - கொண்டு சென்று. தேகம் வைத்திருக்க - என் உடம்பு போன்ற சீதையை வைத்திருக்க.

And in Kiṣkintai at Cukkirīva was crowned as king!
With Tārai as his queen,
Cukkirīva began to rule over the monkeys!

114. Thus he was ruling, with Aṅkataṉ wielding his sword,
And the twenty four chieftains obeying his command,
And with Aṉumāṉ and Jāmpavāṉ by his side,
By the grace of the lofty Tirumāl, and the younger Lord Lakshmaṇa!

115. As Cukkirīva began his rule as king of the monkeys,
In Kiṣkintai with soil rich in Jackfruits
The Lord turned to Aṉumāṉ and said;
"I cannot bear to be separated from Jāṉaki;
While we have the means to proclaim
That we have recovered her from Rāvaṇa's hold,
While we have Aṉumāṉ by our side
And Cukkirīva with his obedient armies,
Oh, pity it is, that Laṅka's Rāvaṇa is keeping prisoner
Sita (who is like unto my own body),
Having taken her away from me by stealth.

தேகம்வைத்து நாமிருக்க சிலைகரத்தி லிருக்கச்
செய்யராம பாணமது தூணிதனி லிருக்க
நோகவைத்துத் தாடகையைச் செயித்தபுய மிருக்க
நொடிப்பொழுதில் மலைச்சிலையை முடித்தபெல மிருக்கப்
பெலவான்கை சானகியும் உலைவாயில் மெழுகாய்
பின்னுமோ ரிடத்திருக்கப் பிரமன்விதி தானோ
தலைமீதி லயனெழுதும் எழுத்ததைநோ காமல்
தாரணியில் மற்றவரை நோகமுறை யுண்டோ

சுக்கிரீவன் ராமனைக் காண வருதல்

முறையுண்டோ வெனமொழியத் தூதா ளனுப்பி
முடிமனசுக் கிரீபன்றனை முடுகவரச் சொல்லி
அறையஅவ னரசுசெயப் பாரினி லிருக்க
அந்தரங்க மாய்த்தூதர் வந்தறிக்கை செய்ய
வந்ததம்பி யையனுப்பித் திருமா லுரைப்பார்
வாலிமார் பைக்குடையும் வாளிவரு மானால்
உந்தன்பராக் கிரமமெல்லாம் நில்லாதென் றோது
ஒருநாளு மரசுரிமை செல்லாதென் றோது
செல்வருரை யையிளையோன் செப்பச்சுக்கி ரீபன்
திருமாலை யரைநொடியில் வந்துகண்டானே
பொல்லாத மதிகேடன் செய்தகுற் றத்தைப்
பொறுத்தருள வேணுமென்று புண்ணியரைக் கண்டான்

115.5. தேகம் வைத்து - சீதையை இழந்த பிறகும் உடம்பை வைத்துக் கெண்டு என்றவாறு. சிலை - வில். பாணம் - அம்பு. தூணி - அம்பு வைக்கும் உறை. 115.6. நோகவைத்து - வருந்த செய்து. புயம் - தோள். மலைச்சிலை - மலை போன்ற பெரிய வில்; சீதையை மணக்க இராமன் ஒடித்த சிவதனுசு. 115.7. பெலவான் கை சானகி - பலசாலியான இராமனுக்கு உரிமைபூண்ட சீதை. உலைவாயின் மெழுகாய் - நெருப்படுப்பின் வாயின் முன் வைக்கப்பட்ட மெழுகு போல. 115.8. அயன் - பிரம்மன். நோகாமல் - வருந்தாமல். தாரணி- உலகு. நோக - வருந்த. முறையுண்டோ - காரணமுண்டோ. 115.9.தூதாளனுப்பி - சுக்கிரீவன் மீது தூதாக ஆள் அனுப்பி. முடிமன சுக்கிரீபன் - கிரீடம் சூடிய மன்னவன் சுக்கிரீபன். முடுக- விரைவாக. அறைய - கூற. 115.10. பாரினிலிருக்க - இராமதூதரை மதிக்காமல் சுக்கிரீவன் அரசு செய்ய. அந்தரங்கமாய் - இரகசியமாய்.115.11. தம்பி - இலட்சுமணன். வாளி - அம்பு. 115.12. பராக்கிரமம் - வலிமை. 115.13. செல்வருரை - இராமனின் உரை. இளையோன் - இலட்சுமணன். 115.14. மதிகேடன் - அறிவு கெட்டவன். வேணுமென்று - வேண்டுமென்று. புண்ணியரை - இராமரை.

Oh, is it the ordainment of Brahma,
That Jāṉaki, spouse of mighty Rama,
Should melt in grief like wax
Befsore a flaming forge,
When I still have this strong body,
A bow in my hand,
And the famous arrows in their quiver,
Which had conquered the demoness Tāṭakai
By the strength of these arms,
Which broke the mighty bow of Siva, huge as a hill?
Oh, Why should I blame others on earth,
Instead of blaming,
What has been written on my head
By the creator's moving finger?"

CUKKIRĪVA COMING TO SEE RAMA

Then Rama sent messengers to Cukkirīva
Recently crowned king,
Asking him to come to him forthwith;
But on hearing from the envoy's secret report
That he was happily enjoying
His new - found pleasures without caring
To keep his covenant with Rama;
He grew angry and sent Lakshmaṇa
To Kiṣkintai charging him to chastise
The indifferent king of the monkeys, thus;
"Tell him that the arrow that pierced through
Vāli's chest, will put an end to him also;
All his power and strength will disappear at once;
Tell him his kingship will not last a day more!"
And so Lakshmaṇa faithfully reported the words of Rama.
Whereupon Cukkirīva jumped up in fear
And presented himself before Rama
With profuse apologies;

வானரசேனைகள் இராமனைப் பணிதல்

கண்டான் விழுந்தா னெழுந்தான் பணிந்தான்
கைகட்டி வாய்பொத்திக் காத்தருளு மென்றான்
உண்டான வானரச சேனைபடை எல்லாம்
உள்ளோலைத் தூதுவிட் டுடனே வருத்தி
வருத்தங் கதன்நீலன் குமுத னாதித்தன்
மச்சையன் கெச்சையன் மாவிந்தன் முசிலி

திருத்தமாங் கனதன் தனதன் பனசன்
சிம்புளான் கெம்பீரன் அம்புய விராசன்
விராசன் பதுங்கன் சராசன் கவுந்தன்
வேம்பன் கதும்பன் விலாடன் வகூடன்
சராசரி பராக்கிரமன் விதரண நிதரணன்
சாம்புவன் முதற்றலைவ ரிருபத்து நால்வர்
இருபத்து நாலுதலை வரும்வானர வெள்ளம்
எழுபதுங் கூடியே தொழுதிடத் திருமால்

அனுமனிடம் இராமன் திருவாழியைக் கொடுத்தல்

திருமொய்த்த மாருதியை அருகினி லழைத்துச்
செயமான தலைவர்களும் நீயுமே சென்று
சென்றிலங் காபுரி புகுந்துநகர் சுற்றிச்
சீதையரைக் கண்டுதிரு வாழியடை யாளம்
இன்றவள் கையில் கொடுத்துவர வேணும்
இதுசமைய மென்றுதிரு வாழிகையி லீந்தார்
ஈந்திடச் சாம்புவன் குமுதனங் கதனீலன்
இனமான வனுமானும் முறையாகக் கூடிப்

115.16. வானரச சேனைபடை - குரங்கு படை. உள்ளோலைத் தூது - ஊருக்குள் ஓலை மூலம் தூது. வருத்தி - வரச் செய்து. 115.17-20. அங்கதன், நீலன், குமுதன், ஆதித்தன், மச்சையன், கெச்சையன், மாவிந்தன், முசிலி, மாங்கனதன், தனதன், பனசன், சிம்புளான், கெம்பீரன், அம்புயவிராசன், பதுங்கன், சராசன், கவுந்தன், வேம்பன், கதும்பன், விலாடன், வகூடன், பராக்கிரமன், விதரண நிதரணன் - வானரச் சேனைகளுள் தலைசிறந்த இருபத்திநாலு தலைவர்களின் பெயர்கள். 115.21. வானர வெள்ளம் - வானரச் சேனையின் பெருங்கூட்டம்; 'வெள்ளம்' ஒரு பேரெண்ணையும் குறிக்கும். 115.22. மாருதி - அனுமன். 115.23. இலங்காபுரி- இலங்கை நகரம்; இராவணன் ஆட்சி செய்யும் நாடு. திருவாழி - கணையாழி; கைவிரல் மோதிரம்; இராமர் சீதைக்கு அடையாளமாக இதை அனுமனிடம் கொடுத்தனுப்பினார்.

"O Lord pardon! Pardon O Lord! this sinner's folly"
And he fell prostrate before him
And stood up in fear,
Hands held together in abject obedience.
At once he sent envoys to all directions
To the various places in the kingdom,
Summoning his monkey regiments
To assemble forthwith in the capital.
Aṅkataṉ, Nīlaṉ, Kumutaṉ, Ātittaṉ
Maccaiyaṉ, Keccaiyaṉ, Māvintaṉ
Mucili, Māṅkaṉataṉ, Taṉataṉ, Paṉacaṉ,
Cimpuḷāṉ, Kempīraṉ, Ampuyarirācaṉ, Patuṅkaṉ,
Carācaṉ, Kavuntaṉ, Vēmpaṉ, Katumpaṉ,
Vilātaṉ, Vakūtaṉ, Parākkiramaṉ
And twenty four commanders in all
Leading a multitudinous army,
Seventy *veḷḷam* strong.

RAMA GIVING TO AṈUMAṈ HIS SIGENT RING

Beckoning Aṉumāṉ to come near him --
Aṉumāṉ (opulent in the wealth of askesis),
Rama charged him with a mission in these words
"Go thou with other victorious leaders to Laṅka city
Search there for Sita and give her this signet ring",
And gave the divine jewel into Aṉumāṉ's hands.
Who, gathering around him Jāmpavāṉ, Kumutaṉ,
Aṅkataṉ, and Nīlaṉ, and bearing in his mind

பாய்ந்திடப் பச்சைமால் கற்பனை கொடுத்துப்
பழமைசே ரடையாள வளமையு முரைத்து
வளமைசேர் சீதைதிரு வழகெழுதிக் காட்ட
மாருதியும் நேராக மனதுக்குள் ளெழுதி

அனுமன் சீதையைத் தேடி ஏகுதல்

அழகு மடையாளமும் நெஞ்சினில்த் தரித்து
அடிதொழுது வனுமான் நடந்தேகி னானே
அடர்ந்தேறி யவர்கள்தான் வலதுதுடை தட்டி
ஆரபா ரத்தோடு பாரித்து வரவே
இடந்தேடி யொருகாகம் வலதுபுறம் மேவ
இயல்பென் றிடப்பல்லி செயசேவல் கூவ
செயமன் றுரைத்தன்றில் செண்பகங் கூவ
திட்டமுப யக்கெருடன் வட்டமிட் டேக
நயமென்ற அட்டா க்ஷரம்பஞ் சாக்ஷரம்
ராமகீர்த் தனம்பாடி னானனு மானே.

அனுமன் இராமனது புகழ் பாடல்

விருத்தம்

116. அனுமானை யாளவந்த ராம ராமா
அந்தரதி மூலபெல ராம ராமா
தனுவேந்துஞ் சகத்தில்வரி ராம ராமா
சானகி சதாங்கமன ராம ராமா

115.26. கற்பனை - உத்தரவு. பழமை சேர் அடையாள வளமை - சீதையைத் தெரிந்து கொள்வதற்குரிய அடையாள முறைகள். 115.27. எழுதிக்காட்ட - வரைந்து காட்ட. 115.28. ஏகினானே - போனானே. 115.29. அடர்ந்தேறி - நெருங்கிச் சென்று. துடை - தொடை. ஆரபாரத்தோடு - அரவாரத்தோடு. பாரித்து - மிகுந்து. 115.30. ஒரு காகம் வலதுபுறம் மேவ- காகம் வலது புறமாகப் பறக்க; இது நன்னிமித்தத்தைக் குறித்தது. இயல்பென்றிட - இயல்பாய். செயசேவல் - வெற்றியைக் குறித்த சேவல். 115.31. அன்றில், செண்பகம் - பறவை வகைகள். திட்டம் - பூரண. உபய கெருடன் - அருள் செய்யும் கருடப் பறவை. ஏக- செல்ல. 115.32. அட்டாஷரம் - எட்டெழுத்து மந்திரம்; 'ஓம் நமோ நாராயணாய' என்னும் மந்திரம். 115.33. பஞ்சாக்ஷரம் - ஐந்தெழுத்து மந்திரம்; 'நமசிவாய' மந்திரம். ராமகீர்த்தனம்- இராமனைப் புகழ்ந்து பாடும் பாடல்கள். 116.1. அந்தர் அதிமூல பெல ராம - கீழ் மேல் என்றில்லாமல் எல்லோருக்கும் மூலக் கடவுளாய் விளங்கும் ராமா! 116.2. தனு - வில். சகம்- உலகம். சானகி சதாங்க மன ராம - சீதையின் மனத்தேரில் வீற்றிருக்கும் ராமா!

The signs with which to recognise Sita as related
By the Lord, and engraving in his mind
Her divine image drawn by Rama himself,
Began his quest for the Goddess Sita

AṈUMAṈ GOING IN SEARCH OF SITA

Keeping in mind the divine image
And prostrating at Rama's feet,
Aṉumaṉ, confident began his expedition;
In close formation they went,
Beating their right thighs with their hands
In boisterous cheer! While a crow[100]
Did auspicious fly, towards the right,
And a lizard[101] clucked and a cock crew joyously;
Besides, the Aṉṟil[102] and the Ceṇpaka[103] birds
Uttered their cries; and full of grace,
Karuṭaṉ circled gyre upon gyre, in the sky:-
All, all of them omens betokening good!
And Aṉumāṉ did sing the praise of Rama
And chanted the pentad, the sestet,
And the octad mantras.

AṈUMAṈ SINGING RAMA'S PRAISE

116. "O, Rama! Lord Rama! Saviour of Aṉumāṉ
Thou who art the primordial strength
Of all in the netherworlds or upper!
Rama, with your all - conquering bow,
Who sits in the chariot of Sita's heart
Enshrined! O sovereign overlord.

100. Crow - Bird of ill-omen, generally (cf : Poe's 'Raven')
101. Lizard - Associated with good omen.
102. Aṉṟil - A legendary bird known for connubial fidelity
103. *Ceṇpaka* - Crow-pheasant

மணிவேந்தர் மணிமகுட ராம ராமா
　　மாவலியா லுலகளந்த ராம ராமா
எனும்வேந்தர் தனையாண்ட ராம ராமா
　　எனக்குதவி ஸ்ரீராம னென்பாய்த் தானே.

அனுமனின் உள்ள மகிழ்ச்சி நிலை

துடுக்கு

117. பாய்ந்த னுமானி லங்கையில் போமென்று
　　பச்சை மாலுரை நிச்சயம் பற்றியே
கூந்தலா யிழைதன் னைவிசா ரிக்க
　　கூட வாறவர் மெய்த்திடவே செங்கை
செங்கை யிற்றிரு வாழி கொடுக்கவே
　　சேர்த்து வாங்கிச் சிரசுமே லேற்றினான்
மங்கையர்க் கடையாள மீதென் னவே
　　வானமுட்ட நிமிர்ந்து குதிப் பானாம்
வான முட்ட நிமிர்ந்து குதித்துமே
　　மாலை யன்பினில் வைத்துப் புறப்பட்டான்

அனுமன் மற்றும் அவனுடன் செல்லுவோர் சீதையைத் தேடி நடத்தல்

ஆன தீக்கொள்ளி போலிரு கண்களும்
　　அண்டி மெய்த்தீ குண்டலங் காதிலும்
வானரச் சேனை னாள்ளொளி போலவே
　　வாய்த்த ருத்ர கலையனு மீனுமே
சேனை கண்டு நடுங்கிடப் பார்வையும்
　　திட்டத் தட்டத் தலைதனில் கோர்வையும்

116.3. மணிவேந்தர் மணிமகுட ராம - மணிமுடி தரித்த அரசர்களுக்கும் பேரரசனாகத் திகழும் மணிமுடி தரித்த ராமா! மாவலியால் உலகளந்த ராம ராமா எனும் வேந்தர் தனையாண்ட - மாவலி அரசனிடம் மூன்றடி மண் கேட்டு உலகளந்த ராமா என்று துதித்த அரசர்களை ஆண்ட. 117.1. பாய்ந்த - விரைவாக. 117.2. கூந்தலாயிழை - அழகிய கூந்தலுடைய இளம் பெண்; சீதை. வாறவர் - வருகிறவர். மெய்த்திடவே - பொருந்திடவே. 117.3. செங்கை - அனுமனின் சிவந்த கை. திருவாழி - கணையாழி. சிரசு - தலை. 117.4. ஈது- கணையாழியாகிய இது. 117.5. மாலை - திருமாலை; இராமரை. 117.7. நாள்ளொளி - கதிரவன் ஒளி. ருத்ர - சினமுடைய. 117.8. சேனை கண்டு நடுங்கிடப் பார்வையும் - எதிரிகளின் படைகள் அச்சமுறும்படி சினந்த பார்வையும். கோர்வையும் - மணிகளால் கோர்க்கப்பட்ட மணிமாலையும்.

Of kings with gemmed crowns! Rama!
Lord who rules over kings who chant
"Lord who did measure the vast Earth,
With a single step to quell Makāpali!
The Lord is my help and my support, O Rama!"

AṈUMAṈ'S STATE OF HAPPINESS

117. Receiving in his ruddy hands the signet ring,
He folded his hands and placed them
Oh his head and leapt up to the very vault of heaven,
In joy that he had the distinguishing ring
To be shown to Sita! and with the Lord
Tirumāl enshrined in his heart,
Aṉumāṉ led the search party towards the South.

AṈUMAṈ AND OTHERS GOING SOUTHWARDS IN SEARCH OF SITA

His eyes like two fire- brands burning bright,
And rings on his ears ruddy like fire
Aṉumāṉ strode forward as if he were the day - star
Of the Vāṉara armies! Aṉumāṉ
(Born of the essence of Rutra Himself),
Walked along, his fierce glance
Terrifying the foes; a chaplet of gems strung together
Adorning his head, a bright sash tightly

கோர்வை கொண்டரைக் கச்சை யிறுக்கியே
கூண்ட பாம்பென தீண்டிடும் வாலிலே
ஆர நாக மிருக கொடிகட்டியே
அனும கக்கொடி எங்கு மிலங்கவே
அனும ராயனு மந்தரத் தேகியே
அட்ட திக்கால வட்டங்கள் வீசவே
மனுவைத் தபதி னாலு லகமும்
வாலைக் கொண்டு வளைத்திடு கோலமும்
கோல மாய்க்க திராயிரம் தேருடன்
கொக்கரித் திடவே செக்கர் வானத்தில்
நீல னங்கதன் குமுதனா தித்தனும்
நீங்கா மலேபாங் கான சாம்புவன்
பங்கெ னப்பரி பூரண மாகவே
பத்தியாய் ராம கீர்த்தனம் பாடியே
வெங்கை யானையில் சிங்கம் புகுத்தாப்போல்
வீரன் வாரப் பவனியைப் பாருமே
பாரு மேமுனி வோரும் நடுங்கவே
பார்க்கை யில்கெரு டப்பார்வை யாகவே
தேரின் மேல்வருஞ் சூரிய னஞ்சவே
சேர்ந்த நெற்றித் திலதந் துலங்கவே
துலங்க வானத்தை ஏறிட்டுப் பார்ப்பானாம்
தோர ணங்களி லேறிக் குதிப்பானாம்
விலங்கி னங்கண்டு பம்மி யிருக்கவே
வெய்ய வன்பண்டு செய்ததுக் கஞ்சவே

117.9. அரைக்கச்சை - உடம்பின் இடையில் கட்டப்பட்ட ஆடை. 117.10. இலங்கவே - ஒளிவிடவே. 117.11. அந்தரத்தேகியே - வானத்தில் படர்ந்தே. அட்டுதிக்கு - எட்டு திசைகள். ஆலவட்டங்கள் - விசிறி. 117.12. மனு வைத்த - மனுதர்மசாஸ்திரம் செல்லும்படி ஆகின்ற. கோலமும் - அழகும். 117.13. கதிர் ஆயிரம் தேருடன் - ஒளி வீசுகின்ற ஆயிரக்கணக்கான தேருடன். செக்கர் வானம் - சிவந்த வானம். 117.14. நீலன். அங்கதன், குமுதன், ஆதித்தன், சாம்புவன் - சில வானரப் படைத்தலைவர்களின் பெயர்கள். 117.15. பங்கென - சீதையைத் தேடும் பணியில் எனது பங்கு இதுவென. பத்தியாய் - பத்தியோடு. 117.16. வெங்கை யானை- மதம் கொண்ட யானை. வீரன் - அனுமன். வார - வருகிற. பவனி - ஊர்வலம். 117.17. கெருடப் பார்வையாகவே - கழுகு போன்ற கூர்மையான பார்வையாகவே. 117.18. திலதம் - பொட்டு. துலங்கவே - ஒளி விடவே. 117.19. தோரணங்கள் - பந்தல்கள். 117.20 பம்மி - பதுங்கி. 'வெய்யவன் பண்டு செய்ததுக் கஞ்சவே' - என்றது' அனுமன் குழந்தையாக இருக்கும்பொழுது சிவந்த கதிரவனை விளையாடுதற்குரிய பொருளென நினைத்துப் பறித்த நிகழ்ச்சி கண்டு அச்சம் கொள்ளவே' - என்ற குறிப்பில் வந்தது.

Girding his waist, his tail long as the pythons,
And serpent - flags fluttering everywhere!
Leaping in the air he did wheel about
Circling like huge fans; his long, long tail
Lengthening across, to encompass the twice - seven worlds!
With a thousand cars bright, they crowed boisterous,
In the ruddy sky! Nīlaṉ, Aṅkataṉ, Kumutaṉ, Ātittaṉ
And sedate Jāmpavāṉ all of them,
Happy at the opportunity to contribute,
Each his share in the holy task
Of searching for Sita! singing,
Carolling and chanting
Rama's praise!
Oh, see how like a lion amidst
Ichorous tuskers, the heroic Aṉumāṉ
Moves along as if in procession!
With an eagle's vision and clear sight
(The very sages afraid to see him!)
While the very sun in his chariot
Grew afraid again! He would look
At the sky, the vermilion mark
On his fore-head shining bright!
He would leap over pavilions and canopies;
The beasts in the wood, would slink in fear;
And the hot sun still afraid of, Aṉumāṉ
(Uncured of his- fear from the earlier episode!)

அஞ்செ ழுத்தைத் தியானித்து நோக்குவான்
அட்டா க்ஷரமா றெழுத்துன் னுவான்
பஞ்ச பாண மதனனைப் போலவே
பாவித்துச் சிந்தை கோபித்துச் செல்லுவான்
செல்லும் வேளையில் கானகந் தன்னிலே
சீறிப் பார்க்கையில் தீப்பட் டெரியுமாம்
மல்ல டர்ந்த புயத்தர்க ளஞ்சுபேர்
வாழி லங்கையை நோக்கி நடக்கவே
நடக்க வேபல ஆறு கடந்தனர்
நாடுங் காடும் நகரும் கடந்தனர்
இடக்கை வீச வலக்கை துடைதட்ட
இறங்க வொண்ணா சமுத்திரங் கண்டனர்

கடல் கண்டு பிறர் திகைக்க அனுமன் தெய்வங்களைத் தியானித்தல்

சமுத்திரங் கண்டு நீலன் குமுதனும்
சாம்புவ னாதித் தனிவர் நால்வரும்
அமுக்கு மாழியைத் தாண்ட மாட்டாமலே
ஆதி ராம னிடத்துக்கு மீண்டனர்
மீண்டு மேயவர் போனபின் மாருதி
வேலை தாண்ட விதமென்ன செய்குவோம்
ஆண்ட மேகத்திலே புக்கிச் செல்வமோ
அண்டர் லோகத்திலே புக்கிச் செல்வமோ
செல்ல வாரியைத் திட்டெனச் செய்வமோ
சீலமாய் வாலைப் பால மிடுவமோ

117 21. அஞ்செழுத்து - நமசிவாய' என்ற அஞ்செழுத்து. அட்டாக்ஷரம் - 'ஓம் நமோ நாராயணாான' என்னும் எட்டெழுத்து. ஆறெழுத்து - 'சரவணபவ' என்ற ஆறெழுத்து. உன்னுவான் - நினைப்பான். 117.22. பஞ்சபாண மதனன் - ஐந்து மலரம்புகளை உடைய மன்மதன். பாவித்து - பாவனைச் செய்து. சிந்தை கோபித்து - மனத்துள் சினம் கொண்டு. 117 23. கானகம் - காடு. சீறி - கோபித்து. 117.24. மல்லடர்ந்த - மல்லல் (மல்யுத்தம்) தொழிலில் வல்ல. புயத்தர் - தோள் வலிமையாளர். 117.26. துடை - தொடை. இறங்கவொண்ணா - நீரில் இறங்க முடியாத ஆழமுள்ள. 117.28. அமுக்கும் ஆழி - ஆளை உள்ளே இழுத்துவிடும் கடல். ஆதிராமன் - உலகத்திற்கு முதலாவதாய்த் திகழும் இராமன். 117.29. மாருதி - அனுமன். வேலை - கடல். விதம் - வழி. 117.30. ஆண்ட மேகம் - உலகத்தைச் சூழ்ந்து ஆளுகின்ற மேகம். புக்கி - புகுந்து. அண்டர் லோகம் - தேவலோகம். 117.31. வாரி - கடல். திட்டு - மேடு; கடலை நடந்து கடக்கும்படியான மேடு.. சீலமாய் - அழகாய். வால் - அனுமனின் நீண்ட வால்.

He would meditate on the mystic syllables
Five, Six and Eight: angry like Manmath
With his flower - arrows five he would go sometime
On his way; an angry glance from him,
Would set fire to the woods!
Thus these leaders five
Expert in wrestling, proceeded towards Lanka;
Walking along, they crossed many a river
Land, wood and town; their left hand swinging
And the right beating the thigh,
Till they reached the shore of the ocean deep.

WHILE THE OTHERS ARE DISMAYED AT THE SIGHT, ANUMAN PRAYS TO THE GODS

Seeing the vasty deep, Nīlan, Kumutan
Ātittan and Jāmpavān realising
Their incapacity to cross the fathomless sea,
Returned to Primal Rama forthwith.
After they left Māruti thought to himself
"Oh, what shall I do to cross the sea?
Shall I go through the blanket of the clouds
Encircling the earth or through the upper reaches
Of the celestial world? Or shall I
Cross the sea itself, as if it were a shallow pond?
Or make a proper bridge with my own tail?

நல்லதே நால்வர் போய்விட்ட காரியம்
நம்மைப் போல்கடல் தாண்டத் தகுதியே
தாண்ட தவம்புரி யுஞ்சிவ மந்திரம்
சங்கு சக்கர பாணிதன் மந்திரம்
ஆண்ட ராமா செயம்செய மென்னவே
ஆழி தன்னைக் கடக்க நினைப்பனாம்

இலங்கணியின் சீற்றம்

பானு மேனி பதுங்க வடித்தவன்
பத்ம நாபனைப் பக்ஷம் பிடித்தவன்
ஆன தோர்கடல் தாண்டிக் குதிக்கையில்
அலங் கார யிலங்கணி என்பவள்
சேனை ராவணன் சொற்படிக் [66]காவலாய்
சித்தமாய்க் கடல்காத் தங்கி ருப்பவள்
ஆனை சேனை அடங்கல் வருகினும்
ஆர்க்கும் அஞ்சாமல் கொல்லும் திறமுள்ளாள்

காத்த காவலில் மாருதி வந்திட
கண்டு சீறி யிலங்கணி செப்புவாள்
வாய்த்த காவலில் தீண்டுவ தேதடோ
வந்து நீகடல் தாண்டுவ தேதடோ
எதடோ பிடித்துன் னைத்தின் பேனடா
எட்டு மோசிறு குட்டிக் குரங்கடோ

117.32. நால்வர் - நீலன், குமுதன், சாம்புவன், ஆதித்தன் என்னும் நால்வர். 117.33. தாண்ட - கடலைத் தாண்ட. சிவமந்திரம் - பஞ்சாட்சர மந்திரம். சங்கு சக்கர பாணி - சங்கு சக்கரங்களைக் தரித்தவர்; திருமால். 117.34. செயம் - வெற்றி. ஆழி - கடல். 117.35. பானு மேனி பதுங்க வடித்தவன் - அனுமன் சிறு பிள்ளையாய் இருக்கம் பொழுது சிவந்த சூரியனை கையில் பிடித்து அடித்தவன். பத்மநாபன் - திருமால்; இராமன். பக்ஷம் - நட்பு. 117.36. இலங்கணி - இலங்கையைக் காவல் செய்யும் ஓர் அரக்கி. 117.37. சேனை ராவணன் - படைகளுடைய இராவணன். சித்தமாய் - உறுதியாய். கடல்காத்து - இலங்கை கடல் எல்லைகளைப் பாதுகாத்து. 117.39. ஆனை - யானை. அடங்கல் - அனைத்தும். ஆர்க்கும் - யார்க்கும். 117.40. சீறி - சினந்து. தீண்டுவது - பொருந்துவது. 117.41. எட்டுமோ - கடல்தாவ முடியுமோ. சிறுகுட்டிக் குரங்கு - சிறிய குட்டிக் குரங்கு; அனுமன்.

66. கார்வலாய்

It is good the four have left,
As I alone am fit to leap across the sea!
And then inby meditating upon the mystic syllables
Of the great Dancer Siva, and Tirumāl with His
Conch and Discus, and singing hosannas to his Lord Rama,
Māruti decided to leap across the ocean ,
As if it were a pond.

MĀRUTI'S LEAP AND LAṄKAṆI'S WRATH

As he who seized and beat at the orb of the sun,
While yet a boy, he who was now the bosom
Friend of the Lord made his successful leap across the sea
And landed in Laṅka, a certain demoness
Called Laṅkaṇi, (well-bedecked), chief guardian
Of Laṅka's portals by command of Rāvaṇa,
(Watching the sea with zealous care,)
She who feared neither armies vast,
Or elephant - brigades, rose up in fury
At the sight of the intruder into her guard.
And she cried fiercely:" Who is it
Who comes thus rudely into my watch?
Who are you that thus did cross the sea!
Sirrah, I shall seize you and eat you up,
O, you mere slip of a monkey brat!"

அனுமன் இலங்கணி படைகளை அழித்தல்

சூதடோ வென்ன மாருதி சீறியே
சுத்தி லங்கணி பத்திய கோட்டையில்
கோட்டை தன்னைப் பிடித்துப் பொடிக்கவே
கோடிப் பூதப் படைவந்து கூடவே
சாட்ட மாகவே பூதப் படைகளைத்
தட்டி னானனு மன்வாலிற் கட்டினான்
கட்டி னானரைக் கிண்கிணி போலவே
காலில் வாலி வடிபட் டிழுக்கவே
திட்டி னான்சென் றிலங்கணி முன்பிலே
தெட்டி லங்கணி தாட்டிமை யாகவே
தாட்டிமை செய்தனு மானைச் சீறியே
சண்டை யிட்டன ரண்டரும் மெய்க்கவே
பூட்டிச் செத்திடும் பூதத்தை வாரியே
பொய்த்திட் டாரித்து சாய்த்தடித் தானங்கே.

இலங்கணிப் போருக்கு வருதல்

விருத்தம்

118. அடித்திலங் கணியைச் சீறி அனுமனும் குதித்த போது
பிடித்தகைச் சூலத் தோடு பிளந்தவாய் வளந்த கொங்கை
வெடித்திடு மண்டங் கேட்க விடுகுரல் வீரப் பல்வாள்
கடித்தன ளவளு தட்டைக் கவர்சூலஞ் சாய்த்திட் டானே.

117.42. சூதடோ - அரக்கியின் செயல் வஞ்சகமடா! பத்திய - இலங்கணி பாதுகாக்கின்ற. 117.44. சாட்டமாகவே - சட்டெனவே; விரைவாகவே. தட்டினான் - கீழே விழும்படி அடித்தான். 117.45. அரை - உடம்பின் இடுப்பு பாகம். கிண்கிணி - ஓர் ஆபரணம்; அரையணிவகை. காலில் வாலில் அடிபட்டு இழுக்கவே - அரையில் கட்டப்பட்ட கிண்கிணியைப் போலவே அனுமன் இராவணப் பூதப்படைகளைக் காலிலும் வாலிலும் கட்டி இழுத்தடித்தான் என்ற பொருளில். 117.46. திட்டினான் - ஏசினான். தெட்டிலங்கணி- வஞ்சனை எண்ணம் கொண்ட இலங்கணி என்னும் அரக்கி. தாட்டிமை - மிகுந்த பலம்.117.47. அண்டரும் - தேவரும். மெய்க்கவே - கூடவே. 117.48. பூட்டிச் செத்திடும் பூதம்- போய் செய்து இறந்திடும் இலங்கணியின் படைகளான பூதம். வாரியே - வாரி எடுத்தே. பொய்த்திட்டு ஆரித்து சாய்த்தடித்தான் - உயிர்கள் நீங்கிய உடல்களை மாயை போன்ற திட்டாக்கி, ஆரவாரித்து பூதங்களை இறக்கும்படி அடித்தான். 118.2. சூலம் - கையில் பிடித்துப் போர் செய்யும் ஓர் ஆயுதம். வளந்த - வளர்ந்த. கொங்கை - மார்பு. 118.3. வெடித்திடும் அண்டம் கேட்க - இலங்கணியின் குரல் உலகம் பிளவுபட்டிடும்படி கேட்க. 118.4. சாய்த்திட்டானே - இறந்துபோகச் செய்தானே.

AṈUMAṈ DESTROYING LAṄKAṆI'S GUARDSMEN

When Laṅkaṇi challenged him thus insultingly,
Māruti grew furiously angry
And battered to fragments the battlements
Of her fort; myriads of goblin troops,
Came against him now; but swiftly did Aṇumāṉ,
Tie them up in his sturdy tail
And dragged them on the ground,
With a rattling sound like girdles
Fitted with tinkling bells!
And standing before the giant ogress,
He roundly abused her; at which
The demoness wrathfully came at him,
While the celestials watched the fight!
Aṇumāṉ piled up the dead goblins
And beat them into a pulp!

118. And now with huge trident in hand,
Her wide open mouth cavernous,
And monstrous breasts, Laṅkaṇi
Did shout a horrid cry
Heard all over the universe;
Biting her lips with her sword - like teeth,
She rushed to battle with the intruder.

இலங்கணி அனுமன் போர்

சிந்து

119. *சாய்த்தடித் திலங்கணியைத் தட்டித்தட்டிக் காலாலெற்றி*
தள்ளித்தள்ளி யனுமானும் துள்ளித்துள்ளித் தான்பொரவே
மாய்த்திடுவே னென்றுசொல்லி வந்திலங் கணிகுதித்து
வலக்கையிற் சூலமதைத் துலக்கமதா யெறிய

துலங்கி யிலங்கணியாள் தொட்டெறிந்த சூலத்தனைச்
சொல்லியனுமன் பிடித்துப்பல்லு குத்திக்கொண்டு நின்று
மலங்கயிலங் கணிதன்வாயில் தண்டாயுத மிட்டு
மண்டுமவள் தொடையிலே மாருதிதண் டாயுதம்போய்
மாருதிதண் டாயுதம்போய் வாய்கிழித்து மார்பில்குத்த
மாயாதிலங் கணியும்தீ யெனக்கண்ணை விழித்துப்
பாருபாரெனக் குதித்துப் பற்கடித்து வண்டுறுக்கிப்
படந்தனு மானைச்சீறித் துடர்ந்தலங் கோலமாக
அலங்கோலமாய்ப் புரண்டு அலறியுழறிக் கொண்டு
ஆகட்டாகட் டாகட்டென்று வேகத்துடனே நடந்து
சலங்கொண்ட யீரிரண்டு தலையுமெடுத்துக் கொண்டு
தாட்டிமை செய்யனுமானும் பூட்டிவாலி னாலிறுக்கி
வாலினாலிறுக் கிகொண்டு மலங்க யிலங்கணியை
வாரிப்பிடித்தே யனுமான் வானத்திலெ றிந்துவிட்டான்
ஓலமிட்டி லங்கணியும் ஓடிவந்து பின்னெதிர்த்து
ஒட்டியனு மானும்விழத் தட்டினா னிலங்கணியைத்

119.1. சாய்ந்தடித்து - அழிந்து போகும்படி அடித்து. பொரவே - போர் செய்யவே, *119.2.* துலக்கமதாய் - தெளிவாய். *119.3.* பல்லு - பல். *119.4.* மலங்க - திகைக்க; இலங்கணி திகைப்படைய. தண்டாயுதம் - வளைந்த தடி போன்ற ஓர் ஆயுதம். மண்டுமவள் - போரிட பொருந்துகின்ற இலங்கணி. *119.5.* மாயதிலங்கணி - மாயச் செயல்களில் வல்ல இலங்கணி. *119.6.* வண்டுறக்கி - அச்சப்படுத்தி. சீறி - பாய்ந்து. *119.7.* அலறி யுழறி - அனுமன் தாக்குதல் கண்டு பயத்தால் அலறியும் நாக்குழறியும். ஆகட்டுஆகட்டு ஆகட்டு - 'இருக்கட்டும் பார்த்துக் கொள்கிறேன்' என்ற பொருளில். *119.8.* சலங்க கொண்ட - நீர் கொண்ட ; இரத்தம் வடிகின்ற. தாட்டிமை செய் - வலிமை மிகுந்து போர் செய்கின்ற. பூட்டி - இலங்கணியை வாலினால் பூட்டி. *119.9.* மலங்க - இலங்கணி திகைக்க. வாரிப்பிடித்தே - கையால் பிடித்து வாரி. *119.10.* ஓலமிட்டு - ஒலியெழுப்பி. ஒட்டி - பொருந்தி. விழத்தட்டினான் - கீழே விழும்படிச் செய்தான்.

THE FIGHT BETWEEN LAṄKAṆI AND AṈUMAṈ

119. Felling her with blow after blow,
Aṉumāṉ kicked her around with his feet,
As he leapt here and there,
"I shall kill you sure," cried Laṅkaṇi
And made a clean throw of her
Trident huge at Aṉumāṉ:
Which he seized with ease
And stood picking his teeth with it!
Then he took up a mighty club
And sent it into her open mouth!
Then again he battered her thighs with it,
And also her chest.
The evil sorceress with fiery eyes,
Adept in much gramarye,
Gnashed her teeth with threatening looks
Engaged him in physical combat;
Crying incoherently in pain
But still uttering challenging cries,
She came against him again and again,
Seizing two bleeding heads in each hand!
But Aṉumāṉ encircled her with his mighty tail
And squeezed her harder and harder,
Till at last he threw her up in the sky
And she fell with a thud upon the earth
Howling fearfully and died.

இலங்கணியின் மரணமும் தேவர்கள் மகிழ்ச்சியும்

தட்டினா னிலங்கணியைச் சதைசதை யாயறுத்து
தண்ணீருக்குள் மச்சகுலம் தின்னுமென விருந்திட்டான்
பட்டிலங் கணிமடிய பாற்கடலிற் றீர்த்தமாடிப்
பங்கமின்றி மனுமானும் சிங்கம்போல் நிற்கையிலே
சிங்கம்போல நிற்கையிலே லங்கணிக் கஞ்சிவாழும்
தேவர்களெல் லாருங்கூடி மாருதியைக் கொண்டாடி

தேவர்கள் அனுமனுக்கு விருந்தளித்தல்

பங்கமில்லா மாருதிக்கு வற்கவகை முக்கனிகள்
பாங்குடனே பால்பழங்கள் தேங்கனியும் மாங்கனியும்
மாங்கனியுந் தேங்கனியும் வருக்கைப் பலாக்கனியும்
மற்பொருத மாருதிக்கு ஒப்பரையிலே கொணர்ந்து
ஆங்கவர் விருந்தளிக்க அனுமானும் பசியாறி
ஆழிக்குள்ளே யேயெழும்பி வாளிவட்டம் போடுவானாம்

இலங்கையின் வனப்பு

வாளிவட்டம் போட்டுக்கொண்டு வாரிகளெல் லாங்கடந்து
வாளனுமான் போகையிலே சூழ்வன மனேகவனம்
ஊளிவனங் காளிவனம் உள்ளவன மத்தனையும்
உளங்கொண்டு வாளனுமான் வளங்கண்டு பார்க்கையிலே
வளங்கண்டு பார்க்கையிலே மல்லிகையும் செண்பகமும்
மகிழ்புன்னை மாவுடையும் மருவாச்சி யிருவாச்சி
களங்கமில்லாத பிச்சிமுல்லை யொடுசெண் பகமும்
காந்தியுள்ள மாந்திகாவி கல்வந்தியும் செவ்வந்தியும்
செவ்வந்தி மருக்கொழுந்து தில்லைகமுகு கரும்பு
தென்றல் தெங்குவாழை தாழைகொன் றையதும் பூச்சொரிய

119.11. மச்சகுலம் - மீன் இனம். 119.12. பட்டு - மடிந்து. பங்கமின்றி - குறைகள் ஏதுமின்றி. 119.14. வற்கவகை முக்கனிகள் - மா, பலா, வாழை என முறையே வகையாய் சொல்லப்பட்ட கனிகள். 19.15. வருக்கைப் பலா - பலாக்கனி பிரிவுகளில் சிறந்தது. ஒப்பரை - ஒரு பெரிய பாத்திர வகை. 119.16. ஆழி - கடல். வாளி வட்டம் போடுவானாம் - வட்டமாய் ஆடுவானாம். 119.17. வாரி - கடல். சூழ் வனம் - சூழ்ந்த காடுகள். அனேக வனம் - பல காடுகள். 119.18. வளம் - செழிப்பு. 119.19, 20. மல்லிகை, செண்பகம், புன்னை, மாவுடை, மருவாச்சி, இருவாச்சி, பிச்சி, முல்லை, செண்பகம், மாந்தி, காவி, கல்வந்தி, செவ்வந்தி - அனுமன் வனங்களில் கண்ட பல மலர்களின் பெயர்கள். 119.21. களங்கமில்லாத - குற்றமில்லாத. காந்தியுள்ள - ஒளியுள்ள.

THE JOY OF THE CELESTIALS

Cutting her to pieces Aṉumāṉ
Threw her flesh to the sea,
To be food for the finny drove!
To cleanse himself he bathed in the ocean of milk
And stood victorious like a lion
While the Gods above hailed him!

AṈUMAṈ BEING FETED BY THE CELESTIALS

To the blameless Māruti victorious,
Happily the Gods gave a feast
Of varieties of sweet fruit honeyed,
Mango, Plantain and Jackfruit;
Besides lots of milk in cauldrons huge;
His hunger satisfied,
Aṉumāṉ would roam about in the sea
Wheeling and dancing in joy

THE BEAUTY OF LAṄKA

As Aṉumāṉ proceeded into the Island of Laṅka,
Crossing many a waterscape,
And grove and copse,
He marvelled at the luxuriant growth
Of the plants and trees therein!
Fragrant Jasmine and Champak
Makiḷ, Puṉṉai, Mavutai,[104] *Maruvāṭci*[105]
Besides, *Iruvāṭci,*[106] flawless Jasmine,
Of various kinds *Picci*[107] and *Mullai*[108]
The radiant *Manti*[109], red water -lily
Cevvanti,[110] *Kavanti,*[111] *Marukkoḷuntu,*[112]

104. *Mavutai* - A kind of tree
105. *Maruvāṭci* - A flowering plant
106. *Iruvāṭci* - Tuscan Jasmine
107. *Pitchai* - Jasmimum grandiflorum
108. *Mullai* - Jasmine
109. *Manti* - Mango-tree
110. *Cevvanti* - Chrysanthemum
111. *Kāvanti* - A kind of flower
112. *Marukkoḷuntu* - Artemecia - a fragrant leaf

அவ்வழி யிலேயனுமான் சிரசில ஸத்தாத்தி
ஆலவட்டம் பூச்சொரிய சீலமாங் கனிவருக்கை
வருக்கையி லரம்பையில் மாங்கனியிற் றேனுடைத்து
மலர்த்தேனு மொன்றுகூடி நிலச்சாரல் பெய்துவர
பருத்த யிலங்கையிலே சீதையர்க்குத் தூதுசெல்லும்
பவிசனுமான் சிரசில் விசேடமாய் சொரிய

ஆங்காரத்தாடகையை அனுமன் அழித்தல்

அவிசேக மாய்ச்சொரிய அப்புறத்தில் செல்கையிலே
அண்டக டாகத்தை முட்டியவ ளொருகாவற்காரி
செவிவழி யாகப்படை தேர்புரவி போவதல்லால்
சிறுவழி போவதற்கு மறுவழி யில்லாமலே
மறுவழி யில்லாமலே மாருதி திகைத்துநின்று
வாளரக்கி யிலங்கைக்கு வழிஎங்கே யென்றுகேட்க
உறுவழி செவியோடே புகுவாயென் றவள்சொல்ல
உன்னித்திரு வாழிதன்னை விண்ணிலெறிந் தனுமானும்
எறிந்துசெவி யில்புகுந்தி க்ஷணம்பிறத்தே வந்து
இராமன்திரு வாழிதனை யனுமன் கரத்திலேந்தி
சுறிந்தீரலைப் பிடுங்கித் துஷ்டையாங் காரத்தாடகை
சொல்லிட்டு வருகையி லிலங்கைவட வாசல்க்காவல்

காளியிடம் அனுமன் வேண்டல்

காவல்க்காரி யிலங்கைமா காளிவந்து மறுத்திட
கணபூதப் படைகளும் சினமாக வளைந்திட

119.22. சிரசில் - தலையில். அஸத்தாத்தி - அசைந்து ஆடி. ஆலவட்டம் - விசிறி. 119.23. அரம்பையில் - வாழை மரத்தில். நிலச்சாரல் - நிலத்தில் பெய்யும் சிறுமழை. 119.24. பருத்த - பெரிய. பவிசனுமான் - பவித்திரமான அனுமான். சிரசில் - தலையில். 119.25. அவிசேகம் - அபிசேகம். அண்டகடாகம் - வான் வரை உயர்ந்த உடல். காவற்காரி - இலங்கையை காவல் காப்பவள்.119.26. புரவி - குதிரை. 119.27. வாளரக்கி - ஆங்காரத் தாடகை என்னும் அரக்கி; இலங்கையைக் காவல் காப்பவள். 119.28. உன்னி - திருமாலை நினைத்து. திருவாழி - மேன்மையான அம்பு. 119.29. க்ஷணம் - மிகச்சிறிய நேரத்தில். பிறத்தே வந்து - செவியினுள் புகுந்து மறுபுறம் வந்தே. 119.30. சுறிந்து ஈரலைப் பிடுங்கி - ஈரல் என்னும் உடலுறுப்பை வலிந்து பிடுங்கி. துஷ்டை - கெடு செயல். 119.31. இலங்கை மா காளி - இலங்கையிலுள்ள பெரிய காளி; இந்நகரின் வடவாசலைக் காப்பவள். கன - கூட்டமான. சினமாக வளைந்திட - சினம் கொண்டு அனுமனை வளைத்திட.

And trees such as *Tillai* [112A] and Arecanut,
Plantain and Cassia
Besides Cocunt and Screwpine!
As Aṉumāṉ walked along
They rained flowers on his head,
As the wind blew as if giant fans
Were causing the breeze!
Too, a shower of honey drops fell on him
From the melliferous mango trees,
Jack and Plantain ripe,
Besides the honey from the full blown flowers,
As if nature hereself were welcoming
Holy Aṉumāṉ, the envoy to Sita,
With such odoriferous sweets!
At another point of the fort,
Aṉumāṉ was blocked by another ogress
So huge, that chariots and horses could go
Only through her manstrous ear -
No other way to go in -
And Māruti asked her, (who was called Tāṭakai the arrogant)
"What is the way to go into Laṅka?"
And she replied laughing;
"Only through my ear!"
And Aṉumāṉ meditating on Tirumāl
Sent an arrow powerful, into her ear
And in a trice it emerged through the other;
With which again Aṉumaṉ forcefully
Plucked out her innards
And that was the end of the Ogress!

AṈUMAṈ'S REQUEST TO KĀḶI

At the north gate the guardian
Was the great Kāḷi herself
Who refused him entry,
While her goblin bands surrounded him;

112(A). *Tillai* - The blinding tree

ஆபத்துக்குள் ளகப்பட்ட சீதையரைத் தேடிவந்தேன்
அரிராமன் விட்டதூதன் அனுமனென் பேரெனவே

காளி வழிவிடுதல்

பேருரைக்கவே கேட்டு பின்னிலங்கை மாகாளி
பெருமாள்விடு தூதனைச் சருபலாகா தெனவே
நீர்நினைத்த காரியம்கொண்டே திரும்பு மென்றுரைக்க
நீட்டியனு மானிலங்கை கோட்டை கண்டுகொண்டானே.

★ ★

119.33. சருபலாகாதெனவே - தடை செய்து நிறுத்துவது சரியாகாதெனவே.

But when Anumān said to her,
"I was sent to trace Sita in distress!
I am the envoy of Lord Hari Rama"
The Goddess on hearing Tirumāl's name
Decided not to obstruct the passage
Of God's messenger,
And she blessed him instead!
May you return victoriously
After carrying out your task!"
And Anumān was now within the fort of Laṅka.

★ ★

Our Publications pertaining to Palm-leaf Manuscripts

1. A Descriptive Catalogue of Palm-leaf Manuscripts in Tamil, Volume I, Part I, General Editors: Dr. Shu Hikosaka, Dr. G. John Samuel, 1990, Rs.177.50 US$25
2. A Descriptive Catalogue of Palm-leaf Manuscripts in Tamil, Volume I, Part II, General Editors: Dr. Shu Hikosaka, Dr. G. John Samuel, 1990, Rs.177.50 US $ 25
3. A Descriptive Catalogue of Palm-leaf Manuscripts in Tamil, Volume II, Part I, General Editors: Dr. Shu Hikosaka, Dr. G. John Samuel, 1991, Rs.177.50 US $ 25
4. A Descriptive Catalogue of Palm-leaf Manuscripts in Tamil, Volume II, Part II, General Editors: Dr. Shu Hikosaka, Dr. G. John Samuel, 1992, Rs.225.00 US $ 25
5. A Descriptive Catalogue of Palm-leaf Manuscripts in Tamil, Volume III, Part I, General Editors: Dr. Shu Hikosaka, Dr. G. John Samuel, 1993, Rs.250.00 US $, 50
6. A Descriptive Catalogue of Palm-leaf Manuscripts in Tamil, Volume III, Part II, General Editors: Dr. Shu Hikosaka, Dr. G. John Samuel, 1993, Rs.250.00 US $ 50
7. A Descriptive Catalogue of Palm-leaf Manuscripts in Tamil. Volume IV, Part I, General Editors: Dr. Shu Hikosaka. Dr. G. John Samuel, 1996
8. A Descriptive Catalogue of Palm-leaf Manuscripts in Tamil, Volume IV, Part II, General Editors: Dr. Shu Hikosaka, Dr. G. John Samul. 1996
9. The Wandering Voice: Three Ballads from Palm-leaf Manuscripts, General Eduitors : Dr. Shu Hikosaka, Dr. G. John Samuel, 1987, Rs.120/- US $ 32
10. The Art of Drumming (Mattaḷaviyal), General Editors : Dr. Su Hikosaka, Dr. G. John Samuel, 1988, Paperback Rs.90/- US $ 20 Deluxe Rs.140/- US $ 30
11. The Deteless Muse: The story of Veṅkalarājaṉ, General Editors: Dr. Shu Hikosaka, Dr.G. John Samuel, 1988, Paperback Rs.80/- US $ 20 Deluxe Rs.120/- US $ 30
12. The Unsung Melodies: The Story of Palavēcam Cērvaikkāraṉ, General Editors: Dr. Shu Hikosaka, Dr. G. John Samuel, 1989, Paperback, Rs.75/- US $ 18 Deluxe Rs.100/- US $ 25
13. The Divine pilgrimage : Perumāḷ Cāmi Katai, General Editors: Dr. Shu Hikosaka, Dr. G. John Samuel, 1992, Rs.200/- US $ 40
14. A Tale of Romance : Sakuntalai Nāṭakam, General Editors: Dr. Shu Hikosaka, Dr. G. John Samual, 1993, Rs.300/- US $ 50
15. Varma Cūttiram, General Editors: Dr. Shu Hikosaka, Dr. G. John Samuel, 1994, Rs.400/- US $ 50
16. Nīli Yaṭcakāṉam, General Editors: Dr. Shu Hikosaka, Dr. G. John Samuel, 1994, Rs.150/- US $ 20
17. A Tale of Nemesis: Nīli Yaṭcakāṉam, General Editors: Dr. Shu Hikosaka, Dr.G.John Samuel, 1996, Rs.250/- US $,20
18. Peṇṇaraciyar Katai, General Editors: Dr. Shu Hikosaka, Dr.G.John Samuel, 1995, Rs.100/- US $ 20
19. The Valorous Virgins: Peṇṇaraciyar Katai, General Editors: Dr. Shu Hikosaka, Dr.G.John Samuel, 1996, Rs. 220/- US $ 35
20. A Tale of Betrayal: Cāraṅkataraṉ Yaṭcakāṉam, General Editors: Dr. Shu Hikosaka, Dr.G.John Samuel, 1996, Rs.400/- US $ 65
21. Epic Eternal: Rāmar Katai, Part II, General Editors: Dr. Shu Hikosaka, Dr.G.John Samuel, 1996, in print.